12 FEB 2007

# உதயசந்திரன்

கலைமாமணி விக்கிரமன்

0304973

வானதி பதிப்பகம்
11, நானா தெரு, பாண்டி பஜார்,
தி. நகர், சென்னை - 600 017
தொலைபேசி: 52070663

## நூல் விவர அட்டவணை

நூலின் தலைப்பு : உதயசந்திரன்

ஆசிரியர் பெயர் : கலைமாமணி விக்கிரமன்

மொழி : தமிழ்

முதற்பதிப்பு : டிசம்பர், 2004

உரிமை : ஆசிரியருக்கே

பொருள் : நாவல்

தாளின் தன்மை : வெள்ளைத் தாள் 60 ஜி. எஸ்எம்

நூலின் அளவு : டெம்மி

எழுத்தின் அளவு : 12 புள்ளிகள்

பக்கங்கள் : 316

வெளியீடு : **வனிதா பதிப்பகம்**
11, நானா தெரு,
பாண்டி பஜார்
தி.நகர், சென்னை -17
தொலைபேசி: 52070663

161220
5794030

**விலை ரூ. 120/-**

லேசர் அச்சு : நாகராஜ குமார்
வேளச்சேரி, சென்னை.

அச்சிட்டோர் **Sri Saravanan Offset Printers**
Chennai-81. ☎ Off : 25980016 Res : 25956663



## 1. வீர விஜயம்

மழை பெய்து அப்பொழுதுதான் விட்டிருந்தது. சாலையின் இரு மருங்கிலும் வளர்ந்திருந்த மரங்களிலிருந்து மழைத்துளிகள் சொட்டுச் சொட்டாக உதிர்ந்து கொண்டிருந்தன. வானத்தே மேகங்கள் கலைந்ததால் பளிச்சென்று தோன்றிய கதிரவனின் பொற்கதிர்கள் கிளை இடுக்குகளின் வழியாகப் பாய்ந்து இலை நுனிகளில் தமது கடைசிப் பிடிப்பை விடலாமா கூடாதா என்ற சிந்தனையிலிருக்கும் ஸ்படிக நிற மழைத்துளிகளைத் தம் ரச வாதத்தால் மாற்றிப் பல்லாயிர வண்ணங்களைப் பிரதிபலிக்குமாறு செய்தன.

காஞ்சிபுரத்திலிருந்து உத்திரமேரூர் போகும் சாலையில் அந்தி மங்கும் அந்த வேளையிலே குதிரையை நடத்திக் கொண்டு அந்த வீரன் சென்று கொண்டிருந்தான். மழை நீரைத் துடைத்துக் கொள்ள 'சடசட'வெனச் சிறகடித்துக் கொள்ளும் பறவைகளையும், 'ஜிவ்'வென்று எங்கோ பிரமாதமான வேலை இருப்பதுபோல் பாய்ந்து செல்லும் புள்ளினங்களையும் மாலை இன்னிசையால் மாநிலத்தைக் களிப்படையச் செய்யும் பட்சி ஜாலங்களையும் காணக் காண அவனுக்குத் தனித்ததோர் இன்பமாக இருந்தது. இல்லாவிடில் அவன் ஏன் அப்படித் தலையை உயரத் தூக்கிச் சாலையின் இருபுறங்களையும் பார்த்து ரசித்திருக்க வேண்டும்?

அந்தச் சாலையையும் அடர்ந்த மரங்களையும், கீதம் பாடும் புள்ளினங்களையும் அவன் அதற்கு முன் காணாதவனல்லன். அவன் பிறந்து வளர்ந்த அந்தத் தாமரைப்பாடி கிராமத்திலிருந்து காஞ்சி செல்லும் சாலையில் பல முறை நடந்து சென்றிருக்கிறான்.

ஆனால் குதிரையேற்றம், யானையேற்றம், வில் வித்தை, வாள் வீச்சு எல்லாம் பயின்று அவன் சிறந்த வீரனாகிப்

பல்லவர்களின் மெய்க்காவல் படையில் சேர்ந்த நாளினின்று இதுவரை இவ்வளவு அமைதியாக அவன் நடந்து சென்றதில்லை.

அரசர் வரும்போது அணிவகுத்துக் குதிநடை போட்டுக் குதிரை மீது சென்றிருக்கிறான். பல்லவ சாம்ராஜ்யப் படைத் தலைவரோடு மிக வேகமாக விரோதிகளின் திட்டத்தைத் தகர்க்கச் சென்றிருக்கிறான். சூழ்ச்சிக்காரர்களை வீழ்த்த காற்றினும் கடிய வேகத்தில் அவர்களைத் துரத்திச் சென்றிருக்கிறான்.

இப்போது அவன் விரைய வேண்டிய அவசியமில்லை. அவனைப் போன்று அந்தக் குதிரையும் அவனருகே மென்னடை போட்டு நடந்து வந்தது. இடையே சாலையோரத்தே வளர்ந்திருக்கும் பசும் புல்லைக் கண்டவுடன் அதை நோக்கிச் செல்லத் தலையைத் திருப்பியது.

"என்ன குமார வீரா! நடக்க முடியவில்லையா? இன்னும் கொஞ்ச நேரம்தான். பின்னர் நீ எல்லாரையும் பார்க்கலாம்" என்று குதிரையைத் தட்டிக் கொடுத்தவாறு கூறினான் அந்த வீரன். அந்தக் குதிரையும் அதைப் புரிந்து கொண்டதுபோல் கனைத்தது.

"உனக்கென்ன? உன்பாடு கொண்டாட்டம்! நீ யாருக்கும் எந்த மறுமொழியும் கூற வேண்டாம். எனக்கு அப்படியா? நீயே பார்க்கப் போகிறாய். தாமரைப்பாடிக்குள் நுழைந்தவுடனேயே எத்தனை எத்தனையோ பேர் எத்தனை எத்தனையோ விதமாகக் கேள்விகள் கேட்கப் போகிறார்கள் என்பதை" - இதைச் சொல்லி அவன் சிரித்ததும் குமார வீரனும் அதை அனுபவிப்பதுபோல் சிரித்தது - அதாவது கனைத்தது.

கிராமத்து மக்கள் மட்டுமா கேட்பார்கள்? அவனது வயதான மாமன் கந்ததேவன் கேட்கும் கேள்விகளுக்கு அந்த இரவு முழுமையும் போதாதே பதில் கூற.

அந்த வீரன் அதோ பெரிய சாலையிலிருந்து ஊருக்குள் போகும் வீதி வழியாகத் திரும்பி விட்டான். இந்த ஆறு வருடங்களில் அப்படியொன்றும் பிரமாதமான மாறுதலை எங்கும் காணோம். வாதாபி கணபதி கோயிலும் அதற்கடுத்த தாமரைக்



குளமும் அப்படியேதான் இருந்தன. மாறுதல் ஏதாவது நிகழ்ந்து தான் இருக்கிறது என்று கூற வேண்டுமானால் குளத்திற்குப் போகும் பாதையிலே புதர் அதிகமாக மண்டியிருப்பதைக் காணலாம்!

தண்ணீர் தெரியாமல் இலைகளும் மலர்களும் அந்தக் குளத்தை மூடியிருந்தன. கிராமப் பெண்கள் நீரெடுத்துக் கொண்டு படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருந்தார்கள். குளக்கரை வழியாகப் போகும்போது அவர்கள் அந்த வீரனைப் பார்த்தவுடன், நிச்சயம் அவனைப் பற்றிப் பேசாமல் இருக்க மாட்டார்கள். அப்படி என்ன பேசுகிறார்கள் என்று காற்றோடு காற்றாகச் சென்று பார்ப்போம்.

"அதோ பார்த்தாயா! வருவது கந்ததேவன் மருமகன் குணதேவன் போலிருக்கிறதே..." என்றாள் அந்த ஒயில்நடை நங்கைக் கூட்டத்து மயில்விழி மங்கை ஒருத்தி.

"உஸ்! உரக்கப் பேசாதே. பல்லவ சாம்ராஜ்யத்தின் பெரிய சேனாதிபதியின் மெய்க்காவலருக்கு உண்டான மெய்க்கீர்த்திகளுடன் அவன் பெயரைக் கூற வேண்டும்" என்றாள் சற்று முதிர்ந்த பிராயத்துப் பெண் ஒருத்தி.

"மெய்க்கீர்த்தி என்ன இருக்கிறது? ஆறு ஆண்டுகளாக எந்தப் போரில் வெற்றி கண்டு எந்த சாம்ராஜ்யத்தைப் பெரிதாகக் காப்பாற்றி விட்டார், இந்த வீராதிவீர வீரப்பிரதாப ரணமல்ல குணதேவர்?" - இதைச் சொன்னவள் அந்தக் கிராமத்துக்கே பொல்லாத குறும்புக்காரப் பெண்ணாக இருக்க வேண்டும்.

அந்தப் படை வீரனைப் பற்றி அவள் கேலியாகப் பேசுகிறாள் என்றால் அவள் தன்னிடம் கண்கள் என்னும் வேற்படையைக் கொண்டிருக்கும் தைரியமாக இருக்க வேண்டும்.

"உஸ்! அவன் காதில் வீழ்ந்துவிடப் போகிறதடி குறும்புக்காரப் பெண்ணே!" என்று ஒருத்தி கூற, "விழுந்தால் என்னவாம்? அவள் ஏன் பயப்படப் போகிறாள்? நாட்டைக் கலங்கடிக்கும் வீரனாயிருந்தாலும் இந்த நங்கையிடம் அவன் என்ன மறுமொழி சொல்வது என்று இப்போதே யோசனை செய்து வருகிறான் போலிருக்கிறது...!" என்று அந்த வயது முதிர்ந்த அம்மையார் கூறவும் எல்லாரும் கலீரென்று சிரித்து விட்டனர்.

குணதேவன் காதில் ஏதும் விழவில்லை. குளத்தைக்கூட அவன் சரியாகக் காணவில்லை. வீட்டை நோக்கியே அவன் சென்று கொண்டிருந்தான்.

குளத்தைத் தாண்டியவுடன் ஊர் மன்றம் கூடும் பெரிய மேடை, அதற்கடுத்து இரண்டு மூன்று அங்காடிகள். முதல் அங்காடியிலே பல தான்யக் குவியல்கள் இருந்தன. தான்யம் அளந்து கொண்டிருந்த பெரியநம்பி, குணதேவனை அடையாளம் கண்டு கொண்டான்.

"குணதேவா, குணதேவா" என்று அன்புடன் அழைத்தான். குணதேவன் மீது சிறு வயது முதலே அவனுக்கு அன்பு அதிகம். இருவரும் ஒன்றாகத் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். பெரியநம்பியின் தந்தை காஞ்சிமா நகரில் வாணிபம் செய்து வந்தார். அவர் திடீரென இறந்ததால் பெரியநம்பி தாமரைப்பாடியில் சிறிய அளவில் வாணிபம் செய்து வந்தான். குணதேவன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தவன். அவன் தந்தை வில்வநாட்டுத் தலைவரிடம் பணியாற்றி வந்தவர். இயற்கையாகவே முரட்டுக் குணமுடைய குணதேவனைக் கண்டால் அந்த ஊர்ப் பெரியவர்களுக்கெல்லாம் உள்ளூறப் பயம்தான். 'இளங்கன்று பயமறியாது. போகப் போக எல்லாம் சரியாகிவிடும்' என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்ட அவனுடைய தாய்மாமன் கந்ததேவனுடைய எண்ணப்படி குணதேவன் 'சாது'வாகி விடவில்லை. உத்திரமேருருக்குச் சென்று வில்வித்தை பயின்றான். வாள் வீசக் கற்றான். குதிரையேற அறிந்தான். வேல் எறியத் தெரிந்து கொண்டான். மல்யுத்தத்தில் அவனுடன் நேருக்கு நேர் நிற்க ஒருவனே இருந்தான். அவன்தான் பரமேஸ்வரன் எனும் அந்தச் சிறுவன். பல்லவ குலமல்லன் என்று அவனைப் புகழ்ந்தனர். 'அப்பா! என்ன பலம்; என்ன திறமை!' - பத்து வயது சிறுவன் என்று அவனை யாரும் அப்போது மதிப்பிட்டுக் கூற மாட்டார்கள்.

இன்றெல்லாம் கண்டு மகிழத்தக்க கம்பீரத் தோற்றம். அரசருக்குள்ள ஏறுபோன்ற நடை. ஏன் இருக்காது? பல்லவகுலத் தோன்றல் அவன்! பல்லவ குலத்தைப் பெருமையுடன் விளங்கச்



செய்த சிம்ம விஷ்ணுவின் சகோதரர் பரம்பரையில் வந்த இரண்யவர்ம மகாராஜாவின் நான்காவது திருக்குமாரன் அரச அங்க அடையாளங்களுடன் இருப்பதில் என்ன அதிசயம்?

அன்று குணதேவனுக்குத் தெரியுமா தன்னுடன் சரிசமமாக விளையாடிய பல்லவமல்லன் நந்திவர்மன் எனும் பட்டப் பெயருடன் சாம்ராஜ்யாதிபதியாக வரப் போகிறானென்று? அதுதான் தெரிய நியாயமில்லை; பல்லவப்படையில் தானொரு முக்கியப்பதவி வகிக்கப் போகிறோமென்றாவது அவன் கனவிலும் எண்ணியிருப்பானா?

குணதேவன் குதிரையைப் பற்றிக் கொண்டு பெரியநம்பியின் அருகே வந்தான். அடையாளம் கண்டு கொள்ள உற்று நோக்குவது போன்று அவன் பார்த்ததைக் கண்டு நம்பி சிரித்து விட்டான்.

"வணக்கம், குணதேவ வீரரே! அடியேன்தான் உங்களுடைய இளம்வயது நண்பன் பெரியநம்பி. ஊர்க்கோடிக் குளத்திலே அடியேனைத்தான் நீங்கள் மூச்சுத்திணறும் வண்ணம் அமுக்கி அமுக்கி எடுத்தீர்கள். 'இவனை அமுக்குவதால் குளத்து நீர் எவ்வளவு வழிந்து போகிறது பார்' என்று நண்பர்களிடம் கூறி 'ஹோ ஹோ' எனச் சிரித்து நான் திணறுவதைப் பார்த்து ரசித்தீரே... அந்த அடியேன் நான்தான். பல்லவ சாம்ராஜ்யத்தைக் காக்கப் புகுந்த மாவீரரே! இப்போதாவது என்னைத் தெரிகிறதா?" என்று அபிநயத்துடன் கூறவும், குணதேவன் குலுங்கக் குலுங்க நகைத்து, "என்னப்பா இந்தப் போலித்தனச் சொல்லாடல். இயற்கையாகப் பேசு. அதுசரி; என்ன வாணிபம் செய்கிறாய்? சோடும் நாழியும் மரக்காலும் பதக்கும் பல்லவ முத்திரையுடன் இருக்கின்றனவா? குழப்பநிலை நீங்கிச் சீரும் சிறப்புமாக ஆட்சி நடக்கத் தொடங்கி விட்டதென்பது தெரியுமா? அரசரை எதிர்க்க முனைந்தோரெல்லாம் அஞ்சி ஓடிவிட்டனர். இனி நாட்டின் செழிப்பும் நல்வாழ்வுமே நந்திவர்மனின் இலட்சியம். அரசரை வயதில் இளைஞரென எண்ணிவிட வேண்டாம்" - குணதேவன் பேசிக் கொண்டே போவதற்குள் அந்த இடத்தில் கூட்டம் கூடிவிட்டது.

அவர்கள் குணதேவனைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அவன் அந்த ஊரைவிட்டு ஆறு வருடங்களுக்கு முன்பு சென்றதைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். அவன் தாய்மாமன் கந்ததேவன் குணதேவனைப் பற்றிய செய்தி ஏதும் அறியாமல் வருந்தி மெலிவதைப் பற்றிப் பேசிக் கொண்டார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக கந்ததேவன் மகள் - அவன் முறைப்பெண் - குமுதவல்லி அவனுக்காகக் காத்திருப்பதைப் பற்றிக் காதும் காதும் வைத்தாற்போல் சொல்லிக் கொண்டார்கள்.

கூட்டம் கூடிவிட்டதையும் குதிரை பசியால் துடிப்பதையும் எதிரே பெரியநம்பி நிற்பதையும் குணதேவன் ஒரு நொடியில் மறந்து விட்டான். தன் மாமன் தனக்காக ஏங்கி மெலிகிறான் என்பதைக் கேட்டவுடன் அங்கிருந்து துள்ளி ஓடினான். மேட்டுத் தெருவின் கோடியிலே அமைந்திருந்த சிறுகுடிலின் கதவை அவன் படபடவென்று தட்ட வேண்டிய அவசியமே நேரிடவில்லை.

கந்ததேவனே மெல்ல எழுந்து திண்ணையின் ஓரத்தே வந்தமர்ந்து மருமகனின் வருகையை நோக்கியிருந்தான். குளத்திலிருந்து நீர் எடுத்துக் குதித்தோடி வந்த குமுதவல்லி வீர அத்தானின் வருகையைத் தந்தையிடம் முன்னமே அறிவித்துவிட்டாள். அவள் மனம் ஒரு நிலையிலில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பே கண்ணின் வழியே இதயத்தில் புகுந்த அத்தான்...

இன்று எத்தனை கம்பீரம், பொலிவு! ஆறு வருடங்களுக்கு முன்பு அத்தான் காஞ்சி மாநகருக்குச் செல்லப் புறப்படுகையில் இவ்வளவு நெடுங்காலப் பிரிவு ஏற்பட்டுவிடும் என்று அவள் அன்று எண்ணவில்லை.

“மாமா” என்று கூவியவண்ணம் குணதேவன் ஓடிவந்து அணைத்த காட்சி பாசத்தின் ஓவியமாக இருந்தது. இருவர் கண்களிலும் இன்பக் கண்ணீர் தளும்பியது. பேச ஆயிரமிருந்தது. நா எழவில்லை. கதவோரத்தில் குமுதவல்லியின் அமுதமுகம் தெரிந்தவுடன் குணதேவன், “மாமா! நலமாயிருக்கிறீர்களா? குமுதா குறும்புத்தனம் செய்து கொண்டிருக்கிறாளா?” என்று கேட்கவும் வெட்கத்தால் குமுதவல்லியின் முகம் சிவந்தது. நெடுநாள் கழித்து



வந்த அத்தான் நீராட வெந்நீரும், உண்ண அறுசுவை உண்டியும் தயாரிக்க உள்ளே விரைந்தாள், குமுதா.

அன்றிரவு ஊரிலுள்ளோர் அனைவரும் அந்தச் சிறுவீட்டின் வாயிலில் கூடிவிட்டனர். ராஜசிம்ம பல்லவ மன்னர் காலத்தில் - ஏறத்தாழ இருபதாண்டுகளுக்கு முன்பு - தோன்றிய கடும் பஞ்சத்திற்குப் பிறகு வேறெந்தவிதத் துன்பமும் அறியாது வாழ்ந்து வந்த நாட்டு மக்களுடைய மனம் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சஞ்சலமுற்றிருந்தது. ஊர்த் தலைவர் அவ்வப் போது சபை கூடும்போது அறிவிக்கும் செய்தியிலிருந்து நாட்டு நிலைமையை ஒருவாறாக அறிந்திருந்த அவர்கள் குண தேவனிடம் பல பல கேள்விகள் கேட்கத் தொடங்கி விட்டனர்.

“ஏன், குணதேவா? பரமேஸ்வர மாமன்னர் திடீரென இறந்து போகக் காரணம் என்ன?”

“ஏன் தம்பி, பரமேஸ்வர மாமன்னரின் வளர்ப்பு மகன் ஒருவன் இருந்தானே சித்ரமாயனோ என்னவோ, அவனுக்கு ஏன் பட்டம் சூட்டவில்லை?”

“ஏனப்பா, இத்தனை சின்ன வயசில் நந்திவர்ம பல்லவராஜா எப்படி இவ்வளவு விரோதிகளையும் சமாளித்து காலம் முழுவதும் ராஜ்யபாரம் செய்யப் போகிறார்?”

கேள்வி மாரிகளுக்குக் குறைவில்லை. எல்லாம் நியாயமான கேள்விகள். பரமேஸ்வர வர்மன் இறந்தபிறகு அன்றுவரை நடந்த நிகழ்ச்சிகளை அறிய அவர்கள் ஆசைப்பட்டனர்.

குணதேவனுக்கு அந்த மக்கள்மீது கொஞ்சம் ஆத்திரம்தான். மாமாவுடனும் குமுதவல்லியுடனும் தன் வீரதீரப் பிரதாபங்களைப் பேசிப் பொழுதை இன்பமாகக் கழிக்க நினைத்த அவனை ஊர் மக்கள் சூழ்ந்து கொண்டு...

குமுதவல்லி கதவோரம் வந்து நின்று குணதேவன் கூறுவதைக் கேட்கலானாள். அதை அறிந்தபோது குணதேவனுக்கு உற்சாகம் பொங்கி வழிந்தது. ஆறாண்டுகளில் நடந்ததைப் பாரத இராமாயணக் கதைபோல் அவன் உற்சாகமாகக் கூறத் தொடங்கினான்.

காஞ்சிநகர வீதிகள் சந்தடியின்றி இருந்தன. அகலமான அந்த வீதிகளின் இருபுறத்துக் கதவுகளும் அடைபட்டுக் கிடந்தன. வீதி முனைகளில் உயர்ந்த கருங்கல் தூண்களின் மீது எரியும் தீவட்டிகள்கூட அன்று நிலா வெளிச்சத்தினால் ஏற்றப்படவில்லை. கம்பீரமான கோபுரங்களின் நிழல்களும், ஜனசந்தடியற்ற வீதிகளில் வீழ்ந்து அந்த இரவின் முக்கியத்துவத்தை உணர்த்த முயன்றன. கடிகைகளிலும் தேவாரப் பாடசாலைகளிலும்கூட வழக்கமான கலகலப்பைக் காணவில்லை.

ராஜவீதியின் வடகோடியில் மட்டும் மக்கள் கூட்டம் சேர்ந்திருந்தது. அவர்களிடையே எந்த விதமான பேச்சும் இல்லை. முண்டாசு கட்டிச் சற்று வலுவுள்ள உடலமைப்புடன் கூடிய காடவர்கோன் கூறுவதையே அங்குள்ளோர் செவிமடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தனர். வடபெண்ணை யாற்றங்கரைக்குப் படைகளுடன் சென்றிருக்கும் மன்னர் இரண்டாம் பரமேஸ்வர வர்மனிடமிருந்து வந்திருந்த செய்திதான் அந்தக் கூட்டத்தில் நிலவிய அமைதிக்குக் காரணம்.

வட எல்லையிலிருந்த காவல் படையினரிடமிருந்து மிக முக்கியச் செய்தி வந்தபடியால் பரமேஸ்வர வர்மனே நேரில் போர்க்களம் நோக்கி விரைந்தார். ஒரு திங்கள் கழிந்ததும் சரியான செய்தி வராததால் நகர மக்கள் மிகுந்த கவலையிலாழ்ந்தனர். பிறகு ஒவ்வொரு நாளும் கிடைத்த செய்திகளோ நகர மக்களின் மனக்கவலையை அதிகப்படுத்தின. சாளுக்கியர்களின் படைகளுக்கும், பல்லவ வட எல்லைப் படைகளுக்கும் பெரும் போர் நடக்கிறதென்ற செய்தி கேட்டு மக்கள் கலங்கினர். கடந்த ஓராண்டாகவே யுத்த மேகம் எந்தச் சமயம் நகரைச் சூழுமோ என்று மக்கள் அஞ்சி நின்றனர். அதிலும் அன்று வந்த செய்தி...

விரைந்து வரும் குதிரைகளின் குளம்படி ஓசை கேட்டது. நான்கு குதிரைகளின் மீது ரிஷபக் கொடி பிடித்த வீரர்கள் அமர்ந்திருந்தனர். கூட்டத்தின் நடுவில் நின்றிருந்த காடவர்கோனைக் கண்ட குதிரை வீரர்களில் ஒருவன் கீழே இறங்கி, தனியே அழைத்துப் போய் ஏதோ கூறினான். மறுபடியும் குதிரைகள் விரைந்து புறப்பட்டன.



எல்லாரும் காடவர்கோனின் முகத்தையே நோக்கியிருந்தனர். அவர் கூறிய செய்தி எல்லாரையும் திடுக்கிடச் செய்தது. வடபெண்ணையாற்றங்கரையில் நடந்த போரில் சாளுக்கியப் படைகள் முறியடிக்கப்பட்டாலும், அரசர் பலத்த காயமுற்றார் என்றும் ரதத்திலே அவரை மிகக் கவனமாகப் படுக்க வைத்துக் காஞ்சி நகரை நோக்கி விரைகிறார்கள் என்றும் செய்தி கேட்ட மக்கள் நடுநடுங்கினர். மாற்றரசரின் படைகள் நகரிலே வந்து யுத்த முழக்கம் செய்திருந்தால்கூட அவர்கள் இவ்வளவு கலங்கியிருக்க மாட்டார்கள்.

காடவர்கோன் அந்தக் கூட்டத்தினருக்குச் சில கட்டளை களைப் பிறப்பித்தான். மறுகணம் நான்கு திக்கிலுமாக அவர்கள் பிரிந்து சென்றனர்.

ஜெய கோஷமில்லை; விருதுகள் கூறி வாழ்த்தும் கட்டியமில்லை. முரசு முழங்கவில்லை; சங்கின் ஒலியைக் காணோம். மேளதாள ஆரவாரமில்லாமல் ரதம் மிக வேகமாக வந்து கொண்டிருந்தது. ரதத்தின் இருபுறமும் இரு வீரர்கள். காற்றினும் கடுகிய வேகத்தில் அரசரை ஏற்றி வந்த ரதம் கைலாசநாதர் கோயிலை நோக்கி திரும்பியது. பின் தொடர்ந்து வந்த மக்களை வீரர்கள் அனுமதிக்கவில்லை.

கோயிலின் வெகு தொலைவிலேயே ரதத்தை நிறுத்தும்படி ஆஜானுபாகுவாயிருந்த வீரன் கட்டளையிட்டான். ரதத்தின் திரை விலக்கப்பட்டது. கண்களை மூடியவண்ணம் தலையணையில் சாய்ந்திருந்த பரமேஸ்வர வர்மன் மெல்லக் கண்களைத் திறந்தார். அவர் உதடுகள் ஏதோ முணுமுணுத்தன. மெல்லக் கரங்கள் இரண்டையும் எடுத்துக் கூப்பினார். கண்களிலிருந்து நீர் தாரைதாரையாகப் பெருகிற்று. இவை நொடியில் நடந்தேறின. பிறகு காஞ்சியிலுள்ள மாளிகையை நோக்கி ரதம் திரும்பாமல் திருக்கழுக்குன்றத்துக்குச் செல்லும் சாலையில் விரைந்தது.

நடுநிசி கழித்து சில நாழிகைகள் ஆகியிருக்கலாம். திருக்கழுக்குன்றத்து அரண்மனையில் மூன்று பேர் கவலையுடன் அமர்ந்திருந்தனர். போர்க்களத்தில் அடைந்த விழுப்புண்களால் ஏற்பட்ட வேதனையை அப்போது அரசர் சற்று மறந்திருந்தார்

என்றே கூற வேண்டும். தேவாரத் திருப்பதிகங்களைப் பாடுவோரின் இன்னிசை அந்த வேதனையை மாற்றியிருந்தது.

புலியூர்க் கோட்டத் தலைவரும் முதல் அமைச்சர் பிரம்மஸ்ரீ ராயரும், பரமேஸ்வர வர்மரின் வளர்ப்புமகன் சித்திரமாயனும் கவலையே வடிவாக அமர்ந்திருந்தனர்.

வெளியே ரதமொன்று வந்து நின்றது. அதிலிருந்து பட்டயமெழுதுபவரும், அவனிதந்த போசரும், வைத்திய ரொருவரும் இறங்கி வந்தனர். வழக்கமான அரண்மனை வைத்தியரல்லர் அவர். பெரிய தலைப்பாகை கட்டியிருந்தார். அடர்ந்த தாடியும் முறுக்கிவிட்ட மீசையும் அவர் அயல் நாட்டவர் என்பதை எடுத்துக் காட்டின.

அவர்கள் வந்தவுடன் அங்கிருந்த மூவரும் எழுந்து நின்றனர். அவனிதந்த போசர் எல்லாரையும் கையமர்த்தினார். அரசர் படுத்திருந்த இடம் நோக்கி எல்லாரும் விரைந்தனர்.

தேவாரப் பதிகங்களை இசைக்கருவிகளின் மூலம் இசைத்துக் கொண்டிருந்தோர் நிறுத்தினர். பணியாட்கள் அங்கிருந்து அகன்றனர். அவனிதந்த போசரும், பிரம்மஸ்ரீ ராயரும், பட்டயமெழுதும் பொற்கொல்லரும், சித்திரமாயனும், புலியூர்க் கோட்டத் தலைவரும் வெண்குன்றக் கோட்டத் தலைவரும் எழுந்து நின்றனர்.

கவனித்து நோக்கிய அரசர் அவர்களை அமருமாறு சைகை செய்தார். அரசரின் அன்புக்கு வணக்கம் செலுத்திய அவர்கள், அவர் கூறுவதைக் கேட்க அரசரைப் பணிவுடன் அணுகினர். புதிய வைத்தியர் தான் கொண்டு வந்திருந்த கொம்பு வடிவமுள்ள குழாயினின்று ஏதோ மருந்தை எடுத்தார்.

அரசர் கையை அசைத்தார். அவர் சைகையிலிருந்து மருந்து ஏதும் வேண்டாமென்று தெரியவந்தது.

அவனிதந்த போசரையும், முதலமைச்சரையும் அருகே அழைத்த அரசர் அவர்கள் கரங்களைப் பற்றினார். இருவரின் கண்களிலும் நீர் தளும்பியது. அணையப் போகும் விளக்கு



அதிகப் பிரகாசமாக ஒளிவிடுவது போல் பரமேஸ்வர வர்மன் இதுவரை இல்லாத வகையில் பேசினார். மெல்லிய குரலில் அவர் கூற வந்தது அருகேயிருந்த மூவர் மட்டும் கேட்கும் வகையில் அமைந்தது. அவருடைய ஓரிரண்டு சொற்களும் பல்லவ அரசபீடத்தில் அடுத்து இருக்க வேண்டியவரைப் பற்றி இருந்தன. 'சந்ததி - உரிமை என்பதைப் பாராமல் இந்தச் சாம்ராஜ்யத்தை மாற்றானிடமிருந்து காத்துத் திறம்பட ஆட்சி நடத்தக் கூடியவர்களாகப் பார்த்து ஆட்சி பீடத்தில் அமர்த்துவது உங்கள் பொறுப்பு' என்று வற்புறுத்துவதாக இருந்தன.

இவற்றைக் கூறி முடிப்பதற்குள் களைப்பு மிகுதியால் நெஞ்சையடைத்தது. அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை. அவர் கண்கள் யாரையோ தேடின. எல்லாரும் அவரை நெருங்கினர். சித்திரமாயன் 'அப்பா' என்று அலறியவண்ணம் மற்றவர்களை நெருக்கியடித்துக் கொண்டு வந்தான்.

அரசர் அவனைக் கவனிக்கவில்லை. அவர் உதடுகள், 'இரண்யவர்மர், இரண்யவர்மர்' என அழைத்தன. இரண்யவர்மர் அப்போது உறையூருக்கல்லவா சென்றிருக்கிறார்? பரமேஸ்வர வர்மர் கடைசி முறையாக எல்லாரையும் பார்த்தார். புதிய வைத்தியர் அரசரின் அருகே நெருங்கினார். மிக நெருக்கடியான அந்த வேளையில் பரமேஸ்வர வர்மர் புதிய வைத்தியரை இன்னாரெனப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவர் முகம் எப்பொழுதையும்விட அதிகமாக ஒளி வீசியது. அவர் கரங்களை நீட்டினார். அவர் கைமீது புதிய வைத்தியரின் வலக்கை படிந்தது.

எரிந்து கொண்டிருந்த விளக்கின் ஒளியில் அந்தக்கணம் மகத்தான செயலை நிறைவேற்றுவதற்கான முகூர்த்த காலமாக அமைந்தது.

நொடியில் நடந்து விட்ட இந்தச் சம்பவத்திற்குப் பிறகு பல்லவ நாடெங்கும் அடுத்துப் பட்டமேறுபவர் யார் என்பதைப் பற்றியே பேச்சாக இருந்தது. பரமேஸ்வர வர்மரின் வளர்ப்பு மகன் சித்திரமாயன் நியாயமாகத் தனக்குத்தான் அரச உரிமை என வாதித்தான். வெறும் வாய்ப்பேச்சோடு நிற்கவில்லை. செயலளவில் நிறைவேற்றவும் முனைந்து விட்டான்.

மந்திரி மண்டலத்தாரும், கோட்டத்துத் தலைவர்களும், காஞ்சி நகரத்து வாணிபப் பெருங்குடி மக்களும், அறிஞர்களும் கூடினர். பரமேஸ்வர வர்மன் சாகும்போது தன்னிடம் கூறியவற்றை அவர்களிடம் விளக்கினார். எல்லாருடைய முடிவுப்படி பரமேஸ்வர வர்மனின் ஒன்றுவிட்ட சகோதரரான இரண்யவர்மரின் நான்காவது மகனான பன்னிரண்டு வயது நிறைந்த பல்லவ மல்லனை அரசராகத் தேர்ந்தெடுத்து நந்திவர்மன் எனப் பெயர் சூட்டி, மகுடாபிஷேகம் செய்தனர்.

குணதேவன் இதைக் கூறிவரும்போது உற்றுக் கேட்டு வந்தவர்களில் ஒருவர் கேட்டார்: "பரமேஸ்வர மகாராஜா சித்திரமாயனுக்குப் பட்டம் சூட்டுவதை விரும்பவில்லை என்பது எப்படி நிச்சயம்?"

குணதேவனை முன்பு யாராவது இப்படிக் கேட்டிருந்தால் இவ்வளவு பொறுமையாகப் பதில் கூறியிருக்க மாட்டான்; அப்போது கூறினான்:

"அவரது கடைசி எண்ணம் வெளிப்படும் சமயம் அவனிதந்த போசர் அருகேயிருந்தாராம். சகல சாஸ்திரங்களை அறிந்தவரும் காஞ்சிமா நகரிலுள்ள கடிகைகளுக்குத் தலைவருமான அவரை விட சத்தியமும் நியாயமும் எடுத்துக் கூறக் கூடியவர் வேறு யார் நாட்டிலிருக்கிறார்?" என்று குணதேவன் மறுமொழி புகன்றபோது எல்லாரும் ஆமோதிக்கும் வகையில் தலையசைத்தனர்.

"புதிய வைத்தியர் என்கிறீர்களே... அவரது கையை அரசர் பிடித்து உறுதி பெற்றார் என்கிறீர்களே, அவர் யார்? என்ன உறுதி? எதற்காக உறுதி?" - சந்தேகங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிளம்பின.

"பல்லவ சாம்ராஜ்யத்தை மாற்றார் படையெடுப்புகளிலிருந்து காப்பாற்றுவேன். பல்லவ குலம் அழியாமல் காப்பாற்றுவேன் என்ற உறுதிமொழி. அந்த வைத்தியர் யார் என்பதை மட்டும் இப்போது கூற எனக்கு உத்தரவு கிடையாது. சமயம் வரும்போது சொல்கிறேன்."



"அப்பா! நேரம் ஆகிக் கொண்டே போகிறது. உணவு ஆறிப் போகாதா?" என்ற இனியகுரல் இல்லின் உள்ளேயிருந்து வந்தது. குணதேவனுக்கு அதற்குமேல் அங்கு அமர்ந்து பேசுவது இயலாது எனப்பட்டது. ஆறாண்டுகளாக அவனுக்கு வேளையில் உணவும் இல்லை, உறக்கமும் இல்லை. சேனைத்தலைவர் <u>உதயசந்திரன்</u> இடும் கட்டளைகளைச் செவ்வனே நடத்துவதில் ஏற்பட்ட பொறுப்பும் கடமையும் அவரது உபதேசமும் அவனை இமைகூட மூட இயலாமல் செய்தன.

"குணதேவா! சொந்த வெறுப்பு விருப்புகளுக்கு இப்போது இடமில்லை; இளவயதினரான நந்திவர்ம அரசரின் ஆட்சியை வேரூன்றச் செய்வது நமது முதல் பொறுப்பு. உட்பகை, வெளிப்பகை எனும் இரண்டில் முதலில் உட்பகையை அழிக்க வேண்டும். ஆட்சியைக் கவிழ்க்கச் சித்திரமாயன் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறான். அவனும் அவனது ஆட்களும் செய்யும் திட்டங்களைக் கவனிக்க வேண்டியது உன் பொறுப்பு" என்ற தலைவர் உத்தரவைச் சிரமேற்கொண்டு சித்திரமாயனை நிழல்போலத் தொடர்ந்து அவ்வப்போது செய்தி அறிவித் திருக்கிறான். அந்தச் செய்தியின் உதவியால் சதியை ஒவ்வொரு கட்டத்திலும் தொடக்கத்திலேயே உதயசந்திரன் முறியடித்திருக்கிறான். ஆறு வருடங்கள் கழிந்து விட்டன. சித்திரமாயனின் நடவடிக்கைகள் அநேகமாக அடங்கி விட்டனவென்று குணதேவன் எண்ணுவதற்குள் உதயசந்திரன் அவனை அழைத்தான். "குணதேவா, தாமரைப்பாடியிலுள்ள உன் மாமாவைப் பார்த்து நாள்களாகின்றன அல்லவா?" என்று கேட்டான்.

தாமரைப்பாடி என்றவுடன் குணதேவனுக்கு நாடும், நகரமும், போரும் பூசலும் மறந்து விட்டன. தாமரைப்பாடியை நோக்கிக் கிளம்பிவிட்டான். அவனது இளம் பருவ, அவசர முடிவைக் குறித்து உதயசந்திரன் சிரித்துக் கொண்டான்.

குணதேவன் இன்னும் உணவருந்தவில்லை என்பதை அறிந்த ஊர் மக்கள் சித்திரமாயன் என்னென்ன சதி செய்தான் என்பதைப் பற்றிப் பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்று ஒவ்வொருவராக அங்கிருந்து தத்தம் இருப்பிடம் சென்றனர்.

வாயிற் திண்ணையைத் தாண்டி தாழ்வாரத்தை அடையுமுன்பு சற்றே இருண்ட அந்த நடையில் திடீரென மல்லிகையின் மணம் வீசியது.

"யார் குமுதாவா?" என்று ஆவலுடன் கேட்டு, மணம் வந்த இடத்தை நெருங்கினான்.

"பசிக்கவில்லையா? கவசங்களைக் களைந்து கத்தியைக் கழற்றி வேறு உடை அணியக்கூடாதா?"

"ஊஹூம்... கவசங்களையா? எனக்குப் பயமாக இருக்கிறது."

"பயமா? வீராதி வீரருக்குப் பயமுண்டா?"

"கவசத்தையும் துளைத்துவிடுமே உன் வேல்விழி வீச்சு. கவசத்தைக் களைந்து விட்டால்...?"

இருண்ட இடமாக அது இல்லாமல் இருந்திருந்தால் குமுதவல்லியின் முகம் மேலும் சிவப்பதை அவன் அறிந்திருப்பான்.

இளம் உள்ளங்கள் இணைந்து குலவும் தருணம் அறியாக் கிழவரான கந்ததேவன் கூடத்து மூலையிலிருந்து ஏதோ கேட்டார்:

"குணதேவா! பல்லவப் பேரரசின் சேனாதிபதி உதய சந்திரனைப் பற்றி எல்லாரும் புகழ்கிறார்கள். இளம் வயதிலேயே அவர் புரியும் சாகசங்களையும் வீர தீரச் செயல்களையும் மிகவும் புகழ்ந்து எல்லாரும் கூறும்போது அவரைக் காண வேண்டும் போலிருக்கிறது."

இதைக் கூறும்போது குணதேவனும் குமுதவல்லியும் அவரருகே வந்து விட்டனர். உதயசந்திரனின் பெருமையைப் பற்றிப் பேசுவதென்றால் குணதேவனுக்கு நாள் கணக்கு போதாது. அவன் ஏதோ கூற முயன்றபோது வாயிலில் குதிரையின் குளம்படியோசை கேட்டது. குதிரையினின்று ஆஜானுபாகுவான உருவமொன்று இறங்கியது. அந்த மங்கிய நிலவொளியிலும் அந்த உருவத்தின் முக ஒளி அந்த இடத்தை அதிகப் பிரகாசமாக்கியது.

மனத்தில் கற்பனை செய்து கொண்டிருந்த வீர புருஷன் விஜயம் செய்ததைக் கண்டு கந்ததேவனும் குமுதவல்லியும்



வியப்பால் திகைத்து நின்றனர். வரவேற்க வேண்டும் என்ற உணர்ச்சிகூட அவர்களுக்கு எழவில்லை.

குணதேவன் சுயநிலையை அடைந்தான். "வாருங்கள். வாருங்கள்! இவ்வளவு நேரம் உங்களைப் பற்றிய பேச்சுத்தான். கிராம மக்களெல்லாம் உங்களைக் கண்டால் பரவச மடைவார்கள்" என்று கூறும்போது உதயசந்திரன் 'உஸ்' என்று வாயின்மீது விரலை வைத்து, "குணதேவா! ஊரைக் கூட்டி என்னைக் காட்சிப் பொருளாக்க இது சமயமன்று. மிகப் பெரிய ஆபத்து நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. சித்திர மாயனுடைய வேலை முடிந்துவிட்டது என்றெண்ணினாயே இல்லை... இல்லை! அவன் திட்டம் மிகப் பெரிதாக இருக்கிறது. ஒவ்வொரு விநாடியும் ஆபத்து நெருங்கிக் கொண்டிருக்கிறது. அதை முறியடிப்பதே நமது வேலை. வீரனுக்கு ஓய்வேது? உடனே நீ கிளம்ப வேண்டும்" என்று கூறினான்.

அமைதி நிலவிய அந்த வீட்டின் தூணின் ஓரத்தே நின்று கொண்டிருந்த குமுதவல்லியிடமிருந்து விசும்பல் ஒலி எழுந்தது. கண்களிலிருந்து நீர்த்துளிகள் உருண்டு வீழ்ந்து பூமியை நனைத்தன.

"அம்மா குழந்தாய்! என்னைச் சபிப்பாய் நீ. இங்கு வந்து இன்பமுகங்கண்டு பேசக்கூட நேரமில்லாது நான் செய்து விட்டேன். நாட்டின் தலைவிதியே இப்போது உன் அத்தானிடம் தான் இருக்கிறது. இந்தத் தெய்வத் திருநாட்டின் மானம் பெண்குலத்தின் தியாகத்தால் பலமுறை காப்பாற்றப் பட்டிருப்பதற்கு எவ்வளவோ சான்றுகள் உள்ளன. குண தேவனுக்குக் குளிர்ந்த முகத்துடன் விடை கொடு. விரைவிலே அவன் திரும்பி வருவான்" என்று குழைவும் கட்டளையும் கம்பீரமாக வெளிப்படப் பேசிய உதயசந்திரன் குணதேவனைத் தனியே அழைத்து ஏதோ கூறினான்:

"இப்பொழுதே கிளம்ப வேண்டுமா?" என அவன் கேட்டான். அவன் குரலில் ஏக்கம், திகைப்பு, கெஞ்சல் எல்லாம் கலந் திருந்தன.

"ஆமாம். ஒரு கணம் திகைத்தாலும் பேராபத்து. இவ்வளவு நேரம் ஆபத்து பாதி தூரம் தாண்டியிருக்கும். அதைத் தடுத்து நிறுத்த ஒரு விநாடி தாமதித்தால் விளைவு மகா பயங்கரம்" என்றான்.

குணதேவன் ஏதோ கூற வாயெடுக்கும் முன் உதயசந்திரன் குதிரையின் மீது தாவி ஏறி, "இன்றைக்குப் பத்தாவது நாள் உன்னை மணிமங்கலத்தில் சந்திக்கிறேன்" என்று கூறியவண்ணம் அந்த இருளில் மறைந்தான்.

வாளையும் மார்புக் கவசத்தையும் எடுத்தணிந்து குணதேவன் பிரயாணத்துக்கு ஆயத்தமாவதைக் குமுதவல்லி பார்த்துக் கொண்டே இருந்தாள். தோட்டத்து மல்லிகைப் பந்தலிலிருந்து நறுமணம் பரவி வந்ததுகூட அவளுக்குத் தெரியவில்லை. அடுப்பிலே வைக்கப்பட்டிருந்த பால் பொங்கி வழிந்ததைக் கூட அவள் கவனிக்கவில்லை.

அவள் என்னென்னவோ எண்ணியிருந்தாள். என்னென்னவோ பேசத் திட்டமிட்டிருந்தாள். மீண்டும் பயணம் என்பதை அறியும்போது அவள் கண்களில் நீர் தளும்பியது.

"மாமா! போய் வருகிறேன்! மிக முக்கியமான பணி. விரைவில் வெற்றியுடன் வருவேன்" என்று கூறி, குணதேவன் விடைபெற்றுக் கொள்ளும் குரல் எங்கோ அதல பாதாளத் திலிருந்து ஒலிப்பதுபோல் குமுதவல்லியின் காதில் விழுந்தது.

குணதேவன் அவள் பக்கம் நோக்கித் திரும்பினான். கண்ணீர்த் திரையால் மூடியிருந்த இரு கண்களும் பேசின.

கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர் கீழே விழுவதற்குள் குணதேவன் சென்ற திக்கையே பார்த்து விம்மினாள்.



## 2. காஞ்சியை நோக்கி

சித்திரமாயன் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தான். காலஞ்சென்ற மன்னர் பரமேஸ்வர வர்மன் தன் மகன் சித்திரமாயனுக்குப் பட்டத்து உரிமையை அளிக்கவில்லை. அதனால் அவனுக்கு வெறுப்பும் கோபமும் மூண்டன. தன்னைவிட இளம் வயதினனான பல்லவ மல்லன் கடந்த ஆறாண்டுகளாக வியக்கத்தக்க முறையில் ஆட்சி புரிவதைக் கண்டு அவனுக்கு உள்ளூறப் பொறாமை மூண்டது. வெறுப்பு, கோபம், பொறாமை மூன்றும் கலந்தால் சதி வந்து சேர எவ்வளவு நேரமாகும்?

அவனுடைய திட்டங்களுக்கு உதவி வந்த உள்நாட்டு அனுதாபிகளின் ஆதரவும் கிடைக்காமல் உதயசந்திரன் முறியடித்து விட்டான். சித்திரமாயனுடைய கவனம் இப்போது வேறு திசையில் திரும்பியது. தோல்வி ஏற்பட ஏற்பட வெற்றி காணும் தீவிரம் அவனிடம் அதிகமாயிற்று. வேற்று நாட்டு மன்னர்களின் உதவியை நாடும் யோசனை அவனுக்குத் தெம்பை அளித்தது. தன் உற்ற நண்பன் கருங்கண்ணனை அழைத்துச் சில திட்டங்களைக் கூறினான். கருங்கண்ணன் வாழ்வின் பல கோணங்களை அறிந்தவன். கணுக் கணுவாக வாழ்வின் ருசியை அனுபவித்தவன். பௌத்தனாக, கபாலிகனாக, சமணனாக இருந்து இப்போது சைவ மதத்தில் பற்றுக் கொண்டு சைவனாக மாறினான். சைவனாகவோ, சமணனாகவோ எப்படி மாறினாலும் அவனுடைய விஷந்தோய்ந்த இதயத்து உணர்ச்சிகளை மட்டும் அவன் மாற்றிக் கொள்வதில்லை. இராஷ்டிரகூட நாட்டு அரசர் வைரமேகனுக்குச் சித்திரமாயன் சார்பில் தூது செல்லத் துணிந்தான். எண்ணிய எண்ணம் விரைந்து நடைபெறும் சகுனங்கண்டு சித்திரமாயன் மகிழ்ந்தான். இராஷ்டிர கூடர்கள் படை காஞ்சியை அணுகும்போது அவற்றுடன் தானும் படை திரட்டிச் சேர்ந்து

பல்லவப் படைகளை 'ஹதாஹதம்' செய்து அரியணையில் கம்பீரமாக அமர்ந்து...

அவன் கனவு விரிந்து பரந்தது.

யாரும் அறியா அந்த ரகசியத்தை உதயசந்திரன் அறிந்தபோது அதற்கு மாற்றாகத் திட்டம் தயாரித்து அதைச் செயல்படுத்த குணதேவனை விரைந்து செல்லுமாறு பணித்தான்.

மங்கலான சந்திரவொளி அப்போது இருந்தபோதிலும் வடக்கு நோக்கிச் செல்லும் சாலையின் இருபுறமும் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களால் இருள் கப்பியிருந்தது. வைகறைப் பொழுது நெருங்கிக் கொண்டிருந்தது. குணதேவன் கிராமத்திலிருந்து புறப்பட்டு மூன்று நாள்களாகிவிட்டன. திருத்தணிகைக்கருகிலுள்ள வழிப்போக்கர் தங்கும் விடுதியை அவன் அடையும்போது பொழுது நன்றாக விடிந்து விட்டது. வீடுகளின் வாயிலில் நீர் தெளித்துக் கோலமிடும் பெண்கள் குதிரை மீது அமர்ந்து வரும் குணதேவனை வியப்புடன் நோக்கினர்.

விடுதியின் வாயிலில் குணதேவன் இறங்கியபோது விடுதித் தலைவன் துயில் நீங்கி எழுந்து கொண்டிருந்தான். மூன்று தினங்களாக உறக்கம் காணாத குணதேவன் கண்கள் ஓய்வுக்காகக் கெஞ்சின. அகக்கண்களோ தனக்கு முன்பாக எங்கோ செல்லும் விரோதியின் குதிரையை நோக்கிச் செல்லத் துடித்தன.

"உள்ளே வாங்க ஐயா! ரொம்பவும் களைத்துப் போய்க் காணப்படுகிறீர்கள்" என்று சத்திரத்துத் தலைவன் வரவேற்றான்.

அவனுடைய இன்சொல் குணதேவன் கவனத்தைக் கவரவில்லை. வழியே கண்ட விடுதித் தலைவர்களைக் கேட்ட அதே கேள்வியைக் குணதேவன் அங்கும் கேட்டான்.

"ஐயா! சமீபத்தில் யாராவது வீரர்கள் இங்கு வந்து தங்கிச் சென்றார்களா?"

இப்படிப் பட்டவர்த்தனமாகக் கேட்கிறோமே, உண்மையான மறுமொழி கிடைக்குமா என்று குணதேவன் மறுகணம் எண்ணுவதற்குள், விடுதித் தலைவன் சிரித்தான். அதில் அசட்டுத்தனம் பொங்கித் ததும்பியது.



"வீரர்களா? சாதாரண காசி யாத்திரைப் பிரயாணியைக் கண்டே ஆறு மாதங்களாகின்றன. வீரர் வந்தால் நான் இப்படியா இருப்பேன்? நல்ல பொழுதாக விடிந்தது. உங்கள் முகத்தில் விழித்தேன். கரை கொள் காசாவது கிடைக்காமல் போகப் போகிறதா?" என்று வாயிலுள்ள பதினெட்டுக் கோரமான பற்களும் தெரியச் சிரித்தவாறு கூறினான்.

குணதேவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. விடுதித் தலைவனின் அசட்டுத்தனத்திலும் பணத்தாசை பூரணமாக இருப்பதை அறியும்போது சிரிப்பும் சேர்ந்தது. அறிய வேண்டியதை அறிந்துவிட்ட மகிழ்ச்சியில் விடுதித் தலைவனுக்கு வேண்டியதைக் கொடுத்துவிட்டுச் சொற்பமாக உணவை உண்டு கிளம்பினான். 'சித்திரமாயனின் ஆட்கள் இவ்வளவு தொலைவு வருவதேது? நாம்தான் முதலில் சென்று வெற்றிகரமாகக் காரியத்தை முடிக்கப் போகிறோம்' என்ற பூரிப்பில் தனக்குத் தெரிந்த சித்தர் பாடலைப் பாடிக் கொண்டு குதிரையை மெல்லச் செல்லவிட்டான்.

இரண்டு இரவுகள், இரண்டு பகல்கள் கழிந்து விட்டன. இப்படியே இடைவிடாது பயணம் செய்து கொண்டே இருந்தால் முடிவுதான் என்ன என்று அவன் ஒருகணம் எண்ணினான். அவனுக்கே தன் செயலில் சந்தேகமேற்பட்டது. காஞ்சி நகர எல்லையை விட்டு வடக்கே எங்கும் போயறியாத அவனுக்கு வடதிசைப் பயணம் புதிய அனுபவமாக இருந்தது. எங்கு பார்த்தாலும் மலைகளும், குறுகிய உயரமுள்ள செடிகளும் புதர்களும் நிறைந்த காடுகளும், முட்கள் நிறைந்த மரங்களும், ஓநாய்கள் ஊளையிடும் சப்தமும் மயான அமைதியும் அவனுக்கு அலுத்துப் போய்ச் சோர்வை ஏற்படுத்தின. அதிகப் பருமனில்லாத குண்டுக் கற்கள் பாதையில் நிறைந்து குதிரை வேகமாகச் செல்வதைத் தடைப்படுத்தின.

தாகமும் பசியும் வாட்ட, மனத்திலே தாமரைப்பாடி நினைவு எழ, களைத்துப் போய் அவன் அந்த இடத்திலேயே நின்று விட்டான். குதிரையை மரத்தின் வேரொன்றில் கட்டிவிட்டு கேடயத்தையும் வாளையும் முதுகிலே இருந்த மூட்டையையும்

அவிழ்த்து அங்கிருந்த பாறைமீது வைத்து அருகே நீர்நிலை எங்கேனும் இருக்கிறதா என்றறியக் கிளம்பினான்.

குறுகலான பாதையொன்றின் திருப்பத்தில் இயற்கையாக அமைந்திருந்த சுனையொன்று காணப்பட்டது. புதையல் கிடைத்த தனம்போல் குணதேவன் நீரை அள்ளிக் குடித்து வயிறு முட்டி அப்பாடா என்ற உணர்ச்சி ஏற்பட்ட பிறகுதான் அவன் திரும்பினான். மீண்டும் அவன் குதிரை மீது ஏறவில்லை. களைப்பு கண்ணுக்கு உதவி செய்து நித்ரா தேவியை அழைக்க அங்கேயே மரவேரில் தலையை வைத்துக் கொண்டு கண்ணயர்ந்தான்.

எவ்வளவு நேரம் தூங்கியிருப்பானோ அவனுக்கே தெரியாது. விசித்திர விசித்திரமான அனுபவங்கள், தோற்றங்கள். சித்திரமாயனே குதிரையில் அங்கு வந்து சேர்கிறான். இருவரும் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்கிறார்கள். சித்திரமாயன் திடீரெனக் கத்தியை உருவுகிறான். குணதேவனும் கத்தியை உருவுகிறான்.

ஐயோ... ஏன் கத்தியைத் தொட முடியவில்லை? கை ஏன் இப்படிக் கனக்கிறது?

சித்திரமாயனுக்கும் அவனுக்கும் பலத்த யுத்தம். முன்னமே மூண்டு உடலெங்கும் பலத்த காயம்பட்டு ரண வலி ஏற்பட்டிருக்கிறதா? உடம்பை நகர்த்த முடியவில்லையே. கண்ணைத் திறக்க முடியவில்லையே. உடல் ஏன் இப்படி நடுங்குகிறது? அதற்கு மேல் அவனால் சிந்திக்க முடியவில்லை.

மீண்டும் கண்விழித்தபோது அவன் மரத்தடியில் இல்லாமல் வேறு எங்கோ இருக்கும் உணர்ச்சியை அடைந்தான். கூடாரமொன்றில் சிறு மஞ்சத்தில் அவன் கிடத்தப்பட்டிருந்தான். 'ஹோ' என்ற கடலோசை போன்று ஜனக்கூட்டத்தின் ஒலி. அதையும் மீறிக் கூடாரத்தின் வெளியே இருவர் பேசுவது தெளிவாக அவனுக்குக் கேட்டது.

"இளைஞனைப் பார்த்தால் பல்லவ வீரன் போல் தோன்றுகிறது. அவனிடமிருக்கும் ரிஷப இலச்சினை அதை உறுதிப்படுத்துகிறது."



"பல்லவ நாட்டிலிருந்து வீரர்கள் வந்த வண்ணமாக இருக்கிறார்களே, அங்கு என்ன விசேஷம்? அவர்கள் அழைப்புத்தானே நம் தென் திசைப் பயணத்துக்குக் காரணம்?"

"எனக்கென்னவோ வியப்பாயிருக்கிறது. ஒரு நாட்டு மன்னவர் வேற்று நாட்டு அரசரைத் தன் நாட்டிற்கு வந்து போகுமாறு அழைப்பதை இதற்கு முன் நான் கேள்விப்பட்டதில்லை."

"ஆம்; ஆம்; அழைப்பார்கள், அழைப்பார்கள். எல்லாம் காரணமான அழைப்புதான். அங்குச் சமீப காலத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. சந்ததியில்லாது அரசர் இறந்து விட்டார். சிறுவன் ஒருவனைப் பட்டத்திலமர்த்தியிருக்கிறார்கள். பட்டத்துக்கு வேறொரு வாரிசுதார் உரிமை கொண்டாடுகிறான்... சண்டை, பூசல்!"

"நம்மை அழைத்தவன் அந்தச் சிறுவனா?"

"இல்லை, இல்லை. பட்டத்துக்காகப் போராடும் அரசகுமாரன்; நம் விஜயத்தை விரும்புகிறான். நம் அரசரின் நீண்ட கால ஆசை நிறைவேற இது ஒரு வாய்ப்பல்லவா?"

"சிறந்த வாய்ப்பு. அரசரை விட அரசகுமாரியின் ஆர்வம்தான் அதிகம். நான்கு வருடங்களுக்கு முன்பு பன்னிரண்டு வயது சிறுமியாக அவள் இருக்கையில் காஞ்சி நகரைப் பற்றி அரசகுரு மிக உயர்வாக வர்ணித்து இளவரசியின் ஆர்வத்தைத் தூண்டியிருக்கிறார்."

"அவர் வாழ்க! இல்லாவிடில் நாம் அந்தச் சுவர்க்க பூமியை ஆயுளில் பார்க்கப் போகிறோமா?"

"ஆம்; பொன் வேய்ந்த கோபுரங்களும் பிரம்மாண்டமான கோயில்களும் அற்புத அற்புதமான ஓவியங்களும் ஜீவன் நிறைந்த சிற்பங்களும், உலகில் வேறெங்கும் கிடைக்காச் செல்வங்களும் நிறைந்த அந்தப் போக பூமியையும் பார்க்க யாருக்குத்தான் ஆசை ஏற்படாது? அதனால்தான் படைகளுடன் கிளம்பிய தந்தையுடன் மகளும் கிளம்பி விட்டாள்."

"இந்த வீரனை இங்கு கொண்டு வந்திருப்பதை அரசரிடம் தெரிவித்து விட்டாயா? கடும் விஷக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட அவன் சுய நினைவு தவறியிருக்கிறான். அவனைச் சோதித்ததில் ஒன்றும் விவரம் கிடைக்கவில்லை."

"விசித்திரமாக இருக்கிறதே; ஏதோ மர்மமிருக்கிறது. அந்த வீரனை விசாரித்தாயா?"

"அந்த வாலிபன் இன்னும் கண்ணைத் திறக்கவில்லை. இங்கு உள்ள நீரைக் குடிப்பதால் உண்டாகும் விஷக் காய்ச்சல்தான். அரச வைத்தியர் வந்து பார்த்து மருந்து கொடுத்திருக்கிறார். காய்ச்சல் இன்று இறங்கிவிடும். ஆனால் ஆள் புதுப்பலம் பெறப் பல நாள்கள் ஆகலாம்."

"இவன் சுயநிலை அடையும்வரை இந்த வனப் பிரதேசத்திலிருந்து நாம் கிளம்ப முடியாதா?"

"அது அரசர் இஷ்டம். எப்படியும் அவர் இங்கு வருவார்."

குணதேவன் இடையே ஒருமுறை துள்ளி எழ முயன்றான். நந்திவர்ம அரசரைச் சிறுவன் என்று சொன்னபோது, அவனுக்குக் கோபம் துள்ளி வந்தது. ஆனால் உடலை அசைக்க முடியா நிலையில் சிறிது நேரத்தில் இழைத்த தவறை எண்ணி வருத்தப்படுவதைத் தவிர அவனால் வேறெதுவும் அப்போது செய்ய இயலவில்லை.

அந்தச் சமயத்தில் கூடாரத்தின் வாயிலில் சலசலப்பு ஏற்பட்டது. பலர் அங்கு வரும் காலடியோசை கேட்டது. இடையிடையே வளையல்கள் குலுங்கும் ஒலி கேட்டது. அயல் நாட்டு வீரர்கள் ஒருவேளை வளையல்கள் அணிந்தவர்களோ என்று குணதேவன் எண்ணினான். அவன் சிந்தனையை அதிக நேரம் ஓடவிடாமல் கூடாரத்திற்குள்ளே மளமளவென வீரர்கள் வந்தனர். வீரர்களின் நடுவே கம்பீரமாக இராஷ்டிர கூட மன்னன் வைரமேகன் நின்று கொண்டிருந்தார். அவரருகே...

குணதேவனால் தன் கண்களை நம்பமுடியவில்லை. அந்த அழகை மனத்தே அவன் புகவிட்டுக் கற்பனை செய்து கொள்ளக் கூட முடியவில்லை.



அவன் யானைத் தந்தத்தைப் பார்த்திருக்கிறான். அதை மங்கையின் உடலுடன் ஒப்பு நோக்க அவனுக்கு இப்போதுதான் சந்தர்ப்பம் கிடைத்தது.

பல்லவ நாட்டு வீரர்களின் வேல்களுடன் எப்போதும் அவன் பழகுபவன். அதைத் தனியே பறித்து முக மண்டலத்திலே வைத்திருப்பதைப் பார்க்க இப்போதுதான் அவனுக்கு வாய்ப்பு கிடைத்தது.

சில காலமாக வளரும் மதியையும் வானத்தே கண்டு ரசித்திருக்கிறான். மதியின் வடிவத்தைக் காணும்போது விண்ணிலே தோன்றும் மதி மண்ணுக்கும்வரும் என்று அவன் அறிந்தவனல்லன். இன்று அதைக் காணும் பேறு பெற்றான்.

அவனது மாமா அடிக்கடி பாடும் தேவாரப் பாடலில் ஓரிடம் அவனுக்கு நினைவுக்கு வந்தது.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்..."

அப்பாடலுக்கு ஏற்ற உயிரோவியத்தையல்லவா நேரில் கண்டு விட்டான்!

சே; இது என்ன மதியீனம்! அயல் பெண்ணை இப்படிப் பல ஆடவர்களின் முன்னிலையில் உற்று நோக்கி மனத்தே சித்திரம் தீட்டுகிறோமே... வரவர நம் மூளையே கெட்டு வருகிறது. வந்த காரியம் மறந்து கவிதையும் காவியமும் நினைத்து வருணிக்கவா இங்கு வந்தோம்?

குணதேவன் விழிகள் ஓரிடத்தே நிலைத்து விட்டதை வைரமேகன் கண்டார். அவருக்கு அருகே ஒயிலாக நின்ற அவரது ஒரே மகள் ரேவாதேவி அந்த வீரனையே பார்த்தாள்.

அங்கிருந்த வீரர்கள் வீரனையும் அரசரையும் மாறி மாறிப் பார்த்தனர்.

வைரமேகன் ஏதோ கேட்டார். கணீரென்று ஒலித்த அந்தக் குரலுக்குப் பதில்கூற குணதேவன் துடியாய்த் துடித்தான். ஒரு சொல்கூட அவன் நெஞ்சிலிருந்து எழவில்லை.

வைரமேகன் தன் மகளை நோக்கித் திரும்பிக் கூறினார்.

"ரேவா! உன்னுடைய நீண்டநாள் ஆசை பூர்த்தியாகும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. மயிலைப் போன்ற வடிவமுடைய அந்தக் காஞ்சி நகரை நீ காணப் போகிறாய்; அங்கு விளங்கும் மாட மாளிகைகளையும் எழில் மிக்க கோபுரங்களையும் நீ பார்க்கப் போகிறாய். கோயில்களிலே கிடக்கும் விலையுயர்ந்த வைர, வைடூரியங்களையும் கோமேதக, மரகதங்களையும் நீ பார்க்கப் போகிறாய். அறிவிற் சிறந்த புலவர்களைக் காணப் போகிறாய். அங்கே வீதியெல்லாம் இசை மணக்குமாம்; பலவித இசைக் கருவிகள் சதா ஒலித்துக் கொண்டே இருக்குமாம். உனக்கு இருக்கும் இசைக் கலையின் மீதுள்ள தீராத ஆசையால், நீ கலை பல அறிந்து கலையரசி ஆக வேண்டும் என்று கனவு காண்கிறாயே, அது நிறைவேறும் காலம் வந்து விட்டது. அங்கே ஒரே குழப்பம். இரண்டு நபர்களுக்குள் கடும் போட்டி. நம் உதவியை ஒருவர் நாடி அழைத்திருக்கிறார். அவரது உதவிக்காகப் பத்தாயிரம் படை வீரர்கள் அணி வகுத்து நம்முடன் வருகிறார்கள். காஞ்சி சுந்தரியை உனக்குத் தோழியாக்கி உன் காலடியில் கிடத்த நம் படைகள் வருகின்றன என்ற செய்தியே போதும். நாம் வரும் செய்தி அவர்களுக்கு முன்னமே தெரிந்துவிட்டால் யுத்தம் இருக்கவே இருக்காது."

வைரமேகன் பேசிக் கொண்டே போனார். அவர் கண்கள் சர்வ சித்தியையும் அடைந்து விட்ட பெருமிதத்தில் ஜ்வலித்தன. குணதேவனின் பக்கமாக அவர் கண்களைச் செலுத்தினார்.

"இந்த வீரன் குணமடையும் வரை இங்கு காத்திருக்க முடியாது. இங்கேயே விட்டு விட்டுச் செல்லுங்கள். அல்லது பல்லக்கிலே தூக்கி வாருங்கள். உடனே இங்கிருந்து நாம் கிளம்புகிறோம்" என்றார்.

கடல் இரைச்சலைப் போன்ற ஓசையுடன் படைகள் தெற்கே காஞ்சியை நோக்கிப் புறப்பட்டன. பயங்கரமாக விழிக்கும் வல்லூறின் கொடியைத் தாங்கிய குதிரை வீரர்கள் முன்னால் சென்றார்கள். அவர்களைத் தொடர்ந்து யானை மீது வீரர்கள் சென்றார்கள்.



இடையே பல்லக்கில் அரசரும் இளவரசி ரேவாவும் சென்றனர். பல்லக்கின் திரையை விலக்கி வழியே காணும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்த இளவரசியின் மனம் காஞ்சியை நோக்கி விரைந்தது.

இன்னொரு பல்லக்கில் வந்த குணதேவனோ அங்கிருந்து எப்படித் தப்புவது என்ற சிந்தனையிலே முள்ளிலே அமர்ந்திருப்பது போல் துடிதுடித்து வந்தான்.

வட பெண்ணையாற்றங் கரையில் இராஷ்டிர கூடப் படைகள் தண்டு இறங்கியிருந்தன. குணதேவனின் கூடாரத்தில் விளக்கு வெளிச்சங்கூட இல்லை. எல்லாரும் அயர்ந்து உறங்கும் வேளையில் குணதேவன் காஞ்சி மாநகருக்கு நேர இருக்கும் அபாயத்தை எண்ணி வேதனையடைந்த வண்ணமிருந்தான். சேனைத் தலைவர் உதயசந்திரனுக்கு இதை எப்படி அறிவிப்பது என்ற துடிப்பு இதயத் துடிப்பைவிட அதிகமாயிருந்தது.

அந்த வேளையிலே கூடாரத்தின் ஓரமாக மறைந்து மறைந்து வந்த கம்பீரமான ஓர் உருவம் சுற்றுமுற்றும் பார்த்துக் குணதேவனின் கூடாரத்திற்குள் நுழைந்தது.

அந்த உருவத்தை நோக்கித் திடுக்கிட்டு உருவிய வாளுடன் துள்ளியெழுந்தான் குணதேவன்.

## 3. பாதாளக் குகையில்...

கடலலைகள் 'ஹோ ஹோ' எனக் கோஷமிட்ட வண்ணமிருந்தன. வேகமாக எங்கிருந்தோ தவழ்ந்து தவழ்ந்து ஒன்றையொன்று துரத்தி வரும் வெண்கரங்களை உடைய அலைகள், இந்த மண்ணின் புது மேனியைத் தொட்ட உடன்

சாந்தமடைந்து ஒன்றுடன் ஒன்று ஐக்கியமாயின. ஒவ்வொரு சமயம் மிகப் பிரம்மாண்டமாக எழும் அலையைக் காணும்போது, 'இன்று யுகப் பிரளயம்தான் ஏற்பட்டு விட்டது; கரையருகேயுள்ள குடில்கள் மறையத்தான் போகின்றன' என்று எண்ணத்தோன்றும்; ஆனால், கண்மூடித் திறப்பதற்கு முன்னால் அவை தரையில் சரணாகதியடைந்து தோற்றோடும் மாற்றரசன் படைகளைப் போல் திரும்பிவிடும்.

ஒவ்வொரு முறையும் அலைகள் கரையை வந்தடைந்துத் திரும்பும்போது வண்ண விசித்திரமான கிளிஞ்சல்கள் எங்கும் சிதறிக் கிடக்கும். மண் எனும் மங்கை நல்லாளுக்குக் கடலரசன் சூட்டிய மாலை போன்று அவை திகழும்.

இராஷ்டிரகூடப் படைகளிடம் விடை பெற்றுக்கொண்டு முன்னதாக வந்த கருங்கண்ணன் கடலின் இந்த இடைவிடா இயக்கத்தைப் பார்த்து ரசித்தவாறு கடற்கரையில் நின்று கொண்டிருந்தான். மாமல்லபுரம் என்று புகழ்பெற்ற கடல் மல்லை நகரின் சந்தடி மிகுந்த பகுதிக்கு வடக்கே சிறிது தொலைவில் நின்ற கருங்கண்ணனது கவனம் கடலலையின் மீது இருந்தாலும் அவன் மனம் பலத்த யோசனையில் இருந்தது. அலை வந்து வீசியதால் வழவழப்பாக்கப்பட்டு ஈரம் படிந்த தரையில் அவன் கால் விரல்களால் ஏதோ கோடு கிழித்துக் கொண்டிருந்தான். சிலந்திப் பூச்சியின் வடிவம் போன்று வரையப்பட்ட அந்த வரி வடிவங்களை அவன் பார்ப்பதும் மீண்டும் யோசிப்பதுமாக இருந்ததால், அவனது பின்புறமாக மணலில் கால் புதையப் புதைய நடந்து வந்தவரை அவன் அறியவில்லை.

"கண்ணா, என்ன பலத்த திட்டம்? நீ வந்து நீண்ட நேரமாகிறதோ?" என்று கேட்டவண்ணம் சித்திரமாயன் கருங்கண்ணன் போடும் கோடுகளுக்காகக் குனிந்து நோக்கினான்.

"என்ன இது? குழந்தை மாதிரி ஏதோ கிறுக்குகிறாயே? முக்கியமான யோசனையொன்று சொல்ல வேண்டும் என்று என்னை வரச் சொன்னாய். இன்று நான் இங்கு வராவிடில் பல்லவபுரத்துக்குப் போயிருப்பேன்..." என்று கூறிய சித்திரமாயனைப் பார்த்த கருங்கண்ணன் நகைத்தான். அதில்



குரூரமும் அலட்சியமும் ஆபத்தும் கலந்திருந்தன.

"குழந்தையின் கிறுக்கலும் குழந்தையின் சொல்லும் குழந்தையின் நடையும் சில சமயங்களில் மகத்தான விளைவுகளை ஏற்படுத்திவிடும் சித்திரமாயா! இது உனக்குக் கிறுக்கலாகத் தோன்றலாம். கிறுக்கலுக்குள் மறைந்திருக்கும்..." என்று கூறிய கருங்கண்ணனைச் சித்திரமாயன் இடைமறித்து, "திட்டம், திட்டம் நாம் போடும் திட்டங்களுக்குக் குறைவில்லை. ஆறு ஆண்டுகளில் நாம் எத்தனையோ திட்டங்களைப் போட்டு விட்டோம். பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்துக் காஞ்சியைக் கலங்க வைத்த புலிகேசின் கூட இத்தனை திட்டங்கள் போட்டிருப்பானா என்பது சந்தேகம். நாம் போடும் ஒவ்வொரு திட்டமும்..."

"ஏன் அவற்றுக்கு என்ன குறைவு?"

"ஒரு குறைவுமில்லை. ஆனால் நிறைவேறத்தான் காணோம்."

"நம் திட்டங்கள் அனைத்தையும் உதயசந்திரன் முன்பாக அறிந்து முறியடித்து விடுகிறான். ஆனால் இந்த முறை அவன் சாமர்த்தியங்கள் எல்லாம் வீண்தான். அவனை நம்பி நாட்டை ஆள மனப்பால் குடிக்கும் அந்தப் பயல் பரமேஸ்வரன் அழிந்து ஒழிய வேண்டியதுதான்" - கருங்கண்ணனுடைய ஆவேசமான வார்த்தைகள் சித்திரமாயனுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுத்தன. கருங்கண்ணனைப் பாராட்டி ஏதாவது வார்த்தைகள் தெரிவிக்க விரும்பி, குனிந்து அவன் வரைந்திருக்கும் சிலந்திக் கூடு போன்ற கிறுக்கலைப் பார்த்தவண்ணம், "வைரமேகன் படையெடுப்பால் நமக்கு வெற்றி நிச்சயம் என்கிறாயா?" என்று கேட்டான்.

கருங்கண்ணன் கூறினான்: "சித்திரமாயா! இந்த நேரத்தில் வைரமேகனுடைய படைகள் வட பெண்ணையாற்றாங்கரையைத் தாண்டியிருக்கும். வீரதேவனுடன் இன்னும் இருவரை இராஷ்டிரகூடப் படைகளுக்கு வழிகாட்ட அனுப்பியிருக்கிறேன். உதயசந்திரனுக்கோ, வேறு எவருக்கோ அந்த விவரம் தெரியாது. காஞ்சி நகரில் பெரிய கோயிலொன்று கட்டுவதைப் பற்றிய ஆலோசனையில் எல்லாரும் ஈடுபட்டு இருக்கிறார்கள். போர்

வீரர்கள் ஓய்வு பெற்றுத் தங்களுடைய ஊர்களுக்குச் சென்றிருக்கிறார்கள். வட எல்லை வேவுப் படைகள் செய்தியை எட்டவிடா வண்ணம் செய்திருக்கிறேன். திடீரென கடல் போன்ற இராஷ்டிரகூடப் படைகள் காஞ்சியைத் தாக்கும். ஆனால் பூரண வெற்றி வைரமோகன் விஜயத்தில் இல்லை. நம்மிடமிருக்கிறது. அவன் வரும்போது அவனுக்கு உதவியான சூழ்நிலை இங்கு உருவாக வேண்டும்."

"உதவியான சூழ்நிலை என்றால்?" - சித்திரமாயன் முகவாய்க் கட்டையைத் தடவியவாறு கேட்டான்.

"அப்படிக் கேள்! அதைத்தான் இந்தக் குழந்தைக் கிறுக்கல் தெரிவிக்கிறது" என்று கூறி வடக்குப் பக்கமாகப் போடப்பட்ட கோடுகளைச் சுட்டிக் காட்டி ஏதோ கூற முயன்றபோது தடாரென்று எழுந்து கரையில் மோதிய அலையால் வெகு தொலைவுக்கு வெகு தொலைவு வேகமாக விரிந்த கடல் நீர் கரையிலே வரையப்பட்ட கோடுகளை அழித்தன. ஆடைகளை நீர் நனைத்ததாலும் திட்டத்தை நீர் அழித்ததாலும் சலிப்படைந்து எழுந்த இருவரும் கடற்கரையை விட்டகன்று பேசிக் கொண்டே நடந்தனர்.

"இராஷ்டிரகூடப் படைகளை மேற்குக் கோட்டை வாயிலாகக் காஞ்சி நகருக்குள் உட்புகுத்தத் திட்டமிட்டிருக்கிறேன். வடக்கு வாயிலில்தான் பலத்த காவல் இருக்கிறது அல்லவா? அந்தச் சமயம் ஆங்காங்கே குழப்பம் ஏற்படுத்திப் பல்லவ வீரர்களின் கவனத்தை மூலைக்கு மூலை திருப்ப வேண்டும்; அவர்கள் சக்தியைச் சிதற அடிக்க வேண்டும்!"

"நானும் அதையே நினைத்தேன் கருங்கண்ணா! உனக்கும் எனக்கும் எப்படி ஒரேவித யோசனைகள் தோன்றுகின்றன?"

"நாளை உன் அமைச்சரவையில் நானொருவனாக ஆகப் போகிறேனே! உன் திறமை எனக்குமில்லாவிட்டால்..." என்று கூறி நகைத்த கருங்கண்ணன், "நாம் ஒருநாள் கூடத் தாமதிக்கக்கூடாது. இன்று இரவே நீ பல்லவபுரம் பயணமாகிச் செல்ல வேண்டும். நான் மேட்டுக் குப்பத்து முடச்சாம்பனைப்



போய்ப் பார்த்துக் கொற்றவைக் கோயிலில் பூஜைக்கு ஏற்பாடு செய்கிறேன்."

"கொற்றவைக் கோயிலில் பூஜை இப்போது எதற்கு? நான் இந்தச் சாம்ராஜ்யத்தின் அரசனாக நான் ஆன பிறகு பெரும் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்கிறேன். கோலாகல குதூகலக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்கிறேன்."

"வெற்றி பெற்ற பிறகுதான் கடவுளுக்குக் காணிக்கையா? காரியம் வெற்றிகரமாக முடிய கொற்றவைக்குப் பூஜை போட வேண்டும். இரண்டு வித அனுகூலங்கள் அதில் இருக்கின்றன. கொற்றவைக் கோயில் திருவிழாவின்போது ஏராளமான மக்கள் கூடுவர். அந்தச் சமயம் முடச் சாம்பனுக்கு ஆவேசம் வரும். பல்லவ ராஜ்யத்திற்கு வரப் போகும் ஆபத்தை அவன் எடுத்துக் கூறுவான். நான் அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு நியாயமாக அரசனாக வேண்டிய உன் உரிமையை எடுத்து மக்களுக்குக் கூறுவேன். மக்கள் மனத்தை மாற்றுவேன். ஆக்ரோஷத்தோடு அவர்கள் அந்தப் பச்சைக் குழந்தை அரசனை ஒழிக்க எழுவர். ஒரே குழப்பம்..." என்று கூறி 'ஹோ ஹோ' என்று சிரித்தான்.

"கண்ணா! நீ சொல்வது எல்லாம் புதிராக இருக்கிறதே. கொற்றவைக் கோயில் - திருவிழா - பூசாரியின் ஆவேசம் - எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"இப்போது உனக்குப் புரியாது. புரிய வேண்டிய அவசியமுமில்லை. பல்லவபுரத்துக்குப் போ. வேலும் வாளும் கேடயமும் ஆயத்தப்படுத்தி ரகசியமாகத் திருக்கழுக்குன்றத்துக்கு அனுப்பு. அடுத்த பௌர்ணமியன்று இராஷ்டிரகூடப் படைகள் மேற்கு வாயிலை நெருங்கும்போது கிழக்கு வாயிலை நோக்கி மக்கள் படை முன்னேறும்."

"மக்களை அவ்வளவு முட்டாள்கள் என்று எண்ணினாயோ, உன் உபதேசத்தைக் கேட்க?"

"அது எனக்குத் தெரியும். சொல்லும் விதத்தில் சொன்னால் அவர்களை நம் பக்கம் திருப்பி விடலாம். ஆயுதங்களைப்

பௌர்ணமியன்று திருக்கழுக்குன்றம் வந்து சேருமாறு செய்துவிடு."

சித்திரமாயன் கருங்கண்ணனிடம் விடைபெற்றுக் கொண்டு குதிரை கட்டப்பட்டிருந்த இடத்திற்கு நடந்து சென்றான். கருங்கண்ணன் கூறும் யோசனை முழுமையும் அவன் எப்போதும் ஏற்றுவிடுவதில்லை. எதிலும் ஐயுறும் அவனுக்கு இப்போது அனைவர் மீதும் சந்தேகம் ஏற்பட்டது. முடிவு செய்யும் ஒவ்வொரு காரியமும் முன்கூட்டியே உதயசந்திரனுக்குத் தெரிந்து, திட்டத்தை அவன் முறியடிக்கும்போது சித்திரமாயன் எண்ணங்கள் சிதறிவிடும். உளவாளி யாரோ உறவாடிக் கெடுக்கிறான் என்பது சித்திரமாயனுக்குச் சிறிது காலமாகத் தோன்றியது. எனினும் இம்முறை நந்திவர்மனுக்கு வரவிருந்த ஆபத்து மகத்தானது. அதிலிருந்து தப்ப வழியில்லை என்ற எண்ணத்தில் பல்லவபுரத்தை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான்.

பல்லவபுரத்தில் ஐவர் கோயிலுக்குச் சற்று தள்ளி நான்கு புறமும் சிறு குன்றுகளால் சூழப்பட்ட இடத்தைச் சித்திரமாயன் அடைந்தான். மறைவான இடத்தில் குதிரையைக் கட்டிவிட்டு ஒற்றையடிப்பாதை வழியாக நடந்து சென்று செங்குத்தான பாறை ஒன்றின்மீது ஏறி மறுபுறம் இறங்கினான். பாறையின் மேலிருந்து நோக்குபவர்களுக்குக் கீழே ஏதும் இருப்பதாகத் தோன்றாது. பாறையின் குறிப்பிட்ட ஒரு வழியாக இறங்கினால் பாதாளச் சுரங்கம் போன்று இயற்கையாகக் குடையப்பட்ட மலைக்குகை இருந்தது.

குகை வாயிலில் உட்கார்ந்திருந்த இருவர் யாரோ வரும் காலடியோசை கேட்டுத் திடுக்கிட்டெழுந்தனர்.

சித்திரமாயன் சுற்றுமுற்றும் பார்த்தான். அவன் முகத்தில் பரபரப்பு மிகுந்திருந்தது. அடர்த்தியான மீசையும் ஆழ்ந்த கண்களும் உருண்டு திரண்ட உடல்கட்டும் கொண்ட அவன் முதுகைச் சித்திரமாயன் தட்டிக் கொடுத்து, "பைரவா! பௌர்ணமி நாளுக்குள் ஐநூறு வேல், வாள் முதலியவை வேண்டும். குகையில் நமக்கு வேண்டியவை இருக்குமா?" என்று கேட்டுவிட்டுச் சற்று



இளைஞனாயிருந்தவனை நோக்கி, "சுந்தரா! பாறையோரமாகச் சென்று யாராவது வருகிறார்களா எனக் கவனித்துக் கொண்டிரு" என்று கூறவும், பைரவன் நகைத்து, "சுந்தரனிடம் அந்த வேலையைக் கொடுக்கிறீர்களே, அவனுக்குக் கண் தெரியாது என்பது உங்களுக்கு மறந்துவிட்டதா?" என்று கேட்கவும், சித்திரமாயன் உதட்டைக் கடித்துக் கொண்டு சற்றுக் கடுமையான குரலில், அவன் போகட்டும் என்று சொல்லிவிட்டு பைரவனுக்கு மட்டும் கேட்கும்வண்ணம், "சுந்தரனுக்கா தெரியாது? அவனுடைய கூர்மையான அறிவுக்குக் கண் மட்டும் இருந்துவிட்டால் நம்மை விழுங்கி விடுவான். சுந்தரன் குருடன் என்பது எனக்குத் தெரியாதா? இருந்தாலும் நாம் பேசும் முக்கிய விஷயங்கள் நம்மைத் தவிர வேறு யாரும் அறியக்கூடாது என்று இப்போது எனது உள் உணர்வு கூறுகிறது" என்றான்.

சுந்தரன் இயற்கையில் குருடனல்லன். அவன் ஓர் அநாதை. உற்றார் உறவினர் எவரும் இல்லை. மாமண்டூரிலிருந்து பிழைப்பதற்காகக் காஞ்சிபுரம் வந்த அந்தச் சிறுவனைக் கருங்கண்ணன் கண்டான். அவர்களுடைய சதித் திட்டத்திற்கு இளைஞன் ஒருவன் தேவை என்று அவனை அழைத்துக் கொண்டான். பல்லவபுரத்தில் பைரவன் கொல்லுப் பட்டறை வைத்திருந்தான். சித்திரமாயனுக்கு வேண்டிய வேலும் வாளும் மற்ற ஆயுதங்களும் செய்து கொடுத்து வந்தான். அவன் மனைவி, பெண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்த பின் இறந்துவிட்டாள். சந்திரமதி என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டு அன்புடன் வளர்த்தான். அந்தப் பெண்தான் பைரவனின் பாலைவனம் போன்ற வாழ்வுக்குப் பசுஞ்சோலையாக இருந்தாள். சுந்தரனைக் கருங்கண்ணன் பைரவனிடம் ஒப்படைத்தபோது சுந்தரனின் மீது பைரவனுக்குத் தனி வாஞ்சை ஏற்பட்டது. அப்போது சுந்தரனுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். வேலைநேரம் போக மீதி நேரத்தில் சந்திரமதிக்குச் சுந்தரன் விளையாட்டுத் தோழனாக அமைந்தான். பைரவனுக்கு உள்ளூற மகிழ்ச்சி. திடீரென்று ஒருநாள் கருங்கண்ணன் வந்து சித்திரமாயனுடைய யோசனை ஒன்றைத் தெரிவித்தவுடன் பைரவன் திடுக்கிட்டான். சுந்தரனின் அதிபுத்திசாலித்தனம்

சித்திரமாயனுக்குப் பயத்தை விளைவிக்கிறதென்றும், என்றாவது ஒருநாள் அவன் திடீரென்று நம்மைவிட்டு ஓடிவிடுவானென்றும் அப்படிப் போவதை யாரும் தடுக்க முடியாவிட்டாலும் போகிறவனுக்கு மலைக்குகை வழிகளும், குகையில் ஆயுதங்கள் சேமிக்குமிடங்களும் தெரியக்கூடாதென்று இன்னும் எத்தனை எத்தனையோ ரகசியத் திட்டங்கள் நடைபெறும் என்றும் அவற்றையெல்லாம் சுந்தரன் பார்க்கக்கூடாதென்றும் அதனால் சுந்தரன் கண்களைக் குருடாக்கிவிட வேண்டும் என்றும் கருங்கண்ணன் தெரிவித்தபோது பைரவனுக்கு வருத்தமேற்பட்டது. கருங்கண்ணன் கொடுத்த பச்சிலைச் சாற்றை எடுத்துக் கொண்டு ஒருநாள் சுந்தரன் தூங்கும்போது அவன் கண்களில் பிழிய முயன்றபோது சந்திரமதி அதையறிந்து வருந்தினாள். பிடிவாதம் பிடித்தாள். அதனால் அவளுக்குத் தெரியாமல் காரியத்தை நிறைவேற்ற வேண்டியிருந்தது.

சுந்தரனின் கண்கள் குருடாக்கப்பட்டன என்பதை அறிந்தபோதுதான் சித்திரமாயனுக்கு நிம்மதி ஏற்பட்டது. சந்திரமதி சுந்தரனுக்குக் கண்ணாக இருந்து பணிவிடைகளைச் செய்து வந்தாள்.

நாளாக ஆக சந்திரமதிக்குச் சுந்தரன்மீது தனி அன்பு ஏற்பட்டது. அவனுக்கு உணவு படைக்கும்போது ஏற்படும். சிறிது நேரத்தில் அவனுடன் கலகலவெனச் சிரித்துப் பேசி மகிழ்வாள். அவன் கதைகள் பல கூறுவான். அவன் சிறுவனாயிருந்தபோது அவனுடைய மாமன் கூறிய கதைகளையெல்லாம் அவன் உணர்ச்சி நிறைந்த வார்த்தைகளில் கூறும்போது சந்திரமதி மெய்மறந்து கேட்டிருப்பாள். கதை கூறும்போது அவனுக்கு மகேந்திர சக்கரவர்த்தியைப் பற்றியும், நரசிம்ம சக்கரவர்த்தியைப் பற்றியும் கூறப்பட்ட கதைகள் நினைவுக்கு வந்துவிடும்.

"சந்திரமதி! இதெல்லாம் என்ன கதைகள்? எங்கள் தாத்தாவுக்குத் தாத்தா காலத்தில் நடந்த உண்மையான சம்பவத்தைச் சொல்வதென்றால் நாள் என்ன யுகம் யுகமாகக் கேட்கலாம். தன் தந்தை புலகேசினிடம் தோற்றுக் காஞ்சிக் கோட்டைக்குள் புகுந்து கொண்டார் என்னும் அவப்பழியை



நரசிம்ம சக்கரவர்த்தி நீக்கி வாதாபி வரை புலகேசினை ஓட ஓட விரட்டி அந்த நகரத்தையே அழித்து வெற்றி கொண்ட கதைகளை இன்றைக்கெல்லாம் கேட்கலாம்" என்று வீர உணர்ச்சியுடன் கூறுவான்.

"சுந்தரா, சுந்தரா! எனக்கு நீ அந்தக் கதையையெல்லாம் சொல்ல மாட்டாயா?" என்று சந்திரமதி குழைந்து குழைந்து கேட்பாள்.

சுந்தரன் பொய்க்கோபம் கொண்டதுபோல் நடித்து, "கதை... வீரர்களைப் பற்றிய கதையை, நாட்டின் மானங் காத்த மாமல்லனின் கதையை வாயால் சொல்லவே நமக்கு அருகதை இல்லை" என்றான்.

"ஏன் சுந்தரா இப்படிச் சலித்துக் கொள்கிறாய்?"

"ஆம்! எனக்கு அலுப்பும் சலிப்புமே ஏற்பட்டுவிட்டது. நாட்டை வேற்றரசனுக்குக் காட்டிக் கொடுக்க ஓலை அனுப்பியுள்ள கூட்டத்தாருக்கு உதவி செய்கிறோமே என்று எண்ணும்போது வெட்கமாக இருக்கிறது."

இவற்றைக் கேட்கும்போது சந்திரமதியின் கண்களில் கண்ணீர் துளிர்க்கும்.

சுந்தரன் திடுக்கிட்டு "அழுகிறாயா சந்திரமதி?" என்று சட்டெனக் கேட்டு விடுவான். பிறகு நிலையை உணர்ந்து ஒரு விநாடி சரி செய்து கொண்டு, "என் பேச்சு வருத்தத்தைக் கொடுக்கிறதா?" என்று கூறிச் சிரிக்க முயல்வான்.

சந்திரமதியும் மெல்லரும்பு போன்ற வெண் பற்களைக் காட்டுவாள்.

"சுந்தரா! என் அப்பாவுக்கும் உணர்ச்சியே இல்லை யென்கிறாயா? இந்த ஊரைவிட்டு எங்கள் சொந்த ஊரான நாகபட்டினத்துக்கு ஓடிப் போய்விடவே அவர் ஆசைப்படுகிறார். என்றைக்கு விடிவு காலமோ?" என்று கூறும்போது அவளுக்கு உண்மையில் கண்கலங்கும். சுந்தரனின் இதயமே கலங்கும்.

மகளும் சுந்தரனும் பழகுவதைப் பைரவன் தடுக்கவில்லை. பார்வைக்குப் பயங்கரமாகத் தோற்றமளித்துக் கொடுஞ்செயல் புரியும் பைரவன் உள்ளத்தில் அன்புதான் நிறைந்திருந்தது. பகலில் செய்யப்படும் ஆயுதங்கள் இரவுக்கிரவே மலைக்குகைக்குள் மறைந்து விடும்.

மலைக்குகையில் மறைவிடத்தில், பதுக்கப்பட்டுக் கிடக்கும் ஏராளமான ஆயுதங்களைத் தீவட்டியின் வெளிச்சத்தில் சித்திரமாயனுக்குப் பைரவன் காட்டினான். தீவட்டி ஒளியில் புது ஆயுதங்கள் பளபளவென ஜ்வலித்தன. அந்த ஒளியின் சக்தியால் கண்களை மூடிக் கொண்ட சித்திரமாயன் ஒருகணம் மாபெரும் வெற்றியடைந்து விட்டதாகவே நினைத்தான். உற்சாகமாக பைரவன் தோள்களில் தட்டி, "பைரவா! பசியால் வாடி மூலையில் கிடக்கும் இந்த ஆயுதங்களுக்கு அறுசுவை உணவு வெகு விரைவில் கிடைக்கப் போகிறது. அடுத்த பௌர்ணமியன்று ஆயிரமாயிரம் வீரர்களின் கரங்களில் இந்த ஆயுதங்கள் ஜ்வலிக்கும். எதிர்ப்படும் அரச வீரர்களைப் பனங்காயைச் சீவுவதுபோல் சீவித் தள்ளும். மேற்கு வாயிலில் இராஷ்டிரகூடப் படைகள் நுழையும்போது கிழக்கு வாயில் வழியாக மக்கள் படைகள் நுழைந்து காஞ்சியில் குழப்பம் விளைவிக்கும். பைரவா! நாம் எதிர்பார்த்த நாள் நெருங்கிவிட்டது. உன்னுடைய சேவைக்குத் தக்க வெகுமதி கிடைக்கும் நாள் வந்துவிட்டது" என்று கூறிக் கொண்டிருக்கும்போது குகையின் வெளியே யாரோ வரும் காலடியோசை கேட்டது. சித்திரமாயன் துள்ளி வெளியே ஓடி வந்தான். சுந்தரன் தட்டுத் தடுமாறி கையால் தடவி வந்தவண்ணம் "ஐயா! வெளியே குதிரை கனைக்கும் சப்தம் கேட்கிறது" என்று கூறினான்.

வெளியே வருபவர் யாராயிருக்கலாம் என்ற யோசனையை விட பைரவனிடம் தான் பேசிக் கொண்டிருந்தவற்றைச் சுந்தரன் கேட்டிருப்பானோ என்ற ஐயம் சித்திரமாயனுக்கு ஏற்பட்டது.



## 4. கொடி பறந்தது

சதித் திட்டம் பல்லவபுரத்திலும், கடல் மல்லையிலும் உருவாகிக் கொண்டிருக்கும்போது குணதேவன் இராட்டிர கூடர்களின் பாசறையில் கூடாரத்தின் உள்ளே நுழைந்த அந்த உருவத்தை நோக்கி உருவிய கத்தியுடன் பாய்ந்தான். அவனுடைய நிலையிலே யார் இருந்திருந்தாலும் அந்தச் செயலைத் தவிர வேறு எதையும் செய்திருக்க முடியாது. உள்ளச் சோர்வும் உடல் சோர்வும் சேர்ந்து அவனை அந்தப்போதில் மிகுந்த ஆத்திரமடையச் செய்தன. தன் சொந்த நாட்டிற்கு நேரவிருந்த பெரும் ஆபத்தை முன்பே சேனைத் தலைவருக்குத் தெரிவிக்க இயலாமல் விரோதிகளிடம் சிறைப்பட்டிருக்கிறோமே என்று எண்ணும்போது அவனுக்கு வேதனை நெஞ்சை வந்து முட்டியது.

கூடாரத்தின் உள்ளே நுழைந்த உருவம் ஒருகணம் தாமதித்திருந்தால் உருவிய கத்தி உருவத்தின் உடலை ருசி பார்த்திருக்கும்.

"குணதேவா!" என்று மெல்லிய குரலில் பேசிய அந்த உருவம் "உஸ்" என்று சைகையெழுப்பி எச்சரித்தது. உருவத்தின் குரலிலிருந்து இன்னாரென ஊகித்த குணதேவனின் முகத்தில் எழுந்த வியப்புக்கு எல்லையில்லை. குணதேவனின் கரங்களிலிருந்த கத்தி நழுவிக் கீழே விழுந்தது.

"ஆஹா! என்ன காரியம் செய்யத் துணிந்தேன்? மாற்றார் நடுங்கும் தோள் வலிமைமிக்க வீரனாயிருந்தாலும் சூழ்நிலைக்கு ஏற்ற அறிவு மிக அவசியம் என்பதை அறிந்து கொள்ளவும் அனுபவம் தேவையாயிருக்கிறது. ஓங்கிய கத்தி ஒரு விநாடியில் எப்பேர்ப்பட்ட காரியத்தைச் செய்திருக்கும்?" - குணதேவனின் குரல் தழுதழுத்தது.

"பல்லவ நாட்டு வைத்தியரைப் பதம் பார்த்திருக்கும்" என்று கூறிய அந்த உருவம், "குணதேவா! வீண் வார்த்தை பேச நேரமில்லை. நீ இங்கிருந்து எப்படியாவது வெளியாகித் தீர வேண்டும்" என்றது அந்த உருவத்திற்கு உரிய நாட்டு வைத்தியர்.

"அதற்கான வாய்ப்பைத்தானே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்? நான் நோயுற்றிருந்ததால் என்னைப் பல்லக்கில் சுமந்து வருகிறார்கள். நாளைய தினத்திலிருந்து நான் குதிரையில் ஏறிவரப் போகிறேன். ஆனால் பலத்த காவல் இருக்குமே..."

"இருக்காதா? நீ நடந்து கொள்ளும் விதத்திலிருக்கிறது. நான் சொல்வதைப் போல் செய்..." என்று கூறிய வைத்தியர், குணதேவன் அருகே நெருங்கி அவன் செவிகளிலீ விழும் வண்ணம் ஏதோ கூறினார். குணதேவன் கவனமாகக் கேட்டுக் கொண்டான். வைத்தியர் கூறுவது அவனுக்கு வியப்பையூட்டியது. பலத்த கட்டுக்காவல் கொண்ட மாற்றரசன் பாசறைக்குள் வைத்தியர் எப்படி நுழைந்தார் என்றறிய அவன் துடிதுடித்தான்.

ஆனால் அந்தச் சமயம் கூடாரத்தின் வெளியே சலசலப்பு ஏற்பட்டது. போர் வீரர்கள் பேசும் குரலும், பலர் நடமாடும் ஓசையும் எங்கும் நிறைந்து அந்த இடத்தின் அமைதியைக் கிழித்தன. வீரர்களின் கையிலிருந்த தீவட்டிகள் அவர்கள் வேகமாக இங்குமங்கும் நகரும்போது இருளின் பயங்கரத் தன்மையைப் புலப்படுத்த முயன்றன.

வைத்தியர் குணதேவனை எச்சரித்துவிட்டு அங்கிருந்து நொடியில் மறைந்தார். குணதேவன் திகைத்து நின்றான். 'காஞ்சி எங்கே? மாற்றரசன் பாசறை எங்கே? வைத்தியர் இங்கு எப்படி வந்தார்? நான் அந்நியப் படைகளிடம் அகப்பட்டுக் கொண்டதை அவர் எப்படி அறிவார்?' - அவனுக்கு எல்லாம் புதிராக இருந்தன. உடலில் வலு இருந்தால் மட்டும் போதாது. தக்க தருணத்திற்கு ஏற்ப அறிவும் இயங்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வலுவடைந்தது. சொந்த நாட்டிற்காக உயிரைக் கூட மதியாது உழைக்கும் வைத்தியரின் சேவை அவனுக்குப் புத்துணர்வை ஊட்டியது. அவன் கூடாரத்திற்குள் இங்குமங்கும் உலாவினான். அவனுடைய சிந்தனையை வெளியே வந்த வீரர்கள் கலைத்தனர். தன்னை நோக்கி அவர்கள் வருகிறார்கள் என்பதை அறிந்தபோது குணதேவனுக்கு வியப்பு மேலிட்டது. வைத்தியர் கூறிச் சென்றதுபோல் இது முதல்கட்டம் போலும் என்று எண்ணினான்.



வீரர்கள் அவனுக்குப் புரியாத மொழியில் பேசினர். அவர்களுடைய சைகையிலிருந்து அவர்கள் தன்னை அரசரிடம் அழைத்துப் போக வந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டான்.

வைரமேகன் அந்த நள்ளிரவு நேரத்திலும் விழித்துக் கொண்டிருந்தார். அவரது அருமை மகள் ரேவா தந்தையருகே அமர்ந்திருந்தாள். அந்த நேரத்தில் அங்கு ரேவாவைப் பார்த்துக் குணதேவன் திகைத்தான். அரசரருகே இருவர் அமர்ந்திருந்தனர். அவர்கள் படைத் தலைவராகவும் மந்திரி மண்டலத்துள் ஒருவராகவும் இருக்கலாம். அவர்கள் யோசனையெல்லாம் காஞ்சியை நோக்கிச் செல்வதற்கு அடுத்து நடக்க வேண்டியதைப் பற்றிய திட்டம் வகுப்பதில் ஈடுபட்டிருந்தன. அவர்கள் எதிர்பார்த்த ஏதோ ஒன்று நடைபெறாத உணர்ச்சி அவர்கள் முகத்தில் பிரதிபலித்தது. பல நூறு போர் வீரர்களுக்கு இனி உணவு அளிக்கும் பிரச்னை அவர்களை வாட்டியிருக்க வேண்டும். யுத்த முழக்கத்தோடு சென்றால் வழியே காணப்படும் கிராமங்களைச் சூறையாடிப் போர் வீரர்கள் பசியைத் தீர்க்கலாம். யுத்த நோக்கத்தோடு செல்லாவிடில்... யுத்தமெனும் காரணம் - படையெடுப்பு எனும் காரியம் இல்லாவிடில் போர் வீரர்களுக்கு வேற்று நாட்டில் என்ன வேலை? உடன் கொண்டு வந்திருந்த உணவுப் பொருள்கள் இன்னும் சில நாள்களுக்கே போதுமானதாயிருந்தன. வீரர்களில் பலருக்கு ஏற்பட்ட புதுவித நோயால் அவர்கள் உடல் பலம் குன்றியிருந்தனர். பல நூறு காதம் தாண்டி வந்த வீரர்களுக்குச் சரியான வேலையில்லாததால்

ஊர் நினைவு கொண்டு உற்சாகமிழந்திருந்தனர். குறிப்பிட்ட இடத்தில் வந்து சேர்ந்து மேற்கொண்டு நடக்க வேண்டியதைத் தெரிவிப்பதாகக் கூறிச் சென்ற கருங்கண்ணனின் ஆட்களைக் காணோம்.

போரிடுவதா வேண்டாமா என்ற பிரச்னையைவிட இளவரசி ரேவாவின் தணியா ஆவலைப் பூர்த்தி செய்ய வேண்டிய கடமை வைரமேகனைப் பற்றிக் கொண்டது. நடுநிசியில் அவர்கள் கூடி யோசனை செய்தனர். அப்போதுதான் பல்லவ நாட்டு வீரனொருவன் தங்களுடன் இருப்பது அவர்கள் நினைவிற்கு வந்தது.

அந்த நினைவை ஊட்டியவள் இளவரசி ரேவாதேவிதான். அவள் மனத்தில் இப்போது சந்தேகம் குடி கொண்டது.

"போரின்றிக் காஞ்சிக்குள் புக முடியாதா, அப்பா?" - ரேவாவின் கேள்வியில் ஏக்க ரேகை ஓடியது.

"சரித்திரத்தில் நடக்காத நிகழ்ச்சியை நடத்துமாறு கூறுகிறாய் செல்வமே! திடீரென்று பெரும் படைகளுடன் வேற்றரசன் நாட்டிற்குள் நுழைவது நாடு பிடிக்கும் ஆசையின்றி வேறெதுவாக இருக்க முடியும்? காஞ்சியைக் காண ஒரே வழி - போர். போரில்லையேல் இன்றே நாடு திரும்ப வேண்டியதுதான்."

"நாம் நாட்டை விட்டு மலையும், காடும் கடந்து வெகுதூரம் வந்த பின்பு இந்த யோசனை எழுவது நாட்டை ஆளுபவர்க்கு அழகானதென்று எனக்குத் தோன்றவில்லை" - ரேவாவின் குரலில் ஆத்திரம் கலந்தது.

வைரமேகன் முகத்தில் புன்முறுவல் எழுந்தது. ஆயிரமாயிரம் சிந்தனைகள் எப்போதும் எழும் அவரது மனத்தில் பளிச்சென்று யோசனையொன்று பூத்திருக்க வேண்டும்.

"என் அன்பு மகளே, கேள்! அஞ்சா நெஞ்சனான இந்த வைரமேகன் வைத்த காலைப் பின்னடையச் செய்ய மாட்டான். தினவெடுத்த வீரர்களின் தோள்களுக்குத் தோல்வி மாலையை ஒருகாலும் சூட்ட மாட்டான். இராட்டிரகூட மன்னர்களில்



வைரமேகன் என்று ஒருவன் இருந்தான். அவன் காஞ்சி மீது படையெடுத்துச் சென்றான். இடைவழியிலே அஞ்சித் திரும்பி விட்டான். போர் வீரர்கள் பசியால் துடித்து மடிந்தனர். நோயால் நைந்து மாண்டனர் என்ற அபகீர்த்தியை அவனுக்குப் பின் வரும் சந்ததியார்கள் தலையில் சுமத்தி காலாகாலத்துக்கு அவமானத்தை இந்த வைரமேகன் தேடி வைக்க மாட்டான். காஞ்சி சுந்தரியை உன் தோழியாக்காது திரும்புவதில்லை என்று உறுதி பூண்டு விட்டான். காஞ்சியின் மண்ணில் நீ காலெடுத்து வைக்காவிட்டால் உன் அத்தை செய்யும் பரிகாசப் பேச்சு முதுகில் குத்துண்டு மாள்வது போலாகுமன்றோ? கவலைப்படாதே. மகளே!" என்று ஆவேசத்துடன் கூறியபோது குணதேவனை அழைத்து வந்து வீரர்கள் அவர் எதிரே நிறுத்தினர்.

எல்லாரையும் அங்கிருந்து அகலுமாறு சைகை செய்த அரசர் முகத்திலிருந்து எவ்வித உணர்ச்சியையும் குணதேவனால் அறிய முடியவில்லை. அரசர்க்கருகிலிருந்த ஆவல் நிறைந்த ரேவாவின் கண்கள் அவன் இதயத்தைப் பிளப்பது போலிருந்தன. அரச குலத்துக்கேற்ற செறுக்கும், செறுக்கை அடக்கி செகத்தை மயக்கும் வனப்பும் குணதேவன் கண்களை ஒருகணம் சுழலச் செய்தன.

வைத்தியர் கூறிச் சென்றபடியே காரியங்கள் தொடர்ந்து நடைபெறுவது குணதேவனுக்கு உற்சாகத்தை அளித்தது. உறுதியுடன் நிமிர்ந்து நின்றான். அவன் கண் எதிரிலிருந்த வனப்பே வடிவமான வாலைக் குமரி ரேவா மறைந்து விட்டாள். மலை போன்று அமர்ந்திருக்கும் மாற்றரசன் வைரமேகன் மறைந்து விட்டார். பல்லவ நாடும், காஞ்சி நகரமும், நந்திவர்ம அரசரும், உதயசந்திரன் கட்டளைகளுமே நின்றன.

நெஞ்சிலே நஞ்சும், உதட்டிலே அன்பும் கொண்டு வைரமேகன் பேசினார். அவர் பேச்சின் வஞ்சனை அறியாத குணதேவன் மறுமொழி பகன்று வந்தான். குணதேவனை வானளாவப் புகழ்ந்தார் அரசர். அவனைப் போன்ற ஒரே வீரன் தம் படையில் இருந்தால் இந்த உலகை வென்று விடமுடியும் என்று நுனிக் கொம்பு வரை அவனை ஏற்றிப் புகழ்ந்தார். பிறகு தனக்கு சாதகமானவற்றையறிய குணதேவனைக் கேட்கலானார்.

வைத்தியர் கூறியபடியே மூன்றாவது முறையும் நடந்தது. வைத்தியர் என்ன ஜோசியரா அல்லது முக்காலும் உணர்ந்த ஞானியா? வைரமேகன் இன்னவை கேட்பான் என்று சுருக்கமாகக் கூறினாரே அதன்படித்தானே நடந்திருக்கிறது!

'இராஷ்டிரகூடப் படைகளுடன் சேர்ந்து காஞ்சி நகரை அடைய உற்ற வழி கூறு' என்று வைரமேகன் கேட்பார்.

காஞ்சிக் கோட்டைக்குள் புகுவதற்கு யோசனை கூறுமாறு நயமாகக் கேட்பார்.

'போகும் வழியில் போர் வீரர்கள் பசி தீர்க்க உணவுக்கு வழி செய்' என்று கேட்பார்.

இவ்வளவும் செய்தால் பல்லவ நாட்டின் ஒரு பகுதிக்குக் குறுநில மன்னனாக்குவதாக அவர் ஆசை காட்டுவார்.

நீ செய்ய வேண்டியது என்ன?

பஞ்சம் வந்து பல்லவ நாட்டை உலுக்கிப் பத்தாண்டுகள் கூட ஆகவில்லை. நாடு இன்னும் சீர்படவில்லை. எதிரிப் படைகளுக்கு உணவளிக்க வழியிலுள்ள எந்த ஊராராலும் முடியாது என்பதை எடுத்துச் சொல்.

வலுக்கட்டாயமாக உணவுக்கு ஏற்பாடு செய்ய முயன்றால் மக்களின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும் என்று எச்சரிக்கை செய்.

காஞ்சியைக் கைப்பற்றி பிடித்து நர்மதை நதிக்கரையினின்று ஆளுவதில் எள்ளளவும் பயனில்லை என்று சொல். பட்டமேறியுள்ள இளவரசன் பாலகன் இல்லை; மல்லர்களுக்கு மல்லன் என்று எடுத்துச் சொல். சதிகாரர்களின் பேச்சை நம்பினால் நிச்சயம் தோல்விதான் என்றும் கடைசியாகக் கூறிவிடு. வடபெண்ணை ஆற்றங்கரையிலிருந்து போர் வீரர்களைத் திருப்பியனுப்பிவிடுவதுதான் சிறந்தது என்றும் துணிவுடன் கூறு' என்று வைத்தியர் சொல்லியிருந்ததற்கு ஒரு வார்த்தைகூட மாறுபடாமல் குணதேவன், வைரமேகன் கேட்ட கேள்விகளுக்குக் கணீர் கணீர் என்று மறுமொழி பகரவும் வைரமேகனும் இளவரசி



ரேவாவும் திடுக்கிட்டனர். வைரமேகன் இருக்கையிலிருந்து துடித்தெழ முயன்றார். மறுகணம் அமைதியாக அமர்ந்து கொண்டு குணதேவன் சொல்வதையே கேட்டவண்ணமிருந்த ரேவா தந்தையின் பக்கம் திரும்பிக் கேட்டாள்.

"அப்பொழுது நாம் காஞ்சி போக முடியாதா அப்பா?" - அவள் கண்களில் நீர் தளும்பியது. பெற்ற தாயைப் பார்க்கப் போவதில் ஏற்படும் தடையைக் கண்டு துடிதுடிக்கும் குழந்தையின் உணர்ச்சி அந்தச் சமயம் அவளுக்கிருந்தது. வைரமேகன் இருக்கையிலிருந்து எழுந்து மகளை அணைத்தவண்ணம், "நான்தான் முன்பே கூறிவிட்டேனே. எந்தச் சக்தியும் நம் பிரயாணத்தைத் தடை செய்ய முடியாது. விடிவதற்கு இன்னும் சில நாழிகைகள்தாம் இருக்கின்றன. பொழுது புலர்வதற்கு முன்பே நாம் புறப்படுகிறோம்" என்று கூறியவண்ணம் கூடாரத்தின் வெளியே வந்தார். ரேவாவின் முகத்தில் மகிழ்ச்சி உதயமாயிற்று. ஆனால், மறுகணம் அருகே இருந்த வீரனிடம் தந்தை கட்டளையிட்ட சொற்கள் அவளுக்குக் கலக்கத்தை ஏற்படுத்தின.

"அந்தப் பல்லவ வீரனை அழைத்துப் போ! உணவு வண்டியை இழுத்து வர இருக்கும் காளைகளை அவிழ்த்துவிட்டு அதில் அவனைக் கட்டு."

பொழுது புலர்ந்தது. வட பெண்ணையாற்றில் தண்ணீர் ஓர் ஓரமாக ஓடிக் கொண்டிருந்தது. வடக்குக் கரையோரமாக அடர்ந்து வளர்ந்திருந்த தோப்பைத் தாண்டிப் படைகள் கரையை அடைந்தபோது படைகளின் முன்னணியில் சென்று கொண்டிருந்த வைரமேகன் திகைத்து ஒருகணம் நின்றார். பின்வந்த படைகளும் தடாரென நின்றன. படைகளின் ஜெயகோஷம் திடீரென அடங்கியது. கடலின் ஒலி நின்றது போன்றிருந்தது.

வட பெண்ணையின் தென்கரையில் ரிஷபக் கொடியை ஏந்தியவண்ணம் அணி அணியாகப் பல்லவ வீரர்கள் குதிரையில் அமர்ந்திருந்தனர். இளங்காற்றில் வீரர்கள் ஏந்தி நின்ற கொடிகள் 'படபட'வென அசைந்தன. யாரையோ 'வா வா' என்று அழைப்பது போன்றிருந்தன. கண்ணுக்கெட்டிய தூரம் குதிரைப்

படைகள் நின்றன. பின்னால் யானைப் படைகளும், அதற்குப் பிறகு தரைப்படைகளும் ஏராளமாக இருந்திருக்க வேண்டும்.

அணிவகுப்பின் முன்னால் உதயசந்திரனும் அவனருகே அழகும் அருளும் கம்பீரமும் நிறைந்த இளம் வீரன் ஒருவனும் குதிரை மீது அமர்ந்திருந்தனர்.

வைரமேகன் ஒரு கணம் திகைத்தார். கண்களை அகல விரித்து ஒருமுறை பார்த்தார்.

பல்லவப் படைகள் அரண் கட்டினாற்போல் நின்று கொண்டிருந்தன.

வைரமேகன் திகைப்பை மறைக்க முயல்வதற்கு முன்னமே வீரனொருவன் ஓடிவந்து ‘குணதேவன் தப்பி ஓடிவிட்டான்’ என்று கூறவும் வைரமேகன் திடுக்கிட்டுத் திரும்பினார்.

## 5. திட்டம் மாறியது

அடர்ந்து வளர்ந்திருந்த புதர்களின் மறைவில் சிறு மூட்டை ஒன்றை வைத்து விட்டு, உயர்ந்து நின்றிருந்த பாறைகளின்மீது ஏறும் வழி தெரியாது நின்று கொண்டிருந்தான் தாமரைப்பாடி வணிகன் பெரியநம்பி, நெடுந்தொலைவு நடந்து வந்த களைப்பு அவன் முகத்தில் பிரதிபலித்தது. ஆடையிலே படிந்திருந்த புழுதியின் வண்ணம் அவன் இடைவிடாது பிரயாணம் செய்திருக்கிறான் என்பதைப் புலப்படுத்தியது. செங்குத்தான அப்பாறையின்மீது ஏறினால்தான் சுரங்கப் பகுதியின் வழி தெரியும் என்பதை அவன் முன்பே அறிந்திருந்தான். ஆடையை வரிந்து கட்டிப் பாறைமீது தாவி ஏறத் தயாரானபோது மரத்திலே முன்னமே கட்டப்பட்டிருந்த குதிரை கனைத்தது. புதிய மனிதரைக் கண்டு மிரண்டது. குதிரையைக் கண்ட பிறகுதான் பெரிய நம்பிக்கு,



எவரோ அந்த மலைக்குகைக்கு வந்திருக்கிறார்கள் என்பது தெரிந்தது. சித்திரமாயன் வந்திருப்பாரெனில் தாம் வந்த காரியம் விரைவில் முடிந்து விடும் என்ற துடிப்புடன் பாறையில் ஏறப் பிடிமானம் ஏதாவது இருக்கிறதா என்று சுற்றும்முற்றும் பார்த்தபோது சித்திரமாயனே பாறையின் உச்சிக்கு வந்து விட்டான்.

சித்திரமாயனுக்கு அந்த விநாடி முன்வரை இருந்த உற்சாகமும் துடிதுடிப்பும் பெரிய சாம்ராஜ்யத்தின் மன்னனாகி விடப் போகிறோமென்ற இன்பக்கனவும் ஏனோ திடீரெனக் குறைந்தன. தன்னுடைய இந்த மகத்தான சூழ்ச்சியாவது உதயசந்திரனுக்குத் தெரியாமல் இருந்தால் எப்பேர்ப்பட்ட பலத்தாலும் தன்னை வெல்ல இயலாது எனும் திட நம்பிக்கை அவனுக்கிருந்தது.

பைரவனிடம், “பைரவா! பசியால்வாடி மூலையில் கிடக்கும் இந்த ஆயுதங்களுக்கு அறுசுவை உணவு வெகு விரைவில் கிடைக்கப் போகிறது. அடுத்த பௌர்ணமியன்று ஆயிரமாயிரம் பேர்களின் கரங்களில் இந்த ஆயுதங்கள் ஒளி வீசும். எதிர்ப்படும் அரச வீரர்கள் தலையைப் பனங்காயைச் சீவுவது போலச் சீவித் தள்ளும். மேற்கு வாயிலில் இராஷ்டிரகூடப் படைகள் நுழையும்போது கிழக்கு வாயில் வழியாக மக்கட்படை நுழைந்து காஞ்சியில் குழப்பம் விளைவிக்கும். பைரவா! நாம் எதிர்பார்த்த நாள் நெருங்கிவிட்டது. உன்னுடைய சேவைக்குத் தக்க வெகுமதி கிடைக்கும் நாள் வந்துவிட்டது...” என்று இலட்சியச் சித்தி பெற்றுவிட்டவன் போல் மிக உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசிக் கொண்டே போனவனை, “ஐயா! வெளியே குதிரை கனைக்கும் சப்தம் கேட்கிறது” என்ற சுந்தரனின் அறிவிப்பு ஒரு நொடியில் சோர்வைக் கொடுத்து விட்டது.

உயரமாகக் கட்டிய கோபுரத்தின்மீது கவசத்தை அமைக்கப் போனபோது கால் தவறிக் கோபுரத்தினின்று விழுந்துவிட்ட உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அப்படி அவன் அதைரியப்பட நியாயமில்லை என்றாலும் எவரும் வர முடியாத அந்த மலைப் பிரதேசத்துக் குகையின் வழியைத் தெரிந்து கொண்டு வருவதானால் கருங்கண்ணன்தான் வர வேண்டும். ‘இரு தினங் களுக்கு முன்னர்தானே கருங்கண்ணனைக் கடல் மல்லையில் கண்டோம். அவன் முடிக்க வேண்டிய திட்டங்கள் பல

இருக்கின்றனவே, மக்கள் படையைத் திரட்ட வேண்டிய அவசரப் பொறுப்பை அவன் ஏற்றிருக்கிறானே. இங்கு அவன் வர வேண்டிய அவசியமிராது. ஒருவேளை உதயசந்திரனுடைய ஒற்றர்கள் எவரேனும்...' நினைக்கும்போதே சித்திரமாயனின் உடல் சிலிர்த்தது. 'உதயசந்திரன் என்ன, இந்திர ஜால மகேந்திர ஜாலம் அறிந்தவனா? நாம் செய்யும் ஒவ்வோர் அங்குலச் செயலையும் அறிந்து கொள்ள அவனுக்கு மரமும், செடியும், கொடியும் புதரும், மண்ணும், மலையும், காற்றும் உதவுகின்றனவா?

உதயசந்திரன் ஏன் சகல பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறான்? படைத் தளபதிக்கு உண்டான வேலை வரம்போடு நிற்கலாம். அமைச்சர் மண்டலத்தாரும், கோட்டத் தலைவர்களும், முதல் மந்திரியும் எடுத்துக் கொள்ளாத அவ்வளவு அக்கறை, படைத் தலைவன் ஏன் கொள்ள வேண்டும்? என் தந்தை செய்து விட்டுப் போன தவறான செயல் உதயசந்திரனைப் படைத் தளபதியாக அமர்த்தியது. அவனைப் படைத் தளபதியாக அமர்த்தும்போது நான் தந்தையிடம் கூறித் தடுத்தேன். எனக்கு இளவரசுப் பட்டம் கட்டியிருந்தால் நான் நிச்சயம் உதயசந்திரன் வளர்வதை அனுமதித்திருக்க மாட்டேன். ஆனால், கடைசிக் காலங்களில் என் தந்தை என்னை வெறுத்தார். அவர் வெறுக்கிறார் என்றே நான் உணரவில்லை. நான் அவருடைய சொந்த மகன் இல்லை என்று இந்த நாட்டு மக்கள் பேசிக் கொள்வதைக் கேட்டு வருத்தத்தால் துடிதுடித்து ஓடோடிச் சென்று மக்கள் பேசுவது உண்மைதானா என்று கேட்டபோது அவர் மௌனம் சாதித்தார். இன்னும் எத்தனை எத்தனையோ! - அவையெல்லாம் போகட்டும். திருக்கழுக்குன்றத்து மாளிகையில், அவரது கடைசி மூச்சுப் பிரியும்போது நான், 'அப்பா, அப்பா' என்று அலறி ஓடி வந்தேன். என்னை அவர் கவனிக்கவில்லை. 'இரண்யவர்மர் இரண்யவர்மர்' என்று அவர் உதடுகள் அழைத்தன. நான் பிடிவாதமாக அவரது மார்பிலே என் முகத்தைப் புதைத்து அழுது கண்ணீர் விட்டு, 'ஒரு வார்த்தை கூறிப் போங்களப்பா! பட்டயமெழுதுவோரின் எதிரே, அவனிதந்த போஜர் எதிரே, அமைச்சர் எதிரே எனக்கடுத்துச் சித்திரமாயனே பட்டமேற



வேண்டும் என்று கூறிச் செல்லுங்கள் அப்பா!' என்று கேட்கத் துடிதுடித்தேன். ஆனால் யாரோ ஒரு வைத்தியர் - அதுவரை அவரை நான் பார்த்ததேயில்லை - அவர் கரங்களை என் தந்தை பற்றினார். ஏதோ கூறினார். அமைச்சரும் அவனிதந்த போஜரும் மௌனம் சாதித்தனர். அவர்கள் வைத்தியரை இன்னாரென அறிவார்கள் போலும். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு என்னை எவரும் மதிக்கவில்லை. என்னை விட வயதில் சிறியவனைத் தேடிப் பிடிக்க ஓடினார்கள். ஆண்டுகள் பல கடந்து விட்டதால் என்னுடைய நியாய உரிமை மாறிவிடாது. அதோ பாய்ந்துவரும் இராஷ்டிரகூடப் படைகளுக்கு மறுமொழி கூற வேண்டுமே அந்த பச்சிளம் பாலகன்!

சித்திரமாயன் மனத்தில் எண்ணங்கள் சீறியெழுந்தன. மிகவும் முக்கியமான இந்த வேளையில் எவனாவது ஒற்றன் வந்து திட்டத்தைக் கெடுத்துவிடப் போகிறானே என்ற அவசரத்தில் சித்திரமாயன் விரைந்து ஏறிப் பாறையின் உச்சிக்கு வந்து கீழே வருபவர் எவராயிருப்பர் என நோக்கினான்.

படபடத்த இதயம் சுயநிலையடைந்தது. உடலெங்கும் பரபரப்பால் பரவிய இரத்தத்தால் எழுந்த அதிர்ச்சி தணிந்தது. குப்பென வியர்த்து விட்டது. புடைத்தெழுந்த முகத்து நரம்புகள் முறுக்குத் தளர்ந்து அமைதியடைந்தன. ஆபத்திலிருந்து தப்பிய உணர்ச்சியால் முகத்தில் எழுந்த புதுநகை புதுக்குரலை எழுப்பியது.

"வாரும், வாரும் தாமரைப்பாடி வணிகரே!" என்று பாறையின் மீதிருந்து கூவினான்.

"வணக்கம் அரசே!" என்று மிக மரியாதையுடன் அஞ்சலி செய்த பெரிய நம்பி, புதரின் மறைவிலிருந்த மூட்டையை எடுத்துக் கொண்டு சித்திரமாயன் காட்டிய வழியாகப் பாறை மீது எளிதில் ஏறிக் குகைக்குள் நுழைந்தான்.

பொழுது சாய்ந்து இருள் கப்பத் தொடங்கியது. கதிரவனின் கடைசிக் கதிரும் அந்தப் பாறையின் மீது பட்டு மறைந்தது. மேல் வானத்தே செங்கோடுகள் தென்பட்டாலும், உச்சிப்

பொழுதிலேயே இருண்டிருக்கும் குகையின் முன் தாழ்வாரத்தில் அந்த மாலை மங்கிய வேளையில் இருள் அதிகமாயிருந்தது.

பைரவன் பிடித்திருந்த தீவட்டியின் வெளிச்சம் அந்த இருளின் ஒரு பகுதியைப் போக்க முயன்றது. இருளும் ஒளியும் கலந்திருந்த அந்தக் குகையில் ஒளிபட்ட பாறைச் சுவர்களில் வீழ்ந்த அங்கிருந்தோரின் நிழல்கள் பெரும் கோர உருவங்களைப் பாறையில் தீட்டியிருப்பதுபோல் தோன்றச் செய்து அந்த இடத்தின் பயங்கரச் சூழ்நிலையை இன்னும் அதிகப்படுத்தின. வெளியே எழும் விதவிதமான புள்ளினங்களின் குரல்களும் 'ஞொய்' என்று ஒருவித வண்டுகளின் ஒலியும், தடதடவெனப் பறந்துபோகும் வௌவால்களின் சப்தமும் பெரிய நம்பியின் நெஞ்சில் அச்சத்தை ஊட்டின.

தாமரைப்பாடியிலும், உத்திரமேரூரிலும் வாணிபம் செய்து வந்ததோடு அவன் நின்றிருந்தால் அவனுக்கு எவ்விதமான மனக்கவலையும், குழப்பமுமில்லை. ராஜாங்க விஷயங்களில் அவன் கவனம் அவனையறியாமல் சென்றது. கள்ளத்தனமான வியாபாரிகளுக்கு நந்திவர்மன் ஏற்படுத்திய கண்காணிப்பும் கண்டிப்பும் அவனுக்குப் பிடிக்கவில்லை. பல்லவ மல்லனுடைய அதிகாரிகள் அவ்வப்போது அவனுடைய வாணிப நேர்மையைச் சோதிக்க வருவதால் உண்டாகும் கோபம் அவனை நந்திவர்மனுக்கு எதிரான செயல்கள் புரியத் தூண்டின. இயற்கையாக அவனுக்கு ஏற்பட்ட அரசர்க்கெதிரான எண்ணமும். அவனிடமிருக்கும் செல்வமும் கருங்கண்ணனைக் கவர்ந்தன. தன் வலையில் அவனைச் சிக்க வைத்தான். சித்திரமாயனுக்கு நியாயமாக வர வேண்டிய அரச உரிமையைக் கூறி, சித்திரமாயனை மீண்டும் பட்டமேற்றி விட்டால் பெரிய நம்பியைப் போன்றோர் வைத்ததுதான் சட்டம் என்றும், அவனை ஒரு குறுநிலத் தலைவனாகவே ஆக்கிவிடுவதாகவும் கருங்கண்ணன் வாக்களித்தான். சதி நடக்குமிடங்களில் தாமரைப்பாடியும் மிக முக்கிய இடம். பல்லவப் பெரும் நாட்டுப் படைத் தலைவன் உதயசந்திரன் முக்கிய வீரனான குணதேவனின் சொந்த ஊரிலேயே சதியின் வித்து இருக்கிறதென்று எவரும் அறிய



வில்லை. பெரிய நம்பியும் வெளியில் தெரியாவண்ணம் தன் வணிக தந்திரங்களைக் காட்டி நல்ல மனிதனாக நடித்து வந்தான்.

களைத்துப் போய் வந்திருக்கும் பெரிய நம்பியின் தோற்றத்தைச் சித்திரமாயன் கண்டவுடனேயே முக்கியச் செய்தி ஏதோ இருக்கிறதென்பதை உணர்ந்தான். சித்திரமாயன் கேட்பதற்கு முன்பே பெரியநம்பி பேச்சைத் தொடங்கினான்.

"அரசே! உங்களைத் தேடி திருக்கச்சூர், மணிமங்கலம், திருக்கழுக்குன்றம் முதலிய இடங்களில் அலைந்து இங்கு வந்தேன். கருங்கண்ணனாரைத் திருக்கழுக்குன்றத்தில் நேற்றுச் சந்தித்தேன். அவசரமாக நான் தெரிவிக்க வேண்டியவற்றைக் கூற நான் வந்தபோது, அவர் அதைவிட அதி முக்கியமான வேறொரு செய்தியைத் தங்களிடம் அறிவிக்கச் சொன்னார்" - பெரியநம்பி விடாமல் தொடர்ந்து பேசியதால் அவனுக்கு மூச்சுத் திணறியது.

செய்தியை அறியச் சித்திரமாயனுக்கு ஆவலிருந்தாலும் களைத்துப் போயிருந்த பெரிய நம்பியை ஆசுவாசப்படுத்த விரும்பி, "பெரிய நம்பியாரே! தங்களைப் போன்றவர்களுக்கு இத்தகைய தொல்லைகள் ஏற்படுத்துவதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். கல்லும், முள்ளும், காடும், மலையும் கடந்து வர உங்களுக்கு என்ன தலையெழுத்து? மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். இந்த வனப் பிரதேசத்தில் குடிக்க நீர் கூடக் கிடைக்காதே. இவ்வளவு அரும் தியாகங்கள் செய்யும் உங்களுக்கு என்ன கைம்மாறு..." சித்திரமாயன் முடிக்கவில்லை.

பெரிய நம்பி இடத்தை விட்டு எழுந்து, "அபசாரம், அபசாரம். அரசே இப்படிக் கூறலாமா? காஞ்சிமாநகரத்து அரண்மனையில் சகல சுகபோகங்களுடன் பணியாட்கள் புடைசூழ வாழ்ந்து மாபெரும் சாம்ராஜ்யத்திற்கு ஆணையிட்டுச் செங்கோலோச்ச வேண்டிய தாங்கள் இந்த மலைப் பிரதேசத்தில் பாதாள குகையில் இருளில் இருப்பதைவிட மேலான ஒரு தியாகத்தையா நான் செய்துவிடப் போகிறேன்? அரசே! அநீதியைக் கண்டால் எங்கள் பரம்பரை வெகுண்டு எழும். என் தந்தை ஒரு சமயம் கூறினார்: அவருடைய சிறு வயதில் பெரும் பஞ்சம் வந்ததாம். அவரைப்

போன்ற இளம் வயதினர் சிலர் துடித்தெழுந்து காஞ்சிமாநகரம் சென்று இராஜசிம்ம மன்னனின் அரண்மனை வாயிலில் ‘பஞ்சத்துக்குக் காரணம் அரசர்தான். எல்லாருக்கும் சோறு போடுங்கள் அல்லது வேலை தாருங்கள்’ என்று கர்ஜித்தார்களாம். உடனே இராஜசிம்மர் காஞ்சியில் பிரம்மாண்டமான கோயிலையும், பனைமலையிலும் கடல் மல்லையிலும் கோயில்கள் கட்டும் திருப்பணிகளையும் தொடங்கிப் பலருக்கு வேலை கிடைக்கச் செய்தாராம். அநீதி பொறுக்காவிட்டால் சீறியெழும் பரம்பரையைச் சேர்ந்த நான் நியாயமாக உங்களுக்கு வரவேண்டிய அரச பீடத்தில் வேறொருவன் அமர்வதைச் சகிப்பேனா? முடியாது அரசே, முடியாது! அதற்காகவே என் பொருள், உடல், ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கத் தயார்” என்று கூவி, விரைந்து ஓடி அங்குக் கிடந்த வாளொன்றை எடுத்துச் சபதம் செய்யும் பாவனையில் உயர்த்திப் பிடித்தான்.

தூண் மறைவில் நின்று கொண்டிருந்த சுந்தரன் இன்னும் இருளில் சென்று மறைந்து எவரும் அறியாவண்ணம் நின்றான். “அரசராம், அரசர்!” என்று அவன் முணுமுணுத்தான். அவன் அங்கு இருக்கிறான் என்ற நினைவே எவருக்குமில்லை.

“அரசே! என்னைப் பற்றியே நான் பேசிக் கொண்டு போகிறேன். நான் வந்த காரியம் மிக முக்கியமானது. தாமரைப்பாடிக்கு உதயசந்திரன் விஜயம் செய்து குணதேவனை வடக்கே விரையுமாறு செய்திருக்கிறான் என்ற விவரம் எனக்கு இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் தெரியவந்தது. உதயசந்திரன் அந்த கிராமத்துக்கு அவசர அவசரமாக விஜயம் செய்தது அவ்வளவு பரம ரகசியமாக இருந்திருக்கிறது. அதை நான் அறிந்தவுடன் கருங்கண்ணனைத் தேடி ஓடி வந்தேன்.

இந்தச் செய்தியைக் கருங்கண்ணனிடம் தெரிவித்தவுடன் திடுக்கிட்டார். தீவிர சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு என்னிடம் கூறினார்: ‘நான் ஒரு திட்டமிட்டிருந்தேன். நீங்கள் கூறிய இந்த முக்கிய செய்திக்குப் பிறகு அதை மாற்ற வேண்டியதாயிருக்கிறது. வடக்கே போயிருக்கும் உதயசந்திரன் ஆட்கள் எவராலும் இராஷ்டிரகூடர் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த இயலாது.



இருந்தாலும் இராஷ்டிரகூடர் படையெடுப்பை அவர்கள் அறிந்தது மிகவும் நல்லதாயிற்று. இராஷ்டிரகூடப் படைகள் வட பெண்ணையாற்றங்கரையை அடையுமுன்னரே சந்திக்க நம் ஆட்களை அனுப்பியுள்ளேன். இப்பொழுது மீண்டும் சிலரை உணவுப் பொருள்களுடன் அனுப்பித் திருவொற்றியூரில் அவர்களைச் சந்திக்க ஏற்பாடுகளை விரைந்து செய்ய வேண்டும். மற்றும் மக்கள் படைக்குத் தேவையான ஆயுதங்களைத் திருக்கழுக்குன்றத்துக்கு அனுப்புமாறு கூறியிருந்தேன். அதை நாம் இப்போது மாற்றி...” பெரிய நம்பி பேச்சை முடிக்கவில்லை. அவனுக்குப் பலத்த இருமல் வந்தது. எப்படியாவது ஒரு மடக்கு தண்ணீர் குடித்தால் தேவலை என்ற நிலை ஏற்பட்டது. மூட்டையை அவிழ்த்துச் சுரைக் குடுக்கையிலிருந்து தண்ணீர் குடிக்க அதை எடுத்துக் கவிழ்த்தான். அதில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இல்லை.

பெரிய நம்பியின் திண்டாட்டத்தைக் கண்ட சித்திரமாயன் எழுந்து, “நாம் ஊருக்குள் போவோம். இருட்டிப் போன பிறகு இங்கு இருப்பதில் பயனில்லை. பைரவன் வீட்டில் உணவு அருந்தலாம்” என்றான். பெரிய நம்பிக்கு அது சரியெனப்பட்டது.

“பைரவா! வெளிச்சம் காட்டு. நாங்கள் போகிறோம். நீ பின்னால் குதிரையை அழைத்து வா” என்று கூறிப் பாறை மீது பெரியநம்பியுடன் ஏறினான்.

பைரவன் தீவர்த்தியை அணைத்துவிட்டுக் கிளம்பும்போது சுந்தரன் பாறையின் ஓரமாக நிற்பதைக் கண்டான்.

“சுந்தரா! நீ இன்னும் இங்கேயே இருக்கிறாய்?” என்று பரிவுடன் கேட்ட பைரவன் மெல்ல அவனைப் பாறையின் மீது ஏற வழி செய்தான். இருவரும் மௌனமாகவே சென்றனர். பைரவன் குதிரையை அவிழ்த்தான். சுந்தரனைப் பார்த்து, “தம்பி! உன்னால் நடந்து வர இயலாது. வழி தடுமாறலாம். குதிரையில் ஏறி வா” என்று கூறினான். ஒருகணம் சுந்தரன், “பரவாயில்லை, வழி தெரியாமல் என்ன?” என்று சொல்லிவிடத் துடித்தான். நெஞ்சிலே வந்த சொல்லை மிகுந்த சிரமத்துடன் அடக்கிக்

கொண்டு குதிரை மீது ஏறிக் கொண்டான். பைரவன் குதிரையைப் பிடித்துக் கொண்டு நடந்தான். சுந்தரன் நினைவெல்லாம் அரைகுறையாக விட்ட பெரிய நம்பியின் வார்த்தைகளிலேயே வட்டமிட்டன. பெரியநம்பி அப்போது சொல்லி வந்த செய்தியைப் போகும் வழியில் பூர்த்தி செய்திருப்பான். பெரிய நம்பி என்ன கூறியிருக்கக் கூடும் என்பதை சுந்தரனால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை.

பைரவனும் சுந்தரனும் வீட்டை அடைந்தபோது சித்திரமாயனும் பெரியநம்பியும் புழக்கடைத் தோட்டத்துக் கிணற்றங்கரையில் நின்று பேசிக் கொண்டிருந்தனர்.

“சந்திரமதி” என்று தன் மகளை அழைத்தவாறு நுழைந்த பைரவன் சித்திரமாயனைப் பார்த்து, “ஐயா! இன்னும் உணவு கொள்ளாமல் இருக்கிறீர்களே” என்று கேட்டுவிட்டு, தன் மகளை நோக்கி, “ஏம்மா! அவர்கள் மிகுந்த களைப்போடு இருக்கிறார்களே சீக்கிரம் இலையைப் போட்டுப் பரிமாறு” என்று கட்டளையிட்டான். எல்லாரும் அமர்ந்து பேசிக் கொண்டே ருசித்துப் புசித்த வண்ணமிருந்தனர். சுந்தரன் கரங்களால் சந்திரமதி சோறிடுவதும் அவன் உண்பதுமாக இருப்பதைப் பெரிய நம்பி கவனித்து விட்டு. “ஆகா! அந்தப் பையனின் கண்கள் குருடா?” என்று வியப்புடன் கேட்டான். 16|220|5744630

சித்திரமாயன் பேச்சை வேறுவிதமாகத் திருப்ப எண்ணி, “அப்படியென்றால் நீங்கள் பொழுது புலர இரண்டு நாழிகைக்கு முன் கிளம்புகிறீர்களல்லவா?” என்றான்.

பெரிய நம்பி, “ஆமாம். அதுதான் சரியான நேரம். தாமதித்துப் பயன் இல்லை” என்று கூறியபோது சித்திரமாயன் பைரவனை நோக்கி, “பைரவா! நீ செய்ய வேண்டிய செயல் ஒன்றிருக்கிறது. நாளைக்கு வருமாறு ஏற்பாடு செய்திருக்கும் கூண்டு வண்டிகளை இன்றிரவு பின் நேரத்தில் குகைக்கருகே அழைத்து வந்துவிடு. வண்டிக்காரர்களின் கண்களைக் கட்டிவிட்டுக் குகைக்கருகே அழைத்துச் செல்வது மிக முக்கியம். குகையிலிருக்கும் ஆயுதங்கள் அனைத்தையும் வண்டியில் ஏற்றிவிடு” என்று



கட்டளையிட்டான். சரி என்பதற்கு அறிகுறியாக பைரவன் தலையசைத்தான்.

மறுநாள் என்றும்போல் அன்றும் குணதிசையில் கதிரவன் தோன்றினான். பல்லவபுரத்து வீதிகளில் அதிக நடமாட்டமில்லை. சீக்கிரம் விழித்தெழுந்த ஓரிருவர் மெல்லிய காலைக் குளிர் காற்றிலிருந்து உடலைக் காப்பாற்றத் தலை முதல் கால் வரை போர்த்திக் கொண்டு நடந்தனர். தங்கள் தொழிலைக் கவனிக்கப் புள்ளினங்கள் உதயகீதம் பாடிய வண்ணம் பறந்து சென்றன. அவற்றைப் பார்த்துப் பொறாமைப்பட்டு வானிலே பறக்க முடியாத சேவல் கூரை மீதிருந்தே கூவியது.

படுக்கையிலே புரண்டு படுத்த சந்திரமதியின் காதுகளில் இனிய இசை எங்கிருந்தோ மிதந்து வீழ்ந்தது. அது அவளுடைய செவி வழியாக இதயத்தை எட்டியது. ஒவ்வோர் அங்கத்திலும் அந்தக் கீதம் புகுந்து புதுப்பொலிவை ஏற்படுத்தியது. சந்திரமதி துள்ளி எழுந்தாள். இசை பிறந்த இடம் நோக்கி ஓடினாள்.

சுந்தரனைத் தவிர வேறு யார் அவ்வளவு இனிமையாகப் பாடப் போகிறார்கள்?

*“வண்டார் குழலி உமை நங்கை*
*பங்கா கங்கை மணவாளா*
*விண்டார் புரங்கள் எரி செய்த*
*விடையாய் வேத நெறியானே*
*பண்டாழ் வினைகள் பல தீர்க்கும்*
*பரமா, பழையனூர் மேய,*
*அண்டா ஆலங்காடா உன்*
*அடியார்க் கடியேன் ஆவேனே”*

கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் குளித்தவாறே சுந்தரன் பாடிய இந்தப் பாடலைச் சந்திரமதி கொல்லைப்புறக் கதவுக்கருகே நின்று ரசித்துக் கேட்டவண்ணமிருந்தாள்.

தன் துணை இல்லாமலே கிணற்றில் எளிதாக நீர் எடுக்கும் சுந்தரனையும் அவனது பாடலையும் கண்டு கேட்டு நின்றிருந்த அவளிடமிருந்து நீண்ட பெருமூச்சு எழுந்தது.

"யாரது?" என்று சுந்தரன் கிணற்றடியிலிருந்தபடியே கேட்டான்.

"நான்தான் வண்டார்குழலி" என்று கூறி 'கல கல'வென நகைத்தாள் சந்திரமதி.

"சுந்தரா! அதிகாலையிலே எழுந்து விட்டாயே. இந்தப் பாடல் புதிதாக இருக்கிறதே; இதுவரை நீ பாடவில்லையே. எனக்கு ஏன் கற்றுத் தந்திருக்கக் கூடாது?" - சந்திரமதியின் குரலில் பொய்க் கோபம் புதைந்திருந்தது.

"சந்திரமதி! இரவில் உறங்கியவனுக்கல்லவா அதிகாலை என்பதெல்லாம்? நான் இரவெல்லாம் விழித்திருந்தேன். கூண்டு வண்டிகள் வந்ததையும், மாடுகளின் கழுத்து மணிகள் ஓசை எழுப்பா வண்ணம் கந்தையை மணி நாக்கில் கட்டியதையும் உன் தந்தை சென்றதையும் அவர்கள் பேசிக் கொண்டதையும் கேட்டுக் கொண்டே படுத்திருந்தேன். என் மனத்திலேற்பட்ட வேதனையும், உறங்காததால் ஏற்பட்ட எரிச்சலும் தீரவே தண்ணென்றிருக்கும் நீரெடுத்துக் குளித்தேன். எப்போதோ என் மாமா சொல்லிக் கொடுத்த தேவாரப் பாடல் நினைவுக்கு வந்தது. ஒருமுறை தொண்டை நாட்டுத் திருத்தலமான திருவாலங்காட்டிற்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சென்றிருந்தார். அந்தத் திருத்தலத்து இறைவன் மீது அவர் பாடிய பாடல் அது. எனக்கென்னவோ சமீப காலமாக சுந்தரரின் பாடல்கள் மனத்தில் ஒலித்த வண்ணமிருக்கின்றன. அதிலும் திருவாலங்காட்டுப் பாடல்களில் சில வரிகள் அடிக்கடி என் மனத்தில் எழுகின்றன.

*"பொய்யே செய்து புறம்புறமே திரிவேன் தன்னைப்*
*போகாமே மெய்யே வந்திங் கெனை ஆண்ட மெய்யா"*

எனும் வரிகள் என்னுடைய நிலைக்கும் ஏற்றதாக இருக்கின்றன. எவ்வளவு காலம் நான் இந்தச் சதிக் கூட்டத்தில் சிக்கி அவர்கள் கருவியாக இருப்பேன்? இங்கிருந்து எப்போது விடுபட்டுப் போவேன் என என்னுள்ளம் துடிக்கிறது. நேற்றைய நிகழ்ச்சிகளுக்குப் பிறகு இனி வரும் காலம் மிகவும் நெருக்கடியாக இருக்கும்போல் தோன்றுகிறது. நேற்று தாமரைப்பாடியினின்று வந்த வணிகர் புதிய செய்திகளைத் தெரிவித்தார். அவர் கூறிய அரைகுறைச் செய்திக்கும் இன்று அதிகாலையில் கூண்டு



வண்டிகள் வந்து ஆயுதங்களை ஏற்றிச் சென்றதற்கும் தொடர்பிருக்க வேண்டும். அரசர்க்கு எதிராகச் சதி செய்பவர்களோடு எனக்கென்ன தொடர்பு சந்திரமதி?

*'மனத்தூய்மை செய்வினைத் தூய்மை இரண்டும்*
*இனத்தூய்மை தூவா வரும்'*

என்று நீதி நூல் கூறுகிறது. தொடர்ந்து இங்கிருந்தால் என் மனமும் பாழ்படாது என்பது என்ன நிச்சயம்? விரைவில் விடுபட்டுப் போவேன்..."

சுந்தரன் தன் பேச்சை முடிக்கும்முன், "ஆமாம், சுந்தரா! நீயும் தந்தையும் நேற்று இரவு வருமுன்பு சித்திரமாயனும் அந்த வணிகரும் பேசிக் கொண்டதை உன்னிடம் சொல்லி விடத் துடிதுடித்தேன். அவர்கள் ஏன் உன்மீது சந்தேகம் கொள்கிறார்கள்? திருக்கழுக்குன்றத்துக்கு வண்டியிலே ஆயுதங்களை ஏற்றிச் சாலை வழியே சென்றால் உதயசந்திரனின் வீரர்கள் கண்டு கொள்ளலாம் என்று இரவுக்கிரவே இங்கிருந்து ஒரு காத தொலைவிலுள்ள கடற்கரைக்கு ஆயுதங்களை அனுப்பி அங்கிருந்து திமிலில்* ஏற்றிக் கடல்மல்லைக் கடற்கரைக்கு அனுப்பப் போகிறார்களாம். உணங்கல்* மூட்டைகள் திருவொற்றியூர் கடற்கரைக்குச் செல்கின்றன. சுந்தரா! இந்த நாட்டிலே ஏதோ பெரிய விபரீதம் நேரப் போகிறது போலும். நீ மட்டும் தப்பிப் போய் விடுவதாகக் கூறுகிறாயே. போகும்போது என்னையும் அழைத்துப் போய் விடு சுந்தரா! தனியே போகும் உனக்குத் துணை வேண்டாமா? பார்வையிழந்த நீ தப்பி ஓடுவதென்பது எளிதன்றே..."

சுந்தரன் மறுமொழி ஏதும் கூறவில்லை. அவன் கவனம் முழுவதும் வேறெங்கோ இருந்தது. தெருத் திண்ணையில் வந்தமர்ந்து கொண்டான். சந்திரமதி அவனைப் பின் தொடர்ந்தாள்.

"சுந்தரா! சித்திரமாயனுக்கு உன்மீது மிகுந்த அவ நம்பிக்கை. கண்களைப் பறித்ததோடன்றி உன்னைத் தீர்த்து விடவும் முடிவு கட்டுகிறார். நம்பிக்கையில்லாதவனை உடன் வைத்திருப்பது ஏன்?"

"எப்படியோ என்னைச் சேர்த்துக் கொண்டார்கள். இப்பொழுது விரட்டி விடுவதென்றால் அது புத்திசாலி செய்யும் செயலன்றே."

"நீயாகத் தப்பிவிட்டால்?"

"தேடிப் பிடித்துப் பழி தீர்ப்பார்கள்!"

"அதற்கு விமோசனம்?"

"உள்ளத்தில் உறுதியும் அறிவைப் பயன்படுத்தும் விதமும்தான்."

"சுந்தரா! எனக்கென்னவோ பயமாயிருக்கிறது. தந்தையிடம் வற்புறுத்தி நாம் எல்லாரும் தப்பி ஓடி விடுவோமா?"

"ஓடுவதும் இருப்பதும் அவ்வளவ எளிதன்று, சந்திரமதி!"

"எனக்கும் ஒன்றுமே புரியவில்லையே."

"நீ ஏன் வேதனையடைகிறாய்? எல்லாம் ஆரூரனின் ஆசியால் இனிதே முடியும்."

சந்திரமதி மௌனமாகச் சென்று விட்டாள். அவள் சென்றவுடன் சுந்தரன் எழுந்தான். அந்தத் தெருவின் கோடியிலிருந்த பாழடைந்த வீட்டை நோக்கி விரைந்தான். அவன் நடந்த வேகத்தைப் பார்த்தால் கண் தெரிந்து பழக்கப்பட்டு நடப்பவனின் செய்கை போன்றிருந்தது. அந்தத் தெருவின் கோடியிலிருந்த பாழடைந்த வீட்டிற்குச் சென்றான். இடுப்பில் செருகியிருந்த ஓலையை அங்கிருந்த மாடத்தில் வைத்து விட்டு வந்து விட்டான்.

அவன் திரும்பி வந்த சிறிது நேரத்தில் குதிரை மீது ஒரு வீரன் வந்தான். அவன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அந்தப் பாழடைந்த வீட்டிற்குள் நுழைந்தான். மாடத்தில் ஓலையைக் கண்டவுடன் அவன் விரைந்து சென்று ஓலையைப் பிரித்துப் படித்தான். அவன் முகம் ஒரு நொடியில் மாறியது. வேகமும் அவசரமும் அவன் உடலில் தோன்றின. விரைந்து வந்து குதிரை மீதேறிக் காற்றினும் கடுகிய வேகத்தில் பறந்தான்.



## 6. சந்திப்பு

செம்பவளமும் வெண்முத்தும் வந்து கரையொதுங்கும் திருஅல்லிக்கேணியில் குடிகொண்டிருக்கும் 'ஒருவல்லித் தாமரையாள் ஒன்றிய சீர் மார்பனை'க் கண்டு களித்து விட்டுப் பல்லவ சாம்ராஜ்யத்தின் பெருமையை உயர்த்த வந்தவனும், உள்ளும் புறமும், இருந்த கவர நினைக்கும் பகைவர்களை ஒழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ள படைத்தத் தலைவன் உதயசந்திரனும், பல்லவ சாம்ராஜ்யத்தின் அதிபதியும், இளவயதிலேயே அஞ்சா நெஞ்சுடன் ஆட்சியை நிர்வகிக்கும் அரசர் நந்திவர்மனும் குதிரைகள் கட்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்தனர்.

கம்பீரமும் பொலிவும் திகழும் திருமுகத்தினரான நந்திவர்மன் ஒருமுறை கோயிலை மீண்டும் திரும்பிப் பார்த்தார். கோயில் பழுதுற்றிருந்தது. கோயிலுக்கு மதில் சுவர்கள் இல்லை. கோயிலை அணுகும் பாதையெங்கும் முட்செடிகளும், புதர்களும் மண்டிக் கிடந்தன. கோயிலின் அருகே தடாகம் ஒன்றிருந்தது. தடாகத்தில் தண்ணீர் இருப்பது தெரியாவண்ணம் அல்லி மலர்கள் நிறைந்திருந்தன. கோயிலின் நேர் எதிரே சிறிது தொலைவில் வெண்கரங்களைக் கொட்டி முழக்கும் கடல் சதா ஒலித்த வண்ணமிருந்தது.

பல்லவ நாடு முழுவதும் கடந்த பத்தாண்டுகளாகக் கோயில்களைக் கவனிப்பார் யாருமில்லை. புதுக்கோயில்களும் எழவில்லை. பன்னிரண்டு வயதிலேயே பட்டமேறிய இளம் அரசர் நந்திவர்மனுக்கு ஏற்பட்ட உட்பகையும், பூசலும் கோயில்களை நிர்வகிக்கும் விஷயத்தில் கவனம் செல்லவில்லை. ஆட்சியின் ஒவ்வொரு பகுதியிலும் கவனம் செலுத்தி மந்திரி மண்டலத்தார் உதவியுடனும், உதயசந்திரனின் ஒப்பற்ற யோசனைகள்

மூலமாகவும் சீர் செய்து வந்த நந்திவர்மன் பல்லவ நாட்டுத் திருத்தலங்களையெல்லாம் கண்டுவிடத் துடித்தார். திரு அல்லிக்கேணிக்கு எதிர்பாராதவிதமாக உதயசந்திரன் நந்திவர்மனை அழைத்து வந்தான். அல்லிக்கேணிக் கோயிலைக் கண்டுகளிக்கச் செய்தான். திரும்பும்போது நந்திவர்மனுக்கு அந்த இயற்கைச் சூழ்நிலையை விட்டு வரவே மனமில்லை.

"உதயசந்திரா! தொண்டை நாட்டில் அகன்ற ஆறுகள் இல்லாவிடிலும் தண்ணீர்த் தடாகங்களுக்கும் நீர் நிலைகளுக்கும் குறைவில்லை. நீர் வளத்தின் அவசியத்தை அறிந்தே மகேந்திர மன்னர் மாபெரும் தாடகங்களை வெட்டியிருக்கிறார். ஒவ்வொரு தாடகக் கரையிலும் ஒவ்வொரு சோலை அமைத்து ஒவ்வொரு கோயிலின் அருகிலும் அழகிய குளத்தை வெட்டினால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்? அல்லிக்கேணிக் கோயிலைக் கண்ட பிறகு என் மனம் இளமைக் கனவில் மீண்டும் ஈடுபடுகிறது.

"முதன் முதலில் காஞ்சியில் மகுடாபிஷேக தினத்தன்று என்னை யானை மீது அமர்த்தித் திருவீதி வலம் செய்வித்தபோது, மலர்ந்த முகத்துடன் கூடிய மக்கள் ஆரவாரத்திற்குப் பின்னணியாகத் திகழ்ந்த கோயில்கள் என் மனத்தைக் கவர்ந்தன.

"எத்தனை எத்தனையோ ஆண்டுகளாக அன்புக்கும் அருளுக்கும் பண்புக்கும் உறைவிடமாகத் திகழும் காஞ்சியை இன்னும் சிறப்படையச் செய்ய சிந்தனை செய்து வருகிறேன். முதன்முதலில் பாறையைக் குடைந்து கோயில் அமைத்து என் முபபாட்டனார் மகேந்திர சக்ரவர்த்தி புகழ் பெற்றார். அற்புதமான ஐந்து கோயில்களையும், கடற்கரைக் கோயில்களையும் அமைத்து இராஜசிம்ம சக்ரவர்த்தி பல்லவ சாம்ராஜ்யத்தின் புகழ் ஓங்கச் செய்தார். சொர்க்கஸ்தரான பரமேஸ்வர வர்மரிடம் என் தந்தை என்னை அழைத்துச் செல்லும் போதெல்லாம், அவர் சிற்ப அற்புதம் மிக்க கோயில்களைப் பற்றியே பேசுவார். என் இளம் உள்ளத்தில் கலையார்வம் மிகுந்தது. போரினால் அழியாப் பெயர் அடைவதைவிட அழியாக் கலைப் படைப்புகளால் சிரஞ்சீவியாக வாழலாம் எனும் எண்ணம் வலுவடையத் தொடங்கியது.



"என் தந்தை, என் சகோதரர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து 'அரியணையில் ஏறுகிறீரா?' எனக் கேட்டபோது அவர்கள் ஆட்சியின் பளு அறிந்து 'வேண்டாம்' என ஒதுங்கி விட்டனர். என் தம்பி ரணமல்லனும், சங்கார மல்லனும், ஸ்ரீமல்லனும் அஞ்சி ஒதுக்கிய ஆட்சி பீடத்தை நான் ஏற்றதே கலையார்வத்தால்தான். ஆனால், உதயசந்திரா! கடந்த ஆறாண்டுகளாகக் கலையைப் பற்றி எண்ணவோ, கோயில்களைத் தரிசிக்கவோ, சிற்பம் சித்திரம் பற்றிப் பேசவோ எங்கே முடிந்தது? இந்தப் பக்கம் திரும்பினால் சூழ்ச்சி; அந்தப் பக்கம் பூசல். எந்த விநாடியும் உள்நாட்டுச் சூழ்ச்சிக்காரர்களின் எதிர்ப்பைப் பற்றிய நினைவு. இவை எப்போது மாறும் திருவல்ல நாட்டு வீரரே?"

நந்திவர்ம அரசரின் கனீரென்ற சொற்களிலே ததும்பிய ஆவலை ரசித்து வந்த உதயசந்திரன் மெல்ல நகைத்தான்.

அரசர் பக்கமாகத் திரும்பி, "பல்லவ மன்னா! உங்களுடைய கலையார்வத்தை நான் எப்போதோ அறிந்து கொண்டேன். மகேந்திரரும், மாமல்லரும், இராஜ சிம்மரும் வளர்த்த பல்லவ பரம்பரையிலே வந்த உங்களுக்குக் கலையார்வம் ஏற்பட்டதில் வியப்பில்லை. நாட்டில் அமைதியும் வளமான வாழ்வும் நிறைந்திருக்கும்போதுதான் கலை வளரும். பகைவர்களை ஒழிப்பதிலேயே கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் நாம் கலையை வளர்க்காததில் தவறில்லை. ஆனால், ஆர்வம் மறையக் கூடாதல்லவா? அதனால்தான் நம்முடைய யுத்த கவனத்தோடு ஆண்டவன் உறையும் திருத்தலங்களையும் கண்டு களிக்க வேண்டுமென்றே நான் இந்தப் பாதையைத் தேர்ந்தெடுத்தேன். காஞ்சியிலிருந்து வரும்போது திருக்கச்சூரையும், திருக்கழுக்குன்றத்தையும், திரு ஆன்மியூரையும் நான் கண்டு களித்திருக்கலாம். ஆனால் அரசே! நாம் இப்போது மிகவும் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறோம். எத்தனை எத்தனையோ தந்திரங்களைக் கையாண்டு எதிர்ப்படும் இடர்களை வெல்ல வேண்டும். உங்கள் தந்தை இரண்யவர்மர் என்னை உத்திரமேரூர் அரண்மனைக்கு வரவழைத்தார். அவர் என்னிடம் கேட்டுக் கொண்ட உறுதிமொழிகளை நான் இங்கு

விவரிப்பதானால் பொழுது சாய்ந்து விடும். நாம் இன்னும் இருபது நாழிகை நேரத்தில் படைத் தண்டை அடைய வேண்டும். அரசே! இனி சிறிது காலம் உங்களை நான் 'அரசே' என்றழைக்க மாட்டேன். சாதாரணப் போர் வீரனை அழைப்பது போலவே அழைப்பேன். தயவுசெய்து என்னைப் பொறுத்தருளுங்கள். உங்கள் அரச கிரீடத்தையும், பட்டுப் பீதாம்பரத்தையும், மார்பிலே பூண்டுள்ள ஆபரணங்களையும் தயவுசெய்து கழற்றி மெய்க் காவலரிடம் கொடுத்து விடுங்கள். போர் வீரனுக்குரிய உடைகளை அணியுங்கள். போர் வீரனாக உங்களை மதித்துக் கட்டளையிடும் வாய்ப்பு ஏற்படலாம். மன்னர் மன்னா! என்னை அதுபோன்ற சந்தர்ப்பங்களில் முறை தவறிப் பேசுவதற்குப் பொறுத்தருளுமாறு முன்கூட்டியே கேட்டுக் கொள்கிறேன்.

"எனக்குக் கிடைத்திருக்கும் செய்திகளினின்று இன்னும் இரு தினங்களில் இராஷ்டிரகூடப் படைகள் பெண்ணையாற்றைத் தாண்டிவிடும். பிறகு மூன்று பிரிவுகளாகப் பிரிந்து உள்நாட்டு விரோதிகளின் படைகளை ஒன்றாகத் திரட்டிச் சித்திரமாயன் காஞ்சியை நோக்கி விரைவான். கிடுக்கி போன்ற இந்தத் தாக்குதலின்போது காஞ்சி நகரில் பல இடங்களிலிருந்து பூசல்களைக் கிளப்பிக் குழப்பம் விளைவிக்கச் சில பெரிய மனிதர்கள் முனைகிறார்கள். மிகவும் நெருக்கடியான இத்தகைய நிலையை எதிர்பார்த்தே ஓய்வுக்காகச் சென்ற படை வீரர்களை உடனே திரும்பி வந்து திருவொற்றியூரில் ஒரு பகுதியில் தண்டிறங்கச் செய்திருக்கிறேன். இப்போது நாம் திருவொற்றியூருக்குப் போகிறோம். அங்கிருந்து உடனே புறப்பட்டு வட பெண்ணையாற்றைக் கடக்கும்போது அவர்கள் திகைத்துத் திடுக்கிடுமாறு செய்ய வேண்டும்."

உதயசந்திரன் இவற்றைக் கூறிக்கொண்டு போகும்போது மல்லர்க்கு மல்லரான பல்லவ மல்லன் நந்திவர்மன் குறுக்கிட்டு, "உதயசந்திரரே! வடக்கிலிருந்து இவ்வளவு தொலைவுக்கு யுத்தப் புயல் வீசுகிறதா? நம் ஒற்றர் படைகள் சரிவர இதைப் புரிந்து கொண்டு முன்கூட்டியே அறிவிக்கவில்லை போலும். நல்ல வேளையாக நீங்கள் முன்கூட்டியே அறிந்திருக்கிறீர்கள். இராஷ்டிரகூடர்களுக்கு இப்போது என்ன வந்து விட்டது? மான்ய



கேட நகரிலிருந்து காஞ்சியை ஆளப் பார்க்கிறார்களா? சாளுக்கியர்களுக்காவது பரம்பரை விரோதம் காரணமிருக்கிறது. இரட்டர்களின் முதல் அரசருக்கே வெளிநாடு பிடிக்க ஆசை வந்து விட்டதா? மக்களுக்கு இன்னல் கொடுக்கும் யுத்தம் நிகழாமல் செய்ய நான் எண்ணினேன். என் கனவு, கனவாகவே இருக்க வேண்டுமா?" - நந்திவர்மன் உணர்ச்சியுடன் பேசினார்.

"அரசே! உங்கள் கனவு நனவாகலாம்; கனவாகவே ஆகலாம்; நான் முக்காலும் அறிந்தவனல்லன். ஆனால் இன்றைய நிலையில் யுத்தத்தைத் தவிர்க்கவே முடியாது. நீண்ட நாள்களாக வடக்கிலும் தெற்கிலும் மேற்கிலுமாக நம் பகைவர்கள் புகைந்து கொண்டிருக்கிறார்கள். வாய்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சித்திரமாயன் வெளிநாட்டு விவகாரங்களை நன்றாக அறிந்திருக்கிறான். நீங்கள் பட்டமேறியவுடன் சதியால் உங்களை முறியடிக்கப் பார்த்து முடியாததால் இப்போது மாற்றரசன் உதவியை நாடுகிறான். அந்த வேண்டுகோளுக்கிணங்கித்தான் வைரமேகனும் காஞ்சியை நோக்கி வருகிறான். அவனுக்குப் படையெடுக்கும் நோக்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அரசே! எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நம்முடைய அறிவுடைச் செயல்களால் இந்த இடர்ப்பாட்டினின்று மீள்வோம் என்று. ஆனால், அரசே! இந்த இளைஞனான படைத் தளபதி கூறுவது போல் கேளுங்கள். மாற்றான் படைத் தண்டுக்குள்ளேயே நுழைந்து விடுவோம். வைரமேகனை நேருக்கு நேர் சந்திப்போம்."

"நானும் வர வேண்டுமா? தலைநகரில் நான் இல்லாத சமயம் பார்த்து..."

"கவலை வேண்டாம். அரசே! தாங்கள் இந்த நொடியினின்று அரசர் என்பதை மறந்து விடுங்கள். தளபதியின் கட்டளைக்குக் கீழ்ப்படியும் போர் வீரனாக மாறுங்கள். வேறு எதையும் கருணை கூர்ந்து என்னுடைய மறு உத்தரவு வரை கேட்காதீர்கள்" என்றான் உதயசந்திரன்.

கடமையும், நாட்டின் மீது காதலும் நிறைந்த அவனுக்கு உணர்ச்சி மிகுதியால் நெஞ்சடைத்தது. கண்களில் நீர் தளும்பியது.

அரசரும், "அப்படியே தளபதி! கட்டளையிடுங்கள்!" என்று போர்வீரன் கட்டளையை எதிர்பார்ப்பது போல் பணிந்து நின்றார்.

உதயசந்திரனுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை. "என்னை மீண்டும் பொறுத்தருளுங்கள் அரசே!" என்று கூறினான். பிறகு இருவரும் குதிரை மீதேறிப் பல்லவப் படைகள் தண்டிறங்கியிருந்த இடம் நோக்கி விரைந்தனர்.

வட பெண்ணையாற்றங் கரையிலே பல்லவப் படைகள் அணிவகுத்து நிற்பதைக் கண்ட வைரமேகன் திகைத்து நின்றான். பல்லவ வீரன் குணதேவன் தப்பிச் சென்று விட்டானென்ற செய்தியும், படைக் கூடாரத்திற்குள் மாற்றான் ஒருவன் வந்து சென்றான் என்ற செய்தியும் அவனுக்கு அதிர்ச்சியை அளித்தன.

பல்லவப் படைகள் வரும் செய்தியைத் தம் ஒற்றர்கள் முன் கூட்டியே அறிந்திராத காரணம் அவனுக்குத் தெரியவில்லை. முதல் நாள் அந்தக் கரையில் அவை தண்டு இறங்கியிருக்க முடியாது. அந்தப் படைகளின் மூச்சு, காற்றிலே கலந்தாலே ஒற்றர் படைகள் அதை உணர்ந்து விடுவர். பிறகு எப்படி இத்தனை பெரிய மாறுதல் நேர்ந்திருக்கிறது? வைரமேகன் கண்களை ஒருமுறை துடைத்துக் கொண்டு பார்த்தான்.

குதிரை மீதிருந்து கீழே இறங்கினார். படைத் தலைவரும் மந்திரி மண்டலத்துப் பிரதானியும் ஓடி வந்தனர். கிளம்பிய படைகள் திடீரென்று நின்றதும், குதிரை மேல் சிலர் விரைவதையும் கண்ட ரேவா தேவி பல்லக்கினின்று கீழே இறங்கித் தந்தையிடம் விரைந்தாள். தன் மகளும் அங்கு வருவதைக் கண்ட வைரமேகனுக்குப் புரியமுடியாத ஆத்திரமும் அவமானமும் அதிகமாயின.

ஆற்றின் தென்கரையில் பல்லவப் படைகள் அணிவகுத்து நிற்பதை ரேவா கண்டாள்.

"அப்பா! இவை காஞ்சிப் படைகளா?" என்ற ரேவாவின் கேள்விக்கு மறுமொழி பகரவில்லை வைரமேகன்.



படைத்தலைவர், ரேவாவின் பக்கம் திரும்பி மிகவும் மரியாதை ததும்பும் குரலில் கூறினார்: "இளவரசி! மிகவும் நெருக்கடியான நிலையில் ஆலோசனையில் அதி தீவிரமாக ஈடுபட்டிருக்கிறோம். கருணைகூர்ந்து தந்தையைத் தொந்தரவு செய்யாதீர்கள்."

ரேவாவின் முகத்தில் எழுந்த கடுஞ்சினத்தைத் தளபதி கவனிக்கவில்லை. தளபதியை அவள் கடுங்கோபத்தால் தகர்த்திருப்பாள். ஆனால், குணதேவன் தப்பி ஓடிவிட்டான் என்ற செய்தி அவள் கவனத்தைக் கவர்ந்தது.

"பல்லவ நாட்டு வீரன் தப்பிவிட்டானா?" அவள் கேள்வியில் வியப்பு கலந்திருந்தது. அவன் தப்பியோடியதில் ரேவா உள்ளூற மகிழ்ச்சியடைந்தாள் என்பதை அடுத்து வந்த சொற்கள் காட்டின.

"அப்படியானால் உணவு வண்டியை வேறு யார் இழுத்து வரப் போகிறார்கள்?" என்று நகைத்த வண்ணம் கேட்டாள்.

அவளுடைய நகைச்சுவையை ரசிக்க அங்கு எவருக்கும் பொழுதில்லை. அவசர அவசரமாக ஒவ்வொருவரும் மேலே நடக்க வேண்டியதைப் பற்றி யோசிக்கலாயினர்.

"முன்பே நம் வீரர்களிடையே முணுமுணுப்பு அதிகமாயிருக்கிறது. அவர்களுக்குப் போர் செய்வதில் உற்சாகமில்லை. உணவும் ஓரிரு நாள்களுக்கே கைவசமிருப்பதால் எல்லாருக்கும் பாதி வேளை உணவளிக்க உத்தர விட்டிருக்கிறேன்" என அமைச்சர் கூறினார்.

"முணுமுணுப்பிருந்தாலும் யுத்தம் என்றால் பின் வாங்க மாட்டார்கள்" என்று தளபதி குறுக்கிட்டான்.

வைரமேகன் ஏதும் பேசவில்லை. மனங் கலங்காத அந்த மாவீரனின் மனத்திலே ஒரே குழப்பம். போர் அல்லது சாவு! இரண்டிலொன்றுதான் அவன் முன்பிருந்த பிரச்னை.

போர் - அதற்கு மாறுபட்டு எண்ண இடமில்லை. ஆனால், சூழ்நிலை சரியாக அமைய வேண்டாமா? காஞ்சியை திடீரெனத் தாக்கத் திட்டமிட்டிருக்கும்போது அந்த உறுதியோடு செல்கையில் கடல் போன்ற படைகள் திடீரெனத் தோன்றி மலைபோல் எதிரே நின்றிருந்தால்...?

சித்திரமாயன் அனுப்பிய தூதுவர் கூறியவை தவறானவையா? காஞ்சிப் படை வீரர்கள் தத்தம் ஊர்களுக்கு ஓய்வு பெறச் சென்றிருக்கிறார்கள் என்பது பொய்யா? அதுவும் போகட்டும்; வட பெண்ணையாற்றங் கரையில், படைகளுக்கு வழிகாட்ட வருவதாகச் சொன்ன சித்திரமாயனது துணைப் படைகள் வந்து சேரவில்லையே...

இவற்றையெல்லாம் நினைக்கும்போது திடீர் எனப் பெரும் மாறுதல் ஏதோ நேர்ந்திருக்கிறது என்பது தெரிகிறது.

வைரமேகன் ஒருகணம் சேனைத் தலைவர் பக்கம் திரும்பினான்.

"வாத்திய கோஷங்கள் ஏன் நின்று விட்டன?" என்று கர்ஜித்தான். ஏனோ இராஷ்டிரகூடப் படைப் பகுதியினின்று படைகளின் யுத்த முரசம் ஒலிக்கவில்லை.

ஆனால், பல்லவப் படைப் பகுதியினின்றும் எந்தவிதக் கோஷமும் எழவில்லை என்பதை வைரமேகன் அறிந்தான்.

ஆம்; போர் முரசம் முழங்கவில்லை. போர்ப் பறை ஒலிக்கவில்லை. வெற்றியை நோக்கி எக்காளமிடும் சங்கின் ஒலி கேட்கவில்லை. பல்லவர்களுக்கே உரித்தான கடுமுக வாத்திய கோஷத்தைக் காணோம். சமுத்திர கோஷம் எனப்படும் போர்க்காலத்து வாத்திய ஓசையும் எழவில்லை.

பல்லவப் படைகள் போர் புரிய ஆயத்தமாக இல்லையா? எப்படிப் புரிந்து கொள்வது? ரேவா தந்தையின் அருகே வந்தாள், "அப்பா!" என்று அழைத்தாள்.

"போர் புரிந்து ரத்த ஆற்றின்மேல் நடந்துதான் காஞ்சிக்குச் செல்ல வேண்டுமா அப்பா?" என்று கேட்டாள்.

வைரமேகன் சிரித்தார்.

"இளவரசி தேவியாரே! நீங்கள் சரணாகதியை விரும்புகிறீர்களா?" - படைத் தலைவர் குரலில் கேலி நிறைந்திருந்தது.



ரேவா சேனாதிபதியைப் பார்க்காமல், "தந்தையே! சரணாகதி என்ற பேச்சே எழவில்லை; போர் என்றால் அல்லவா பணிவு என்ற பேச்சு? நம்முடன் போர் புரியும் எண்ணம் அவர்களுக்கிருந்தால் நேற்றிரவு நாம் ஆயத்தமாகும் முன்பே அவர்கள் நாலாபுறமும் சூழ்ந்து தாக்கியிருக்கலாமன்றோ? நம்மோடிருந்த வீரனும் தப்பி ஓடியிருக்கிறான். நம் பலத்தின் அளவை அவன் கூறியிருக்க மாட்டானா?" என்றாள்.

மகளின் அறிவு ததும்பும் பேச்சு வைரமேகனுக்குச் சந்தோஷத்தை அளித்தாலும் அவன் முடிவாக ஏதும் கூறவில்லை.

வைரமேகனும் மற்றவர்களும் கலந்தாலோசித்தனர். வைரமேகன் கட்டளைப்படி மந்திரி மண்டலத்துப் பிரதானி வல்லூறு கொடி பிடித்த வண்ணம் பல்லவப் படையை நோக்கிச் சென்ற சமயம் உதயசந்திரன் இரு வீரர்கள் பின் தொடர வந்து கொண்டிருந்தான்.

இருபெரும் நாட்டு முக்கிய மனிதர்கள் சந்தித்துக் கொண்டனர். ஒருவருக்கொருவர் பேசினர். பிறகு நான்கு பேரும் இராஷ்டிரகூடப் படைகள் தங்கியிருக்கும் இடம் நோக்கிச் சென்றனர்.

அதற்குள்ளாக அரசர் தங்குவதற்குக் கூடாரம் அமைக்கப்பட்டு விட்டது. வைரமேகனும் ரேவாவும் கூடாரத்துள் தங்கி என்ன செய்தி வரப் போகிறதோ என்ற ஆவலுடன் இருக்கும்போது மந்திரி மண்டலத்து முதல்வர் கூடாரத்துள் நுழைந்து அரசரை வணங்கி, "பல்லவ சாம்ராஜ்யத்துப் படைத் தலைவர் உதயசந்திரனும் அவரது மெய்க் காவலரும் தங்களைச் சந்திக்க வருகிறார்கள்" என்றார்.

உதயசந்திரன் இரு வீரர்கள் புடை சூழ கம்பீரமாக உள்ளே நுழைந்தான்.

உதயசந்திரனின் எடுப்பான தோற்றத்தையும் எவரையும் ஊடுருவி அறிந்து கொள்ளும் கூர்மையான கண்களையும் பரந்த அறிவொளி திகழும் முகத்தையும் ஒரே நொடியில் வைரமேகன் புரிந்து கொண்டான். ரேவா தேவி எழுந்து கூடாரத்துத் திரை மறைவுக்குச் சென்றாள். உதயசந்திரனைக் கூர்ந்து நோக்கிய

வைரமேகனது கவனம் அவனுக்கடுத்து நின்றிருந்த இரு வீரர்கள்பால் சென்றவுடன் திடுக்கிட்டது.

அந்தச் சமயத்தே கடல் மல்லைக் கடற்கரையில் நான்கைந்து படகுகள் வந்து நின்றன. கடற்கரையில் அவற்றை எதிர்பார்த்துக் காத்திருந்த சித்திரமாயனது வீரர்கள் விரைந்து படகுகளில் இருந்த பெரும் போர்க்கலங்களை இறக்கி வண்டிகளில் வேகமாக ஏற்றினர். வண்டிகள் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்று வெகுநேரம் கழித்த பிறகு பல்லவ வீரர்கள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் எதிர்பார்த்த ஏதும் படகுகளில் இல்லாததை அறிந்தபோது துடிதுடித்தனர். சிறிது நேர தாமதத்தால் நேர்ந்த பெரும் ஆபத்தை எண்ணிக் காடக முத்தரையன் மனம் கலங்கினான். வண்டிகளின் தடமறிந்து அவை சென்றிருக்கும் திக்கை நோக்கி அவர்கள் விரைந்தனர். திருக்கழுக்குன்றம் வரை அவர்கள் சென்றும் ஆயுதங்களை ஏற்றிச் சென்ற வண்டியை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.

முதல்நாள் தன் எதிரே சிக்கி நின்ற குணதேவன் இப்போது தூதுவனாக நின்றான். வைரமேகனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. மற்றொரு வீரனை அவன் திரும்பிப் பார்க்கவில்லை. ஆனால் ரேவா தேவியின் கண்கள் மூவரையும் கண்டு கொண்டன.

## 7. வைரமேகன் கட்டளை

கூடாரத்திற்குள் வைரமேகனும் உதயசந்திரனும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, இராஷ்டிரகூட இளவரசி ரேவா தேவி திரையின் பின்புறமிருந்து பல்லவத் தூதர்களை நோக்கிய வண்ணமிருந்தாள். அவர்கள் பேசத் தொடங்கியபோது, அவர்களது சம்பாஷணையில் கருத்தைச் செலுத்திய அவள்



கவனம் கொஞ்சங் கொஞ்சமாக மாறிப் பல்லவத் தூதர்களைச் சுற்றி வட்டமிட்டது. வியப்புடன் அவள் அவர்களை நோக்கியவாறிருந்தபோது அவள் முதுகை லேசாக யாரோ தொட்ட உணர்ச்சி ஏற்படவே அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள். தோழி காஞ்சனா நின்று கொண்டிருந்தாள்.

ரேவாவுக்குத் துணையாக வந்த பணிப் பெண்களில் காஞ்சனாவின் மீது ரேவாவிற்கு அன்பு அதிகம். உள்ளமறிந்து நடந்து கொள்ளும் தன்மையால் மட்டுமல்லாமல் தாயற்ற ரேவாவிற்குத் தாயாகவும், உடன் பிறந்தோரற்ற ரேவாவிற்குச் சகோதரியாகவும் விளங்கிய காஞ்சனாவைப் பணிப்பெண் என்ற நிலையை மறந்து உற்ற தோழியாகவே அவள் கருதினாள். காஞ்சனா உடன் வராதிருந்தால் மான்ய கேட நகரிலிருந்து காடும் மலையும் ஆறும் தாண்டிப் பயணத்தைத் தொடரும்போது ரேவா உற்சாகமிழந்திருப்பாள். காஞ்சி நகரின்மீது அவளுக்கேற்பட்ட காதல்கூட வழியில் கருகியிருக்கும். காஞ்சனாவின் உற்சாகமூட்டும் பேச்சும் வாஞ்சையும் ரேகாவிற்குப் புதுத் தெம்பை அவ்வப்போது ஊட்டி வந்தன.

பின்புறம் காஞ்சனா நிற்பதைப் பார்த்த ரேவா அவள் கன்னத்தில் லேசாகத் தட்டி, “போடி, குறும்புக்காரி! நான் பயந்தே விட்டேன்” என்று பொய்க் கோபம் கொள்வதுபோல் நடித்தாலும், உதட்டிலே நெளிந்த புன்னகை அவளைக் காட்டிக் கொடுத்து விட்டது.

காஞ்சனா கன்னத்தைத் தடவிய வண்ணம், “பயப்படுவீர்கள் இளவரசியாரே, பயப்படுவீர்கள்! நீங்கள் பயப்படாவிடில் வேறு யார்தான் எனக்குப் பயப்படுவதாம்? மகத்தான காஞ்சி நகரைக் காணப் பயப்படுவது போல் நடிக்கப் பழகிக் கொண்டாலன்றோ, காஞ்சி நகர அரசகுமாரரை உங்கள் வலையில் சிக்க வைக்கலாம்” - காஞ்சனா இப்படி எதையோ பேசி வேறு எவற்றுடனோ முடிச்சிட முயன்றபோது ரேவா அவள் வாயைத் தன் மெல்லிய கரங்களால் மூடி, “அடி, உனது குரலை இங்கு காட்டாதே! நாம் பேசும் மொழி பல்லவத் தூதுகோஷ்டியில் கம்பீரத் தோற்றத்துடன் விளங்கும் தலைவருக்குத் தெரியும் போலிருக்கிறது. என்

தந்தையுடன் அவர் பிராகிருதத்திலேயே உரையாடுகிறார். பல்லவ வீரர்கள் எல்லாம் அறிந்தவர்கள் போலிருக்கிறது. நமக்கு இங்கே என்ன வேலை? கூடாரத்துக்கு வெளியே செல்வோம். கூப்பிடு தொலைவில் ஆறு ஓடுகிறது. அழகிய மரங்கள் ஆற்றங்கரையில் உள்ளன. கரையோரமாக விளங்கும் செடிகளில் மணம் மிகுந்த மலர்கள் பூத்துக் குலுங்குகின்றனவாம். வாடி காஞ்சனா! அங்கே போவோம். நம் படைகள் இங்கேயே தங்கப் போகின்றனவோ, மேலே போகப் போகின்றனவோ அல்லது திரும்பிப் போகப் போகின்றனவோ தெரியவில்லை. அதற்குள் ஆற்றின் நீரிலே இறங்கி நீராடாவிடினும் காலையாவது அமிழ்த்திக் கொள்ள ஆசை ஏற்படுகிறதடி! கடைசியாக, நாம் கிருஷ்ணா நதியின் புரண்டோடும் வெள்ளத்தைக் கண்டு களித்து அதை விட்டுப் பிரிய மனம் வராமல் பிரிந்து வந்தோமே, நினைவிருக்கிறதா?" ரேவா உற்சாக மிகுதியில் பேசிக் கொண்டே காஞ்சனாவின் கரங்களைப் பிடித்துத் தரதரவென இழுத்தவண்ணம் வெளியேறினாள்.

வட பெண்ணையாற்றின் ஓர் ஓரமாகத் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. ரேவாவும் காஞ்சனாவும் அருகேயிருந்த தோப்பின் ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்று ஆற்றங்கரையில் தழைத்து வளர்ந்திருந்த மரத்தின் வேரின் மீது அமர்ந்தனர். பெரும் வெள்ளம் ஓடியிருந்தால் அந்த மர வேர் எல்லாம் ஆற்று வெள்ளத்தில் மூழ்கியிருக்கும்; வளைந்து தாழ்ந்திருந்த மரக்கிளை ஓடும் நீரை அணைத்த வண்ணமிருக்கும். ஆற்று வெள்ளத்திலே மிதந்து வரும் வண்ணப்பூக்களும் செடிகளும் கொடிகளும் மரக்கிளையின் மீது படியும்.

"கோதாவரியையும் கிருஷ்ணாவையும் மற்றும் பிரம்மாண்டமான பல நதிகளையும் பார்த்தோமே, காஞ்சனா! அவற்றைப் பார்க்கும்போது ஒருபுறம் பயங்கரமாகவும் மற்றொருபுறம் இன்பமாகவும் இருந்தது. இந்த ஆற்றிலோ..."

"இங்கும் அப்படித்தான். அதோ பார். அந்தக் கரையிலே தெரியும் பகையரசர்களின் கூடாரங்களை; அணிவகுத்து நிற்கும் படை வீரர்களை... அந்தத் தோற்றம் பயங்கரமாக இல்லையா?



இராஷ்டிரகூட இளவரசியும் அவளது பணிப் பெண்ணும் தன்னந் தனியே பகையரச வீரர்கள் நடமாடும் இடத்தில் அமர்ந்திருந்தால் ஆபத்து நேராது என்பது என்ன நிச்சயம்? அதை நினைக்கும்போது பயங்கரமாக இல்லையா?" என்று காஞ்சனா கூறவும் "ஆபத்து நேராது என்பது நிச்சயம்தான்..." என்று ரேவா அழுத்தந்திருத்தமாகக் கூறி, அதைக் கேட்டுத் திகைத்த காஞ்சனாவை நோக்கி, "காஞ்சனா! தமிழகத்தைப் பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். சிறு வயதிலே எனக்குக் கல்வி கற்பிக்க அமர்த்தப்பட்ட ஆசான் காஞ்சி நகரத்தைச் சேர்ந்தவர். அவருக்குச் சகல சாஸ்திரங்களும் தெரியும். அவர் சுற்றாத நாடில்லையாம். அவர் கூறியிருக்கிறார் தமிழகத்தைப் பற்றி. தமிழகத்துச் சிறந்த நகரமான காஞ்சி நகரைப் பற்றி. நம்மைத் தாக்க வேண்டும் என்ற எண்ணம் பல்லவர்களுக்கு இருந்திருக்குமென்றால் நேற்று நாம் அயர்ந்திருக்கும்போது தாக்கியிருக்கலாம். இப்போதும் நம்மை விரட்டித் துரத்தியடித்துப் போரிடும் எண்ணம் அவர்களுக்கு இருக்குமென்றால் கூடாரங்களை இன்னும் பிரிக்காமல் வைத்திருக்க மாட்டார்கள்" ரேவா கூறிக் கொண்டே போகும்போது காஞ்சனா இடைமறித்து, "தேவியாரே! அவர்கள் இப்போது தாக்கினாலும் நாம் எதிர்ப்பது இந்தச் சமயம் சரியன்று என நான் எண்ணுகிறேன். எந்தப் பட்டத்து உரிமைச் சண்டையில் தலையிட நம் அரசர் ஒப்புக் கொண்டு காஞ்சியை நோக்கி வரச் சம்மதித்தாரோ அதே போன்று பட்டத்து உரிமைச் சண்டை நம் நாட்டிலும் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றுகின்றனவாம். நம் எல்லைக்கருகே சாளுக்கியர்கள் படை திரட்டுவதாக ஒற்றர்கள் சற்று முன்புதான் விரைந்து வந்து செய்தி கூறினார்கள். இந்த நிலையில் படைகளைத் தெற்கே வெகு தொலைவில் நிற்கவைக்க உங்கள் தந்தை ஒருபோதும் ஒப்ப மாட்டார். உடனே நாம் இங்கிருந்து ஊருக்கு விரைந்து செல்லும் நிலை ஏற்படலாம். ஆனால் காஞ்சியைக் காணும் உங்களுடைய ஆசையை நினைக்கும்போதுதான் எனக்கு வேதனையாயிருக்கிறது" என்று காஞ்சனா கூறினாள்.

காஞ்சனாவின் அரசியல் அறிவையும், சகல விஷயங்களையும் அறிந்திருக்கும் ஆற்றலையும் கண்டு ரேவா தேவி வியந்து

போயினும் காஞ்சியைப் பற்றி அவள் கூறியதைக் கேட்டபோது மிகுந்த ஆத்திரத்துடன், "காஞ்சனா! என் காஞ்சி ஆசையைத் தடுக்க எவராலும் இயலாது. என் தந்தை வராவிட்டாலும் படைகள் பின் தொடராவிட்டாலும், நீயும் கூட என்னை விட்டுப் பிரிந்தாலும் நான் தன்னந் தனியே நடந்தோ, உருண்டோ, காஞ்சியை அடைந்து அந்த நகரத்து மாட மாளிகைகளையும், சுவர்ண கலசம் பதித்த கோபுரங்களையும், சிற்ப அற்புதங்கள் நிறைந்த கோயில்களையும், வேத சாஸ்திரம் கற்பிக்கும் கடிகைகளையும், பற்பல நாட்டினின்று வந்து கொழித்திருக்கும் ஆடை ஆபரணக் குவியல் நிறைந்த அங்காடிகளையும், இசை வளரும் வீதிகளையும், நடனமாடும் அரம்பையர் போன்ற அழகிகளையும் ஒருமுறை பார்த்து விட்டாவது இறந்து போவேன், நிச்சயம்" என்றாள். பேச்சிலே ஆத்திரம் குறைந்து ஏக்கம் மிஞ்சியதால் நெஞ்சு அடைத்தது. கண்களில் நீர் மல்கியது.

காஞ்சனாவுக்கு ரேவாவின் உணர்ச்சிமிகுந்த பேச்சு சிரிப்பை வரவழைத்தது. எனினும் மிகுந்த சிரமத்துடன் அதை அடக்கிக் கொண்டு, "தேவி! என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய உள்ளம் எனக்குத் தெரியாதா? படைகள் வராமல், போர் நிகழாமல் பக்தர்கள் பாத யாத்திரையாகச் சென்று புண்ணியத் தலங்களைக் கண்டு களிப்பது போன்று நாம் பெரும் நகரங்களைப் பார்க்கலாம். இளவரசியாகவும் மகா சாம்ராஜ்யத்து ராணியாகவும் நாம் செல்லக்கூடாது. சாதாரணக் குடிமகளைப் போல் செல்வதிலுள்ள இன்பம் இந்த அரச உடையிலும் ஆடம்பரத்திலும் இல்லை தேவியாரே!" என்றாள்.

ரேவாவிடம் நீண்ட மூச்செழுந்தது.

"காஞ்சனா! எனக்கே ஒன்றும் புரியவில்லை. சொந்த ஊரைவிட்டு வெகு தொலைவு வந்துவிட்டோம். புறப்படும்போது இருந்த உற்சாகம் எனக்கு வழியிலேயே குறைந்து விட்டது. ஆனாலும் இதயத்தின் அடித்தளத்திலிருந்து சதா என்னை உந்திக் கொண்டிருக்கும் ஆசையே என்னை இவ்வளவு பொறுமையுடன் இருக்கச் செய்திருக்கிறது. காஞ்சியை அடைவதே தந்தையின் நோக்கமாக இருந்தாலும் போர் முழக்கமின்றி அவர் செல்ல



மாட்டார் போலிருக்கிறது. அடுத்த விநாடி என்ன நடக்கப் போகிறது என்றே எனக்குத் தெரியவில்லை..."

ரேவா இதைக் கூறி முடிக்கவில்லை. பல்லவப் பகுதியினின்று தாரை தப்பட்டைகளின் ஓசையும் சங்கநாதமும் எழுந்தன. ரேவாவும் காஞ்சனாவும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். வட பெண்ணையாற்றைக் கடந்து மூன்று குதிரைகள் சென்று கொண்டிருந்தன. பல்லவக் கொடி ஏந்திய அந்த வீரர்கள் - உதயசந்திரனும் குணதேவனும் சாதாரணப் போர் வீரனின் வடிவிலிருந்த நந்திவர்மனுந்தான்.

அவர்கள் வந்த வேலை எப்படி முடிந்ததோ? பேச்சு முறிந்திருந்தால்? அவர்கள் திரும்பிச் சென்றவுடன் படைகளை ஒரே நொடியில் நம் படைகள் மீது ஏவி விடலாம். குதிரைகள் வீறு கொண்டு பாய்ந்து வரும். யானைகள் பிளிறிக் கொண்டு கூர்மையான தந்தங்களுடன் எதிரியின் மார்பைப் பிளக்க ஓடிவரும். கதிரவனின் பொற்கதிர்களால் பளபளக்கும் வேல்களையும் வாள்களையும் தாங்கிப் பல்லவ வீரர்கள் ஓடி வருவார்கள். அந்த இரு பெண்களும் ஒற்றையடிப் பாதையைத் தாண்டிக் கூடாரத்தை அடையும் முன்பே பகை வீரர்கள் அவர்களைச் சூழ்ந்து விடுவர். தமிழகத்து வீரர்கள் நல்லவர்களா, தீயவர்களா என்பது அப்போது தெரிந்து விடும். பெண்ணினத்துப் பூங்கொடிகள் என்பதையும் அறியாமல் 'கதறக் கதற' அவர் களைத் தூக்கிச் செல்வார்கள். கதறல் வெளியே கேட்காதிருக்க அவர்கள் வாயையும் கட்டி விடலாம். இராஷ்டிரகூடப் படைகளின் மத்தியில் புகுந்து ரத்த ஆறு ஓடுமாறு செய்யலாம்...

திடீரென ஏற்பட்ட இந்த எண்ணமும் உணர்ச்சியும் ரேவாவின் கண்களை இருளச் செய்தன.

"ஐயோ" என்று அவள் கூவி காஞ்சனாவின் மடியில் சாய்ந்தாள்.

"தேவி, தேவி! என்ன நேர்ந்து விட்டது?" என்று கேட்டு மடியில் தாங்கினாள் காஞ்சனா. காஞ்சனாவின் வாயிலிருந்து வார்த்தை அதற்கு மேல் எழவில்லை.

படைத் தலைவர் திரும்பி வந்துவிட்டதையறிந்த பல்லவ வீரர்கள் தங்கள் பாசறையில் வாத்தியங்களை முழக்கினார்கள்.

ஆற்றைக் கடந்து அவர்கள் வந்து கொண்டிருக்கும்போது உதயசந்திரனைத் தொடர்ந்து வந்த அந்த இளம் வீரன் கேட்டான்:

"உதயசந்திரரே! நீங்களும் அரசர் வைரமேகனும் என்ன பேசிக் கொண்டீர்கள் என்பதை நான் அறியலாமா?"

குணதேவன் திடுக்கிட்டான். அந்த வீரனை அவன் இதற்கு முன் கண்டதேயில்லை. பல்லவ சாம்ராஜ்யத்தின் எந்த மூலையிலிருந்தாவது அந்த வீரன் வந்திருக்கலாம். தன்னைப் போன்று அந்த வீரனையும் சேனைத் தலைவர் மதித்து அந்தரங்க வீரனாகச் சேர்த்துக் கொண்டிருக்கலாம். அந்த வீரன் எப்பேர்ப்பட்ட திறமைசாலியாக சேனாதிபதியால் மதிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டாலும் இப்படித் தலைவரின் பெயரைச் சொல்லி அழைப்பது எவ்வளவு மதியீனமானது? போர் வீர சம்பிரதாயத்திற்கு முரணானது. அதுதான் போகட்டும். கூடாரத்தில் நடந்த பேச்சு வார்த்தையைச் சேனைத் தலைவரே அவசியமிருப்பின் தெரிவிப்பார். அவர் தெரிவிக்காதபோது நாம் கேட்பது எத்தகைய அதிகப் பிரசங்கித்தனம்! குணதேவன் இதை எண்ணும்போது புதிய வீரன் மீது அவனுக்கு கோபங் கோபமாக வந்தது.

"என்ன உதயசந்திரரே! மௌனமாக வருகிறீர்கள்? உங்களுக்குப் பிராகிருதம் தெரியுமென்பது எனக்குத் தெரியாதே! காஞ்சியிலுள்ள கடிகையில் சேர்ந்து படிக்க வேண்டும் என்னும் எண்ணம் எனக்கு இப்போது தோன்றுகிறது. போர்வீரனாக இருப்பதில் என்ன நன்மை? எதிராளி பேசுவதை அறிய முடியாமல் ஊமைபோல் இருப்பது அவமானமாக இருக்கிறது" - அந்த இளம் வீரன் தொடர்ந்தான்.

குணதேவன் உதட்டைக் கடித்துக் கொண்டான். புதிய வீரன் போக்கு அவனுக்குத் துளிக்கூடப் பிடிக்கவில்லை. அவன் கைகள் கத்தியைத் தடவின. ஒழுங்கீனம் என்றால் உடனே சீறியெழும்



தலைவர் இளம் வீரனின் கேள்விக்கு மௌனம் சாதிப்பது அவனுக்கு ஆச்சர்யமாயிருந்தபடியால், தன் கோபத்தை அவன் அடக்கிக் கொண்டான்.

"இராஷ்டிரகூட மன்னர் தம் குடும்பத்தாருடன் வந்திருக்கிறார் போலிருக்கிறதே. நான் நினைக்கிறேன், அவர் தம் நாட்டு மக்கள் அனைவரையும் உடன் அழைத்து வந்திருப்பார் என்று!" - இளம் வீரன் உதயசந்திரனைப் பார்த்துக் கேட்டபோது குணதேவன் நகைச்சுவையை ரசிக்காமல் ஏதோ கடிந்து கூற வாயெடுத்தான். இளம் வீரன் தன் நிலை மறந்து பேசுகிறான் என எண்ணினான். இளம் வீரனின் ஒழுங்கீனத்தை அப்படியே விட்டால் படைகள் முழுவதிலுமே மரியாதை குறையும். அதை முதலிலேயே கிள்ளி எறிய வேண்டும் என முடிவு செய்தான். அவன் கைகள் உடைவாளிருக்குமிடம் சென்றன. அப்போது உதயசந்திரன், குணதேவன் பக்கமாகத் திரும்பி "குணதேவா! நீ உடனே இங்கிருந்து காஞ்சிக்குப் புறப்பட வேண்டும். உன்னுடன் முந்நூறு வீரர்களை அழைத்துக் கொள். திருவொற்றியூரிலிருந்து செல்லும் பெருஞ் சாலை வழியாகச் செல்லாமல் குறுக்கு வழியாகச் சென்று காஞ்சியின் கிழக்கு வாயிலை அடைய வேண்டும். இங்கு இரட்டர்களிடம் சிக்கியதுபோல் அங்கும் சிக்கினால் எந்த வைத்தியராலும் வந்து உன்னைத் தப்ப வைக்க முடியாது. ஒரு கணமும் தாமதிக்காமல் விரைந்து செல்" என்று கட்டளையிட்டான்.

அப்போது இளம் வீரன் உதயசந்திரனை நோக்கி, "ஆமாம். இரட்டர்கள் பாசறைக்குள் அந்த வைத்தியர் எப்படி நுழைந்தார்? இந்த வீரனை அவர்கள் கொல்லாமல் விட்டதே ஆச்சர்யமாயிருக்கிறதே" என்று கேட்டான். "அதுவா? அது அரசாங்க ரகசியம்!" என்று உதயசந்திரன் கூறியபோது குணதேவனும் கோபமான குரலில், "ஆமாம்; ஆமாம் அது அரச ரகசியம். சாதாரண வீரனுக்குத் தேவையற்ற விஷயம்" என்று கூறினான். உதயசந்திரன், குணதேவன் அருகே வந்து, "குணதேவா! ஒரு விநாடி கூடத் தாமதிக்கக்கூடாது. தாமரைப்பாடிக்குப் போய் விடாதே. நான் வரும் வரையில் கிழக்கு வாயில் காவலை ஏற்றுக் கொண்டிரு" என்று கூறினான்.

குணதேவனுடைய கோபம் ஒரு நொடியில் பறந்தது. முகத்தில் வெட்க ரேகைகள் படர்ந்தன. தாமரைப்பாடி என்றவுடன் அவன் இதயத்தில் புதுவிதக் கிளுகிளுப்புத் தோன்றியது. குதிரையைத் தட்டிவிட்டுப் படை வீரர்களைத் தேர்ந்தெடுக்க விரைந்தான்.

இளம் வீரன் மௌனமாயிருக்கவில்லை. "திருவலத்து வீரரே! உமது கட்டளைகளையும் உமது மௌனத்தையும் பார்த்தால் 'போர்' காஞ்சியை நோக்கி விரைகிறது என்று கூறும்" என்று ஆவலுடன் கேட்கவும் உதயசந்திரன் இளம் வீரனைப் பார்த்து, "அரசிளம் வீரரே! பயங்கரமான போரொன்று நடக்கப் போகிறது. பல்லவ வீரர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முந்நூறு வீரர்கள் காஞ்சிமா நகரை விரோதிகளிடமிருந்து காப்பாற்றப் போகிறார்கள்" என்றான்.

திகைப்படைந்த அந்த இளம் வீரன், "முந்நூறு பேர் மட்டுமா? ஆச்சர்யமாயிருக்கிறதே சேனாதிபதியாரே! தவறாகக் கணக்கிடுகிறீர். கடல் போன்ற இரட்டர்களை இந்தச் சிறுவன் குணதேவன் தலைமையில் முந்நூறு பேர் தடுத்து விடுவார்களோ?" என்று கேட்டவுடன் உதயசந்திரன் கலகலவென நகைத்து, "இரட்டர்களின் ஆபத்தைத் தடுக்கத்தான் நீங்கள் இருக்கிறீர்களே. இதைவிடப் பெரிய ஆபத்து காஞ்சியை நோக்கி வரப் போகிறது. சிறிது தாமதத்தாலும் காஞ்சிக்குப் பெரும் ஆபத்து நேர்ந்துவிடும். காடக முத்தரையர் ஒருவரே காஞ்சியை நோக்கி ஆபத்து வராமல் காப்பாற்றி விடுவார். அவரையும் மிஞ்சினால் குணதேவனின் தோள் வலிமை காப்பாற்றி விடும்" என்றான்.

காஞ்சியை நோக்கி வரும் பகைவர் எவராக இருப்பர் என நந்திவர்மன் யோசிக்கலானார்.

காஞ்சனாவின் உபசரணையால் ரேவாவின் மயக்கம் தெளிந்தது.

"தேவியாரே! ஏன் திடீரென மூர்ச்சையடைந்தீர்கள்? உடம்பு என்ன செய்கிறது?" என்று பரபரப்புடன் கேட்டாள். ரேவா ஒன்றும்



பேசாமல் எழுந்து, "காஞ்சனா! இனி இங்கிருக்கக் கூடாது; கூடாரம் நோக்கிப் போவோம் வா" என்று கூறி வேகமாக நடக்கலானாள்.

கூடாரத்தில் வைரமேகனுடைய உத்தரவை எதிர்பார்த்துச் சேனைத் தலைவரும் மந்திரி மண்டலத்துப் பிரதானியும் நின்றனர்.

"தளகர்த்தரே! படைகளில் பாதிப் பேரை அழைத்துக் கொண்டு மான்யகேட நகரம் நோக்கி விரைந்து செல்லுங்கள். மீதிப் பேரை நானே அழைத்துக் காஞ்சியை நோக்கிச் செல்லுகிறேன். பல்லவப் படைகள் இங்கிருந்து அகன்றபின் அவர்களைத் தொடர்ந்து நாம் கிளம்புகிறோம்" என்று வைரமேகன் சிம்மக்குரலில் கட்டளையிட்டான்.

ரேவாவும் காஞ்சனாவும் அங்கு வருவதைக் கண்ட வைரமேகன், "குழந்தாய். நீயும் தலைநகருக்கு இவர்களுடன் திரும்பிச் சென்று விடேன்" என்று குறும்புச் சிரிப்புடன் கூறவும் ரேவா பிடிவாதமாகத் தலையை அசைத்தாள்.

காஞ்சிப் பயணம் நிச்சயம் எனும் களிப்பு ரேவா தேவியைச் சூழ்ந்தாலும் யுத்த எண்ணம் தந்தையைவிட்டு இன்னும் மாறவில்லையே எனும் கவலையும் அவளைச் சூழ்ந்தது.

## 8. பைரவன் புன்னகை

கடல் மல்லைத் துறைமுகத்தில் படகுகளிலிருந்து இறங்கிய போர்க்கலன்களை எடுத்துக்கொண்டு விரைந்தவர்களைத் தேடி வெகு தொலைவு சென்றும் காணாது கவலையுடன் திரும்பி வந்த காடக முத்தரையர் ஊரின் மேற்கு எல்லையிலிருந்த பூர்த்தியாகாத மண்டபத்திற்கு அருகே வந்து மேற்கொண்டு செய்வதறியாது நின்றுவிட்டார். தன்னுடன் இருந்த படை வீரர்களை மூன்று

பிரிவுகளாகப் பிரித்து முதல் பிரிவினரை நோக்கி, "நீங்கள் தென்திசையாகப் பாலாற்றின் முகத்துவாரம் வரையில் சென்று தேடுங்கள்" என்றும் இரண்டாவது பிரிவினரைப் பார்த்து, "நீங்கள் கடற்கரையோரமாக வடக்கே சிங்கக் குகை வரை தேடுங்கள்" என்றும் கூறிவிட்டு மூன்றாவது பிரிவினரைப் பார்த்து, "நீங்கள் கடல் மல்லையில் தனித்தனியே பிரிந்து சந்தேகமான நிலையில் காணப்படுவோரைத் தடுத்து நிறுத்துங்கள்" என்றும் கூறி பூர்த்தியாகாத மண்டபத்துக்கருகே இருந்த ஒற்றையடிப் பாதை வழியே சென்று அங்கிருந்த பெரும் பாறையின் மீது சாய்ந்தவாறு அமர்ந்தார். காடக முத்தரையர் திட்டம் எப்போதும் தவறியதில்லை. ஆனால், அன்று எப்படியோ ஏமாற்றம் நேர்ந்துவிட்டது. ஏமாற்றம் சாதாரண ஏமாற்றமன்று. காஞ்சியின் தலைவிதியே அந்த நொடியில்தான் இருந்தது. ஆயிரமாயிரம் வேல்களும் வாள்களும் விரோதிகளின் கரங்களில் சிக்குண்டதைத் தடுக்காதது, பரவி வரும் நெருப்பைப் பார்த்திருப்பது போலல்லவா?

காடக முத்தரையர் எதிரே நின்ற பூர்த்தியாகாத 'ரதம்' எனப்படும் ஒரே கல்லால் ஆக்கப்பட்ட மண்டபத்தை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தார். விரோதிகளின் கை ஓங்கி, காஞ்சி நகர் வீழ்ந்து இரட்டர்கள் ஆதிக்கம் ஏற்பட்டால் வளர்ந்து வரும் சாம்ராஜ்யம் இந்தப் பூர்த்தியாகாத மண்டபம் போன்றன்றோகாட்சியளிக்கும்? இதை நினைக்கும்போது முத்தரையர் மனத்தில் வேதனை பிறந்தது.

"பகைவர்களின் கையில் சிக்குவதற்காகவா நாம் இவ்வளவு சிரமப்பட்டோம்?" முத்தரையர் நெஞ்சு துடித்தது. பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது முத்தரையருக்குள்ள பற்றைப் போல் வேறொருவருக்குமே இருக்க முடியாது. மகேந்திர வர்மரும், மாமல்லரும், இராஜசிம்மரும் கட்டிக்காத்து வளர்த்த பல்லவப் பெருநாடு மேன்மேலும் சிறந்து வளப்பமாகத் திகழ வேண்டுமென்று முத்தரையர் கனவு கண்டு வந்தார். காஞ்சி நகரில் காடக முத்தரையருக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. நகரத்தார் எனப்படும் வணிகர்களும், கடிகையிலே வாழும்



அறிஞர்களும் முத்தரையரின் நேர்மையான சிறந்த குணங்களுக்காக மிகவும் அவரை மதித்தனர். சுவர்க்கஸ்தரான பரமேஸ்வர வர்மரும் காடக முத்தரையர்பால் மிக்க மதிப்பு வைத்திருந்தார். பரமேஸ்வர வர்மர் திருக்கழுக்குன்றத்து அரண்மனையில் இறந்த செய்தி கேட்டுத் திடுக்கிட்ட முத்தரையர் மறுநாளே உதயசந்திரனையும் அவனிதந்த போசரையும் சந்தித்துப் பேசினார்.

உதயசந்திரனும் காடக முத்தரையரும் வெகுநேரம் சிந்தித்தனர். பல்லவ சாம்ராஜ்யம் சிறக்க காரணகர்த்தரான சிம்ம விஷ்ணுவின் சகோதரர் பரம்பரையில் வந்த இரண்ய வர்மரே பல்லவ நாட்டின் அரச பதவியை சாம்ராஜ்யத்தை ஏற்க வேண்டுமென்று முடிவு செய்தனர்.

இரண்ய வர்மர் தம் முதுமைப் பிராயத்தின் காரணமாகப் பல்லவ சாம்ராஜ்யப் பொறுப்பை ஏற்கத் துணியவில்லை. உதயசந்திரனும் காடக முத்தரையரும் திறமைமிக்க இரண்ய வர்மரின் ஆலோசனையின் பேரிலேயே ஆட்சி நடத்த வேண்டும் என விரும்பினர். கோட்டத்துத் தலைவர்களும் மந்திரி மண்டலத்தாரும் மற்றும் அரசியல் உயர்தர அலுவலர்களும் கூடிய மந்திராலோசனை சபையில் இது குறித்துக் காடக முத்தரையர் பேசியபோது, சிறந்த அறிவாளியும் அனுபவம் நிறைந்தவருமான பல்லவ சாம்ராஜ்யத்தின் முதலமைச்சர் கேட்டார்:

"பரமேஸ்வர வர்மருடைய புதல்வன் சித்திரமாயன் இருக்கும்போது நாம் இரண்ய வர்மரைப் பட்டமேறுவது குறித்து வற்புறுத்திக் கேட்கலாமா?"

இதற்கு உதயசந்திரன் பதில் கூற எழுமுன்பே, காடக முத்தரையர் எழுந்து, "முதலமைச்சர் அவர்களுக்கே இதற்கு மறுமொழி கூறத் தெரியும் என்றாலும் சந்தேகம் எள்ளளவும் இருக்கக்கூடாது என்பதற்காகவே கேட்கிறார் போலும். பரமேஸ்வர வர்மர் இறக்கும்போது சித்திரமாயனைச் சிறிதும் விரும்பவில்லை என்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள். அவரது கடைசி எண்ணம் இரண்ய வர்மர் பேரிலேயே இருந்தது. மேலும்,

சித்திரமாயன் பரமேஸ்வர வர்மருடைய சொந்த மகன் அல்லன் என்பது தங்களுக்குத் தெரியாதா? பரமேஸ்வர வர்மர் இருக்கும்போதே சித்திரமாயன் தனக்கு இளவரசுப் பட்டம் கட்ட வேண்டும் என்று கிளர்ச்சி செய்ததோடன்றிச் சாளுக்கியர் களுடனும் கங்க அரசர்களுடனும் தொடர்பு கொண்டு தந்தையை வீழ்த்தச் சூழ்ச்சி செய்திருக்கிறானே! பட்டமேறியவுடன் நாட்டைக் காட்டிக் கொடுக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்?" என்று பேசவும் காடக முத்தரையருடைய கருத்தை எல்லாரும் ஆமோதித்தனர்.

காடக முத்தரையர் சித்திரமாயன் பட்டமேறுவதைத் தடை செய்தபின் தக்கவரை பட்டமேற்ற வேண்டிய பொறுப்பை அவரிடமே ஒப்படைத்தனர். காடக முத்தரையர் இரண்ய வர்மரிடம் எவ்வளவோ முறை தூது சென்று அவரது கடைசிப் புதல்வன் பரமேஸ்வரன் எனப்படும் பல்லவ மல்லனைப் பட்டத்தில் அமர்த்தச் சம்மதம் பெறப் படாத பாடுபட்டார்.

காடக முத்தரையர் அந்தச் சம்பவத்தை நினைத்துக் கொண்டார். நந்திவர்மனுக்கு முடி சூட்டுவதற்கு முதல்நாள் கூட சித்திரமாயன் பலத்த கலகம் செய்தான். அவனுடன் சேர்ந்து ஒத்துழைத்தவர்களையும் ஆதரவு தந்தவர்களையும் உதயசந்திரனுடன் சேர்ந்து முத்தரையர் முறியடித்தார்.

சித்திரமாயனுடைய நடவடிக்கைகள் தீர்ந்துவிட்டன; இனி நந்திவர்மனுக்கு ஆபத்தில்லை என எண்ணியபோதுதான் உதயசந்திரனிடமிருந்து சித்திரமாயனைப் பற்றிய செய்திகள் எட்டின. அவ்வப்போது சுந்தரனிடமிருந்து சதித்திட்ட விவரங்களை அறிந்து அவர்கள் சதியைத் தக்க தருணத்தில் முறியடித்து வந்தார்.

சித்திரமாயனுடைய ஆதரவாளர்களுக்கு வேண்டிய போர்க் கருவிகள் பல்லவபுரத்திலிருந்து வண்டியிலே சாலை வழியே வரும்; அதை மடக்கி அழித்து விடலாம் என்று எண்ணியவருக்குப் பல்லவபுரத்தினின்று சாலை வழியே வராமல் ஆயுதங்கள்



கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் கடல் மூலம் கள்ளத்தனமாகக் கடத்தப்பட்டு மாமல்லபுரத்தில் வந்திறங்குகின்றன எனும் செய்தி கிடைத்தது. படகிலிருந்து இறங்கும்போதே அவற்றைக் கைப்பற்றத் திட்டமிட்ட முத்தரையர் சில கணத் தாமதத்தால் ஏமாந்தார்.

அந்த ஏமாற்றம் அவரைச் சோர்வடையச் செய்தது. விபரீத விளைவுகள் அதனால் ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது என்ற எண்ணம் உடற்சோர்வை ஏற்படுத்தத் தள்ளாடியவண்ணம் பாறையின் ஓரமாக இருந்த ஒற்றையடிப் பாதை வழியே நடந்து சென்று எவரும் கவனிக்காத இடத்தில் சோர்வைப் போக்க அமர்ந்தார்.

'கிணிங் கிணிங்' என்ற மணி ஒலிக்க தொலைவில் இரண்டு காளை மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. காடக முத்தரையர் அதைக் கண்டார். எருதுகள் இங்கு மேயக் காரணமில்லையே எனும் எண்ணம் அவருக்குத் தோன்றியது. இன்னும் கூர்ந்து கவனித்தபோது வண்டிச் சக்கரம் பதிந்த சுவடும், வண்டியொன்று புதரைத் தாண்டி வந்ததால் வளர்ந்திருந்த புதர் நசுக்குண்டு கிடந்ததும் அவர் கண்களில் பட்டன.

எவரும் வராத இந்த இடத்தில் யாரோ வந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிந்தது.

அப்போது சட்டென யாரோ சிலர் பேசும் ஒலியும், ஆயுதங்கள் ஒன்றோடு ஒன்று உராய்வதால் எழும் லேசான ஓசையும் அவர் காதில் வீழ்ந்தன. முத்தரையர் திடுக்கிட்டார். நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். தான் அங்கிருப்பது தெரியாது இருக்க மறைவான இடத்திற்குப் போக எழுந்திருப்பதென்றாலும் அதனால் ஏற்படும் சலசலப்பு காரியத்தைக் கெடுத்து விடும்.

கருங்கண்ணனும் மற்றும் சிலரும் பேசிக் கொண்டிருந்தனர். கருங்கண்ணன் எல்லாருக்கும் கட்டளையிட்ட வண்ணமிருந்தார்.

"நீங்கள் எல்லாரும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அணிவகுத்துப் பகிரங்கமாகச் செல்ல முடியாது.

முன்பு அவ்வாறு திட்டமிட்டிருந்தோம். நம் எண்ணம் வெளியே எவருக்கும் தெரியாதிருந்தது. ஆனால், இப்போது திடீரென மாற்ற வேண்டி வருகிறது. நீங்கள் சாதாரணமாக உடையணிந்து காஞ்சியை நோக்கித் தனித்தனியே செல்லுங்கள். மூன்று தினங்களுக்குள் காஞ்சி நகரின் பல வாயில்களின் வழியாக உட்புகுந்து விடுங்கள். முக்கியமாகக் கிழக்குக் கோட்டை வாயிலில் வந்து எல்லாரும் கூடுங்கள். சித்திரமாய மகாராஜா அங்கு உங்களைச் சந்தித்து உத்தரவு வழங்குவார். நீங்கள் ஒவ்வொருவரும் பத்துப் பல்லவ வீரர்களையாவது கொல்ல வேண்டும். கோட்டைக் காவல்காரர்கள் ஆயிரம் பேருக்கு மேல் இருக்க மாட்டார்கள். இந்தத் திட்டம் வெளியே எவருக்கும் தெரியக்கூடாது. நம்மிடையே துரோகி எவரேனும் இருப்பதாக நான் அறிந்தால் அவர் தலை கொற்கைக்குப் பலியாவது நிச்சயம்" என்று ஆவேசத்துடன் கூவினான்.

காடக முத்தரையர் இதைக் கேட்டபோது திடுக்கிட்டார். அவர் ரத்தம் கொதித்தது. கருநாகத்தின் முட்டைகளைக் கண்ட பிறகும் அதை நசுக்காது தாமதிப்பது ஆபத்தான விளைவுகளை அளிக்கும் எனத் துள்ளி எழுந்தார். உருவிய கத்தியுடன் அங்கே பாய எத்தனித்தார் ஒருகணம். மறுகணம், இந்த மாபெரும் சதியை உதயசந்திரனுக்கு எட்டவிடாமல் அவர்களை எதிர்ப்பதில் பயனில்லை என்று மௌனமாயிருந்தார். மேலும் தொடர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்க விரும்பிப் பாறையில் முன் போலவே சென்றமர்ந்தார். மூச்சுவிடும் ஒலிகூடக் கேட்கக்கூடாது என்று மெல்ல மூச்சை விடலானார். கண்களை ஒருகணம் மூடினார். சதியின் பயங்கர விளைவுகள் அவருடைய அகக் கண்ணின் முன் தெரிந்தன. மறுகணம் கண்ணைத் திறந்தபோது காடக முத்தரையரின் மார்புக்கு நேராக நீட்டிய வேல்களுடன் பலர் சூழ்ந்து கொண்டனர். அந்தக் கணத்தில் முத்தரையர் ஓர் அங்குலம் அசைந்திருந்தால் பல வேல்கள் அவர் உடலில் பாய்ந்து நூற்றுக்கணக்கான புண்களை ஏற்படுத்தி உயிரைக் குடித்திருக்கும்.

உயிருக்கு முத்தரையர் அஞ்சவில்லை. உடலிலே ஏற்படும் யுத்த ரணத்திற்காக அவர் அஞ்சவில்லை. அவர் சுத்த வீரர்.



தன்னந்தனியே இருந்து பல பேருடனும் சண்டையிட்டுத் தன் வீரத்தை நிலை நாட்டலாம்; அந்தப் பரீட்சைக்கு இப்போது நேரமில்லை; முக்கியமுமன்று. கோழை என்று அவரை எவர் அழைத்தாலும் ஒன்றும் மூழ்கி விடாது. கருங்கண்ணனின் சதித் திட்டத்தை உதயசந்திரனுக்கு எப்படியாவது எட்ட விட்டுவிட்டு வீர சொர்க்கம் அடையச் சம்மதமே. சாம்ராஜ்யம் காப்பாற்றப்பட்டு அவர் வீர சொர்க்கம் அடைந்தாலும் பலனுண்டு. சதித் திட்டத்தை வெளிப்படுத்தாமல் சாவதில் யாருக்குப் பலன்'? முத்தரையர் ஒருகணம் குழம்பினார்.

"உம்; தயங்காதீர்கள். கரங்களையும், கால்களையும், கண்ணையும் கட்டி வண்டியிலே தூக்கிப் போடுங்கள். சித்திரமாய மகாராஜா வந்து நீதி வழங்குவார்" என்று கருங்கண்ணன் கட்டளையிட்டான். காடக முத்தரையர் ஒன்றுமே பேசவில்லை.

அதேநேரத்தில் பல்லவபுரத்தில் திண்ணையில் சுந்தரன் அமர்ந்து,

*'மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே'*

என்று குரலெடுத்துப் பாடிக் கொண்டிருந்தான்.

'சுந்தரா' என்ற குரல் கேட்டு அவன் திரும்பினான். அடர்ந்த தலை முடியுடனும் முகத்திலே வளர்ந்திருந்த தாடி மீசையுடனும் கையிலே கோலுடன் ஓர் உருவம் நின்று கொண்டிருந்தது. அவனை நெருங்கி, "சுந்தரா! மாடத்திலே நீ வைத்தாகக் கூறிய ஓலையைக் காணோமே" என்று மெல்லிய குரலில் அந்த உருவம் கூறியது.

சுந்தரன் துள்ளி எழுந்தான்.

"மாடத்தில் ஓலை இல்லையா? நான்தானே கொண்டு வைத்தேன்" என்று கூறியவன் சட்டென யோசித்து, "நான்

எண்ணியது சரியாகிவிட்டது. எவரோ என் நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறார்கள் என ஐயுற்றேன். அதனால் ஒன்றும் மூழ்கிப் போய்விடவில்லை. அந்த ஓலையினின்று ஒன்றும் அவர்களால் அறிய முடியாது. எனினும் என் பரீட்சை பலன் அளித்து விட்டது" என்று கூறினான்.

தாடிக்காரர், "அந்த ஓலையில் என்ன எழுதியிருந்தாய்?" என்று கேட்டார்.

*"பிணங்களிடு காடதனுள்*
*நடமாடு விஞ்ஞக னோடு*
*இணங்கு திருச் சக்கரத் தெம்*
*பெருமானார்க்கிடம் - போர்க்*
*கலன்கள் இயங்கும் மல்லைக்*
*கடல் மல்லைத் தலசயனம்*
*வணங்கு மனத்தாரை*
*வணங்கென்றன் மடநெஞ்சே!"*

என எழுதியிருந்தேன்.

"ஆகா! திருமங்கை மன்னரின் தீந்தமிழ்ப் பாசுரமல்லவா இது? இதில் அழகாக இடைச் செருகியிருக்கிறாயே. அவர்கள் புரிந்து கொள்வது கடினம்தான். ஆனால் அவர்களிடும் திட்டம் உன் மூலம் வெளிப்படுகிறது என்பதைப் புரிந்து கொண்டு விடுவார்கள். உன்னைத் தீர்த்துவிடவும் முடிவு செய்து விடலாம்" என்றார்.

அவர் அங்கிருந்து அகன்றவுடன் சுந்தரன் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தான். பல்லவபுரத்தில் இனி இருப்பதில் ஆபத்தே எனும் முடிவுக்கு வந்தான். மேலும் சித்திரமாயனுக்கும் பல்லவபுரத்தில் வேலையில்லை. ஆயுதங்கள் எல்லாவற்றையும் எடுத்துச் சென்ற பிறகு இனி பைரவனிடம் அவன் வர மாட்டான். ஆனால், கருங்கண்ணன் அப்படியல்லன். பைரவனை அடிக்கடி சந்திக்கிறான். அவனுக்குச் சந்திரமதியின் மீது ஒரு கண். இவ்வாறெல்லாம் எண்ணிய சுந்தரன் மனக் குழப்பத்தை வெளிக்குப் புலப்படுத்தாமல் தெளிவாக இருந்தான். சந்திரமதியிடமும் கலகலப்பாகப் பழகினான். அங்கிருந்து புறப்பட்டு விடுவதைப் பற்றி அவன் ஏதும் தெரிவிக்கவில்லை.



இரவு பைரவனும் சந்திரமதியும் அவன் கூறிய சைவப் பெரியார்களின் கதையைக் கேட்ட வண்ணமிருந்தனர்.

மறுநாள் பொழுது புலர்ந்தது. சந்திரமதி எழுந்து சுந்தரன் படுத்திருக்கும் தெருத் திண்ணையில் வந்து பார்த்தபோது சுந்தரனைக் காணவில்லை. அதற்குப் பதில் அங்கு ஓர் ஓலைச் சுருள் கிடந்தது. சந்திரமதி நடுங்கும் கரங்களுடன் அதை எடுத்துப் படித்தாள்.

"சந்திரமதி! நான் போகிறேன். இறையருள் கூட்டுவிக்குமானால் நிச்சயம் நாம் இருவரும் சந்திக்கலாம். கவலைப்படாதே! சுந்தரன்" என்று எழுதியிருந்தது.

"அப்பா!" என்றலறிக் கொண்டு சந்திரமதி உள்ளே ஓடினாள். பைரவன் திடுக்கிட்டுப் படுக்கையினின்று எழுந்தான்.

"அப்பா, சுந்தரன் எங்கேயோ போய் விட்டாரப்பா" என்று கூறிக் குழந்தைபோல் விம்மி விம்மி அழுதாள்.

பைரவன் சந்திரமதியைத் தேற்றியவாறு, "குழந்தாய், அழாதே! சுந்தரன் அறிவுடைச் செய்கையால் தப்பி விட்டான். அவன் இப்போது தப்பியிராவிடில் அவன் உயிருக்கே ஆபத்துதான்" என்றான்.

சந்திரமதி துக்கமும் ஆத்திரமும் கலந்த குரலில், "அவர் போன பிறகு நாம் மட்டும் இங்கு இருப்பதில் என்ன பயன் அப்பா? நாமும் எங்காவது ஓடிப் போய் விடுவோம்" எனக் கூறிய சந்திரமதியை ஒரு குரல் திடுக்கிடச் செய்தது.

கருங்கண்ணன் நின்று கொண்டிருந்தான். "உன் சுந்தரன் எங்கும் சென்று விடவில்லை. இதோ இருக்கிறான் பார்" என்று கூறிப் பயங்கரமாக நகைத்தான்.

பைரவனும் சந்திரமதியும் திடுக்கிட்டுத் திரும்பினர். வெளியே நின்றிருந்த கூண்டு வண்டிக்குள் சுந்தரனும் காடக முத்தரையரும் கயிற்றால் பலமாகக் கட்டப்பட்டுக் கிடந்தனர். அவர்கள் அருகே இரு முரடர்கள் காவல் காத்தனர்.

"பைரவா! இவர்களைப் பாதாளச் சிறையில் அடைக்கப் போகிறேன். அழைத்துப் போ! கண்கள் குருடாயிருக்கும்போதே சுந்தரன் யம வேலை செய்கிறான். அவனுக்குக் கண்கள் மட்டும் இருந்திருந்தால்... ஆனால் ஆயிரம் கண்களுடையவனாயிருந் தாலும் இந்தக் கருங்கண்ணனை ஒன்றும் செய்ய இயலாது. பல்லவக் குலக் காவலர் காடக முத்தரையரே எம் வலையில் சிக்கிவிட்டார். சுண்டைக்காய் சுந்தரன் எம்மாத்திரம்? பாதாளச் சிறையில் வாடி மடியட்டும். அவர்கள் ஆராதித்து வரும் நந்திவர்ம தெய்வம் வந்து அருள் பாலிக்கிறதா பார்ப்போம்!" என்று கூறிச் சந்திரமதியை நோக்கினான் கருங்கண்ணன். பைரவன் ஏதோ யோசித்தவண்ணம் நின்றான். கருங்கண்ணன் கட்டளையை அந்தச் சமயம் மீறினால் கூண்டோடு கைலாசம் அனுப்பி விடுவான் என்றறிந்த பைரவன் பாதாளச் சிறையை நோக்கிச் செல்ல எத்தனித்தபோது சந்திரமதி சீறியெழுந்தாள்.

"அப்பா! எங்குச் செல்கிறீர்கள்? நில்லுங்கள். மனமறிந்து செய்யும் துரோகம் அதிகநாள் பலிக்காது. சதிகாரர்களிடம் சிக்கி இந்தச் சாண் வயிறு வளர்ப்பதைவிட அவர்களை எதிர்த்துப் போரிட்டே மடியலாம். காடக முத்தரையரையும் சுந்தரனையும் கட்டிப் போட்டிருப்பதைப் பார்த்தும் நீங்கள் மௌனமாயிருப்பது உங்களுக்கு நியாயமா? அந்தக் கத்தியை என்னிடம் கொடுங்கள். கழுகுக் கண்களைக் கொண்டு காமவெறியுடன் பார்க்கும் கருங்கண்ணனின் உயிரை யமனுக்கு விருந்தாக்குகிறேன். நந்திவர்ம அரசரை ஒழிக்கத் தினம் தினம் திட்டமிடும் இந்தத் தூர்த்தனை வெட்டிக் கண்ட துண்டமாக்கிக் கழுகுக்குப் போடாமல் பார்த்துக் கொண்டு நிற்கிறீர்களே அப்பா! இன்று சுந்தரன். நாளை நீங்கள்" - சந்திரமதி வீர கர்ஜனையே புரிந்தாள்.

கருங்கண்ணான் நகைத்தான். அந்த நகைப்பு பயங்கரமாக இருந்தது.

"ஓ! மற்றுமொரு துரோகி இங்கிருக்கிறாயா பெண்ணே! வீணே நீ என்னை விரோதித்துக் கொள்ளாதே. உன்னைப் பெரிய அந்தஸ்தில் அமர்த்திச் சகல சுகபோகங்களுடன் உன்னை வாழ்விக்கத் திட்டமிட்டிருந்த என் எண்ணத்தை மாய்க்காதே" -



கருங்கண்ணன் பேசிக் கொண்டே போகும்போது சந்திரமதி சீறி, "சீ! தூர்த்தனே" என்று கூவினாள்.

கருங்கண்ணன், "இவளையும் சேர்த்துப் பாதாளச் சிறையில் தள்ளுங்கள்" என்று கட்டளையிட்டான்.

பைரவன் புன்னகையுடன் கருங்கண்ணனின் கட்டளையை நிறைவேற்றத் துணிந்தான்.

அந்தப் புன்னகைக்குள் பூ நாகத்தின் விஷம் புதைந்திருப்பது கருங்கண்ணனுக்கு எப்படித் தெரியும்?

## 9. யாத்திரிகர் தலைவன்

தாமரைப்பாடியின் குளக்கரையில் முன் போல் குதூகலமும் களிப்பும் கும்மாளமும் இல்லை. வளையல் குலுங்கும் ஒலியும் முத்து நகை ஒலியும் பவழ அதரங்களிலிருந்து வரும் பேச்சின் ஒலியும் அந்தப் பகுதியில் கேட்டு வெகு நாள்களாகி விட்டன. மெல்லியலார்களின் தேன்மொழியைக் கேட்காததால் பசுமையான கொடிகளும் செடிகளும் வாட்டமுற்றிருந்தன. தொலைவிலே இருந்து ஒலித்துக் கொண்டிருந்த ஆலய மணியோசையிலும் கூட பழைய 'கணீ'ரென்ற நாதத்தைக் காணோம்.

இந்த மாறுதல் எல்லாம் குமுதவல்லியால்தான் என்பது அந்தத் தாமரைப் பாடியிலுள்ள ஒவ்வொரு ஜீவனுக்கும் தெரியும். தெரிந்து அவர்கள் என்ன செய்ய முடியும்? குமுதவல்லியின் துயரத்தை ஆறுதல் மொழிகளால் துடைக்க முடியவில்லையே! அவள் மனத்துயர் தீர்க்கும் மருந்து தாமரைப்பாடியினின்று வெகு தொலைவிலன்றோ இருக்கிறது?

தொலைவு - தூரம் என்பது குமுதவல்லியின் மனக் கண்களுக்குக் காதம் - யோசனை - கணக்கில் இப்போது இல்லை. அளக்க முடியா அளவுக்கு அது விரிந்து கிடப்பதாக ஒரு பிரமை.

பிரமை மட்டுமா? உண்மையென்று அவள் நம்பும்படியாக அறிந்தவர்கள் அந்தச் செய்தியை அவள் காதுபடச் சொல்கிறார்களே.

யாருக்காக அவள் வளர்ந்து வாழ்கிறாளோ, யாருடன் இன்பத் தோணியில் மிதந்து செல்ல நினைக்கிறாளோ அவருக்கு நேர்ந்ததை அறியும்போது தனக்கும் அவருக்கும் உள்ள பிரிவு அளக்க முடியாத, அடைய முடியாத அளவுக்கு இருக்கிறது என்பது அவளுக்கு எளிதில் புலப்பட்டது.

"நாட்டின் தலைவிதியே உன் அத்தானிடம் இருக்கிறது... குளிர்ந்த முகத்துடன் விடை கொடு" என்று உதயசந்திரனே குமுதவல்லியிடம் அன்று கேட்டதால்தான் குமுதவல்லி பிரிவைச் சகித்துக் கொண்டாள். வெடித்து விடும் இதய வேதனையை நாட்டின் நலனுக்காகப் பொறுத்துக் கொண்டாள். ஆனால், பிரிவையும் அடக்கிய வேதனையையும் எத்தனை காலம் தாங்க முடியும்? குணதேவன் இன்று திரும்புவான்; நாளை திரும்புவான் என்று ஒவ்வொரு நாளும் அவள் உத்தரமேரூரிலிருந்து வரும் வழி மேல் விழி வைத்துப் பார்த்துப் பார்த்து நின்றாள். அவள் கண்கள் ஒளியிழந்தன. நின்று நின்று கால்கள் தளர்ந்தன. குதிரையின் குளம்படியோசையைக் கேட்டால் குமுதவல்லி என்ன பணியாயிருந்தாலும் போட்டு விட்டு விரைந்து வந்து பார்ப்பாள். ஏமாற்றம் அவள் வேதனையை வளர்க்கும்.

குதிரையின் குளம்பொலி வெகு அருகில் அன்று கேட்டது. குமுதவல்லி வாயிற் கதவருகே வந்தாள் ஆவலுடன். ஆனால் குதிரையினின்று குணதேவன் இறங்கவில்லை. பெரியநம்பி கீழே குதித்தான். அசட்டுச் சிரிப்பு முகத்தில் கூத்தாட அவன் படியேறினான்.

"தந்தை இருக்கிறாரா?" என்று வினவிய வண்ணம் குமுதவல்லியின் மறுமொழிக்குக் காத்திராமல் உள்ளே சென்றான்.

குமுதவல்லியின் தந்தை கந்ததேவன் பெரியநம்பியுடன் பேச எப்போதுமே விரும்புவார். ஊர் வம்புகளையும் வெகு



தொலைவுக்கு வெகு தொலைவு நடக்கும் சம்பவங்களையும் அரசாங்க விஷயங்களையும் பெரியநம்பி மணிக்கணக்காகப் பேசுவான். முதுமைப் பருவத்தில் கந்ததேவனுக்கு வெளியுலகத்து நிகழ்ச்சிகளைக் கேட்பதில் தனி மகிழ்ச்சி.

நாட்டில் நடப்பதைப் பெரியநம்பி கூறும்போது கந்ததேவன் தன்னுடைய இளமைக் காலத்தை எண்ணி அதன் பெருமையை எடுத்துக் கூறி, இப்போது நடப்பதிலுள்ளவற்றைக் குறை கூறித் திருப்திப்படுவது அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது.

இடையே பெரியநம்பி தாமரைப்பாடியினின்று வெளியே பல இடங்களுக்குச் சென்று திரும்பிய பிறகு கந்ததேவன் நடந்த நிகழ்ச்சிகளைக் கேட்க ஆசை கொண்டார்.

பெரியநம்பி சித்திரமாயனுக்கு உதவி செய்வது கந்ததேவனுக்குத் தெரியாது. அதற்காகப் பல இடங்களைப் பெரியநம்பி சுற்றி வந்த விஷயமும் அவருக்குத் தெரியாது. பெரியநம்பி முகத்தில் பரபரப்பை வரவழைத்துக் கொண்டு "ஐயா! ஐயா உங்களுக்குத் தெரியுமா? காஞ்சி மாநகருக்குப் பெரும் ஆபத்து நெருங்குகிறது" என்று கூறினான்.

கந்ததேவன் நிமிர்ந்து உட்கார்ந்தார். குமுதவல்லிக்கு எப்போதுமே பெரியநம்பியின் கள்ளத்தனம் நிறைந்த முகத்தைக் கண்டாலே பிடிக்காது. பசி, தாகம் என்ற நினைப்பே கொள்ளாமல் பேச்சுச் சுவையில் தந்தையை அமிழ்த்தப் பெரியநம்பி வருகிறான் என்றால் குமுதவல்லி பட்டென்று கதவை மூடிவிடுவாள்.

"ஆபத்தா?" - கந்ததேவன் வியப்புடன் கேட்டார். "மறுபடியும் சாளுக்கியர்கள் படையெடுப்பா? இல்லை... பட்டமேறும் ஆசையால் சித்திரமாயன் செய்யும் கலவரமா? என்ன ஆபத்து?" - கந்ததேவன் குரலில் ஏளனம் நிறைந்திருந்ததா அல்லது முழுச் செய்தியையும் அறியும் ஆவல் நிறைந்திருந்ததா என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

பெரியநம்பி குரல் வேற்றுமையைப் பாராட்டாமல், "சாளுக்கிய நாட்டைப் போன்ற, மற்றொரு புதிய சாம்ராஜ்யம் உதயமாகி

யிருக்கிறது. அவர்கள் காஞ்சியை நோக்கி விரைந்து வருகிறார்கள்" என்றான்.

"அவர்களைத் தடுத்து நிறுத்த உதயசந்திரன் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லையா?"

"உதயசந்திரனா?" - பெரியநம்பி கடகடவென்று நகைத்தான், "உதயசந்திரனா? அவர்தான் குணதேவனை வடக்கே அனுப்பியிருக்கிறாரே. இராஷ்டிரகூடர்களிடம் ஒப்பந்தம் பேசிச் சமாதானப்படுத்திப் படையெடுப்பைத் தடுக்க முயன்றிருக்கிறார். ஆனால், குணதேவன் நிலையை நினைக்கும் போதுதான் வருத்தமாயிருக்கிறது."

குமுதவல்லி திடுக்கிட்டாள். குணதேவனுக்கு என்ன நேர்ந்தது? பெரியநம்பி மேலே சொல்லப் போகும் வார்த்தை என்னவாயிருக்குமென்று அறியத் துடித்தாள்.

கந்ததேவனும் பரபரப்புடன், "குணதேவனைப் பற்றி ஏதாவது செய்தி வந்ததா? வந்ததும் வராததுமாக, உடனே கிளம்பிப் போய்விட்டானே அவன். குலத்துக்கே ஒரே மகன். அவன் கவலைதான் என்னை இப்போது வாட்டுகிறது..." என்றார். அவர் குரலில் நடுக்கமும் சோகமும் நிறைந்திருந்தன.

"நம் ஊர்ப் பிள்ளையாயிற்றே என்று கஷ்டப்பட்டு அவனைப் பற்றி விசாரித்தேன். படைகளின் ரகசியம் அறிவது அவ்வளவு சுலபமில்லையே. எனினும் எப்படியோ அறிந்தேன்."

பெரியநம்பி சுற்றி வளைத்துப் பேசுவது குமுதவல்லியின் பரபரப்பை அதிகப்படுத்தியது. 'மேலே என்ன நேர்ந்தது, என் தேவனுக்கு என்ன நேர்ந்தது? சொல்லுங்கள், சொல்லுங்கள்!' என்று குமுதவல்லி கேட்கத் துடிதுடித்தாள்.

பெரியநம்பி தொடர்ந்து, "வடக்கே ஓலை எடுத்துச் சென்ற குணதேவனை இராஷ்டிரகூடர்களின் படைகள் சிறைப்படுத்தின. அவர்களது காவலில்தான் இன்னும் குணதேவன் இருக்கிறான். அத்துடனில்லாமல் குணதேவன் அவர்கள் பக்கமே சேர்ந்துவிடக் கூடும்" என்று கூறி பெரியநம்பி சிறிது நிறுத்தி நாலாபுறமும்



பார்த்துப் பேசுவது போல் மெல்லிய குரலில், "இரட்டர்கள் குலப் பெண் ஒருத்தியை அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்து, அவனுக்கு இரட்டர்கள் படையில் முக்கிய பதவியளித்துப் பல்லவ நாட்டை அடிமைப்படுத்த அவனைப் பயன்படுத்தப் போகிறார்கள்..." என்றான் பெரியநம்பி.

குமுதவல்லி அவர்கள் பேசும் இடத்துக்கு வந்தாள். சீற்றத்துடன், "அப்பா! பேசுவதை உடனே இவரை நிறுத்தச் சொல்லுங்கள். தங்கள் மருமகனைப் பற்றி இவர் ஏதும் கூற வேண்டாம். அவர் நலனை நாமே கேட்டு அறிந்து கொள்ளலாம்" என்று கோபமும், காதலனைப் பற்றிய அபாண்ட வார்த்தையால் ஆத்திரமும் கொண்டு பேசினாள். பெரியநம்பி எதிர்பாராத இந்தத் தாக்குதல் கண்டு திடுக்கிட்டான். தான் எண்ணி வந்த காரியத்தில் பூர்வ பீடிகைகளின் போதே எதிர்ப்பு உருவானது அவனுக்கு அதிர்ச்சியை அளித்தது. கந்ததேவன் ஏதும் பேசவில்லை. பெரியநம்பியை அந்த இடத்தை விட்டுக் புறப்படுமாறு கட்டளையிடவோ, பேச்சை நிறுத்தச் சொல்லவோ அவருக்கு விருப்பம் இல்லை. ஆனால், மகளது விருப்பத்தையும் மீற முடியாது. மவுனம்தான் நிலைமையைச் சரி செய்யும் என்று அமைதியாக இருந்தார்.

பெரியநம்பி ஆந்தையைப் போல் விழித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டுக் கிளம்பினான். குதிரை புறப்பட்டுச் செல்லும் ஒலி கேட்ட பிறகு குமுதவல்லி துயரம் நிறைந்த குரலில், "அப்பா! இவர் சொன்ன செய்தியை முன்பே கேள்விப்பட்டேன். என்ன செய்வது எனத் தெரியாமல் திகைத்தேன். உங்கள் மருமகன் இந்த நாட்டைக் காப்பாற்றும் வீரனாகத் திகழப் போகிறாரென்று கனவு கண்டு வந்தேன். நாட்டின் பெரிய சேனாதிபதி மெச்சிப் புகழும் வீரனின் மனைவியாக நான் ஆகலாம் என எண்ணக் கோட்டைக் கட்டினேனப்பா! ஆனால், அவர் எதிரியிடம் சிக்குண்டவுடன் தப்பி வர முயன்றிருக்க வேண்டும். இல்லாவிடில் உயிரையாவது மாய்த்துக் கொண்டிருக்க வேண்டும். நாட்டுக்கு விரோதமாக எதிரியுடன் சேர்வதைவிட அவர் சாவது உசிதமல்லவா? ஆனால், அவர் எதிரிகளின் வலையில் சிக்கித்

துரோகியாக மாறியிருப்பார் என்று எனக்குத் தோன்றவில்லை. ஒருயோசனை எனக்குத் தோன்றுகிறது. காஞ்சிக்குப் போவோம். கோட்டைக் காவலர் திருநாராயணன் பல காலமாக நம்மைத் தம் வீட்டிற்கு வருமாறு அழைக்கிறார். காஞ்சி சென்றால் அவரைப் பற்றிய செய்தியும் இன்னும் தெளிவாகக் கிடைக்கும்" என்றாள்.

மகளின் மன வேதனையை அதிகப்படுத்த அவர் விரும்பவில்லை. எனினும் அவள் மனத்தை மாற்ற எண்ணி, "அம்மா, குழந்தாய்! காஞ்சியை நோக்கி எதிரிப் படைகள் வருகின்றனவாம். யுத்தம் நடக்கும்போது நாம் அங்குப் போகக் கூடாது. அப்படிப் போனாலும் நீ குணதேவனைச் சந்திப்பாய் என்பது என்ன நிச்சயம்? மாற்றார் படைகளைக் காஞ்சிக்குள் அழைத்துவரும் அவனைச் சந்திப்பதைவிட இங்கே இருப்பதுமேல்" என்றார். குமுதவல்லியின் கண்கள் கலங்கின.

"அப்பா! யுத்த களத்திற்குள்ளேயே நாம் போவோம். எதிரிகள் பக்கம் சேர்ந்திருக்கும் அவரை எதிரியாகவே எண்ணிச் சந்திப்போம். நாட்டுப் பற்று இதுதானா எனக் கேட்போம். சுத்த வீரனின் லட்சணம் இதுதானா என வினவுவோம். காதலை மறந்த தன்மை இவ்வளவுதானா எனக் கேட்போம். ஒரு விநாடிக்கூடத் தாமதிக்க முடியாதப்பா!" எனக் குமுதவல்லி பேசினாள். அவளுடைய பேச்சிலே இருந்த படபடப்பும் ஆவேசமும் கந்ததேவனையே திகைக்க வைத்தன.

காஞ்சிமா நகரின் வட கோடியிலிருந்த காவல்காரர் தெருவில் நகரைப் பாதுகாக்கும் படை வீரர்கள் வசித்து வந்தனர். அவர்களுக்கு ஏற்பட்ட முன் ஏற்பாட்டுத் திட்டப்படி கோட்டை வாயில்களையும், அரண்மனை வாயில்களையும், பண்டகச் சாலைகளையும், சிறைக் கூடங்களையும் காக்கும் பொறுப்பை ஏற்று அதன்படி நடந்து வந்தனர்.

கோட்டைக் காவலர்களின் தலைவனான திருநாராயணனின் வீட்டைக் குமுதவல்லியும் கந்ததேவனும் அடையும்போது நன்றாக இருட்டிவிட்டது. இரவு காவல் முறை திருநாராயண னுடையது. ஆதலால் பொழுது சாய்வதற்குள்ளாகவே உண



வருந்திச் சென்று விட்டான். வீட்டின் முற்றத்தில் அவன் மனைவி உட்கார்ந்து கொண்டு வானத்தைச் சுட்டிக்காட்டித் தன் குழந்தை களுக்குக் கதை கூறிக் கொண்டிருந்தாள்.

வெளியே யாரோ வரும் அரவம் கேட்டவுடன் அவள் வெளியே வந்து பார்த்தாள். குமுதவல்லியை அவள் இதற்கு முன் பார்த்ததில்லை. கந்ததேவனை அவளுக்குத் தெரியும்.

"வாங்க மாமா, வாங்க! ஊரிலிருந்து நேரே வர்றீங்களா?" என்று கூறி வரவேற்றாள். குமுதவல்லியை இன்னாரென அறிந்தவுடன் அவளுடைய உபசரணை இன்னும் அதிகமாகியது.

திருநாராயணன் வீட்டுத் திண்ணை விசாலமானது. பொதுவாக வடக்கேயிருந்து நகருக்குள் நுழைபவர் காவல்காரர் தெரு வழியாகவே வர வேண்டும். காவல்காரத் தெரு வழியே வருபவர்கள் திருநாராயணன் வீட்டு வாயிலில் இருக்கும் நிழல் தரும் வேப்ப மரத்தையும் விசாலமான திண்ணையையும் கண்டு சிறிது நேரமாவது அங்குத் தங்காமல் போக மாட்டார்கள். இளைப்பாறுபவர்களுக்கு வெயில் வேளையாயிருப்பின் குளிர்ந்த மோர் தயாராயிருக்கும். திருநாராயணனின் மனைவி வருபவர்களை விருந்தோம்பத் தயங்க மாட்டாள்.

குமுதவல்லியிடமும் கந்ததேவனிடமும் வீட்டு நலன்களை விசாரித்துப் பேசிக் கொண்டிருக்கும்போது யாரோ வாயிற் திண்ணையில் வந்திருப்பதைக் கண்டு திருநாராயணனின் மனைவியும் குமுதவல்லியும் வெளியே வந்தனர்.

யாத்திரிகர்கள் கூட்டம் அங்கு நின்று கொண்டிருந்தது. யாத்திரிகர்கள் கூட்டத்துத் தலைவர் போல் காணப்பட்டவன் 'அப்பாடா!' என்று திண்ணையில் வந்தமர்ந்தான்.

திருநாராயணனின் மனைவியையும் குமுதவல்லியையும் கண்ட அந்த யாத்திரிகர் தலைவன் திடுக்கிட்டான்.

குமுதவல்லியே தன்னை அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு யாத்திரிகர் வடிவில் வந்துள்ள குணதேவனால் அவளை அறிந்து கொள்ள முடியாதா?

குமுதவல்லி தன்னை அடையாளம் புரிந்து கொள்ளவில்லை என அறிந்தவுடன் அவன் குரலை மாற்றி, "அம்மா! ஏகாம்பர ஈஸ்வரன் கோயிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும்? வழி கூற முடியுமா?" என்று கேட்டான்.

வெளியே யாரோ பேசுவது கேட்ட கந்ததேவன் வெளியே வந்தார். யாத்திரிகர்கள் கூட்டம் நின்று கொண்டிருப்பதைப் பார்த்தார். பௌர்ணமி கழித்து நான்கு தினங்கள் ஆகியிருந்தபடியால் சந்திரோதயம் ஆகவில்லை. இருள் கவிந்திருந்தது. கற்றூண் மீது எரிந்து கொண்டிருந்த தீவர்த்தி கூட சிறிது தொலைவில் இருந்தது. வீட்டின் முகப்பில் மாடத்தில் எரிந்து கொண்டிருந்த அகல் விளக்கின் ஒளியில் வந்தவர்கள் இன்னாரென அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை.

வெகு தொலைவிலிருந்து பயணமாகி வரும் யாத்திரிகர்கள் என்பதை மட்டும் அவர் பொதுவாக அறிந்து கொண்டு அவர்களுடன் பேசிக் கொண்டு உலக நிலவரம் அறிய முயன்றார். பேசுவதற்கு ஆள் கிடைத்தால் அவருக்கு அன்ன ஆகார உறக்கமே தேவையில்லை. அதிலும் பல்லவ நாட்டிற்கு இப்போது வரும் புது ஆபத்தைப் பற்றி அறிய அவருக்கு ஆவல் மிகுந்திருந்தது.

"வாருங்கள்! இப்படித் திண்ணையில் அமருங்கள். நீண்ட தொலைவு நடந்து வந்த களைப்பு உங்களுக்கெல்லாம் இருக்கும். இந்த இரண்டுங் கெட்டான் வேளையில் நீர் மோர் தருவது கூட அவ்வளவு சிறப்பாயிருக்காதே" என்று கந்ததேவன் பேச்சைத் தொடங்கினான்.

'அதனாலென்ன கவலைப்படாதீர்கள் மாமா' என்று கூற வாயெடுத்த யாத்திரிகன் தலைவனாக வேடம் பூண்டிருந்த குணதேவன் குரலை மாற்றி, "அதனாலென்ன கிழவரே! அஸ்தமிக்கும் முன்பே ஆகார்ம உட்கொண்டு விட்டோம். இப்போது நாங்கள் விரும்புவதெல்லாம் படுக்க இடம்தான். ஏகாம்பரேசன் ஆலயத்துச் சுற்றுவெளி மிக பிரம்மாண்டமாக இருக்கும். அங்கே இரவைக் கழித்தால் காலையில் அங்குக்



குளம் இருந்தால் நீராடி ஆண்டவனைத் தரிசிக்கலாம்" என்று கூறியதைக் கந்ததேவன் அவ்வளவாக ரசிக்கவில்லை.

தன்னை 'கிழவரே!' என்றழைத்த அந்த யாத்திரிகனின் பேச்சு அவருக்குப் பிடிக்கவில்லை. 'என்ன இருந்தாலும் தொண்டை மண்டலத்து மனிதர்கள் பண்பாடு அறிந்தவர்கள். இப்படி ஒரு தவறான சொல்லைக் கூட அவர்கள் சொல்லத் துணிய மாட்டார்கள். வேறு தேச மனிதனின் அகம்பாவத்தைப் பார்!' என்று பேச்சை வேறு திசையில் திருப்பினார் கந்ததேவன்.

"எல்லா ஊரும் எங்கள் ஊர்தாம். எல்லாரும் எங்களுடைய சுற்றத்தாரே. ஒவ்வொரு நாடாகச் சுற்றி ஆங்காங்கு எழுந்தருளியுள்ள ஆண்டவனைக் கண்டு களிக்கும் பொருட்டு வருகிறோம்" என்று குணதேவன் பதிலளித்தான்.

கந்ததேவனா விடுபவர்?

"சரி, எல்லா ஊரையும் தம்முடையதாக்கிக் கொள்ள வேண்டி எங்கிருந்து கிளம்பி வருகிறீர்?" என்று கேட்டு மடக்கினார்.

" 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' எனும் அழகான மந்திரச் சொல்லைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் எங்கே கேள்விப்பட்டிருக்கப் போகிறீர்கள்? எங்கள் நாட்டினின்று உலகம் முழுமைக்கும் உதவக் கூடிய அறநூல்கள் அழகிய தமிழில் இயற்றப்பட்டிருக்கின்றன. உங்களைச் சொல்லி என்ன பயன்? பல்லவ சாம்ராஜ்யத்திலே அதிகமாக வடமொழியல்லவா வளர்கிறது. மன்னவன் எப்படியோ அப்படித்தானே மன்னுயிரும்..." குணதேவனை மேலே பேசவிடாமல் கந்ததேவன் நிறுத்தி, "ஐயா! அதிகம் பேச வேண்டாம். நீர் பேசுவது உம் கொள்கைக்கே மாறானது. உங்களுக்கு வரலாறே தெரியாது போலும். எங்கள் அரசர்கள் வடமொழியை வளர்க்கிறார்கள் என்பது உண்மைதான். அதே சமயம் அவர்கள் காலத்தில்தான் தெய்விகத் தமிழ் வளர்ந்தது ஐயா! திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் அருமையான தேவாரப் பதிகங்கள் பாடினார்கள், எங்கள் இராஜ சிம்ம அரசர் காலத்தில்.

*'கடல் சூழ்ந்த உலகெலாங்*
*காக்கின்ற பெருமான்*
*காடவர் கோன் கழற்சிங்கன்*
*அடியார்க்கும் அடியேன்'*

என்று பணிவும் பக்தியும் நிறைந்து கலந்த அற்புதப் பாடல்களைச் சுந்தரர் பாடியிருக்கிறார். தெரியாததைக் கொண்டு தெரிந்ததாகக் குறை கூறுவது எப்போதும் தவறு, நாடு சுற்றும் நல்லாரே" என்று கந்ததேவன் ஆக்ரோஷத்துடன் கூறவும், குணதேவன் மனத்திற்குள் சிரித்தவாறு பிழை செய்தோர் உணர்ந்து மன்னிப்புக் கேட்பதுபோல நடித்து, "ஐயா! என்னை மன்னிக்க வேண்டும். தமிழுக்குத் தொண்டாற்றிய பெரியவர்கள் உங்கள் மண்டலத்தில் தோன்றியிருக்கிறார்கள் என்பதை நானறியவில்லை. அவற்றை அறிந்து கொள்ளவே நாங்கள் சுற்றுப்பயணம் கிளம்பியிருக்கிறோம்" என்றான் யாத்திரிகர் தலைவன்.

"அது போகட்டும் ஐயா! காஞ்சி நகரத்துக்கு வெளியே இருந்துதானே வருகிறீர்கள். அங்கெல்லாம் மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள், எங்களுடைய அரசரைப் பற்றி? நாட்டிற்கு ஆபத்து இப்போது நெருங்குகிறது. வடக்கே இருந்து பெரிய கடல் போன்ற படைகள் காஞ்சியை நோக்கி வருகின்றனவாமே உங்களுக்குத் தெரியுமா? பட்டத்துக்காக இங்கே சண்டை நடக்கிறதய்யா, சண்டை நடக்கிறது. அதைப் பற்றி எல்லாரும் என்ன பேசுகிறார்கள் தெரியுமா?" - கந்ததேவன் கேள்வி மேல் கேள்வி கேட்டு யாத்திரிகரிடமிருந்து செய்தி அறிய முயன்றார்.

யாத்திரிகர் தலைவன் இரு காதுகளையும் பொத்திக் கொண்டு, "சிவ சிவ. எனக்கு அரசியல் விஷயமென்றாலே இப்போதெல்லாம் விஷம்போல. ஒரு காலத்தில் அரசர்களுக்கு விரோதியாக இருந்தேன். எந்த நாட்டிலாவது அரசரை எதிர்த்துக் கலகம் என்றால் அங்கு நான்தான் முன் நிற்பேன். இப்போது அதெல்லாம் மாறி விட்டது. உலக அனுபவம் அறியச் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டிருக்கிறேன். சாம்ராஜ்யங்கள் பலவற்றையும் தாண்டி வருகிறேன். பாண்டி மண்டலத்திலின்று கொங்கு நாடு சென்று, பிறகு முத்தரையர்கள் வாழும் நாட்டைச் சுற்றிப் பார்த்து விட்டுச்



சோழ மண்டலம் புகுந்து, ஒரு காலத்தே சீரும் சிறப்புமாக இருந்ததாகக் கூறுகிறார்களே, அந்த வளநாட்டைக் கண்டு சிறப்பாயிருந்த நாளையெண்ணிப் பெருமூச்சு விட்டு, வழியிலே திருமங்கை மன்னரின் பாசுரங்களைக் கேட்டுக் களிப்பெய்தி இதோ காஞ்சிநகர் வந்தடைந்திருக்கிறேன். நான் ஆண்டி. எனக்கு அரசியல் விவகாரம் எதற்கு?"

"பாசுரமா? யார் என்று சொன்னீர்கள் ஐயா? திருமங்கை மன்னரா? சேனாதிபதியாயிருந்து காதலியின் உன்னதமான லட்சியத்தை நிறைவேற்ற வழிப்பறி நடத்தி, மாறு வேடத்தில் வந்த ஆண்டவனையே கொள்ளையடித்து ஞானோதயம் அடைந்ததாகச் சொல்கிறார்களே அவரைப் பற்றியா கூறுகிறீர்கள்? அவரைப் பார்த்தீர்களா ஐயா? என் வாழ்நாள் காலத்தில் ஒரு மகானையாவது கண்ணாரக் காண வேண்டும் என்று துடிக்கிறேன். இந்தப் பெண் குமுதம் இல்லாவிட்டால் நான் மட்டும் தாமரைப்பாடியிலேயா இருப்பேன்? அந்த அடங்காத பிள்ளை குணதேவன் மட்டும் என் பேச்சைக் கேட்டு வீட்டோடு இருந்திருந்தால் நானும் எல்லா ஊர்களையும் கண்டு களிப்பேன். இதுபோல் கிணற்றுத் தவளையாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது" - கந்ததேவன் உண்மையிலேயே வருத்தப்பட்டுக் கொண்டார்.

'மாமா! வருந்தாதீர்கள். நான் அடங்காத பிள்ளை இல்லை. இதோ அடக்கம் ஒடுக்கமாக இருக்க வந்து விட்டேன்' என்று கூறி வேடத்தைக் கலைத்து அவர் முன் நிற்கத் துடித்தது அவன் மனம். ஆனால், அதற்குள் குதிரையொன்று விரைந்து வந்து அங்கே நின்றது. குதிரை வீரன் முக்கியச் செய்தியொன்றைக் கொண்டு வந்திருந்தான்.

மேற்கு வானில் கதிரவன் மறைந்து இரண்டு நாழிகைப் பொழுதாகியிருக்கலாம். காஞ்சிக் கோட்டைக் காவலாளர்கள் அகழிக்கருகே கட்டப்பட்டிருந்த மேடை மீது அமர்ந்து தலையை அசைத்து அசைத்து ஏதோ கேட்டு ரசித்தவண்ணமிருந்தனர். போர்க் காலத்தைத் தவிர மற்ற நாள்களில் கோட்டைக்

காவலாளர்களின் வேலைக் கடுமை குறைந்தே இருக்கும். கோட்டைக் கதவுகள் நடு ஜாம மணியடிக்கும்போதுதான் மூடப்படுமாதலால் அதுவரை ஒவ்வொரு வாயிலையும் காக்கும் எட்டுப் பேர் அடங்கிய குழுவினருக்குப் பொழுது போக வேண்டுமல்லவா? வீண் வம்பிலும், கேளிக்கைகளிலும் கழிக்காமல் கிழக்குக் கோட்டைக் காவலர்கள் நல்ல செயல்களில் காலத்தைப் போக்கினர். வீரமும், இராஜ தந்திரமும், சூழ்ச்சிகளும், நல்லுரைகளும் நிறைந்த மகாபாரதக் கதையை மக்களுக்குச் சொல்வது அக்கால வழக்கமாக இருந்தது. இதற்காக ஒவ்வொரு கோயிலிலும் பாரத மண்டபங்கள் கட்டப்பட்டன.

கோட்டைக் காவலாளர்கள் பாரதக் கதை கேட்க முதியவரொருவரின் தயவை நாடினர். தினமும் சிறிது நேரம் அப்பெரியவர் பாரதக் கதையை உணர்ச்சியுடன் கூறுவார். அன்றாடம் சொல்லப்படும் கதையை வைத்துக் கொண்டு காவலர்கள் தங்களுக்குள் விவாதம் செய்வார்கள்.

தருமருடைய தயாள சிந்தையையும், வீமனுடைய தோள் வலிமையையும், அர்ச்சுனனுடைய வில் திறமையையும், துரியோதனனுடைய பொறாமையையும், கர்ணனுடைய வள்ளல் தன்மையையும், சகுனியின் சூழ்ச்சியையும் அவர்கள் பேசிப் பேசிப் பொழுதைப் போக்குவார்கள். வாழ்நாளில் தாங்கள் நேரிடையே காணும் மக்களிடையே பாரதக் கதாபாத்திரங்கள் போன்ற குணமுடையவர்களுக்குப் பாரதத்தில் வரும் பெயரைச் சூட்டுவார்கள்.

அன்றும் கிழக்குக் கோட்டை வாயிலிலுள்ளோர் மகாபாரதக் கதையில் பஞ்ச பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் குடியேறச் செய்து அதைக் கொளுத்திய துரியோதனன் முதலானோர் செய்கையைப் பற்றிய சம்பவத்தைக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தனர்.

"அரக்கு மாளிகை எரிந்து பஞ்ச பாண்டவர் சாம்பலாகி விட்டனரா?" என்று பதைபதைப்புடன் ஒருவன் கேட்டான்.



"இல்லை; இல்லை. சுரங்க வழியாக அவர்கள் தப்பி விட்டார்கள்" என்று பெரியவர் கூறிய பிறகுதான் அவனுக்கு மனச்சாந்தி ஏற்பட்டது.

"ஆகா! இந்தச் சகுனி எவ்வளவு பொல்லாதவனப்பா. அவனுடைய சூழ்ச்சியால்தானே துரியோதனன் முதலானோர் கெட்டுத் தொலைந்தார்கள்?" என்று கூறினான் ஒருவன்.

"சிம்மாசனத்தில் ஏற அந்தக் காலத்திலும் போட்டி பலமாக இருந்திருக்கிறது. மண்ணாசை யாரை விட்டது?" என்றான் மற்றொருவன்.

"அந்தக் காலம் என்ன? எந்தக் காலத்திலும் ஆசை என்பது உண்டு. உரிமைப் போராட்டம் இன்றுபோல் அன்றும் இருந்திருக்கிறது. இப்போது அநியாயமாகப் போராட்டம் நடத்துகிறார்கள். அன்று நியாயமான கோரிக்கைக்குப் போராடினார்கள். கடவுளும் அவர்கள் பக்கம் இருந்தார். இந்தக் காலத்திலோ... சித்திரமாயனைப் பாருங்களேன். வீணாகக் கலகம் செய்கிறார்..."

மகாபாரதக் கதை படிப்பது இந்தப் புது விவாதத்தால் தடைபட்டது. அன்றைய பிரச்னையை எல்லாரும் விவாதிக்கத் தொடங்கினர்.

"சித்திரமாயனுக்குச் சகுனி போன்று யோசனை கூற ஒரு கருநாகமிருக்கிறதே, அவனுடைய தூண்டுதலினால்தான் வடக்கேயிருந்து படைகள் வருகின்றனவாம்" என்று ஒரு காவலாளி கூறினான்.

"வடக்கேயிருந்து படைகள்" என்ற சொல் கேட்டவுடன் அங்கிருந்தோர் திடுக்கிட்டனர். கோட்டைத் தலைவர் எச்சரித்துச் சென்ற சொற்களை அவர்கள் மறந்து போயிருந்தனர்.

கோட்டைக் காவல் தலைவர் திருநாராயணனுக்குக் காவல் சம்பந்தமாக சேனைத் தலைவரிடமிருந்து சில உத்தரவுகள் கிடைத்திருந்தன. அவனும் கிழக்குக் கோட்டைக் காவலர்கள் எச்சரித்து, பொழுது சாய்ந்தவுடன் கோட்டைக் கதவுகளை மூடி விடுமாறும் மறு உத்தரவு வரும்வரை திறக்க வேண்டாம் என்றும்

கட்டளையிட்டிருந்தான். அதைத் தவிர கோட்டைக்கு வரும் முக்கிய சாலைகளில் அரைக் காத தொலைவுக்கு அப்பாலே வீரர்கள் பலரை மறைந்திருக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான்.

ஆனால், கருங்கண்ணனின் உத்தரவுபடி சித்திரமாயனுடைய வீரர்கள் வேற்றுடையில் தனித்தனியாக சாலை வழியாக வந்து பகல் நேரத்திலேயே காஞ்சிக்குள் நுழைந்து விட்டனர். பொழுது சாய்ந்து சிறிது நேரமானவுடன் கோட்டைக் காவலாளர்கள் பாரதக் கதையைச் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்த போதே சித்திரமாயனின் வீரர்கள் பதுங்கி வந்து கோட்டை வாயிலில் மூன்று பெருங்கதவுகளுக்கருகே உருவிய வாளுடன் நின்றனர். சிலர் கோட்டை மீதேறிக் கொண்டனர்.

'வடக்கே இருந்து படைகள்' என்ற சொல்லால் கடமையில் நினைவு பிறந்து குதித்தெழுந்த காவலாளிகள் விரைந்து கோட்டைக் கதவுகளை மூட முயல்கையில் சித்திரமாயனின் வீரர்கள் திடீரென்று பாய்ந்து காவலாளிகளை வெட்டி வீழ்த்தினர்.

இரக்க சித்தமற்ற அவர்கள் காவலாளிகளின் உடலை அகழியில் வீசினர். திட்டமிட்டுச் செய்யப்பட்ட இந்தச் செயலால் அங்கு படுகொலை நடந்து, முக்கிய மாறுதல் ஏற்பட்டது என்று எவராலும் சொல்ல முடியாத அளவுக்குச் செய்து விட்டார்கள்.

ஆனால், பூமியிலே தேங்கி உறைந்து கிடந்த வீரர்களின் செங்குருதி, சித்திரமாயனின் வீரர்கள் அறியாமல் பயங்கரமாக நகைத்துக் கொண்டிருந்தது.

நல்லவேளையாகப் பாரதம் கூறிய பெரியவர் உயிர் தப்ப அருகே இருந்த புதருக்குள் புகுந்திராவிடில் அவரும் அகழியில் அமிழ்ந்திருப்பார். திடீரென்று ஏற்பட்ட இந்தப் படுகொலையைக் கொண்டு காஞ்சி நகருக்குப் பெரும் ஆபத்து வந்துவிட்டது என்றறிந்த பெரியவர் புதருக்குள் தங்கியிருப்பதால் நகருக்கே ஆபத்து என்றுணர்ந்து தக்கவர்களிடம் அதைத் தெரிவிக்க விரும்பினார். கோட்டைக் காவலாளர்களையும், அவர்களது தலைவரையும் முதியவர் நன்றாக அறிவார்.



எனவே, துணிந்து ஒரு செயல் புரிந்தார். மேல் துணியை எடுத்துத் தலையில் முண்டாசு போல் சுற்றிக் கொண்டு கைத்தடியை மெதுவாக ஊன்றிக் கோட்டை வாயிலை அடைந்தார். பல்லவ வீரர்கள் இருக்க வேண்டிய இடங்களில் சித்திர மாயனுடைய ஆட்கள் உருவிய வாளுடன் நின்றனர். அங்கு நடந்ததேதும் தெரியாத அளவுக்கு அவர்கள் நடித்தனர். பல்லவ வீரர்களின் உடையையும் இலச்சினையையும் அவர்கள் அணிந் திருந்தனர். பெரியவர் உள்ளே நுழைகையில் ஒரு வீரன் தடுக்க முற்பட்டபோது 'உஸ்' என்ற சைகை ஒலி எங்கிருந்தோ கேட்டது.

"பெரியவரே! சீக்கிரமாக நகருக்குள் செல்லுங்கள். கோட்டைக் கதவை உடனே மூடுமாறு தளபதி உதயசந்திரனாருடைய கட்டளை கிடைத்திருக்கிறது. நெடுந்தொலைவிலிருந்து வருகிறீர்கள் போலிருக்கிறது" என்ற குரல் மட்டுமே கேட்டது.

எல்லாம் நன்மைக்கே என்று பெரியவர் விரைந்து நடந்தார். சித்திரமாயனுடைய வீரர்களின் நடிப்பு அவருக்கு வியப்பை அளித்தது.

"முட்டாள்களா! வழக்கத்துக்கு விரோதமாக நகருக்குள் நுழைபவரைத் தடுத்தால் சந்தேகிக்க மாட்டார்களா? கிழவரும் குருடரும் நொண்டியும் நுழைவதால் தவறில்லை. உடனே கதவை மூட ஏற்பாடு செய்யுங்கள். பொழுது சாய்ந்தவுடனேயே மூடி விடுமாறு ஏற்பட்ட கட்டளையை நிறைவேற்றாது அந்த ஏமாளி வீரர்கள் இருந்து விட்டனர். நாமும் அப்படியிருந்தால் சந்தேகத்துக்கு இடம் தரும். இந்த நேரத்தில் எல்லாக் கோட்டை வாயில்களும் நம்மவர் வசமாயிருக்கும். இன்றிரவு நடுநிசியின்போது இரட்டர்கள் படை நகருள் நுழையும்போது கோட்டைக் கதவுகள் திறக்கப்படும். அதற்குள் நம் வீரர்கள் மூலப் பண்டாரத்தையும், ஆயுதச் சாலையையும் தாக்கி வசப்படுத்துவார்கள். கோட்டையின் ரகசிய வாயிலின் வழியாக மகாராஜா சித்திரமாயன் உள்ளே வருவார்!"

பெரியவர் காதுகளில் இந்தச் சொற்கள் வீழ்ந்தன. வாலிபப் பருவம் மீண்டும் வந்தது போன்று விரைந்து ஓடினார். அச்சமயம்

வடக்குக் கோட்டைக் காவலுக்குத் தாமதமாகக் கிளம்பிச் சென்ற குதிரை வீரன் ஒருவன் எதிர்ப்பட்டான். பெரியவர் குடல் தெறிக்க ஓடி வருவதைக் கண்டு அவரை நிறுத்தி, "ஐயா, ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்?" என வினவினான்.

"ஐயா, ஐயா! கொஞ்சம் குதிரையைக் கொடுங்கள். கோட்டைத் தலைவர் வீடு செல்ல வேண்டும். கலகக்காரர்களின் படைகள் கோட்டை வாயிலை வசப்படுத்தி விட்டன. இன்னும் அபாயம் நேர இருக்கிறது" என்று கூறவும் வீரனுக்குப் பெரியவர் வார்த்தையில் சந்தேகம் தோன்றியது. ஆனால், பாரதம் கூறும் பெரியவர் அவர் என அறிந்தவுடன் அவன், தானே தக்கவரிடம் கூறிவிடுவதாகக் காற்றினும் கடிய வேகத்தில் குதிரை மீதேறி விரைந்தான்.

யாத்திரிகர் உடையிலிருந்த குணதேவனும், கந்ததேவனும் பேசிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் அந்த வீரன் போய்ச் சேர்ந்தான்.

குதிரையின் மீதிருந்து இறங்கிய காவல் குழாத்து வீரன் திருநாராயணனின் மனைவியை நோக்கி அவசரமாக, "அம்மா! தலைவர் எங்கே போயிருக்கிறாரம்மா? கிழக்கு வாயிலில் உள்ள காவல்காரர்கள் அனைவரையும் யாரோ திடீரென்று தாக்கிக் கொன்று விட்டார்கள். கிழக்கு வாயிலின் பாதுகாப்பு, இனம் தெரியாதவர்கள் வசப்பட்டுவிட்டது. நகரிலே சேனாதிபதி இல்லை. அரசரும் இல்லை. நகரில் கலகம் மூண்டு விடுமோ என்ற ஆபத்து காணப்படுகிறது. நம் தலைவர் எங்கே அம்மா? செய்தி கூறுவதற்கு நான் ஒருவனாவது தப்பினேனே" என்றான்.

விரைந்து வந்த களைப்பும், செய்தியின் முக்கியமும் அவன் நெஞ்சிலிருந்து வார்த்தைகளை வெளியில் கொண்டு வரத் தடை செய்தன.

யாத்திரிகர் வடிவில் இருந்த குணதேவன் துள்ளி எழுந்தான்.

தன்னைத் தொடர்ந்து வந்தவர்களை நோக்கி ஏதோ சைகை செய்தான். ஒருநொடியில் குமுதவல்லியிடம் தான் இன்னான் என்பதைத் தெரிவித்து விட்டு, மாமாவின் நலனை விசாரித்து



விட்டுப் புறப்பட எண்ணினான். மறுகணம் நகரப் பாதுகாப்பு உணர்வு அந்தப் பாசத்தையும் மிஞ்சியது.

"வடக்கு, தெற்கு, மேற்கு வாயில்களை நோக்கி உடனே விரைந்து செல்லுங்கள். என்னுடன் நான்கு பேர் மட்டும் வாருங்கள்" என்று கட்டளையிட்டவுடன் யாத்திரிகர் வடிவில் வந்த பல்லவ வீரர்கள் விரைந்து ஓடினர்.

இயற்கையான குரலில் யாத்திரிகர் தலைவன் கட்டளையிட்டவுடன் குமுதவல்லிக்குக் குணதேவன் குரல் சட்டெனப் புரிந்தது.

"யார்? அத்தானா!" என்று அவள் உதடுகள் முணுமுணுப்பதற்குள் குணதேவன் சிட்டெனப் பறந்து அரண்மனை வாயிலை நோக்கி விரைந்தான்.

அதற்குள்ளாகக் காஞ்சியின் நான்கு கோட்டை வாயில்களும் சித்திரமாயனின் படை வீரர்கள் வசமாயின.

## 10. நமச்சிவாயன் துணை

பல்லவபுரத்துப் பாதாளக் குகையில் காடக முத்தரையரையும் சுந்தரனையும் சந்திரமதியையும் இரும்புச் சங்கிலி கொண்டு கட்டி வண்டியிலேற்றிக் கொண்டு பைரவன் சென்றான். அந்தக் கூண்டு வண்டியுடன் கருங்கண்ணனும் மற்றும் இரு முரடர்களும் சென்றனர்.

பைரவன் வீட்டிற்கு யாரோ விருந்தினர் வந்து செல்கின்றனர் என்றே ஊராரும் நினைத்தனர். பாதாளக் குகையில் அவர்களை இறக்கி, அங்கிருந்த பாறைக் கம்பத்தில் அவர்களைக் கட்டிவிட்டுப் பைரவன் கிளம்பினான்.

'பெற்ற மகள் என்றும் இந்தத் தந்தைக்கு எள்ளளவும் உணர்ச்சி இல்லையே. கருங்கண்ணனை எதிர்த்து அவர் மூச்சு விட்டால்கூட சுருண்டு வீழ்ந்து விடுவானே. அந்த முரட்டுத் தடியர்களுக்குக் காடக முத்தரையர் ஒருவரே பதில் கூறிவிடுவாரே. தேவைப்பட்டால் கத்தி எடுத்துச் சுழற்ற எனக்குத் தெரியாதா' என்றெல்லாம் சந்திரமதி வேதனையுடன் எண்ணிப் புலம்பினாள்.

காடக முத்தரையரின் நினைவெல்லாம் காஞ்சிக் கோட்டையை நோக்கியே இருந்தது.

"ஐயோ! என்னைப் போன்ற மதியீனனை யாராவது இந்த உலகில் கண்டிருக்கிறீர்களா? பல்லவ சாம்ராஜ்யம் என் முட்டாள்தனத்தால் எத்தகைய பயங்கர ஆபத்தில் சிக்கப் போகிறது. அதைப் பார்த்து நான் உயிர் வாழ்வதா? சதிகாரர்களின் திட்டத்தைத் தளகர்த்தரிடம் கூற வழியின்றி இங்கு இருட்சிறையில் வாடுவதைவிட உயிர் துறப்பது எவ்வளவோ மேலானது. நீங்களாவது இங்கிருந்து தப்பிப் போய் ஆபத்துக்கான சதியைப் பற்றிய செய்தியைத் தெரிவிப்பீர்களா?" - காடக முத்தரையர் தனக்குத் தானே புலம்பிக் கொண்டிருந்தார்.

சுந்தரன் வருத்தப்பட்டதாகவே தெரியவில்லை.

*'சொற்றுணை வேதியன் சோதி வானவன்*
*பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கை தொழக்*
*கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச் சினும்*
*நற்றுணை யாவது நமச்சிவாயவே...'*

என்று பாடத் தொடங்கினான்.

சந்திரமதி, "சுந்தரா!" என்று கூவினாள்.

"எப்போது பாட வேண்டும்; எப்போது பாடக்கூடாது என்றே தெரியவில்லை, உனக்கு. நமச்சிவாயன் இந்த இருட்குகைக்கு வந்து நமக்கு உதவப் போகிறானா?" என்று சந்திரமதி ஆத்திரத்துடன் கேட்டாள்.

சுந்தரன் சிரித்தான். அவனுடைய வெண் பற்கள் இருளில் முத்தென மின்னின.



"தோன்றாத் துணைவனான நமச்சிவாயன் நிச்சயம் அருள்வான்" என்று மீண்டும் கூறினான் சுந்தரன்.

நடுநிசியாகி இருக்கும். வானத்தே விண்மீன்கள் அவர்களின் தலைவன் மதியரசன் வருகைக்காகக் காத்திருந்தன. தென்றல், மதியரசனுக்காக இந்த இன்பமான மண் நல்லாளின் குழந்தைகளான வண்டினத்து இன் குரலிசையை எடுத்துச் சென்றது; வனத்து முல்லை, மல்லி மலர்களின் மணத்தை வாரிச் சென்றது; இன்முகம் காட்டி வரவேற்கும் அல்லியாளின் அழகு முகம் கூறும் செய்தியை எடுத்துச் சென்றது.

"நமச்சிவாயன் அருள்வான்!" என்று கூறி மீண்டும் சிரித்தாள் சந்திரமதி. 161220/5794030

"ஆமாம்; நிச்சயம் அருள்வான்" என்று கூறி சுந்தரன் நகைத்தான்.

அப்போது அந்த இருண்ட குகையில் ஒளி வீசத் தொடங்கியது. லேசாகத் தெரிந்த வெளிச்சம் வர வரப் பெரிதாகியது. யாரோ இறங்கி வரும் ஓசை கேட்டது.

கையில் தீவட்டியுடன் முரடன் ஒருவன் இறங்கி வந்தான். ஒரு கையில் தீவட்டியுடனும் மற்றொரு கையில் சிறு மூட்டையுடனும் வந்தான்.

"என் பேர் இந்தப் பொண்ணுக்குத் தெரியும் போலிருக்கிறது" என்று பேசியவாறு வந்தான் அவன்.

"யாரது?" என்று சந்திரமதி உரத்த குரலில் கேட்டாள்.

"நான்தான் நமச்சிவாயம்" என்று கூறி அந்த முரடன் அசட்டு சிரிப்பு சிரித்தான். தீவட்டியை அருகே பாறை இடுக்கில் செருகி விட்டு உணவு மூட்டையை அவிழ்த்தான்.

"தயிர்ச் சோறு கொண்டு வந்திருக்கிறேன். உம், நடக்கட்டும் சம்ஹாரம்" என்று கூறி விட்டுச் சந்திரமதியைப் பார்த்துச் சிரித்தான்.

வட்டார நூலகம்
அசோக்நகர்

"பலி கொடுக்கும் கடாவுக்கு முதல் நாள் நிறைய உணவு கொடுப்பது போல் எங்களுக்கு உணவு எதற்கு?" என்று முத்தரையர் கர்ஜித்தார்.

"உமக்காக இந்தச் சோத்து மூட்டையை நான் கொண்டு வரவில்லை தெரியுமா?" என்று முரடன் முகத்தைச் சர்வ கோணலாக்கிக் கொண்டான்.

"பின் வேறு யாருக்கு என்று கேட்கிறீர்களா? கிளியாட்டம் உள்ள இந்தப் பெண் பசியால் வாட எங்க எசமானர் கருங்கண்ணனார் விடுவார்களா? அவர் அனுப்பிய மூட்டை இது. ஐந்து நாள் தயிர்; பத்து நாள்களாக ஊறப் போட்ட சோறு. பேஷான விருந்துதான்" என்று கூறிவிட்டு "எல்லாரும் உண்ணலாம். நான் அனுமதிக்கிறேன்" என்று கட்டளையிட்டு விட்டு நகைத்தான் நமச்சிவாயம்.

அவன் சிரித்து முடித்தவுடன் சுந்தரன் 'ஹோ ஹோ' என்று சிரித்தான்.

நமச்சிவாயம் அவன் பக்கம் திரும்பிக் கேட்டான்: "பயலே ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிப்பு வந்தது."

"ஏன் வந்தது?"

"சோற்றின் இனிய மணம் மூக்கைத் துளைக்கிறது. உங்க எசமானர் சுவையான சோற்று மூட்டையை அனுப்பி உன்னையும் கூட அனுப்பினாரே என்றுதான் சிரித்தேன்."

"சிரிப்புக்கு இதிலென்னடா இருக்கிறது குருட்டுப் பயலே?"

"இல்லை, இல்லை. இந்தச் சோற்றை நீ எங்களுக்கு ஊட்டப் போகிறாயே... அதுபோல் அந்தப் பொண்ணு சந்திரமதிக்கும் நீ ஊட்டுவாயல்லவா? அது தெரிந்தும் உங்க எசமானர் உன்னை அனுப்பினாரே அதை நெனைச்சுச் சிரிச்சேன்" என்று கூறி மறுபடியும் சுந்தரன் சிரித்தான்.

அந்த ஆபத்தான வேளையில் சுந்தரனின் பேச்சு காடக முத்தரையருக்கு வெறுப்பை அளித்தது.



சுந்தரன் இப்படிப் பேசுகிறானே என்று சந்திரமதிக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

செவிப் பறைக்குக் கொடுமை நேருமாறு நமச்சிவாயம் சிரித்தான்.

"நான் ஊட்டுவதா..." ஹோ ஹோ என்று மீண்டும் சிரித்து, "ஊட்டிய கையை எசமானர் வெட்டிப் போட்டுடுவார்" என்று கூறினான்.

"நீயும் ஊட்ட மாட்டாய், கைக் கட்டையும் அவிழ்க்க மாட்டாய். பிறகு எப்படி உண்பதாம்?" - சுந்தரன் கேள்வி கேட்டு நமச்சிவாயத்தை மடக்கினான்.

"கட்டை அவிழ்ப்பதா? அது எப்படி முடியும்? நீங்கள் தப்பி ஓடுவதற்கு இது ஒரு சூழ்ச்சியா? நான் ஏமாறுவேனா?" என்று கூறிய நமச்சிவாயத்துக்கு ஒரே குழப்பமாக இருந்தது. "அதற்கு எசமானர் வழி கூறவில்லையே" என்று விழித்த நமச்சிவாயத்துக்குச் சுந்தரன் யோசனை ஒன்று கூறினான்.

"நமச்சிவாயா! நான் ஒரு யோசனை கூறுகிறேன் கேட்கிறாயா?"

"ஓ! பேஷாகக் கேட்கிறேன்."

"தப்பி ஓடுவதற்கு நான் வழி செய்ய மாட்டேன். எல்லாரும் பசியால் வாடுகிறார்கள். உனக்குப் பயமில்லாமல் எல்லாரும் உணவு உண்ண நான் யோசனை ஒன்று கூறுகிறேன். நானோ குருடன், என் கை கால்களைக் கட்டவிழ்த்து விடுவதில் தவறில்லையல்லவா?"

"ஆமாம்; ஆமாம். குருடனான நீ ஓடி விடவா முடியும்? உன்னைத் தூக்கிக்கொண்டு வேறு யாராவது ஓட வேண்டும். உம், உன் கட்டுகளை அவிழ்த்தால்...?"

"முதலில் நான் இந்தத் தயிர்ச் சோற்றை உண்கிறேன். அதற்குப் பிறகு என் கைகளைக் கட்டிவிடு. பிறகு சந்திரமதியின் கையை அவிழ்த்து இடக் கையை என் கையோடு பிணைத்து விடு. அவளும் ஓட முடியாது. அவளும் ஒரு கவளம் உண்பாள்.

பிறகு அதோ இருக்கிறாரே பெரியவர் - முத்தரையர் - அவருக்கு நீயே ஊட்டி விடு. அவர் கட்டை மட்டும் அவிழ்த்து விடாதே. அவர் பொல்லாதவர்; அதனால் ஆபத்து நேரிடலாம். நீயே அவருக்கு வாயில் ஊட்டி விடு. ஊட்டும்போது உன் கை விரல்கள் பத்திரம். அவர் கடித்தாலும் கடித்து விடுவார்" - சுந்தரனுடைய பேச்சு நமச்சிவாயத்திற்கு பெரும் சிரிப்பை அளித்தது. வயிறும் உடலும் குலுங்கச் சிரித்தான்.

"ஏனப்பா, நற்றுணை தரும் நமச்சிவாயா! நான் கூறுவதில் ஆபத்துக்கு இடமுண்டா?" - சுந்தரன் ஒன்றுமறியாதவன் போல் கேட்டான்.

"ஆபத்தா? மருத்துக்குக் கூட கிடையாது, பையா! நீ குருடனாக இருந்தாலும் புத்திசாலி. எங்கள் எசமானர் உன்னைப் பற்றி நிறையக் கூறியிருக்கிறார். ஆனால் நீ எதிராளியிடம் சேராதிருந்தால் உனக்கு எத்தனையோ நன்மையுண்டு" என்று கூறிய நமச்சிவாயத்தின் பேச்சைப் பாதியில் நிறுத்தி, "அப்பா! கோயில் பிரசாதம் வழங்குவதற்கு முன்பு அடிக்கும் ஜாலரா ஓசைபோல் உன் பேச்சு இருக்கிறது. பசி காதை அடைக்கிறது. சீக்கிரம் என் கையை அவிழ்த்து விடு" என்றான்.

சுந்தரனுடைய சொல்லும் செயலும் சந்திரமதிக்கும், முத்தரையருக்கும் புரியவில்லை.

நமச்சிவாயம் சுந்தரனின் கைகளைக் கட்டியிருந்த சங்கிலியை அவிழ்த்தான்.

சுந்தரன் மெல்லத் தட்டுத் தடுமாறி சோற்றின் முன் அமர்ந்து ஒரு கவளத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். அப்போது அவனுக்குப் பெரும் விக்கல் உண்டாகியது.

"குருடனைக் கூட யாரோ நினைக்கிறார்கள்" என்றான் முரடன்.

மறுபடியும் பெரும் விக்கல் ஏற்பட்டது. சுந்தரன் 'தண்ணீர்' என்று சைகை காட்டினான். முரடனான நமச்சிவாயத்துக்கு கடுகளவு கருணை இருந்தது. வெகு வேகமாக வெளியே ஓடினான் தண்ணீர் கொண்டு வர.



அவன் சென்றவுடனே சுந்தரன் விரைந்து எழுந்து பாறை மறைவில் கையில் தீவட்டியுடன் நின்றான்.

நமச்சிவாயம் தண்ணீர்க் குடத்தைத் தூக்கிக் கொண்டு பாறையிலிருந்து இறங்கி வரும்போது சுந்தரன் கையிலிருந்த தீவட்டியை அவன் முகத்தின் மீது வீசினான்.

தீவட்டியின் தீ நாக்குகள் நமச்சிவாயத்தின் முகத்தைக் கருக அடித்தன. திடீரென்று தாக்குதல் கிடைத்ததால் நமச்சிவாயம் சுருண்டு வீழ்ந்தான்.

"சுந்தரா! குருடனாயிருந்தாலும் என்ன அற்புதம் செய்து விட்டாய்? இந்த இடத்துப் பழக்கத்தால் செய்தாயா? திடீரென்று உனக்கு கண் வந்துவிட்டதா?" - சந்திரமதி வியப்பால் கூவினாள்.

"இப்போது ஏதும் பேச நேரமில்லை. நற்றுணையான நமச்சிவாயனை நினைத்துக் கொண்டு தப்பி ஓட முயலுவோம்" என்று கூறினான்.

இருளில் அவர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர்.

## 11. உதயசந்திரன் சபதம்

காஞ்சிக் கோட்டை வாயிலில் பயங்கரம் நடந்து பல நாழிகை நேரம் கழித்துப் பொழுது புலரும் வேளையில் காஞ்சி அரண்மனை மண்டபத்தில் மிக முக்கியமான மந்திராலோசனை சபை கூடியிருந்தது.

முதன் மந்திரி ஸ்ரீராஜ பிரம்மராயரும், அறிஞர் அவனி தந்த போசரும் வந்திருந்தார்கள்.

காஞ்சி நகரில் அப்போது தங்கியிருந்த களத்தூர்க் கோட்டம், வெண்குன்றக் கோட்டம், புழல் கோட்டம், ஆமூர் கோட்டம்,

புலியூர்க் கோட்டம் ஆகியவற்றின் தலைவர்கள் அவசர அழைப்பின் பேரில் கூடியிருந்தனர்.

உள்படு கருமத் தலைவர்[1], வாயில் கேட்பார்[2], கீழ் வாயில் கேட்பார்[3] அங்கு மிகுந்த பய பக்தியுடன் நின்றிருந்தனர். ஆளும் கணத்தார்[4] அமர்ந்திருந்தார். காஞ்சி நகர அமிர்த கணத்துத் தலைவர் (கோயில் செவ்வனே நடைபெறுவதைக் கண்காணிப்பவர்) பண்டாரத்துத் தலைவரான குமாரனும் வந்திருந்தார். எல்லாரும் உதயசந்திரன் வருகைக்காகக் காத்திருப்பதாக அவர்கள் மௌனத்திலிருந்து தெரியவந்தது.

புழல் கோட்டத்துத் தலைவர் அங்கு நிலவிய அமைதியைக் குலைத்து, "பல்லவ சரித்திரத்திலேயே இது போன்று கோட்டை வாயிலில் பயங்கரம் நேர்ந்ததில்லை" என்றார்.

அதுகாறும் மௌனமாயிருந்த நந்திவர்மன் பேசினார்: "கோட்டத்துத் தலைவர்களே! முதலமைச்சரே! மற்றும் அதிகாரிகளே! அதிகாலையில் நாம் மந்திராலோசனை கூடும் கட்டாயம் நேர்ந்திருக்கிறது. நாங்கள் நகரை விட்டு வெளியே சென்ற பொழுதிலிருந்து நடந்த சம்பவங்களை உங்களுக்கு எடுத்துக் கூறவே இந்த அவையை அவசரமாகக் கூட்டினேன். ஆனால், நகருக்குள் நுழைந்தவுடன் நான் கூற வேண்டியதைவிட நான் அறிய வேண்டிய செய்திதான் மிக அதிகம் என்பது தெரிய வந்தது. சித்திரமாயனின் ஆதரவாளர்கள் கோட்டைக் காவலை ஒரு சில நாழிகை நேரம் பிடித்து வைத்த செய்தியும், மூலப் பண்டாரத்தையும், ஆயுதச் சாலையையும் கைப்பற்ற முயன்றதும் அவர்கள் முயற்சி பலிக்காமல் போனதும் கேள்விப்பட்டேன். அதைத் தவிர நகர மக்கள் படையெடுப்புக் குறித்து அஞ்சுமளவுக்கு வதந்தியையும் விஷமிகள் கிளப்பிவிட்டிருக் கிறார்கள். அதைத் தவிர கோட்டை வாயிலைப் பிடித்த கலகக்காரர்களிடமிருந்து தக்க சமயத்தில் வந்த யாத்திரிகர்கள் சிலர் காப்பாற்றினர் என்பது மகிழ்ச்சியை அளித்தாலும், யாத்திரிகர்கள் யார், எதற்காக வந்தனர் எனும் ஐயமும்

1. Private Secretary, 2. Secretary, 3. Under Secretary, 4. Commissioner



உங்களுக்கு ஏற்பட்டிருக்கும். எல்லாவற்றையும் தீர்க்க சேனாதிபதி உதயசந்திரன் இப்போது வந்து நடந்தவற்றைக் கூறுவார்" என்றார்.

புழல் கோட்டத்துத் தலைவர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "கோட்டைக் காவல் சரியில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அத்துடன் நமது படைப் பலத்தின் மீதே எனக்குச் சந்தேகம் எழுகிறது. மல்லர்க்கு மல்லரான மன்னரின் பலத்தின்மீது எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் போர் வீரர்களை அமைத்திருக்கும் முறை, போர்க் காலத்தே தலைநகரின் காவல் முறை ஆகியவை சரியில்லை என்பது என் கருத்து" என்றார்.

புழல் கோட்டத் தலைவர் கூறியவுடன், களத்தூர் கோட்டத் தலைவர் எழுந்து, "அது மட்டுமன்று; வடக்கே இரட்டர்களின் படை பெண்ணையாறு வரை வந்திருக்கிறது; ஆற்றைத் தாண்டியும் வர இருக்கிறது என்று அறிந்தேன். மாற்றான் படை பல்லவ மண்ணை மிதிக்கலாமா? நம் போர் வீரர்களின் தோள் வலிமை எங்கே? நம் ஆயுதங்கள் கூர்மை மழுங்கி விட்டனவா? நம் பலம் பொருந்திய யானைப் படைகள் மெலிந்து விட்டனவா?" - மேலே மேலே அடுக்கியவாறு சென்றார் கோட்டத் தலைவர்.

நந்திவர்மன் கையசைத்து, "கோட்டத் தலைவர்களே! பொறுங்கள். அவசரப்படாதீர்கள். சேனைத் தலைவரின் திறமைமீது எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். அவரே வந்து உங்கள் முன் நடந்தவற்றைக் கூறும் வரையில் பொறுமை காட்டுங்கள். அதன் பிறகு சில ரகசிய முடிவுக்கு நாம் வர வேண்டியிருக்கிறோம். அப்போது கோட்டத்துத் தலைவர்களையும் கலந்து யோசிக்காமல் சில முடிவுக்கு வரலாம். எனக்கு உங்கள் ஆதரவு இருக்கும் என நம்புகிறேன்" என்று கூறியபோது வெளியே பல்லவ நாட்டு சேனைத் தலைவர் வரும் ஓசை கேட்டது.

உதயசந்திரன் கம்பீரமாக உள்ளே நுழைந்தான். அவனைத் தொடர்ந்து யாத்திரிகர் உடையில் இருந்த குணதேவனும் உள்ளே நுழைந்தான். உதயசந்திரனின் முகத்தையே எல்லாரும் உற்று நோக்கினர்.

தன் வருகைக்காகவும் தன்னுடைய உரைக்காகவும் எல்லாரும் காத்திருக்கின்றனர் என்றறிந்து உதயசந்திரன் பீடத்தில் கூட அமராமல் சபையிலுள்ளோருக்கு வணக்கம் செலுத்தி விட்டு, "மதிப்பிற்குரிய அமைச்சரே, கோட்டத்துத் தலைவர்களே, அரசர்க்கரசே மற்றும் அதிகாரிகளே! குழப்பமான சூழ்நிலையில் நாம் கூடியிருக்கிறோம். அதிகாலை வேளை. அதோ சாளரத்தின் வழியே பொழுது புலர்வதைக் காண்கிறோம். இந்த நேரம் வரை இருள் கப்பியிருந்தும் நிரந்தரமாக இல்லை. கதிரொளி அதை மாய்த்து விடும். அதைப் போலவே நம் மனக் குழப்ப நிலை நொடியில் தீர்ந்து விடும். நேற்று கோட்டை வாயிலில் நேர்ந்த பயங்கரத்தை அறிந்தேன். அரசரும் நானும் திருக்கச்சூர் கோயிலில் ஆண்டவனைத் தரிசித்த வண்ணமிருக்கும்போதே செய்தி எட்டிவிட்டது. தக்க சமயத்தில் குணதேவன் நடவடிக்கை எடுத்துக் கோட்டையை மாற்றார் வசம் சிக்காமல் காத்து விட்டான்."

உதயசந்திரன் இதைக் கூறும்போது சபையோர் யாத்திரிகர் உடையிலிருப்பவன் குணதேவன் என அறிந்தனர்.

"இருந்தாலும் பெரும் தவறு எங்கோ நேர்ந்திருக்கிறது. நான் விரித்த வலை இதுவரை அறுபட்டதில்லை. ஆனால், முக்கியமான செய்தி நம்மை எட்டாமல் ஏதோ பிழை நேர்ந்திருக்கிறது. சித்திரமாயனுடைய வீரர்கள் கிழக்கு வாயிலை நோக்கி வருவர் என்பதுதான் கடைசியாகக் கிடைத்த தகவல். அதனால்தான் நம் வீரர்களை இடை வழியிலேயே பதுங்கி இருந்து வரும் கலகக்காரர்களை வழி மறித்துவிடச் செய்திருந்தேன். ஆனால், ஒரு வீரர்கூட வரவில்லை. மாறு வேடத்தில் தனித்தனியே வந்திருக்கின்றனர். நம் திட்டத்தை எப்படியோ அறிந்திருக்கின்றனர். ஆயுதங்கள் சித்திரமாயனுடைய வீரர்களுக்குக் கிடைக்கவொட்டாமல் அழிக்க ஏற்பாடு செய்தது முடியாமல் போய்விட்டது. இதிலிருந்து இந்தக் காரியங்களைக் கண்காணிக்க மேற்கொண்ட காடக முத்தரையருக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்பது தெரிய வருகிறது. பல்லவபுரத்திலிருந்து வந்த செய்தியினின்று சித்திரமாயனுடைய



ஆயுத உற்பத்திச் சாலையும், அதைத் தயாரிப்பவருடைய வீடும் ஆள் அரவமின்றிக் கிடப்பதாக அறிகிறேன். அங்கிருந்து நமக்குச் செய்தி கொடுத்து வந்த சுந்தரன் என்ற இளைஞனையும் காணவில்லை. இவற்றிலிருந்து நம் திட்டங்களையும் செயல்களை யும் யாரோ நெருங்கியிருந்து அறிகிறார்கள் என்று தெரிகிறது.

"அதுவும் அதிக நாள் முடியாது. சபை அனுமதித்தால் சித்திரமாயனையும் அவனுக்கு உதவும் கருங்கண்ணனையும் சிறையில் தள்ள முடியும். சிறையில் தள்ளுவது தவறு என்பது என் கருத்து. சிறையில் தள்ளுவதால் அவர்கள் மாவீரர்களாகி விடுவர். இது என் ஒருவனுடைய பிரச்னை மட்டுமன்று; சித்திரமாயனை மகாராஜாவாகக் கருதுபவர்கள் இருக்கிறார்கள். அவர் தவறான வழியில் செல்கிறார் என்றாலும் அவர் அரச குடும்பத்தவர். இந்த மண்ணின் மைந்தர். அதற்காகவாவது அவருக்குக் கொடுக்கும் கடுந்தண்டையைக் குறித்து அவருக்கு ஏற்பட வேண்டிய முடிவைப் பற்றி சபைதான் தீர்ப்பளிக்கலாம். இல்லையெனில் தக்க குற்றஞ்சாட்டி தருமாசனத்தாரிடமோ[5], அதிகரணத்தாரிடமோ[6] விசாரிக்க விடலாம். இது உள் நாட்டு விஷயம். அடுத்தபடியாக நம்மை நோக்கிப் படையெடுத்து வரும் இராஷ்டிரகூடர்களைப் பற்றி அறிய நீங்கள் ஆவலுடன் இருப்பீர்கள்.

"நாட்டுத் தளபதியான நான் பயந்து போய் பணிவது என்பதைப் பற்றியோ, சமாதானம் என்பதைப் பற்றியோ நினைக்கவே முடியாது. பல்லவர்களின் பரம்பரைப் பெயரை மாசுபடுத்த நான் எண்ண மாட்டேன். மல்லர்க்கு மல்லரும் அதிதீர வீரருமான அரசரின் பெயருக்கு வருங்காலத்தில் களங்கம் ஏற்பட நான் காரணமாக மாட்டேன். ஆனாலும் நாட்டு மக்கள் உயிரையும் உடைமையையும் சேதப்படுத்தாமல் எடுத்த செயலில் வெற்றி கிட்டுமென்றால் சபையோர் எவரும் அதற்கு மாறுபட்டுக் கூற மாட்டார்கள் என நினைக்கிறேன். அதைப் பற்றி அரசரே முடிவு செய்ய விட்டுவிடுவது நலம்.

---

5. அரசின் மேற்பார்வையில் இயங்கும் உயர்நீதி மன்றம்.
6. குற்ற (Criminal) வழக்குகளை விசாரிக்கும் மன்றம்.

"எல்லாவற்றையும்விட என் எண்ணம், நினைவு முழுதும் காடக முத்தரையர் பேரிலேயே இருக்கிறது. அவருக்கு என்ன நேர்ந்தது என அறிய ஆள் அனுப்பியிருக்கிறேன்..." என்று உதயசந்திரன் கூறவும், காடக முத்தரையரைப் பற்றி புகழ்ச்சியாக எல்லாரும் பேசத் தொடங்கி விட்டனர். உதயசந்திரனைப் பல குறுக்குக் கேள்விகள் கேட்க எண்ணிய கோட்டத் தலைவர்கள் பலர் முத்தரையரைப் பற்றிய பேச்செழுந்தவுடன் அவரது செயல் குறித்துப் புகழ ஆரம்பித்தனர்.

நந்திவர்மர் எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தது போல் ஒரு வார்த்தை கூறினார்: "நான் பட்டமேற முத்தரையர் செய்த உதவி மகத்தானது. அவரில்லாவிடில் நான் பீடமேறியிருக்க முடியாது."

அந்தச் சொல்லே மிகவும் உருக்கமாக அமைந்துவிட்டது. எல்லாரும் காடக முத்தரையரைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கும்போது வாயில் காவலன் உள்ளே வந்தான். வெளியே இளம் பெண் ஒருத்தியை வீரர்கள் அழைத்து வந்திருக்கிறார்கள் என்றான்.

மந்திராலோசனை சபைக்கு வர வேண்டிய பெண் யாராயிருக்கலாம் என்று எல்லாரும் யோசித்தபோது வீரர்கள் சந்திரமதியை உள்ளே அழைத்து வந்தனர்.

கலைந்த தலையும் அழுதழுது வீங்கிய கண்களுடன் கூடிய சந்திரமதி சபையில் அரசரையும் மற்றும் பெரியவர்களையும் கண்டவுடன் விம்மி விம்மி அழுதாள்.

"காடக முத்தரையர் இறந்து விட்டதாக இந்தப் பெண் அறிவிக்கிறாள். அவரது முதுகில் யாரோ கத்தியை வீசிக் கொன்று விட்டார்களாம்" என்று அவளை அழைத்து வந்த காவலர் தெரிவித்தார்.

மேலும் சந்திரமதி கூறிய செய்தி எல்லாரையும் திடுக்கிட வைத்தது. சபையிலுள்ளோர் துடித்தெழுந்தனர். உதயசந்திரன் வாள் உறையினின்று வெளியே துள்ளியது. அந்த மங்கிய



ஒளியிலும் அந்த வாள் பளபளவென மின்னியது. உரத்த குரலில் உதயசந்திரன் சபை நடுங்கக் கர்ஜித்தான்.

"இந்த நாட்டிற்காக உழைத்த உத்தமரைக் கொன்ற கூட்டத்தை ஒழிக்காமல் இந்த வாளை உறையில் போட மாட்டேன்" என்று சபதம் செய்தான்.

மற்றொரு செய்தியும் அப்போது வந்தது. காவிரிப்பாக்க ஏரி அருகே இராட்டிரகூடப் படைகள் நெருங்கி வருவதாக.

சபையோர் இப்போது உதயசந்திரனையும் நந்திவர்ம அரசரையும் மாறி மாறிப் பார்த்தனர்.

## 12. மூன்று செய்திகள்

திருக்கழுக்குன்றத்து அரண்மனையில் சித்திரமாயன் தன் தாயின் வருகைக்காக முன் கூடத்தில் காத்திருந்தான். சொர்க்கஸ்தரான பரமேஸ்வர வர்மர் அபிமான மனைவிகளுள் ராணி ரங்கதேவி முக்கியமானவள். பரமேஸ்வர வர்மர் தன் வாழ்நாளின் இறுதி காலத்தில் திருக்கழுக்குன்ற அரண்மனையிலேயே காலம் கழித்தார். காஞ்சி அரண்மனையில் தங்குவதில்லை. திருக்கழுக் குன்றத்து நச்சினார்க்கினிய ஆண்டவனைத் தரிசிப்பதும், தேவாரத் திருப்பதிகங்களைக் கேட்டானந்திப்பதுமாகக் காலம் கழித்து வந்தார் பரமேஸ்வர வர்மர்.

தன் திட்டங்களும் செயல்களும் வெற்றி பெறப் போகும் பெருமிதத்தில் சித்திரமாயன் தன் தாயைக் காண வந்திருந்தான். இதுவரை தன் நடவடிக்கைகள் எதற்கும் அவன் தாயின் ஆலோசனையை எதிர்பார்த்ததில்லை. இராஷ்டிரகூடர்கள்

காஞ்சியில் நுழைந்தவுடன் நிச்சயம் பல்லவ சாம்ராஜ்யத்தின் அரியணை தனக்குத்தான் என்று மனப்பால் குடித்த சித்திரமாயன் மகிழ்ச்சிக்குரிய செய்தியைத் தாயிடம் கூறித் தாயைப் பெருமிதத்துடன் களிப்படைய வைக்க வேண்டும் என விரைந்தான்.

"அம்மா, அம்மா" என்று கூவியவாறு வேகமாக நுழைந்தவன் தாய் பூஜை அறையில் இருப்பதை அறிந்தவுடன் முன்கூடத்தில் தாயின் வருகைக்காகக் காத்திருந்தான்.

கூடத்தில் அமர்ந்திருந்தபோது அரண்மனைக் கூடத்துச் சுவரில் தீட்டப்பட்டிருந்த பல்வகைச் சித்திரங்களிலும் அவன் கவனம் சென்றது. பலமுறை அவன் அந்த ஓவியங்களைப் பார்த்திருக்கிறான் என்றாலும் வாதாபியை நரசிம்மர் கொளுத்திவிட்டு வெற்றிப் பெருமிதத்துடன் திரும்பும் அந்த ஓவியம் அவனை இப்போது குழப்பியது.

காஞ்சிக்கு நேர்ந்த ஆபத்தையும், தோல்வியையும் சகிக்காத நரசிம்ம வர்மர் வாதாபி வரை சென்று புலகேசியின் படைகளை வென்று பல்லவ நாட்டின் வீரப் பெயரைக் காப்பாற்றினார்.

'நீ செய்வது?' அவன் உள்ளுணர்வு கேட்டது.

'பல்லவன் நாட்டின்மீது மாற்றரசன் படையெடுத்து வர உதவி செய்கிறாய். கோட்டைக் கதவுகளைத் திறந்து விடத் திட்டமிடுகிறாய். மாற்றரசன் படை கோட்டைக்குள் நுழையும்போது குழப்பம் ஏற்படுத்த வழி செய்கிறாய். மூலப் பண்டாரத்தையும் நெற்களஞ்சியத்தையும் கைப்பற்ற ஆட்களை அனுப்பியிருக்கிறாய். பல்லவ நாட்டிற்கு நற்பெயரை அளிப்பதா இது?' உள்ளுணர்வு அழுத்தந்திருத்தமாகக் கேட்டது.

சித்திரமாயன் சிரித்தான். வருகிற இராட்டிரகூட மன்னன் இங்கே தங்கியா இருக்கப் போகிறான்? என் தலையில் மகுடத்தைச் சூட்டிவிட்டுப் போகப் போகிறான். வந்து, உதவி செய்வதற்காக ஏதாவது மறு உதவி கேட்கலாம். திறை செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தலாம். 'சரி' என்று சம்மதித்துத் தலையாட்டுவது; பிறகு பார்த்துக் கொண்டால் போகிறது. பாண்டிய மன்னன் இருக்கவே இருக்கிறான். அவன் உதவியுடன்



இரட்டர்களை விரட்டி விடுவது. ஆட்சி நம் கையில் வந்துவிட்டால் நம் செயல்முறைகளே அலாதிதான்.

சித்திரமாயன் தன் உள்ளுணர்வுக்குச் சரியான மறுமொழி கூறி விட்டதாக எண்ணிக் கொண்டு இன்னும் புதுத் தெம்பை வரவழைத்துக் கொண்டு, தாய் வருவதை நோக்கி முகத்தைத் திருப்பிக் கொண்டான். அதைவிட வாதாபியை எரித்த ஓவியத்தினின்று அவன் முகத்தை மாற்றிக் கொண்டான் என்று கூறலாம்.

ரங்கதேவி பூஜை மண்டபத்தினின்று வெளியே வந்தாள். கறுமைத் திருமேனியாக இருந்தாலும் அவள் கண்களில் தீட்சண்யமிருந்தது. உண்மையில் வயது அதிகமாகவில்லை எனினும் உடையும், உள்ளக் கவலையும் முதுமைப் பிராயத்தைத் தோற்றுவித்தன. நெற்றியிலே துலங்கிய விபூதியும் தூய வெள்ளை ஆடையும் கையில் மலரும் ஆண்டவனுக்குப் படைத்த பழ வகைகள் நிறைந்த தட்டுடனும் அவள் காட்சியளித்தவுடன் சித்திரமாயன் எழுந்து நின்றான்.

அவன் தாயைப் பார்த்துப் பல மாதங்களாகி விட்டன. தாயிடமிருந்து ஒருகணம் கூடப் பிரியாத சித்திரமாயன் இடையே இவ்வளவு காலம் எப்படித்தான் பிரிந்தானோ? தந்தை இறந்த பிறகு ஓரிருமுறைதான் தாயைச் சந்தித்திருக்கிறான். அதுவும் சில விநாடிகள்தாம்.

தாயை ஏறெடுத்துப் பார்க்கக்கூட அவன் கண்கள் கூசின. வண்ணப் பட்டாடையுடனும், பலவித ஆபரணங்களுடனும், காதில் தொங்கும் குண்டலங்களுடனும், இடையிலே மேகலையுடனும் காட்சியளிக்கும் தாயை அவன் இந்தத் தவத் திருக்கோலத்தில் பார்ப்பது இதுதான் முதல் முறையாதலால் அவனையறியாமல் அவன் உள்ளத்தில் பயம் சூழ்ந்தது.

தாயின் காலடியில் தடாரென வீழ்ந்து விம்மி விம்மியழுதான்.

பல்லவ சாம்ராஜ்யத்து அரியணையில் அமர்ந்து சிங்கக் கொடியை ஏற்றிப் பிடிக்க விரும்பிய அந்த அரசிளங்குமரன்

கண்களிலிருந்து நீர் அருவி போல் பெருகியது. தனக்குத்தான் பட்டமேற உரிமை எனக் கட்சி பேசிய அந்த அரசகுமாரனின் குரல் ஏனோ தழுதழுத்தது.

"குழந்தாய்! வந்தாயா? நீ நலமாயிருக்கிறாயா?" என்று கூறி, ராணியார் சித்திரமாயனைக் கேட்டாள்.

"மகனே, உன்னைப் பற்றிக் கேள்விப்படுவதெல்லாம் உண்மைதானா?" என்று தாய் அடுத்த கேள்வி கேட்டாள்.

சித்திரமாயன் இதை எதிர்பார்க்கவில்லை. தாயிடம் தன் நடவடிக்கையை எடுத்துக் கூறிப் பெருமைச் செயலைப் பேசித் தாயின் ஆசி பெறவே வந்தான்.

பல்லவ நாட்டின் அதிபதியாக இன்னும் இரண்டொரு நாள்களில் தான் ஆகிவிடப் போகும் நிகழ்ச்சியைக் கூற அங்கு வந்தான்.

ஆனால், ஆனால்... தாய் கேட்ட கேள்வியின் ஒலி?

அந்தப் பார்வையிலே, அந்தக் கேள்விக் குரலிலே கேட்காமல் கேட்ட ஆயிரமாயிரம் கேள்விகள் மிளிர்ந்தன.

'உன்னைப் பற்றிக் கேள்விப்படுவதெல்லாம் உண்மைதானா?' என்ற வார்த்தைகள், அவனுடைய செய்யத் தகாத செயல்களைக் கண்டித்துக் கேட்பன போலிருந்தன.

சித்திரமாயன் தன் கலக்கத்தை வெளிக்குக் காட்டாமல் முகத்தில் களிப்பை வரவழைத்துக் கொண்டு, "தாயே, நல்லதொரு செயல் புரியப் போகிறேன். அதற்காகத் தங்கள் ஆசி பெற வந்திருக்கிறேன். மகிழ்ச்சியுடன் தாங்கள் விடை கொடுப்பீர்கள் என எண்ணி வந்திருக்கிறேன். மகத்தான செயலை உங்கள் மகன் செய்யப் போகிறானம்மா, செய்யப் போகிறான். அதைக் கண்டு பெருமிதம் அடையுங்கள் அம்மா. ஈன்ற பொழுதினும் பெரிதும் உவகை அடையுங்கள் அம்மா. ஆனால், ஆனால்... தாங்கள் ஏதாவது தவறாகக் கேள்விப்பட்டீர்களா அம்மா?" - சித்திரமாயன் குரலில் சுருதி ஏறியும் இறங்கியும் காணப்பட்டது.



'ஈன்ற பொழுதினும்' என்று ஒருமுறை ரங்கதேவியின் உதடுகள் முணுமுணுத்தன. கையிலுள்ள தட்டை அருகேயிருந்த மஞ்சத்தில் வைத்துவிட்டுத் தானும் அமர்ந்து, சித்திரமாயனையும் அமருமாறு சைகை காட்டினாள்.

சித்திரமாயன் நெஞ்சு படபடத்தது. தாயின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை. தன்னை உட்காரச் சொன்னதற்கும், முதலில் கூறிய வார்த்தைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும் என எண்ணினான்.

"சித்திரமாயா!" என்று தாய் தொடங்கினாள், "கடந்த சில தினங்களாக உன்னைப் பற்றி வரும் செய்திகள் உண்மைதானா?" என்று மீண்டும் பேசத் தொடங்கினாள்.

சித்திரமாயன் மறுமொழி கூறும் முன்பே ரங்கதேவி கடுமையான குரலில், "தொடர்ந்து பல்லவ நாட்டின் மீது படையெடுத்து வர வேறு நாட்டிற்குத் தூது அனுப்பியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உனக்கு என்ன உரிமையிருக்கிறது என்று நீ அதைச் செய்தாய்?" - ரங்கதேவியின் சொற்களில் கனல் தெறித்தது. கன்னல் மொழியுடன் தாய் ஆசி கூறுவாள் என நம்பிய சித்திரமாயனைக் கண்கலங்க வைத்தது.

"அம்மா!" என்று ஏதோ சொல்ல முற்பட்ட சித்திரமாயனை ரங்கதேவி இடைமறித்து, "என்னை நீ, 'அம்மா' என்றழைக்கும் சொல்லைக் கேட்கும்போதே வெட்கமாயிருக்கிறது. பல்லவ நாட்டின் துரோகி என உனக்கு வருங்காலத்தவர் பட்டம் சூட்டுவார்களே என நினைக்கும்போது உடல் குலுங்குகிறதடா, உடல் குலுங்குகிறது" - பேச்சு உச்சநிலையை அடைந்தது.

சித்திரமாயனுக்குச் சிறிது தெளிவு உண்டாகியது. "அம்மா!" என்றான். சொல்லிலே முன்பை விட அழுத்தமிருந்தது.

"அம்மா! என்னை ஏன் துரோகி என்று கூறுவார்கள்? நியாயமான உரிமைக்காகப் போராடுகிறேனே நான் துரோகியா? என் அரியணையை நான் அடையப் பிறர் உதவியை நாடுவது துரோகச் செயலா? உரிமையுடையவனைத் தள்ளி வேறொருவர்

பட்டமேறுவது துரோகச் செயலா? எது துரோகம் சொல் தாயே, சொல்!"

"உரிமை என்று யார் கூறியது?"

"ஒருவர் கூற வேண்டுமா? தந்தையின் பட்டம் தனயனுக்கு என்பதை ஒருவர் கூறி அறிய வேண்டுவதில்லையே. மாற்றான் வந்து பறிக்காதவரையில் தந்தைக்குப் பின் மகன்தானே பட்டமேற வேண்டும்?"

"தந்தைக்குப் பின் தனயன் என்பது உண்மைதான். ஆனால் பட்டத்தைப் பற்றி முடிவு செய்வது மக்களலல்லவா? நகர மக்களும் வணிகர்களும் கோட்டத் தலைவர்களும் சேர்ந்தல்லவா நந்திவர்மனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்..."

"அம்மா! உங்களை யாரோ தூண்டி விட்டிருக்கிறார்கள். உங்கள் மகன் உரிமையை நீங்களே மறுத்தால் வேறு யார் அனுமதிக்கப் போகிறார்கள்?"

"ஆம், நான் மறுக்கிறேன் உன் உரிமையை; எதிர்க்கிறேன் உன் செய்கையை. உன் தாய் என்ற முறையிலன்று. சிம்ம விஷ்ணுவின் பரம்பரையில் வந்த பல்லவ மன்னனின் அபிமான ராணி என்ற முறையில், பல்லவ குலப் பெருமையைக் காப்பாற்ற வேண்டிய மகத்தான பொறுப்பு இந்தப் பெண்ணிடமும் இருக்கிறது என்ற முறையில்... உன் செய்கை சரியன்று. நாளை ஏற்படும் விளைவுகளை நீ தாங்க வேண்டாமா?" - ரங்கதேவியின் குரலில் இப்போது பரிவு தெரிந்தது.

"நாளை ஏற்படும் விளைவுகள்! அம்மா, நாளை ஏற்படும் விளைவுகளை நீங்கள் பார்க்கத்தான் போகிறீர்கள் அம்மா! நாளை இந்நேரம் காஞ்சிக் கோட்டை என் வசமாகிவிடும். அதற்கு மறுநாள் இராஷ்டிரகூடப் படைகள் கோட்டை வாயிலில் நுழைவர். அரசாங்கப் பண்டாரமும் மற்றும் முக்கிய இடங்களும் என் வசம். அந்தக் கோழை உதயசந்திரன் அரசருடன் எங்கோ கோயில்களைத் தரிசிக்கப் போயிருக்கிறானாம். அவன் திரும்பு வதற்குள் கோட்டை என்ன... இந்த நாடே சித்திரமாயனுடையது.



தாயே! யாருடைய தூண்டுதல் பேரிலோ தவறுதலாகப் பேசிவிட்டீர்கள். இந்தப் பரந்த சாம்ராஜ்யமும் மக்களை ஆளும் பொறுப்பும் எனக்கு எதற்கம்மா? ஆசையால் நான் இந்தக் காரியத்தைச் செய்யவில்லை. பல்லவ அரசபீடம் பரம்பரைச் சந்ததியாரை விட்டு வேறு கிளை மரபினருக்குப் போகக்கூடாது என்பது என் எண்ணம். அதனால்தான் என் உயிருக்குக் காத்திருக்கும் ஆபத்தையும் கருதாமல் நான் இந்த மாபெரும் காரியத்தில் இறங்கினேன். இராஷ்டிரகூட அரசனுக்கு ஓலை அனுப்பினேன். ரகசியமாக ஆயுதங்களைத் தயார் செய்தேன். ஆறாண்டுகளுக்கு முன்பு நான் அவசரப்பட்டு திட்டமிடாமல் கலகம் செய்து விட்டேன். இப்போது எல்லாம் திட்டமிட்டபடியே நடக்கப் போகிறது. அதனால் தாயே..." - சித்திரமாயன் முடிக்கவில்லை.

ரங்க மகாதேவி சீற்றத்துடன் எழுந்தாள். ஏதோ கூற வாயெடுத்ததை அடக்கிக் கொண்டு, "எதையும் யோசித்துச் செய் சித்திரமாயா! அரச குடும்பத்துக்கும் உனக்கும் சம்பந்தமே இல்லை. பேசாமல் நீ இந்த அரண்மனையில் அமைதியாக, வேளைக்குத் தக்க உணவை உண்டு காலம் கழித்து வா. உனக்கொரு முக்கிய பதவியைப் பல்லவப் படை முகாமில் வாங்கித் தருகிறேன்" என்று உபதேசம் போல் கூறத் தொடங்கி, "சித்திர மாயா! உன்னுடன் எவ்வளவோ பேச வேண்டும். இப்போது நேரமில்லை. ஒன்றுமட்டும் கூறுவேன்! இனியும் நந்திவர்மனுடன் போராடாதே. அவனுடன் சமாதானமாகச் செல்வதே மேல்..." என்று தொடர்ந்து கூறினாள்.

சித்திரமாயனுக்குத் தாய் என்ன சொல்லப் போகிறாள் என்பது தெரிந்தது. நீண்ட நாள்களாக அவன் மனத்தில் ஒரு சந்தேகம் இருந்து வந்தது. தான் பல்லவ சந்ததியைச் சேர்ந்தவனல்லன் என்று ஊர் கூறுகிறது. இப்போது அன்னை கூறுகிறாள். அந்த உண்மையை, அதன்பின் புதைந்திருக்கும் ரகசியத்தைக் கேட்டுவிடுவது என்று எண்ணியபோது தாய் மீண்டும் பேசினாள்.

"சித்திரமாயா! நீ பட்டத்துக்காகக் கிளர்ச்சி செய்கிறாய் என்று முதன் முதலில் கேள்விப்பட்டபோதே திடுக்கிட்டேன்."

தேவி வார்த்தையை முடிக்கவில்லை. "ஏனம்மா, தாங்கள் திடுக்கிட வேண்டும்? சின்னஞ் சிறு பிராயத்தனான இவன் எப்படிப் புரட்சி செய்து அரசுரிமையை அடையப் போகிறானென்றா திடுக்கிட்டீர்கள்? நான் ஒருவன் போராடவில்லையம்மா. என்னைச் சார்ந்து பல பெரிய மனிதர்கள் பக்கபலமிருக்கிறார்கள். இரண்டு மகத்தான சாம்ராஜ்யத்து மன்னர்கள் இருக்கிறார்கள். மந்திரி மண்டலத்தில் சிலர் ஆதரவு தர இருக்கிறார்கள். வீரர்கள் பலர் இருக்கிறார்கள். ஆயுதங்களோ ஏராளம்" - சித்திரமாயன் உணர்ச்சியால் நெஞ்சடைக்கப் பேசிய வண்ணமிருக்கும்போது ரங்கதேவி பொறுமையிழந்து, "சித்திரமாயா! உன்னுடைய இந்த வார்த்தைகளைக் கேட்கவா இன்றைய பொழுது எனக்கு விடிந்திருக்கிறது? நீ கூறாமலே உனக்குத் துணையாயிருப்பவர்களைப் பற்றி எனக்குத் தெரியும். சாம்ராஜ்யாதிபதிகள் ஆதரவு தருகிறார்கள் என்றால் ஆளுக்கொரு பங்கு கூறு போடத்தான்! யார் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் வேற்று நாட்டு மன்னர்கள் நம் நாட்டு நடப்பில் தலையிடுவதை நான் ஆதரிக்க மாட்டேன். கருங்கண்ணன் என்ற அந்தக் கோடாரிக் காம்பின் யோசனையில் நீ பாழாகிறாய். உன்னைச் சிறையில் அடைத்து மரண தண்டனை விதிக்கக்கூட நாட்டு முதலமைச்சர் என் யோசனையைக் கேட்டார். அப்பா, மகனே! உன்னைக் காப்பாற்ற வேண்டும் என்று என் அங்கம் ஒவ்வொன்றும் துடித்ததடா. உன்னை நான் பெற்றதால் அன்று; வளர்த்ததால்..." தேவி கூறிக் கொண்டே போனாள்.

சித்திரமாயன் வந்த காரியம் முடியவில்லை. தாயின் ஆசி கிடைக்காது என்று நிச்சயமாகத் தெரிந்து விட்டது. இந்த நிலையில் அவன் சொல்ல வந்தவை அனைத்தையும் கூறவில்லை. அதைக் கூறாவிடில் அவனுக்கு நிம்மதியே ஏற்படாது போலும்.

"தாயே! நீங்கள் என்னை எப்படி வேண்டுமானாலும் நினைத்துக் கொள்ளுங்கள். வாழ்வு அல்லது சாவு என்ற துணிவுடன் செயலில் இறங்கிவிட்டேன். வெற்றி பெற்றால் மகா சாம்ராஜ்ய அரசன்; தோல்வியுற்றால் இருக்கவே இருக்கிறது வீர சொர்க்கம் அம்மா! நாளை இந்நேரம் காஞ்சிக் கோட்டையும்



அரண்மனையும் கருவூலக் கூடமும் ஆயுதக் கிடங்கும் என் வீரர்கள் வசமாகிவிடும். காஞ்சி மக்கள் செய்வதறியாது திகைக்கும்போது வைரமேகன் காஞ்சிக்குள் நுழைவான்..."

ரங்கதேவி சீறி எழுந்தாள். "என் முன் நிற்காதே போ. உன் தீய எண்ணமே உன்னை அழித்து விடும். என் மகனாயிருந்தால் இப்போதே உன்னை உடை வாளால் கொன்று போட்டிருப்பேன். சித்திரமாயா! அழிவு காலம் உன்னை நெருங்குகிறது, போ. என் முன் நில்லாதே. ஓடு, ஓடு..." என்று கூறிவிட்டு வாயிற் பக்கம் திரும்பி, "யாரங்கே, உடனே காஞ்சியை நோக்கி நான் கிளம்ப வேண்டும். பல்லக்கை ஆயத்தப்படுத்துங்கள்" என்று கட்டளையிட்டு விட்டு அங்கிருந்து அகன்றாள்.

சித்திரமாயனுக்குத் தாயின் கோபத்தை விட தாய் கூறிய வார்த்தைகள் வேதனையை அளித்தன. "என் மகனாயிருந்தால் உன்னை எப்போதோ உடை வாளால் கொன்றிருப்பேன்" என்று தாய் கூறிய வார்த்தைகள் கலக்கத்தை அளித்தன. உடை வாளால் கொன்றிருப்பேன் என்பதை விட 'என் மகனாயிருந்தால்' என்ற வார்த்தை அவனைத் திடுக்கிடச் செய்தது.

தாயிடம் இன்று எப்படியாவது தன்னைப் பற்றிய உண்மையைக் கேட்டு அறிந்து விடவேண்டும் என்று துடித்துத் தாயின் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியபோது பணியாள் ஒருவன் வந்து சித்திரமாயனை நோக்கி, "ஐயா, அரண்மனை வாயிலில் உங்களைத் தேடிக் கொண்டு ஒருவர் காத்திருக்கிறார். அவசரமாக உங்களைக் காண விரும்புகிறார்" என்றான்.

சித்திரமாயன் வேகமாக நடந்து வாயிலை அடைந்தபோது தாமரைப்பாடி வணிகன் பெரியநம்பி காத்திருப்பதைக் கண்டான். வணிகன் பெரியநம்பி முகம் வாட்டமுற்றிருந்தது.

குனிந்த தலையுடன் அவன் கூறினான்: "ஐயா, மூன்று அவசரச் செய்திகள். குகையில் அடைக்கப்பட்ட காடக முத்தரையரும்

மற்றவர்களும் தப்பிவிட்டனர். நாம் எதிர்பார்ப்பது போல் தளபதியும் நந்திவர்மனும் வடக்கே போகவில்லை. மூன்று பிரிவுகளாகப் பிரிந்து பல்லவர் படைகள் தயாராயிருக்கின்றன. இரட்டர்களுக்கு நாம் அனுப்பிய செய்திகள் ஏதும் இதுவரை போய்ச் சேரவில்லை" என்றான்.

சித்திரமாயனுக்கு அதற்குமுன் ஏற்பட்ட மனக்குழப்பமும், புதிய செய்தியால் ஏற்பட்ட அதிர்ச்சியும் சேர்ந்து ஆத்திரத்தைப் பொங்கி வரச் செய்தன.

"நம்மவர்களால் எதை ஒழுங்காகச் செய்ய முடியும்? தப்பி ஓடினால் என்ன? காடக முத்தரையர் காஞ்சியை அடைவதற்குள் அவனைக் கொன்று போடுவதற்கு ஒருவருக்கும் துணிவு இல்லையா?" என்று கட்டளையிட்டுத் தானும் குதிரை மீதேறி காஞ்சியை நோக்கி விரைந்தான்.

## 13. அரசகுமாரியின் கனவு

வைரமேகன் குதிரை மீதமர்ந்து முன் செல்ல பின்னால் யானை மீதும் குதிரை மீதும் படை வீரர்கள் வந்து கொண்டிருந்தனர். நூற்றுக்கணக்கில் தானிருந்தது அவர்கள் எண்ணிக்கை. அவர்கள் முகங்களில் உற்சாகத்தைக் காணோம். தங்கள் நண்பர்களில் பலர் தலைநகரான மான்ய கேடத்திற்குச் சென்று விட அரசர் உத்தரவிட்டதையும் தாங்கள் மட்டும் தொடர்ந்து செல்வதையும் காண அவர்கள் வெறுப்படைந்தனர்.

"யுத்தமும் இல்லாமல் சமாதானமுமில்லாமல் அரசர் ஏன் சென்று கொண்டேயிருக்கிறார்" என்று ஒருவருக்கொருவர் முணுமுணுத்துக் கொண்டனர்.

இதே முணுமுணுப்பு பகிரங்கமாகவே ரேவாவின் தோழியிடமிருந்து வந்தது.



"எதற்காக உன் தந்தை முடிவேயில்லாமல் போய்க் கொண்டேயிருக்கிறார்?"

"எதற்காகவோ? நாடு நகரங்களைப் பார்க்க இருக்கலாம்" என்று ரேவா பதிலளித்தாள்.

இருபுறமும் அடர்ந்த மரங்கள் நிறைந்த நிலத்தின் வழியாக அவர்கள் சென்று கொண்டிருந்தனர். வழியில் கிராம மக்கள் முன் அறிந்தவர்கள்போல் வீரர்களுக்கு வேண்டிய உணவு அளித்து வந்தார்கள்.

கிராம மக்களின் ஆதரவு வைரமேகனை வியப்பில் ஆழ்த்தியது. இவ்வளவு ஒத்துழைப்பு இருக்கும் என நான் அறிந்திருந்தால் திரும்பிப் போகுமாறு கூறிய வீரர்களையும் அழைத்து வந்திருப்பேனே என எண்ணினார்.

அவர் எண்ணத்தை ரேவா கலைத்தாள்.

"அப்பா, நாம் எங்கே சென்று கொண்டேயிருக்கிறோம்?"

"ஏனம்மா, காஞ்சியை நோக்கித்தான்!"

"காஞ்சி நோக்கிச் செல்லும் போது வழியில் எங்கும் தங்கக்கூடாது என்ற உறுதியா?"

"அப்படியொன்றும் இல்லை. இதோ காஞ்சியை நெருங்கி விட்டோம். நாம் சிறிது மெல்லச் செல்வதால் தவறு ஏதுமில்லை; பலன் நிறைய இருக்கிறது."

"ஆமாம்; ஆமாம்; இருக்கிறது. பல்லவ வீரர்கள் இன்னும் ஏராளமாகத் திரண்டு எழுவர். நாம் உயிரோடு போய்ச் சேர வேண்டாமா அப்பா?" - ரேவா துயரமும் சற்று ஆத்திரமும் நிறைந்த குரலில் கேட்டாள்.

மகளின் சோர்வையும், கோபத்தையும் கண்ட வைரமேகன் புன்முறுவல் பூத்தார்.

"ஏனம்மா, நீதானே உடனே காஞ்சி போக வேண்டும் என்று துடித்தாய்? விநாடி கூட தாமதம் செய்யாமல் செல்ல வேண்டும் என்ற நோக்குடன் செல்கிறேன்."

"ஏனப்பா, என்னுடைய எலும்புக் கூட்டை மட்டும் காஞ்சி கொண்டு செல்ல உத்தேசமா உங்களுக்கு?"

மகள் என்ன சொல்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டார் வைரமேகன்.

அகண்டு பரந்து கடல்போல் காட்சியளித்த காவிரிப்பாக்க ஏரியருகே தங்கியிருக்குமாறு வீரர்களுக்குக் கட்டளையிட்டார் வைரமேகன்.

கடல் போல் விரிந்திருந்த ஏரிக்கரையோரமாக இராஷ்டிரகூடர்களின் படைகள் பாடியிறங்கினர்.

ரேவாவும், தோழி காஞ்சனமாலாவும் கூடாரத்தில் அமர்ந்தவாறு எதிரே தெரிந்த ஏரிக்கரையையும் தொலை தூரத்துக்கு அப்பால் வானத்தையும் ஏரியையும் ஒன்று சேர்க்கும் கோடுபோல் தோற்றமளித்த தோப்புகளையும் கண்டு ரசித்த வண்ணம் அமர்ந்திருந்தனர்.

"தந்தையின் எண்ணம் இன்னதென்றே அறிய முடியவில்லை. அவரது போக்கும் விசித்திரமாயிருக்கிறது. அதைவிட விசித்திரம் பல்லவர்களின் போக்கு. இவ்வளவு தூரம் பல்லவ நாட்டிற்குள் வந்துவிட்டோம். கிராமந்தோறும் வரவேற்பு பிரமாதமாயிருக்கிறதேயன்றி சிறு எதிர்ப்பையும் காணோம்" - ரேவா கூறினாள்.

"அரசரும், பல்லவ தூதர்களும் வட பெண்ணையாற்றாங்கரையில் என்ன பேசிக் கொண்டார்களோ? காஞ்சியைத் தாக்கும் நோக்கத்துடன் இப்போது செல்வதாகவும் கூற முடியாது. சில நூறு வீரர்களைக் கொண்டு கடல் போன்ற பல்லவ சைன்யத்தை எதிர்க்க முடியுமா? தேவி, எனக்கு ஓர் எண்ணம் தோன்றுகிறது. பல்லவர்கள் ரொம்பவும் பொல்லாதவர்கள். காஞ்சிக்கருகே படை நெருங்கும் வரை காத்திருந்து, நெருங்கியவுடன் திடீரெனத் தாக்கலாம்."

"காஞ்சனா! உன் எண்ணமும் உண்மையாயிருக்கலாம். தந்தையுடன் அந்தப் பல்லவ வீரர்கள் என்ன பேசினார்கள் என்று எனக்கே தெரியாது. எனக்குத் தெரிந்தவரையில் தந்தை



யாரையோ எதிர்பார்த்திருக்கிறார் எனத் தோன்றுகிறது. காஞ்சிக்கு வருமாறு உதவி கேட்டவர்களின் ஆட்களைப் பிறகு காணவேயில்லை. திருவொற்றியூரிலேயே எதிர்பார்த்தார். இந்த நிலையில் என்ன செய்வார் என்று எனக்குப் புரியவில்லை."

"நீங்களாயிருந்தால் என்ன செய்வீர்கள்?" - காஞ்சனா சிரித்தவண்ணம் கேட்டாள்.

ரேவா கூறினாள்: "நான் என்ன செய்வேனா? என் நோக்கமெல்லாம் காஞ்சியைக் காண வேண்டும் என்பதே. அங்கும் பல கடிகைகள் இருக்கின்றனவாம்; பல மடங்கள் இருக்கின்றனவாம். அதிலே சேர்ந்து கல்வி கற்றால்..."

காஞ்சனா விழுந்து விழுந்து சிரித்தாள். "தேவியாரே! உங்கள் எண்ணம் விநோதமாக இருக்கிறதே. பெண்களை எங்கேயாவது கடிகைகளிலும், மடங்களிலும் மாணவர்களாகச் சேர்த்துக் கொள்வதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அதிலும் அரசகுமாரியைச் சேர்ப்பதென்றால் யோசிக்க மாட்டார்களா?"

"ஹூம்... ஆண் வேடம் போட்டுக் கொள்கிறேன். தந்தையிடம் கூறுவேன்: 'அப்பா என்னுடைய எண்ணத்திற்காகத்தானே, என் ஆசையை நிறைவேற்றத்தானோ தாங்கள் காஞ்சிக்குச் செல்கிறீர்கள். நான் மாறு வேடத்தில் காஞ்சிக்குப் போகிறேன். மடத்தில் படிக்கிறேன். நீதி நூல்களையும் காவியங்களையும் தமிழ் மொழியையும் கற்கிறேன். தாங்கள் திரும்பித் தலைநகருக்குச் சென்று விடுங்கள்' என்று."

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது திடீரென 'கலகல'வென நகைப்பொலி கேட்டது.

வைரமேகன் அங்கு நின்று கொண்டிருந்தார். இவ்வளவு நேரம் மகளும், அவள் தோழியும் பேசிக் கொண்டிருந்ததை அவர் கேட்ட வண்ணம் நின்றிருக்க வேண்டும்.

"மகளே! உன் அதிஅற்புத யோசனையைக் கேட்டேன். அரசகுமாரியின் துணிவைப் பாராட்ட வேண்டும். ஆனால் அது

அவ்வளவு எளிதன்று மகளே! இப்படித்தான் மயூரசர்மன் என்னும் வேற்று நாட்டு அரசகுமாரன் ஒருவன் காஞ்சிக்குச் சாதாரண மாணவனாகக் கல்வி கற்க வந்தான். கந்தவர்மன் காஞ்சியை அப்போது ஆட்சி புரிந்து கொண்டிருந்தார். மயூரசர்மனின் உள் நோக்கத்தை அவர் புரிந்து கொண்டு காஞ்சியிலிருந்து அவனை விரட்டி விட்டார்."

"அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் அப்பா? அவர் ராஜ்ய நோக்கத்திற்காக உளவு அறிய வந்திருக்கலாம். என் நோக்கம் அப்படியன்றே. அப்பா எனக்கென்னவோ யுத்தம் செய்வது துளிக்கூடப் பிடிக்கவில்லை. மாபெரும் அரசரின் மகளா இப்படிப் பேசுகிறாள் என நீங்கள் எண்ணலாம். ஆனால், அப்பா நான் மனம் விட்டுக் கூறுகிறேன்; என் கனவைக் கூறுகிறேன்..." ரேவா முடிக்கவில்லை.

தோழி காஞ்சனா தொடர்ந்து, "அரசர்க்கரசே! தேவியாரின் கனவு எனக்குத் தெரியும். அதை அவர் எப்படிச் சொல்வார்? தேவியார் மணம் புரிந்து வேற்று நாட்டு நாட்டு அரசியாவதென்றால் பல்லவ நாட்டிற்குத்தான் அரசியாவார்களாம். காஞ்சியிலே கலை பயிலும்போது காஞ்சி அரசகுமாரன் கவனம் தன்மீது விழ வேண்டும் என்று கனவு காண்கிறார்!"

ரேவாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது. தோழியைக் கோபிப்பதுபோல் நடித்து, "உன்னிடம் இவற்றையெல்லாம் சொன்னேனா? ஏனடி இப்படிக் கதை கட்டிக் கூறுகிறாய்?" என்றாள்.

வைரமேகன் மகளை அணைத்தவாறு, "ரேவா! உன் கனவு தவறன்று. நானும் பல காரணங்களுக்காகப் பல்லவ சாம்ராஜ்யத் தொடர்பை விரும்புகிறவன். பல்லவ நாட்டில் அரசுரிமைக் கலகம் ஏற்பட்டிருப்பதையும், அதிலும் ஒரு சாரார் என் உதவியை நாடியதையும் காரணமாக வைத்துக் கொண்டுதான் படைகளுடன் புறப்பட்டேன். போர் நடந்து வெற்றி பெற்றுப் பல்லவ நாட்டின் பக்க பலத்தை அடைவது, அல்லது சமாதானத்துடன் பல்லவ நாட்டின் உதவி பெறுவது. நமக்கு நம் சாம்ராஜ்யத்தில் ஆபத்து



காத்திருக்கிறது. கீழைச் சாளுக்கியர்களும் பட்டம் வேண்டிய போர் புரிய உன் மாமன்மார்களும் எந்தக் கணத்திலும் என்னுடன் போர் தொடுக்கலாம்; நான் இராஷ்டிரகூட சாம்ராஜ்யத்தைப் பற்றிப் பெரும் கனவு காண்கிறேன். விந்தியமலை முதல் காவிரிக்கரை வரை மகத்தான சாம்ராஜ்யத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தையும், உனக்குக் கல்வி கற்பித்த அதே குருதான் எனக்கும் உண்டாக்கினார். விந்தியத்துக்கு வடக்கே மாபெரும் சாம்ராஜ்யங்களை எழுப்பிய குப்தர்களைப் பற்றியும் ஹர்ஷரைப் பற்றியும் அவர் கூறும்போது நான் வல்லூறுக் கொடி தென்பகுதி முழுவதும் பறக்க வேண்டும் என்று கனவு கண்டேன். என் காலத்தில் முடியாவிடினும் அது வருங்காலத்தில் நடக்க வித்திட வேண்டுவது என் கடமையல்லவா? அந்த எண்ணத்தில்தான் நான் தெற்கு நோக்கிப் புறப்பட்டேன். உன்னை மாபெரும் சாம்ராஜ்யத்துக்கு அரசியாக்குவது என்பதுதான் என் எண்ணம். கலிங்கத்து அரசரும், கதம்ப நாட்டு மன்னரும் வலிய வந்து உன்னை மணக்க ஆசை தெரிவித்தனர். ஆனால் மகளே! உன்னை நூற்றோடு நூற்றோராவது பட்ட மகிஷியாக ஆக்கி, அந்தப்புரத்து அழகுப் பெண்ணாகக் காண நான் விரும்பவில்லை. சுத்த வீரன் ஒருவனுக்கு உன்னை மணம் புரிந்து கொடுக்க எண்ணுகிறேன். பல்லவ நாட்டுத் தொடர்பு கிடைத்தால் என் லட்சியம் ஈடேறியதாகும். அது வாள் முனையில் கிடைத்தாலும் சரி; அன்பு வார்த்தை முனையில் கிடைத்தாலும் சரி. ஆனால் இதுவரை என் திட்டம் சரிவர நடக்கக் காணோமே குழந்தாய்! என்னை வரவழைத்தவர்களைக் காணவில்லை. பல்லவ மன்னரின் தூதர்கள் தெரிவித்துப் போனவைகயோ எனக்குக் குழப்பத்தை அளிக்கின்றன. அதிலும் பல்லவ நாட்டுத் தளபதியே வந்து என்னிடம் பேசியிருக்கிறார். உன் தோழி கூறியதுபோல் அதில் ஏதாவது சூழ்ச்சி இருக்குமோ என எண்ணுகிறேன். இனிக் காஞ்சியை நோக்கிப் போகும் முன் தக்க ஆயத்தங்களுடன் செல்ல வேண்டும்" என்று கூறியபோது வாயிலில் போர் வீரன் ஒருவன் வந்து நின்றான். அரசரைப் பேட்டி காண எவரோ வந்திருப்பதாகத் தெரிவித்தான்.

வைரமேகன் அங்கு சென்றார். இராஷ்டிரகூட மன்னரைத் தேடி வந்தவன் வேறு யாருமல்லன்; சித்திரமாயனை எப்படியாவது பட்டத்திலேற்றி விடத் திட்டமிட்டு இரவும் பகலும் பாடுபட்டு வரும் கருங்கண்ணன்தான்.

கருங்கண்ணனைக் கண்டவுடன் வைரமேகன் முகம் மலர்ந்தது. அதைவிடக் கருங்கண்ணன் கூறிய செய்திகள் வைரமேகன் குழப்பத்தைப் போக்கி குதூகலமடையச் செய்தன.

ரேவா தேவி தந்தையிடன் சென்றபோது வைரமேகன் முகமலர்ச்சியுடன் கூறினார்: "மகளே! நம் கலக்கத்துக்கு விடிவு வந்துவிட்டது. இந்த நேரம் காஞ்சிக் கோட்டையைக் கலகக்காரர்கள் பிடித்திருப்பார்களாம். நாம் எளிதில் கோட்டைக்குள் நுழையவும் வழி செய்திருக்கிறார்களாம். நாம் காஞ்சிக்குள் நுழைந்து, இளவரசர் சித்திரமாயனை அரியணையில் அமர்த்தி விடுவது முதல் வேலை. மகளே! நீ பல்லவநாட்டு அரசியாவது அடுத்த வேலை" என்றார்.

அப்போது கருங்கண்ணன் குறுக்கிட்டு, "அரசே! எதற்கும் முன் ஜாக்கிரதையுடன் நம் படைகள் செல்வது அவசியம். எந்தக் காலத்தில் நம்மைப் பல்லவ வீரர்கள் தாக்குவார்கள் எனத் தெரியாது. அதனால் இப்போதே படைகள் புறப்படட்டும்; பொழுது புலருமுன்னர் கோட்டைக்குள் நுழைந்து விடலாம். நான் உங்களைக் காஞ்சியில் சந்திக்கிறேன்" என்றான்.

ரேவாவின் கருவிழிகளில் ஏனோ மழைக்கால மேகம்போல் நீர் சேர்ந்திருந்தது. விசும்பும் ஒலி அவள் அறியாது பொங்கிப் படர்ந்தது.



## 14. உட்பகைவன்

காலைக் கதிரவனின் இளங்கிரணங்கள் அரண்மனையில் சாளரங்கள் வழியாகவும், பிரம்மாண்டமாக நின்ற வாயில் கதவுகளின் வழியாகவும், நடுச் சபா மண்டபத்து விதானத்தின் பக்கங்களிலே ஏற்படுத்தப்பட்டிருந்த சிற்ப விசித்திரமான காலதர்கள் வழியாகவும் அரண்மனைக்குள் நுழைந்து அங்குக் கூடியிருந்தவர்களின் முகத்திலே புதுத் தெம்பை ஊட்டின.

கோட்டத்துத் தலைவர்களும் மற்றும் கூடியிருந்தவர்களும் உதயசந்திரனையும் அரசர் நந்திவர்மனையும் மாறி மாறிப் பார்த்தனர். உதயசந்திரன் செய்த சபதம் அங்கிருந்தோர் உடலில் ரோமாஞ்சலியை ஏற்படுத்தியது. சபதத்தின் தெள்ளிய குரல் அந்த மண்டபமெங்கும் நிறைந்தது. அந்தச் சொற்களிலே இருந்த உண்மை ஒலியும், உறையினின்று எழுந்த வாள் கதிரொளியிலே கார் கால மின்னல் போல் பளபளத்த ஒளியும் சேர்ந்து அங்கிருந்தோரை 'ஆகாகாரம்' செய்யச் செய்தன. சபையிலுள்ளோர் 'நந்திவர்மர் வாழ்க! பல்லவ மல்லர் வாழ்க' என்று கோஷமிட்டுத் தம் ஆதரவைத் தெரிவித்தனர். சபை கலைந்தது. உதயசந்திரன், அரசருடன் அந்தரங்கமாகப் பேசிவிட்டு வெளியே புறப்பட்டான். கோட்டத்துத் தலைவர்களும் மற்றவர்களும் தத்தமது வழியே ஏகினர்.

ஆனால், எல்லாரிடையேயும் கோட்டையின் பலத்தைப் பற்றியே பேச்சு நிறைந்திருந்தது. கோட்டைக் கதவுகளுக்கு இருக்க வேண்டிய பலத்தைப் பற்றியும், மதிலுக்கு இருக்க வேண்டிய உறுதியைப் பற்றியும், அகழிக்கு இருக்க வேண்டிய ஆழத்தைப் பற்றியும் காவலாளிக்கு இருக்க வேண்டிய கண்ணிமையாப் பொறுப்பைப் பற்றியும் எல்லாரும் பேசிக் கொண்டனர்.

புழல் கோட்டத் தலைவரும், களத்தூர் கோட்டத் தலைவரும் தனியே பேசிக் கொண்டு சென்றனர்.

"இன்றே, நீங்கள் ஊருக்குப் புறப்படுகிறீர்களா?" என்று களத்தூர் கோட்டத்துத் தலைவர் கேட்டார்.

"ஆமாம்; ஆமாம். ஊரவையைக் கூட்ட வேண்டும். குவளைக் காணம், திருமுகக் காணம், வியவன் காணம் முதலியவை பற்றிய நடைமுறைகளை முடிவு செய்ய வேண்டிய முக்கிய விஷயமிருக்கிறபடியால் நான் காஞ்சியில் தங்க முடியாது. அத்துடன் படையெடுப்பு, முற்றுகைப் பேச்சுகள் அடிபடும்போது நான் கோட்டத்தில் இல்லாமலிருப்பதும் சரியன்று" என்றார்.

"இது என்ன ஐயா, இதுவரை கண்டிராத புதுமையாக இருக்கிறதே? மாற்றரசன் படை வாயு வேகமாகப் பல்லவ மண்ணில் முன்னேறி வருகிறது. அதைத்தடுத்து நிறுத்தாமல் தளபதி மௌனமாயிருக்கிறாரே" என்று களத்தூர் கோட்டத்தார் கேட்டார்.

"அதுதான் ராஜதந்திரம் ஐயா, ராஜதந்திரம். அதிவீர பராக்கிரம படைத் தலைவர் உதயசந்திரனின் தந்திரம் அது. பகைவனை நெருங்கவிட்டு திடீரெனத் தாக்குவது" என்றார் புழல் கோட்டத்தார்.

"வெளிப் பகைவர்களை வெல்ல அந்த முறை சுகமாயிருக்கலாம். உட்பகைவர்களை வெல்ல? காடக முத்தரையர் இறந்த செய்தி கேட்டதும் என் இதயமே நின்று விடும் போலாகி விட்டது. இரண்ய வர்மரை இணங்கச் செய்து நந்திவர்மரைப் பட்டமேற்றியதே காடக முத்தரையரும், உதயசந்திரனும் தாமே. நாட்டு முக்கியத் தூண்களிலொன்று இந்த நெருக்கடியான சமயத்தில் சரிகிறதென்றால்..."

"உதயசந்திரனுக்கு லாபம்..." என்று சட்டெனப் புழல் கோட்டத்தார் கூறவும் முன்பே நடக்கும் ராஜ்ய விவகாரங்களில் குழம்பியிருந்த அமைதியை விரும்பும் களத்தூர் கோட்டத்தார், "என்ன, லாபம் உதயசந்திரனுக்கா?" என்று வியப்புடன் கேட்டார்.

புழல் கோட்டத்தார் ஏதோ சொல்லத் தகாத ரகசியத்தை வெளியிட்டுவிட்டது போன்று நடித்து, "அந்தப் பேச்செல்லாம்



நமக்கென்ன ஐயா; என் வரையில் படை திரட்ட ஆள் உதவி கேட்கும்போது தக்கபடி மறுமொழி கூறுவேன்" என்றார்.

முக்கியமானதொரு செய்தியைப் பற்றி அரைகுறையாகக் கூறிவிட்டு, மேலும் தொடர்ந்து கூறாமல் விடுவதென்றால் யாருக்குத்தான் ஆவல் மிகாது?

"உதயசந்திரனுக்கு என்ன ஐயா லாபம்? காடக முத்தரையர் இறந்ததால் இனி அவருக்கு வலக் கரமே போனது போல்தான். லாப நஷ்டக் கணக்கைச் சரியாய்ப் போடுங்கள்" என்றதும் புழல் கோட்டத்தார் பெரிதாக நகைத்து, "ஐயா! என்னை இப்போது தூண்டித் தூண்டி எதையும் கேட்காதீர்கள். நாட்டை அரசருக்கு மாறாக தளபதி ஆளத் தொடங்கி விட்டார். இனி தண்டத்தை யார் எடுப்பார்கள் என்று கூற முடியாது. யார் தலை எப்போது உருளும் என்று கூற முடியாது. யாரை எப்போது சிறையில் அடைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது" என்றார்.

மேலும் தொடர்ந்து, "காடக முத்தரையரின் குலம் என்ன? அவர் பண்பு என்ன? அவர் செல்வாக்கு என்ன? அவரைப் போய் ஒற்றர்களின் பணியைச் செய்யச் சொல்லி தளபதி வெளியே அனுப்புகிறார் என்றால் அவருடைய உள் நோக்கத்தின் பேரில் சந்தேகமே ஏற்படுகிறது. ஐயா, அன்றாட அரசியல் விவகாரங்களில் படைத்தலைவர் தலையிடுவானேன்? வரும் பொருள் கூற மந்திரி மண்டலத்தார் இல்லையா? வட பெண்ணையாற்றங்கரைக்குப் படைகளுடன் சென்று மாற்றார் படைகளைக் கொன்று குவிப்பதிருக்க, எதிரிக்குத் தூது அனுப்பினார் ஐயா, சமாதானத் தூது! இவருடைய பேச்சைக் கேட்டு இரட்டர்கள் திரும்பிப் போய்விட்டனரா? எனக்குத் தெரிந்த வரையில் சித்திரமாயன் காடக முத்தரையரைக் கொன்றிருக்க மாட்டான்" என்று ஆவேசத்துடன் பேசவும் களத்தூரார் திகைத்தே விட்டார். அவருக்குக் குழப்பமே அதிமாயிற்று.

"ஐயா! நீங்கள் சொல்வது சரியன்று. காடக முத்தரையரைச் சித்திரமாயன் ஆட்கள் கொல்லவில்லையென்றால் வேறு யார் கொன்றிருப்பார்கள்? அத்துடன் படையெடுத்து வரும் இரட்டர்கள்

சேனையில் முந்நூறு பேர் கூட இல்லையாமே! உண்மையில் படையெடுப்பா? அல்லது தீர்த்த யாத்திரை செய்ய வருகின்றனரா?" என்று களத்தூரார் கேட்கவும், புழல் கோட்டத்தார் ஏதோ பேச முயன்றார். ஆனால், அந்தச் சமயம் வீதியிலே மக்கள் அங்குமிங்கும் ஓடி இருமருங்கினும் ஒதுக்குப்புறமாக நிற்கத் தொடங்கினர்.

சிங்கக் கொடி பிடித்த வீரர் முன் செல்ல, சங்கிலி கொண்டு பிணைக்கப்பட்ட பலரைப் பல்லவப் படைவீரர்கள் அழைத்துச் சென்று கொண்டிருந்தனர். குனிந்த தலையுடன் சிறைக்கோட்டம் நோக்கிச் சென்றவர்களைக் காணப் பொதுமக்கள் ஆத்திரம் அதிகமாகியது.

"துரோகிகள் ஒழிக! பல்லவ மல்லர் வாழ்க!" என்று கூவினர்.

புழல் கோட்டத்தார் ஏதோ திடீரென அவசரமான காரியத்தை நினைத்தவர் போன்று, "ஐயா, உச்சிப் பொழுதிற்கு முன்பு நான் காஞ்சியிலிருந்து புறப்பட்டாக வேண்டும். நான் வருகிறேன். காலம் வர வரப் பொல்லாததாக இருக்கிறது. அது எப்படி மாறும் என்று தெரியாது. எந்தச் செயலையும் சிந்தித்துச் செய்யுங்கள்" என்றார்.

ஒருகணம் மௌனமாக இருந்த இடத்திலேயே நின்றிருந்த களத்தூராருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. தானும் இன்றே புறப்பட்டுவிட்டால் என்ன; சிவிகையோ குதிரையோ தயார் செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே, அவருக்கு வெகு அருகே குதிரை ஒன்று வந்து நிற்கும் ஓசை எழவும் திரும்பிப் பார்த்தார், வயது முதிர்ந்த களத்தூரார்.

உதயசந்திரன் குதிரையினின்று இறங்கினான். தன் அருகே நின்ற குணதேவனையும் மற்றும் இரு வீரர்களையும் ஏதோ செய்தி கூறி அனுப்பி விட்டு, "ஐயா! உங்களைச் சந்தித்து வெகு நாள்களாகின்றன. இந்த முறை விளைச்சல் எல்லாம் எப்படி? இந்த மண்டலத்துக்கே களஞ்சியமாயிற்றே உங்கள் கோட்டம்? உம்; உங்கள் ஊருக்கு ஒருமுறை வர எண்ணினேன். நெருக்கடியான நிலை இன்னும் மாறாததால் ஓய்வேது, ஒழிவேது?



எனது ஊருக்குச் சென்றே பல வருடங்களாகி விட்டன" என்று உதயசந்திரன் பேச்சைத் தொடங்கினான்.

கோட்டத்துத் தலைவர்கள் தாம் அப்போது நாட்டின் உயிர் நாடிகளாக விளங்கினர். அவர்களின் ஆதரவில்லாது அரசன் ஆட்சி செலுத்துவது அவ்வளவு எளிதன்று. உதயசந்திரன் இருபத்தி நான்கு கோட்டத்துத் தலைவர்களுடனும் பேச அப்போது திட்டம் போட்டிருந்தான். அவன் மனத்தே அந்த எண்ணம் தோன்றி மறையுமுன்னமே அவன் எதிர்ப்பட்டவர் களத்தூரார்.

களத்தூரார் ஏதும் பேசவில்லை. உதயசந்திரனை அவர் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார்.

"என்ன ஐயா, இப்படி மௌனமாக நின்று விட்டீர்கள்? புழல் கோட்டத்தார் சொன்னது உண்மையாக இருக்குமோ என்று நினைக்கிறீர்களோ?" என்று உதயசந்திரன் நகைத்தவாறு கேட்கவும் களத்தூரார் உண்மையில் திகைத்தே விட்டார். தானும் புழல் கோட்டத்தாரும் பேசியதை உதயசந்திரன் கேட்டுக் கொண்டிருந்தானோ?

"அப்படியொன்றுமில்லை..." என்று மழுப்பியவாறு கூறிய அவர், "காடக முத்தரையருக்கு நேர்ந்ததை எண்ணும்போது எனக்கு நெஞ்சடைத்து விட்டது. ஐயா, நீங்களும் அவரும் சேர்ந்துதானே இந்த நாட்டை குழப்பத்திலிருந்து காப்பாற்றினீர்கள். பல்லவ பரம்பரைப் பீடம் அழியாது காப்பாற்றினீர்கள். நீங்களும் அவரும் சேர்ந்துதானே ஐயா விரோதிகளை ஒழிக்க முற்பட்டீர்கள். ஆனால் முத்தரையர் முதல் களபலியானது அறியும்போது நாட்டிற்கு என்ன விபத்து நேருமோ என அஞ்ச வேண்டியிருக்கிறது. தளபதியாரே, முத்தரையர் எங்ஙனம் இறந்தார், எந்தக் கோழை அவரை முதுகில் அடித்துக் கொன்றான்?" - களத்தூரார் உண்மையிலேயே உள்ளம் நெகிழ்ந்து பேசினார்.

"ஐயா, களத்தூராரே! காடக முத்தரையர் இறந்தது தாங்க முடியாத அதிர்ச்சிதான். அவர் இறந்த விவரத்தைச் சபை கூட்டி

அறிவிக்க வேண்டியது கடமை. தீர விசாரியாமல் உடனே என்னால் கூற முடியவில்லை. சபை கலைந்து சிறிது நேரத்திற்குள்ளேயே கேட்டறிந்து விட்டேன். சில அவசரமான பணிகளை முடிக்கும் பொருட்டு வேகவதி ஆற்றங்கரையை அடுத்த திருப்பருத்திக்குன்றம் வரை போக வேண்டியிருக்கிறது. உங்களுக்கு ஆட்சேபணையில்லையென்றால் பேசியவாறு போகலாம்" என்றான் உதயசந்திரன்.

ஊருக்குத் திரும்ப வேண்டும் என்ற எண்ணத்தையே மறந்த களத்தூரார், "எனக்கு என்ன ஆட்சேபணை? உங்களுடைய அவசரமான வேலைக்கு நான் இடையூறாக இருக்கிறேனோ என எண்ணுகிறேன். எனக்கு கைலாசநாதர் கோயிலுக்குச் சென்று ஆண்டவனைத் தரிசிக்க வேண்டும்" என்றார். ஒரு கையிலே குதிரையைப் பிடித்த வண்ணம் உதயசந்திரன், களத்தூராருடன் பேசியவாறு சென்றான். இடையே பல இடங்களில், பலரைக் கூப்பிட்டுப் பலவிதக் கட்டளைகளையிட்டான். வழியில் ஆளும் கணத்தாரைச் சந்தித்து எதையோ அலங்கரிக்கும் விதம் பற்றி விவாதித்தான். பிறகு படையின் முக்கியப் பணியாளரில் ஒருவரை அழைத்துச் சில செய்திகளைப் பேசிவிட்டு, "முதலில் இசைக் கலைஞர் குழு ஆயத்தமாக இருக்கட்டும். தஞ்சை நாகஸ்வரக்காரர்கள் கைலாசநாதர் கோயில் திருவிழாவுக்காக வந்திருக்கிறார்களாம். அவர்களையும் அழைத்துக் கொள்ளுங்கள். அதற்குப் பிறகு போர் வீரர்கள், அதற்கடுத்து குதிரைப் படைகள், கடைசியில் யானைப் படை" என்று உதயசந்திரன் கட்டளையிட்டான்.

களத்தூராருக்கு அவன் உத்தரவுகளில் பல காதில் விழுந்தாலும் அவரால் ஒன்றைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியவில்லை.

உதயசந்திரன் இப்போது களத்தூராருடன் அமைதியாகப் பேசத் தொடங்கினான்.

"ஐயா! உள் நாட்டில் குழப்பம் ஏற்படுத்துபவரை அழிக்கக் காடக முத்தரையர் மேற்கொண்டவற்றை நான் உங்களுக்குக் கூற வேண்டியதில்லை. நீங்கள் அறிந்திருப்பீர்கள். அண்மையில்



பெரும் கலகத்தை நடத்த சித்திரமாயன் திட்டம் வகுக்கிறான் என்பது அறிந்தவுடன் நானும் முத்தரையரும் அவற்றை ஒடுக்கப் பல முறைகளை மேற்கொண்டோம்.

"பல்லவபுரத்தில் சித்திரமாயன் பெரிய ஆயுதம் தயாரிக்கும் சாலையை ரகசியமாக வைத்திருந்தான் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பத்தாயிரத்துக்கு அதிகமான வேலும், வாளும் அங்கு தயாரித்திருப்பது தெரியவந்தது. அதைத் தயாரித்தவனான பைரவன் என்பவனின் மகள்தான் சந்திரமதி" என்று உதயசந்திரன் சுருக்கமாக, பாதாளச் சிறையில் காடக முத்தரையரையும் சந்திரமதியையும் சுந்தரனையும் அடைத்தது வரையிலும் அங்கிருந்து அவர்கள் தப்பி ஓடியது வரையிலும் கூறி, "நேரே காஞ்சிக்கு வந்து காஞ்சிக் கோட்டையைப் பிடிக்க சித்திரமாயன் போட்டிருந்த சதி காடக முத்தரையர் ஒருவருக்குத்தான் தெரியும். அந்த விவரத்தை உடனே தெரிவிக்க முத்தரையர் விரைந்தபோது, சித்திரமாயனுடைய வீரர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டனர். காடக முத்தரையரிடம் அவர்களது வீரம் பலிக்குமா? அவர் ஒருவரே சூழ்ந்து கொண்ட ஒன்பது பேரையும் எதிர்த்துப் போரிட்டிருக்கிறார். தப்பினோம், பிழைத்தோம் என எல்லாரும் ஓடி மறைந்தனர். இந்தக் குழப்பத்தில் சுந்தரன் என்ற இளைஞனைக் காணவில்லை. நாட்டைக் காப்பாற்ற வேண்டுவதுடன் சந்திரமதியைக் காப்பாற்ற வேண்டும் என்ற கடமையும் சேரவே அவர் முழு பலத்துடன் ஒன்பது பேரையும் எதிர்த்துப் போராடியிருக்கிறார். குதிரையின் மீது சந்திரமதியையும் ஏற்றிக் கொண்டு முத்தரையர் காஞ்சியை நோக்கிக் காற்றினும் கடுகிப் பறந்திருக்கிறார். ஆனால், காஞ்சியை நெருங்கும் சமயத்தில் மரங்கள் அடர்ந்த தோப்பின் வழியே வரும்போது கூர்மையான கத்தியொன்று எங்கிருந்தோ வந்து அவர் முதுகில் பாய்ந்திருக்கிறது. அதையும் பொருட்படுத்தாமல் அவர் குதிரையை விரட்டினார். ஆனால், காஞ்சியை அணுகுவதற்குள் முத்தரையர் சோர்ந்து விட்டார். குதிரையிலிருந்து கீழே வீழ்ந்து இறந்தார். நல்லவேளையாக இந்த செய்தியை அறிவிக்கக் கடவுளே அனுப்பியது போன்று சந்திரமதியாவது இருந்தாளே!

அறிவு நிறைந்த அந்தப் பெண் ஓடோடி வந்து செய்தியை அறிவித்திருக்கிறாள். இதுதான் நடந்த விஷயம். காடக முத்தரையர் இறந்தது நமது முதல் தோல்வி என்பதையும் நான் அறிவேன். ஆனால், அது புதுத் தெம்பையும் ஊட்டிவிட்டது" என்று உதயசந்திரன் கூறிவந்தபோது இடையில் சட்டெனக் கண்களைத் துடைத்துக் கொண்டதைக் களத்தூரார் கவனிக்கத் தவறவில்லை.

"ஐயா! நீர் ஏற்றிருக்கும் காரியம் மகத்தானது. பலர் பலவிதமாகக் கூறலாம். நான் வேண்டுவது ஒன்றுதான். பல்லவ நாட்டை உள், வெளி விரோதிகளிடமிருந்து காப்பாற்றுங்கள். இந்த நாடு வளப்பமாக வாழ வழி செய்யுங்கள். ஊக்கத்தைக் கை விடாதீர்கள்" என்று தந்தை மகனுக்குக் கூறுவதுபோல் கூறினார்.

"கோட்டத்துத் தலைவர்களும் நாட்டு மக்களும் ஒத்துழைத்தால் மூவாயிரம் வேந்தர் சேர்ந்து எதிர்த்தாலும் இந்த நாட்டை ஒருவரும் ஒன்றும் செய்ய முடியாது" என்று உதயசந்திரன் கூறினான்.

அப்போது வேகவதி ஆற்றங்கரையை அவர்கள் நெருங்கிக் கொண்டிருந்தனர். "பல்லவ நாட்டு மக்கள் ஒருகாலும் நம் அரசருக்கு விரோதமாக எதையும் செய்ய மாட்டார்கள் என்பது நிச்சயம். அவர்கள் எண்ணத்துக்கு விரோதமாக கோட்டத்துத் தலைவர்கள் எதையும் செய்ய மாட்டார்கள்" என்று களத்தூரார் கூறவும் உதயசந்திரன் நகைத்து, "ஐயா, உங்களைப் போன்று எல்லாருமே இருந்து விட்டால் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அழிவே இல்லை. ஆனால்..." என்று கூறிய உதயசந்திரன் சட்டெனக் களத்தூராருக்கு எதையோ சுட்டிக் காட்டினான்.

அவன் காட்டிய இடத்தில் தெரிந்த அரண்மனை வாயிலில் இருவர் குதிரையினின்று இறங்கினர்.

"யார் எனத் தெரிகிறதா?" என உதயசந்திரன் கேட்டான்.

புருவத்தில் கையை வைத்து உற்றுப் பார்த்த களத்தூராருக்கு இருவரும் தெளிவாகத் தெரியவில்லையானாலும் அந்த இருவரில் ஒருவர் புழலூர்க் கோட்டத்துத் தலைவர் என்பதைப் புரிந்து கொள்ள அதிக நேரமாகவில்லை.



அங்குச் சித்திரமாயனும், புழல் கோட்டத்துத் தலைவரும் குதிரையினின்று இறங்கி பௌத்த மடாலயத்திற்குள் சென்று கொண்டிருந்தனர்.

## 15. முதியவர் மகள்

மார்கழி பிறந்து சில நாள்களே ஆகியிருந்தபடியால் பனியின் மூட்டம் எங்கும் நிறைந்திருந்தது. ஒருவர் முகம் மற்றவருக்குத் தெரியாவண்ணம் திரைபோட்டது போன்று எங்கும் பனி கப்பியிருந்தது.

கதிரவன் மறைந்து இருள் எங்கும் சூழ்ந்து வெண்மதி உதயமாகியும் கூட ரேவாவும், அவள் தோழியும் ஏரிக்கரை அருகேயிருந்த மண்டபத்தினின்று எழுந்திருக்கவில்லை. வயல்களிலிருந்து வேலை செய்து திரும்பிய உழவர்களையும், அருகேயிருந்த காடுகளிலிருந்து மரங்களை வெட்டி எடுத்துத் திரும்பியவர்களையும், ஏரியிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு போர் வீரர்கள் அணிவகுத்துச் செல்வதுபோல் தலையில் பானைகளை உயரமாக அடுக்கிக் கொண்டு இரு கை வீசி ஒய்யாரமாக அசைந்து செல்லும் கிராமப் பெண்களையும் பார்த்தவண்ணம் மௌனமாயிருந்த ரேவாவின் மௌனத்தைக் காஞ்சனா கலைத்தாள்.

"தேவி! உங்கள் மனநிலையை என்னால் கண்டறிய முடியவில்லை. உங்களின் நீண்டநாள் லட்சியம் இன்னும் சில தினங்களில் ஈடேறப் போகிறது என்று குதூகலமடைய வேண்டியபோது கண் கலங்குவது எனக்கு விளங்கவேயில்லை. அதோடு இந்த அழகான பிறைமதியும் மெல்ல நகைப்பது போல் சிற்றலை வீசி நிற்கும் ஏரியும் உங்களுக்கு வருத்தத்தையா அளிக்கின்றன?" என்றாள்.

ரேவா 'ஹூம்' என்று பெருமூச்சு விட்டாள். "அடி, பிரிய தோழி! நீயாவது என் இதயத்தைப் புரிந்து கொள்வாய் என நினைத்தேன். உனக்கும் புரியும் சக்தியே புகைந்து போய்விட்டதா? மான்யகேட நகரிலிருந்து கிளம்பிய நாம் இந்த ஏரியையும், இந்த ஊரிலே வீணே காயும் வெண்மதியையும் கண்டு களிப்படையத் தானா? காயும் வெண்ணிலவால் காஞ்சி மாநகரத்து மாட மாளிகைகள் ஜ்வலிப்பதைக் காண வேண்டுமடி; காஞ்சிக்கருகேயுள்ள மாமல்லைக் கடலிலே அந்த வெண்மதி குளித்து எழுவதைக் கண்டு களிக்க வேண்டுமடி..." என்று கூறும்போது ரேவாவின் நெஞ்சு உயர்ந்து தணிந்தது.

காஞ்சனா கலகலவென நகைத்து, "தேவி! அதுதான் நாம் நாளையே காஞ்சியை நோக்கிப் புறப்படுகிறோமே. நமக்கென்ன புராணத்தில் வருவதுபோல் புஷ்பக விமானம் இருக்கிறதா, உடனே பறந்து செல்ல? உங்கள் வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை தேவி!"

"ஆமாம்; ஆமாம். காஞ்சியைப் பார்க்கப் போகிறோம். கடிகைகள் நிறைந்த காஞ்சியைக் காணப் போகிறோம். நகரங்களுள் சிறந்த காஞ்சியைப் பார்க்கப் போகிறோம். அறிவில் சிறந்தவரும், பதினான்கு வித சாஸ்திரங்களை அறிந்த மகா மேதைகளைக் காணப் போகிறோம். எப்போது? நூற்றுக்கணக்கான மனிதர்களின் செங்குருதியின் மீது நடந்து, வெட்டுண்ட தலைகளும், உடல்களும் துள்ளிக் குதித்துக் களிநடம் புரிவதைக் கண்டவண்ணம் காஞ்சியின் கலைகளைக் கற்கப் போகிறோம். ரத்தவெறியுடன் கலையை அனுபவிப்பதில் என்ன ரசனையிருக்குமடி? அப்படித்தான் அவர்களை வென்று சென்றாலும் மக்கள் நம்மை ஆர்வத்தோடு ஆதரிப்பர் என்பது என்ன நிச்சயம்? ஒருவேளை நாம் தோற்றுவிட்டோமானால்? ஐயோ தோழி! அதை நினைக்கவே முடியவில்லையே. அதற்குத்தான் யுத்தமே வேண்டாமென்கிறேன்" ரேவா கூறினாள்.

காஞ்சனா, புன்னகை பொங்க, "தேவியாரே! நீங்கள் கொண்டிருக்கும் காதல் மிக விசித்திரமானது. பருவ வயதில் பெண்கள் மனத்தில் எழும் ஆசை வேறுவிதமாயிருக்கும் என்று



கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களுக்கோ நகரத்தின் பேரில் காதல் ஏற்பட்டிருக்கிறது. தேவி, உண்மையில் நகரத்தின் பேரில் காதலா? அல்லது..." என்று கூறும்போது ரேவாவின் தாபம் பறந்து விட்டாலும், பொய்க் கோபம் பொங்கியது.

ஏதோ கூற வாயெடுத்த ரேவாவை அப்போது அங்கே எழுந்த பாடலின் இனிய ஓசை கவர்ந்தது. யாரோ இருவர் பாடிய வண்ணம் வந்து கொண்டிருந்தனர்.

*"கறவா மட நாகு தன்*
*கன்று உள்ளினாற் போல்*
*மறவாது அடியேன்*
*உன்னையே அழைக்கின்றேன்*
*நறவார் பொழில் சூழ்*
*நறையூர் நின்ற நம்பி;*
*பிறவாமை எனைப் பணி*
*எந்தை பிரானே..."*

என்று தெளிவான சொற்களோடு உச்சரிக்கப்பட்ட அந்தப் பாடலின் பொருள் காஞ்சனாவுக்கும் ரேவாவுக்கும் புரியவில்லையாயினும் இசையின் சக்தி அவர்களைக் கவர்ந்தது.

"நேரமாகிறது. நம்மைத் தேடுவார்கள். வேற்று நாட்டில் இதுபோன்று தனியாக நாம் இருப்பது சரியில்லை. தேவியாரே, போவோம் வாருங்கள்" என்று காஞ்சனா கூறவும் அங்கிருந்து செல்ல ரேவாவுக்கு மனமில்லை. இதுபோன்ற பாடலின்பத்தை அவள் அனுபவித்ததேயில்லை.

"காஞ்சனா! சற்றுப் பொறு. பாடிக் கொண்டே வருபவர்கள் அதோ வந்துவிட்டனர். அவர்கள் இன்னொன்று பாடுமாறு கேட்போம்" என்றாள்.

"தேவியாரே! என்ன புரிகிறதென்று கேட்கத் துடிக்கிறீர்கள்?" என்றாள் காஞ்சனா.

அதற்குள் சற்று வயது முதிர்ந்த ஒருவரும், அவரது மகள் எனக் கருதத் தக்க பெண் ஒருத்தியும் அந்த ஏரிக்கரையின் அருகே வந்தனர்.

அவர்கள் ஏரிக்கரை மண்டபத்திலே கையிலிருந்த துணிப்பையை வைத்து விட்டுக் கால் கைகளைக் கழுவ ஏரியில் இறங்கினர். பிறகு மண்டபத்தில் அமர்ந்து பையிலிருந்து கிடைத்திருந்த சோற்றை எடுத்து வைத்துக் கொண்டு உண்ணலாயினர்.

"இவர்கள் இவ்வளவு நேரம் பாடியதால் கிடைத்த உணவு போலும். பிச்சை எடுப்பவர்கள் பல்லவ நாட்டிலே நன்றாகப் பாடுகிறார்கள்" என்று காஞ்சனா கூறவும் அந்த வயது முதிர்ந்த பாடகர் குறுக்கிட்டு, "அம்மணி! நாங்கள் பிச்சைக்காரர்கள் அல்லர். ஸ்தலங்கள் தோறும் தரிசித்து வருபவர்கள்" என்று பதில் கூறியவுடன் ரேவாவும் காஞ்சனாவும் திடுக்கிட்டனர். ஏனெனில் முதியவர் பிராகிருதத்தில் பேசினார். மிகுந்த வியப் புடன் அவர்கள் பார்ப்பதைக் கண்ட அந்த முதியவர் தன்னருகே யிருந்த மகளிடம் கூறினார்: "மகளே! இவர்கள் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கர் அல்லர் என்று அணிந்திருக்கும் உடையினின்றே தெரிகிறது. அத்துடன் ஆடை, ஆபரணங்கள், தோற்றம் யாவும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்கின்றன" என்று கூறிவிட்டு, ரேவாவை நோக்கி,

"அம்மா! இந்தக் கிழவனுக்கு உங்கள் மொழி எப்படித் தெரிந்தது என்று நினைக்கிறீர்கள் அல்லவா? இந்தக் கிழவன் பெரும் தேச சஞ்சாரி. இதுவரை எனக்குத் துணையாக என் மனைவியும் இருந்தாள். அவள் இறந்து போன பிறகு நான் மகளுடன் நாடெங்கும் சுற்றி வருகிறேன். நாடுதோறும் சுற்றிவரும் நான் கடந்த இரண்டாண்டுகளாகச் சோழ நாட்டிலேயே தங்கி விட்டேன். பரகாலர் என்றழைக்கப்படும் திருமாலின் புகழ் பாடும் பக்தர் தீஞ்சுவைப் பாடல்களைப் பாடியவண்ணம் பரிவாரங்களுடன் தலந்தோறும் சென்று வருகிறார். அவர் சிறந்த படைத் தலைவராயிருந்தவர். அவரது பாடல்கள் என்னைக் கவர்ந்து விட்டன. நாங்கள் அவரது பக்திப் பாடல்களைப் பாடியவண்ணம் இப்போது ஒவ்வொரு தலமாகச் செல்கிறோம். ஊரார் விரும்பி இடும் உணவை ஏற்று, ஆண்டவனை வணங்கி நாள்களைக் கழித்து வருகிறோம். இப்போது கடிகாசலம்



செல்கிறோம். அந்தத் திருமால் அடியவரான திருமங்கை மன்னர் காஞ்சி மாநகருக்கு இன்னும் சில நாள்களில் வரப் போகிறாராம். அப்போது நாங்கள் மீண்டும் காஞ்சி செல்வோம் தாயே" என்று கூறினார்.

ரேவாவுக்கு முதியவர்பால் அன்பும், மதிப்பும் ஏற்பட்டன. "சுவாமி, அந்தப் பெரியவரைப் பற்றி இன்னும் எனக்கு விவரமாகச் சொல்லுங்கள். கேட்க வேண்டும் போலிருக்கிறது. விஷ்ணுவின் மீது பாடப்பட்ட பாடல்களின் அர்த்தத்தை விளக்குங்கள்" என்று கூறினாள்.

அந்தச் சமயம் கையில் தீவர்த்தியை ஏந்திய வண்ணம் வீரர்கள் இளவரசியைத் தேடியவாறு அங்கு வந்து விட்டனர்.

அவர்கள் கிளம்ப முற்படும்போது காஞ்சனா அந்த முதியவருடன் பேசினாள்: "ஐயா பெரியவரே! உங்களைத் தவறாக எண்ணியதற்கு மன்னியுங்கள். நீங்கள் பாடிய பாடல் எங்களைக் கவர்ந்து விட்டது. நாங்கள் இந்நாட்டவர் அல்லர். எங்கள் தேவியார் கலையார்வம் மிக்கவர். காஞ்சிபுரம் சென்று அங்கு பல கலைகள் பயிலத் தணியா ஆசையுடனிருக்கிறார்கள்" என்று கூறவும் முதியவர் ரேவாவின் பக்கம் திரும்பினார்.

"அம்மா! உங்களை இந்த மங்கிய ஒளியில் பார்த்தவுடனேயே முடிவு செய்து விட்டேன். நீங்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராயிருக்க வேண்டுமென்று. உங்களுக்கு இந்தத் தமிழ்ப் பாடலின் பொருள் புரியாது. உங்களுக்குத் தமிழ் தெரியாதல்லவா?" என்று கூறவும் ரேவா சட்டென்று, "ஐயா, எனக்குச் சிறிதளவு தமிழ் வரும். எனக்குக் கல்வி கற்பித்த குரு காஞ்சியைச் சேர்ந்தவர். அவர் தமிழைச் சிறிது கற்பித்ததுடன் கலையார்வத்தையும் நிறைய வளர்த்திருக்கிறார்" என்று கூறி தோழியை நோக்கி,

"காஞ்சனா, அவர்களை அழைத்துக் கொண்டே நாம் நம் இருப்பிடம் செல்வோம். கண்ணெதிரே கிடைத்த கலை வழிகாட்டிகளை நழுவவிட்டுத் திக்பிரமை பிடித்தவர்கள் போல் இருப்பதில் பயனில்லை" என்றாள்.

ரேவா தேவியின் கூடாரத்தில் பிரகாசமாகத் தூங்கா விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளியில் வெண் நிலவு பாய் விரித்தாற்போல் காய்ந்து கொண்டிருந்தது. கூடாரத்தில் விரிக்கப்பட்டிருந்த கம்பளத்தின்மீது ரேவா தேவி அமர்ந்திருந்தாள். எதிரே முதியவரும், அவரது மகளும் அமர்ந்திருந்தனர். திருமங்கை மன்னரின் பாடல்கள் சிலவற்றைப் பாடி விளக்கமும் கூறிய அந்த முதியவர் ரேவா தேவிக்குத் தமிழ் நாட்டை ஆண்ட அரசர்களின் வீரப் பிரதாபங்களைப் பற்றிக் கூறினார். மாற்றரசனுக்கு அடிமைப்படா அவர்களது வீரத்தைப் பற்றிக் கூறினார். வீரத்திலும் வாணிபத்திலும் சிறந்து திகழ்ந்த அவர்களது திறமையைக் கூறினார். பழந்தமிழ் இலக்கியங்கள் அமைத்த புலவரின் திறமை பற்றிக் கூறினார். பாறைகளைக் குடைந்து முதன்முதல் உலகுக்கே குடைவரைக் கோயில் அமைக்கும் திறம் காட்டிய பல்லவ வேந்தர்களைப் பற்றிக் கூறினார். தமிழகத்திலே வளர்ந்த ஜைனமும், பௌத்தமும் படைத்த இலக்கியங்களைப் பற்றியும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய தீஞ்சுவைப் பாடல்களைப் பற்றியும் கூறினார்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த ரேவாவும் அமுதத்தின் ருசி கண்டு மேன்மேலும் அதை அருந்தத் துடிதுடித்தனர்.

அந்தச் சமயம் முதியவரின் மகள் தந்தையை நோக்கி ஏதோ கேட்டாள். முதியவர் பேச்சை நிறுத்தி, "ஆமாம் மகளே! இந்த அரசகுமாரிக்கு மாபெரும் அதிர்ஷ்டம் காத்திருக்கிறது" என்றார். மகள் நகைத்தவாறு, "அரசகுமாரிக்கு அதிர்ஷ்டம் காத்திராமல் வேறு யாருக்குக் காத்திருக்கும்?" என்று கூறவும் அவர்கள் பேச்சை சிறிது புரிந்து கொண்ட ரேவா முதியவரைப் பார்த்து, "ஐயா! ஏதோ அரசகுமாரி, அதிர்ஷ்டம் என்று பேசிக் கொள்கிறீர்களே, என்ன விஷயமோ?" என்று கேட்கவும் முதியவர் கூறினார்.

"தேவியாரே! என் மகளுக்கு ஜோசியம் தெரியும். கைரேகை கண்டு சொல்வாள். உங்கள் கை ரேகையை எதேச்சையாகக்



கண்டவுடன் உங்களுக்கு வரப்போகும் மாபெரும் அதிர்ஷ்டத்தைப் பற்றிக் கூறினாள்" என்றார்.

ரேவாவின் ஆவல் அதிகமாகியது. "ஐயா, பெரியவரே! வருங்காலம் உரைக்கும் ஞானம் உங்களுக்கு உண்டா? அப்படியானால் என் கை ரேகையைத் தயவுசெய்து பாருங்கள். நான் காஞ்சியைக் காண்பேனா? காஞ்சியின் சகல கலைகளையும் கற்பேனா?" என்று ஆவலுடன் கேட்டுக் கையை அவரது மகளை நோக்கி நீட்டினாள்.

மகள் முதியவரைப் பார்க்க, முதியவர் மகளைப் பார்க்க கடைசியில் மகள் ரேவாவின் கையை விளக்கு வெளிச்சத்தில் நீட்டச் சொல்லிப் பார்த்தாள். சிறிது நேரம் உன்னிப்பாகக் கவனித்து விட்டுக் கூறினாள்:

"அரசகுமாரி, உங்களுக்கு இருக்கும் பாக்கிய ரேகையைப் போல் வேறு யாருக்கும் பார்த்ததாக எனக்கு நினைவில்லை; உங்களால் இந்த நாடு பலனடையப் போகிறது. உங்கள் சந்ததியில் வரப் போகும் வீர இளைஞன் இந்த நாட்டுக்கும் மொழிக்கும் எவ்வளவோ தொண்டு செய்யப் போகிறான்... அம்மா, உனக்காகக் காஞ்சிக் கோட்டை வாயிலே திறந்திருக்கப் போகிறது பாருங்கள்" என்றாள்.

முதியவரின் மகள் ரேவாவைப் பார்த்து, வரும்பொருள் உரைத்துக் கொண்டிருக்கும்போது அரசர் வைரமேகன் கூடாரத்தின் வெளியே வந்து நின்றிருந்தார். மகளின் கூடாரத்திற்குள் யாரோ பேசும் ஒலி கேட்கவும், உற்றுக் கவனித்தார். வரும் பொருள் கூறும் முதியவர் மகள் கூறி வந்ததைக் கேட்டவண்ணமிருந்த வைரமேகன், "காஞ்சிக் கோட்டை வாயிலே திறந்திருக்கப் போகிறது பாருங்கள்" என்பதைக் கேட்டவுடன் 'ஹாஹ்ஹா' என்று நகைத்தவாறு உள்ளே நுழைந்தார்.

"மகளே, உன் காலடியில் பல்லவ சாம்ராஜ்யம் கிடைக்கப் போவது உறுதி. அது இந்த வாளினால்தான் என்பதில் ஐயமேது? அதற்கு ஜோசியமே தேவையில்லை" என்று கூறிவிட்டு

முதியவரை நோக்கவும் முதியவர் தலையை அசைத்த வண்ணம் கூறினார்:

"எழுதியதை அழிக்க எவராலும் முடியாது. உங்கள் வாளைப் பயன்படுத்த சந்தர்ப்பமே நேரிடாது. ஆனால் உங்கள் எண்ணம் ஈடேறும்" என்றார்.

வைரமேகன் திகைப்புடன் முதியவரைப் பார்த்தார். முதியவரது கண்களிலே வீசும் ஒளியை அவர் இதற்கு முன்பு எங்கோ கண்ட ஞாபகம் வந்தது.

## 16. ஒற்றன் வந்தான்

காஞ்சி நகரில் அறிவுமணம் வீசிய வண்ணமிருக்கும். கடிகைகள் நிறைந்த வீதியிலே எப்போதும் மக்கள் நடமாட்டம் இருந்த வண்ணமிருக்கும். பல நாடுகளிலிருந்து கல்வி பயில வருவோரும், தத்தம் ஊர்களுக்குப் புறப்பட்டுச் செல்வோருமாக அந்த வீதியிலே சந்தடி இருந்த வண்ணமிருக்கும். சந்தை செல்லும் மாணாக்கர் கோஷமும், பாடல்களை மனனம் செய்யும் மாணவர் குரலும், அந்த வீதியின் கலைப் பெருமையை அறிவித்தவண்ணமிருக்கும். சீனத்திலின்று வரும் வணிகர்கள் திரும்பி நாடு செல்லுமுன் ஒருமுறை அந்தக் கலைக்கூடங்களைக் காணாது இருக்க மாட்டார்கள்.

அந்த வீதியினின்று மற்றொரு வீதியை இணைக்கும் சிறு சந்தொன்றில் இருந்த வீட்டுத் திண்ணையின் மாடத்திலிருந்த விளக்கின் ஒளியில் நடுத்தர வயது மதிக்கத்தக்க வணிகர் உடையிலிருந்த ஒருவர் ஓலையொன்றை மிக்க கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். ஓலையைத் திருப்பிப் பார்ப்பதும்,



தலைகீழாகப் பார்ப்பதுமாக அவர் செய்யும் செயல்களைக் காண்போருக்கும் அவரது புத்தியின் சக்தியைக் குறித்துச் சந்தேகம்தான் எழும்.

புருவத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த ரோமங்களும், கண்களை வந்து தொட்டுப் பிடிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கும் மீசையும் அவரது தோற்றத்தில் தனித்ததொரு கம்பீரத்தை ஊட்டின.

அவரது முகத்தில் எழுந்த வியப்பையும் கோபத்தையும் கண்கள் புலப்படுத்திக் கொண்டிருந்தன. அவருக்கு அப்போது ஏற்பட்ட தோல்வியால் அவர் பற்களை நறநறவென்று கடித்தார்.

அப்போது "ஐயா" என்ற குரல் கேட்டு அந்த வணிகர் திரும்பினார். மங்கிய ஒளியில் எதிரே நின்றிருந்தவனை நோக்கிய அவர் "யார்?" என்று அதட்டலான குரலில் கேட்டார்.

"ஐயா, நான் யார் என்று தெரிவிப்பதற்காகத்தான் இங்கு வந்திருக்கிறேன். அதற்கு முன்பு நீங்கள் எனக்கோர் உதவி செய்ய முடியுமா?" என்று வந்தவன் கேட்டான்.

நெடுந்தொலைவு பயணம் செய்த சோர்வு அவனிடம் காணப்பட்டது. முகத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த மீசை, தாடியைக் கொண்டு நெடுநாள்களாக அவன் பயணத்திலேயே கழித்து வருவதாகத் தெரிந்தது.

"உதவி" என்றவுடன் வணிகரின் முகம் சுருங்கியது.

"யாரய்யா அது? முன்பின் தெரியாமல் வந்து என்னிடம் உதவி கேட்பது? யார் நீ? என்னை இன்னாரெனத் தெரிந்து கொள்ளாமல் உதவி கேட்கிறாய்? தவறுதலாக..." என்று கூறி முடிப்பதற்குள் வந்தவன் மிகப் பணிவான குரலில், "ஐயா நீங்கள்தானே தருமசேனர்? இந்த நகரில் பவழம், முத்து விற்பனை செய்பவர் தாங்கள்தானே?" என்று கேட்டான்.

தருமசேனர் வந்தவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். காஞ்சி நகரில் பிரபல முத்து வணிகர் அவர். பாண்டி நாட்டினின்று முத்துகளையும், பவழங்களையும் கொண்டு வந்து சிறிது காலமாக விற்பனை செய்து வந்தார். காஞ்சியில் அவரை எவரும்

தருமசேனர் என்ற பெயரில் அறிய மாட்டார்கள். பாண்டிய நாட்டு ஒற்றர் படையைச் சேர்ந்தவர்கள்தாம் அவரது பெயரை அறிவார்கள். தருமசேனர் காஞ்சியில் முத்து விற்பது ஒப்புக்காகத்தான். அவருடைய வேலையோ பாண்டிய நாட்டுக்கு வேண்டிய தகவல்களை இங்கிருந்து அளிப்பதே.

நந்திவர்மன் பட்டம் ஏறிய அதே சமயத்தில்தான் மதுரையில் மாறவர்மன் அரிகேசரி பராங்குசன், முதலாம் இராஜசிம்மன் என்னும் பெயருடன் பட்டம் சூட்டிக் கொண்டான். பல்லவர்களுடைய வளர்ச்சியை விரும்பாத மாறவர்மன் தக்கசமயம் பார்த்துப் பல்லவ நாட்டின் தெற்கு எல்லையைக் கவரத் திட்டமிட்டிருந்தான்.

பட்டத்துக்காக ஏற்பட்ட கலகத்தின்போது சித்திரமாயன் தருமசேனனைச் சந்தித்து அறிமுகப்படுத்திக் கொண்டான். அதிலிருந்து இருவர் தொடர்பும் பலப்பட்டு வந்தது.

வந்தவன் பாண்டிய நாட்டிலிருந்து வந்ததாகக் கூறியதும் தருமசேனர் ஏற இறங்கப் பார்த்தார். வந்தவன் கூறினான்: "ஐயா, உங்களுக்குச் சந்தேகம் எற்படுவது இயற்கையே. இதோ பாருங்கள் இலச்சினை" என்று தலைப்பாகைக்குள் மறைத்து வைத்திருந்த மீன் உருவம் செதுக்கப்பட்ட மோதிரத்தைக் காட்டவும் தரும சேனனுக்கு நம்பிக்கை பிறந்தது. தருமசேனன் உடனே எழுந்து, வந்த தூதனை அணைத்துக் கொண்டு, "உங்களைச் சந்தேகித்தது உண்மைதான். காலம் பொல்லாத காலம். பல்லவ ஒற்றர்கள் மகா புத்திசாலிகள். எப்போது, எப்படி வருவார்கள் என்பது தெரியாது. தினம் போவது ஒரு யுகம் போவதுபோல நான் முத்து வியாபாரம் செய்து வருகிறேன். நீர் எப்படி ஐயா, உதயசந்திரனது படைகளின் கழுகுக் கண்களினின்று தப்பி வந்தீர்கள்? வெளிநாட்டாரைக் கடந்த இரு தினங்களாக மிகவும் கவனமாகக் கண்காணிக்கிறார்கள். சரி; வந்த விவரம் என்ன? என்ன செய்ய வேண்டும்?" என்று கூறி அவனை உள்ளே அழைத்துச் சென்றார்.

விளக்கு ஏற்றப்படா அந்த வீட்டின் முன் கூடத்தில் இருவரும் நின்றபடியே பேசினர்.



"ஐயா, நான் சித்திரமாய இளவரசருக்கு நம் அரசரிடமிருந்து ஓலையொன்று கொண்டு வந்திருக்கிறேன். சித்திரமாயனைத் தவிர வேறு எவரிடமும் கொடுக்கக்கூடாது என்று அரசருடைய கண்டிப்பான கட்டளை" என்று கூறவும் தருமசேனன் நகைத்து, "கட்டளை எனக்குக் கூடவா? நான் பார்க்கலாமா?" என்று கூறியவண்ணம் வந்தவனிடமிருந்து ஓலையை வாங்கி மீண்டும் விளக்கு வெளிச்சத்தில் வந்து ஓலையைப் பிரித்துப் படித்தார்.

படிக்கும்போதே தருமசேனரிடம் பரபரப்பு காணப்பட்டது. படித்து முடித்தவுடன், "ஐயா, இவ்வளவு முக்கிய செய்தியைச் சித்திரமாயனுக்குத் தெரிவிப்பதில் தாமதம் இருக்கக்கூடாது. வா, உடனே செல்வோம்" என்று கூறவும் பாண்டிய நாட்டு ஒற்றன் சுற்றுமுற்றும் பார்த்து மெல்லிய குரலில்...

"ஐயா, சித்திரமாயனைச் சந்திக்க நாம் ரகசிய வழியின் மூலமாகப் போக முடியாதா? இங்கு வருவதற்குள் எத்தனை பல்லவ வீரர்கள் என்னை தடுத்தார்கள் தெரியுமா?" எனக் கேட்டார்.

தருமசேனன் சிறிது யோசனை செய்தார். "ஆமாம். இந்தச் சமயத்தில் நாமே போய் பொறிக்குள் சிக்கக்கூடாது" என்று கூறி அந்த வீட்டின் புழக்கடைப் பக்கமாகச் சென்று சிறு மதில் சுவரையும், வேலியையும் தாண்டிக் குதித்துப் பாரத மண்டபத்தின் பின்புற வாசலை அடைந்தார்.

பாண்டிய நாட்டு ஒற்றன் கம்பீரமான தோற்றமுடையவராக இருந்தான். ஒற்றன் வேலையை முடிக்கும் திறமை வாய்ந்தவன் என்பது தோற்றத்திலிருந்தே தெரிந்தது.

பாரத மண்டபத்துப் பின்பக்கச் சுவரின் ஒரு பகுதியை மெல்லத் தட்டியவுடன் சிறு வழி ஏற்பட்டது. தருமசேனன் முன் செல்ல, ஒற்றன் பின் சென்றான். வெப்பமான காற்றும் ஒருவித துர்நாற்றமும் நிறைந்திருந்த அந்தச் சுரங்கப்பாதை வழியே சிறிது தொலைவு சென்றவுடன் எங்கிருந்தோ இயற்கையான காற்று வீசியது. வளைந்து வளைந்து சென்ற அந்தப் பாதை பௌத்த விஹாரத்தில் கொண்டு விட்டது.

தருமசேனன் மெல்ல கதவைத் திறந்து சுற்றும் முற்றும் பார்த்து யாரும் இல்லையென அறிந்தவுடன் வெளியே வந்து புத்த விஹாரத்திற்குள் நுழைந்தான்.

பௌத்த சமயத்தைச் சேர்ந்த ஒருவரும் அந்த விஹாரத்தில் அப்போது இல்லை. காஞ்சியினின்று வேறு இடங்களுக்குச் சென்று பல வருடங்களாகிவிட்டன.

புத்த விஹாரத்தின் நடுக்கூடத்தில் கருங்கண்ணனும் புழல் கோட்டத் தலைவரும், தாமரைப்பாடி வணிகரும் மற்றும் சிலரும் கூடியிருந்தனர்.

சித்திரமாயன் சாந்தமாகவும் கோபமாகவும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தான்.

"ஒன்று வெற்றி என்றால், மூன்று தோல்விகள். புத்திசாலித்தனமான செயல் ஒன்று செய்தோம் என்றால் எட்டு மடத்தனமான செயல்கள்" என்று கூறிய சித்திரமாயனை இடைமறித்து கருங்கண்ணன், "அரசே! நீங்கள் எதை மடத்தனமான செய்கை என்கிறீர்கள்? எதைத் தோல்வி என்கிறீர்கள்? காஞ்சிக் கோட்டையைத் திரும்பவும் கோட்டை விட்டோமே அதைச் சொல்கிறீர்களா? காஞ்சிக் கோட்டை வாயிலை நன்றாக மூடட்டுமே! அதனால் எல்லாம் வைரமேகன் படைகளைத் தடுக்க முடியாது. வைரமேகனின் யானைப் படைகளின் ஒரு மோதல் போதுமே சுக்கு நூறாக ஆக" என்று கூறவும் சித்திரமாயன் சிரித்து, "ஆகா! பெரும் வெற்றி அல்லவா? கருங்கண்ணா! உனது யோசனையைத் தவிடு பொடியாக்கக் கூடிய ஒருவன் இந்த நாட்டின் தளபதியாக இருக்கிறான் என்பதை மறந்து விடாதே. உன் யானைப் படையும், ஆயுத பலங்களும் அவனிடம் ஒன்றும் செல்லாது. ரகசியமாக நாம் தயாரிக்கும் திட்டங்கள் ஒவ்வொன்றும் அவனுக்குத் தெரிகின்றன. காற்றும் ஒளியும் கூட அவனுடைய ஒற்றர்களோ எனத் தோன்றுகிறது. இப்போது கடைசியாக வந்த தகவல்படி உதயசந்திரன் காஞ்சிக் கோட்டைக் கதவுகளைத் திறந்தே வைத்திருக்கப் போவதாகக் கேள்விப்



பட்டேன். எல்லாவற்றையும்விட உதயசந்திரன் கவனம் காடக முத்தரையரைக் கொன்றவர் பேரில் திரும்பியிருக்கிறது. எனக்கே வியப்பாக இருக்கிறது. நம் கட்டளையில்லாமலே காடக முத்தரையரை யார் கொன்றிருப்பார்கள்? அதனால் நம் திட்டங்களையும், யோசனைகளையும் வேறுவிதமாக மாற்றும் சமயம் வந்து விட்டது. பாண்டிய நாட்டிற்கு செய்தி அனுப்பி இருக்கிறேன். மறு ஓலை வருவதைக் கொண்டு நாம் திட்டம் வகுக்க வேண்டும். அதுவரை இராஷ்டிரகூடர்கள் காஞ்சிக்குள் வராமல் இருந்தாலும் சரியென்றே தோன்றுகிறது" என்று கூறியபோது வாயில் காப்போனிடமிருந்து தெரிந்த மனிதர் வருகிறார் என்ற சங்கேத ஒலி எழுந்தது.

தருமசேனரும், பாண்டிய நாட்டு ஒற்றனும் உள்ளே நுழைந்தனர். "வாருங்கள், தருமசேனரே! உம்மைப் பற்றித்தான் இப்போது நினைத்தேன். சேதி ஏதாவது கிடைத்ததா?" என்று கேட்கவும், தருமசேனர் ஒற்றனைச் சுட்டிக்காட்டி, "இதோ பாண்டிய நாட்டுத் தூதர் மிக முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறார்" என்றார்.

சித்திரமாயன் தக்க உபசரணை செய்து வந்தவர்களை உட்கார வைத்துத் தூதனிடமிருந்து ஓலையை வாங்கிப் படித்தான். ஆரம்பத்தில் மிகவும் சந்தோஷத்தோடு படிக்க ஆரம்பித்த சித்திரமாயன் முகம் சிறுத்தது. கறுத்தது.

ஓலையைப் படித்து முடித்து அதைக் கருங்கண்ணனிடம் கொடுத்து விட்டு மௌனமாயிருந்தான். பிறகு தர்மசேனரைப் பார்த்து, "ஐயா, நீங்கள் ஓலையைக் கவனித்தீர்களா? உங்கள் கருத்து என்ன?" என்று வினவினான்.

"என் கருத்து என்ன? ஓலையில் கண்டவாறு செய்ய நாம் சம்மதிக்க வேண்டும். மதுரையினின்று படை புறப்பட வேண்டியதுதான்" என்றார்.

"இதுவும் பெரு வெற்றிதான். பாண்டிய மன்னர் ஆதரவு நமக்குக் கிடைத்து விட்டது. உடனே எழுதுங்கள் நம் சம்மதத்தை" எனக் களிப்பு மிகுதியால் கூத்தாடவும், சித்திரமாயன் பெருத்த

குரலில் நகைத்து, "இந்த ஓலைக்கு உடனே மறுமொழி எழுத வேண்டும். அதை உடனே அனுப்பவும் வேண்டும்" என்று கூறி, வந்த ஒற்றனைப் பார்த்து, "ஐயா, தங்களுடைய உதவியை நான் மறக்க மாட்டேன். வெகு தொலைவு வந்த களைப்பு மிகுதியாக இருக்கும். இன்றே சிரமம் பாராமல் இந்த ஓலையை எடுத்துக் கொண்டு விரைந்தால் மிகவும் நல்லது" என்று கூறி ஓலையை எழுதுமாறு கருங்கண்ணனுக்குக் கட்டளையிட்டான்.

ஒரே வரிதான் அதில் இருந்தது. "இப்போது படையெடுப்பு வேண்டாம். கருங்கண்ணன் நேரிடையே வந்து கூறுவார்" என்று எழுதிய அந்தச் செய்தி அங்கிருந்தோருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஓலையில் கையொப்பமிட்டு ஒற்றனிடம் கொடுத்து தருமசேனர் பக்கம் திரும்பி, "ஐயா, இவருக்கு வேண்டிய குதிரை மற்றும் பொருள்களை உடனே தருவித்துக் கொடுங்கள். இன்று இரவே காஞ்சி எல்லையை விட்டு இவர் போய் விடட்டும்" என்றான்.

கூடியிருந்தோருக்கு ஒன்றும் புரியவில்லை. தருமசேனர் வந்த ஒற்றனை அழைத்துக் கொண்டு மிகவும் அவசர அவசரமாகச் சென்றார். அவர்கள் போன பிறகு எல்லாரும் ஒரே குரலில், "என்ன ஐயா, ஓலையில் அப்படி எழுதி விட்டீர்களே! பாண்டியர் படையெடுப்புக்கு இது தக்க சமயமல்லவா? அதற்காகத்தானே அவர்களும் தூதரை அனுப்பியுள்ளார்கள். இப்படி எழுதிவிட்டீர்களே?" எனவும், சித்திரமாயன் எல்லாரையும் கையமர்த்திக் கூறினான்:

"நான் இந்த ஒரு விஷயத்தில்தான் மிக்க விழிப்பாக இருந்து விட்டதாக எண்ணுகிறேன். இந்த இடத்தை விட்டு இன்னும் சில நொடியில் நாம் புறப்பட வேண்டும். இல்லாவிடில் ஆபத்து காத்திருக்கிறது. இப்போது தருமசேனருடன் வந்தவன் பாண்டிய நாட்டு ஒற்றன் இல்லை. அவன்தான்..." என்று முடிப்பதற்குள் அங்குக் கூடியிருந்தோர் துள்ளி எழுந்தனர். 'ஆஹா' என்ற ஒலி எல்லாரிடமிருந்தும் எழுந்தது.



## 17. தங்க நகரம்

மாட மாளிகையின் பேரிலும், கூட கோபுரங்களின் பேரிலும், காட்டிலும், மேட்டிலும், ஆற்றிலும், அகண்ட வாவியிலும், மண்ணிலும் புதரிலும் வேற்றுமையின்றிக் குளிர்ந்த ஒளி வீசி இரவைத் தன் குளிர்க் கிரணங்களால் மாற்றிக் கொண்டிருந்தது வெண்மதி. கவிந்திருந்த பனிப் படலத்தினூடே கூனப் பிறையின் ஒளிபாய்ந்து வரும்போது மண் எனும் மங்கை நல்லாளுக்கு மெல்லிய துகிலினை அணிவிக்க விண்ணரசன் முயல்வது போன்றிருந்தது.

வைரமேகனது படை வீரர்கள் அந்த வெண்மதி வீசும் தண்ணிலவில் கூடாரங்களைப் பிரிப்பதும், யானைகளுக்கு முகப்படாம் முதலிய ஆபரணங்களைப் பூட்டுவதும், வேல், வில், வாள் முதலிய ஆயுதங்களை ஒழுங்குபடுத்துவதும், வல்லூறு பொறித்த கொடியினைச் சரிபடுத்துவதுமாகச் சுறுசுறுப்பாக அங்குமிங்கும் ஓடி அலைந்து, மறுநாள் வைகறைப் பொழுதில் அங்கிருந்து புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். தலைக்குமேல் பனி பெய்து கொண்டிருந்தாலும், குளிர் நடுங்கிக் கொண்டிருந்தாலும், அவர்கள் அங்கிருந்து புறப்படுவதிலேயே முழுக் கவனம் செலுத்திய வண்ணமிருந்தனர்.

தீவர்த்தியைக் கையில் ஏந்தி அவர்கள் அங்குமிங்கும் சென்றது அந்த நிலவின் ஒளியில் செந்நாக்குகள் முக்கியமான செயல் ஏதோ நடக்கப் போகிறதென்பதற்கு அறிகுறியாகத் திகழ்ந்தன. படை வீரர்கள் யுத்த யாத்திரைக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தபோது, இராட்டிரகூட இளவரசி ரேவா தேவியின் கூடாரத்திலிருந்து இனிய குரலோடு கூடிய இசையின் நாதம் எழுந்து எங்கும் பரவியது. நள்ளிரவு

அசோக் நகர்



கழித்து வைகறைப் பொழுது நெருங்கிக் கொண்டிருக்கும் அந்த அமைதி நிறைந்த வேளையில் மெல்லிய குரலில் முதியவரின் மகள் வீணையை மீட்டிக் கொண்டே பாடியது தேவ லோகத்தினின்று எழும் கந்தர்வகானம் போல் திகழ்ந்தது.

*"சொல்லுயர்ந்து நெடு வீணை*
*முலைமேல் தாங்கித்*
*தூமுறுவல் நகை இறையே*
*தோன்ற நக்கு,*
*மேல் விரல்கள் சிவப் பெய்தத்*
*தடவி ஆங்கே*
*மென் கிளி போல் மிழற்றும்*
*என்பதையே..."*

161220
5794030

இசையோடு இசையாக ஐக்கியமாகி முதியவர் மகள் பாடியது போன்று ரேவாவும் இசையின் நாதத்தில் இரண்டறக் கலந்தாலும் அதைவிட அந்தப் பெரியவர் கூறிய பாட்டின் பொருள் அவளை மிகவும் கவர்ந்தது.

"தேவி! காதல் கொண்டவர் நிலையைச் சொல்லால் வர்ணிக்க இயலாது. அதிலும் ஆண்டவனையே ஒருத்தி காதலிக்கிறாள் என்றால் அவள் நிலையைக் கூறுவது எளிதன்று. அவள் கை வளை நழுவுவதையும், பசி தாகம் மறப்பதையும் தோழிகளோடு விளையாடுவதில் நாட்டங்கொள்ளாமல் சதா திருமாலின் திருநாமத்தையே உச்சரிப்பதையும் கண்டவர்தான் விண்டுரைக்க வேண்டும். திருவாலி மன்னரான திருமங்கை அடியவர் இந்த உணர்ச்சிகளைக் கவிதை எனும் மாலையில் மணம் நிறைந்த மலர்களைத் தொடுத்திருக்கிறார். என் மகள் பாடினாளே அந்தப் பாடலின் பொருளைத்தான் பாருங்களேன். வீணையை அந்த இளநகை அணைத்தவாறு வைத்து மீட்டுகிறாள்; அவள் கைவிரல்கள் வீணை நரம்புகளை மீட்டி மீட்டிச் சிவந்து விடுகின்றன. அருகே கிளி இருக்கிறது. அதன் காதுகளில் சதா ஒலிப்பது ஆண்டவனின் பெயர்தாம்".

பெரியவர் முடிக்கவில்லை. அரசகுமாரி ரேவா இந்த உலகத்து நினைவில் இல்லை. அவள் கண்கள் இரண்டையும் இமை மூடின.



எண்ணப் புரவியிலே அவள் அமர்ந்து புதிய சாம்ராஜ்யத்தை நோக்கிப் பறக்கத் தொடங்கினாள்.

தங்க நகரம் ஒன்றுக்கு ரேவாதேவி தந்தப் பல்லக்கு ஒன்றிலே செல்கிறாள். பல்லக்கின் முன்னும் பின்னும் அணிவகுத்துச் செல்லும் வீரர்கள். அவள் உள்ளம் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கிறது. அவள் அங்கங்களில் பூரிப்பின் சின்னம். அவள் கண்கள் யாரையோ தேடி அலைகின்றன. அவள் இவ்வளவு நாள் யாருக்காக மனத்திலே தவம் செய்தாளோ, யாரைக் காண வேண்டும் என்று துடிதுடித்து நின்றாளோ அந்தச் சித்திரத்தில் எழுதிப் பார்க்காத உருவம் எதிரே தோன்றியது. வெண் யானையொன்று அசைந்தாடி வருகிறது. அதன்மீது அழகான அம்பாரி. அம்பாரியின் மீது கந்தனே உருவெடுத்து வந்தானோ எனும்படி அந்த அழகுத் திருவுருவம் அமர்ந்திருக்கிறது. அரசருக்குரிய கம்பீரம், படை வீரருக்குள்ள திரண்ட தோள், பெண்கள் மகிழ்ந்து நோக்கும் அகன்ற மார்பு, கண்களிலே ஓர் ஒளி. பல்லக்கு நிற்கிறது... அந்த வீரன் யானையினின்று இறங்கி ரேவாவை அழைக்கிறான். ரேவாவும், அந்தச் சுந்தர வடிவழகனும் தங்க நகரத்தில் கை கோத்து உலவுகிறார்கள். சிற்ப அற்புதங்கள் நிறைந்த கலைக் கூடங்களைக் காண்கிறார்கள். ரேவா விழிகள் ஆச்சர்யத்தால் மலர்கின்றன. ஒவ்வொரு திருவுருவத்தையும் பார்த்த கண்வாங்காது நிற்கிறாள்.

ரேவா தேவி இன்ப உலகில் பறந்து கொண்டிருக்கும்போது - வைரமேகனுடைய வீரர்கள் அந்தக் கூடாரத்தின் வாயிலில் நின்று பெரியவரை அழைத்தார்கள், அரசர் அழைப்பதாக.

பெரியவர் தன் மகளை நோக்கி, "அம்மா, நீ இங்கேயே இரு. இளவரசியின் தோழியரும் உறங்கி விட்டனர். இளவரசியின் உறக்கம் வெறும் நித்திரை மட்டுமன்று; அவர் தம் நினைவு இப்போது வண்ண இறக்கைகள் கட்டிப் பறக்கிறது. அவர்கள் துயிலைக் கலைக்காதே. அரசர் அழைக்கிறாராம்... சென்று வருவேன்; மிகவும் கவனமாயிரு. தூங்கிவிடாதே" என்று கூறி வீரர்களுடன் வைரமேகனது கூடாரம் நோக்கிச் சென்றார்.

வைரமேகன் கூடாரத்திற்குள் தனியே உலாவிக் கொண்டிருந்தார். தன் மகளின் கூடாரத்தினின்று திரும்பி வந்த பிறகு அவரது எண்ணக் குதிரை ஒரு நிலையில் இல்லை. புதிய சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தி அதனை எதிர்ப்படும் இடையூறுகளையும் இன்னல்களையும் வெல்லும் சக்தி வாய்ந்த அந்த அரசனின் மனம் ஏனோ பரபரப்படைந்திருந்தது. மான்யகேட நகரினின்று ஒற்றர்கள் கொண்டு வந்திருந்த செய்தி அவரது உற்சாகத்தைக் குறைப்பதாக இருந்தது. இந்த நிலையில் மகளுடைய கை பார்த்துக் கிழவரின் மகள் சொன்னவை வேறு அவர் திட்டத்தை மாற்றக் கூடியனவாக இருந்தன. 'எழுதியதை அழிக்க எவராலும் முடியாது. உங்கள் வாளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பமே நேரிடாது. ஆனால், உங்கள் எண்ணம் ஈடேறும்' என்று அந்த முதியவர் கூறியது அவரைப் பலமுறை சிந்திக்கச் செய்தது. அத்துடன் அந்த முதியவர் - அவர் - அவரது கூர்மையான கண்களை எங்கோ பார்த்த நினைவு வைரமேகனுக்கு எழுந்தது. அந்தக் கண்களிலே தவழ்ந்த ஒளியைத் தன் கண்கள் எப்போதோ கண்ட எண்ணம் அவருக்கு எழுந்தது.

வைரமேகன் அந்த முதியவரை அழைத்துப் பேச எண்ணங்கொண்டார்.

வைரமேகன் கூடாரத்திற்குள் அந்த முதியவர் நுழைந்து, "மன்னா, உனக்குச் சகல வெற்றிகளும் உண்டாகட்டும்" என்று ஆசி கூறினார்.

முதியவரின் குரலிலே முதுமையில்லை; முன்பிருந்த தள்ளாமையில்லை. முதியவரை ஒருகணம் ஊடுருவிப் பார்த்தபிறகு அவரை அருகே இருந்த ஆசனத்தில் அமரச் செய்த வைரமேகன் நிலவிய மௌனத்தைக் கலைத்து, "முதியவரே" என்று பேச்சைத் தொடங்கினார். "உங்களை எங்கோ சந்தித்த நினைவு எனக்கு ஏற்படுகிறது. நானென்ன நகரமும், கிராமமும் சுற்றுபவனா? எப்படி அந்த உணர்ச்சி விளைந்தது என்று தெரியவில்லை" என்று கூறியபோது முதியவர் நகைத்தவாறு எதிர்மறித்து, "அரசே! இந்த ஆண்டியை நீங்கள் எங்கே சந்தித்திருக்கப் போகிறீர்கள்? எங்கள் ஊர் மொழியில்





ஓர் உயர்ந்த கருத்தமைந்த பாடலுண்டு. பழகினால்தான் நட்பா; நட்புக்கு இரு இதயங்களின் உணர்ச்சியே போதும் என்ற பொருள் உடையது அச்சிறிய பாடல். அதுபோன்று நீங்கள் சற்றுமுன்பு என்னை உங்கள் மகளது கூடாரத்தில் கண்டீர்கள். அல்லது வேறெங்காவது கண்டிருக்கலாம். ஒருகணத்திலே எழும் இதய உணர்ச்சி பெரும் காரியங்களைச் சாதிக்க வல்லது."

வைரமேகன் முகத்தில் புதிய ஒளி பிறந்தது. "முதியவரே! உங்களுடைய சொற்களிலே அனுபவம் அலை மோதுகிறது. வருங்காலமும், எதிர்காலமும் உங்கள் மனக்கண் முன்னே நர்த்தனமாடுகின்றன. தேச சஞ்சாரம் செய்யும் ஆண்டி என்று உங்களைச் சிறிது நேரத்திற்கு முன்பு அலட்சியப்படுத்தி வந்தேன். ஆனால், கூடாரத்திற்குள் வந்தபிறகு எனக்குக் கிடைத்த செய்தியொன்று என்னைக் கவலை கொள்ளச் செய்து விட்டது. முதியவரே, முன்பின் அறியாத உங்களிடம் அரசியல் விவரங்களை, செய்திகளைக் கூறுவது அரச தந்திரமன்று. ஆனால், நீங்கள் ஒரு குறிப்பிட்ட தேசத்தைச் சேர்ந்தவரல்லர். ஆதலால் கூறும் துணிவு எனக்கெழுந்தது. அத்துடன் கூட நீங்கள் கடைசியாக, 'எழுதியதை அழிக்க எவராலும் முடியாது. வாளைப் பயன்படுத்தும் வாய்ப்பே நேரிடாது' என்கிறீர்கள். அதெப்படித் உங்களுக்குத் தெரியும்? நீங்கள் எதிர்காலம் அறியும் ஜோசியரா? முக்காலம் உணர்ந்த முனிவரா? அல்லது ராஜ்ய விவகாரம் அறிந்தவரா? வாளைப் பயன்படுத்த சந்தர்ப்பம் எப்படி சுவாமி நேரிடாமல் போகும்?"

முதியவர் முகத்தில் தோன்றிய குறும்புப் புன்னகையை அடர்ந்து வளர்ந்திருந்த மீசையும், தாடியும் மறைத்தன. "நீங்கள் எண்ணுவதுபோல் நான் ஞானியல்லன்; ஜோசியரும் அல்லன்; நான் காஞ்சியிலிருந்து இப்போது வருகிறேன். அங்கு நடக்கும் நிலவரம் எனக்குத் தெரியும். அவர்கள் பேசிக் கொள்வதினின்று நான் யூகித்துணர்ந்தவற்றைக் கொண்டுதான் கூறுகிறேன். மந்திரி மண்டலத்தாரில் பலரை நான் அறிவேன். மூலப் பிரகிருதி களையும், அமாத்யர்களையும் எனக்குத் தெரியும். வட பெண்ணையாற்றங்கரையில் பல்லவ சேனாதிபதி உங்களைச்

சந்தித்த பிறகு காஞ்சியிலுள்ளோர் யுத்தம் வராது என்ற உணர்ச்சியுடன்தான் இருக்கிறார்கள்..."

"ஆகா! பெரியவரே தாங்கள் தேச சஞ்சாரியே இல்லை; பக்தர்கள் கோஷ்டியில் சேர்ந்தவரும் இல்லை. உண்மையைக் கூறும், நீங்கள் யார்?" வைரமேகன் குரலில் குழைவு இருந்தது.

முதியவர் உண்மையையே பேசும்குரலில், "திருவரங்கா! பள்ளி கொண்டோனோ!" என்று கூறிப் பெருமூச்சுவிட்டு, "அரசியல் அலுவலாளிகளுடன் நெருங்கிப் பழகியதன் விளைவு இது. எனக்குத் தெரிந்ததைக் கூறினால் என்னைச் சந்தேகிக்கிறீர்கள். இன்னும் நடக்கப் போவதை நான் கூறினால் நிச்சயம் எனக்குக் காராகிரகம்தான் கிடைக்கும்."

முதியவர் பேச்சை முடிக்காததன் முன்னமே வைரமேகன் முதியவர் கரங்களைப் பிடித்துக் கொண்டு, "ஐயா, என்னைக் கோபிக்காதீர்கள். தவறாக உங்களை நான் எண்ணவேயில்லை. தேச சஞ்சாரிக்கு இவ்வளவு தூரம் தெரிகிறதே என எண்ணி வியந்தேன். ஐயா, பெரியவரே! நீங்கள் தைரியமாகத் தங்களுக்குத் தெரிந்ததைக் கூறலாம்" என்று உணர்ச்சி ததும்பக் கேட்டார்.

முதியவர் சுற்றும்முற்றும் பார்த்தவண்ணம், "அரசரே! நீங்கள் வட பெண்ணையாற்றங்கரையில் பல்லவ தளபதியுடன் பேசி முடிவு செய்த பிறகு உங்கள் போக்கும் எண்ணமும் மாறியது என்பது உண்மைதானா?" என்று கேட்டார்.

வைரமேகன், தலையசைத்தார் ஒப்புக் கொள்ளும் பாவனையில்.

வட பெண்ணையாற்றங்கரையில் தன் படைகள் தண்டிறங்கி மீண்டும் புறப்படும்போது, பல்லவர் படைகள் அணிவகுத்து நின்று தன்னைத் திகைக்க வைத்ததையும், பிறகு பல்லவ படைத் தளபதி இரு வீரர்களுடன் தன்னிடம் வந்து பேசியதையும், முக்கியச் சில கருத்துகளை இருவரும் பரிமாறிக் கொண்டதையும் நினைவுபடுத்திக் கொண்டார். வைரமேகன் அவ்வளவு எளிதில் மறந்து போகக் கூடிய சம்பவமன்று அது. பல்லவ படைத்தளபதி சந்தித்துக் கூறியவை இருவரும் ஒருவருக்கொருவர் நேசமுறையில்



செய்த ஒப்பந்தங்கள். எளிதில் மறந்து போகக் கூடியவையல்ல. ஆனால், ஏன் வைரமேகன் ஒப்புக் கொண்டவற்றை மீறி வேறு விதமாகச் செய்ய இசைந்தார்? அது அவருக்கே குழப்பத்தை யளித்தது.

மான்யகேட நகரினின்று புறப்படும்போது வைரமேகனுக்கு எந்தவித மனக் குழப்பமுமில்லை. மகளுடைய தணியா ஆசையையும், தன் திட்டங்களையும் நிறைவேற்றப் போகிறோமென்ற புதுத் தெம்பு அவர் உள்ளத்தில் எழுந்து நின்றது. சித்திரமாயனின் அழைப்பு அதற்கு உதவியது.

வட பெண்ணையாற்றங்கரையை அடையும்வரை திட்டமிட்டபடியே எல்லாம் நடந்து வந்தன. ஆனால், வட பெண்ணையாற்றங் கரையில் அன்றைய வைகறைப் பொழுது எத்தனையோ மாறுதல்களைச் செய்து விட்டதே. ஒருபுறம் மான்ய கேடத் தலைநகரினின்று கிடைத்த செய்தி அவரைத் திடுக்கிட வைத்தது. மற்றொரு புறமோ பெண்ணையாற்றின் எதிர்க்கரையில் கடல் போன்று பல்லவப் படைகள் அணிவகுத்து நின்றிருந்தன. தன்னிடம் சிறைப்பட்டிருந்த பல்லவ வீரன் தப்பியோடி தன்னெதிரே பல்லவ படைத்தலைவர் உதயசந்திரனுடன் வந்து நின்றான். இவையெல்லாம் அவரது மனத்தைப் பெரிதும் குழப்பி உடனடியாகச் சிந்திக்க வழி விடவில்லை.

அதனுடன் கூட யாருக்காக வைரமேகன் படைகளுடன் கிளம்பினாரோ அந்த சித்திரமாயனின் கோஷ்டியினர் ஒருவரையும் காணவில்லை. வட பெண்ணையாற்றங்கரை பெரும் ரணகளமாகப் போகிறது என்ற எண்ணத்துடன் நிற்கும்போது பல்லவ படைத்தளபதி மற்றும் இரு வீரர்களுடன் வந்தார். அவரிடம் பேசி முடிவுக்கு வந்த வைரமேகன் காஞ்சி நகருக்கு நட்பினர் என்ற முறையில் விஜயம் செய்வதாகவும், காஞ்சியை அடைந்த பிறகு அரசர் நந்திவர்மனைச் சந்தித்துப் பேசலாம் என்றும் ஒப்புக் கொண்டார்.

ஆனால், வைரமேகனின் எண்ணம் மாறவில்லை. உதயசந்திரன் தன்னைச் சந்தித்துப் பேசியதால் பல்லவப் படைகள் பலம் குறைவானது என்று தவறாக எண்ணினார். கருங்கண்ணனும்

கடைசியாக வந்து சித்திரமாயனின் திட்டத்தைக் கூறவே, வைரமேகன் காஞ்சிக் கோட்டையை எளிதில் பிடித்து விடுவது என மனப்பால் குடித்தார்.

ஆனால், இந்த முதியவர் வந்த பிறகு - மான்யகேட நகரிலிருந்து ஒற்றர்கள் அவசரச் செய்தியை மீண்டும் கொண்டு வந்த பிறகு - வைரமேகனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. விரைவாகத் தலைநகருக்குத் திரும்புவதா அல்லது தொடர்ந்து முன்னேறுவதா என்ற கவலை ஏற்பட்டது. உடனே கிளம்புமாறு படை வீரர்களுக்கு உத்தரவு கொடுத்தாகி விட்டது. இந்த நிலையில்தான் முதியவரை அழைத்து வரச் செய்தார் வைரமேகன்.

முதியவர் கேட்ட கேள்விக்கு வைரமேகன் தலையசைத்து ஒப்புக் கொள்ளாதிருக்க முடியவில்லை.

அடுத்து முதியவர் கேட்ட கேள்வி வைரமேகனைத் திடுக்கிடச் செய்தது.

"அரசே! பல்லவ சாம்ராஜ்யம் சாளுக்கியர்களின் படையெடுப்பினால் அல்லலுற்றதையும் சாளுக்கிய மன்னன் புலகேசி இருமுறை பல்லவர்களிடம் தோற்று ஓடியதையும், மாமல்ல சக்ரவர்த்தி கடைசியாக வாதாபி வரை சென்று நகரத்தையே அழித்து நிர்மூலமாக்கியதையும் தாங்கள் அறிந்திருப்பீர்கள். அதனால் பல்லவர்கள் மாற்றரசன் படையெடுப்பைக் கண்டு அஞ்சுவதே கிடையாது.

"சாளுக்கியர்கள் நரசிம்ம பல்லவரிடம் அடைந்த தோல்வியை, அழியாத அவமானத்தைத் துடைக்க விஜயாதித்தன் காத்திருக்கிறான். உடனே பல்லவ நாட்டின் மீது படையெடுக்க வேண்டும் என்று அவன் மகன் விக்கிரமாதித்தன் தந்தையைத் தூண்டி வருகிறான். சித்திரமாயனும் அவனது துணை கோரித்தான் கருங்கண்ணன் எனும் தன் உதவியாளனை அனுப்பினான். கருங்கண்ணனோ வாதாபி செல்வதற்குப் பதில் தங்களுடைய தலைநகரம் வந்தடைந்தான். தங்களுக்கும் நீண்ட நாள் எண்ணம் இருந்து வந்தது, பல்லவர்கள் உதவியை அடைய வேண்டுமென்று.



பல்லவர் நாட்டை வென்று அதை ஆட்சி புரியும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்பது பல்லவ அரசருக்கும் தளபதிக்கும் நன்றாகத் தெரியும். அதனால்தான் தங்கள் எண்ணம் ஈடேற உதவுவதற்காகவே தங்களுடன் அன்பு உடன்படிக்கையைப் பல்லவ தளபதி பெற விரும்பினார்" - வைரமேகன் திடுக்கிட்டார். அவர் ஏனோ பரபரப்பு மிகுந்தவராகக் காணப்பட்டார். அவரை அறியாமலேயே 'ஆகாகாரம்' அவர் கண்டத்திலின்று எழுந்தது.

"முதியவரே! நீங்கள் உண்மையிலேயே தேச சஞ்சாரியா? அல்லது பல்லவ நாட்டு அரசியல் விவகாரம் தெரிந்த ஒற்றரா? சொல்லுங்கள், சொல்லுங்கள். என் நினைவு, எண்ணம், செய்கை முழுவதையும் கூறி விட்டீரே! நீங்கள் உண்மையில் யார் ஐயா? சொல்லுங்கள். அதனால் தவறில்லை. நானும் என் முடிவை ஒளிவு மறைவின்றிக் கூறுகிறேன்" என்று மொழிந்தார்.

முதியவர் கடகடவென நகைத்தார்.

அந்தச் சிரிப்பொலியில் முதுமைக் களையில்லை. அதற்கு மாறாக வாலிப அழுத்தமிருந்தது.

அதிலே ஒன்றும் அறியாத நிலை இல்லை; எல்லாம் அறிந்த பூரண அரசியல் தந்திரமிருந்தது. உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்தும் தன்மை இல்லை; எதிராளியின் இதயத்திலுள்ளதைக் கவரும் சக்தியிருந்தது. அதன் வடிவாக பிரதிபலிப்பாக அவர் பேசினார்.

"ஐயா, தாங்கள் இன்னும் மூடு மந்திரமாகவே பேசுகிறீர்கள். சாதாரண காலமாக இருந்தால் என் நாட்டில் இப்படி நான் எவருடனும் பேசவும் மாட்டேன். பேச்சுக்கு நேரிடையே மறுமொழி கூறாதவருக்கு என் உடைவாள் உடனே தக்கதைக் கூறிவிடும். ஆனால், நான் இங்கு உங்கள் நாட்டில் இருக்கிறேன். என் திட்டமும் குறியும் தவறுதலான பாதையில் செல்லும் உணர்ச்சி இப்போது எனக்கு எழுகிறது. அதனுடன் விஷ்ணுவின் திருநாமம் கூறும் பக்தரான தாங்கள் ஒருகாலும் இடையூறுக்கு வழிவகுக்க மாட்டீர்கள் என எனக்குத் தெரியும்" என்று வைரமேகன் கூறி வரும்போது முதியவர் குறுக்கிட்டு, "நிச்சயமாகக் கெடுதல் நேரவிட

மாட்டேன்; சத்தியம்" என்று கூறவும் வைரமேகன் தொடர்ந்து, "தாங்கள் அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன். கீழைச் சாளுக்கியர்களுக்கு நான் பட்டத்துக்கு வந்ததில் சிறிதளவும் விருப்பமில்லை. அரசன் விஜயாதித்தன் எப்படியாவது என்னைக் கவிழ்த்து மகா சாளுக்கிய சாம்ராஜ்யத்தை நிறுவ விரும்புகிறார் என்பது எனக்குத் தெரியும். சாளுக்கிய சாம்ராஜ்யத்தை எவ்விதத்திலும் அழித்து விட வேண்டும் என்பதே என் நோக்கம். அதனால்தான் சித்திரமாயன் என் உதவி நாடித் தூது அனுப்பியவுடன் நான் படைகளுடன் புறப்பட்டு விட்டேன். சித்திரமாயனை எவ்விதத்திலாவது காஞ்சி அரியணையில் ஏற்றிப் பல்லவப் படைகளையும் என்னுடன் அழைத்துக் கொண்டு வாதாபியின் மீது படையெடுப்பது என் திட்டம். ஆனால் அது நிறைவேறாது போலிருக்கிறதே. முதியவரே, காஞ்சியா, மான்யகேடமா என்பது என் முன்புள்ள பிரச்னையாயிருக்கிறது. தாங்களோ கத்தியின் உதவியின்றியே காஞ்சிக் கோட்டை கிடைக்குமென்று கூறுகிறீர்கள்..."

முதியவர் "ஹோ ஹோ" எனச் சிரித்தார். அந்த நகைப்பின் ஒலி போர்க்களத்தே முழங்கும் சங்கின் ஒலியை ஒத்திருந்தது.

பல்லவர்களின் வாத்தியமான சமுத்திர கோஷத்தின் நாதத்தைப் போலிருந்தது.

அந்த ஒலி கேட்டுத்தான் ஓடி வந்தனரோ என்னவோ... இரட்டர் வீரர்கள் பலர் கூடாரம் நோக்கி விரைந்து வந்தனர். படைத் தலைவர் வந்து கொண்டிருந்தார்.

"அரசே, தாங்கள் குழப்பமடையக் காரணமேயில்லை. தங்கள் எண்ணப்படியே எல்லாம் நடக்கும். தங்களுக்கு வேண்டியது பல்லவ அரசர் உதவி; இளவரசி தேவியாருக்கு வேண்டியதோ காஞ்சியைக் கண்டு கலை பல பயில்வது. இரண்டையும் நடத்தித் தருவது என் பொறுப்பு."

"தங்கள் பொறுப்பா?" - வைரமேகன் வியப்பால் வினவினார்.

"ஆம்" என்று கணீரென்ற குரலில் முதியவர் மீசையையும் தாடியையும் தடவியவாறு கூறவும், இரட்டர் படைத் தலைவர்



கூடாரத்துக்குள் நுழைந்து வணங்கி, "அரசே, படை வீரர்கள் ஆயத்தமாகிவிட்டனர். இரவு ஒற்றர் கொண்டு வந்த செய்திப்படி வடக்கு நோக்கித் திரும்புவதா அல்லது முன்பு செய்த முடிவுப்படி காஞ்சி நோக்கியா?" என்று கேட்கவும், வைரமேகன் உத்தரவிடு முன்னர் முதியவர் எழுந்து, "உம்; காஞ்சி நோக்கிச் செல்லட்டும் படைகள்" என்று கட்டளையிட்டார்.

அப்போது இனிய கனவிலிருந்து விழித்துத் தந்தையுடன் முதியவர் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதறிந்த ரேவா தேவி முதியவர் மகளுடன் தந்தையிடம் விரைந்தபோது முதியவர் கூறும் சொற்கள் காதில் வீழ்ந்தன. அவை அமிர்த தாரையை வார்த்தது போன்றிருந்தன என்றாலும் முதியவர் கட்டளையிடும்போது தந்தை மௌனமாக இருப்பது அவளுக்குப் பேரதிசயத்தை அளித்தது. அங்கு கூடியிருந்தோர் அனைவரும் திகைத்தனர்.

## 18. இரண்யவர்மர் விஜயம்

தஞ்சையினின்று நந்திவர்மனின் தந்தை இரண்ய வர்மர் உதயசந்திரனின் அவசர அழைப்புக்கிணங்கி காஞ்சிக்கு வந்திருந்தார். காஞ்சி அரண்மனையை வந்தடைந்தவுடன் அவர் கண்கள் உதயசந்திரனைத் தேடின; காஞ்சியை அணுகு முன்பு அவர் எதிர்பார்த்ததே வேறு. காஞ்சிக்கும் பல்லவ சாம்ராஜ்யத்திற்கும் ஏதோ பெரும் ஆபத்து சூழ்ந்திருக்கிறது என்ற கலவரம் நிறைந்த எண்ணத்துடன் விரைந்த அவருக்குக் காஞ்சியின் கலகலப்பான தோற்றம் நிம்மதியை அளித்தது.

கல்லுயர்ந்த நெடு மதில் சூழ் கச்சிக் கோட்டைக் கதவுகள் திறந்துதானிருந்தன. கடிகைகளிலும் கல்லூரிகளிலும் வட மொழியும்

- தென் மொழியாம் தேன் மொழியும் ஓதும் மாணவர்களின் ஒலி நிறைந்திருந்தது. கோயில்களில் வேளையைக் குறிக்கும் மணி ஒலித்துக் கொண்டிருந்தது. கடை வீதிகளில் வழக்கம் போன்ற கலகலப்பு. பண்டம் வாங்குவோரும், விற்பவருமாக வீதியெல்லாம் மக்கள் கூட்டம்.

தந்தையைக் காண நந்திவர்மன் விரைந்து வந்தான். மகனைக் காண ஆண்டுகள் பல கழிந்தபடியால் இரண்ய வர்மர், புதுப்பொலிவோடு திகழும் தன் மகனைத் தலைமுதல் பாதம் வரை ஒருமுறை நோக்கினார். விசேஷமான பட்டுப் பீதாம்பரங்களுடன் அருள் நோக்கும், அறிவுப் பொலிவும், வீரப் பார்வையும் கொண்டு விளங்கும் மகனைப் பார்க்கும்போது இரண்ய வர்மரின் உடலில் ரோமாஞ்சலி எழுந்தது.

'கைலாசநாதா!' என்று மனத்துக்குள்ளே கூறி நீண்ட மூச்சு விட்ட அவர் மனத்தில் பலவித எண்ணங்கள் தோன்றின. வடக்கே கிருஷ்ணா நதி முதல், தெற்கே காவிரியாறு வரை விரிந்து பரந்திருந்த பல்லவ சாம்ராஜ்யத்தின் அரசு கட்டிலில் தன் மகன் ஏறுவான் என்பதை அவர் கனவிலும் நினைக்கவில்லை. மூத்த மகனே அரசனாவது என்னும் முறைப்படி சிம்ம வர்மனின் புதல்வன் சிம்ம விஷ்ணு பல்லவ சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சி புரியத் தொடங்கியபோது அவர் சகோதரர் பீமவர்மன் ஆட்சியில் முக்கிய பொறுப்பைக் கொடுத்தார். அந்தப் பரம்பரையில் வந்த இரண்ய வர்மருக்குப் பல்லவ நாடெங்கும் தக்க மரியாதையுண்டு. பல்லவ சாம்ராஜ்ய நலன் ஒன்றையே கருதியதால் இரண்ய வர்மர் அந்தத் தள்ளாத வயதிலும் அரசியல் காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். நாட்டின் தெற்கு எல்லையைப் பாண்டியர்கள் எந்தச் சமயத்திலும் தாக்குவர் எனும் அபாயம் இருந்தபடியால் முத்தரையர்களுடன் நட்புரிமை கொண்டாடி அவர்களது உதவி பெறத் தஞ்சை சென்ற இரண்ய வர்மர், காவிரி நதித் தீரத்திலேயே, அதன் பொலிவில் மயங்கித் தங்கி விட்டார். பொன்னி நதி பாயும் மரகதப் பூமியிலே மனத்தைப் பறி கொடுத்த அவர் காவிரிக்கரையிலேயே காஞ்சி அமைந்திருக்கக் கூடாதா என்று



எண்ணினார். அவருடனே எப்போதும் இருக்கும் அவரது இரண்டாவது மகன் ரணமல்லன், "ஏன் அப்பா, பல்லவ நாட்டுத் தலைநகரை இங்கேயே கொண்டு வந்து விட்டால் என்ன?" என்று புதுக் கருத்தைத் தெரிவிக்கும் அளவுக்குப் பொன்னியின் அழகு அவர்களைக் கவர்ந்து விட்டது.

நந்திவர்மன் தந்தையை வணங்கி, "தந்தையே! பிரயாணம் சுகமாயிருந்ததா? நாட்டின் தென்கோடி மக்கள் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள்?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்ட வண்ணம் தந்தையின் நலனை விசாரித்தான்.

மாபெரும் நாட்டின் அரசனாக மாறினாலும் நந்திவர்மன் அவர் மகன்தானே. அதனால் அவர் நந்திவர்மனை அருகழைத்து அணைத்துக் கொண்டு, "குழந்தாய்! தளபதி உதயசந்திரன் எங்கே? எனக்கு அவசரமாக அழைப்பு விடுத்ததன் காரணம் என்ன?" என்று கேட்டார்.

"சேனைத் தலைவர் சொந்த ஊருக்குப் போய் வருவதாகக் கூறிச் சென்றார் சில தினங்களுக்கு முன். அவரும் வில்லவ நாட்டிற்குப் போய் எவ்வளவு நாள்களாகின்றன" என்று கூறவும் இரண்ய வர்மர் மகன் கூறிய சொற்களை நம்பாதவராக, "ஹூம் ஹூம், உதயசந்திரன் தன் பிறந்த ஊருக்கு ஒரு காலும் சென்றிருக்க மாட்டான் என்று எனக்குத் தெரியும். உன்னைப் பட்டமேற்றி முடி சூட்டிய பிறகு ஓய்வுக்கு ஊருக்குப் போக எண்ணிய அவனுக்கு முக்கியக் காரியங்கள் பல நேர்ந்திருந்தன என்பது உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. வீட்டு விவகாரங்களையும் அவனது கோட்டத்திலுள்ள மக்கள் நலனையும் கவனிக்காது இந்த மகா சாம்ராஜ்யத்து நலனை மட்டும் கவனித்து ஊணும் உறக்கமுமில்லாதிருக்கும் படைத் தலைவனை இதுவரை நான் பார்த்ததில்லை."

"இத்தகைய பொறுப்பை அவர் ஏற்பது அரச காரியங்களில் தலையிடுவதாகும் என்று கோட்டத் தலைவர்கள் சிலர் கருதுகின்றனரே?" என்று நந்திவர்மன் குறுக்கிட்டுக் கூறவும், இரண்ய வர்மர் முகம் சிவக்க, உடல் படபடக்க, "என்ன கூறினர்?

அரச காரியங்களில் தலையிடுவதாகும் என்றா? ஏன், அரச உரிமையைப் பறிப்பதாகும் என்றுகூட கூறட்டுமே. உண்மையாக நாட்டுக்குழைப்பவருக்கு இந்தப் பட்டம் கிடைப்பது ஆச்சர்யமன்று. ஆனால், யார் கூறினார்கள்? கோட்டத் தலைவர்கள் சிலரா? நெஞ்சிலே நஞ்சூட்டி நாட்டைப் பிளவு படுத்தச் சிலர் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது" என்று கர்ஜித்தார்.

"அது மட்டுமா, காடக முத்தரையர் குத்திக் கொல்லப் பட்டிருக்கிறார். அது பற்றியும் கூட..." நந்திவர்மன் பேச்சை முடிக்கவில்லை. இரண்ய வர்மர் திடுக்கிட்டு, "காடக முத்தரையர் இறந்தாரா? ஐயோ, சித்திரமாயனது ஆதரவாளர்கள் இவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டனரா? ஏனடா, இன்னும் அவனைச் சிறைப்படுத்தி இந்த உலகத்தை விட்டு அனுப்பாதிருக்கிறாய்? நீ சிறுபிள்ளை என்பதைக் காட்டி விட்டாயே. தஞ்சையில் நானிருந்தது எவ்வளவு தவறு என்பதைப் புலப்படுத்தி விட்டாயே. பரமேஸ்வரா, சித்திரமாயனது நடவடிக்கையைக் கவனித்து வரும் ஒற்றர்கள் எங்கே?" என்று பேரிடி போன்று முழங்கும்போது குணதேவன் அங்கு வந்து வணங்கி நின்றான்.

இரண்யவர்மர் அவனை ஏற இறங்கப் பார்த்தார், யார் என்று அறியும் வண்ணம். குறிப்பறிந்த குணதேவன், "அடியேன்தான் தளபதியாரின் நம்பிக்கை பெற்ற அடிமை, குணதேவன் என்பது என் பெயர்" என்று கூறினான்.

"இவன்தான் இரட்டர்கள் படை முகாமிற்குள்ளே சென்று புலனறிந்து தப்பி வந்தவன். சித்திரமாயனின் ஆதரவாளர்களை இரட்டர்கள் நெருங்கவிடாது தடுத்தவன்" என்று நந்திவர்மன் கூறியபோது குணதேவனின் தோள்கள் பூரித்தன. அரசர் தன்னைப் பற்றி நல்லமுறையில் அறிந்து வைத்திருப்பதற்காக மகிழ்ந்து ஒருபிடி உயர்ந்த உணர்ச்சியடைந்தான். அது மட்டுமன்றி இன்னும் சித்திரமாயனிடமிருந்து அறிந்த புதிய செய்திகளை வெளியிடத் துடித்தது அவனுள்ளம்; ஆனால்...

யாரோ வரும் காலடியோசை அச்சமயம் கேட்டது. ரங்கமாதேவி மிக விரைந்து அங்கே வந்து கொண்டிருந்தாள்.



அந்தப்புரத்தை விட்டு அரச குடும்பப் பெண் சபை மண்டபத்துக்கு வருவது அதுதான் முதல் முறை. அவள் தோற்றத்தில் பதட்டமும், அவள் முகத்தில் சீற்றமும் மிகுந்திருந்தன.

சொர்க்கஸ்தரான இரண்டாம் பரமேஸ்வர வர்மர் ஆண்ட காலம் சிறிதெனினும் அவர் இரண்யவர்மரும் இணைபிரியா நண்பர்கள். அவர் இரண்யவர்மரின் குணம் முழுமையும் அறிந்தவர். அவரது பட்டத்து ராணிக்கு மகப்பேறு இல்லாததால் ஏற்பட்ட துயரத்தை மாற்ற ராணி ரங்கமாதேவி இருக்கிறாள் என்பதையும் இரண்யவர்மர் அறிவார். ரங்கமாதேவியைப் பரமேஸ்வரன் சந்தித்து மணம் புரிந்தது வேறு கதை. அவருடைய மகன்தான் சித்திரமாயன் என்று இரண்யவர்மர் வெகுகாலம் நினைத்திருந்தார்.

பட்டத்துக்குப் பெரும் கலகம் ஏற்பட்டபோதுதான் சித்திரமாயனது உண்மை வரலாறு தெரியவந்தது. மேலும் ராணி ரங்கமாதேவி சித்திரமாயனிடம் பேரன்பு கொண்டிருப்பதும் அவருக்குத் தெரியும். ராணி ரங்கமாதேவியை அவர் ஒருமுறையோ இருமுறையோதான் சந்தித்திருக்கிறார். ரங்கமாதேவி சித்திரமாயனை அரசனாக்குவதில் விருப்பமுடையவளாக இருப்பாளோ எனும் எண்ணம் இரண்யவர்மருக்கு இருந்தது.

ராணி ரங்கமாதேவியே நேரிடையே தேடி வந்தது ஏதோ முக்கிய காரியம் இருப்பதை உணர்த்தியது.

இரண்யவர்மர் அங்கு இருப்பார் என்று ரங்கமாதேவி எதிர்பார்க்கவில்லை. அதனால் எழுந்த அதிர்ச்சியை அடக்கிக் கொண்டு, "சித்திரமாயன் என்ன ஆனான் என்பது யாருக்காவது தெரியுமா?" என்று தேவி கேட்கவும், இரண்யவர்மர் நந்திவர்மனை நோக்கினார்.

அங்கே மௌனம் நிலவுவதைக் கண்டு ரங்கமாதேவியே கூறினாள்: "அரசே! இன்னும் சித்திரமாயனது நடவடிக்கைகளைத் தடுக்காமலிருக்கிறீர்களே என எண்ணும்போது எனக்கு

வேதனையாயிருக்கிறது. குருதி சிந்திக் காப்பாற்றிய இந்த நாட்டை மாற்றான் கூறுபோட வேண்டுமென்பது உங்கள் எண்ணமா? காஞ்சிக்கு நான் வந்த இந்த ஏழு நாள்களில் எனக்குக் கிடைக்கும் செய்திகள் பயங்கரமாயிருக்கின்றன. கோட்டைக் காவலர்கள் கொலையுண்டது; காடக முத்தரையர் மாண்டது; இரட்டர்கள் படை நெருங்கி வருவது இவ்வளவும் நடைபெற்றும் தங்கள் மௌனம் எனக்கு ஆச்சர்யத்தையே அளிக்கிறது. மந்திரி மண்டலத்தார் எங்கே போயினர்? தளபதி எங்கே?" - ரங்கமாதேவி வீராங்கனையைப் போல் காட்சியளித்தாள்.

ஆனால், அது சமயம் குணதேவன் கூறிய செய்தி ஒவ்வொருவரையும் திடுக்கிட வைத்தது.

"நீங்கள் எண்ணுவது போன்று தளபதி அமைதியாக இருக்கவில்லை. இந்த நேரத்தில் வேகவதியாற்றங்கரையிலுள்ள பௌத்த விஹாரத்தில் சித்திரமாயனும், அவனை எவரெவர் ஆதரிக்கிறார்களோ அத்தனை பேரும் சிறைபட்டிருப்பர்" என்று கூறினான்.

ஆனால், அவன் கூறியதுபோல் எதுவும் நடக்கவில்லை என்பதும், அவனுடைய அவசரச் செயல் ஒன்று நாட்டுக்குப் பெரும் விபரீதத்தை விளைவிக்கும் விபத்துக்கு வித்திட்டிருப்பது வீரன் குணதேவனுக்கு எப்படித் தெரியும்?

## 19. திசை மாறியது

"அப்பா" என்றழைத்தாள் குமுதவல்லி. அவளுடைய கண்களில் நீர் தளும்பி நின்றது. நெஞ்சிலிருந்து வார்த்தைகள் வெளியே வராமல் துக்கம் நெஞ்சை அடைத்தது. இன்னும் ஒரு கணம் இருந்தால் விம்மல் பலத்து வேதனையும் ஏமாற்றமும் தீர அழுது அழுது தீர்த்திருப்பாள். கந்ததேவன் மகளின் அருகே



வந்தமர்ந்து அவளைத் தேற்ற முயன்றார். திருநாராயணனின் மனைவியும் குமுதவல்லியின் கண்களைத் துடைத்து, "என்னம்மா நீ? என்ன நேர்ந்துவிட்டதென்று வருத்தப்படுகிறாய்? சோற்றை நீ கண்ணெடுத்துப் பார்த்துப் பல நாள்களாகிவிட்டன. நீ வருத்தப் பட்டு மெலிவதால் மட்டும் எதிர்பார்ப்பது நடந்து விடுமா?" என்று தேற்றவும் குமுதவல்லி தழுதழுத்த குரலில், "அக்கா, உங்கள் வீட்டுக்காரரிடம் மறுபடியும் சொல்லி அவர் இருக்குமிடம் தெரிந்து வரக் கூடாதா?" என்று கூறவும், திருநாராயணன் மனைவி பெருமூச்சு விட்டு, "தினமும்தான் நான் கூறுகிறேன். தளபதியும் உன் அத்தானும் இருக்கும் இடத்தையும் செய்யும் காரியங்களையும் அறிய முடியவில்லை என்கிறார். இன்று அவர் வரட்டும்; உன் நிலையைப் பார்க்கப் பொறுக்கவில்லையே! எப்படியும் கேட்டுச் சொல்கிறேன். தெரிந்து நீ, என்ன செய்யப் போகிறாய் குமுதா? உன்மீது பிரியமிருப்பவராயிருந்தால் அன்று வழிப் போக்கன் உடையில் வந்து, உன்னைக் கண்டிருந்தும், நம் வீட்டுத் திண்ணையில் வெகு நேரம் தங்கியிருந்தும் உன்னுடன் பேசாமல் போயிருப்பாரா?"

குமுதவல்லியின் துயரைத் தீர்ப்பதற்கு மாறாக அவள் இன்னும் வளர்த்து விட்டாள். "அக்கா!" என்று விம்மி அவள் தோளிலேயே முகத்தைப் புதைத்துக் கண்ணீர் சிந்தியதைத் திருநாராயணன் மனைவியால் புரிந்து கொள்ள முடியவில்லை. குமுதவல்லியின் இதய உணர்ச்சியை அளவிட அவளால் இயலவில்லை. அவன் மனப்போக்கை அறிய அவளுக்குச் சக்தியில்லை. கண்ணீரின் காரணத்தை அவள் கண்கள் காணவில்லை.

"அம்மா, குழந்தாய்! அக்கா சொல்லுவது சரியே. நீ அழுதழுது முகம் வீங்கிக் கண்ட பயன்தான் என்ன? இதோ போர் - அதோ போர் என்றார்கள். ஒன்றையும் காணோம். கோட்டைக் கதவுகள் விசாலமாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. வடக்குக் கோட்டை வாயில் வழியாகப் பல்லவப் படைவீரர்கள் திரும்பி வந்த வண்ணமிருக்கின்றனர். அவர்கள் தோற்றத்தைப் பார்த்தால் யுத்த பூமியை அவர்கள் மிதிக்கவில்லை என்பது தெரிகிறது. காலையில் நகரைச் சுற்றிப் பார்த்து வந்தேன். மாவிலைகளும் தோரணங்களும்

நகரெல்லாம் கட்டுகிறார்கள். புதிய பந்தல்கள் முச்சந்திகளில் போடுகிறார்கள். இராஜ வீதியைப் பெருக்கிச் சுத்தப் படுத்துகிறார்கள். சில வீடுகளுக்கு வெள்ளையடிக்கிறார்கள். எதற்கு என்று யாருக்கும் தெரியவில்லை. யாரோ மகான் வரப் போவதாகப் பேசிக் கொள்கிறார்கள். இதற்கெல்லாம் நமது பெரியநம்பி இருக்க வேண்டும்; எந்தத் தீவிவிருந்தாலும் செய்தியைக் கொண்டுவந்து கூறிவிடுவான். உம்; தாமரைப்பாடியை விட்டு வந்து பல நாள்களாகின்றன. எனக்கென்னவோ இந்த நகர வாசம் பிடிக்கவில்லை. எப்போதும் குதிரைகள் விரைந் தோடும் சப்தமும், யானை அசைந்தாடிச் செல்லும் அரவமும், பல்லக்குச் சுமப்போரின் 'ஹோ', 'ஹோ' என்ற ஒலியும் கேட்டு அலுத்து விட்டது. மகளே! நாம் நாளையே கிராமத்திற்குப் புறப்பட்டு விடுவோம்" என்று கூறினார்.

அவருடைய ஆறுதல் வார்த்தை குமுதவல்லியின் காதுகளில் சரியாக விழவில்லை. கடைசியாகச் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் அவள் தந்தையைக் கோபத்துடன் பார்த்து, "புறப்படுவதா? அவரைப் பார்க்காமலா? ஒருகாலும் இல்லை; காஞ்சிக்கு நான் வந்தது எதற்காக? நகர அழகைக் காணவா? முடியாது, முடியாது" என்று கூறினாள்.

மகளுடைய ஆவேசமான வார்த்தையைக் கண்டு கந்ததேவனே திடுக்கிட்டு விட்டார். அவர் ஏதோ கூறத் தொடங்கும்போது வெளியேயிருந்து 'ஐயா' என்ற குரல் கேட்டது.

குமுதவல்லி துள்ளி எழுந்தாள். அவள் யாரை எண்ணி எதிர்பார்த்திருந்தாளோ அவர் குரல் போல் தோன்றவும் குதித்தோடினாள் வாயிலுக்கு. ஆனால், வாயிலில் நின்றது அவள் இதயத்தின் வீற்றிருக்கும் குணதேவனல்லன்; தாமரைப்பாடி வணிகன் பெரியநம்பி நின்றிருந்தான்!

ஏமாற்றத்தால் குனிந்த தலையுடன் திரும்பினாள் குமுதவல்லி. கந்ததேவன் பெரிய நம்பியைப் பார்த்தவுடன் "வர வேணும், வர வேணும்" என்று உற்சாகத்துடன் வரவேற்றார்.



"வணிகரே; நலமா? தங்களைப் பற்றித்தான் சற்று முன்பு பேசிக் கொண்டிருந்தோம்" என்றார்.

"என்ன பேசினீர்கள்? இந்த நம்பி பொல்லாதவன் என்றுதானே!"

"அப்படியெல்லாம் இல்லை. குமுதம் அழுது அழுது முகம் வீங்கிக் கிடக்கிறாள் குணதேவனைக் காணாது. உங்களுக்கு ஏதாவது செய்தி தெரியுமா அவனைப் பற்றி?"

பெரியநம்பி திடுக்கிட்டவன்போல் நடித்து, "குணதேவனா? நேற்றுதானே அவனை நம் கிராமத்தில் பார்த்தேன். தஞ்சைக்கு மிக முக்கியப் பணியாக ஏதோ ஓலையொன்று எடுத்துச் செல்பவன் தாமரைப்பாடியில் தங்களைக் காண வந்திருக்கிறான். திடீரெனக் குளிர் காய்ச்சல் ஏற்படவே பக்கத்து வீட்டுத் திண்ணையில்தான் கிடக்கிறான். காஞ்சி வரும் வேலை அப்போது எனக்கில்லை. இப்போதுதான் வருகிறேன். அதைச் சொல்லத்தான் வந்தேன்" என்று கூறவும் தந்தையும் மகளும் திடுக்கிட்டெழுந்தனர்.

"குமுதா புறப்படு, புறப்படு" என்று கந்ததேவன் அவசரப்படுத்தினார். குமுதவல்லியும் தலை வாரப்படாதது பாராமல் திலகம் கலைந்திருப்பது காணாமல் புடைவை அழுக்கடைந்திருப்பதை அறியாமல் உடனே புறப்பட்டு விட்டாள். திருநாராயணன் மனைவி அவர்கள் அவசரத்தைப் பார்த்து ஏதும் கூறமுடியாது நின்றாள்.

தாமரைப்பாடி வணிகனிடமும் கூறாமல் அவர்கள் புறப்பட்டுச் சிறிது தொலைவு கூடச் சென்றிருக்க மாட்டார்கள். வணிகன் ஒருவன் வேகமாக ஓடிவந்து, "ஐயா, தாமரைப்பாடிக்குச் செல்ல பல்லக்கு வேண்டாமா? மாட்டு வண்டியில் செல்வதானால் எவ்வளவு நேரமாகும்? குதிரையிலும் இருவர் செல்ல முடியாது. கொஞ்சம் என்னுடன் வாருங்கள். பல்லக்கு அமர்த்தித் தருகிறேன்" என்று கந்ததேவனையும் அவர் மகளையும் எங்கோ அழைத்துச் சென்றான்.

பல்லக்கில் குமுதவல்லியும் கந்ததேவனும் அமர்ந்தனர். குமுதவல்லியின் மனத்தில் இப்போது துயரமில்லை;

குணதேவனைக் காணப் போகிறோமென்ற ஆவல் இருந்தது. தாமரைப்பாடி வணிகன் மீது அவளுக்கு ஆத்திரமிருந்தாலும் நல்ல செய்தி கூறியதற்காக அவனை வாழ்த்தினாள்.

காஞ்சி மாநகரத்து அகண்ட வீதியின் வழியே செல்லும்போது அவள் கண்கள் நாலாபக்கமும் பார்த்தன. எங்கும் தோரணங்கள், கொடிகள், தேர்த் திருவிழா நடப்பது போன்ற கூட்டம்.

"அப்பா, ஏகாம்பரேச்வரர் கோயிலில் திருவிழாவா?" என்று குமுதவல்லி கேட்டாள்.

"இப்போது இல்லையம்மா. நான்தான் சொன்னேனே யாரோ மகான் வருகிறாராம்."

சிவிகை சென்று கொண்டேயிருந்தது; குமுதவல்லியின் மனம் இன்பத்தால் துள்ளி நின்றது. அதே சமயம் குணதேவனைக் கண்டவுடன் கண்டித்துக் கேட்க வேண்டிய கேள்விகளை அவள் யோசித்துக் கொண்டே இருந்தாள்.

"அப்பா! ஊர் போனதும் அவரை ஒன்றும் கேட்டு விடாதீர்கள். உடம்பு நலமானதும் எல்லாம் பேசுவோம்; முதல் கேள்வி அவரை நானே கேட்கிறேன் பாருங்கள்" என்றெல்லாம் பேசியவாறு குமுதவல்லியும் கந்ததேவனும் பல்லக்கில் அமர்ந்திருந்தனர்.

பல்லக்கு தாமரைப்பாடியை நோக்கிச் செல்லவில்லை. திசைமாறி அது சென்றதைப் பேச்சின்பத்தில் அமிழ்ந்திருந்த தந்தையும் மகளும் கவனிக்கவில்லை. பல்லக்கைத் தொடர்ந்து வரும் குதிரையின் குளம்படி ஓசையையும், குதிரை மீதேறி வருபவரையும் அவர்கள் எங்கே கவனித்திருக்கப் போகின்றனர்?



## 20. பாலாற்றங்கரையில்

கீழ்த்திசையில் வட்ட வடிவச் சந்திரன் உதயமாகியிருந்தான். காஞ்சி நகரத்து மக்களுக்கு அவன் உதயத்தைக் காண முடியவில்லை. உயரமான மதில் சுவரும் மதிலை ஒட்டி வளர்ந்திருந்த அடர்ந்த சோலையும் அவன் வரவைக் கட்டியங்கூறி வரவேற்க வழி செய்யவில்லை. பொழுது சாய்ந்தவுடன் வழக்கமாக ஏற்றப்பட்ட வீதி விளக்குகள் ஒளி வீசி நின்றன. வீடுகள் தோறும் வெளியே வைக்கப்பட்ட குத்துவிளக்குகள் குலப் பெண்களின் பெருமையைப் புலப்படுத்துவன போல் அடக்கமாக நின்று ஒளிவீசின.

வீதியில் கட்டப்பட்டிருந்த மகர தோரணங்களும் மலர்த் தோரணங்களும் இளங்காற்றில் மெல்ல ஆடி எல்லாரையும் வரவேற்றன. நான்கு வீதியும் கூடுமிடங்களில் போடப்பட்டிருந்த பந்தல்களிலே விதவிதமான சித்திர வேலைப்பாடுகளுடன் விதானங்கள் அழகுபடுத்தப்பட்டிருந்தன.

வீதியெல்லாம் புழுதியெழாதபடி தண்ணீர் தெளிக்கப்பட்டிருந்தது. பொழுது சாய்வதற்கு முன்னரே வீதியில் தங்கள் தங்கள் வீடுகளின் எதிரே பெண்கள் தங்கள் ஓவியத் திறமையைக் காட்டி வண்ண விசித்திரமான கோலங்களை வரைந்த வண்ணமிருந்தனர். அதைக் காணப் பெரியவர்களும் சிறுவர்களுமாகக் கூட்டம் சேர்ந்து வீதியில் செல்லும் வாகனங்களையும் குதிரைகளையும் பல்லக்குகளையும் ரதங்களையும் யானைகளையும் தடை செய்தனர்.

காஞ்சியிலே இத்தனை கோலாகலம் நந்திவர்மன் பட்டமேற்ற பிறகு நடந்ததேயில்லையென்று மக்கள் பேசிக் கொண்டார்கள். ஏகாம்பரேச்வரர் கோயில் திருவிழா இந்த ஆண்டு மிகச் சிறப்பாக நடைபெறுவது போல் இதற்குமுன் நடைபெறவில்லை என்று முதியவர்கள் பேசிக் கொண்டார்கள். இந்த ஆண்டு வீதியெங்கும்

நிறைந்திருக்கும் பலவித பண்டங்கள் விற்கும் கடைகளைப் போல் தாங்கள் கண்டதில்லையெனப் பெண்கள் பேசிக் கொண்டார்கள். விதவிதமான தின்பண்டங்களை விற்கும் கடைகளைப் பார்க்கும் சிறுவர்கள் காஞ்சியில் கோலாகலம் என்றும் நீடித்திருக்க வேண்டுமென ஆண்டவனை வேண்டிக் கொண்டார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கூத்து மேடையின் எதிரே குழுமியிருந்த மக்கள் கூட்டம் பெரும் கடல்போல் காட்சியளித்தது. காஞ்சியின் சுற்றுப்புறத்தில் ஐம்பது கல் தொலைவிலிருந்தெல்லாம் மக்கள் வந்திருந்தனர்.

திருவிழாவின் சிறப்பைப் பற்றி மக்கள் பேசிப் பேசி அலுத்தனர். காஞ்சியை ஆண்ட மன்னர்கள் காலத்துப் பெருமையைப் பற்றிப் பேச்சு வளர்ந்தது. அதுவும் அலுத்துப் போய் கடைசியில் மறுநாள் காஞ்சிக்கு வரப்போகும் திருமங்கை மன்னரைப் பற்றிப் பேச்சு மக்களிடையெழுந்தது.

பரகாலரைப் பற்றி அறியாதவர்களுக்கு அறிந்தவர்கள் கூறினார்கள். பிற்காலத்தில் எழுந்ததைப் போன்று சைவ, வைணவ பேதம் அந்தக் காலத்தே இல்லை. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தோன்றி ஜைன பௌத்த சமயப் பிரசாரங்களில் மயங்கியிருந்த மக்களைத் திருப்பினர். திருமாலின் குணப்பெருமைகளைப் பற்றியும், சிவனின் அருளினைப் பற்றியும், தீந்தமிழ்ப் பாடல்களை இயற்றி மக்கள் மனத்திலே மறைந்த நம்பிக்கை மீண்டும் துளிர் விடச் செய்தனர். இசையுடன் இயைந்த அந்தப் பாடல்களிலே வேதத்தின் சாரத்தை வடித்தெடுத்து அளித்தனர். அந்தப் பாடல்கள் கருத்து வேற்றுமைக்குத் தக்க மறுமொழி கூறுவனவாகவும் அமைந்தன.

கூத்துமேடை அருகே அதிக ஒளியை உமிழ்ந்தவண்ணம் தீவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. மதிலுக்கு வெளியே ஒளிந்து கொண்டிருந்த வட்ட முழுமதி இப்போது காஞ்சியில் நடக்கும் கோலாகலங்களைக் காண வானத்தே எழுந்து கம்பீரமாக நின்றான். அவனது குளிர்க்கிரணங்கள் காஞ்சியின் கோலாகலத்தை இன்னும் அதிகப்படுத்தின.



கூத்து ஆரம்பமாகும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்து அமர்ந்திருந்த மக்கள் பொறுமை இழக்குமுன்பே கூத்து மேடைத் திரை விலகியது.

கடந்த நான்கு நாள்களில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கதையை இசை கலந்த கூத்தாக நடித்தனர். மகா பாரதத்துக் காட்சிகளே அதிகமாக இடம் பெற்றன. மக்கள் மனத்தே மகாபாரதக் கதை பெருமளவில் இடம் பெறப் போகின்றன என்று எல்லாரும் பேசிக் கொண்டார்கள்.

பலவிதத் தோல் கருவிகளும் துளைக் கருவிகளும் முழங்க திரை விலகியது. கூடியிருந்த மக்கள் ஆரவாரம் செய்தனர். கரங்கூப்பி எழுந்து நின்று வணங்கினர். கூத்து மேடையில் பாற்கடலையே திரைச் சீலை வல்லுநர்கள் கொண்டு வந்திருந்தனர். பாம்பணையின் மீது திருமால் சயனித்திருக்க திருமகளும், பூமகளும் கால்களை வருடுகிறார்கள். தேவர்கள் தொழுது நிற்கிறார்கள். பின்னணியில் பாடல் எழுகிறது.

*'கொந்தலர்ந்த நறுந் துழாய்ச்*
*சாந்தத் தூபத்தீபங் கொண்டமர தொழப்*
*பணங் கொள் பாம்பிற்*
*சந்தணி மென் முலைமலராள் தரணிமங்கை*
*தாமிருவரடி வருடுந் தன்மையானை*
*வந்தனை செய் திசையேழா றங்கம்*
*ஐந்து வளர் வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்*
*சிந்தனை செய்திரு பொழுது மொன்றும்*
*செல் வத்திருக் கோவலூர தனுட கண்டேன் நானே.'*

பின்னணிப் பாடலும் தத்ருபமாக வேடம் பூண்டவரின் தோற்றமும் மக்களை எடுத்த எடுப்பிலேயே மெய்சிலிர்க்கச் செய்து விட்டன.

இதைத் தொடர்ந்து வெவ்வேறு விதத் தோற்றத்துடன் பாடி ஆடிக் கொண்டு கூத்தர்கள் வந்தனர். விறலியரும், பாணரும் தத்தம் திறமைகளைப் பெரிதும் புலப்படுத்தினர்.

இளஞ்சிறுவன் ஒருவன் கிருஷ்ணர்போல் வேடம் அணிந்து மேடைக்கு வந்தபோது மக்களிடையே ஆகாகாரம் எழுந்தது.

ஆய்ச்சியர் மனை புகுந்து வெண்ணெய் உண்டதையும், ஆய்ச்சியர் கிருஷ்ணனை உரலோடு பிணைத்துக் கட்ட, தவழ்ந்துபோய் மர வடிவாய் நின்ற அரக்கனை மாய்த்ததையும் மற்றும் கண்ணனது திருவிளையாடல்களையும் அபிநயித்துக் கடைசியில் பாண்டவர்களுக்காகத் தூது சென்றதையும் நடித்தனர். பாரதப் போர்க் காட்சி நடிக்கப்பட்டது. அழகிய ரதம் மேடைக்கு வந்தது. பார்த்திபன் கம்பீரமாக அமர்ந்திருந்தான். கண்ணபிரான் சாரதியாக அமர்ந்திருந்தான். கண்ணபிரான் சாரதியாக அமர்ந்து செருக்களத்து திறலழியச் சென்றதை மக்கள் கண்டபோது 'வாழ்க பார்த்தன்; வாழ்க கண்ணன்' என்று கூவினர்.

கூத்தின்போது கூட்டத்து ஒரு மூலையில் நின்று மக்கள் எவரும் அறியாவண்ணம் கூத்தினைக் கண்டு களித்தவண்ணமிருந்த இரண்யவர்மரும், நந்திவர்மனும் முதலமைச்சரை நோக்கி, "இந்தத் தீஞ்சுவைப் பாடல்களைப் பாடிய கவிஞர் யாரோ?" என வினவ முதல் மந்திரி சொன்னார்:

"அரசே, நாமெல்லோரும் ஆவலுடன் எதிர்நோக்கும் திருவாலி மன்னரான திருமங்கை அடியாரின் பாடல்கள் அவை. அவர் வாழும் காலத்தே நாம் வாழ்கிறோமே அது மாபெரும் பேறு மன்னா! நாளைக்குத் திருக்கோயிலூரிலிருந்து இங்கு வருகிறாராம் தம் பரிவாரங்களோடு. மக்கள் செய்த புண்ணியம்தான்..."

நந்திவர்மன் கண்களிலே நீர் தளும்பியது. அவன் தந்தை பக்கம் திரும்பி, "அப்பா, என்ன வேண்டிக்கிடக்கிறது அரசபீடம்? காஞ்சிக் கல்லூரியில் தமிழ்ப் பாடலின் இன்சுவைகளை என்றும் அனுபவித்து வாழ்வதுபோக, சதிகாரர்களை ஒழிப்பதும் அவர்களது திட்டங்களுக்கு மாற்றுத் திட்டம் போடுவதும் என்ன பயன்? நாளைக்குக் காலையில் திருவாலி மன்னர் வரும்போது அவரை வரவேற்காமல் பாலாற்றங்கரை அருகே இரட்டர்களை எதிர்பார்த்துப் படைகளுடன் செல்ல வேண்டியிருக்கிறது. ஆண்டவனின் திருநாமத்தைக் கூறி ஆனந்திப்பதற்கு மாறாக



'வெற்றி வேல் வீர வேல்' என்று முழங்கி படை வீரர்களுக்கு உற்சாக மூட்டிக் கோரச் சிரிப்பு புரிய வேண்டியிருக்கிறது" என்றான். அப்போது காவல் வீரன் ஒருவன் வந்து வணங்கி, "ஐயா! யாரோ பெரியவர் ஒருவர் தங்களிடம் அவசரமாகப் பேச விரும்புகிறார்" என்று கூறவும் நந்திவர்மன் சற்று ஒதுக்குப்புறமாகப் புரவியின் அருகே நின்றிருந்த வெளுத்த தாடியுடன் முதுமைப் பருவம் சேர்ந்த பெரியவரை நோக்கிச் சென்றான்.

அந்த முதியவரை எளிதில் இன்னாரென அறிந்து வியந்த அரசர் முதியவர் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டு அன்புடன் அணைத்து, "தங்கள் உதவியை என்ன கூறிப் புகழ்வது?" என்று கூறவும் முதியவர் ஆசி கூறுவது போல் கையைத் தூக்கி பாவனை செய்து விரைந்து சென்று இருளில் மறைந்தார்.

இராட்டிரகூடர்கள் படைகள் காஞ்சியை நெருங்கிக் கொண்டிருந்தன. பல்லக்கிலே அமர்ந்திருந்த ரேவா தேவியும் அவள் தம் தோழியும் யாருடையே வரவையோ எதிர்பார்த்த வண்ணமிருப்பது தெரிந்தது.

"அடி, அந்த முதியவரையும் அவரது மகளையும் காணவில்லையே. விரைவில் வந்து சந்திப்பதாகக் கூறிச் சென்றாரே?" என்று ரேவா தேவி கவலையுடன் கேட்டாள்.

தோழி கலகலவெனச் சிரித்து, "அம்மா! அரசமகளுக்கு இவ்வளவு கவலைகள் கூடாதம்மா. முதியவர் வராவிடில் உங்கள் தந்தையின் பயணம் நின்றுவிடுமோ?" என்று கூறவும் ரேவா அவளை விழுங்கி விடுபவள்போல் பார்த்து, "அரச மகளாக இருப்பதைவிட உன்னைப் போல் சேடியாக விளங்குவதே சிறந்தது. பிறர் துன்பம் அறியாமல் இதயத்தில் வேதனையை வளர்க்கலாமல்லவா?" என்று கூறவும் தோழி திகைத்து, "இளவரசி! என்னை மன்னித்து விடுங்கள். நான் சொல்வதில் தவறிருக்கலாம் என்றாலும் எனக்கு என்னவோ அந்த முதியவர் பேரில் நம்பிக்கையில்லையம்மா. இதுவும் அந்தப் பல்லவர்கள் சூழ்ச்சியாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது" என்றாள்.

தோழி கூறியது உண்மை என்பது ரேவாவுக்குத் தெரிய அதிக நேரம் பிடிக்கவில்லை. பாலாற்றங்கரையை அடைவதற்கு முன் இருள் மெல்ல விலகத் தொடங்கியது. முதியவர் தன் தந்தையைச் சந்திக்க வந்து விட்டார் என்பதை அறிந்து கொண்டாள் ரேவா. பரபரப்பு மிகுந்திருந்த அவளது இதயத்தில் மெல்ல மெல்ல அமைதியும் பரவி வந்தது. இரட்டர்களின் வீரர்கள் எந்தவிதமான எதிர்ப்பையும் எதிர்பார்த்தவர்கள் போல் ஆயத்தமாயிருந்தார்கள் என்றாலும் சோர்வின் எல்லையிலே அவர்களிருந்ததை அவர்கள் முகம் தெரிவித்தது.

காலை இளங்காற்று அவர்கள் முகத்தில் வீச, புலர்ந்த புதுப் பொழுதில் பாலாற்றங்கரையில் அவர்கள் நின்றனர்.

இரட்டர்களின் போர் வாத்தியங்கள் முழங்க முற்படு முன்பே பாலாற்றின் எதிர்க்கரையில் சங்கமும் எக்காளமும் முழங்கும் சப்தம் எழுந்தது. நூறு இருநூறு நபர்களுக்கு மேற்படாத கூட்டத்தினர் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. தென்கரையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அவர்கள் வந்து கொண்டிருந்தனர். யானையும், சிவிகையும் அசைந்தாடிச் செல்ல, தோரணமும் கொடியும் தாங்கி முன் செல்வது நன்றாகத் தெரிந்தது.

வைரமேகன் முதியவர் பக்கம் திரும்பிக் கேட்டார்: "அது என்ன போர் வீரர்களா? பல்லவப் படை வீரர்களா? அல்லது சிற்றரசர்கள் எவரேனும் பல்லவர்களுக்கு உதவ வருகிறார்களா?" என்றார் ஆவலுடன்.

முதியவர் நகைத்து, "பல்லவப் படைகளுமில்லை. வீரர்களுமில்லை. ஆனால், குறுநில மன்னரொருவர் மக்களுக்கு உதவ வருகிறார். இகத்திற்கும் பரத்திற்கும் உதவியளிக்க வருகிறார். உலகத்தைக் காத்து அருளும் திருமாலின் மேலான குணங்களைக் கூறி அவன் திருவடிகளை மக்கள் மனத்தில் பதிக்க வருகிறார். உலகப் பற்றற்றுப் போகாமல் மக்கள் மனத்திலே புது ஜீவன் ஊட்ட வருகிறார்."

வைரமேகன் முகத்திலே ஆவல் குறி அதிகமாகியது. முதியவர் கூறும் முழுப் பொருள் புரியாமல், "யார் அவர் ஐயா?" என்று



கேட்கவும், "அவர்தான் சில நாள்களுக்கு முன்பு நான் கூறினேனே என் தலைவர், மக்கள் தலைவர், அவர்தான் திருவாலி மன்னரான திருமங்கை அடியார்" என்றார்.

வைரமேகனிடம் பரபரப்புமிருந்தது. "அப்படியா! பெரியவரே நல்ல சகுனம் என்றே கூற வேண்டும். அவரை நான் ஏன் தரிசிக்கக்கூடாது? ஐயா, உடனே ஏற்பாடு செய்யுங்கள். அவர் ஆசி பெற்றுக் காஞ்சியை அணுகுவோம்" என்றார்.

பெரியவர் நகைத்தவண்ணம் கூறினார்: "அரசே! ஏன் தாங்கள் அவரைச் சந்திக்க முடியாது? அதுதானே என் லட்சியம். தங்கள் வீரர்கள் இங்கேயே இருக்கட்டும். தாங்களும் தங்கள் மகளும் உடனே என்னுடன் வாருங்கள். இந்த ஆற்றிலே நீராடித் தாங்கள் புத்துடையணிந்து வாருங்கள். அதற்குள் நான் சந்திப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றார்.

அடியார்க்கு அடியாரான திருமங்கை மன்னர் ஆற்றங்கரை மண்டபத்தமர்ந்து தீஞ்சுவைப் பாடல்களைப் பாட அவரைச் சூழ்ந்துள்ளோர் வாரமோத தெய்விக மணம் கமழும் அவ்வேளையிலே வெண்கொற்றக் குடைக்கீழ் அமர்ந்து ஆண்டுவரும் வைரமேகன், காஞ்சியைப் பிடிக்க வந்த வைரமேகன் திருமால் அடியார் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்.

முதியவர் திருமங்கை மன்னரிடம் கைகட்டி வாய் பொத்தி நின்று வைரமேகனை அறிமுகப்படுத்தவும் திருவாலி மன்னர் துளசித்தளத்தை எடுத்து அளித்து ஆசி கூறி, "உங்களுக்குச் சகல வெற்றிகளும் உண்டாகட்டும்; எல்லாரும் காஞ்சி நகருக்குப் போவோம். அமைதியாக அங்கே உரையாடுவோம். கோயில்கள் நிறைந்த காஞ்சியில் பகவானின் கோலத்தைக் கண்டு, திருக்குணங் கேட்டு அவரது அருளுக்குப் பாத்திரராவோம். வாருங்கள் போவோம்" என்றார்.

படை பலத்துடன் காஞ்சியின் அரச பீடம் பெறவந்த வைரமேகன் முதியவரின் முகத்தைப் பார்த்தார். முதியவர்

புன்சிரிப்புடன் கூறினார்: "பேரரசே! கவலை வேண்டாம். தங்கள் நோக்கத்திற்குப் பங்கம் ஏதும் வராது. தங்கள் மகள் எண்ணம் நிறைவேறும். வருங்காலத்தில் அழியாத அளவுக்கு வரலாற்றில் மறையாத நிகழ்ச்சி நடக்க வழி செய்யுங்கள். நான் கூறியபடி காஞ்சிக் கோட்டை வாயில்கள் இரு மன்னர்களின் வருகைக்காகத் திறந்திருக்கும்" என்றார்.

அப்போது எங்கோ முரசத்தின் ஒலி எழுந்தது. பேரிகை முழங்கியது. துந்துபி ஒலித்தது. நாதஸ்வர இன்னிசை எழுந்தது. தொலைவில் புழுதிப் படலத்தைக் கிளப்பிய வண்ணம் பல்லவப் படைகள் வந்து கொண்டிருந்தன.

## 21. தாமரைப்பாடியா? தர்மசேனனா?

தாமரைப்பாடிக்குச் சென்று குணதேவனைச் சந்திக்கும் பேராவலில் சிவிகையில் அமர்ந்து குமுதவல்லி தந்தையுடன் உரையாடிய வண்ணம் சென்று கொண்டிருக்கும்போது வெகுநேரம் கழித்து ஏதோ நினைவாக வெளியே எட்டிப் பார்த்த கந்ததேவன் திடீரெனத் திடுக்கிட்டார்.

காஞ்சியிலிருந்த உத்திரமேரூர் போகும் பாதையிலே எத்தனையோ ஆண்டுகள் பயணம் செய்திருக்கும் நரை கண்ட அந்த முதியவருக்குப் புதிய தோற்றமுள்ள இந்த வழி புரியவில்லை. உத்திரமேரூர் போகும் வழியிலுள்ள அரண்மனை நந்தவனத்தைத் தன் மகளுக்குக் காட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அவர் வெளியே எட்டிப் பார்த்தார்.

தாமரைப்பாடிக்குச் செல்லும் பாதையன்று அது எனும் எண்ணம் ஏற்பட்டவுடன் அவர் விரைந்து கூவலானார், சிவிகை



சுமப்போரை நோக்கி. ஊமைகள் போலும், செவிடர்கள் போலும் தோற்றமளித்த அவர்கள் வேகம் இன்னும் அதிகமாகியது. பின் தொடர்ந்து வந்த குதிரைகளின் குளம்படியோசை இப்போது மிக நெருங்கிக் கேட்டது. சிவிகையையொட்டி அவை வருகின்றன என்பதும் தெளிவாகப் புலப்பட்டது, குமுதவல்லியின் தந்தைக்கு. பல்லவ வீரர்களாயிருக்கலாம் எனும் எண்ணத்தில் கந்ததேவன் உரத்த குரல் எழுப்பிச் சிவிகையாளரை நிறுத்துமாறு கூவினார். அவர் அபயக் குரலைக் கேட்டு, உதவிக்கு வர அங்கு யார் இருக்கிறார்கள்? சாதாரண நேரமாயிருந்தால் சிவிகையிலிருந்து குதித்துவிடலாம். உடன் மகளும் வருகிறாளே. சிவிகையினின்று குதிக்கும்போது தவறி விழுந்து உயிருக்கு ஏதாவது அபாயம் நேர்ந்துவிட்டால் குமுதவல்லியைக் காப்பாற்றுவது யார் எனும் எண்ணம் ஒரு நொடியில் தோன்றவே கந்ததேவன் சிவிகையினின்று குதிக்கும் எண்ணத்தை விட்டு விட்டார்.

தந்தையின் பரபரப்பும் அவர் சிவிகையை நிறுத்துமாறு ஓவென்று கூவியதும் கண்ட குமுதவல்லி திடுக்கிட்டாள். என்னவோ அபாயம் நேரப் போகிறது என்று தந்தையின் கையை இறுக்கமாகப் பிடித்தாள். சிவிகை சென்று கொண்டிருந்தது. முன்னிலும் அதிக வேகமாகச் சென்றது. சிவிகையைத் தூக்கிச் செல்பவர்கள் மனிதர்களா அல்லது மிருகமா என்று புரிந்து கொள்ள முடியாதபடி அவர்கள் வேகமாக ஓடினார்கள்.

கந்ததேவன் உதட்டைக் கடித்துக் கொண்டார். அவருடைய மீசை துடித்தது. அவர் தன் வாழ்நாளில் இப்படி எளிதில் ஏமாந்தது கிடையாது. எங்காவது சென்று பல்லக்கு நிற்கத்தானே வேண்டும். எல்லையே இல்லாமல் சென்று கொண்டிருக்க முடியாதல்லவா? இறங்கியவுடன் கீழே குதித்து அவர்களை எதிர்ப்போம் எனும் முடிவுக்கு வந்த கந்ததேவன் படபடக்கும் இதயத்துடன் மௌனமாக இருந்தார்.

"அப்பா, நாம் தாமரைப்பாடிக்குச் செல்லவில்லையா? அவரைக் காணப் போகவில்லையா? அப்பா, நாம் எங்கே செல்கிறோம்?" என்று கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த மகளுடைய பயங்கலந்த சந்தேகத்துக்குக்

கந்ததேவனால் உடனே விடையளிக்க முடியவில்லை. "கொஞ்ச நேரம் பொறு குழந்தாய்; எனக்கே விவரம் ஒன்றும் புரியவில்லை" என்று சமாதானப்படுத்த முயன்றார்.

ஆனால், அவர் மனம் சமாதானமடையா வண்ணம் காரியங்கள் மளமளவென நடந்தன. பல்லக்கு ராஜ பாட்டையினின்று விலகி இப்போது ஒற்றையடிப் பாதை வழியாக விரையத் தொடங்கியது.

மரங்கள் அடர்ந்த தோப்பின் நடுவே இருந்த பாழடைந்த வீட்டின் எதிரே பல்லக்கு இறக்கப்பட்டது. கந்ததேவன் துள்ளி வெளியே வருவதற்குள் ஏழெட்டுப் பேர் அவரைச் சூழ்ந்து கொண்டனர். அவர் எதிர்க்க முற்படுமுன்னரே அவரது கண்கள் கட்டப்பட்டன. கை கால்களும் கட்டப்பட்டன. பாழடைந்த வீட்டின் திண்ணையிலே தள்ளப்பட்டார்.

பல்லக்கின் திரையைச் சிறிது விலக்கி மிகுந்த பயத்துடன் பார்த்துக் கொண்டிருந்த குமுதவல்லி 'ஓவென' அலறினாள். அவளுடைய ஓலத்திற்குப் பதில் கூறுவதுபோல் அந்த வேளையிலும் ஆந்தை ஒன்று அலறியது. குமுதவல்லியின் நெஞ்சோடு நாக்கும் ஒட்டிக் கொண்டதால் அவளால் ஒரு வார்த்தை கூடப் பேச முடியவில்லை.

தாமரைப்பாடி பெரியநம்பியின் குரல் தெளிவாகக் கேட்டது.

"வீரபத்ரா, எச்சரிக்கையுடன் மிகக் கவனத்துடன் - இந்தச் சிவிகையைக் கொண்டு போய் மாமல்லபுரத்து இளையராணி மாளிகையில் சேர்த்து விடு. வழியே எவராவது, ஏதாவது கேட்டால் இந்த முத்திரை மோதிரத்தைக் காட்டு" என்றான்.

வீரபத்ரன் எனும் அந்தக் கலகப்படை வீரன் கையில் கொடுத்தது காளைச் சின்னம் பொறித்த அரசாங்க முத்திரை மோதிரம். அதைக் கண்ட வீரபத்ரனுக்கே வியப்பு தாங்கவில்லை.

குமுதவல்லிக்குப் பெரியநம்பியின் எண்ணம் புரிந்து விட்டது. தன்னை அடைவதற்குப் பெரியநம்பி செய்யும் சூழ்ச்சியை அவள் எளிதில் புரிந்து கொண்டாள்.



சிவிகை கிளம்பியது. திரையிடுக்கு வழியே நோக்கும் குமுதவல்லியின் இரு கண்களையும் பெரியநம்பியின் பசி நிறைந்த கண்கள் சந்தித்தன.

பெரியநம்பி குதிரை மீது ஏறிக்கொண்டு வண்டலூர்க் காட்டை நோக்கி விரைந்தான். அன்று மாலை சித்திரமாயன் பெரியநம்பியை அங்கு சந்திக்குமாறு கட்டளையிட்டிருந்தான்.

வேகவதியாற்றங்கரையிலுள்ள புத்த விஹாரத்திற்குக் குணதேவன் பாண்டிய தூதன் போன்ற உருவில் முத்து வியாபாரியுடன் வந்தவுடனேயே சித்திரமாயன் அவனை இன்னாரெனக் கண்டு கொண்டான். முத்து வியாபாரி தர்மசேனன், பாண்டியத் தூதனை அழைத்துக் கொண்டு ரகசிய வழியாக வெளியே சென்றவுடன் அங்கு குழுமியிருந்த தாமரைப்பாடி வணிகன், கருங்கண்ணன், புழலூர் கோட்டத் தலைவர் அனைவரும் சித்திரமாயனது செய்கை அறியாது திகைத்தனர். பாண்டிய தூதனிடம் சித்திரமாயன் எழுதியனுப்பிய ஓலையைக் கண்டு அவர்கள் புரியாது வியந்தனர்.

சித்திரமாயன் விரைந்து அந்த இடத்திலிருந்து எழுந்து, "இனி ஒரு நொடி இங்கு தங்கியிருந்தாலும் ஆபத்துதான். நம் எல்லாரையும் ஒருமுகமாகக் காஞ்சியிலேயே சிறை செய்யத் திட்டமிட்டிருக்கிறான் உதயசந்திரன். என்னைப் பிடிக்க எவ்வளவோ வாய்ப்புகள் இருப்பினும் உதயசந்திரன் இவ்வளவு காலம் மௌனமாக இருந்தது தக்க சமயத்தை எதிர்பார்த்துதான் என்பதை புரிந்து கொள்ள என்னால் முடியாதா? பாண்டிய நாட்டுத் தூதன் என்னைச் சந்திக்க விரும்புகிறானென்றால் அவனுக்கு அதற்கான இடம், நேரம் யாவும் தெரியும். புத்த விஹாரத்து ரகசிய வழியாக தர்மசேனனைத் தேடி அழைத்து வந்திருக்க வேண்டாம்; வந்த பாண்டிய நாட்டுத் தூதன் கண்கள் இங்கு நாலாபுறமும் வட்டமிடுவதிலிருந்தும், ஒவ்வொரு பொருளையும் கூர்மையாகக் கவனிப்பதிலிருந்தும் என்னுடைய ஐயம் வலுப்பட்டது. உதயசந்திரன் அனுப்பிய ஒற்றன் அவன் என்பது

தெரிந்து விட்டது. அதோடு பாண்டிய மன்னரிடமிருந்து நான்கு நாள்களுக்கு முன்புதானே ஓலை வந்திருக்கிறது. நானும் அதற்கு மறுமொழி அனுப்பி விட்டேன். வந்த தூதனையும் அனுப்பிய ஓலையையும் உதயசந்திரன் அறியான். அதனால் பாண்டிய மன்னன் அனுப்பியதுபோல் புது ஓலை அனுப்பியிருக்கிறான். அதற்குத் தக்கபடி, 'இப்போது படையெடுத்து வர வேண்டாம்' என்று நானும் மறுமொழி அனுப்பிவிட்டேன். ஒருவிதத்தில் இது நம் திட்டங்களுக்கு உதவும் என்றாலும் உதயசந்திரனுக்கு ஒரு முக்கிய தடயம் கிடைத்து விட்டது. பாண்டிய நாட்டு நிரந்தர ஒற்றன் வெளியே போய் உத்தரவு கொடுத்த சில நாழிகையில் இந்த விஹாரத்தை படை வீரர்கள் சூழ்ந்து விடுவர். அதனால் எல்லாரும் வண்டலூர்க் காட்டில் சந்திக்கலாம்" என்று கூறவும் நொடியில் புத்த விஹாரத்தினின்று கூடியிருந்த அனைவரும் தப்பி ஓடி அந்த இருளில் மறைந்தனர்.

ரகசிய வழியிலிருந்து வெளியே வந்த குணதேவன் தர்மசேனனிடம் விடை பெற்றுச் செல்வது போல் பாவனை செய்து விரைந்து படை வீரர்களை எச்சரித்துப் புத்த விஹாரத்தைச் சூழ கட்டளையிட்டு, இன்னும் சில வீரர்களின் உதவியுடன் முத்து வியாபாரி தர்மசேனனைச் சிறைப்படுத்த ஏற்பாடு செய்தான்.

தன் கட்டளைப்படி வீரர்கள் புத்த விஹாரத்தைச் சூழ்ந்து கொண்டு அனைவரையும் சிறை செய்து மாமல்லபுரம் கொண்டு சென்றிருப்பர் என்று எண்ணி குணதேவன் மகிழ்ச்சி நிறைந்த உள்ளத்துடன் உதயசந்திரனைச் சந்திக்க ஏகாம்பரேச்வரர் கோயில் யானை கட்டும் இடத்தில் புன்னை மரத்தின் அடியில் அமர்ந்தவாறு பெரும் பணியொன்றைச் செய்து முடித்த பெருமிதத்தோடு இருந்தான். 'சித்திரமாயனும், அவனுடைய ஆதரவாளர்களின் நடவடிக்கைகளும் தீர்ந்ததென்றால் இனி உட்பகைவர்கள் ஒழிந்தனர் என்றுதானே கொள்ள வேண்டும். தளபதி தன்னிடம் ஒப்படைத்த பணி நிறைவேறியது. இனி தளபதியின் அனுமதியுடன் குமுதவல்லியைக் காணச் செல்லலாம். அப்பா! எவ்வளவு நாள்கள்! அவள் கோபத்தை என்ன கூறித் தணிப்பது? ஹூம்; அவள் அவ்வளவு அசட்டுப் பெண்ணன்று;



நாட்டைக் காப்பாற்ற நான் செய்திருக்கும் தீரச் செயல்களைக் கதைபோல் கூறி, அவள் கோபத்தை மாற்றலாம்' என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது ஓர் உருவம் தன்னருகே வந்து நிற்பது அறிந்து திடுக்கிட்டுத் துள்ளி எழுந்தான்.

பிறகு குரலிலிருந்து தளபதி என்றறிந்து குணதேவன் மகிழ்ச்சி நிறைந்த குரலில், "ஐயா, உட்பகைவர்கள் கொட்டம் ஒடுங்கியது" என்று பெருமிதத்துடன் கூறவும் உதயசந்திரன் நகைத்து குணதேவனின் தோளில் தட்டி, "குணதேவா! போர் வீரனுக்குள்ள கடமையுணர்ச்சி உனக்கிருக்கிறது. அது மட்டும் இருந்தால் போதாது; என்றும் போர் வீரனாகத்தானிருக்க வேண்டும். சமயத்துக்குத் தகுந்த யோசனையும் வேண்டும். நீ நினைப்பதுபோல் சித்திரமாயன் அவ்வளவு முட்டாளல்லன், எளிதில் சிக்க. சித்திரமாயனைச் சிறு வயது முதலே நான் அறிவேன். அவனுடைய அசாத்திய அறிவுக் கூர்மையும் மகா சாம்ராஜ்ய அமைச்சர்களுக்கு இருக்க வேண்டிய ராஜதந்திரத் தையும் நான் அறிவேன். அவன் அவ்வளவு எளிதில் சிக்கி விடுவான் என்ற நம்பிக்கை எனக்கில்லை. எதிர்பார்த்தது போல் தான் எல்லாம் நடந்திருக்கிறது. நீ அனுப்பிய படை வீரர்கள் புத்த விஹாரத்து வெற்றிடத்தைத்தான் சூழ்ந்து கொண்டிருக் கிறார்கள். பறவைகள் எப்போதோ பறந்துவிட்டன" என்றான்.

உதயசந்திரன் இவற்றைக் கூறும்போது குணதேவன் நடுங்கினான். அவனுள்ளம் வேதனையால் துடித்தது. மிகவும் முக்கியமான செயலை நேரிடையான மேற்பார்வையின்றிப் பாழடித்து விட்டோமே என்று அவன் எண்ணும்போது அவன் கண்களிலிருந்து நீர் தளும்பியது.

"குணதேவா, இதற்காகக் கவலைப்படாதே. முத்து வியாபாரி காஞ்சிச் சிறையில்தான் இருக்கிறான். அவனை விடுதலை செய்துவிடு" என்று உதயசந்திரன் கூறியது குணதேவனுக்கு மேலும் அதிகத் திகைப்பை அளித்தது.

"விடுதலையா?" என்று வாய் விட்டுக் கேட்டுத் தன் திகைப்பையும் புலப்படுத்தினான் குணதேவன்.

"ஆம்; சித்திரமாயன் எங்குச் சென்றிருப்பான் என்பதை எப்படி அறிவது?"

"அதனால்? இருவரையும் நழுவவிட்டு இழந்தவரோடு தேடுவதா? ஐயா, என்னைப் பரிகசிக்கிறீர்களா?"

"குணதேவா, பேராபத்தின்போது பரிகாசம் பயன்படாது. தர்மசேனனை விடுதலை செய்தால் எப்படியாவது சித்திரமாயனை நாடி அவன் செல்வான். அவனைப் பின் தொடர்ந்தால் எல்லாம் தெளிவாகிவிடும்."

தளபதியின் தேர்ந்த ஞானத்தைக் கண்டு குணதேவன் மனத்திற்குள் வியந்தான். "சரி ஐயா" என்று கூறும்போது அவன் நா தழுதழுத்தது. உதயசந்திரன் அந்த இடத்தை விட்டுப் புறப்படும்போது, "இந்த முறை எவ்வளவு எச்சரிக்கையுடன் நடந்து கொள்கிறாயோ அவ்வளவு சீக்கிரம் தாமரைப்பாடிக்குப் போகலாம்" என்று குறும்புச் சிரிப்பு உதட்டில் நெளிய, "தாமரைப்பாடிக்குப் பதில் காவல்காரத் தெருவுக்குப் போய்விடாதே" என்று கூறும்போது குணதேவனே சிரித்து விட்டான்.

மகாபாரதக் கூத்து நடந்து கொண்டிருந்தபோது குணதேவன் காஞ்சியின் சிறைக் கோட்டத்திற்குள் சில வீரர்களுடன் நுழைந்தான். சிறைக் கூடத்து அறையொன்றில் தர்மசேனன் அமர்ந்திருந்தான். சிறைக் காவலர்களுக்குக் கூட நகரத்துப் பிரபல வணிகர் சிறைக்கு வந்தது வியப்பை அளித்தது. ஒருவருக்கொருவர் ரகசியமாக ஏதோ பேசிக் கொண்டனர்.

குணதேவன் சிறை அதிகாரியின் உத்தரவுடன் சிறைக்குள் வந்து, தர்மசேனன் இருவரும் அறைக்குச் சென்றான்.

கதவு திறக்கப்படும் ஓசையும், யாரோ வரும் காலடி ஓசையும் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தான் தர்மசேனன்.

"ஐயா, மன்னிக்க வேண்டும்! தவறு ஒன்று நேர்ந்துவிட்டது இப்போதுதான் தெரிய வந்தது. நகரத்து மதிப்பு மிக்க வணிகரான



தங்களை அறியாது சிறை செய்ததற்கு பொறுத்துக் கொள்ளுங்கள். விடுதலை செய்யுமாறு தளபதி உத்தரவிட்டிருக்கிறார்" என்று கூறவும் தர்மசேனன் கனவா, நனவா என்று ஒரு கணம் விழித்தான்.

தன் நிலை என்னவாகுமோ, இதுவரை மிகவும் கெட்டிக்காரத்தனமாக நடந்து கொண்டதெல்லாம் வீணானதே என்று துயரம் கொண்டதோடன்றி ஒற்றர்களுக்குக் கிடைப்பது மரண தண்டனைதான் என்பதையும் நினைக்கும்போது தர்மசேனன் தன் அவசரப் புத்தியை எண்ணி வருந்தினான். அப்போது விடுதலை என்ற குரல் எங்கோ தேவலோகத்திலிருந்து வந்த அசரீரி போல் தோன்றியது. தர்மசேனன் நொடியும் தாமதிக்கவில்லை. சிறைக் கூடத்தை விட்டு வெளி வந்தான். விரைந்து தன் இல்லத்தை நோக்கிச் சென்றான். மீண்டும் எந்த நொடியிலும் ஆபத்து நேரலாம் எனும் பயம் உள்ளத்தே தோன்றவே, வீட்டிலுள்ள ரகசிய ஓலைச்சுருள்கள் மற்றும் பல தடயங்களையெல்லாம் எரியும் அடுப்பில் போட்டு விட்டு சித்திரமாயனைச் சந்திப்பதற்கு என்ன வழி என்ற ஆலோசனையுடன் வழக்கமாகச் சித்திர மாயனிடமிருந்து ஓலை வந்து கிடக்கும் விளக்கு மாடத்தில் பார்த்தான். ஓலைச்சுருள் ஒன்று கிடந்தது. அதைப் படித்து அங்கேயே எரித்துவிட்டு விரைந்து வெளியே குதிரையொன்றைப் பெறுவதற்குப் புறப்பட்டான்.

இருளில் மறைந்திருந்த குணதேவனும் அவனைப் பின் தொடர்ந்தான். இரவு முழுவதும், தர்மசேனன் பற்பல இடங்களுக்குச் செல்வதும், தன் கடையைத் திறந்து ஏதோ எடுப்பதுமாகக் கழித்து பொழுது புலரும் நேரத்தில் கிழக்குக் கோட்டை வாயிலை நோக்கிச் சென்றான். தொடர்ந்து குணதேவன் செல்லும்போது கோட்டைக் காவல் தலைவன் திருநாராயணன் குணதேவனைப் பார்த்து விட்டான்.

குணதேவன் தாமரைப்பாடியில் இருப்பதாக எண்ணி குமுதவல்லியும், கந்ததேவனும் அங்குச் சென்றிருக்கிறார்களே இவன் இங்கே இருக்கிறானே என எண்ணிக் குணதேவனைத்

தொடர்ந்து குதிரையில் சென்று அவனை நெருங்கிச் செய்தி அறிவிக்க விரைந்தான்.

தாமரைப்பாடியில் தான் நோயாகக் கிடப்பதாகவும் தன்னைக் காண மாமனும், குமுதவல்லியும் சென்றிருப்பதாகவும் அறிந்து குணதேவன் திடுக்கிட்டான். ஏதோ பெரும் சூழ்ச்சி நிகழ்ந்திருக்கிறது என்று அவனுக்கு விளங்கிவிட்டது.

தாமரைப்பாடியை நோக்கிச் செல்வதா அல்லது தர்மசேனனைப் பின் தொடர்வதா எனும் குழப்பம் அவனை வாட்டியது.

## 22. காஞ்சிக்கு ஒரு கும்பிடு

குமுதவல்லியையும், அவள் தந்தை கந்ததேவனையும் யாரோ ஏமாற்றி அழைத்துச் சென்று விட்டார்கள் என்ற எண்ணம் குணதேவன் மனத்தில் விழவே குதிரையை வேகமாக விரட்டும் எண்ணம் அவனுக்குத் தோன்றவில்லை. மீண்டும் தாமரைப்பாடிக்கு அவர்கள் சென்றிருக்க முடியாது என்பது வரையில் அவன் மனத்தில் முடிவு செய்து கொண்டான். தன் மாமனும், குமுதவல்லியும் யாருக்கும் எந்தவித இடரும் செய்ததில்லையே எப்படி அவர்களுக்குத் துன்பம் நேர்ந்தது எனக் குணதேவன் யோசித்தான். அவனால் அதிகமாகச் சிந்திக்கவும் இயலவில்லை. திருநாராயணன் அரசாங்க விஷயங்களைப் பற்றிப் பல பல பேசியவண்ணம் வந்தபோது அவனுக்குப் பதில் கூறுவது போல் தலையை ஆட்டினானே தவிர அவன் சிந்தனை முழுவதும் தர்மசேனனைத் தொடர்ந்து செல்லலாமா அல்லது குமுதவல்லியைத் தேடிச் செல்லலாமா என்ற குழப்பத்திலேயே



இருந்தது. அதற்கு ஏற்றாற்போல் தர்மசேனனும் சாலையின் ஓரத்தில் கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்தவரிடம் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடிப்பதற்காக இறங்கினான்.

தர்மசேனன் இறங்கிய இடத்திற்குச் சற்றுத் தொலைவில் குணதேவனும் திருநாராயணனிடம் தான் அவசரமாகச் செல்வதாகக் கூறி அவனைத் திரும்பிப் போகுமாறு அனுப்பிவிட்டு மறைத்து வைத்திருந்த தலைப்பாகை, மீசை, தாடி முதலியவற்றை அணிந்து முற்றிலும் மாறுபட்ட தோற்றத்துடன் விளங்கித் தர்மசேனன் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த இடத்துக்குச் சென்று தானும் மிகுந்த தாகமுடையவன் போல் தண்ணீரை வாங்கிக் குடித்து விட்டு 'அப்பாடா!' என்ற பெருமூச்சுடன் குதிரையருகே வந்தான். தர்மசேனனும் முகத்தைக் கழுவிக் கொண்டு குதிரையைத் தட்டிக் கொடுத்து விட்டு அதன்மீது ஏறத் தயாராகும்போது குணதேவன் அவனை அணுகி, "ஐயா, திருக்கச்சூருக்குச் செல்ல வழி எப்படி என்று கூற முடியுமா?" என்று கேட்டான்.

தர்மசேனன் அவனை ஏற இறங்கப் பார்த்து, "நீர் என்ன இந்த நாட்டிற்குப் புதியவரோ?" என்று சந்தேகக் கண்ணுடன் வினவ, குணதேவன் சிறிதும் சந்தேகம் எழா வண்ணம், "ஐயா, நான் கங்க நாட்டைச் சேர்ந்தவன். எங்கள் ஊர் வியாபாரி ஒருவர் திருக்கச்சூருக்கு வந்தவர் அங்கே இறந்து விட்டாராம். அவரது சொத்து விவரங்களை விசாரித்து அறிந்து செல்ல வந்திருக்கிறேன். இரண்டு நாள்களாகக் காஞ்சிபுரத்துத் திருவிழா அதிசயத்தைக் கண்டு மெய்மறந்து இருந்தவன் இன்றுதான் காஞ்சியை விட்டுப் புறப்படுகிறேன்" என்றான்.

தர்மசேனனுடைய சந்தேகம் அறவே அகன்றுவிட்டது. கங்க நாட்டைப் பற்றி விசாரித்துப் பேச்சுக் கொடுத்தவண்ணம், குணதேவனையும் அழைத்துக் கொண்டு வழிகாட்டுவதாகக் கூறிப் புறப்பட்டான்.

கங்க நாட்டரசனாக அப்போது ஸ்ரீபுருஷன் என்பவன் பட்டமேறியுள்ளான் என்றும், அவன் அலங்காரப் பிரியன் என்றும்

அவனுடைய பொக்கிஷத்தில் வைர வைடூரியங்கள் ஏராளமாக உள்ளன என்றும் 'உக்ரோதயம்' எனும் கோடி சூரியப் பிரகாசமுள்ள வைரமாலை ஒன்றை அண்மையில் அரசன் பல்லாயிரம் வராகன் கொடுத்து வாங்கியுள்ளதாகவும் கூறி தங்கள் நாட்டு விஷயத்தைப் பேசி வந்து தர்மசேனனுக்கு வழிநடைக் களைப்பு ஏற்படாமல் செய்தான்.

எவ்வளவு சாமர்த்தியமாகப் பேசியும் தர்மசேனன் வாய் தவறியும் தான் போகும் காரியத்தைக் கூறிவிடவில்லை. கங்க நாட்டு அரசனுக்குப் பல்லவ நந்திவர்மனைக் கண்டால் மிக வெறுப்பு என்றும் படையெடுத்து வரத் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதையும் கூறிப் பார்த்தான். அதற்குத் தர்மசேனன் கூறினான்: "ஐயா, மெல்லப் பேசுங்கள். பல்லவ நாட்டில் காற்றும் மரமும் மண்ணுங்கூடப் பல்லவத் தளபதி ஒற்றர்கள். நமக்கு எதற்கு அரசாங்க விஷயம்?" என்றான்.

குணதேவன் மனத்திற்குள் நகைத்துக் கொண்டான். இவ்வளவு தூரம் அயல்நாட்டு விஷயங்களைத் தான் தெரிந்து பேசுவது அவனுக்கே வியப்பையளித்தது. எல்லாம் தளபதியின் ஆசியும் அவர் கற்றுக் கொடுத்த பாடமும் என்று எண்ணிக் கையெடுத்து வணங்கினான்.

கங்க நாட்டவன் தனக்குள்ளே பேசிக் கொள்வதும் கையெடுத்து வணங்குவதும் தர்மசேனனுக்கு வியப்பை ஏற்படுத்தின. இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். மாலைப் பொழுது நெருங்கும்போது திருக்கச்சூருக்குப் பிரியும் பாதையைக் காட்டித் தர்மசேனன், கங்கநாட்டு வணிகனிடம் விடை பெற்றுக் கொண்டான்.

**வ**ண்டலூர் காட்டிற்குச் செல்லும் பாதை மிகவும் கரடுமுரடான நிலையில் இருந்தது. தொண்டை மண்டலத்துக் காடுகளை வெட்டி நாடாக்கிக் 'காடு வெட்டிகள்' என்று பெயர் பெற்ற பல்லவர்கள் பல இடத்து இயற்கைக் காடுகளை நாட்டின் நலனுக்காக அழிக்காது வைத்திருந்தனர். வண்டலூர்க் காடுகளில் கொடிய விலங்குகள்



நிறைந்திருந்தன. பகற்காலத்திலேயே மைபோல் இருண்டிருந்த அந்த அடர்ந்த காட்டிற்குள் செல்ல எவரும் துணிவதில்லை. பரம்பரை பரம்பரையாக வேட்டையாடுவதைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த இனத்தவருக்குத்தான் காட்டில் செல்ல வழி தெரியும். இத்தகைய பயங்கரக் காட்டில் அதிகக் கஷ்டமின்றிச் செல்லக்கூடிய இடத்தில்தான் சித்திரமாயன் தன் அரணை முன்பு அமைத்திருந்தான். காஞ்சி அருகே நடந்த பெரும் போரில் அவனது படைகள் தோற்றுப் பல நூறு பேர் உயிரிழந்தும் சிறைபட்டும் போய் விடவே சித்திரமாயன் தன் சொந்தப் படைகளை நம்பாமல் வேற்று நாட்டரசர்கள் உதவியையே நாடலானான். அந்த முறையில்தான் சாளுக்கியர்களின் உதவியை நாடிக் கருங்கண்ணனைத் தூது அனுப்பினான். கருங்கண்ணனது சிறு தவறினால் சாளுக்கிய அரசன் விக்கிரமாதித்தனுக்குச் சித்திரமாயனின் ஓலை எட்டாமல் போய் விட்டது.

காஞ்சியை இரட்டர்கள் நெருங்கும்போது தான் கைப்பற்ற எண்ணம் கொண்ட சித்திரமாயன் திட்டம் பூர்த்தியடையப் பல இடையூறுகள் இருக்கின்றன என்பதை அறிந்து திட்டங்களை மாற்றிக் கொண்டான். தன் உண்மை ஆதரவாளர்களுக்கு அவற்றைத் தெரிவித்து விடப் புத்த விஹாரத்தில் கூடுமாறு செய்தான். அங்கும் இடர் தோன்றவே வண்டலூர்க் காட்டிற்கு வரவழைத்தான்.

'ஞொய்' என்ற சில் வண்டுகள் சப்தமும், விதவிதமான பறவைகள் சிறகடித்துப் பறக்கும் ஒலியும், மந்திகள் தங்கள் குட்டிகளுடன் மரத்துக்கு மரம் தாவி ராஜ்யபாரம் நடத்துவதும், கொடும் பாம்புகள் ஊர்ந்து செல்வதுமாக விசித்திர உலகமாகத் திகழ்ந்த அந்தக் காட்டில் கட்டப்பட்டிருந்த பர்ணசாலை போன்ற ஓலைக் குடிலில் சித்திரமாயன் கம்பீரமாக அமர்ந்திருந்தான். நாடாளப் பிறந்த அரசருக்குரிய இயற்கைக் கம்பீரம் அவனுக்கிருந்ததை அங்கிருந்த புழலூர்க் கோட்டத் தலைவரும் நெடுங்குன்றத் தலைவரும் கண்டு மனத்துள் கவனிக்காமலில்லை. ஒரு சமயம் அவர்கள் எண்ணினர்: சித்திரமாயன் இப்படி வீணே சதி, புரட்சி என்று போராடுவதை விட பல்லவ சாம்ராஜ்யத்துக்

கோட்டத் தலைவர் பதவியை ஏற்று நாட்டு முன்னேற்றத்துக்குப் பாடுபடலாமே என்று. சில சமயம் எண்ணுவர், உரிமையை அடையப் போராடும் சித்திரமாயனுக்கு இந்தப் பல்லவ நாடே கிடைத்து விட்டால் இன்னும் தன் திறமையால் நாடு சிறக்கச் செய்ய மாட்டாரா? என்று.

சித்திரமாயனுடைய சிந்தனையையும் அவன் கூறி வந்ததையும் பெரியநம்பியின் ஒரு சொல் கலைத்துவிட்டது.

உதயசந்திரனின் மிக அந்தரங்க உதவியாளனான குணதேவனைச் செயல் இழக்கும்படியான பெரியதொரு காரியத்தைச் செய்துவிட்டேன் என்று பெரியநம்பி கூறி குமுதவல்லியை ஏமாற்றி அழைத்து வந்த விவரம் கூறவும் சித்திரமாயன் சீறி எழுந்து கூறினான்: "சிறுமதி படைத்த உங்கள் செய்கைகளால் என் திட்டங்களைச் சிதைத்து விடுகிறீர்கள். முன்பு கருங்கண்ணனை நம்பி ஓலை கொடுத்து வாதாபி அனுப்பினேன். அவன் மான்யகேட நகருக்குச் சென்று இரட்டர்களிடம் ஓலையைக் கொடுத்தான். இரட்டர்களோ படைகளில் பாதிப் பேரைத் திருப்பி அனுப்பி விட்டுக் காஞ்சிக்குள் நுழையலாமா கூடாதா என்று யோசித்தவண்ணம் இருக்கிறார்கள். காடக முத்தரையரைச் சிறைப்படுத்துமாறு கூறினால், நமக்கு உதவி செய்த பைரவனது மகள் மீது ஆசைப்பட்டு அந்த எண்ணம் ஈடேறாததால் அவளையும் சேர்த்து சிறையிட்டதோடன்றித் தப்பித்துப் போகவும் வழி செய்து விட்டான். தர்மசேனனோ முன்பின் யோசிக்காமல் பாண்டிய தூதன் என்று மாற்றானையே அழைத்து வந்து நாம் அனைவரும் சிக்கிக் கொள்வதற்கு வழியேற்படுத்தித் தானே அகப்பட்டுக் கொண்டு சிறையில் வாடுகிறான். நீயோ - அறிவாளி என்று எண்ணிய நீயோ - பெண் மோகத்தால் பகைவரின் ஆத்திரத்தை இன்னும் கிளப்பி அவர்கள் நம்மை வட்டமிட வழி செய்கிறாய். யாரும் அறியாமல் அமைதியாகப் பத்து தினங்களேனும் யோசித்தால்தான் நம் எண்ணம் ஈடேறமுடியும். சிறந்த போர்வீரன், இலட்சியவாதி, மாபெரும் சாம்ராஜ்யம் அடைய எண்ணுபவன், மதுவையயும் மங்கையையும் தள்ள வேண்டும். மண் வேண்டுமா? மங்கை



வேண்டுமா? அதுதான் அவன் முன் உள்ள பிரச்னை. இராமாயணக் கதையைக் கேட்டதில்லையா பெரியநம்பி? மங்கை மீது வைத்த காதலால் மண்ணையிழந்த மாவீரனைப் பற்றி? குணதேவனின் முறைப் பெண்ணை நீ கொண்டு வந்து விடுவதால் நமக்கென்ன பயன்?" - சித்திரமாயன் சீற்றமுடன் பேசுகையில் பெரியநம்பி குறுக்கிட்டு, "ஐயா, இளவரசே! எனக்கு மங்கை மீது எள்ளளவும் ஆசையில்லை. குணதேவன் கவனத்தைத் திருப்பவே இப்படிச் செய்தேன்" என்று கூறியபோது சித்திரமாயன் நகைத்து, "அவர்களால் இனி ஆக வேண்டியது ஏதுமில்லை பெரியநம்பி! நம் திட்டங்களின் போக்கே மாறிவிட்டது, வணிகரே! மாறி விட்டது.

"கூறுகிறேன் எல்லாரும் கேளுங்கள். துணிவுடனும், என்மீது உண்மை அன்புடனும், நீங்கள் உதவும் எண்ணத்துடனிருப்பின் எளிதில் காரியத்தை வெல்லலாம். இல்லாவிடில் இன்றே என்னை மறந்து விடுங்கள். நான் உங்களை நம்பி இந்த மாபெரும் சாம்ராஜ்யத்தை அடைய எண்ணவில்லை. என்னுடைய சுயபுத்தியின் நம்பிக்கையில்தான். என்னுடைய இரண்டு குறிகள் தவறிவிட்டன. மூன்றாவது குறி வாழ்வா, சாவா என்பதை நிர்ணயித்துவிடும்.

"கோட்டத் தலைவர்கள் இருவர் இங்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் மனது வைத்தால் ஆகாதது இல்லை. அவர்கள் பணியே அதிகம். என் நிலையை எடுத்துச் சொல்லிக் கோட்டத் தலைவர்களை நந்திவர்மனுக்கு விரோதமாகத் திருப்பலாம். வெளிப்படையாக அவர்கள் பகைமையைக் கூறாவிடினும் நெருக்கடியான சமயத்தில் தங்கள் உருவத்தை அவர்கள் காட்ட வேண்டும். பல்லவப் பெரும் நாடே கோட்டத் தலைவர்கள் உதவியையே நம்பியிருக்கிறது. அவர்களிடையே பிளவை ஏற்படுத்த வேண்டும். அதற்கும் யோசனைகள் கூறுகிறேன்" என்று கூறியபோது தர்மசேனன் அங்கு வந்து சேர்ந்தான்.

தர்மசேனனைக் கண்டவுடன் சித்திரமாயன் திடுக்கிட்டான். மற்ற எல்லாரும் தர்மசேனன் சிறையினின்று தப்பி வந்ததறிந்து மகிழ்ச்சியடைந்தனர்.

தர்மசேனர் தனக்கு விடுதலை கிடைத்த விவரம் கூறவும் சித்திரமாயன் தலையை இரு கரங்களாலும் பிடித்துக் கொண்டு, "தர்ம சிந்தனையால் உங்களை அவர்கள் விடுதலை செய்யவில்லை. ஐயா, உம்மைக் கொண்டு நம் எல்லாரையும் சிறை செய்யத் திட்டமிட்டு விட்டனர். நீர் இங்கு வரும்போது உம்மைத் தொடர்ந்து பல்லவ வீரர் வந்திருப்பார்கள்."

"யாரும் வரவில்லையே!"

"நீங்கள் அறியமாட்டீர்கள். உம்மை விடுதலை செய்ததே அந்த நோக்கத்திற்காகத்தானே. அதுசரி; உங்களுக்கு எப்படித் தெரியும் இந்த இடம்?"

"எப்படித் தெரியுமா? விளக்கு மாடத்தில் ஓலையிருந்ததே!"

"ஓலையா? இங்கு உம்மை வரச் சொல்லி ஓலையா? விசித்திரமாயிருக்கிறதே! யார் எழுதியது?" சித்திரமாயன் திகைத்தான். அபாயம் இங்கும் நெருங்கிவிட்டது என்பது அவனுக்குப் புரிந்துவிட்டது. நிலைமையைப் புரிந்து கொள்வதற்குள் அவன் காண்பது கனவன்று என்று கூறும்படியாக அடர்ந்த புதர்களின் வழியாக ஏராளமான படைவீரர்கள் இருப்பது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது.

"முடிந்தவர்கள் தப்பி ஓடுங்கள். ஆபத்து" என்று முணுமுணுத்த சித்திரமாயன் உருவிய கத்தியுடன் வெளியே பாய்ந்தான். குடிலின் பின்புறத்துப் பாறையின் பக்கமாக எங்கோ சென்றான்.

அடர்ந்த காட்டின் பயங்கர அமைதி மறுகணம் குலைக்கப்பட்டது. வேலோடு வேல் உராய, கத்தியோடு கத்தி மோத, கேடயத்தின் மீது பாயும் கத்தி சப்திக்க 'ஹோ ஹோ' காரமும் 'ஆஹா ஹா' காரமும் காட்டில் எழுந்து கூட்டில் அடைய வந்த பறவைகளையும் கிளப்பி விட்டு அவற்றையும் சப்திக்கச் செய்து பயங்கரமான சூழ்நிலை ஏற்பட்டது.

குணதேவன் தலைமையில் பல்லவ வீரர்கள் முதன்முதலில் செய்த அந்தப் போரில் குணதேவனுக்கே வெற்றி எனினும் அந்த



மங்கிய மாலை ஒளியில் குணதேவன் யாரையோ உற்று நோக்கியபோது அவன் எதிர்பார்த்த அந்தப் பிரதான நபர் தப்பி ஓடியது அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. விலங்கிட்டு எல்லாரையும் அழைத்து வரும் அந்த வேளையில் வெகு தொலைவில் சித்திரமாயன் நல்ல ஜாதிப் புரவியில் அமர்ந்து காற்றினும் கடிய வேகத்தில் சென்றிருப்பான்.

அன்று இந்த முக்கியச் செய்தி படைத் தளபதிக்கு எட்டுமுன் சித்திரமாயன் காஞ்சி மாநகருக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு பாண்டிய நாட்டை நோக்கிப் போகும் பாதையிலே வெகுதொலைவு விரைந்திருப்பான்.

## 23. பட்டணப் பிரவேசம்

திருமங்கை மன்னரின் தரிசனத்தில் மனத்தைப் பறி கொடுத்து வைரமேகனும், அவன் மகள் இராட்டிரகூட நாட்டு இளவரசி ரேவாதேவியும் நின்று கொண்டிருந்தபோது வைரமேகனது கவனத்தைத் தொலைவில் எழுந்த பல்லவப் படைகள் குதிரைகளில் விரைந்து வரும் ஓசை கலைத்தது.

வைரமேகன் திடுக்கிட்டான். அருகே நின்றிருந்த முதியவரை நோக்கினான். முதியவர் முகத்தில் எவ்விதச் சலனமுமில்லை. திருமங்கை மன்னரும் உத்தரவு கொடுத்து விட்டார்கள், காஞ்சியில் சந்தித்து அமைதியாக அளவளாவலாம் என்று; காஞ்சிக் கோயில்களைக் கண்டு வணங்கி இன்புறலாமென்று. அவருக்குத் தெரியாதா தான் வேற்று நாட்டு மன்னரென்று? வேற்று நாட்டு மன்னர் எப்படி மற்றொரு நாட்டுத் தலைநகருக்குள் நுழைந்து கோயில்களைத் தரிசிக்க முடியும்? நட்பினராக இல்லாவிடில் அச்செயல் நிறைவேற வழியில்லையே. வைரமேகன் குழப்பச் சிந்தனையை நெருங்கி வந்த படைகளின் ஓசை இன்னும் தூண்டிவிட்டது. தன்னை நிராயுதபாணியாகப் பிடித்துவிடுவது

பல்லவர்களின் திட்டமாக இருக்கலாம். வைரமேகன் அதற்கெல்லாம் ஏமாற மாட்டான். அடைக்கலம் புகுந்து, அடி பணிந்து பகைவரிடம் சிக்குவதைவிடப் போரிட்டு வீர மரணம் எய்துவதை விரும்புவான். மகளுக்காகவோ, தாய்க்காகவோ, வேறு எவருக்காகவோ நாட்டின் பெருமைக்கு இழுக்குத் தேட விரும்பாதவன். அவனுடைய லட்சியங்கள் அதிகம். இராட்டிரகூட நாட்டை கங்க நாடு வரை விரிவுபடுத்துவது; கீழைச் சாளுக்கிய சாம் ராஜ்யத்தையும் இராட்டிரகூடர்களின் பரம்பரை அழியாது சிறந்து விளங்க விதை விதைப்பது வைரமேகனுடைய லட்சியங்கள்.

அழிக்க முடியா லட்சியமுடைய வைரமேகன் கேவலம் காஞ்சிக் கோட்டையினருகே தன்னந் தனியே சிக்குண்டு சீரழிவானா? விரைந்து சென்று வீரர்களை ஆயத்தப்படுத்த அங்கிருந்து கிளம்பினான். தந்தையின் எண்ணமறியா ரேவாவும் உடன் கிளம்பினாள். முதியவரும் அரசரைப் பின் தொடர்ந்தார். போகும் வழியிலே வைரமேகன் ஏதும் பேசவில்லை.

படைகள் தண்டிறங்கிய இடம் சென்று படைகளை உடனே புறப்படுமாறு கட்டளையிட்ட பிறகு வைரமேகனுக்கு அமைதி பிறந்தது. முதியவர் உள்ளே நுழைந்தார். அரசனின் அமைதியற்ற சிந்தனையைப் புரிந்து கொண்ட அவர் மௌனத்தைக் கலைத்து, "அரசே! திடீரெனத் தாங்கள் பாடி இடத்திற்குத் திரும்பக் காரணம் புரியவில்லையே" என்று வினவினார்.

"ஆம்; பொல்லாத பல்லவர்கள் நிராயுதபாணியாக நான் திருமாலடியாரைத் தரிசிக்கும் சமயம் என்னைச் சூழ்ந்து கொண்டு சிறைப்படுத்த எண்ணியிருக்கலாம்; நானும் ஆயத்தமாக இருக்க வேண்டுமல்லவா?"

"அரசே, பல்லவர்கள் போர் தருமம் அறியாதவர்கள் அல்லர். நினைத்திருந்தால் தங்களை வழியிலேயே எதிர்த்திருக்கக் கூடும். தங்களை நிராயுதபாணியாக அவர்கள் பிடிக்கப் பல சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன."

"முதியவரே! உம்முடைய பேச்செல்லாம் புதிராக இருக்கிறது. நாங்கள் நுழையக் கோட்டைக் கதவுகள் திறந்திருக்கும் என்றீர்."



"அதில் மாறுதலில்லையே."

"என் மகள் கனவு நிறைவேறும் என்றீர்."

"ஆம்; நெருங்கி வருகிற சமயம்."

"இங்கே பல்லவப் படைகள் வருகின்றனவே?"

"அதை நாம் எப்படித் தடுப்பது? அவர்கள் பணி எவ்வளவோ இருக்கலாம்."

"என் வீரர்கள் கத்திமுனையில் அவர்களைத் தடுப்பர்."

"அதற்கு வேலையிராது."

"முதியவரே, மறுபடியும் சொல்லுங்கள். நீங்கள் என்ன முக்காலுமுணர்ந்த ஞானியா? சோதிடரா? அல்லது அரசியல் ஒற்றரா?" - இதைக் கேட்கும்போது வைரமேகன் குரலில் கடுமையிருந்தது.

தந்தையின் பேச்சு ரேவாவையும் திடுக்கிடச் செய்தது. முதியவர் மனம் நோகுமாறு தந்தை செய்கிறாரே. அதனால் முதியவர் கோபப்பட்டுக் கிளம்பிப் போய்விட்டால்... தன் கனவு நிறைவேறாமல் போய்விட்டால்... காலைப் பொழுதே ரம்மியமாக மலர்ந்து அற்புத மனிதரொருவரைத் தரிசிக்கும் நல்ல நிலையை ஏற்படுத்தியபோது வரும் காலம் ஏன் இன்னும் நல்லதைக் கொண்டு வரக் கூடாது? - ரேவா இப்படி நினைக்கும்போது முதியவர் வைரமேகனை நோக்கி, "நான் ஞானியுமல்லன்; ஜோசியருமல்லன்; அரசியல் ஒற்றனுமல்லன். தங்களுக்குத் தெரியாமல் போய் விடுமா? தங்கள் நலன் விரும்பும் ஒரு நாட்டுத் தொண்டன்" என்று முதியவர் கூறவும் வைரமேகன் கலகலவென நகைத்து, "நலன் விரும்பும் பெரியவரே! தங்கள் ஜோசியம் எப்படிப் பலிக்கிறது பார்ப்போம். பல்லவப் படைகள் வருகின்றன. திருமங்கை மன்னரோ என்னைக் காஞ்சியில் சந்திக்கக் கட்டளையிடுகிறார். கோட்டை வாயில் திறந்திருக்கும் என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதையுந்தான் பார்த்துவிடப் போகிறோமே!" எனவும் முதியவர் அரசரை நெருங்கிக் கூறினார்:

"அரசே! தங்கள் மனத்தில் காஞ்சியை அடைவது குறித்து இருவித எண்ணமிருப்பது போல பல்லவர்களுக்கும் அவ்வித எண்ணமுண்டு. யுத்த களத்தில் தங்களைச் சந்திப்பதாயின் வட பெண்ணையைத் தாண்டி ஓர் அணு நிலம் கூடத் தாங்கள் தாண்டியிருக்க முடியாது. வாதாபி வரை சென்று புலகேசியை அழித்த பல்லவர்கள் தங்கள் மண்ணில் மாற்றான் ஓரடி எடுத்து வைக்க விட மாட்டார்கள். வட பெண்ணையாற்றங்கரையில் பல்லவ தளபதி தங்களைச் சந்தித்துப் பேசியதிலிருந்து இம்மியளவும் பல்லவர்கள் மாற மாட்டார்கள். வாதாபியிலிருந்து விக்கிரமாதித்த சக்ரவர்த்தி காஞ்சியைக் கவரத் திட்டமிட்டு ஒற்றர்கள் பலரை அனுப்பியிருக்கும் இந்தச் சமயத்தில், கங்க நாட்டரசன் பாண்டியனுடன் சேர்ந்து பேசி பல்லவ எல்லைப் புறத்தைத் தாக்க நினைக்கும் இந்தச் சமயத்தில் பல்லவர்கள் உங்கள் நட்பை விரும்பாது விடுவரா? அதனுடன் உங்களுக்கும் மேலைக் கங்கநாட்டிற்கும் சாளுக்கிய நாட்டிற்கும் உள்ள பூசலைப் பல்லவ மன்னர் அறிவார். தாங்கள் விரும்பினால் உதவத் தயாராயிருக்கிறார்கள், அரசே! பல காத தொலைவினின்று ஏதோ எண்ணத்துடன் வந்த தங்களையும், தங்கள் வீரர்களையும் வீணே திரும்பிச் செல்ல வேண்டாமென்பதற்காகவே தாங்கள் பல்லவ நாட்டில் நுழைந்து காஞ்சி வரும் வரையில் அவர்கள் மௌனமாயிருக்கிறார்கள். நல்லவேளையாகத் தாங்கள் காஞ்சியில் நுழைவதற்கும் திருவாலி மன்னரான திருமங்கை மன்னர் விஜயம் செய்வதற்கும் ஒற்றுமை ஏற்பட்டிருக்கிறது. அரசே! நீங்கள் யோசனை செய்யுங்கள். பெரிய மகான், தீஞ்சுவைப் பாடலால் இன்று நடப்பதை என்றென்றும் அழியாதிருக்க வழி செய்யக் கூடியவர், அவர் எதிரே ரத்தக்களறி ஏற்படப் பல்லவர்கள் எண்ணுவார்களா? சூழ்நிலையையும் நிகழ்கால வருங்காலத்தையும் யோசித்துப் பார்த்தாலே நீங்கள் நினைப்பதற்கு மாறாக நடக்குமென்பது உறுதி" என்று முதியவர் கூறவும் வைரமேகன் முதியவரை நெருங்கி, "பெரியவரே! அரச அவையிலே முக்கிய பதவி வகிக்க வேண்டிய ஆற்றலும் திறமையும் இருக்கிறது. உம்முடைய பேச்சு உண்மையாகுமா? உம்மை நம்பலாமா? மாபெரும் சாம்ராஜ்ய அரசன் யாரோ ஒரு பெரியவரது



யோசனைப்படி காஞ்சிக்குள் படை வீரருடன் நுழைந்து சிறைப்பட்டு அழிந்தொழிந்தான் என்ற அபகீர்த்தி வர வேண்டாம் ஐயா" என்று கூறவும் முதியவர் முறுவலுடன், "அரசே! என்னை நம்புங்கள். உடனே கிளம்புங்கள். திருமங்கையாழ்வாரும் நீங்களும் ஒரே சமயத்தில் காஞ்சியில் நுழைவதையே நான் விரும்புகிறேன்" எனவும், வைரமேகன் முதியவரைக் கூர்ந்து நோக்கி, "நீங்கள் விரும்புகிறீர்களா? உங்களுக்கு என்ன அவ்வளவு ஆர்வம்?" எனவும் முதியவர், வைரமேகனைத் தனியே அழைத்துப் போய்த் தன் மீசையையும் தாடியையும் சிறிது விலக்கிக் காட்டினார். அதன்பின் புலப்பட்ட நிஜ உருவத்தைக் கண்ட வைரமேகன் "ஆ! நீங்களா?" என்று வாய்விட்டுக் கூவினான்.

காலைச் சூரியன் உச்சிப் பொழுதை அடையா முன்னர் வானத்தே வெயிலின் கொடுமையை மறைக்க மேகக் கூட்டங்கள் சூழ்ந்திருக்க அந்த வேளையில் இரு மன்னர்களின் பரிவாரங்களும் கோட்டை வாயிலை நோக்கிக் கிளம்பின. விரைந்து வந்து பல்லவப் படைகள் ஓரிடத்தில் நின்றிருந்தன.

பல்லவ வீரர்கள் தூய உடை அணிந்திருந்தனர். காளைச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை ஏந்தியிருந்தார்கள். அமர்ந்த சிங்க வடிவம் பதித்த தோரணங்களை கையில் வைத்திருந்தார்கள். பாயும் சிங்க வடிவமுள்ள கொடிகளையும் சிலர் கொண்டிருந்தனர்.

கொம்புகள் முழங்கின.

தாரை தப்பட்டைகள் ஒலித்தன.

பெரிய யானை மீது கம்பீரமான வீரன் அமர்ந்து முரசை முழங்கிக் கொண்டிருந்தான்.

துந்துபி நாதம் எழுந்தது. சங்கம் ஒலித்தது. தாழ்கடல் விம்முவது போன்ற ஓசையுடைய சமுத்திர கோஷம் எனும் பல்லவ அரசின் வாத்தியம் ஓசையை எழுப்பியது.

பூரண கும்பம் ஏந்தி நின்றார் காஞ்சி மாநகரத்துக் கடிகைத் தலைவர்.

வசந்த காலத்தின் ஆரம்பப் போதான அந்த வேளையிலே சாலையின் இரு மருங்கிலும் இருந்த மரங்கள் கை கூப்பி வணங்கி இரு மன்னர்களையும் வரவேற்பது போன்று அசைந்தாடின.

இனிய மணத்தையூட்டும் மாம்பூக்களும், தனக்கே உரித்தான வாசத்தை வீசும் வேப்பம் பூக்களும், கம்மென்று திக்கெட்டும் இனிய மணம் எழுப்பிப் புதுத் தெம்பூட்டும் தேவதாரு மலர்களும் காற்றிலே உதிர்ந்து மகானுக்கும் மன்னருக்கும் சாலையிலே மலர்த் துகில் விரித்து அவர்கள் பாதத்தைத் தாங்கின.

கோட்டை வாயிலின் மீது பல்லவர்களின் கொடி கம்பீரமாகப் பறக்க கோட்டை மீதிருந்து ஐந்து ஐந்து பேராக நின்று துந்துபியையும் கொம்பெனும் வாத்தியத்தையும் முழங்க இரு மன்னர்களும் பரிவாரங்களோடு காஞ்சிக்குள் நுழைந்தனர்.

'ஆலி நாடரே வருக, வருக!'

'மங்கைவேந்தரே வருக, வருக!'

'நாலு கவிப் பெருமாளே வருக, வருக!'

'நாலு வேதப் பெருமானே வருக, வருக!'

'எதிரிகளான மத யானைகளுக்குச் சிங்கம் போன்றாரே வருக, வருக!' என்று வீதியின் இரு மருங்கிலும் நின்று மக்கள் ஜெயகோஷம் செய்து வரவேற்றனர். சங்கமும் எக்காளமும் முழங்கின. சொர்க்கத்தைக் காணத் தவம் செய்த பக்தர்களுக்குச் சொர்க்கம் எதிரே வந்து நின்றதைப் போல முன்பே காதுவரை அகன்ற கண்கள் இன்னும் அகல ஆச்சர்யத்துடன் ரேவா தேவி குதூகலமான வரவேற்பை நோக்கினாள். வரவேற்கும் முன்னணியில் நகரத்தின் முக்கியஸ்தர்கள் நின்றிருந்தனர். முதலமைச்சரும், கடிகைகளின் தலைவரும் இருந்தனர். தளபதி எங்கே என்று ஒருவருக்கொருவர் காதோடு காதாகப் பேசிக் கொண்டனர். அவரது அலுவலாக எங்கோ போயிருக்கிறார்; வந்து விடுவார் என்றனர்.

யானை மீது அம்பாரியிலே அமர்ந்திருந்தனர் வைரமேகனும் ரேவாவும்.



"அப்பா, பல்லவ மன்னரைப் பற்றி அந்த முதியவர் பிரமாதமாகப் புகழ்ந்தாரே அவர் எங்கேயப்பா?" என்று ரேவா ஆவலுடன் கேட்கவும் வைரமேகன் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, "என் கண்களும் அவரைத்தான் தேடுகின்றன" என்று கூறவும் ரேவா மீண்டும் தந்தையை நோக்கி, "தந்தையே! அந்த முதியவரைக் கேளுங்களேன் அவரெங்கே என்று?" என்றாள்.

வைரமேகன் தன் மகளின் ஆவலையும் பரபரப்பையும் பார்த்து நகைத்தவண்ணம், "குழந்தாய்! இனி அந்த முதியவரைக் காணவே முடியாது. அந்த முதியவர்தான் அதோ வருகிறாரே..." என்று கூறியபோது மங்கள வாத்தியங்கள் இன்னும் அதிக விமரிசையாக ஒலித்தன.

"பல்லவ மன்னர் வாழ்க!", "சேனைத் தலைவர் உதயசந்திரன் வாழ்க!" என்ற கோஷங்கள் எழுந்து தந்தை கூறுவது மகளின் காதில் விழாமல் செய்தனர்.

எதிரே இரண்டு புரவிகளில் உதயசந்திரனும் பல்லவ மன்னன் நந்திவர்மனும் இராட்டிரகூட மன்னரை வரவேற்க வந்து கொண்டிருந்தனர்.

## 24. நள்ளிரவில் நகைப்பொலி

பொழுது சாய்ந்து நெடு நேரமாகியிருந்தது. அடர்ந்த தோப்பில் இருளின் ஆட்சி தொடங்கி விட்டது. கூட்டில் வந்தடைந்த பறவைகளின் 'கலகல' ஓசையும் குறைந்து விட்டது. இருளின் கனத்திற்குச் சுருதி கூட்டுவது போன்று பல்வேறு வண்டுகள் எழுப்பிய சப்தமும், தடதடவென்று குறுக்கும் நெடுக்குமாக பறந்து செல்லும் வௌவால்கள் எழுப்பும் ஒலியும், ஒரு புதரினின்று மற்றொரு புதருக்கு ஏதோ காரணத்தால் ஓடும்

காட்டுப் பூனை போன்ற விலங்குகளின் அரவமும் அந்தத் தோப்பிற்குப் புது உருவம் கொடுத்துக் கொண்டிருந்தன.

தாமரைப்பாடியில் துன்பமேதும் தெரியாது வாழ்ந்து வந்த கந்ததேவன் கைகால்கள் கட்டப்பட்டு அந்தப் பாழ் வீட்டிலே கிடத்தப்பட்டிருந்தார். திடீரெனக் கந்ததேவனைப் பலர் தாக்கியதால் மூர்ச்சையுற்ற அவர் வெகு நேரம் கழித்துக் கண்ணை விழித்தார். அந்தப் பாழடைந்த வீட்டின்மீது தோப்பின் மரங்களின் இடைவெளியிலிருந்து வீழ்ந்த ஒளியின் மூலம் பொழுது சாய்ந்துவிட்டதென்பதை உணர்ந்தார். கைகால்கள் பலமாகக் கட்டப்பட்டிருந்ததால் ஏற்பட்ட வலியைவிட, தாகத்தால் தொண்டை காய்ந்து ஏற்பட்ட சோர்வைவிட, குமுதவல்லிக்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்குமோ என்ற கவலை அவரை மிக வாட்டியது.

தன் உடலில் குறைந்துவிட்ட வலிமையை நினைத்து அவர் அப்போது வருந்தினார். அந்தப் பொல்லாத வணிகன் தன்னை ஏமாற்றி அழைத்துச் சென்றதை நினைக்கும்போது அவருக்குக் கோபத்தைவிட அவமான உணர்ச்சியே மேலோங்கியது. குமுதவல்லி எங்கே, எப்படி வாடுவாளோ என்பதை அவர் நினைக்கும்போது ஆத்திரம் அவருக்கு அதிகமாகியது. ஏதோ, அப்போதே கை கால்களைக் கட்டியிருந்த கயிற்றை அறுத்துக் கொண்டு எழுந்து விடுபவர் போன்று உடலை ஒருமுறை அசைத்தார். கயிறுகளின் பிணைப்பால் ரத்தம் கட்டியிருந்த பாகங்களின் மீது சிறிது தளர்ந்த கயிறுகள் உராய்ந்து மிகுந்த வேதனையை ஏற்படுத்தின.

அந்தச் சமயத்தில் திடீரெனக் கூடுகளிலிருந்த பறவைகள் உறக்கம் நீங்கியெழுந்து கீச்சுக்கீச்செனக் கூவின. இறக்கைகளைப் படபடவென அடித்த வண்ணம் இங்கும் அங்கும் பறந்தன. அந்த இருளின் தீவட்டியின் சிறு வெளிச்சத்தால் வழியைத் தெரிந்து கொண்டு ஒரு பெண்ணுருவம் வந்து கொண்டிருந்தது. இளைப்பும் கவலையும் அந்தப் பெண்ணின் முகத்தில் இருந்தன. இளம் வயதினளான அவள் முகத்தில் தோன்றிய அந்த நிலையும் அவள் அழகை அதிகப்படுத்துவனவாக இருந்தன. கரு



நிறத்தினளாயினும், தீவர்த்தி ஒளியின் ஒரு பகுதி அவள் முகத்தில்படும்போதுதான் அவள் சந்திரமதி என்பது தெரிந்தது.

பாழடைந்த வீட்டின் கம்பத்தில் தீவர்த்தியைச் செருகி விட்டுச் சுற்றுமுற்றும் பார்த்த அவளுக்கு அங்கே யாரோ கிடப்பதும், முனகுவதும் காதில் பட்டன.

தேடி வந்தவரைக் கண்டு பிடித்து விட்டோம் என்ற ஆவலுடன் "அப்பா" என்று கூவியவாறு அருகே ஓடினாள். தந்தை பைரவனைத் தேடி வந்த அவளுக்கு வேறு யாரோ கட்டுண்டு கிடப்பது திகைப்பை விளைவித்தாலும் திகில் ஏற்படாமல் போகவில்லை.

இந்தப் பாழடைந்த வீடு பல ரகசியங்களைக் கொண்டிருக்குமோ என்று வியந்த சந்திரமதிக்குப் பல சந்தேகங்கள் மனத்தில் எழுந்தாலும் முதிய பிராயத்தினரான அவரைக் கட்டிப் போட்டிருப்பவர் எவராயினும் மன்னிக்க முடியாத குற்றம் செய்தவராவர் என்ற எண்ணத்துடன் அவள் கந்ததேவன் அருகே சென்றாள்.

மங்கலான அந்த வெளிச்சத்தில் யாரோ வரும் காலடி கேட்டதுமே கந்ததேவன் நன்றாகக் கண்களை விழித்து, வருபவரை இன்னாரெனப் பார்க்க முயன்றார். அந்த முதிர்ந்த பிராயத்திலும் அவருடைய பார்வையில் பழுதே கிடையாது எனினும், வெளிச்சம் அதிகமில்லாததால் தன் பெண்தான் வந்து விட்டாளோ என்ற நினைப்பில், "குமுதவல்லி, குமுதவல்லி" என்று கூவினார்.

சந்திரமதி திடுக்கிட்டாள். இந்தப் பெயரை எங்கோ கேள்விப்பட்ட உணர்ச்சி அவளுக்கு எழுந்தது. நொடிப் பொழுதும் தாமதிக்காமல் விரைந்து சென்று கந்ததேவனின் கட்டுகளை அவிழ்த்து விட்டாள். பல நாழிகை நேரம் கட்டுண்டு கிடந்தாலும் களைப்பாலும் மயக்கம் வரும் நிலையிலிருந்த கந்ததேவனைத் தேற்ற அருகேயிருந்த குளத்திலிருந்து நீர் எடுத்து வர ஓடினாள். குளத்துத் தாமரை இலையையே பாத்திரம்போல் செய்து தண்ணீரைக் கொண்டு வந்து கந்ததேவனைப் பருகும்படி

வட்டார நூலகம்
அசோக் நகர்



செய்தாள். கந்ததேவன் களைப்பு நீங்கியது. இவள் தன் மகள் குமுதவல்லியல்லள் என்பதையறிந்த கந்ததேவன் எதிர்பாராத இந்த உதவிக்காக அவளைப் பாராட்டத் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"இந்த நேரத்தில் மனித சஞ்சாரமற்ற இந்த இடத்தில் தேவமகள் போல் வந்து என்னைக் காப்பாற்றினாய். சிறு பெண்ணானாலும் உனக்கு இருக்கும் துணிவைப் பாராட்ட வேண்டும். ஆனால், அதே சமயத்தில் இந்த இருளில், பயங்கரமான இந்த இடத்திற்கு ஏன் வந்தாய் பெண்ணே? உனக்கு ஆக வேண்டியது ஏதாவது இருந்தால் என்னால் முடிந்த அளவுக்கு உதவுகிறேன். அதன் பிறகு என் மகளைத் தேடிக்கொண்டு செல்கிறேன்" என்று கந்ததேவன் கூறினார். அவர் உடலில் இப்போது புதுத் தெம்பு பிறந்திருந்தது.

161220 / 5794030

கந்ததேவனின் கனிவான பேச்சையும், தன் மகளுக்கு ஏற்பட்டிருக்கும் இடரை மறந்து அவர் தனக்கு உதவி செய்ய முன்வருவதையும் நினைக்கும்போது அவளுக்குக் கண்ணில் நீர் தளும்பியது. ஒரு சொட்டுக் கண்ணீர் கீழே இருந்த தாமரை இலையில் வீழ்ந்து முத்துப் போல் ஒளி வீசியது. 'நமக்கும் கந்ததேவனுக்கும் என்ன வித்தியாசம்? நான் தந்தையைத் தேடி வந்தேன்; கந்ததேவனோ மகளைத் தேடித் துடிக்கிறார். மகளுக்கு முன்பு எனக்கு உதவத் தயாராயிருக்கிறார். அதனால் நிச்சயம் இவர் பல்லவ நாட்டு விரோதியாக இருக்க முடியாது' என்று மனத்தில் எண்ணினாள்.

"மகளே, என்ன யோசனை செய்கிறாய்? இந்தக் கிழவனால் என்ன உதவி செய்ய முடியுமென்றா? நாட்டுக்குழைத்தே இந்தக் கரங்கள் வலுப் பெற்றிருக்கின்றன. இப்போது நான் உழைக்காவிடினும் என் மருமகன் குணதேவன் இந்த நாட்டை உள்வெளி விரோதிகளினின்று காப்பாற்ற இரவு பகல் பாராமல் தளபதி உதயசந்திரனுக்கு உற்ற துணையாக இருக்கிறான்..."

கந்ததேவன் பேச்சை முடிக்கவில்லை. குணதேவன் என்றவுடன் சந்திரமதி துள்ளி எழுந்தாள். பல்லவபுரத்தினின்று



சுந்தரனுடனும், காடக முத்தரையருடனும் தப்பியோடிய பிறகு இந்த நாட்டு வளர்ப்பத்தைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டிருந்தாள். அரச விவகாரம் அறிந்திருந்தாள். உதய சந்திரனின் திறமைமிக்க ராஜ தந்திரங்களை உணர்ந்திருந்தாள். உதயசந்திரனுக்கு உற்ற துணையாக இருக்கும் குணதேவனின் அலுப்புச் சலிப்பற்ற உழைப்பு அவளுக்குப் புரிந்திருந்தது. "அந்த வீரமகனின் மாமாவா இவர்?" இதை நினைக்கும்போது சந்திரமதியின் மனத்திலிருந்த சிறு கவலை கூட மறைந்தது.

தந்தையைத் தேடிக் கடந்த ஏழு தினங்களாக அவள் அலைந்து வந்தாள். பல்லவபுரத்துப் பாதாளக் குகையினின்று தப்பி ஓடிய பிறகு சுந்தரனையும் தந்தை பைரவனையும் அவள் சந்திக்கவில்லை. காடக முத்தரையரைக் கொன்ற செய்தியை அரண்மனையில் அறிவித்து, அரண்மனையிலேயே தங்கியிருந்து இன்னும் ஒருபடி மேலே போய் அரசாங்கத்திற்கான முக்கியப் பணி புரிந்த அவளுக்கு இதுவரை தந்தையின் நினைவும், சுந்தரன் நினைவும் வரவில்லை.

காஞ்சி மாநகரத்திற்கு வைரமேகனும், திருமங்கை மன்னரும் விஜயம் செய்து, நகரத்திலுள்ள ஒவ்வொரு கோயிலையும் வணங்கி, சிற்ப அற்புதங்களைக் கண்டு களித்தபோது உதயசந்திரனின் கட்டளைப்படி இராட்டிரகூட இளவரசி ரேவாதேவிக்கு உதவியாக அமர்ந்த பல்லவ அரண்மனைப் பணிப் பெண்களில் ஒருத்தியாகச் சந்திரமதியும் இருந்தாள்.

சந்திரமதி தன் அருகில் இருப்பதை ரேவா அதிகம் விரும்பினாள். அதனால் சந்திரமதியால் காஞ்சியினின்று புறப்பட முடியவில்லை. சில ஒற்றர்கள் மூலம் அந்தத் தோப்பிலுள்ள பாழடைந்த வீட்டில் கலகக்காரர்களில் பலர் அடிக்கடி வருவதாக அறிந்திருந்த அவள் தன் தந்தையை அங்கு சந்திக்கலாம் எனும் எண்ணத்தில் வந்தாள். உதயசந்திரனும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அவளுக்கு எந்தப் போதிலும் உதவுவதற்குத் தக்க வீரர்களைக் கூப்பிடு தொலைவில் தொடருமாறு செய்தான்.

பாழடைந்த வீட்டிற்குச் சென்று வேலை முடிந்தபிறகு அவள் செய்ய வேண்டிய பல பணிகளைப் பற்றி அவன் கட்டளை யிட்டிருந்தான்.

அவள் பொறுப்பு மகத்தானது. மாமல்லபுரத்தை இராட்டிரகூட அரசரும், இளவரசியும், திருமங்கை மன்னரும் மற்றும் பரிவாரத்தினரும் கண்டு களித்த செயல்களைப் பற்றித் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருந்தான் உதயசந்திரன்.

"மகளே" என்று மீண்டும் கந்ததேவன் அழைத்தார்.

'மகளே' என்ற சொல் அவளுடலில் புகுந்து தந்தை மீதுள்ள நினைவை அதிகப்படுத்தியது.

"மகளே, இந்த இரவில் நீ இங்கு வந்த காரணம் என்ன? தனியே வந்திருக்கிறாயே, பயமாயிருக்காதா? தீவர்த்தியுடன் வந்தாயே. யாரைத் தேட? ஒருவேளை என்னையே தேட இருக்குமோ?" - கந்ததேவனின் கேள்விக்குச் சந்திரமதி சிறிது நேரம் மறுமொழி பகரவில்லை. மௌனமாயிருந்தாள். பிறகு பல்லவபுரத்தினின்று காடக முத்தரையர் இறந்தது வரை நிகழ்ச்சிகளை ஒன்றுவிடாது கூறி, "ஐயா, இப்போது தந்தையைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்திருக்கிறது. அதனுடன்..." என்று சந்திரமதி பேசி முடிக்கவில்லை.

கந்ததேவனின் அந்த முதுமை நிறைந்த முகத்தில்கூடக் குறும்புத்தனத்தின் சாயை படர்ந்தது. "மகளே, உன் தந்தையை மட்டும்தான் காண வேண்டுமா? உன் காதலன் சுந்தரனைத் தேட வேண்டாமா? கண்ணற்ற அவனுக்கு நீ கண்ணாக இருந்து காப் பாற்ற வேண்டாமா? என் மகளைப் பார். அவள் தன் அத்தானை நினைத்தே உருகுகிறாள். நான் குணதேவனைப் பற்றி ஒரு வார்த்தை குறைவாகக் கூறினாலுங் கூடக் கொதித்தெழுகிறாள்" என்று கந்ததேவன் கூறினார்.

சந்திரமதி மெல்லிய முறுவல் ஒன்றைப் பூத்தாள். அது இரவில் மலர்ந்த மெல்லிய முல்லையரும்பைப் போன்றிருந்தது. பகல் வேளையாயிருந்தால் அவள் முகத்தில் செம்மை படர்ந்திருப்பது தெரிந்திருக்கும்.



'நானும் தேடாமலா இருக்கிறேன்? என் கண்கள் அவரைத்தான் தேடுகின்றன. இனிய இசை எழுகிற இடத்தில் என் செவி மடுத்துக் கேட்டு அவரைத் தேடுகிறேன். சொல்லப் போனால் வெட்கம் விட்டுத் திருநீறு அணிந்த இளைஞர் குழாத்தை வெறித்து நோக்கவும் நான் தயங்கியதில்லையே' என்று நினைத்தவளாய், "ஐயா, எல்லாரையும் தேடிக் கண்டுபிடிக்கத்தான் வேண்டும். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாகச் சேனாதிபதியின் கட்டளையிருக்கிறதே. இந்தப் பேதைப் பெண்ணை நம்பி அவர் கொடுத்திருக்கும் மகத்தான பொறுப்புகளையும், நிறைவேற்ற வேண்டிய கடமைகளையும் நினைக்கும்போது இவரா ராஜதந்திரம் நிறைந்த படைத்தலைவர் என்று எண்ணச் சொல்கிறது. ஆனால், நாடு முக்கியமா? நாம் முக்கியமா? என்று அவரே அடிக்கடி கேட்டுக் கொள்ளும் கேள்வியை நினைக்கும்போது, 'எனது சொந்த இன்ப துன்பம் முக்கியமா? நாட்டு நலன் முக்கியமா? எதை நிறைவேற்றுவது?' என்று தோன்றுகிறது."

கந்ததேவன் குறுக்கிட்டார்: "சேனாதிபதியாம் சேனாதிபதி! நல்ல சேனாதிபதி வாய்த்தார். நாட்டு மக்கள் ஒருவருக்கும் சொந்த சுக துக்கம் இருக்காது என்று எண்ணி விட்டாரோ? என் மகள் கண்ணீருக்குக் காரணம், படைத்தலைவர் தான்; உன் கண்ணீருக்கும்..." - முதியவர் முடிக்கவில்லை.

சந்திரமதி சற்று ஆத்திரத்துடன் பேசினாள்: "ஐயா, அவர் எப்படி காரணமாவார்? அதனால் அவருக்கு என்ன சொந்த நன்மை? ஐயா, உமக்குத் தெரியாது. இந்த நாட்டின் நலனுக்காக அவர் கடந்த பன்னிரண்டாண்டுகளைக் கழித்து விட்டார். அவரே கூறியிருக்கிறார். அவருடைய ஒரே திருமகனின் முகத்தைக் கூட, அவர் இன்னும் சரிவரக் காணவில்லையாம். வில்லவ நாட்டுத் தலைவராயிருந்தும் அந்த நாட்டுக்கு வேண்டியவற்றைக் கடந்த பல வருடங்களாகக் கவனிக்கவில்லையாம். அவருடைய இல்லத்தரசி வண்டார்குழலியம்மையை இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் ஒருமுறைதான் பார்த்திருக்கிறாராம். பெரியவரே, நான் கேட்கிறேன்; நம்மால் இயலுமா? நீங்களும் இராஜ சிம்ம

மகாராஜா காலத்திலிருந்து அரச சேவை செய்து வந்திருக்கிறீர். சொந்த ஊர், மனைவி, மக்கள், சுற்றம் விட்டு நாட்டுக்கே உழைக்கும் வேறு ஒருவரைப் பார்த்திருக்கிறீரா?"

"ஏன் உழைக்கிறார்? என்ன பலன்?"

"என்ன அப்படிக் கேட்டு விட்டீர், அனுபவம் நிறைந்தவரே! அவருக்கு என்ன லாபம்? நாட்டுக்குத்தான் லாபம்! குழப்பமான நிலையில் பட்டமேறிய இளவயது அரசரை எதிர்க்க முற்பட்டோரைத் தடுத்து நிறுத்த வேண்டுமானால் ஊணும், உறக்கமும் எதிர்பார்த்தால் முடியுமா? சித்திரமாயனது திறமை மிகுந்த சூழ்ச்சித் திட்டங்களை அவரன்றி வேறு எவராயிருப்பினும் முறியடித்திருக்க முடியுமா?"

சந்திரமதி பேசிவரும்போது கந்ததேவன் குறுக்கிட்டுப் பேச்சை மாற்ற எண்ணி, "சித்திரமாயன் என்ன ஆனான் தெரியுமா? அவன் எப்படிப்பட்டவனோ தெரியாது! பட்டத்துக்குப் போட்டியிடுவோரில் நல்லவர்களும் இருப்பர்; பொல்லாதவர்களும் இருப்பர். நியாயத்துக்காகவும் போரிடுவர். ஆனால், சித்திரமாயனை மிக உயர்த்திப் பேசும் எங்கள் ஊர் வணிகன் ஒருவன் இருக்கிறான். அவனைப் போன்ற தீயோனை நான் கண்டதில்லை. என் கையில் அவன் சிக்கினால்... அது போகட்டும். யுத்தம் வருகிறது, யுத்தம் வருகிறது என்றார்களே யுத்தம் வருகிறதா? அல்லது மகேந்திர பல்லவனைப் போன்று சமாதானம்தானா?" என்று கேட்டார்.

உதயசந்திரனைப் பற்றிக் குறைவாகப் பேசியதை மறந்த சந்திரமதி, "சித்திரமாயன் தப்பி விட்டானாம். உங்கள் மருமகப்பிள்ளை உங்கள் மகள் நினைவாக இருந்து விட்டதால் வந்த விளைவு இது. தப்பியோடிய நாகம் சும்மாயிராது. இனித்தான் பெரும் ஆபத்து இருக்கிறது. படைத் தளபதியின் சிந்தனை எப்போதும் எதிர்காலத்தை நோக்கியே இருக்கும் என்பது அவர் கூறிய சொற்களிலிருந்து தெரிகிறது. தப்பியோடிய சித்திரமாயன் பாண்டிய நாட்டில் தஞ்சம் அடைவான். பல்லவர்களுக்கும் பாண்டியர்களுக்கும் உள்ள பல நாள் பகைமையைக் கொண்டு தெற்கு எல்லை மீது படையெடுக்கத் துணிவான். முத்தரையர்



களும் சோழ சிற்றரசர்களும் யார் பக்கம் சேருவார்களோ; அதை எதிர்பார்த்துக் காரியங்களைச் செய்தாக வேண்டும்; எல்லாவற்றையும் விடப் பெரும் அபாயம் ஒன்று வர இருக்கிறதாம். சாளுக்கியத் தலைநகர் வாதாபியினின்று நேற்றுதான் ஒற்றர்கள் வந்து செய்தி அறிவித்தனர். அங்குப் பட்டமேறியுள்ள இரண்டாம் விக்கிரமாதித்தன் படை திரட்டுகிறானாம். மும்முறை தங்கள் நாட்டிற்கு நேர்ந்த அவமானத்தைத் துடைக்கப் பல்லவ நாட்டின் மீது படையெடுத்து வரத் திட்டமிட்டிருக்கிறானாம். இவற்றையெல்லாம் எதிர்த்துத் திட்டமிட்டுச் செயல் புரிய வேண்டும். அப்படியிருக்கும்போது யுத்த எண்ணத்தோடு வராத இராட்டிரகூடர்களோடு சண்டையிடுவானேன்? யுத்தம் என்ற பேச்சேயில்லை. இராட்டிரகூட அரசரும், அவரது மகளும் ஆவலோடு காஞ்சி மாநகரத்தைச் சுற்றிப் பார்த்தார்கள். நகர அமைப்பைக் கண்டு வியந்தார்கள். கூட கோபுரங்களைக் கண்டு களித்தார்கள். பொன் மாளிகையையும், கைலாச நாதர் ஆலயத்தின் அற்புதச் சிற்பங்களையும் கண்டு புகழ்ந்தார்கள். எங்கும் காண இயலா அளவுக்குப் பெரிய பாடசாலைகளையும், அதில் கல்வி கற்கும் பல நாட்டு மாணவர்களையும் கண்டு புகழ்ந்து போற்றினார்கள். இந்தத் தொண்டை மண்டலத்துக் கோயில்களைக் காண அவர்களுக்கும் ஆசையாம். திருவாலி மன்னர் திருமங்கையாரின் விஜயமும் வைர மன்னர் வருகையும் ஒன்று சேர்ந்தால் இரு அரசர்களும் ஒவ்வொரு தலமாக விஜயம் செய்யத் திட்டமிட்டிருக்கிறார்கள். நாளைக் காலையிலே அவர்கள் மாமல்லபுரம் செல்கிறார்கள். அங்கு போய் நான் ரேவாதேவியோடு சேர்ந்து கொள்ள வேண்டும். அதற்கிடையில் தந்தையைப் பற்றி அறிந்து கொள்ளலாம் என வந்தேன்" என்றாள் சந்திரமதி. கந்ததேவன் ஒன்றும் பேசவில்லை.

சந்திரமதி கொண்டு வந்திருந்த தீவர்த்தி எண்ணெய் இல்லாததால் அணையும் தறுவாயில் இருந்தது. தீய்ந்து போனதால் எழுந்த புகை இங்கும் அங்கும் பரவியது. சந்திரன் அஸ்தமித்து விட்டபடியால் மர இடுக்குகளின் வழியே வீழ்ந்து கொண்டிருந்த சிறு ஒளிகூட இல்லை.

சூழ்நிலை அதிக பயங்கரத்தைத் தோற்றுவித்தது. வெகு காலமாக எதற்கும் அஞ்சாத சந்திரமதியின் மனத்தில் சிறு அச்சம் எழுந்தது. அதற்கு ஏற்றாற்போல் பாழடைந்த வீட்டிற்குள்ளிருந்து திடீரென பயங்கரச் சிரிப்பொலி எழுந்தது. அதைத் தொடர்ந்து வந்த வீரபத்திரன் தன் கையிலிருந்த எண்ணெய்த் தூக்கிலிருந்த எண்ணெய்யைத் தீவர்த்தி அணையாமல் வார்த்து விட்டு, கந்ததேவனையும் சந்திரமதியையும் பார்த்துப் பயங்கரமாகச் சிரித்தான்.

நள்ளிரவில் எழுந்த அந்த நகைப்பொலி கேட்டு முதியவரும், சந்திரமதியும் சிறிது நடுங்கினர். ஆனால் கந்ததேவன் அதட்டும் குரலில் "யார் நீ?" என்றார்.

வீரபத்திரன் உடைவாளை உருவி, "சத்தம் போட்டால் கொன்று விடுவேன். ஜாக்கிரதை! ஏ பெண்ணே, இப்படி வா! உன்னைத்தான் வெகு நாள்களாகத் தேடிக் கொண்டிருந்தேன்" என்று பயங்கரமாக நகைத்தான்.

ஆனால், எதிர்பாராத விதமான காரியம் என்று நேர்ந்து விட்டது. சந்திரமதியை நோக்கி வீரபத்திரன் பேசிக் கொண்டிருக்கும்போது கந்ததேவன் துள்ளி எழுந்து தனது முழு பலத்தையும் பயன்படுத்தி அவன் முகத்தில் பலமாகத் தாக்கினார். எதிர்பாராத இந்தத் தாக்குதலால் கீழே சாய்ந்த வீரபத்திரனைச் சந்திரமதியும் கந்ததேவனும் கயிறு கொண்டு பிணைத்தார்கள்.

கந்ததேவன் அவன் நெஞ்சுக்கு நேராக உடைவாளை நீட்டி, "சொல், சொல்! எங்கே என் மகள்? எங்கே கொண்டு சென்றீர்கள் அவளை?" என்று அதட்டவும் வீரபத்திரன் வெலவெலத்துப் போய், அவர்களிடம் உண்மையைக் கூறாவிடில் உயிருக்கே மோசம் என்று பயந்து, "குமுதவல்லியை மாமல்லபுரத்து இளைய ராணி அரண்மனையில் பூட்டி வைத்திருக்கிறார்கள். நாளைக்கு அங்கிருந்து பாகூருக்கு அழைத்துச் சென்று, பிறகு நாகப்பட்டினத்துக்குக் கொண்டு போய் மரக்கலம் ஏற்றித் தொண்டித் துறைமுகத்தை அடையத் திட்டம். என்னை விட்டு விடுங்கள். நான் பிழைத்துப் போகிறேன். இனி இந்த வம்பிற்கே வர மாட்டேன்" என்றான்.



கந்ததேவனுக்கு அப்போதே குமுதவல்லியைக் கண்டுபிடித்து விட்ட உற்சாகம்.

"பொழுது விடியும்வரை காத்திருப்போம். பிறகு மாமல்லபுரத்துக்கு விரைவோம்" என்று சந்திரமதி கூறினாள்.

பொழுது விடியட்டும் என விழித்திருக்க முனைந்த அவர்களை வெகு விரைவில் நித்திரைத் தேவி அணைத்தாள்.

எவ்வளவு நேரம் சந்திரமதி தூங்கியிருப்பாளோ! எங்கிருந்தோ இனிய இசையொன்று எழும்பியது. அவள் துள்ளி எழுந்தாள்.

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. கானப் பறவைகளின் கலகலவென்ற ஓசையுடன் கலந்து வந்த இனிய பண் காற்றலை மேல் மிதந்து வந்தது. அது சுந்தரனுடைய குரல் என்பது அவளுக்குத் தெரியும். பாட்டு வரும் திக்கு நோக்கி ஓடினாள் சந்திரமதி.

## 25. கத்தி பாய்ந்தது

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்து அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல அவை நல்ல நல்ல அடியார்
அவருக்கு மிகவே"

ஞானசம்பந்தப் பெருமானது மேற்படி பாடலை அனுபவித்துப் பாடிக் கொண்டிருந்த சுந்தரனது குரல் வந்த திசையை நோக்கிச்

சென்ற சந்திரமதி, பாறையொன்றின் மீது அமர்ந்து மெய்மறந்து பாடிக் கொண்டிருந்தவனைக் கண்டதும் திகைத்து ஒருகணம் நின்று விட்டாள். நெற்றியிலே பளிச்சென்று திருநீறு திகழ்ந்தது. மெல்லிய துணி. இடையில் சாயந் தீட்டப்பெற்ற ஆடை. அவனைச் சுற்றி நாகணவாய்ப் புட்களும், ஆனைச் சாத்தமும் வட்டமிட்டுப் பறந்து சென்றன.

ஆறு நாள்களாகக் காணாதவனைத் திடீரென்று கண்டதிலே அவளுக்கு ஏற்பட்ட உணர்ச்சியைச் சொல்லி முடியவில்லை. முதலில் நெஞ்சை விட்டுச் சொல் வராவிடினும் பிறகு 'சுந்தரா' என்று தட்டுத் தடுமாறிக் கூப்பிட்டாள். 'குக்குக்கூ' என்று குயில் கூவுவது போன்றிருந்தது அவள் அழைத்த பெயர். அத்தனை காலை வேளையிலும் அவள் நெஞ்சு ஏனோ உலர்ந்துவிட்டது. நா வறண்டது. நாக்கால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டு மீண்டும் 'ஹோ ஹூ' என்று சப்தமிட்டுப் பார்த்தாள். சுந்தரன் என்ற பெயரைச் சொல்வதில் அவளுக்கு இப்போது ஏனோ வெட்கம் வந்து சூழ்ந்து கொண்டது. அவனைத் திரும்புமாறு செய்வதில் இந்தக் 'காகூ' கிள்ளை மொழிகள் எல்லாம் பயன்படாதென்பது அவளுக்குத் தெரியும். துணிந்து அவள் 'சுந்தரரே' என்று கூப்பிட்டாள்.

சுந்தரன் திரும்பினான். சந்திரமதியால் இன்னும் மறைவிடத்தில் நிற்க இயலவில்லை. ஓடோடிச் சென்று சுந்தரனின் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

"யார் சந்திரமதியா?" என்று குரலில் வியப்புமிகக் கேட்டாலும் முகத்தில் குறும்பு மிளிர்ந்தது.

சந்திரமதியிடமிருந்து பதில் வரவில்லை. ஏனோ அவளுக்கு அழுகை வந்தது. துக்கத்தாலோ, துயரத்தாலோ அது ஏற்பட்டதன்று. சந்திப்பின் விளைவால் இதயம் பேசத் துடிக்கும் உணர்ச்சியே அந்த விம்மல்.

சுந்தரன் சந்திரமதியைத் தேற்றினான். "யார், சந்திரமதியா அழுவது? இந்த நாட்டுக்கு மகாராணியாகப் போகிறவளுடன் பழகும் வாய்ப்புப் பெற்ற பாக்கியசாலியா அழுவது?" சுந்தரன்



சந்திரமதியின் தலையை வருடி அவள் கண்களை மெல்லத் துடைத்தான். சுந்தரனின் ஸ்பரிசம் அவள் மீது படுவது அதுதான் முதல் முறை. அந்த முதல் ஸ்பரிசம், சில்லென்று வீசும் இளங்காற்று மேலெங்கும் தடவுவது போன்றிருந்தது. உலகத்திலுள்ள சகல ஜாதி வாசனை மலர்கள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து மணத்தை வீசி உடலிலே பூசுவது போன்றிருந்தது. வெண்மதியின் தண் குழம்பை எடுத்துத் தைலமெனத் தலைக்குப் பூசியது போன்றிருந்தது. வானத்திலே ஜ்வலிக்கும் விண்மீன்களில் ஒன்றை எடுத்து நெற்றிக்குத் திலகமிட்டது போன்றிருந்தது.

"சுந்தரா" என்றாள் சந்திரமதி, கண்களைத் திறந்து.

"ஹூம்..." - சுந்தரன் அவளைப் பார்த்தான். அவள் இன்முகத் தையே உற்றுப் பார்த்தான். தடாகத்திலிருந்து தப்பியோடி முகத் தடாகத்தில் துள்ளும் கயல் எனத் திகழும் கண்களை உற்று நோக்கினான். கிளி கொத்திய கோவைப் பழத்தின் செவ்வண்ணம் போன்று திகழ்ந்த இரு உதடுகளையும், அந்தச் செவ் வடிவங்களுக்குள் புகுந்திருக்கும் மல்லிகை அரும்பெனும் பல் வரிசையினையும், கரிய நிறத்திலே வெட்கத்தால் ஏற்பட்ட சிவப்பால் சப்பாத்திப் பழம் போல் கருஞ்சிவப்பாக மாறிய கன்னப் பிரதேசங்களையும் இப்போது தான் முதன் முதலாகக் காண்பது போல் அவன் உற்று நோக்குவதைக் கண்டு கூசி நாண மிகுதியால் எழுந்து, குருடனான சுந்தரனைப் பார்த்து, "சுந்தரா! என்ன இது? ஆறு மாதங்களிலே பெரும் மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன போலிருக்கிறதே" என்றாள்.

சுந்தரன் அதைக் காதில் வாங்காதது போன்று, "சந்திரமதி! இந்த ஆறு மாதங்களில் நீ ரொம்பவும் இளைத்து விட்டாயே; தந்தையைக் காணோமே என்ற வருத்தமா? வெயிலிலும் மழையிலும் அலைச்சலா? அரண்மனையில் வாழும் பெண் போல் தோன்றவில்லையே" என்று கூறவும், சந்திரமதி சந்திரன் முகத்தை உற்று நோக்கிய வண்ணம் "சுந்தரா, இது என்ன மாற்றம்?" என்று கேட்டாள்.

சுந்தரன் அவனை மேலே பேசவிடாமல், "ஏமாற்றம்!" என்றான்.

"ஏமாற்றமில்லை; உன் வாயிலிருந்து ஒரு முத்துச் சொல் கூட வராதே! எப்படி இன்று இவ்வளவு பேசுகிறாய்? அது மட்டுமா, என்னை நீ விழுங்கி விடுவதுபோல் பார்க்கிற பார்வை... உனக்குக் கண் தெரிகிறதா சுந்தரா?"

"தெரிகிறதே! தெரிகிறதென்று எப்படி உனக்குத் தெரிந்தது?"

"என் முகத்தை நீ உற்றுப் பார்த்தாய்; ஒவ்வோர் அங்கத்தையும் நீ பார்க்கும் பார்வை..."

"ஏன்? எப்போதும் போல்தான் நான் பார்க்கிறேன். உன் பார்வையில்தான் வேற்றுமையிருக்கிறது."

"உனக்குக் கண் எப்போது கிடைத்தது சுந்தரா? சொல், சொல். என்னை விடப் பாக்கியசாலி இனி இந்த உலகில் வேறு யாருமில்லை."

"கண் எனக்கு எப்போதாவது போயிருந்தால்தானே கிடைப்பதற்கு? நான் என்ன, மகாபாரதத்தில் வரும் திருதராஷ்டிரனா? கண் போய் வந்து, போய்..."

"சுந்தரா! புதிர் போட்டுப் பேசுகிறாய். எனக்குப் புரியாமல் பேசுகிறாய்."

"உனக்கா புரியாது? ஆழ்வார் பாடல்களிலே திளைத்த உனக்குப் புரியாதது எது?"

சுந்தரனின் இந்த வார்த்தை சந்திரமதியைத் திடுக்கிடச் செய்தது என்றாலும் அதை வெளிக்குப் புலப்படுத்தாமல் சுந்தரனுக்கு விழி வந்த கதையை அறிய விரும்பி, "சுந்தரா! விளையாட்டுப் பேச்சு அப்புறம் இருக்கட்டும். எந்தச் சாமியார் உனக்குக் கண்களைக் கொடுத்தார்? சொல், சொல்" என்று ஆவலுடன் கேட்டாள்.

சுந்தரன் சந்திரமதியை மேலும் திகைக்க வைக்க விரும்பாமல் "சந்திரமதி! உன்னை இதுவரையில் ஏமாற்றி வந்ததற்கு நீ மன்னித்து விடு. கருங்கண்ணன் என் கண்களைப் பறித்துவிடுமாறு கட்டளையிட்டான் அல்லவா? கண்களைக் குருடாக்கும் மூலிகையைக் கொண்டுவந்து பிழியுமாறு கட்டளையிட்டு விட்டு அவன் சென்றான். இந்த விஷயம் எனக்குத் தெரியாது. உன்



தந்தையின் ஆட்கள் எங்கிருந்தோ அந்தப் பச்சிலைகளைக் கொண்டு வந்தார்கள். அதை இரவில் ஒரு கூடையில் வைத்து விட்டுப் போனார்கள். நம் வீட்டு ஆடு அதைத் தின்றவுடன் மயங்கிக் கீழே விழுந்ததையும் பிறகு மறுநாள் அதனால் நடக்க முடியாது போனதையும் நான் கண்டேன். அந்தப் பச்சிலை இருக்குமிடத்தில் வேறு இலைகளைக் கொண்டு வைத்தேன். மறுநாள் எதிர்பார்த்தபடியே கருங்கண்ணனின் ஆட்கள் வந்தனர். என் கைகால்களைக் கட்டி கண்களில் பச்சிலையைப் பிழிந்தனர். நானும் 'ஆ ஊ' என்று கதறினேன். பிறகு கண் எரிச்சலால் கஷ்டப்படுபவன் போல் நடித்தேன். பிறகு கண் குருடானவன் போலவே பாவனை செய்து வந்தேன். இது எவருக்கும் தெரியாது."

சந்திரமதி குறுக்கிட்டாள்: "நீங்கள் ரொம்பவும் பொல்லாதவர்."

"ஆமாம், ஆமாம் - பொல்லாதவனாக இருப்பதால்தான் உன் குறும்புத்தனத்துக்கு இணங்க முடிகிறது."

"நான் என்ன குறும்புத்தனம் செய்தேனாம்? உங்களைப் போல் சொல்லாமல் வெளியேறத் திட்டமிட்டேனா? என்னை நடுவழியில் விட்டு விட்டுத் தப்பியோடினீர்களே அதன்பெயர் என்னவாம்? பிறகு இந்த ஆறு நாள்களாக எங்கிருந்தீர்கள்? என்னைத் தேட முயன்றீர்களா?"

சுந்தரன் நகைத்தான். சந்திரமதியின் கன்னத்தில் லேசாகத் தட்டினான். எடுத்துச் செருகியிருந்த அவளது கருநாகக் கூந்தலிலே அருகே கிடந்த மலரொன்றை எடுத்துச் சூட்டினான். அவள் மெல்ல அவன் மடியில் சாய்ந்தாள். அவள் தலையை வருடியவாறு, "குறும்புத்தனம் ஒன்றா இரண்டா? எனக்குக் கண் தெரியாது என்று நீ எண்ணி எனக்குச் சோறு போடும்போது எப்படியெல்லாம் விளையாடுவாய்? வேண்டுமென்றே வெறுங்கையைச் சோறு போல் பாவனை செய்து நீட்டுவாய்; நான் சோற்றுக் கவளம் என்று உன் கையைப் பிடிப்பேன். அது குறும்புத்தனமன்றோ?"

"உங்களுக்குத்தான் கண் தெரியுமே! சோற்றுக் கவளம் அன்று என்று புரிந்து கொண்டிருக்கலாமே."

"புரிந்து கொண்டால் என் வேஷம் கலைந்து விடுமே."

"கபட நாடக வேஷதாரி நீங்கள்!"

"நாடகத்துத் தலைவி நீ!"

"சரி, சரி; இப்படியே பேசிக் கொண்டு போனால் பொழுது சாய்ந்து விடும். நீங்கள் இவ்வளவு நாள் என்ன செய்தீர்கள்? எங்கே இருந்தீர்கள்?"

"காதலியைக் காப்பாற்ற... மீண்டும் அவளுக்கு உற்ற இடம் தரக் காஞ்சியில் தங்கினேன்."

"காதலியைக் காப்பாற்றவா?"

"ஆம்; பெண்களுக்கே உரித்தான சந்தேகப் பேய் உன்னையும் பிடித்து விட்டதா? தமிழ்க் காதலியைக் காப்பாற்றத்தான்."

"தமிழ்க் காதலி வேறு, வடமொழிக் காதலி வேறா?"

"ஆம்! எங்கள் தலைவர் உதயசந்திரன் கூறினார். நந்திவர்ம அரசர் கொடுக்கும் இறையிலிகளில், வழங்கும் தானங்களில் மேல் ஓலை எழுதுவோர் இதுகாறும் வடமொழியில் எல்லாக் காரியங்களையும் செய்து வந்தனர். செப்புப் பட்டயங்கள் வட மொழியில். தமிழிலே மக்கள் எல்லாருக்கும் புரியும் மொழியில் சாசனங்களைச் செதுக்க வேண்டும் என்பது அவர் எண்ணம். அதை நிறைவேற்ற பொற்கொல்லரையும்[1], பட்டய எழுத்தாளரையும்[2], கல் தச்சரையும், காரணீகரையும்[3], உள் படும கருமத் தலைவரையும், ஆளும் கணத்தோரையும், தனித்தனியே போய்ச் சந்தித்துத் தமிழிலே சாசனங்களைச் செதுக்கும்படி எடுத்துக் கூறுமாறு தளபதியார் பணித்திருந்தார். அந்தப் பணியை நான் இதுவரை மேற் கொண்டிருந்தேன். யுத்தம் வரும் சமயத்தில் இந்தச் சீர்திருத்தம் ஏன் என்று பல கோட்டத் தலைவர்களும்,

---

1. செப்புப் பட்டயங்களில் அரசர் இடும் ஆணைகளைப் பொறிப்போர்.
2. இவர்களும் செப்புப் பட்டயங்களிலும் பொறிப்பர்.
3. கல்வெட்டுகளிலும், பட்டயங்களில் வடமொழியிலும் அரசரின் மெய்ப்புகழை பாடுவோர்.



கருமத் தலைவர்களும் கேட்காதில்லை. ஆனால், அவர்களை நான் சம்மதிக்க வைத்து விட்டேன். தேவாரப் பள்ளியும், தமிழ்க் கல்லூரிகளும் இன்னும் சரிவர நடக்க மான்யம் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தேன்..."

சுந்தரன் பேசிக் கொண்டே போனான். பேச்சிலே தன் செயலைப் பற்றிய பிரதாபம் இருந்ததை ஆவலுடன் சந்திரமதி கேட்ட வண்ணமிருந்தாள்.

"தமிழ்க் காதலியின் நினைவில் என்னை மறந்து விட்டீர்கள்!" என்று முணுமுணுத்தாள் சந்திரமதி.

"மறதி என்பது வருவதற்கு இன்னும் எத்தனையோ ஆண்டுகள் இருக்கின்றன. நான் உன்னைப் பற்றி ஒவ்வொரு நொடியும் விசாரித்த வண்ணமே இருந்தேன். இப்போது நீ காஞ்சியை விட்டுக் கிளம்பி வருவது தெரிந்துதான் உன்னைத் தொடர்ந்து வந்தேன்."

சந்திரமதிக்குப் பேசவே நா எழவில்லை. "எனக்குத் தளபதி இட்டிருக்கும் கட்டளை என்ன தெரியுமா?" என்று கொஞ்சும் மொழியில் கேட்டாள்.

"தெரியுமே! பைரவன் மகள் சந்திரமதி தேவியார் இந்த நாட்டு அரசியின் அந்தரங்கத் தோழியாகப் போகிறாள். அரசியாருக்கு உதவியாக இருக்கப் போகிறாள்" என்று கூறவும், சந்திரமதி பொய்க் கோபத்துடன் எழுந்து "அரசியாவது? தோழியாவது? ரேவாதேவிக்கு உதவுமாறு கட்டளையிட்டிருக்கிறார்" என்றாள்.

ரேவாதேவிதான் இந்தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யத்து அரசி. இது என்னுடைய கட்டளையன்று சந்திரமதி! திருமங்கையாழ்வாரின் ஆசியுடன் கூடிய யோசனை. திருமங்கையாழ்வாரைக் கண்ட மாத்திரத்திலேயே சிறந்த வைணவ பக்தராகிவிட்ட நந்திவர்மன் காஞ்சியில் அவர் செல்லுமிடங்களுக்கு உடன் சென்றார். காஞ்சி மாநகருக்கு அடிக்கிறது யோகம். மற்ற கோயில்களுக்கு இல்லாத அதிர்ஷ்டம் அஷ்டபுஜக் கோயிலுக்குக் கிடைத்துவிட்டது. இராட்டிரகூட மன்னர் வைரமேகனும் நந்திவர்மனும் அங்கே திருமாலை

வணங்கியிருக்கிறார்கள். நல்ல சகுனம் அங்கு நேர்ந்தது. திருமங்கையாழ்வார் அழகிய பாடல் ஒன்றைப் பாடினார்.

*"மன்னவன் தொண்டையர் கோன்*
*வணங்கும் நீண்முடி மாலை வயிரமேகன்*
*தன்வலி தன்புகழ் சூழ்ந்த கச்சி யட்ட*
*புயகரத் தாதிதன்னைக்*
*கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்*
*காமரு சீர்க்கலி கன்றி குன்றா*
*இன்னிசை யாற்சொன்ன செஞ்சொல்மாலை*
*யேத்தவல் லார்க்கிடம் வைகுந்தமே."*

திருமங்கை மன்னரும், உதயசந்திரனும் ஆத்மார்த்தமாகப் பேசிக் கொண்டிருந்தபோதுதான் ரேவா இந்நாட்டு அரசியாக ஆக வேண்டும் என்று திருமங்கையாழ்வார் திருவாய் மலர்ந்தருளினார். எல்லாம் எங்கள் தலைவர் யோசனையாகத் தானிருக்கும்..."

சுந்தரன் கூறிக் கொண்டே போனான். வெயில் 'சுரீர்' என்று அடித்தது. சந்திரமதி துள்ளி எழுந்து "நேரம் போனதே தெரியாமல் பேசிவிட்டோமே! மாமல்லபுரம் சென்றாக வேண்டும். கந்ததேவன் என்னைக் காணாமல் தவித்துக் கொண்டிருப்பார். அவருடைய மகளைக் கண்டுபிடித்தாக வேண்டும். அவளை இளையராணியின் மாளிகையில் வைத்துப் பூட்டியிருக்கிறார்களாம். அந்த மாளிகைக்குள் அவ்வளவு எளிதில் நுழைய முடியாது என்று கூறுகிறார்கள். எப்படித்தான் தாமரைப்பாடி வணிகன் அங்கு அவளைக் கொண்டு சென்று பூட்டினானோ!" என்று கூறிவிட்டு கந்ததேவன் படுத்திருந்த இடம் நோக்கிச் சென்றாள்.

கந்ததேவன் நன்றாக உறங்கிக் கொண்டிருந்தார். ஆனால் அருகே முதல் நாள் கட்டப்பட்டுக் கிடந்த வீரபத்திரனைக் காணவில்லை. கயிறு அறுபட்டுக் கிடந்தது. கற்கம்பத்தில் அவன் கயிற்றை உரசி அதை அறுத்துக் கொண்டு ஓடியிருக்கிறான்.

"ஐயோ" என்று சந்திரமதி கூவினாள். அவள் கூச்சலைக் கேட்டுக் கந்ததேவன் திடுக்கிட்டு எழுந்தார்.



"நேற்றிரவு கட்டிப் போட்டோமே. அவனைக் காணவில்லை!" என்று பயத்தால் கூறவும் சுந்தரன் சாவதானமாக, "போனால் போகிறான். ஒன்றும் கொண்டு சென்று விடவில்லையே?" என்றான்.

"நமக்கு முன்பாக அவள் குமுதவல்லியை மல்லையிலிருந்து வேறு எங்காவது அழைத்துச் சென்று விட்டால்?" என்று கந்ததேவன் பதறிப் போய்க் கேட்டார்.

"ஒருகாலும் போய்விட முடியாது. ரதத்தை விட வேகமாகச் செல்லக்கூடிய வாகனம் வேறு உண்டா? கவலைப்படாமல் வாருங்கள். ரதம் தயாராக இருக்கிறது; செல்வோம்" என்றான் சுந்தரன்.

இந்தச் சுந்தரனா குருடனாக நடித்து வாழ்ந்தவன் என்று சந்திரமதி வியந்தாள்.

மாமல்லபுரத்துத் தலசயனம் எனப்படும் இராஜசிம்மன் கட்டிய கோயிலிலே ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர்.

மாமல்லபுரத்து ஆளும்கணத்தவரும், மற்றும் நகரத்துப் பிரதானிகளும், வணிகர்களும் கூடியிருந்தார்கள். திருமங்கை மன்னரும், வைரமேகனும், அவரது திருமகள் ரேவாவும், அவர்கள் பரிவாரத்தினரும் கம்பீரமாக வந்து கொண்டிருந்தனர்.

மாமல்லபுரத்துச் சிற்ப அற்புதங்களைப் பார்த்து, 'இது என்ன சொர்க்கபுரியா?' என்று வியந்தவண்ணமிருந்தார் வைரமேகன். தன் மகள் கண்ட கனவு சரியானதென்று மகிழ்ந்தார். 'திருமங்கையாழ்வார் ஆசிப்படியே தன் மகள் பல்லவ மன்னனை மணந்தால் - அது போன்ற பெரும் பேறு வேறென்ன வேண்டும்' என்று எண்ணினார்.

'விரிந்து பரந்திருக்கும் பல்லவ நாட்டிற்கு மட்டுமா அவள் அரசியாகப் போகிறாள்? கலைக் கூடங்கள் நிறைந்த பூமிக்கு அரசியாகப் போகிறாள்! சிற்பு அற்புதங்களை நாள்தோறும் பார்த்து அனுபவிக்கும் பேறு பெறப் போகிறாள்' என்றெல்லாம் எண்ணிக்

கனவுலகில் சஞ்சரித்தவரை, குணதேவன் குரல் நினைவுலகிற்குக் கொண்டு வந்தது.

தலசயனம் எனப்படும் பள்ளி கொண்ட திருமாலும் சிவனும் ஒன்றாக வீற்றிருக்கும் கடற்கரைக் கோயிலைப் பற்றிய விவரங்களைக் குணதேவன் கூறிவந்தான். பூஜை முடிந்தவுடன் திருமங்கை மன்னன் திருமால் கிடந்த திருக்கோலத்தில் லயித்தவராக மோன நிலையில் பாடத் தொடங்கினார்.

*'பிணங்களிடு காடதனுள்*
*நடமாடு பிஞ்ஞகனோடு*
*இணங்குதிருச் சக்கரத்தெம்*
*பெருமானார்க்கிடம் - விசும்பில்*
*கலங்களியங் கும் மல்லைக்*
*கடன் மல்லைத் தலசயனம்*
*வணங்கு மனத்தாரவரை*
*வணங்கென்றன் மடநெஞ்சே!'*

அமைதி நிறைந்த அந்தக் கூட்டத்தினர்க்கு இந்தப் பாடல் ரோமாஞ்சலியை ஏற்படுத்தியது.

ரேவா தேவியின் கண்கள் அந்தச் சமயம் வேறு யாரையோ தேடின. அவள் கண்களுக்குப் பழக்கப்பட்ட அந்த எழிலுருவைக் காணோம். இதயத்தில் உருவகப்படுத்தி வந்த அந்த மாவீரனைக் காணோம். அந்தத் தோற்றத்துக்குரியவன் வேறு யாருமல்லன்; நந்திவர்மனே!

இவர்கள் ஆண்டவனை வணங்கிக் கொண்டிருக்கும்போது நந்திவர்மனும் உதயசந்திரனும் அமைதியாக நின்று பேசிக் கொண்டிருந்தனர். உதயசந்திரன் இன்னும் சிறிது நாள்களுக்கு மாமல்லபுரத்திலோ, காஞ்சி மாநகரத்திலோ இருக்க மாட்டான். பிறந்த ஊரான திருவலத்திற்குச் செல்கிறான். வேகவதியாற்றங்கரையில் அமர்ந்திருக்கும் அந்த ஊரை அவன் பார்த்துப் பன்னிரண்டாண்டுகள் ஆகிவிட்டன. குழப்பம் குறைந்த இந்தச் சமயத்தில் ஓய்வெடுத்துக் கொள்வது நல்லதென்று அவன் எண்ணியிருக்கலாம்.



உதயசந்திரன் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த நந்திவர்மன் திருமங்கை மன்னரும், வைரமேகனும் கோயிலிலிருந்து புறப்படுவதை அறிந்தவுடன் அங்கு சென்றான்.

ரேவாவின் கண்கள் சுழன்று சுழன்று காணத் துடித்தவரைக் கண்டுவிட்டன.

"அப்பா, அதோ பல்லவ மன்னர்!" என்று ரேவா தந்தையிடம் மெல்லிய குரலில் கூறினாள்.

வைரமேகன் நந்திவர்மனை நெருங்கி மாமல்லபுரத்துக் கலைச் செல்வங்களைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்தார். "கடற்கரைக் கோயிலையும், கைலாசநாதர் கோயிலையும் கண்ட பிறகு எங்கள் ஊரில் இதுபோன்ற ஒரு கோயில் கூட இல்லையே என்று எண்ணுகிறேன். நான் வேண்டுமொன்றைப் பரிசாக எனக்களிக்க முடியுமா? உங்கள் ஊர்ச் சிற்பிகளை என்னுடன் அனுப்ப இயலுமா?" என்று கேட்டார்.

நந்திவர்மன் மெல்லச் சிரித்தான். இந்தச் சிற்ப அற்புதங்களையெல்லாம் படைத்தவர்கள் எனது முன்னோர்கள். அவர்கள் படைப்பை நாம் கண்டு மகிழ்கிறோம். என் காலத்தில் சிறந்த ஒன்றை நான் அமைக்கச் சிறிது காலமாகக் கனவு கண்டு வருகிறேன். நேற்றும் வணங்குதற்குரிய திருவாலி மன்னர் அவர்கள் திருமாலுக்குக் கைலாசநாதர் கோயிலைப் போன்ற ஒன்றை அமைக்குமாறு பணித்தார்கள். என் சிந்தையெல்லாம் இப்போது புதிய கோயில் அமைப்பதிலேயே இருக்கிறது. அதற்கு வேண்டிய சிற்பிகளை நான் தேட வேண்டும். ஜீவ கலை பொருந்திய சிற்பிகளுக்கு வேலை இல்லாததால் அவர்கள் வெவ்வேறு இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். சிற்பிகளின் தலைவன் வாழ்ந்த வீடு பாழடைந்து இன்று சதிகாரர்கள் வாழுமிடமாகக் காட்சியளிக்கிறது" என்று கூறினான்.

திருவாலி மன்னரின் பரிவாரத்திலிருந்த ஒருவர் வந்து வைரமேகனை அழைப்பதாகக் கூறவும் வைரமேகன் அங்கிருந்து புறப்பட்டார். "அப்பா, இன்னும் சிங்கக்குகை துர்க்கைக் கோயிலைப் பார்க்க வேண்டுமாம். நான் போய் வரட்டுமா?"

என்று கேட்கவும், வைரமேகன் "ஆகா! விரைவில் திரும்பி வந்து விடு" என்று கூறினான்.

ரேவாவும் தோழிகளும் புடை சூழ, குணதேவன் முன்னே வழிகாட்டிச் செல்ல நந்திவர்மன் ஏதோ சிந்தனையுடையவனாகப் பின்வர, அவர்கள் சிங்கக் குகைச் சிற்பங்களைப் பார்க்கச் சென்றனர்.

அடர்ந்த சோலையின் நடுவே ஒரே பாறையில் குடையப்பட்டிருந்த மண்டபத்தை புலிக்குகை என்று எல்லாரும் பெயரிட்டு அழைத்தனர். அந்தக் குகை அருகேதான் இளையராணி மாளிகை இருந்தது. நந்திவர்மனுக்கு அந்த மாளிகையைக் காண நீண்ட நாள் எண்ணம்.

புலிக்குகையைப் பார்த்த பிறகு நந்திவர்மன் கட்டளைப்படி எல்லாரும் இளையராணி மாளிகையை அடைந்தனர். மாளிகையின் வெளிக்கதவு பெரும் பூட்டு ஒன்றினால் பூட்டப்பட்டிருந்தது.

அருகே இருந்த பாறையிலே ரேவாவையும் மற்றையோரையும் அமரச் செய்துவிட்டு அருகிலிருந்த வீரனை நோக்கித் திறவுகோல் கொண்டு வருமாறு குணதேவன் பணித்தான். நந்திவர்மன் எதிரே நீண்டு கிடந்த நீலக்கடலையும், பரந்து விரிந்திருந்த வெண் மணலையும், அடர்ந்து செழித்திருந்த சோலை மரங்களையும், வெள்ளை வெளேரென்று நிற்கும் இளையராணி அரண்மனை யையும் அதனருகே இருந்த சிறு தடாகத்தையும் தாழைப் புதரையும் பார்த்தவாறு வரும்போது ரேவா தேவியின் அழகொளி வீசும் திருமுகத்தை ஒருகணம் நோக்கினான்.

இதுவரை எங்கும் காணா எழிலோவியம் போல் தோன்றிய அந்த முகம் அவன் இதயத்தில் கண்ணின் வழியே ஒரு நொடியில் பதிந்தது.

"அரசே, இந்த அரண்மனையை யார் கட்டியது என்று தேவி கேட்கிறார்கள்" என்று குணதேவன் கேட்டான்.



நந்திவர்மன், "இராஜசிம்ம அரசரின் பட்டத்து ராணி ரங்கபதாகை அமைத்தது. ஆனால் ஏனோ இளையராணி மாளிகை என்று பெயர் வந்தது; ஏதாவது பெரும் வரலாறு இதன்பின் புதைந்திருக்கலாம்" என்றான்.

வீரத்திருவிழிப் பார்வையுடன் மாற்றார் நடுநடுங்க விழிக்கக்கூடிய நந்திவர்மனுக்கு ரேவாவின் கண் ஒளியை உற்று நோக்கிப் பேச முடியவில்லை. அவளை நேரிடையே காணும்போது அவள் நிலம் நோக்குவதும், அவன் நிலம் நோக்கும்போது அவள் கடைக் கண்ணால் அவனை நோக்குவதுமாக இருந்தது.

அந்தச் சமயம் இளையராணி மாளிகையின் மேல் மாடத்துச் சாளரத்தின் வழியாகக் கீழே யாரோ பேசுவது கேட்டு குமுதவல்லி உற்று நோக்கினாள். 'ஹோ' என்று கூவித் தான் சிறைப்பட்டுக் கிடப்பதைத் தெரிவிக்க விரும்பினாள். அவள் கண்ட காட்சியில் ரேவா - குணதேவன் - மற்றவர் (அவள் நந்திவர்மனைக் கண்டதில்லை) - மற்றும் இளம் பெண்கள்.

அத்தானா? இங்கு எப்படி வந்தார்? அழகு மங்கை ஒருத்திக்கு எதையோ சுட்டிக் காட்டுகிறாரே! குமுதவல்லிக்கு இப்போது கூவக் கூட நா எழவில்லை.

ஆனால், அப்படி அவள் செய்யாமல் இருக்க முடியாத நிலை ஒன்று ஏற்பட்டு விட்டது.

மாளிகையைப் பற்றி விளக்கிச் சுட்டிக் காட்டிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தே எல்லாரும் நிமிர்ந்து மாளிகை அழகைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அருகே புதரிலிருந்து விர்ரென்று கத்தியொன்று பாய்ந்து வந்தது.

மேலே சாளரத்தினின்று குமுதவல்லி 'ஐயோ' என்று கூவாமல் எப்படி இருக்க முடியும்?

# 26. பால் நிலவும் வாள் ஒளியும்

பல்லவ நாட்டுப் படைத் தலைவன் உதயசந்திரன் திருவல்ல நகரத்திற்குத் திரும்பி வருகிறார் என்ற செய்தி வெகு விரையில் நகர மக்களுக்கு எட்டியது. யாரும் அறியாது வந்து சில நாள்கள் தங்கியிருந்து செல்ல எண்ணிய அந்த மாவீரனுக்கே தன் வருகையை மக்கள் அறிந்து கொண்டது வியப்பை அளித்தது.

நகர எல்லையில் மக்கள் குழுமியிருந்தனர். நகரப் பெருமக்கள் கூடியிருந்தனர். எல்லார் முகத்திலும் மலர்ச்சி. தங்கள் நாட்டுத் தலைவரைக் காண்பதில் பெருமிதம். பல்லவ சாம்ராஜ்யத்துக் காவலனைத் தங்கள் ஊர் பெற்றெடுத்து அளித்த பெருமை அவர்கள் இதயத்தில் குடி கொண்டிருந்தது.

அவர்களுக்கு அண்மையில் நடந்த பல்லவ அரியணைப் போட்டி குறித்துச் செய்திகள் தெரியும். பல்லவ சாம்ராஜ்ய அரசு கட்டிலில் சிறந்த அரசனை அமர்த்துவதில் உதயசந்திரன் எடுத்துக் கொண்ட பணி எத்தகையது என்பதை அவர்கள் அறிவர். சொந்த ஊர், சுற்றம் என்றும் கருதாமல் உதயசந்திரன் நாட்டின் பகைவர்களை அழிப்பதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்து வருவது அவர்களுக்குத் தெரியாதா?

'பல்லவ சாம்ராஜ்யக் காவலரே, வருக! வருக!'

'பகைவர்க்குக் கூற்றம் போன்றவரே வருக! வருக!'

'சத்துரு சம்ஹாரரே வருக! வருக!' என்று புகழ் முழக்கம் செய்து மக்கள் வரவேற்றனர்.

தனித் தேரில் ஏறி வந்த உதயசந்திரன் மக்களின் கண்டதும் தேரினின்று குதித்து இறங்கினான். கை கூப்பி மக்களது



அன்புக்குப் பதில் மரியாதை தெரிவித்தான். மக்களோடு மக்களாக நடந்து அந்த நகர வீதி வழியே சென்றான். பல ஆண்டுகளுக்கு முன்பு கண்ட தன் சொந்த ஊரை மீண்டும் பார்ப்பதில் அந்த மாவீரனுக்குப் பெருமகிழ்ச்சி இருந்தது. ஊரையும் மக்களையும் காணும்போதுஅந்தக் கடமை வீரன் காஞ்சி நகரைப் பற்றி மறந்து விடவில்லை. பகைவர் பயமின்றி அமைதியுடன் விளங்கும் காஞ்சிக்கு இனி ஆபத்து இல்லை என்றாலும் உதயசந்திரனின் சிந்தனை இன்னும் எங்கோ விரிந்து பரந்து ஆயிரமாயிரம் எண்ணங்கள் வந்து மோதி அவன் கவனத்தைத் திருப்பின. நெருங்கிய நண்பர்கள் கேட்ட கேள்விக்கு மறுமொழி கூறி வந்தானே தவிர கவனம் முழுவதும் அங்கே நிலைத்திருந்தது என்று கூற முடியாது.

"அப்பா!" என்று சிறுவன் ஒருவன் ஓடி வந்து உதயசந்திரனை அணைத்துக் கொண்டவுடன்தான் உதயசந்திரன் இருக்குமிட உணர்வை அடைந்தான். சிறுவனைக் காணும்போது உதயசந்திரனே இளம்பிராய வடிவெடுத்து வந்து விட்டானோ என்று ஒரு கணம் வியப்பேற்பட்டது.

பால் வடியும் அந்த முகத்திலே பொலியும் களை, வருங்காலம் அவனுக்குச் சிறப்பாக இருக்கும் என்பதைப் புலப்படுத்தியது.

அந்தப் பத்து வயது நிரம்பாப் பாலகன் தந்தையைக் கண்ட ஆனந்தத்தில் ஆவலுணர்ச்சியும் அதிசயமும் கண்களின் கடைக் கோடி வழியாக வழிய தந்தையின் முகத்தை உற்று நோக்கினான்.

எதிரே அமைதியும், அடக்கமும் நிறைந்த சிறு இல்லம். இல்லத்தின் வாயிற்படியில் பல பெண்கள் நின்று கொண்டிருந்தனர். ஆரத்தி ஏந்தியிருந்தனர். மங்கல விளக்குக் கொண்டிருந்தனர். குங்குமச் சிமிழுடனிருந்தனர். சந்தனக் கிண்ணம் வைத்திருந்தனர். வாச மலரின் மணம் எங்கும் நிறைந்திருந்தது. பகலில் முளைத்த முழுமதியோ என்ற முகத்தினராக அவர்கள் வண்ண ஆடையுடன் அங்கு குழுமியிருந்த கோலமே குதூகலத்தைக் கொடுத்தது. அழகொளி வீச நிற்கும் அரம்பையர் போன்ற ஆரணங்குகளின் குழுவிலே உதயசந்திரனின் இல்லத்தரசி அடக்கம் நிறைந்தவளாக

நின்றிருந்தாள். தோற்றத்தில் அமைதி. ஆனால் உள்ளமோ ஆவலெனும் எரிமலையைக் கொண்டிருந்தது. புறமோ சாம்பல் பூத்திருந்தது. அகமோ உணர்ச்சி எனும் அக்னிக் குழம்பைத் ததும்பிக்க விட்டிருந்தது. புறமோ புதுப் புன்னகையைப் பூத்து நின்றது. கண் எனும் கடலிலே அந்த விழிகள் அலையிலே ததும்பிக்கும் கலம் போல் கணவன் வருகையைத் தேடி அங்குமிங்கும் அலைந்தன. அலைந்த விழிப் படகிற்குக் கலங்கரை விளக்கு போன்று கணவன் வந்துவிட்டான். படபடக்கும் இதயத்தைப் பாதுகாக்கும் மார்பகங்கள் விம்மித் தணிந்து இன்ப வேதனையை ஊட்டிக் கொண்டிருந்தன.

"மகனே!" என்று உதயசந்திரன் தன் மகன் அவனிசந்திரனை எடுத்து முத்தம் ஈந்து உச்சி மோந்து மார்போடு அணைத்து, அவன் கண்களில் ததும்பும் இன்பக் கண்ணீரைத் துடைத்து, "குழந்தாய், அம்மா எங்கே? நீ நலமா? உன் பாட்டியார் நலமா? சரிவரக் கல்வி கற்று வருகிறாயா?" என்று வினவினான்.

இதற்குள் உதயசந்திரன் இல்லத்தரசி வண்டார்குழலி அம்மை ஆரத்தித் தட்டுடன் முன் வந்து ஆரத்தி எடுத்துப் புன்முறுவல் தவழ வரவேற்றாள். அவள் கண்கள் அத்தனை நாள் செய்தியையும் அரை நொடியில் பேசின. துடிக்கும் உதடுகளின் மெல்லிய ஓசை பல நூறு நாள்களின் கதைகளைக் கூறின. உதயசந்திரன் ஊர் வந்ததும் அவனுக்கு அமைதி ஏது? ஊர் மக்கள் வந்து குழுமிப் பேசிப் பேசி நேரம் போவது தெரியாமல் அவனைச் சூழ்ந்திருந்தனர். மக்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் எழுப்பிய சந்தேகத்திற்கெல்லாம் அவன் அமைதியாக மறுமொழி கூறிவந்தான்.

உதயசந்திரன் வந்து பல நாள்களுக்குப் பிறகு ஒருநாள் மாலை வேளை இனிய தென்றலை வழக்கத்துக்கு மாறாக அதிகமாகக் கொண்டு தந்தது. வீசு தென்றலும், வீங்கிளவேனிலும் வண்டார்குழலியின் இதயத்தில் புதுத் தெம்பையூட்டின. கீழ்வானில் வட்டமதி நிலா மெல்ல உதயமாகிக் கொண்டிருந்தது. சோலை



மேடையிலே அமர்ந்து தடாகத்தின் நீரில் தன் கையிலுள்ள புதுவித வீணையையும், அந்த வீணையினின்று எழும் நாதத்தை அனுபவிப்பதுபோல் தன்னைக் கடைக் கண்ணால் கண்டு இன்பம் பருகும் நாயகனைக் கண்டு, உடலில் இன்பவேகம் பரவ, அது கரங்களின் வழியாக விரல்களில் பாய, விரல்கள் யாழ் நரம்புகளின் மீது கூத்தாட அங்கு எழும் இசை வான வீதியிலே சென்ற கின்னர கிம்புருடர்களை ஒருகணம் அயரச் செய்தது. காவிலே கூவும் குயிலை ஒருகணம் திகைக்கச் செய்தது. சோலை நடுவே பாடி வரும் அருவியை ஒருகணம் அயரச் செய்தது.

இசையின் இனிய நாதத்துக்கு இயைந்தாற்போல் அவனிசந்திரனின் மழலைக்குரல் எழுந்தது. அவன் கையில் விளையாட்டுக் கத்தி இருந்தது. அத்துடன் துள்ளிக் குதித்து வந்து, "அப்பா! இந்தக் கத்தியைச் சுழற்றி இருநூறு பேரை நான் கொல்லுவேன்" என்று கூறவும், உதயசந்திரன் அவனை அணைத்து, "குழந்தாய்! கொல்வது பாவமல்லவா? உன் ஆசான் கற்றுத் தரவில்லையா?" என்று வினவினான்.

வண்டார்குழலி வீணையைச் சற்றே நிறுத்தி, "குழந்தாய்! உன் தந்தைக்கும் அது பொருந்தும் என்று சொல்லடா" என்றாள்.

உதயசந்திரன் மெல்ல நகைத்து, "கொல்வதும் ஒரு கலை; அதற்கும் இலக்கணம் உண்டு. தன்னைக் கொல்ல வரும் பகைவையும் கொல்லலாம். நாட்டைக் கவர வரும் நச்சுப் பாம்மைக் கொல்வது பாவமல்லவே!" என்றான்.

"இதுவரை என் வாளை தர்மத்துக்கு எதிராக ஓங்கியதில்லை. அதர்மத்துக்குத் தலை வணங்கியதுமில்லை. கூடியவரை குருதி வீணே ஓடாது பார்த்துக் கொண்டிருக்கிறேன்."

"ஆமாம்; ஆமாம். பல்லவ வீரர்களின் வாள் துருப்பிடித்து விட்டது என்று இங்குள்ளோர் கூறுகிறார்கள். 'பல நூறு காத தொலையிலிருந்து வந்த வேற்று அரசரை விரட்டாமல் வரவேற்றார்கள் பல்லவர்கள்; எதிர்க்கப் பலமின்றி எதிர்கொண்டு அழைத்தார்கள்' என்று இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள். இதைக் கேட்டு வெட்கி நான் வாழ்கிறேன்" - வண்டார்குழலி

வேடிக்கையாகவே இதைக் கூறினாள். இதைக் கேட்ட மாத்திரத்தில் வெகுண்டு எழுந்த உதயசந்திரன், "பல்லவர்கள் பயங்கொள்ளிகளல்லர், தேவி! படையெடுக்கும் நோக்கத்துடன் வராத இரட்டர்களை - நட்புரிமை கிடைத்தால் நல்லது எனும் எண்ணங் கொண்ட இராட்டிரகூடர்களின் மனமறிந்து வரவேற்று நம் பக்கபலமாகச் சேர்த்தது பயந்த தனத்தையா காட்டுகிறது? தேவிக்கு யாரோ தவறான எண்ணம் ஏற்படுத்தக் கூறியிருக்கிறார்கள்" என்று கூறவும், வண்டார்குழலி கோபங்கொண்ட தன் நாயகன் கோபம் தணிப்பதற்காக, "அது போகிறது; அரசியல் மறந்திருந்த தங்கள் உள்ளத்திற்கு அதிகச் சலனம் கொடுத்து விட்டேன். மன்னித்து விடுங்கள்" என்றாள்.

உண்மையில் உதயசந்திரனுக்குக் கோபமில்லை. 'வைரமேகன் படைகள் காஞ்சி நகரை அடையும்வரை ராஜதந்திரத்தைக் காட்டி எதிர்க்காதிருந்ததை மக்கள் எப்படி அறிவர்? வேல்முனை மழுங்கியது என்றுதான் கூறுவார்கள். அவர்கள் ஐயத்தை நீக்கும் கடமை என்னுடையதன்றோ' என்று எண்ணியவனாக, வட பெண்ணையாற்றங் கரையில் வைரமேகன் தண்டிறங்கியதிலிருந்து, காஞ்சி நகரை அடையும் வரையில் நடந்தவற்றைச் சுருக்கமாகக் கூறினான்.

வியப்புடன் யாவற்றையும் கேட்ட வண்ணமிருந்த வண்டார்குழலி, "திருமங்கை மன்னர் இன்னும் காஞ்சியில்தான் இருக்கிறாரா? நாம் அவரைத் தரிசிக்க முடியாதா? காஞ்சி நகரத்து அழகைக் கண்டவர்கள் கதை கதையாகக் கூறுகிறார்கள். பார்த்தவர்கள் பசி தாகம் மறந்து புகழ்கிறார்கள். இந்த முறை நானும் உங்களுடன்தான் வரப் போகிறேன்" என்று கூறும்போது, "நானும் எப்போதோ சிறு வயதில் பார்த்தது; நானும் வரப் போகிறேன்" என்று கூறிய வண்ணம் மூதாட்டி அங்கு வந்தாள். உதயசந்திரனின் தாயார் அவர்.

தாயைக் கண்டவுடன் எல்லாரும் எழுந்து நின்றனர். மகனை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை ஏறிட்டுப் பார்த்துப் பெருமூச்சு விட்டதும், "மகனே, எனது கடைசி காலத்திலாவது



உன்னருகே என்னை இருக்குமாறு செய்யடா அல்லது நீயாவது இங்கேயே தங்கிவிடு" என்று கூறினாள் தாய்.

அப்போது வட்ட முழுமதி வானத்தில் மெல்ல ஏறிக் கொண்டிருந்தது. மெல்லப் பரவி வந்த அதனொளியிலே தாயின் கண்கள் கலங்கியதைக் கண்டான் உதயசந்திரன். தாயின் சொற்கள் அவனைத் தழுதழுக்க வைத்து விட்டன.

"தாயே! உங்களுடைய எண்ணத்தை நிறைவேற்ற முடியாமல் இருப்பதை நினைக்கும்போது எனக்கு வேதனை முட்டுகிறது. நான் தங்களிடம் இருப்பதோ, நீங்கள் என்னிடம் இருப்பதோ அவ்வளவு எளிதில் இயலுமென்று தோன்றவில்லை அம்மா! காஞ்சியிலே நிரந்தரமாக நான் தங்கினால், தாயின் அருகில் இந்தச் சேய் இருக்க இயலும். அல்லது இங்கே நம் ஊரிலேயே தங்கிவிட்டாலோ - அம்மா என் கடமை - அமரரான பரமேஸ்வர வர்மருக்கு நான் அளித்த வாக்குறுதி... இரண்யவர்மருக்கு நான் கொடுத்த சொல்லுறுதி என்ன ஆவது? தாயே! தாங்களும் இந்த ஊரை விட்டு காஞ்சிக்கு வந்து விட முடியாது. தாங்கள் இந்த நகரத்துத் தலைவியாக இருக்கிறீர்கள். தாங்கள் இங்கிருக்கும் தைரியத்தில் நான் ஊரை மறந்து, இந்த நாட்டிற்குச் சேவை செய்கிறேன். நீங்களும் வந்து விட்டால் இங்குள்ள மக்களைக் காப்பது யார்?"

தாய் மறுமொழி ஏதும் கூறவில்லை. பிறகு சிறிது நேரம் மௌனமாயிருந்தாள். பிறகு கணீரென்ற குரலில், "அப்பா, மகனே! இந்த நாட்டிற்குச் சேவை செய்யும் சிறந்த மகனைப் பெற்றதில் நான் பெருமையடைகிறேன். உன்னைப் பற்றி எல்லாரும் பெருமையாகப் பேசும்போது, நீ பிறந்த அன்று நான் மகிழ்ச்சியடைந்ததைவிட இப்போது நான் அதிகமான களிப்பை அடைகிறேனடா. நீ பிறந்த அன்றுதான் உன் தந்தை போர்க்களத்திலே மாண்டார் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அந்தத் துடைக்க முடியாத துக்கத்திலும் எனக்கு மனச் சாந்தியளித்து உன் முகம்தானடா. உன் பாட்டனார், அவருக்குப் பாட்டனார் எல்லாரும் பல்லவ சாம்ராஜ்யத்துக்குப் பேருதவி

செய்தவர்கள். படைத் தலைவர்களாயிருந்து புகழ் பெற்றவர்கள். போரிலே புறமுதுகிட்டு ஓடாது மார்பிலே வேலையும், வாளையும் தாங்கியவர்கள். நரசிம்ம சக்ரவர்த்தியின் கட்டளைப்படி வாதாபி சென்ற படையில் முக்கிய பதவி வகித்தவர் உன் பாட்டனாருக்குப் பாட்டனார் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தப் பரம்பரை யிலே வந்த நீ உன் ஆற்றலைப் புலப்படுத்தாது இருப்பாயா? ஆனால், மகனே! இங்கு சிலர் பேசிக் கொள்வது என் காதில் விழாமலில்லை. பகையரசர் காஞ்சிக்குள் நுழையச் சம்மதித்தாயாமே? அதனுடன் உன் நல்லெண்ணத்தின் பேரி லேயே கோட்டத் தலைவர்கள் பலர் சந்தேகப்படுகிறார்கள். சித்திர மாயனையும் ஒழித்து விட்டு இந்தக் காஞ்சி அரியணையில் நீ அமரப் போகிறாயாம், மகனே! நமக்கு வேண்டாம் அந்த அரசபீடம்..."

தாய் முடிக்கவில்லை. உதயசந்திரன் "அம்மா!" என்று கூவினான். அவன் கண்கள் கலங்கின. அந்த ஓலத்தைக் கேட்டுத் தாய் கூட சிறிது நடுங்கினாள். வண்டார்குழலி முகம் வாடினாள். அவனிசந்திரன் தாயின் அரவணைப்பில் புதைந்து நின்றான். "தாயே! நாட்டைப் பிளக்க சூழ்ச்சி செய்பவர்கள் இங்கும் வந்து விட்டார்களா? உங்கள் செவியில் அவதூறு புக விட்டார்களா? தாயே... வாதாபியை அழித்த படைவீரன் பரம்பரையில் வந்த உங்கள் மகன் விரோதிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பான் என எண்ணுகிறீர்களா? சற்று முன்புதான் உங்கள் மருமகளுக்கு இராட்டிரகூடர்களுடன் ஏற்படுத்திய சமாதானத்தின் நிலையை விளக்கினேன். சாளுக்கியர் பிடியிலிருந்து விடுபட்டுப் புதிதாகத் தோன்றிய ராஜ்யம் இராட்டிரகூடம். அந்த ராஜ்யத்தை கபளீகரம் செய்யக் காத்திருக்கிறான் சாளுக்கிய மன்னன். அதனுடன் கூட காஞ்சியை நோக்கிக் கிளம்பத் தக்க தருணம் பார்த்திருக்கிறான். நந்திவர்மனைப் பட்டமேற்றியது முதல் பாண்டியருக்கும் பல்லவ நாட்டின் மீது ஒரு கண்தான். கங்க அரசனும் அவர்களுடன் சேர்ந்து தாக்கத் திட்டமிடுகிறான். இந்தச் சமயத்தே நமக்கு நண்பர் வேண்டாமா? அதனால் இராட்டிரகூடர்களுடன் அவர்கள் விருப்பப்படியே நண்பர்களானோம். அந்த நாட்டு இளவரசிக்குக் காஞ்சியைக் காண அடங்காத ஆவல். சகல கலைகளையும்



கற்க ஆசை. இந்த நாட்டு அரசியாக ஆகும் ஆற்றல் அவளிடம் இருக்கிறது. திருமங்கை மன்னரும் அப்படியே ஆசீர்வதித்திருக்கிறார். இதில் என்ன தவறு தாயே! கோட்டத் தலைவர்களிடைய குழப்பமேற்படுத்தச் சிலர் முயன்று வருவது எனக்குத் தெரியும். தப்பியோடிய சித்திரமாயன் தூவிச் சென்ற விதை உள் நாட்டுக் குழப்பம். இந்த நாட்டில் வேற்றரசு ஒற்றர்கள் பலர் இருக்கின்றனர். நாட்டுக்கு அபாயம் ஏதுமில்லை என்று நினைக்கின்றனர். அப்படியில்லை தாயே! இனிதான் இந்த வாளுக்கு வேலை. மாற்றானிடம் சிக்காது பெருமையுடன் வாழச் செய்யும் பெரும் பணி இந்த வாளுக்கு இனிதான் தாயே! எனக்குக் களங்கம் ஏற்படுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் இதனால் நாட்டிற்கு ஏற்படும் ஆபத்தை நினைக்கும்போதுதான் இந்த வாளுக்கு இனிதான் வேலை என்பது நிச்சயமாகிறது" என்று உறையினின்று வாளை உருவினான்.

அந்த வாள் கார் கால மின்னல் போல் மின்னியது.

அந்த வாள் உதயசந்திரன் கூறிய சொற்களுக்குச் சாட்சி கூறுவது போல் பளபளத்தது.

அந்த வாள் பகைவருக்குக் கூற்றுவனின் பாசம் போல் காட்சியளித்தது.

அந்த வாள் உதயசந்திரனின் நெஞ்சுறுதியைப் பிரதிபலித்தது.

அந்த வாள் முன்பு பரமேஸ்வர வர்மருக்குக் கொடுத்த வாக்கை நினைவூட்டி ஒளிவீசியது.

வானத்தே வெள்ளித் தகடென விளங்கும் வட்டமதியின் பால் போன்ற நிலவில் உதயசந்திரனின் வாள் பளபளத்தது. தடாகத்தில் பூத்த அல்லி மலரை விடப் பளபளப்பில் வெண்மையாக அது காட்சியளித்தது. பகைவரின் செங்குருதியை அது அவாவுகிறதோ எனத் தோன்றியது.

அந்தச் சமயத்தே குதிரையொன்று நிற்கும் அரவமும், அதன் மீதிருந்து வீரனொருவன் குதிக்கும் சப்தமும், பிறகு அவன் விரைந்து வரும் காலடியோசையும் கேட்டது.

“தாயே! இப்போது பாருங்கள், நம் நாட்டு ஒற்றன் கொண்டு வரும் செய்தியை. அவன் கூறப் போவதை நானே கூறுகிறேன் கேளுங்கள். காஞ்சியிலிருந்து தப்பியோடிய சித்திரமாயன் பாண்டிய நாட்டுத் தலைநகரை அடைந்து விட்டான். அங்கு அவனுக்குப் பெரும் வரவேற்பு. ‘பல்லவ குலவேந்தே வருக! வருக!’ என்று புகழ் ஒலியுடன் வரவேற்கிறார்கள். உடனே படையுடன் கிளம்பத் துடித்த பாண்டிய மன்னனைச் சித்திரமாயன் அடக்கி நிறுத்தி சமயம் வருவதற்குக் காத்து நிற்கிறான். வடக்கே வாதாபிக்குக் கருங்கண்ணன் போய்ச் சேர்ந்திருக்கிறான். இங்கு நடக்கும் சம்பவங்களைக் கூறி வருகிறான்.”

உதயசந்திரன் முக்காலும் உணர்ந்தவன் போல மளமளவென்று செய்தியைக் கூறிவருவது கேட்ட குதிரை மேல் வந்த வீரனும் அயர்ந்து விட்டான். தான் சொல்ல வந்ததனைத்தும் படைத் தலைவர் ஒன்றுவிடாமல் கூறியது அவனை வியப்பில் ஆழ்த்தியது.

உதயசந்திரன் தாயை நோக்கினான். வந்த வீரனும் மூதாட்டியை நோக்கி, “அம்மா! ஐயா கூறுவது அப்படியே உண்மை. இன்னும் ஒரு வார்த்தை சேர்க்க வேண்டும். வாதாபி நகரில் படை திரட்டும் வேலை தொடங்கி விட்டது என்பதொன்று; காஞ்சி நகரினின்று அரசர் தென்னாட்டுத் தலங்களைத் தரிசிக்கக் கிளம்புகிறார் என்பது மற்றொன்று.”

“தாயே! இனி ஒரு கணம் கூடத் தாமதிக்க இயலாது. இந்த வாளுக்கு ஏற்ற வேலையின் வேளை நெருங்குகிறது. நான் நாளைப் பொழுது புலரா முன்னர் கிளம்புகிறேன். விடை கொடுத்து ஆசியளித்து அனுப்புங்கள் தாயே! வடக்கிலும் தெற்கிலும் இனி ஆற்ற வேண்டிய கடமைகள் பல இருக்கின்றன” என்றான்.

தாயின் கண்களும், வண்டார்குழலியின் கண்களும் கலங்கின. வாளின் ஒளியில் அவர்கள் கண்களில் தளும்பும் நீர் பாண்டி நாட்டு முத்தெனப் பிரகாசித்தது.



## 27. இரண்டு ஓலைகள்

மாமல்லபுரத்து ஆதுரச் சாலையில், குணதேவன் படுத்த படுக்கையாகக் கிடந்தான். இளையராணி அரண்மனை அருகே பாய்ந்து வந்த கத்தியானது அவனது இடப் புறத்தைப் பதம் பார்த்தது. விஷம் தோய்க்கப்பட்ட கத்தியாகையால் கத்தி பாய்ந்த சில விநாடிகளுக்குள் மயக்கமுற்று விழுந்து விட்டான். நந்திவர்மன் பதறிப் போனான். அருகே காவல் வீரர்களும் இல்லை. அரண்மனையைத் திறக்கத் திறவுகோல் கொண்டு வர அவர்கள் சென்றிருந்தனர். ரேவா தேவியும் சந்திரமதியும் பதறிப் போய் நின்றிருந்தனர். ஒருகணம் யோசித்த நந்திவர்மன் தானே குதிரையிலேறி விரைந்தான்.

சிறிது நேரத்தில் தேரொன்று வந்தது. குணதேவனை அதிலே கிடத்தி ஆதூரச் சாலைக்குக் கொண்டு சென்றார்கள். அரசரது கட்டளையால் அரண்மனை வைத்தியர் வரவழைக்கப்பட்டார். குணதேவன் மயக்கந்தீர அன்றையப் பொழுது தீர்ந்தது.

குணதேவனைக் காப்பாற்றும் குழப்பத்தில் கத்தி எய்தவனைப் பிடிக்காது விட்டுவிட்டனர். குணதேவன் பேரில் குறி வைத்ததோடன்றிக் கத்தி வீசியவன் குமுதவல்லியையும் அரண்மனையினின்று விடுவித்து முன் ஏற்பாடாகக் கடற்கரையிலிருந்த மரக்கலத்திற்குக் கொண்டு சேர்த்து விட்டான். அன்று பொழுது சாயுமுன்பு மரக்கலம் பாய் விரித்து தென்திசை நோக்கிக் கிளம்பியது.

குணதேவன் நிமிர்ந்து உட்காரும் நிலையடையப் பதினைந்து நாள்களுக்கு மேலாகி விட்டன. பதினைந்து நாள்கள் எத்தனையோ மாறுதல்களை உண்டாக்கியிருந்தன. இதுகாறும் படுக்கையருகே யிருந்து பணிவிடை செய்து வந்த சந்திரமதியைக் காணவில்லை.

இயன்றபோது வந்து சென்ற இளவரசி ரேவாவையும் காணவில்லை. குணதேவன் விசாரித்ததில், திருவாலி மன்னருடன் இராட்டிரகூட மன்னரும், ரேவா தேவியும் காஞ்சிபுரம் சென்று விட்டார்கள் என்பது தெரியவந்தது. குணதேவனுக்குப் படுத்த படுக்கையாயிருக்க முடியவில்லை. சேனைத் தலைவர் எங்கிருக்கிறார் என்பதை அவன் அறிய ஆவல் கொண்டான். குமுதவல்லியும் மாமன் கந்ததேவனும் என்ன ஆனார்களோ என்னும் கவலை அவனை அவ்வப்போது வந்து முட்டியது.

நந்திவர்ம அரசருக்கும் இளவரசி ரேவா தேவிக்குமிடையே பரஸ்பரம் இதய ஒற்றுமை ஏற்பட்டிருப்பதை அவன் அறிவான். இருவர் மனம் ஒத்துப் போய் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதில் சந்திரமதி பெரும் பங்கு எடுத்துக் கொண்டதையும் ரேவா தேவியும் ஐந்து கோயில்கள் சிற்பக்கூடம் இருக்கும் பகுதிக்கு அவ்வப்போது வருவதையும் அரசரும் இளவரசியும் அங்கே சந்தித்துப் பேசி வருவதையும் அவன் அறிந்து கொண்டான். 'காதல் வளர்க', 'அரசர் திருமணம் விரைவில் நடக்கட்டும்' என்று ஆண்டவனை வேண்டிக் கொண்டான்.

'படைத் தலைவருக்கு என் நிலை தெரிந்தால் எவ்வளவு சங்கடப்படுவார். ஓய்வுக்காகச் சென்ற அவர் கவலைப்படா திருப்பதே நல்லது' என எண்ணினான். ஆனால் நாட்டின் நலனைச் சதா நாடும் உதயசந்திரனுக்கு ஓய்வோ - அமைதியோ ஏது?

காஞ்சி அரண்மனையில் முக்கிய ஆலோசனைக்காக இரண்யவர்மனும், உதயசந்திரனும், நந்திவர்மனும் கூடியிருந்தனர். கோட்டத்துத் தலைவர்களும் இன்னும் சில நாழிகைக்குள் வந்து விடுவர்.

“குணதேவனுக்கு உடல்நிலை எப்படியிருக்கிறது?” என்று இரண்யவர்மர் கேட்டார்.

“இப்போது கலலையில்லை. கத்தி அதிக ஆழம் பாயாவிட்டாலும் விஷம் தோய்க்கப்பட்டிருந்ததால் சிறிது ஆபத்து



இருந்தது. ஜவ்வாது மலைக் காட்டிலின்று கொண்டு வரப்பட்ட பச்சிலை விஷத்தை முறித்துவிட்டது” என்றான் உதயசந்திரன்.

“குணதேவன் மீது குறி வைப்பானேன்?” என்று இரண்யவர்மர் வினவினார்.

“குணதேவனன்று கத்தி வீசியவனுக்குக் குறி, அரசர் நந்திவர்மன் அங்கு நின்றிருக்கிறார் என்பதை உணர வேண்டும். கத்தி வீசியவன் பாண்டி நாட்டு ஒற்றன் என்பது தெரிய வந்திருக்கிறது” என்று உதயசந்திரன் கூறவும் இரண்யவர்மர் கண்களை மூடிக் கொண்டு எங்கோ யோசனை செய்தவண்ணம் கேட்டார்.

“அப்போது அரசர் செய்திருக்கும் முடிவு மாற்ற முடியாததுதானே? எப்பொழுது இங்கிருந்து கிளம்புகிறார்?” என்று உதயசந்திரன், நந்திவர்மனை நோக்கிக் கேட்டான்.

“ஆமாம்; திருமங்கை மன்னர் அடுத்த பௌர்ணமியன்று திருக்குடந்தை நகருக்கு விஜயம் செய்கிறாராம். புதிய நகரொன்றைத் திருக்குடந்தை அருகே நிர்மாணித்து அங்கு ஒரு விண்ணகரம் அமைக்கும்படி அவர் கட்டளை. இங்கிருந்து சிற்பிகளையும் மற்றும் பணியாட்களையும் புறப்பட்டுச் செல்ல உத்தரவிட்டு விட்டேன். அழகிய விண்ணகரம் ஒன்று அங்கெழுப்ப வேண்டும். கோயிலை மையமாகக் கொண்டு நகரம் அமைய வேண்டும். நகரைச் சுற்றிக் காஞ்சியைப் போன்ற கோட்டை. தந்தை காணும் கனவை நனவாக்க விரும்புகிறேன். காவிரிக்கரையில் காஞ்சி போன்ற நகரை அமைக்க ஆசைப்படுகிறேன்.”

நந்திவர்மன் இவற்றைக் கூறி வரும்போது அவர் முகத்தில் பெருமித உணர்ச்சி பரவியது.

இரண்யவர்மன் இப்போது கண்களை மூடியவாறு பேசினார்: “என் திட்டப்படி இதுவரை எல்லாம் நடந்திருக்கிறது. உதயசந்திரா! இன்னும் ஒன்று - காவிரிக் கரையில் வளம் நிறைந்த வயல் சூழ்ந்த இயற்கை எழில் நடுவே நகரத்தை நிர்மாணிக்க வேண்டும். இராட்டிரகூட மன்னரும் திருமங்கை மன்னருடன் செல்ல

ஆசைப்படுகிறார். அவருடைய கட்டளைப்படி இராட்டிரகூட நாட்டு இளவரசியின் திருமணத்தை விரைவில் நிறைவேற்றி விட வேண்டும். உன் எண்ணமும் அதுதான் என்பதை முன்னரே கூறியிருக்கிறார். திருமணத்தை முடித்து விட்டுத் தென்னாட்டுத் தலங்களைக் காணச் செல்லலாம் என்பது என் எண்ணம்."

உதயசந்திரன் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு, "திட்டமிட்ட யோசனைதான். நகர நிர்மாணம் அவசியமே. அதற்கு எல்லாம் முன்னர் திருமணம் நிகழட்டும். வைரமேகன் எங்குத் தங்கியிருக்கிறார்? அவரை நான் காண வேண்டும். அரசே! சாளுக்கியர்கள் படை திரட்டுகிறார்கள் என்ற செய்தியைத் தாங்கள் அறிந்திருக்கலாம். அவர்கள் படை கிருஷ்ணா நதி வரையிலும் வர விடக் கூடாது. வட மேற்கிலிருந்து இராட்டிரகூடர்களும் தெற்கே இருந்து நம் படைகளும் கிடுக்கிபோல் தாக்கி அவர்கள் எண்ணத்தை முறியடிக்க வேண்டும். இந்தச் சமயத்தே அரசர் தெற்கே செல்வது அவ்வளவு சிறப்பானதன்று என்பது என் கருத்து."

உதயசந்திரன் கூறியதை இரண்யவர்மனும், நந்திவர்மனும் ஒரே சமயத்தில் மறுத்தனர்.

"உதயசந்திரா! சாளுக்கியர் படை திரட்டும் அபாயம் இன்று நேற்றன்று; எத்தனையோ ஆண்டுகளாக இருக்கிறது. அவர்கள் படை திரட்டுவது இராட்டிரகூடர்களைத் தாக்க இருக்கலாம். அல்லது வேறு எதற்காகவாவது இருக்கலாம். திட்டமாக நமது ஒற்றர்கள் அதைக் கூறவில்லை. கோயில் திருப்பணிகள் எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் தொடர்ந்து நடக்கின்றவோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. காஞ்சி நகரத்திலுள்ள வைகுண்டநாதர் விண்ணகரத்தைக் கைலாயநாதர் கோயிலைப் போன்று புதுப்பிக்குமாறு திருமங்கை மன்னர் கட்டளையிட்டிருக்கிறார். சிற்ப வேலைகள் செய்யவும் பாறைகள் கொண்டு வரவும் அங்கே ஆயிரம் பேர் தேவை. மீதிக்கு அங்கிருந்தே ஆட்களைத் தேடிப் பெறலாம். நகர நிர்மாணம் இன்னும் இரு தினங்களில் முடிய வேண்டும். நந்திவர்மனும் ரேவாதேவியும் நந்திபுரத்து அரண்மனையில் சில காலம் வாழ்ந்து



முத்தரையர்களோடும் சோழக் குறுநில மன்னர்களோடும் நெருங்கிப் பழக வேண்டும். அதுதான் முக்கியம் உதயசந்திரா! நம்மை எதிர்க்கவிருக்கும் எதிரிகளைத் தாக்க அவர்கள் ஒத்துழைப்பு நமக்கு மிகவும் தேவை."

இரண்யவர்மர் திட்டவட்டமாகப் பேசியதைக் கேட்டு உதயசந்திரன் ஏதும் மறுமொழி பகரவில்லை.

ஏதோ பேசத் தொடங்கும்போது கோட்டத் தலைவர்கள் பலர் கூட்டங் கூட்டமாக வரும் அரவம் கேட்டது. அரசனின் திருமண விஷயம் அன்று முடிவாக இருந்தது.

பல்லவ சாம்ராஜ்யத்தில் நடக்கும் ஆட்சி முறை அமைப்பைக் கண்டு வைரமேகனே வியந்தான். முக்கியப் பிரச்னைகளில் கோட்டத் தலைவர்கள் கலந்தாலோசிக்கப்படுவதும் அவர்கள் கருத்துப்படி அரசர் நடப்பதும் நாடு பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் பொறுப்பு கோட்டத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படுவதும், படையெடுப்பு போன்ற காலத்தைத் தவிர போர் வீரர்கள் மற்றப்போது பயிர்த் தொழிலிலும், கோயில் திருப்பணிகளிலும் ஏரி, ஆறு நிர்மாண வேலைகளிலும் நெசவுத் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர் என்பதையும் அறிந்தபோது அவர் ஆச்சர்யப்பட்டார்.

பல்லவ அரசரின் திருமண விஷயமும் கோட்டத் தலைவர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியதொன்று என்பதை அவர் அறியும்போது வியப்பு இன்னும் அதிகமாகியது.

கோட்டத் தலைவர்களும், அரசரும், படைத்தலைவரும் கலந்து பல விஷயங்களைப் பேசினர். கோட்டத் தலைவர்கள் மனம் பெரிதும் மாறியிருக்கிறதென்பது தெள்ளெனத் தெரிந்தது. அவர்களிடையே பல விஷயங்களில் பலவிதக் கருத்து வேற்றுமையிருந்தது. இராட்டிரகூடர்களை வடபெண்ணையைத் தாண்டிவர அனுமதித்தது குறித்துப் புழல் கோட்டத் தலைவர் காரசாரமாகப் பேசினார்.

இதில் உதயசந்திரன் குறுக்கிட்டான்: "புழல் கோட்டத்தாரே! உங்களுக்கு நன்மைதானே, இரட்டர்கள் காஞ்சியை நோக்கி

வருவது?" என்று குறும்புத்தனம் மிளிரக் கேட்டவுடன் எல்லாக் கோட்டத் தலைவர்களும் புழல் கோட்டத்தாரைத் திரும்பிப் பார்த்தனர். களத்தூர்க் கோட்டத்தாருக்கு உதயசந்திரனின் சொல்லின் உள் அர்த்தம் புரிந்தது. புழல் கோட்டத்தார் சித்திரமாயனை ஆதரிப்பவர் என்பது அவருக்குத் தெரியும்.

புழல் கோட்டத்தார் சீறினார். உதயசந்திரன் மீது ஆத்திரத்தைக் கக்கினார். இந்த நாட்டில் அரச பதவியைப் பெறச் சூழ்ச்சி செய்கிறார் என அவதூறு பேசினார். இதைக் கூறும்போது சபையில் சலசலப்பு எழுந்தது. புழல் கோட்டத்தாரின் கூற்றை யாவரும் எதிர்த்தனர். சபையே தாக்கும்போது புழல் கோட்டத்தாரால் ஏதும் மறுமொழி பேச முடியவில்லை. அவர் கோபங் கொண்டு சபையை விட்டு வெளியேறி விட்டார்.

நந்திவர்மன் காவிரிக் கரையில் புது நகரம் ஒன்றை நிர்மாணிக்கும் விஷயம் குறித்துக் கோட்டத் தலைவர்களிடையே எண்ண வித்தியாசம் எழுந்தது. இராட்டிரகூட இளவரசியை மணப்பது குறித்து அவரவர் இதயத்தில் சிறிது வேற்றுமை எண்ணம் இருப்பினும் முதியவர் இரண்யவர்மர் சபையில் கம்பீரமாக வீற்றிருக்கும்போது அது குறித்து மாற்றுக் கருத்தை வெளியிட இயலவில்லை. எனினும் ஆட்பலம், பொருட்பலம் கொண்டு தெற்கே வெகு தொலைவில் நகரமும், கோயிலும், கோட்டையும் நிர்மாணிப்பதில் தங்கள் சம்மதமின்மையைத் தெரிவித்தனர்.

குன்றத்தூர்க் கோட்டத் தலைவர் எழுந்து, "படைத்தலைவர் கூறியது போன்று சாளுக்கியர்கள் படையெடுப்பை எதிர்த்து நிற்க நாம் தயாராக வேண்டும். கடந்த கால சரித்திரத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். பல்லவ நாட்டிற்குப் பலமுறை சாளுக்கியர்களின் அபாயம் நேர்ந்திருக்கிறது. சத்யாச்ரய புலகேசி தொண்டை மண்டலத்தைக் கொளுத்தியும், அழித்தும், பாழ்படுத்தியும் சென்றதற்குப் பிறகு தொடர்ந்து சாளுக்கிய மன்னர்கள் ஒவ்வொருவரும் காஞ்சி நகரைக் கைப்பற்றுவதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டனர். கைலாசநாதர் ஆலயத்திலிருந்து கொள்ளையடித்துச் சென்ற பொருள்களை நாம் திரும்பவும் மீட்டு



வரவில்லை. என் சிற்றறிவுக்கு எட்டியவரையில் காஞ்சியில் திருப்பணியை நிறைவேற்றத் தொடங்கி நம் கவனத்தை தலைநகரிலேயே இருக்க விடுவோம்" என்றார்.

நந்திவர்மன் முகத்தில் கோபக்குறி படர்ந்தது. அது ஓரளவுக்கு உதயசந்திரன் பக்கமும் சென்றது. "கோட்டத் தலைவர்களே! தங்களுடைய யோசனைகளுக்கு என் நன்றி. திருமங்கை மன்னரின் கட்டளையை என்னால் மீற முடியாது. அதையும் விட தெற்கே பல்லவப் படை பலம் இன்னும் அதிக அளவில் இருக்க வேண்டும். பாண்டியர்களின் படையெடுப்பு அபாயம் குறித்து உதயசந்திரனே குறிப்பிட்டிருக்கிறார். எல்லையில் பாண்டியர் தொல்லை ஏற்படும்போது காஞ்சியில் பெரும் படையிருந்து, பேசிக் கொண்டே இருப்பது பயன் தராது. அதனால் பெரும் அரண் ஒன்று தெற்கே அமைப்போம். சாளுக்கியர்கள் படையெடுப்பு அபாயம் இப்போது நேரிடாது என்பது எனக்குத் தெரியும். அதற்குள் சித்திரமாயன் பாண்டியரைத் தூண்டி விரைந்து படையெடுத்து வரச் செய்வான்.

"அதனால் தாங்கள் எப்படி எண்ணினும், என்ன கூறினும் நான் வகுத்த திட்டத்தை நிறைவேற்றாமல் விடேன்" என்று கூறினான் நந்திவர்மன்.

அரசரின் பேச்சைத் தொடர்ந்து கோட்டத் தலைவர்கள் பலர் பேசத் தொடங்கினர். நந்திவர்மனின் திருமணம் நடக்கும் இடத்தைப் பற்றியும் பேச்சு எழுந்தது.

இதுகாறும் மௌனமாயிருந்த இரண்யவர்மர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசத் தொடங்கியபோது சபையில் அமைதி நிலவியது. நாட்டின் பேரன்பிற்குப் பாத்திரமான இரண்யவர்மரின் சொல்லில் இருக்கும் காந்த சக்தியை எல்லாரும் அறிவர். இரண்யவர்மரின் மூதாதையர்கள் அனைவரும் பல்லவ சாம்ராஜ்யம் சிறந்து விளங்க அவ்வப்போது கருத்து நல்கி, ஆபத்தான சமயங்களில் ஆலோசனை கூறி வந்திருக்கிறார்கள். பரமேஸ்வர வர்மர் இறந்தவுடன் இரண்யவர்மரே இந்த நாட்டின் அரசராக வேண்டும் என்று எல்லாரும் விரும்பினர். முதிய

பருவத்தில் ஆட்சிப் பொறுப்பு வேண்டாம் என்று மறுத்துத் தன் இளைய மகனை ஆட்சியில் அமர்த்தச் சம்மதித்தார். ஆட்சி நடக்க அவ்வப்போது யோசனை கூறிவந்த இரண்யவர்மர் இப்போது என்ன கூறுகிறார் எனக் கவனிக்க எல்லாரும் அவரையே நோக்கினர்.

"என் அன்பார்ந்த மக்களே!" என்று பேச்சைத் தொடங்கிய அவர் குரலில் கம்பீரம் இருந்தது.

"உங்களுடைய கருத்துரைகள் யாவும் அரசியல் அறிவில் நீங்கள் சிறந்து விளங்குகிறீர்கள் என்பதைப் புலப்படுத்துகின்றன. நீங்கள் கூறுவது ஒவ்வொன்றையும் நான் கவனமாகக் கேட்டு வந்தேன். படையெடுப்பு அபாயம் எந்தக் காலத்தில்தான் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு இல்லை? படையெடுப்பு அபாயம் மட்டுமா? பெரும் பஞ்சம் இராஜசிம்மரின் காலத்தில் வரவில்லையா? அப்போது பெரும் படையெடுப்புகள் நேரவில்லையா? மக்கள் இந்த நகரத்தை விட்டே ஓடிச் செல்லவில்லையா? அப்போது அரசர் என்ன செய்தார்? யுத்த பயத்தை மட்டும் எண்ணிச் சும்மாயிருக்கவில்லை. அவர் காலத்தில்தானே கைலாசநாதர் கோயிலும் ஏற்பட்டது. அன்பர்களே! யுத்த அபாயத்தை நீக்க நமக்குக் கிடைத்துள்ள அருமைத் தளபதி உதயசந்திரன் இருக்கிறார்; நீங்கள் இருக்கிறீர்கள். பல்லவ சிற்பிகளின் திறமை தென்னாட்டில் பிரகாசிக்க வேண்டும். பல்லவர்களின் பெயர் காலாகாலத்துக்கு அழியாமல் என்றும் விளங்க வேண்டும்.

"அதற்கான என் யோசனைகள்... உங்கள் அன்புக்குரிய அரசர் நந்திவர்மன் அற்புதச் செயல்கள் சில செய்ய வேண்டும். சைவ - வைணவ ஒற்றுமையை வளர்க்க வேண்டும். காஞ்சியிலே கைலாசநாதர் கோயில் போன்று, விஷ்ணுவுக்கு வைகுண்டப் பொருள் கோயிலில், தில்லையிலே கூத்தரசருடன் கோவிந்தராசர் வீற்றிருக்க ஒரு கோயில், திருக்குடந்தைக்கருகே. கோயில் மட்டுமன்று - கோட்டை நகரம். இவற்றைச் செய்வதால் பல்லவ சாம்ராஜ்யத்தின் பெயர் காலாகாலத்திற்கு அழியாது. அடுத்த படியாக, உங்கள் அரசரின் திருமணத்தைப் புதிதாக நிர்மாணிக்கப் போகும் நகரிலே நடத்த வேண்டும் என்பது என் எண்ணம்.



திருமங்கை மன்னர் முன்னிலையில் நடைபெறும் என்று கூறுகிறேன். எல்லா அற்புத விழாக்களும், அருங்கலைகளும், அதிகாரங்களும், ஆட்சி அலுவலகங்களும் ஒரே இடத்தில் குழுமியிருப்பதிலோ, நடப்பதிலோ நாட்டு மக்கள் பரவி வாழ்வதற்குப் பாதகம் ஏற்படும். ஒரே இடத்தில்தான் மக்கள் நெரிசல் அதிகமாகும். அதனால் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன். மனப்பூர்வமான உங்கள் சம்மதத்தைத் தெரிவியுங்கள். அரசர் தலைநகரில் இல்லாதபோது படைத் தலைவருக்கு உங்கள் பக்க பலமளித்து நாட்டின் நலம் விளங்க வழி செய்யுங்கள்" என்றார்.

அவரது சுருக்கமான, ஆனால் மனத்தை மாற்றத்தக்க பேச்சைக் கேட்டுக் கோட்டத் தலைவர்கள் மனம் ஓரளவுக்கு மாறித்தான் இருக்க வேண்டும். உதயசந்திரன் ஏதோ கூற எழுந்தான். அவனை இரண்யவர்மர் கையமர்த்தி, "அன்பர்களே! உங்களுக்கு என் சொல் திருப்தி அளித்திருக்குமென நம்புகிறேன். உங்கள் படைத் தலைவரும் முதலில் உங்களைப் போன்ற கருத்துடையவராகத்தானிருந்தார். ஆனால், இப்போது அவர் கருத்து மாறியிருக்கும். தளபதி இங்கிருந்து ஆற்ற வேண்டிய செயல்கள் பல இருக்கின்றன. காடக முத்தரையரைக் கொன்றவரைக் கண்டுபிடிக்க வேண்டும். நாடு முழுவதும் அயல்நாட்டு ஒற்றர்கள் நிறைந்திருக்கின்றனர். அவர்களது திட்டம் செயலற்றுப் போகச் செய்ய வேண்டும். அதற்கும் மேலாக இங்கு நிர்மாணிக்கப்பட இருக்கும் வைகுந்தப் பெருமாள் கோயிலின் சிற்ப வேலைகளைக் கவனிக்க வேண்டும். அவருக்கு வேண்டிய ஒத்துழைப்பை நீங்கள் நல்க வேண்டும்" என்றார்.

கோட்டத் தலைவர்கள் மறுமொழி பேசவில்லை. பேசுவதால் பலனில்லை என்பதைவிட மதிப்பு வாய்ந்த இரண்யவர்மரை எதிர்த்துப் பேசுவதில் பலனில்லை என்றே எண்ணினர்.

சபை கலைந்தது.

**கா**ஞ்சி நகரத்தை விட்டு நந்திவர்மனும், இரண்யவர்மனும், இராட்டிரகூட அரசர் வைரமேகனும், அவர் மகள் ரேவாதேவியும்,

அவளுக்கு உதவ தோழியர் குழாமும், அதில் முக்கியமாக சந்திரமதியும், மேல் ஓலை எழுத சுந்தரனும், ஏராளமான சிற்பிகளும் பணியாட்களும் காஞ்சியினின்று திருக்குடந்தை செல்லும் பாதையிலே குதூகலமாகச் சென்றனர். வழி நெடுக ஊரிலுள்ள மக்கள் பல்லவ சாம்ராஜ்ய இளம் அரசரைக் காண ஏராளமாகக் கூடி மலர் தூவி வாழ்த்துக் கோஷம் பொழிந்து வரவேற்றனர். சிற்றூரும் பேரூரும் திருவிழா போல் காட்சியளித்தன. தன் மகிழ்ச்சியைத் தெரிவிக்க ஆங்காங்கு நந்திவர்மன் கோயில்களுக்குத் தானங்கள் வழங்கினான். தில்லைச் சிற்றம்பலத்தில் தங்கியபோது கூத்தரசப் பெருமானின் திருக்கோலம் கண்டு, அந்தச் சந்நிதியிலே சுந்தரன் அமுத தாரையாகப் பொழிந்த தேவாரத் திருப்பாடல் கேட்டு, கூத்தரசர் எதிரே கோவிந்தராசருக்குச் சந்நிதி ஒன்று அமைக்கத் திட்டமிட்டுச் சில சிற்பிகளை அங்கே தங்கச் செய்தான். மற்றவர்களை விரைந்து திருக்குடந்தை சென்று அங்கிருந்து சிறிது தொலைவில் தங்க இடம் தேர்ந்தெடுத்துக் கோட்டையை அமைக்கும் பணியை மேற்கொள்ளச் செய்தான்.

நந்திவர்மன் காஞ்சியை விட்டு வெகு தொலைவு சென்றிருந்த அந்தச் சமயத்தில் உதயசந்திரன் சுறுசுறுப்பாக வேலைகளை மேற்கொண்டானாயினும் அவனது மனத்தின் அடித்தளத்தில் வேதனையொன்று இல்லாமலில்லை. அவன் வலக் கை போன்ற குணதேவன் உடல் குணமடைந்தும் உள்ளம் சோர்வுற்றுக் காணப்பட்டான். குமுதவல்லியை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற பெரும் கவலை அவனை வாட்டியது. மரக்கலத்தில் அவளை ஏற்றிச் சென்றனர் எனும் செய்தி அவனுக்குத் தெரிந்திருந்தால் ஒருவேளை அவனுக்குப் பித்தே பிடித்திருக்குமோ?

இத்தகைய வேதனை பொதிந்த காலத்தே, வானத்தே மதி தோன்றா ஒருநாள் இரவு காஞ்சி கடிகையின் வெளி முற்றத்தில் இருவர் பேசிக் கொண்டனர். அவர்களைக் காணும்போது வெளிநாட்டவர் என்பது வெளிப்படையாகத் தெரியாவிடினும், கூர்ந்து நோக்குவோர்க்கு அது தெரியவரும்.



"தங்களை இங்கேயே சந்தித்ததில் எனக்குப் பெருமகிழ்ச்சி" என்றான் முதல் யாத்ரிகர். அவன் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவன் என்று அவன் முதலில் காட்டிய பன்றி உருவ முத்திரை மோதிரத்தினின்று தெரியவந்தது.

"ஆமாம், ஆமாம். தங்களைச் சந்தித்ததில் எனக்கும் பெருமகிழ்ச்சி. அப்பப்பா; எவ்வளவு கவனத்தோடு இந்தக் காஞ்சியில் இரண்டு நாள்களாக நடமாட வேண்டியிருக்கிறது. பாண்டிய நாட்டினின்று பல காத தூரம் வந்தது கூட களைப்பைக் கொடுக்கவில்லை; இரண்டு நாள்கள் யம வேதனையாகவன்றோ கழிந்தன! நான் கொண்டு வந்திருக்கும் ஓலை பல்லவ வீரர் எவரிடமாவது சிக்கிவிட்டால் அவ்வளவுதான். மாபெரும் திட்டங்கள் மண்ணாக வேண்டியதுதான்."

"ஆமாம், ஆமாம். இந்த நாட்டில் பல நாள்களிருந்த கருங்கண்ணன் எனக்குத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். ஓலை இருப்பதாகவே எவரிடமும் கூறக் கூடாது என்று கூறியிருக்கிறார். மீன் உருவம் தாங்கிய முத்திரை மோதிரம் வைத்திருப்பவரைக் கண்டால் இதைக் கொடுக்குமாறு கூறியிருக்கிறார்" என்று தன் கையிலிருந்த ஓலையை நீட்டினான்.

பல நாழிகை நேரம் இருவரும் தத்தமது நாட்டைப் பற்றியும் வளப்பத்தைப் பற்றியும் பேசிக் கொண்டனர். பிறகு விடை பெற்றுப் பிரிந்தனர்.

சாளுக்கிய ஒற்றன் குதிரையில் பறந்த பிறகு, பாண்டிய ஒற்றன் அருகேயிருந்த அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டு ஓலையைப் பிரித்துப் பார்த்தான்.

"பல்லவ குலத்தின் வருங்கால அரசர் கந்தசிஷ்ய சித்திரமாய மகாராசருக்கு, கருங்கண்ணன் அடிபணிந்து எழுதிக் கொள்வது. தாங்கள் பல்லவ நாட்டினின்று தப்பிச் சென்ற பிறகு நானும் மிகவும் கஷ்டப்பட்டு வாதாபியை அடைந்தேன். அரசரைக் கண்டேன். சாளுக்கிய இளவரசருக்குத் தான் உடனே பல்லவ சாம்ராஜ்யத்தின் பேரில் படையெடுக்க ஆவல். அவரிடம் எல்லா ரகசியப் பாதையையும் கூறியிருக்கிறேன். முக்கியமாகக்

கைலாசநாதர் ஆலயத்து அணிகலன்களும், ஏராள வைர வைடூரியங்களும் சேகரித்து வைத்திருக்கும் பாதாள அறைக்குச் செல்லும் ரகசியப் பாதையைக் கூறியிருக்கிறேன். சாளுக்கியப் படையெடுப்பின்போது தாங்களும் பாண்டியப் படைகளும் தெற்கிலிருந்து வாருங்கள். கங்க நாட்டரசருக்குச் செய்தி அனுப்பினீர்களா? மறுமொழி ஓலை பெறக் காலம் போதாது. இந்த ஓலை கிடைக்கும் பன்னிரண்டாவது பௌர்ணமியன்று சாளுக்கியப் படைகள் கிருஷ்ணா நதியைக் கடக்கும் - கருங்கண்ணன்."

இந்த ஓலையைப் பாண்டிய நாட்டு ஒற்றன் படிக்கும்போது அவனது முகத்தில் கவலைக் குறிகள் படர்ந்தன. உடல் படபடத்தது. ஏனோ அவன் ஏதோ ஆபத்தை உணர்ந்தவன் போல் வெளியே விரைந்தான்.

## 28. சிதம்பர ரகசியம்

பாண்டிய நாட்டு ஒற்றன் வடிவில் வந்த குணதேவன் அந்த ஓலையை எடுத்துக் கொண்டு உதயசந்திரனிடம் விரைந்தான்.

"ஐயா, ஐயா, ஆபத்து! சாளுக்கிய ஒற்றனிடமிருந்து தந்திரமாக ஓலையைப் பறித்தேன். அந்த ஓலையிலுள்ள செய்தி இந்த நாட்டிற்குப் பெரும் ஆபத்தைக் கொண்டு வருகிறது" என்று துடிதுடிக்கும் உள்ளத்துடன் கூறினான்.

உதயசந்திரன் மௌனமாயிருந்தான். பிறகு, "சாளுக்கிய ஒற்றனிடம் நம் ஓலையைக் கொடுத்து விட்டாயா?" என்று கேட்டான்.

"கொடுத்து விட்டேன், ஐயா."



"கொடுத்து விட்டாயா? அவன் சென்றவுடனே அவனைச் சிறைபடுத்த நடவடிக்கை எடுத்தாயா?"

குணதேவன் திகைத்தான். சாளுக்கிய ஒற்றனிடமிருந்து ஓலையைப் பெற்ற அவசரத்தில் அவன் சென்ற பிறகு அவனைப் பிடிக்க வேண்டும் என்பதை மறந்தான்.

"அதுதான் போகட்டும். சாளுக்கியத் தூதனிடம் இடுப்பிலிருந்த ஓலையைக் கொடுத்தாயா? மறைத்து வைத்திருந்த ஓலையைக் கொடுத்தாயா?"

குணதேவன் இப்போது மீண்டும் திடுக்கிட்டான். பாண்டிய தூதனிடமிருந்து கைப்பற்றிய உண்மை ஓலை அவனிடம் இருந்தது. அதைக் கொடுக்காமல் வேறு மாற்று ஓலையைக் கொடுக்குமாறு உதயசந்திரன் கட்டளை. குணதேவன் நிஜ ஓலையைக் கொடுத்து விட்டான்.

"ஐயோ! நிஜ ஓலையைக் கொடுத்து விட்டேனே. அந்த ஒற்றன் வெகுதொலைவு சென்றிருக்க மாட்டான். இதோ ஒரு நொடியில் அவனைப் பிடித்து வருகிறேன்" என்று கிளம்பினான்.

உதயசந்திரன் குணதேவனைக் கையமர்த்தி, "குணதேவா விரைவில் குமுதவல்லியைக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்கிறேன். உன் திருமணத்தையும் நந்திபுரத்தில் நடத்த ஏற்பாடு செய்கிறேன். சாளுக்கிய ஒற்றனிடம் நீ கொடுத்த ஓலை இதோ. சாளுக்கிய ஒற்றன் எப்போதோ நம் வீரர்களால் பிடிக்கப்பட்டு சிறையிலிருக்கிறான்" என்றான்.

குணதேவன் திடுக்கிட்டான். "ஐயா, அப்படியானால் சாளுக்கிய ஒற்றனாக வந்தவர் தாங்..." என்று கூறவும் உதயசந்திரன் "உஸ்" என்று கையமர்த்தி, "உடனே நீ இங்கிருந்து புறப்பட வேண்டும். சாளுக்கிய ஒற்றன் வேடம் பூண்டு, பாண்டிய நாட்டிற்குச் செல்ல வேண்டும். இந்த ஓலையைக் கொடுக்க வேண்டும் சித்திரமாயனிடம்" என்றான்.

உதயசந்திரன் உத்தரவு கேட்டுக் குணதேவன் திடுக்கிட்டான்.

"நானா போக வேண்டும்?" என்று கேட்டான்.

"ஆமாம், நீயே தான். இந்த நாட்டிற்கு ஒரு நல்ல காரியம் செய்வதோடு உனக்கு ஒரு நல்ல காரியம் காத்திருக்கிறது. உடனே புறப்படு மதுரைக்கு" என்றான்.

குணதேவனால் ஏதும் பேச முடியவில்லை. அந்த உண்மை வீரன் கண்களிலும் நீர் தளும்பியது. குமுதவல்லியின் முகம் அவன் கண்ணீர்த் திரையையும் தாண்டி வந்து நின்றது.

காஞ்சியை விட்டுப் புறப்படும்போது குதிரையைத் தட்டி விரட்டாது மெதுவாகச் சென்று கொண்டிருந்த குணதேவன் வெயில் ஏற ஏற, தன் வேகத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக கூட்டினான். குமுதவல்லியின் நினைவு அவனை வந்து இடையே சூழ்ந்தது. அரசியலிலும் ஆட்சி முறையிலும் நேராகவோ, மறைமுகமாகவோ தொடர்பற்ற கந்ததேவனையும் அவரது மகள் குமுதவல்லியையும் விரோதிகள் கவர்ந்து சென்றது அவனுக்கு வியப்பை விளைவித்தது. சித்திரமாயனை ஆதரிப்பவருள் கருங்கண்ணனைத் தவிர மற்றையோர் காஞ்சி நகரச் சிறையில் தப்பிப் போக இயலாதவாறு கிடக்கும்போது அவர்களைக் கவர்ந்து சென்றிருப்பவர் யாராயிருக்கலாம் எனச் சிந்தனை செய்தான். இதற்கு முன்பு பாண்டி நாடு சென்று அவனுக்குப் பழக்கமில்லை. வழியும் புதிது. எனினும் பொறுப்பு மிகுந்த பணியை ஏற்றிருப்பதை நினைக்கும்போது நெடுந்தூரப் புது வழியும் நெஞ்சில் புகுந்த குமுதவல்லியின் காதல் விழியும் அவனைக் கலக்கவில்லை.

தில்லை நகரை அவன் வந்தடையும்போது பொழுது சாய்ந்துவிட்டது. அவன் திட்டமிட்டபடியே இதுவரை பயணம் இடையூறு ஏதுமின்றி நடந்துவிட்டது. தன்மீது அமர்ந்திருப்பவரின் மன நிலையை அறிந்து அந்த அசுவமும் தன் களைப்பைச் சிறிதும் புலப்படுத்தாமல் விரைந்தது.

திருச்சிற்றம்பலத்தின் பெருமையைப் பற்றிக் குணதேவன் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறான். அம்பலவாணரின் அழகிய சிலையைக் கண்டவர் விவரிக்கும்போது அவன் மனத்துள் வியப்பான். காஞ்சியிலும் அவன் கண்டிருக்கும் பல நடராஜர்



வடிவங்களைவிட மிக அற்புதமான சிலை தில்லையில் இருக்கிறது என்றும், அந்த அழகிய வடிவம் ஐந்தொழில்களை உணர்த்துகின்றனவென்றும் குணதேவன் கேள்விப்பட்டிருக்கிறான்.

சிவநேசச் செல்வர்கள் பலரால் சிறப்பித்துப் பாடப்பெற்ற அந்தக் கோயிலில் விஷ்ணுவுக்கும் தனிச் சந்நிதி ஏற்படுத்த நந்திவர்ம அரசர் கட்டளையிட்டு அந்தப் பணி வெகு வேகமாக நடந்து வருகிறதென்றும் அவன் கேள்விப்பட்டிருக்கிறான். வேத தர்மத்தின் இரு கண்களான சைவ - வைணவ சமயங்களின் இணக்கமான ஒற்றுமையை இன்னும் பலப்படுத்த நடராசர் இருக்குமிடத்திலேயே கோவிந்தராசருக்கு அழகிய சந்நிதி அமைக்கும் எண்ணம் மன்னருக்கு ஏற்பட்டதை நினைத்துக் குணதேவன் மகிழ்ந்தான்.

மாமல்லபுரத்தில் இராஜசிம்ம சக்ரவர்த்தி நெற்றிக் கண்ணனுக்கும் நெடியோனுக்கும் ஓரிடத்திலேயே கோயில் அமைத்துக் கடலிலிருந்து வந்திறங்கும் உலக மக்களைக் கைகோத்து வரவேற்கும் சிறப்பான செய்கையைப் போன்று நந்திவர்மனும் செய்த செயலை - ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு அழியாத இந்த அற்புதச் செயலைக் குணதேவன் நினைக்கும்போது 'கலை உள்ளங்கொண்ட அரசருக்கு இது போன்று போரும், பூசலும் ஏற்பட வேண்டுமா?' என்று தோன்றியது. 'கடவுள் பக்தியும் அதன் விளைவாகக் கலை அறிவும் மிகுந்திருக்கும் நாடு போரைப் பற்றி எண்ணாதே! பல்லவ நாட்டில் பக்திச் சுவைக்கும் கலை உணர்ச்சிக்கும் குறைவில்லாதபோது கடந்த பல ஆண்டுகளாகப் போரைப் பற்றி நினைவு மிகுந்திருக்கக் காரணம் என்ன?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். உடனே அதற்கு விடை கூற அவனால் இயலவில்லை. அதைப் பற்றிச் சிந்திக்கவும் அவன் மூளை மறுத்து விட்டது. வயிறு செய்த உள்நாட்டுப் புரட்சியால் அவனால் இனி வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் நினைக்கவே முடியவில்லை. குதிரையும் குணதேவன் நிலைமை உணர்ந்து கனைத்தது.

சிற்றம்பலத்தை அடைந்து ஆண்டவனைக் கண்டு களிக்கலாம்; களைப்பு நீங்கிய பிறகு பொழுது புலர்ந்ததும் சிறிது நேரம்

கோயிலைக் கண்டு மேலே பயணத்தைத் தொடங்கலாம் என்று முடிவு செய்தான். அவன் சிதம்பரத்திற்கு எப்போதாவது வர நேரிட்டால் தன் இல்லத்திற்கு வர மறந்து விடாதே என்று சிவகாமி ஆச்சி குணதேவனை முன்பு அழைத்திருக்கிறாள். சிவகாமி ஆச்சியின் புதல்வர்கள் பல்லவ நாட்டில் போர்க்குரல் எழும்போது வேலோடும் வாளோடும் அமர்க்களம் புகுந்து எதிரிகள் நடுநடுங்க வீரப் போர் புரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய முப்பாட்டனார் மணிமங்கலப் போர்க்களத்தில் வாதாபிப் படைகளை எதிர்த்துப் போராடி வீர சொர்க்கம் எய்தியவர்.

சிவகாமி ஆச்சி தாமரைப்பாடிக்கு வந்தபோது கதை கதையாகத் தங்கள் திருக்குமாரர்களின் வீரப் பிரதாபங்களைப் பற்றிக் கூறுவாள். சிதம்பரத்தை அடுத்த அடர்ந்த காடுகளில் ஒளிந்து கொண்டு ஒரு சமயம் மக்களின் உடைமைகளைக் கொள்ளையடித்து வந்த கள்வர் கூட்டத்தைத் தன் புதல்வர்கள் வேறு எவருடைய உதவியுமின்றி ஓட்டிய பெருமையை அந்த அம்மாள் நேரம் போவது தெரியாமல் பேசுவாள்.

சிவகாமி ஆச்சி இந்த நேரத்தில் தன்னை இந்த வேடத்தில் கண்டால் ஆச்சர்யப்படுவாள் என்ற எண்ணத்துடன் அவர்கள் வீட்டைக் கேட்டறிந்து சென்றான் குணதேவன். வானத்தில் மினுக் மினுக் என விண்மீன்கள் ஒளி வீசிக் கொண்டிருந்தன. அந்த வீதியில் எங்கோ மூலையில் பெரிய அகல் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. சில வீடுகளில் வெளி மாடத்தில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் இருளை வீதியினின்று விரட்ட முயன்று கொண்டிருந்தல.

குணதேவன் ஒவ்வொரு வீடாகப் பார்த்துக் கொண்டே போய்க் கடைசியில் தனக்குத் தெரிந்த அடையாளங்களை ஒத்துப் பார்ப்பதுபோல் ஒருமுறைக்கு இருமுறை பார்த்து விட்டு நீண்ட திண்ணையும் குறுகிய வாயிற்படியும் உடைய அந்த வீட்டை அடைந்து, "அம்மா, அம்மா" என்று அழைத்தான். குதிரையும் அவனுக்கு உதவியாகக் கனைத்தது. அந்த வீதியில் மக்கள் நடமாட்டமே இல்லை. குதிரையின் குரலைக் கேட்டு அருகே வளர்ந்திருந்த பூவரச மரத்தில் தங்கியிருந்த சில பறவைகள்



சிறகைச் 'சடபுட'வென அடித்துக் கொண்டு எங்கோ பறந்து ஓடின.

கோயிலில் நடக்கும் பூஜையை அறிவிக்கும் மணியோசையும், மேளச் சப்தமும், எக்காள ஒலியும், சங்கத்தின் முழக்கமும் கேட்டன. சன்னமான குரலில் நாதஸ்வர ஓசை அந்தக் காற்றில் மிதந்து வந்து குணதேவனின் இதயத்திற்கு இன்பத்தையூட்டியது. அந்தத் தெருவிலுள்ள வீடொன்றிலிருந்து கூனிக் குறுகிய கிழவரொருவர்... கோயிலில் சுவாமி தரிசனத்திற்காகச் சென்றவரைக் குணதேவன் அணுகி சிவகாமி ஆச்சியின் வீடு அதுதானா என்பதைத் தெளிவுபடுத்திக் கொண்டான். சிவகாமி ஆச்சி இறந்து இரண்டாண்டுகள் ஆகின்றனவென்று அந்த முதியவர் போகிற போக்கில் செய்தி சொல்லிச் சென்றார். குணதேவனுக்கு அப்போதிருந்த நிலையில் உணவை விட்டுச் சற்றுக் கண்ணயர இடம் கிடைத்தால் போதுமெனத் தோன்றியது.

"ஐயா" என்று மீண்டும் கூப்பிட்டான். இருள் நிறைந்திருந்த அந்த வீட்டில் எங்கிருந்தோ மெல்லிய பேச்சொலி மட்டும் கேட்டது. வாயிற்கதவு மூடியிருப்பதை அப்போதுதான் கண்டான். மெல்லக் கதவைத் திறந்தான். மூன்று பாகங்களைக் கொண்ட அந்த வீட்டின் பின்புறத்தில் 'மினுக் மினுக்' என்ற ஒளி தெரிந்தது. விளக்கு ஒளியில் யாரோ மூன்று பேர் அமர்ந்து பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

சிவகாமி ஆச்சியின் பிள்ளைகளாக அவர்கள் இருப்பர் என்ற எண்ணத்தில் குணதேவன் அந்த இடம் நோக்கி இருளில் வெளி முற்றத்தையும் நடுக்கட்டு முற்றத்தையும் கடந்து அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்தை அடைந்தான். "ஐயா" என்ற குரல் எழுப்ப வேண்டியதுதான் பாக்கி; அவர்கள் பேச்சில் அந்தச் சமயம் அடிபட்ட செய்தி அவன் நாக்கை மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ளுமாறு செய்தது.

மூவரில் ஒருவர் சற்றே வயது அதிகமானவர். அவரை மற்றவர்கள் 'அண்ணா, அண்ணா' என்று அழைத்தனர். மற்ற

இருவரும் காளைப் பருவத்தினர். அடர்ந்த மீசையும், கூர்மையான கண்களும் தடித்த உதடுகளுமாக வீரத்தைத் தோற்றத்திலேயே கொண்டவராகத் திகழ்ந்தனர்.

"... அப்படியென்றால் அரசர் நந்திவர்மர் இனிக் காஞ்சி திரும்புவது நிச்சயமில்லை என்று சொல்லு" என்றார் முதிய பிராயத்தினர்.

"ஆமாம், ஆமாம். அரசர் பரம வைணவ பக்தராகி விட்டார். தன்னைப் பரம பாகவதன் என்று இப்போது கூறிக் கொள்கிறார். அரச பதவியைத் துறந்து திருமங்கை மன்னருடன் தலந்தோறும் தரிசிக்கச் சென்று விடலாம். திருமங்கை மன்னர் கடல் கடந்த நாடுகளுக்குச் செல்லப் போகிறாராம். அவருடன் ஒருவேளை..." என்றார் முதல் இளையவர்.

"இவர் துறப்பதென்ன! நல்ல தருணம் கிடைத்தது என்று பாண்டிய மன்னர் படையுடன் நந்திபுரக் கோட்டையை நோக்கிப் புறப்பட நாள் குறித்து விட்டாராம்" என்றார் இரண்டாமவர்.

"உனக்கு யார் சொன்னது? ஒற்றனைப் போல் இவற்றையெல்லாம் சேகரிக்கிறாயே, எப்படி?" முதியவர் சற்று அதட்டலாகவே கேட்டார்.

"ஒற்றனைப் போல் என்ன? ஒற்றனே தான்! அண்ணா, உங்களுக்கு நாட்டு நடப்பே இப்போதெல்லாம் தெரியவில்லையா? புழலூர்க் கோட்டத்தார் ஊர் ஊராகப் போய்ப் பிரசாரம் செய்து விட்டு வருகிறாரே. ஆங்காங்கே தன் பணியைச் செய்ய நல்ல துடிப்புள்ள இளைஞர்களாகத் திரட்டி வருகிறார்."

"புழலூரார் என்ன சொல்கிறார்?"

"அரசருக்கு எதிராகக் கலகம் செய்யச் சொல்கிறார். போர் விரைவில் வரும் என்றும் போரிலே அரசருக்கு உதவ யாரும் சேரக் கூடாதென்றும் கூறுகிறார்."

"புழல் கோட்டத்தாருக்குத் திடீரென என்ன வந்து விட்டது? அரசருக்கு விரோதமாக அவர் செயல் புரியக் காரணம் என்ன?"



"போர் வரப் போகிறதா என்ன? பல்லவ நாட்டின் மீது படையெடுக்க யாருக்குத் துணிவு இருக்கிறது? இராட்டிரகூட அரசரே சமாதானத்துடன் பல்லவ நாட்டில் வலம் வருகிறார்."

"அப்படிச் சொல்லாதீர்கள். தெற்கே பெரும் எதிர்ப்பு உருவாகிறது. பாண்டிய நாட்டில் புதிய அரசர் பட்டமேறியிருக்கிறார். அவரை அடைந்திருக்கிறான் சித்திரமாயன். முத்தரையர்களைச் சமாதானம் செய்யப் பல்லவ ராஜதந்திரம் பலிக்கவில்லை. நந்திபுரக் கோட்டையிலிருந்தே கிழவர் இரண்யவர்மர், முத்தரையரையும் சோழர்களையும் சமாதானப்படுத்தப் பார்த்தும் இயலவில்லை. பாண்டியர்களும் சோழர்களும் சேர்ந்து தாக்கினால் வியப்படைவதற்கில்லை."

"ஏன், காஞ்சியை விட்டுப் புதுத் தலைநகரை நிர்மாணிக்கத் துணிந்தார் மன்னர்?"

"யாருக்குத் தெரியும்? பொன்னியின் மீது காதலாயிருக்கலாம்."

"பொன்னியா?"

"ஆம்; பாலோடும் ஆற்றங்கரையை விடத் தண்புனலோடும் பொன்னியின் கரையிலே நகரை அமைக்க நினைத்திருக்கலாம். வட நாட்டினின்று வரும் படையெடுப்பிற்குக் காஞ்சி எளிய இலக்காயிருக்கிறது. அதனால் தெற்கே தலைநகர் தள்ளியிருந்தால் தப்பிவிடலாம் எனும் எண்ணமிருக்கலாம்."

"சுத்தக் கோழைத்தனம்" - பெரியவர் உறுமினார். "அதுசரி, நாம் என்ன செய்ய வேண்டும்? இந்த இரவு வேளையில் பரம ரகசியமாகப் பேச என்னை அழைத்தீர்களே" என்று சற்று அதட்டலாகவே கேட்டார்.

"புழல் கோட்டத்தாரின் எண்ணப்படி எல்லாம் நடக்குமேயாயின் இந்தப் பரந்த தொண்டை மண்டலமே இராது போலிருக்கிறது. நந்திபுரக் கோட்டையைத் தாக்கி அரசரைச் சிறை பிடித்துச் செல்வது இப்போது பாண்டியர்களின் திட்டம். கடல் போன்ற படைகள் போர்க்கொடி பிடித்துப் புறப்படவிருக்கின்றன. உறையூரிலிருக்கும் சோழர்களும் சேரப் போகிறார்கள்."

"சோழர்கள் படையா? சோழர்கள் பல்லவர்களுடன் மகேந்திரவர்மன் காலத்திலிருந்து நட்பினர் தாமே?"

"சோழர்கள் விடுதலை வேட்கையுடையவர்கள். கரிகால் பெருவளத்தான், நெடுமுடிக் கிள்ளி போன்ற வீரர் வழி வந்தவர்கள். இமயத்திலே புலிக் கொடி நாட்டிய அஞ்சா நெஞ்சர்கள். அவர்களுடைய இதயம் போன்ற பொன்னி பாயும் பூமியிலே பல்லவர்கள் கோட்டை கட்டுவதென்றால்? சோழ நாட்டுச் சாதாரண பிரஜை கூட இந்த அவமானத்தைத் தாங்க மாட்டானே. அதனால்தான் சோழர்கள் நந்திபுரக் கோட்டையைத் தாக்குவதில் ஒன்று சேர்கிறார்கள்."

பெரியவர் பெருமூச்சு விட்டார். அவருடைய அமைதி ஆழ்ந்த சிந்தனையில் அவர் இருப்பதைப் புலப்படுத்தியது. பிறகு அவர், "தம்பிகளா! இவ்வளவு செய்திகளையும் சேகரித்திருக்கிறீர்களே. உம்; சோழரும் மற்றும் குறுநில மன்னர்களும் படையெடுத்து வரும்போது மல்லருக்கு மல்லரான நந்திவர்மன் அமைதியாக இருப்பார் என எண்ணுகிறீர்களா? அவர் தந்தை இரண்யவர்மர் வேடிக்கை பார்ப்பாரா? நடவாத காரியத்தைப் பற்றிய நினைவே கூடாது" என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினார்.

பெரியவர் கூறியதைக் கேட்டு இரு இளஞ்சிங்கங்களும் கட்டடமே இடிந்து விழுவது போல் நகைத்தனர்.

"அண்ணா! வலிமை மிகுந்த பல்லவ மல்லர் வைணவ பக்தராகி விட்டார். கோட்டையும், கோட்டையில் கோயிலும், கோயிலில் சிற்பமமைப்பதும் விண்ணகரங்கள் கட்டுவதிலுமாகக் கவனம் செலுத்துகிறார். காஞ்சிபுரத்தில் வைகுண்ட நாதருக்குப் பிரமாதமான கோயில் கட்டப்பட்டு வருகிறது. அவர் தந்தை இரண்யவர்மரோ அரசர் திருமணத்துக்கு நாள் பார்ப்பதில் கவனம் செலுத்துகிறார்."

"திருமணமா?"

"ஆம்; அரசருக்கும் இராட்டிரகூட மன்னர் மகள் ரேவா தேவிக்கும் திருமணம். பல்லவ அரசருக்குத் தமிழ்நாட்டில் பெண் கிடைக்கவில்லை. வடக்கிலிருந்து பெண் வர வேண்டியிருக்கிறது."



பெரியவர் இப்போது சீற்றத்துடன், "தம்பி! எல்லாவற்றையும் தவறான கண்ணுடன் காணத் தொடங்கிவிட்டால் அதற்கு முடிவே இல்லை. அரசருக்குப் பெண் கொடுக்கச் சமதை உள்ளவர் யார் இருக்கிறார்கள்? தளபதியின் யோசனையுடனும் தாம் இந்த நல்ல காரியம் நடைபெறுகிறது என்பது உனக்குத் தெரியாதா?"

"தெரியுமே, நன்றாகத் தெரியும். மணமாகா மன்னர் சிறையில் வாடுவதைவிட பட்டத்தரசியுடன் வாடுவது சாலச் சிறந்ததன்றோ? பார்க்கப் போகிறீர்கள்; நீங்கள் அரசரின் திருமண தினத்தன்றே போர்முரசு கொட்டப் போவதை..."

முதியவர், இளையவர்களின் பேச்சைக் கேட்டுக் காதுகளைப் பொத்திக் கொண்டார். "தம்பிகளா! என்னைக் குழப்பாதீர்கள். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து போங்கள். என்னை மட்டும் உங்கள் விருப்பத்திற்கு இணங்கச் செய்யாதீர்கள். நாட்டிற்கு நான் கேடு தேட மாட்டேன்" என்று பெரியவர் கூறினார்.

"அண்ணா உங்களை என்ன செய்யச் சொல்கிறோம்? இடுக்கித் தாக்குதலின்போது நீங்கள் எங்களுடன் சேராவிட்டாலும் பல்லவர் பக்கமும் வாள் எடாதிருந்தால் போதும்."

"இடுக்கித் தாக்குதலா?"

"ஆம்; திறமை மிகுந்த சேனைத் தலைவர் உதயசந்திரனுக்கு நேரப் போகும் தொல்லையைப் பார்க்கப் போகிறீர்கள். தெற்கே நந்திபுரக் கோட்டை தாக்கப்படும்போது காஞ்சியைச் சாளுக்கியர்கள் சூறையாடுவர். கோட்டத்துத் தலைவர்கள் பல்லவர்களுக்கு உதவ மாட்டார்கள். போர்க்காலத்திலே வாளெடுக்கும் மக்கள் தங்கள் வாளைத் தொட மாட்டார்கள். மக்கள் கலகமும், வடக்கிலும் தெற்கிலும் தொல்லைகளும் பல்லவர்களின் படையைக் குழப்பும். படுதோல்வி அடைவார் தளபதி..."

"போதும், போதும் நிறுத்துங்கள்" என்று கூறியவாறு பெரியவர் எழுந்தார். அவர்கள் எழுந்து வரும் அரவம் கேட்டது. குணதேவன் விரைந்து வாயிலை அடைந்தான்.

யாரோ விரைந்து செல்லும் ஓசை கேட்ட மூவரும் "யாரது, பிடியுங்கள்" எனக் கூவி வெளியே ஓடி வந்தனர்.

நொடியில் குதிரையை அவிழ்த்து அதன்மீது தாவி ஏறிய குணதேவன் சிட்டெனப் பறக்குமாறு குதிரையை விரட்டினான். பின் தொடர்ந்து யாரோ ஓடிவரும் ஓசையும் கேட்டது.

அந்த இருள் வேளையில் களைப்பு மிகுதியால் தங்க வந்த குணதேவன் மாபெரும் ரகசியம் அறிந்தவனாக, அந்தச் 'சிதம்பர ரகசியத்தை' உடனே உதயசந்திரனிடம் கூற, வாயுவேக மனோ வேகமாகக் குதிரையைப் பறந்தோடச் செய்து பாண்டிய நாட்டிற்கு ஓலையெடுத்துச் செல்வதை மறந்து காஞ்சியை நோக்கி நடந்தான்.

# 29. பழிக்குப் பழி

ஹர்ஷ மகா சக்ரவர்த்தியை வென்றவனும், காஞ்சியை நோக்கித் தன் படைகளை நடத்தி வீரப் போர் புரிந்தவனுமாகிய சத்யாச்ரய புலகேசியின் பரம்பரையில் வந்தவனான விக்கிரமாதித்தன் தன் அரண்மனை மாடத்தருகே சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். அவனுடைய மகன் இளவரசன் கீர்த்திவர்மன் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தான். அவனது நடையும் அவன் முகமும் அவன் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த சீற்றத்தைப் புலப்படுத்தின.

"தந்தையே! உங்கள் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை. பல்லவ நாட்டினின்று ஓடிவந்து அடைக்கலம் புகுந்தவனுக்கு அபயமளித்தீர்கள். அவனது தலைவனுக்கு நிச்சயம் உதவுவதாக வாக்களித்தீர்கள். ஆனால், போருக்கான ஆயத்தங்களை செய்யக் காணோமே தந்தையே! எனக்காவது உத்தரவு கொடுங்கள். நான்கு



திசைகளிலும் நாலாவிதப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் நமது படை வீரர்களைத் திரட்டுகிறேன். போர்க்கொடி உயர்த்துகிறேன். நாடு நகரமெங்கும் மக்கள் உணர்ச்சியைத் திரட்டுகிறேன். நூறாண்டுகளுக்கு முன் நமக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டாமா?" - கீர்த்திவர்மன் சீற்றங் கலந்து கூறினும் மாற்றார் நடுநடுங்கச் செய்யும் தோற்றங்கொண்ட விக்கிரமாதித்தன் புன்முறுவலுடன் மகனின் பக்கம் திரும்பினான். அவனுடைய புருவங்கள் உயர்ந்து தணிந்தன. மகன் சொல்லைப் பாராட்டியதாகவோ, பழித்ததாகவோ தெரியவில்லை.

கீர்த்திவர்மனுக்குத் தந்தையின் மௌனம் மேலும் ஆத்திரத்தைக் கிளப்பியது.

"தந்தையே! உங்கள் மௌனம் எனக்குப் புரியவில்லை. உங்கள் ஆழ்ந்த சிந்தனை வருத்தத்தைக் குறிக்கிறதோ? எதற்கு ஐயம்? படை போதாதென்று எண்ணமா? அப்பா! கடந்த பத்தாண்டுகளாக நம் படைபலத்தைப் பெருக்கி வருவது தங்களுக்குத் தெரியாதா? யானைகளும் குதிரைகளும் நம் பாடி வீட்டில் சேர்ந்திருப்பது நீங்கள் அறியாததா? போர் வீரர்களை நிறுத்தினால் பல காத தூரத்திற்கு அவை நீளம் பெருகுமே! தந்தையே! தாமதித்தால் அரிய சந்தர்ப்பத்தை இழக்க நேரும். தக்க சூழ்நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. நம் அண்டை நாட்டு வைரமேகன் பல்லவர்களுடன் நட்பு பூண்டு அங்கேயே தங்கியிருக்கிறானாம். அவன் மகளுக்கும் பல்லவ அரசனுக்கும் திருமணம் நடக்கப் போகிறதாம். இரட்டர்களுடன் மண உறவு கொண்டு நம்மை அழிக்கப் பார்ப்பது அவர்கள் திட்டமாக இருக்கலாம்."

விக்கிரமாதித்தன் திரும்பினார்.

"நமக்கு அழைப்பு வந்திருக்குமே!" - அவர் குரலின் அர்த்தத்தை மகனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"அழைப்பா? நமக்கா? பரம்பரையாக விரோதம் பாராட்டும் பல்லவர்கள் நமக்கு அழைப்பு அனுப்புவார்களா? எந்தக் காலத்திலும் அழைத்து நாம் போனதில்லையே!"

"அழையாத வீட்டில் நுழைவது அவமானம் மட்டுமன்று; ஆபத்துங்கூட."

"போர் முறையிலே புதிய நோக்கங் கற்பிக்கிறீர்களா தந்தையே?"

"அழைக்காது போனதால் அவர்கள் நம்மைத் தலைநகர் வரை திருப்பிக் கொண்டு விட்டார்கள்."

"திருப்பிக் கொண்டு விட்டார்கள் என்பதையும் ஒப்புக் கொள்ள மாட்டேன். தாங்கள் பெருவள நல்லூர்வரை எதிர்ப்பாரும், தடுப்பாருமின்றிச் சென்றீர்களே! காஞ்சியில் உங்களை வெல்வாரின்றி ஆட்சி சில காலம் நடத்தினீர்களே! அவர்கள் கோட்டை மீது வராகக் கொடியை நாட்டி வந்த பிறகன்றோ நம்மைத் தேடி வந்தார்கள்."

"கொடியைத் திருப்பிக் கொடுக்க இருக்கலாம்!" - விக்கிரமாதித்தனின் குரலில் நகைச்சுவை ததும்பியது.

"தந்தையே! தங்கள் பேச்சு எனக்கு வேதனையை அளிக்கிறது. அவர்கள் செய்த அட்டூழியங்கள் நம் நாட்டு மக்கள் ஒவ்வொருவர் உள்ளங்களிலும் இன்னும் பரம்பரையாக மறையாமல் இருக்கின்றன. பாட்டன் பேரனுக்குக் கூறி பேரன் தன் பேரனுக்குக் கூறி நம் தலைநகர் அழிந்ததைப் பற்றி இன்னும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்பா! வாதாபியைத் தீயிட்டுக் கொளுத்தினார்களாம்."

"அதுமட்டுமா? நம் நாட்டினின்று பெரிய கணபதி சிலையைக் கொண்டு சென்று விட்டார்கள். அவர்கள் நாட்டின் ஒவ்வோர் ஊரிலும் அவர் வீற்றிருந்து அருள்கிறார். நகரம் அழிந்த கதையை மக்கள் பேசுகிறார்கள்; ஆனால் நாம் கொண்டு வந்த செல்வங்களைப் பற்றிப் பேசுகிறார்களா?"

கீர்த்திவர்மன் சிறிது நேரம் மௌனமாயிருந்தான். "தந்தையே! எனக்கு உத்தரவு கொடுங்கள். நான் கிளம்புகிறேன். பல்லவ நாட்டினின்று வந்த கருங்கண்ணன் காஞ்சிக் கோட்டையின் ரகசிய வழிகளை எனக்குக் கூறியிருக்கிறான்."



வாதாபியின் அதிபதி விக்கிரமாதித்தன் இப்போது எழுந்தான். மகனை நெருங்கி வந்தான். "என் இளஞ்சிங்கமே! உன் துடிப்பை நான் பாராட்டத்தான் வேண்டும். வீரமும் துடிப்பும் இரட்டைப் பிறவிகள். ஆனால் அவர்களுக்கு தீர்க்க தரிசனம் உதவியாக இருப்பதில்லை; பல்லவர்கள் நம் பரம்பரை விரோதிகள் தாம். ஆனால் அவர்களுடைய ஒரு செயலைப் பாராட்டுகிறேன். இன்று வரை அவர்களாகவே சாளுக்கிய பூமியில் காலடி எடுத்து வைத்ததில்லை. வாதாபியை அவர்கள் அழித்தனர் என்றால் நாம் செய்த செயலே காரணம்.

"காஞ்சியை அழித்தோம்; அவர்கள் வாதாபியை அழித்தனர். அழித்ததோடு நின்றனரே! உனக்கு நீண்ட நாள்களாகவே ஒன்று கூற வேண்டும் என்று எண்ணியிருந்தேன் மகனே! முன்படையெடுப்பின்போது காஞ்சிக் கைலாசநாதர் கோயிலினின்று ஏராளமான செல்வங்களைக் கவர்ந்து வந்தோம். பொன்னும் மணியும் வைர வைடூரியங்களும், கோமேதகங்களும், மரகத ரத்தினங்களும்... அடாடா! அவற்றைப் பார்த்தால் பசி, தாகம் மறந்து இன்றைக்கெல்லாம் அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். அவை இருக்கும் நிலவறைக்கு உன்னை அழைத்துச் செல்ல வேண்டும். அவற்றைப் பார்க்கும்போது மீண்டும் எனக்குக் காஞ்சிக்குச் செல்ல ஆசைதான். ஆனால் திராவிட அரசர்களை நம்ப முடியாது. பல்லவர்களோடு அந்தப் பொல்லாத பாண்டியனும், நாட்டில் குறுகியிருந்தாலும் வீரத்தில் குறுகாத சோழனும் மற்றும் நூற்றுக்கணக்கான குறுநில மன்னர்களும் நம்மைச் சூழ்ந்து விடுவர் மகனே! அவற்றையெல்லாம் ஆராய்ந்தாயா? நம்மிடம் லட்சோப லட்சம் படைகள் இருக்கலாம்; ஆனால் எதிரிகளில் பலர் சேர்ந்து பலவிதக் கோணங்களில் நம்மைத் தாக்கினால்?"

கீர்த்திவர்மன் ஒருகணம் கூட யோசிக்கவில்லை, "தந்தையே! அவற்றுக்காக ஏற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறேன். பாண்டியர்கள் நம்மை எதிர்க்க மாட்டார்கள் என்பது உறுதி. பல்லவர்களைத் தாக்கப் பாண்டியர்கள் சமயம் பார்த்திருக்கிறார்கள்."

விக்கிரமாதித்தன் இந்தச் சொற்களைக் கேட்டவாறே நடந்தான். அவன் பின்னால் மகனும் நடந்தான்.

"மகனே! உன் ஆசையேதான் என் ஆசையும். ஆனால் இந்தமுறை எனக்குப் பொன்னும் மணியும் வேண்டாம்; கலையும் சிற்பமும் பல்லவ நாட்டில் செழித்தோங்கி நிற்கிறதாம். கைலாசநாதர் ஆலயத்தைப் பற்றி எல்லாரும் புகழ்கிறார்கள். அதைப் போன்ற அற்புதக் கோயிலை நம் நாட்டில் அமைக்க வேண்டும். அதற்காகவே காஞ்சியில் தங்கி அதன் அமைப்பை அறிந்து வர வேண்டும். உம்; படைகளைத் திரட்டு. ஆனால் ஒன்றை நினைவில் கொள். இந்த முறை - போர் - கடைசியில் நடக்கும். இந்தப் போரில் நாம் தோற்றால் நம் சாம்ராஜ்யத்திற்கே அழிவு என்று எண்ணு" என்றான்.

கீர்த்திவர்மன் வாளை உயர்த்தினான்.

"அழிவு! யாருக்கு அழிவு பார்ப்போம். களங்கத்தைத் துடைக்க எழுந்த சாளுக்கிய மாவீரர்கள் அணிந்திருப்பது ஜெயமாலை; அவர்கள் உடன் அழைத்துச் செல்வது வெற்றித் திருவை. அவர்கள் முணுமுணுக்கும் மந்திரம் ஜயம் ஜயம்! அப்பா பழிக்குப் பழி வாங்கியே தீருவேன். ஆயிரமாண்டுகளுக்குப் பிறகு வரப்போகும் மக்களெல்லாம் கூறவேண்டும், தீராத களங்கத்தை நீக்கச் சாளுக்கிய அரசகுமாரன் காஞ்சி மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டு அரசரைச் சிறைபிடித்து வந்து வாதாபிக் கோட்டையிலே காட்சிப் பொருளாக வைத்தான் என்று."

அவன் கண்களில் பிரகாசித்த ஒளி விக்கிரமாதித்தனையும் திகைக்க வைத்தது. போர் முரசின் ஒலி எங்கும் பரவியது.



## 30. சிற்றுளியும் பெருவாளும்

குணதேவன் காஞ்சி அரண்மனையை அடையும்போது நன்றாக இருட்டிவிட்டிருந்தது. காஞ்சி நகரத்தில் வழக்கம் போலவே எல்லாம் நடந்து கொண்டிருந்தது. வைகுண்டப் பெருமாள் கோயில் அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சிற்பிகள் தங்கள் அன்றைய பணிகளை முடித்துக் கொண்டு தத்தமது இல்லம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தனர். ஏழெட்டு இரட்டை எருதுகளைப் பூட்டிய வண்டிகளில் ஏற்றப்பட்ட பெரும் பாறைகளை இறக்கச் சிலர் முயன்று கொண்டிருந்தனர்.

வேகமாகப் புரவியை விரட்டி வந்த குணதேவன் வைகுண்டப் பெருமாள் கோயில் திருப்பணி நடக்கும் இடத்தே சிறிது நின்றான். மிக மிகப் பிரம்மாண்டமான அளவில், கைலாசநாதர் கோயிலின் அழகுக்கு இணையாகப் பரமேஸ்வர விண்ணகரம் உருவாகி வருவதை அவன் முன்பே கேள்விப்பட்டிருந்தான். நூற்றுக்கணக்கானவர் அந்தப் பணியில் ஈடுபட்டிருப்பதாகவும் அவன் கேள்விப்பட்டிருந்தான். அவனுக்கு அந்தப் பக்கம் வந்து பார்க்கும் வாய்ப்பும், நேரமும் கிடைக்கவில்லை. ஒருமுறை கோயிலை நோக்கினான். கோயில் விமானம் அமைக்கப்பட்டு விட்டது. மாமல்லபுரத்துத் தர்மசேனர் ரதம் போன்று தோற்றமுடைய பெரிய விமானம் அவனைக் கவர்ந்தது. அழகிய திருச்சுற்றும், திருச்சுற்றில் நீண்ட மண்டபங்களும் அமைக்கப்பட்டு வந்தன.

அந்தத் தாழ்வாரங்களில் பல்லவர்களின் வரலாறு செதுக்கப்படும் வேலை அப்போதுதான் தொடங்கியிருந்தது. அதை அமைப்பதில்தான் சிற்பிகளுக்கு எவ்வளவு ஆர்வம்! தங்கள் கலைத் திறமையைப் புலப்படுத்த வாய்ப்பளித்த நந்திவர்மப் பல்லவரை உளமாறப் புகழ்ந்து கொண்டே அந்த ஜீவ சிற்பங்களை

அமைத்து வந்தனர். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் மக்கள் போற்றிப் புகழத் தக்க அற்புதத்தைத் தாம் படைக்கிறோம் என்ற பெருமிதத்தோடு அவர்கள் தங்கள் பணியைச் செய்து கொண்டிருந்தனர். அந்தப் பொங்கி எழுந்த உற்சாகமும் ஆர்வமும் கலையோடு கற்பனையைக் கலந்தது. கலைக் காவலரான மன்னரைத் தெய்வப் பரம்பரையினராகக் கருதும் அளவுக்கு உயர்த்தின.

முதல் தொகுதியில் பாற்கடலில் விளங்கும் திருமாலின் நாபியிலிருந்து வளர்ந்த தாமரையில் பிரமன் திகழ்கிந்தார். அவரது முதல் படைப்பான ஆங்கிரஸரும் பிறரும் பிரஹஸ்பதியும் இந்திரனும் இப்படியாகத் தேவர்கள் பலரது சிற்பங்கள் சிருஷ்டிக்கப்பட்டன.

அந்தக் காலத்தில் பாரதக் கதைகள் மக்களைப் பெரிதும் கவர்ந்திருந்தன. துரோணரது வீரத்தையும் அவரது மகன் அசுவத்தாமனது தீர சாகஸங்களையும் பற்றி மக்கள் எப்போதும் பேசி மகிழ்ந்தனர். அவர்களது பரம்பரையில் பல்லவர்கள் வந்தனர் என்று பல்லவர்களைக் கூறுவது வழக்கமாயிற்று. அதைச் சிற்பி சிருஷ்டித்து விட்டான் அங்கே. வைகுண்டப் பெருமாள் கோயிலையே சிற்பக் காவியமாக அமைக்க அவர்கள் பாடுபட்டனர். தமிழகத்தைச் சேர்ந்த சிற்பிகளும் வட பகுதியினின்று வந்த சிற்பிகளும் சேர்ந்து அற்புதங்களைச் செய்ய முயன்றனர். இரு பகுதியினரின் அறிவும் இணைந்து கலைக்கூடம் உருவாகி வந்தது.

அவசரச் செய்தியைத் தன்னிடத்தே கொண்டிருந்த குணதேவன் கூட அந்தச் சிற்ப அற்புதங்களைக் காணச் சில நாழிகை அங்கு தங்க முனைந்தான். சிற்பக்கூட ஸ்தபதி யாருக்கோ தீவர்த்தி ஒளியில் செதுக்கப்பட்ட சிற்பங்களையும் செதுக்கப்படப் போகும் சிற்பங்களின் விவரங்களையும் விளக்கிக் கொண்டிருந்தார். கம்பீரமான தோற்றமுடைய அந்த உருவம் படைத் தலைவர் உதயசந்திரன் என்பதைக் குணதேவன் அறிந்து கொள்ள



வெகுநேரமாகவில்லை. தான் அங்கு வந்தது எவ்வளவு நல்லதாகிவிட்டது என்று தன் செயலுக்கு மகிழ்ந்தான். உதயசந்திரன் சிற்பங்களின் அழகை ரசித்ததோடன்றிச் சிற்பக்கூடத் தலைவருக்கு இடையிடையே சில கருத்துகளையும் வழங்கினான். ஸ்தபதி உணர்ச்சிமிகுதியால் படைத்தளபதியை இடையிடையே புகழ்ந்தார். உதயசந்திரன் ஆற்றலினால் பல்லவ சாம்ராஜ்யத்தின் புகழ் அழியாது காப்பாற்றப்படப் போகிறது எனப் போற்றினார்.

“உங்களுடைய வாளின் வலிமையினால் வருங்காலத்தில் அழியாத புகழை நாட்டிற்கு ஏற்படுத்தி விட்டீர்கள், தளபதியாரே!” என்றார் ஸ்தபதி. உதயசந்திரன் குறுக்கிட்டு, “ஸ்தபதியாரே! அப்படிச் சொல்லாதீர்கள். இன்று நான் கட்டிக் காக்கும் பெருமையை பலம் பொருந்திய வாள் மாய்த்துவிடும். சிம்மவிஷ்ணு மகாராஜா தோற்றுவித்த பல்லவ சாம்ராஜ்யப் புகழை வருங்காலத்தில் நிலைநாட்டப் போவது பெரு வாளன்று; கரங்களில் திகழும் வேல் செங்கோலின் பெருமையை அழியாமல் காக்காது. ஆனால், இதோ உங்கள் கரங்களில் இருக்கும் சிற்றுளிதான் அமைக்கப் போகிறது!” என்று உதயசந்திரன் கூறியபோது ஸ்தபதியின் முகத்திலே படர்ந்த நன்றியும் அன்பும் கலந்த உணர்ச்சியை எந்த ஓவியங்களிலும்கூடக் காண முடியாது.

“தளபதியே! கலைஞர்கள் நன்றி மறவாதவர்கள். அதிலும் நான் அமரச் சிற்பிகளின் பரம்பரையில் வந்தவன். எங்கள் குடும்பத்தவர்கள் மாமல்லபுரத்தில் ஐந்து ரத மண்டபங்களை அமைத்தார்கள். அருகே கம்பீர அரிமாவைப் படைத்தார்கள். வீரத்திலும் தீரத்திலும் அச்சிங்கத்திற்குச் சளைக்காத கரியைப் படைத்தார்கள். முதல் ரத மண்டபத்திலே மேல் மாடங்களைச் சிருஷ்டித்தார்கள். தலைவ! நீங்கள் கண்டிருக்கலாம் - குழந்தைத் தெய்வம் - தமிழ்க் கடவுள் கந்தனை மடியிலே கொண்டு திகழும் உமைதேவியையும், பரந்த மார்புடைய சிவபெருமானையும் மாடத்திலே அமைந்திருக்கும் அந்த உயிர்ச் சிற்பத்தை! இன்று நான் அந்தச் சிற்பத்தைக் காணும்போதுகூட என் கண்கள் நீரைச் சொரிகின்றன; அதில் திறமையைப் போற்றும் உணர்ச்சி கலந்திருக்கிறது. தலை குனிகிறது; அதில் திறமையைப் புகழும்

தன்மை கலந்திருக்கிறது. அந்த அமர சிற்பியின் பரம்பரையில் வந்தவர்கள்தாம் கலைக்காக சகலத்தையும் தியாகம் செய்து இந்தப் பாரிலே காணக் கிடைக்காத சிற்ப அற்புதங்கள் நிறைந்த கைலாயநாதர் கோயிலைச் சிருஷ்டித்தார்கள். சிவன் அருள் பெற்ற பூசலார் நாயனாரின் முதல் மாணாக்கரின் திறமைக்கு அந்தக் கோயில் சாட்சி, தலைவரே!" - ஸ்தபதி உணர்ச்சிமிகுதியால் மேலே பேச முடியாது நெஞ்சடைக்க நின்றார்.

"ஆம், சிற்பியின் முழுத் திறமை நிறைந்த பூலோகச் சொர்க்கம்தான் கைலைநாதர் கோயில். அதைக் காணும்போது என் உள்ளத்தில் தோன்றும் உவகைக்கு இந்தச் சாம்ராஜ்யமே ஈடாகாது. அதை அமைத்த சிற்பியின் திறமையைப் புகழ்வதா? அதை அமைக்கும் பேராவலில் தன் வாழ்நாளையே கழித்த இராஜசிம்ம அரசரின்* கலை ஆர்வத்தைப் போற்றுவதா? அந்தக் கோயில் மாடங்களில் வர்ண விசித்திரங்களால் அரம்பையரையும், ஆடலணங்குகளையும் தீட்டிய ஓவியர்களின் திறமையைப் போற்றுவதா? ஆனால், ஆனால்... அந்த அழியாச் செல்வங்கள் தாமே இப்போது காஞ்சிக்கே ஆபத்தை வரவழைக்கின்றன. காஞ்சியைக் காண ஒரு பேரரசர் ஓடோடி வந்தார்; அதிர்ஷ்டவசமாக அதனால் நமக்கு நன்மையே..." - இந்தச் சமயத்தில் தீவர்த்தி பிடித்திருந்தவர்களும் உடன் இருந்த சிற்பிகளும் தலைமைச் சிற்பியை நோக்கிக் கண்களால் பேசிக் கொண்டனர். அந்த நயன பாஷை காஞ்சி மீது காதல் கொண்ட வைரமேகனும், ரேவாதேவியும் பல்லவர்களின் நட்பினரான கதையைப் பேசியது; பல்லவ நாட்டிற்கு ராணி கிடைத்த மகிழ்ச்சியைத் தெரிவித்தது. அதனால் அவர்கள் உதடுகள் பூத்துக் களித்தன.

"நன்மையை நிழல்போல் தொடர்வது தீமைதான்; இராட்டிரகூடர்கள் கலையைக் காண வந்தனர். சாளுக்கியர்களோ

---

*கைலாசநாதர் கோயிலைச் சிருஷ்டித்த இராஜசிம்ம சக்ரவர்த்தியின் காலத்துக் கதையை ஆசிரியர் எழுதிய 'காஞ்சி சுந்தரி' என்னும் சரித்திர நாவலில் காணலாம்.*



கலையைக் கவர முற்படுகின்றனர்" - உதயசந்திரன் முடிக்கவில்லை; ஸ்தபதி படபடப்பான குரலில், "தளபதி, தளபதி! உங்களுக்கு அதற்குள் விஷயம் எட்டி விட்டதா? சாளுக்கிய நாட்டு ஒற்றன் என்னைச் சந்தித்தது உங்களுக்குத் தெரிந்து விட்டதா? அவன் கூறிய ரகசியம் உங்களுக்குப் புரிந்து விட்டதா? சேனைத் தலைவரே! இந்தச் சிற்பி நாட்டுத் துரோகியாகி விடவில்லை... எந்த ரகசியத்தையும் அவனிடம் வெளியிட்டு விடவில்லை..." என்றார். தலைமைச் சிற்பி தொடர்ந்து பேசி முடிப்பதற்குள் உதயசந்திரன் குறுக்கிட்டு, "தவறு செய்து விட்டீர், சிற்பியாரே!" என்றான்.

"தவறா? தளபதியாரே, ஒற்றன் வந்து பேசிய செய்தியைக் கூறாததைத்தானே சொல்லுகிறீர்கள்? என்னை மன்னித்து விடுங்கள். இன்று எப்படியும் தங்களிடம் கூறிவிட எண்ணினேன்."

"அதைக் கூறவில்லை சிற்பியாரே! கலைஞர்கள் பொய் சொல்ல மாட்டார்கள். சாளுக்கிய ஒற்றனிடம் நீர் மறுமொழி பகன்றீரே, அதைப் பற்றித்தான் கூறுகிறேன்."

"என்ன சொல்கிறீர்கள்? என் காதுகளால் நம்ப முடியவில்லையே, தளபதியாரே! கைலாசநாதர் கோயில் அமைப்பின் ரகசியத்தையும் கட்டட முறைகளையும் அந்தக் கோயில் அமைந்திருக்கும் விதத்தையும் ஓலையில் எழுதித் தருமாறு அந்த ஒற்றன் கேட்டான். உயிர் போனாலும் நான் கூறமாட்டேன் என்று சொல்லி அனுப்பி விட்டேன்! அது தவறா?"

"ஆம்; தவறுதான். கைலாசநாதர் கோயில் அமைப்பின் அற்புதத்தைக் கூறியிருந்தால் சாளுக்கியர் படையெடுப்பைத் தவிர்த்திருக்கலாம். ஆயிரக்கணக்கானவர் போருக்குப் புறப்பட வேண்டிய கட்டாயத்தைத் தவிர்த்திருக்கலாம். பல நூறாயிரம் தூசிப் படைகளும் தேர், பரி, கரிப்படைகளையும் எதிர்த்து நிறுத்த வீட்டுக்கு ஒவ்வொருவர் கிளம்ப வேண்டிய அவசியத்தைத் தவிர்த்திருக்கலாம். சிற்பத்தைச் செதுக்கும் சிற்பிகள் போர்க்கலங்களை ஏந்த வேண்டிய கட்டாயத்தை நீக்கி யிருக்கலாம். சிற்றுளியால் சிங்காரச் சிற்பங்கள் அமைக்க

வேண்டிய சிற்பிகள் கூற்றுவனும் கண்டஞ்சும் போர்க்களத்தைக் காணாதிருக்கலாம். சிற்பியாரே, கைலாசநாதர் கோயில் ரகசியத்தைத் தெரிவித்திருந்தால் சாளுக்கியர்களை வாதாபியை விட்டுக் கிளம்பவொட்டாமலே செய்திருக்கலாம்."

ஸ்தபதி மறுமொழி பகரவில்லை. சூழ்ந்திருந்த சிற்பிகள் சிலையென நின்றனர். காற்றிலே அலைபாயும் தீவர்த்திகளின் செந்நாக்குள் கூட அந்தச் செய்தியைக் கேட்டு ஆடாது அசையாது நின்றன.

'மாற்றானுக்கு ரகசியத்தைக் கூறுமாறு கட்டளையை இடுவது யார் - தளபதிதானா? இந்த நாட்டின் நன்மைக்கு நாளெல்லாம் உழைக்கும் அந்த நல்லவர்தானா? மாற்றாருக்குக் கூற்றுவர் போல் வாளெடுத்துத் தோள் தட்டும் வீரத் தளபதிதானா? இருள் சூழ வேண்டிய பல்லவ சாம்ராஜ்யத்தை இடுக்கண்ணினின்றும் காத்த இணையற்ற வீரன் உதயசந்திரனா இப்படிக் கூறுகிறார்?' என்று அந்த முதிய பருவத்து சிற்பி வியந்தார்.

இதுவரை குரலிலிருந்து மட்டும் ஒருவாறு அந்தக் கோயில் சிற்பங்களைக் காண வந்தவர் இன்னார் என்பதைப் புரிந்து கொண்ட குணதேவன், தலைவர் கூற்றைக் கேட்டுத் திகைத்தான்.

அந்தக் கம்பீரத் தோற்றமுடையான், வீர உருவத்தான், ஆற்றலும் அறிவும் இணைந்த படைத்தலைவன் எல்லார் குழப்பத்தையும் போக்கப் பேசுவான். "அன்பார்ந்த கலைஞர்களே! ஒரு கணத்தில் என்னைப் பற்றித் தவறாக எண்ணியிருப்பீர்கள். மணிமகுடங்கள் மறையலாம்; மாபெரும் போர்க்களங்களில் மகத்தான சாதனைகள் புரிந்த சாகஸங்களின் நினைவு வருங்காலத்தவர் நெஞ்சிலிருந்து நழுவலாம். ஆனால் அமரருக்கு நிகரான சிற்பிகளே! உங்களால்தான் இந்தப் பல்லவ சாம்ராஜ்யத்தின் பெயர் அழியாதிருக்கப் போகிறது; உங்கள் திறமை எங்கும் பரவி ஓங்க வேண்டும். சேர நாட்டிற்குச் சென்று குகை மண்டபம் குடைந்திருக்கிறீர்கள். கிருஷ்ணை நதிக்கரையில் திறமை காட்டியிருக்கிறீர்கள். உங்கள் கலைத் திறமை அழியாது வாழ வேண்டுமானால் அதைப் பிறருக்குக் கற்றுக் கொடுங்கள்.



உங்கள் அனுபவ முத்திரை உலகத்தில் நடமாடட்டும். ஆனால் போர் முனையிலே அதைக் கேட்பவர்களுக்குப் புத்தி புகட்டுவோம்; சிறுத் தொண்டரைப் போன்று வாதாபி வரை சென்று வீரக் கொடி நாட்டி வேழ முகத்து விநாயகரை முதன் முதலில் கொண்டு வந்தாரே அது போன்ற அரிய செயல் பல செய்வோம்" - உதயசந்திரன் சிறிது நிறுத்திவிட்டுக் கூறினான்... "ஸ்தபதியாரே! உங்களுடைய நாட்டுப் பற்றை இந்தச் சமயத்தில் புரிந்து கொள்ள என்னால் முடிந்தது. உங்களிடம் வந்து கைலாசநாதர் ஆலயத்து அமைப்பு ரகசியத்தைச் சாளுக்கிய ஒற்றன் அறிய வந்ததும், தாங்கள் அவனை ஏசி அனுப்பியதும் எனக்குத் தெரியும். ஆனால் உங்களுடைய தொண்டர்களில் சில ஒற்றர்கள் இருக்கிறார்கள். அப்படிச் சொல்வதைவிட ஒற்றர்கள் சிற்பி வடிவிலே இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். நல்லவர்கள் வேறு; தீயோர் வேறு என்பதை எப்படிக் காண்பது? சாளுக்கிய ஒற்றர் வடிவில் மீண்டும் சிற்பிகள் வசிக்கும் பகுதியை அடைந்தேன். முன்பாகவே திட்டமிட்டு அனுப்பப்பட்ட ஐம்பது ஒற்றர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கைலாய ஆலயத்து அமைப்பு முறை நிறைந்த சுவடியை என்னிடம் எடுத்துக் கொடுத்து விட்டார்கள். சிற்ப அமைப்பை அறியச் சாளுக்கிய வேந்தன் ஆசைப்பட்டால் அதை அன்புடன் நாம் கொடுப்போம்; பொற்குவைகளும், மணியாரங்களும் சேமிக்கப்பட்டிருக்கும் நிலவறை கைலாசநாதர் கோயிலில் இருப்பது சாளுக்கியர் களுக்குத் தெரியும். அது இருக்குமிடத்தின் அமைப்பை அறிவதுதான் அவர்கள் நோக்கம். ஒருவேளை காஞ்சிக் கோட்டை பிடிபட்டால் செல்வங்கள் அனைத்தையும் கொள்ளையடித்துச் செல்லலாம் என்பது அவர்கள் நோக்கமாயிருக்கலாம். அது நிறை வேறவில்லை. அந்த ஓலைச்சுவடி என்னிடம் சேர்ந்து விட்டது."

ஸ்தபதி திடுக்கிட்டார். அவர் கண்களில் நீர் தளும்பியது. "தளபதியாரே! பெரியோர் செய்த புண்ணியத்தால் இந்த நேரம் வரை எனக்குத் தெரியாது ஓலை கவரப்பட்ட விஷயம். எங்கே அந்தச் சிற்பிகள்? பசுவடிவில் வந்த புலிகள்? சிறையில் தள்ளுங்கள் அவர்களை!" என்று ஸ்தபதி கூவினார்.

உதயசந்திரன் கையமர்த்தி, "அவசரப்படாதீர்கள் சிற்பியாரே! எப்போதும்போல் காரியங்கள் நடக்கட்டும். ஒரு காரியத்திற்காக அவர்களை அப்படியே விட்டு வைத்திருக்கிறேன்" என்றான்.

உதயசந்திரனின் வீர வாசகம் எல்லாருடைய மெய்யையும் சிலிர்க்க வைத்தது. அவர்களை அறியாமலே 'வீரவேல்! வெற்றிவேல்!' என்று முழங்கினர்.

"சிற்பியாரே! கைலாசநாதர் ஆலயத்தைக் காணவோ, வேறு எதற்காகவோ வாதாபியினின்று படைகள் புறப்பட்டு விட்டன. உங்கள் திருப்பணியை இடையே நிறுத்த நேரிடலாம். ஆனால் ஒன்று மட்டும் வேண்டிக் கொள்கிறேன்; வைகுண்டப் பெருமாள் கோயிலின் நீண்ட மண்டபத்துப் பாறைச் சுவரிலே பல்லவர்களின் வீரக் கதையை இன்று வரை செதுக்கி வையுங்கள். கலைக் காஞ்சியின் இரு பெரும் அற்புதங்களாகக் கைலாயநாதரும் வைகுண்டப் பெருமாளும் விளங்கட்டும்" என்று உதயசந்திரன் தொடர்ந்து கூறும்போது அங்கிருந்தோர் கண்களில் இன்பக் கண்ணீர் தளும்பியது.

உதயசந்திரன் வைகுண்டப் பெருமாள் கோயிலை விட்டகன்றான். அங்கு வந்ததில் புதிய செய்திகள் இரண்டு கிடைத்தன. சாளுக்கிய ஒற்றர்கள் நகரமெங்கும் நிறைந்திருக்கிறார்கள் என்பது ஒன்று; கைலாசநாதர் கோயில் அமைப்பு ரகசியத்தை அறியச் சாளுக்கிய வேந்தன் துடிப்புடன் இருக்கிறான் என்பது மற்றொன்று. உதயசந்திரன் சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் புரவியேறிப் பறந்த போது, குணதேவன் அவனைத் தொடர்ந்து சென்று தானறிந்த சிதம்பர ரகசியத்தை அறிவிக்க முடியாததை எண்ணி மனம் நொந்தான். காஞ்சி அரண்மனையிலும், அலுவல் கூடத்திலும் மற்றும் உதயசந்திரன் இருக்கக்கூடிய இடமெங்கணும் தேடியும் குணதேவனால் உதயசந்திரனைக் காண இயலவில்லை.



## 31. வருகுது போர்

பொன்னி நதியின் இயற்கை அழகில் மனத்தைப் பறி கொடுத்த வண்ணம் அதன் கரையில் சரக்கொன்றை மரத்து நிழலில் ரேவாதேவி தன் தோழிகள் சூழ அமர்ந்திருந்தாள்.

தோழியர் குழாத்துள் ஒருத்தி வீணையை மீட்டிக் கொண்டிருந்தாள். அதன் நாதத்துக்கு இயைந்தவாறு மற்றொரு பெண் ஒருத்தி பண்ணிசைத்துக் கொண்டிருந்தாள். மற்றும் சில மடந்தையர்கள் நடனம் ஆடிக் கொண்டிருந்தனர். அந்த நடனத்தை ஆடுபவரின் பாதங்கள் செம்பஞ்சுக் குழம்பால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. ரேவாதேவி கண்டறியாதனவற்றைக் கண்டதுபோல் அந்த இசை நிகழ்ச்சியை, அற்புத ஆட்டத்தைக் கண்டவண்ணமிருந்தாள். 'ஆட்டத்திற்கு ஏற்ற பாட்டா, பாட்டுக்கு ஏற்ற ஆட்டமா? எதைப் புகழ்வது?' என்றே அவளுக்குத் தெரியவில்லை.

*'மாதர் பிறைக் கண்ணியானை*
*மலையான் மகளோடு பாடி*
*போதொடு நீர் சுமந்தேந்தி...'*

ஆடிய அணங்குகள் உமையொரு பாகனை அங்குக் கொண்டு நிறுத்தினர். அந்தி வானத்தைக் கொணர்ந்து நிறுத்தினர். அபிநயத்தின் மூலம் அழகிய நதி பாயும் பூமியைப் படைத்தனர். பிடியும் களிறும் சேர்ந்து அங்கே வருமாறு செய்தனர். அவை காதல் புரியும் அற்புதத்தை முகபாவத்திலே புலப்படுத்தினர். ரேவாதேவியைக் கண்டறியாதன கண்டு களிக்குமாறு செய்தனர்.

இசையிலும் இசையோடு இயைந்த நடனத்திலும் கருத்தைச் செலுத்திக் கொண்டிருந்த ரேவா திடீரென இரைந்தாள். எல்லாரும் திடுக்கிட்டனர்.

"என்ன, என்ன, என்ன நேர்ந்தது இளவரசியாரே? இல்லை, இல்லை, பட்டத்துப் பெருமகளே?" - சந்திரமதி குறும்பு நிறைந்த குரலில் கேட்டாள்.

"நிறுத்துங்கள் என்றால் நிறுத்துங்கள். பாட்டை நிறுத்துங்கள். ஆட்டத்தை நிறுத்துங்கள். வீணை ஒலிக்காதிருக்கட்டும்."

தோழியர் முகங்களிலே கேள்விக்குறிகள். நீலநிற விசும்பிலே அதுவரை வெண்முகிற் கூட்டங்கள் மிதந்து சென்ற வண்ணமிருந்தன. அந்தி வானத்துச் செவ்வொளியால் அவை சிவந்து தோன்றின. எதிர்பாராத விதமாகத் தலைவனின் அதர இன்பம் சுவைத்ததால் சிவந்த கன்னங்களைப் போல் அந்த வெண்பஞ்சு போன்ற மேகங்களிலே செம்மை கலந்திருந்தது. அதோ அதோ செம்மை கறுமையாகிறதே, அடர்ந்த மேகங்கள்... அந்த நிலைதான் இங்கும்.

"வீணை எதற்கடி தோழி? அதோ வீசும் காற்றிலே மரக் கிளைகள் ஆடும்போது எழும் நாதத்தை விட அரசர் கண்டுபிடித்த வீணை* பிரமாதமான ஒலியெழுப்பி விடுகிறதோ? சலசலத்து ஓடும் ஆற்று நீரைவிட அதன் ஏழிசையும் உயர்ந்து விடுகின்றனவோ? அதோ பறந்து செல்கின்றனவே பெயர் தெரியாப் பறவைகள். அவை எழுப்பும் குரலை விட, அடி சந்திரமதி... நீ என்ன பாடி விட்டாய்? மேற்கு வானக் கோடியிலே கருமேகங்கள் ஒன்று கூடும்போது துள்ளி மறைகிறதே மின்னல். அதை விட உங்கள் ஆட்டத்தில் என்ன அதிசயம் இருக்கிறது?" ரேவா வர்ணித்துக் கொண்டே போனாள். தமிழ்நாட்டிற்கு வந்த சில தினங்களிலேயே ரேவாதேவியின் தமிழ் ஆற்றல் தோழியர்களைத் திகைக்க வைத்தது.

"தேவியாரின் பேச்சிலே இன்று இலக்கிய மணம் வீசுகிறதே! காரணம் புரியவில்லையே?" என்று ஒருத்தி கேட்டாள்.

---

* *மகேந்திர வர்மர் 'பரிவாதினி' என்ற வீணையைப் படைத்தார்.*



"அதுவா? சொல்லட்டுமா?" என்று அரசிக்குப் பார்த்தவண்ணம் கேட்ட சந்திரமதி, ஒருத்தியின் காதோடு காதாகக் கூறினாள். அதை அவள் மற்றவளுக்குக் கூறினாள். மற்றவள் மற்றவளுக்கு...

'கலகல' வென்ற சிரிப்பு அந்தக் காவிரி நதிப் பகுதியில் எதிரொலித்தது.

"அரசர் நேற்று இரவு ராணிக்கு வெகுநேரம் ஏதோ கற்றுக் கொடுத்த வண்ணமிருந்தாராம்; பலமுறை கூறியும் புரியாததால் அவர் தேவியாரின் கன்னப் பிரதேசங்களைக்..."

தோழியர் குழுவினர் 'ஹோ ஹோ' என்று நகைத்தனர். சந்திரமதி அடுத்துக் கூறிய வார்த்தை ரேவாவின் காதுகளில் விழுந்திருக்க நியாயமில்லை.

"கன்னஞ் சிவந்தவுடன் ராணி கோபம் கொண்டாராம். தந்தையிடம் கூறிச் சொந்த நாட்டிற்குத் திரும்பிச் செல்வதாகப் பயமுறுத்தினாராம்."

"அப்புறம்?"

"அரசியார் விட்டு விடுவார்? சுலபத்தில் விட்டு விடுவதற்காகவா காஞ்சியை விட்டுப் பொன்னி நதிக்கரையில் புதிய கோட்டை கட்டினார்? அந்தக் கோட்டைக்குள் மற்றொரு கோட்டையாக இதயக் கோட்டையைக் கட்டினார்?"

"ராணியார் அப்போது சிறைப்பட்டிருக்கிறார் என்று சொல்லு!"

நகைப்பின் ஒலி அதிகமாகியது. ரேவாவுக்கு நாணம் தாங்க முடியவில்லை. பேச்சை அந்த இடத்திலிருந்து திருப்ப எண்ணி, "அது சரி; காஞ்சிச் செய்தி ஏதாவது தெரியுமா சந்திரமதி?" என்றாள்.

"தேவியாரே, என்னைக் கேட்கிறீர்களா? தங்கள் திருமணத்திற்குக் கூட இங்கு வராத படைத்தலைவர் உதயசந்திரன் காஞ்சியைப் பற்றி எத்தனையோ செய்திகளை அரசரிடம் கூறியிருப்பாரே. அரசர் சொல்லவில்லையா தாயே?"

- சந்திரமதியின் குரல் நயத்தைக் கண்டு மீண்டும் தோழியரிடையே நகைப்பு. ரேவாவும் உடன் சேர்ந்து கொண்டு, "அரசாங்கச் செய்தியை என்னிடம் ஏனடி அரசர் கூறுகிறார்? அவருக்குத் தெரியுமோ தெரியாதோ, நான் பிறந்தது முதல் தந்தையுடனிருந்து நாட்டு வளப்பம் அறிந்தவள் என்பது. காஞ்சியை விட்டுக் கிளம்பி இங்கு வந்தது ஏனென்று கூறினாரா? திருமணத்திற்கு அமைச்சர் மண்டலத்தார் வந்திருக்கப் படைத்தளபதி வரவில்லை என்பது ஏன் என்று கூறினாரா? இப்போது கூற?" - ரேவாவின் குரலில் சலிப்பு இருந்தது.

"அரசியாரே, அப்படியன்று; கூற வேண்டிய செய்திகள் இன்னும் பல சேர வேண்டும். அப்படிச் சேர்ந்தவுடன் ஒருநாள் அழகிய மலரால் அலங்கரித்த அன்னப் படகேறி வட்ட நிலா கிளம்பும்போது பொன்னி நதியிலே கதை கதையாகக் கூறிச் செல்வார். தேன் நிலவு மறையும்போது சிராப்பள்ளிமலை வந்து விடும். கதையும் முடிந்து விடும். பிறகு கனவுதான். கதையின் பாதியிலேயே கண் துயின்ற நீங்கள் அவர் அரவணைப்..."

"நிறுத்தடி, சந்திரமதி! உன் பொல்லாத் தனத்துக்கு எல்லையே இல்லையா? சுந்தரனிடம் கூறி..." ரேவா கோபம் கொள்வது போன்ற பாவனையில் கூற முற்படுவதற்குள், காவிரிக் கரையோரமாகச் செல்லும் பாட்டையில் குதிரைக் குளம்படி ஓசை கேட்டது. இரண்டு புரவிகள் முன் சென்றன; நடுவே கம்பீரமான புரவி ஒன்று சென்றது. முன் சென்ற புரவிகளின் மீதமர்ந்தோர் ரிஷபக் கொடி பிடித்திருந்தனர்.

குதிரை செல்லும் ஓசை வந்த திசையை நோக்கினாள் ரேவா. எல்லாரும் பார்த்தனர்.

"நம் வீரர்கள் போலிருக்கிறதே" என்றாள் தோழி ஒருத்தி.

"நம் வீரர்கள் மட்டுமா? வீராதி வீரரும் கூட என்று சொல்லடி!" என்று திருத்தினாள் சந்திரமதி.

"உதயசந்திரனா?"

"ஆம்!"



"நந்திபுரக் கோட்டையினின்று காஞ்சிக்குச் செல்கிறார். வந்து இரு நாள்கள் கூட ஆகவில்லை. அதற்குள் கிளம்பி விட்டாரே?"

"பெரிய இடத்துப் பேச்சு நமக்கெதற்கடி?" சந்திரமதி முற்றுப்புள்ளி வைக்க முற்பட்டாள்.

ஆவல் நிறைந்த கண்களுடன் ரேவாதேவி சந்திரமதியை நோக்கி, "சந்திரமதி! நானும் உங்களைப் போலத்தான். எனக்காவது பெரிய இடத்துப் பேச்சைக் கூறக்கூடாதா?" என்றாள்.

"உங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லையம்மா. மதுரையிலிருந்து பாண்டியர்கள் படை புறப்பட்டு விட்டதாம். பல்லவ சாம்ராஜ்யத்தின் அரசராகியே தீருவேன் என்று பிடிவாதமாக இருக்கும் சித்திரமாயன் தூண்டுதல் அதற்குக் காரணமாம். நந்திபுரத்தை முற்றுகையிட அவர்கள் முற்படுவதற்குள் படை திரட்டிக் கொண்டு வர தளபதி விரைகிறார்."

சந்திரமதி தானறிந்த செய்தியைக் கண், காது ஒட்ட வைத்துக் கூறினாள்.

"படை திரட்டுவானேன்? இங்குதான் ஏராளமாகப் படைவீரர்கள் இருக்கிறார்களே! எங்கள் நாட்டினின்று வந்த வீரர்களின் வாளுக்கு வேலையே இல்லையே" என்றாள் ரேவா.

அதற்கு யாராலும் பதில் கூற இயலவில்லை. அந்தச் சமயத்தே மீண்டும் சில வீரர்கள் குதிரை மேல் விரைந்து வந்தனர். இப்போது அவர்கள் வடக்கே காஞ்சிக்குச் செல்லும் பெருஞ் சாலை வழியே செல்லவில்லை; சாலையிலிருந்து பிரிந்து ரேவாதேவியும் மற்றவர்களும் அமர்ந்திருந்த இடத்திற்கு ஒற்றையடிப் பாதை வழியாக வந்தனர். குதிரைகளை மர வேரில் கட்டிவிட்டு வந்தனர். வீரர்களில் ஒருவன் ரேவாதேவியை வணங்கி, "தேவி! இப்போதே புறப்பட வேண்டும்; அரசர் கட்டளை" என்றான்.

"எங்கே புறப்பட வேண்டும்? ஏன் புறப்பட வேண்டும்?" என்று சந்திரமதிதான் கேட்டாள்.

வீரன் அரசியைப் பார்த்தே கூறினான்: "தேவி! இப்போதே நந்திபுரம் செல்ல வேண்டும். அங்கிருந்து காஞ்சிக்கு உடனே கிளம்ப வேண்டும்."

"உடனேயா? நாங்கள் இன்னும் காவிரியின் ஐந்து கிளை நதிகளையும் பார்க்கவில்லை. இப்படியே பூம்புகார் வரையில் போய்..."

"அங்கிருந்து மரக்கலம் ஏறி..."

"ஈழ நாடு சென்று..."

"புஷ்பக விமானம் சம்பாதித்து..."

"புஷ்பகத்தில் சாவகம் புறப்பட்டு..."

இப்படியே ஒவ்வொரு தோழியாகத் தொடர்ந்து பேசிச் சென்றது வீரர்களின் பொறுமையைச் சோதித்தது.

"நேரத்தை வீணாக்குவதில் பயன் இல்லை, அம்மா! போர் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நந்திபுரத்தைச் சுற்றிப் பயங்கரப் போரை எதிர்பார்க்கிறார்கள். காஞ்சிக்குச் சென்று இருப்பதுதான் நல்லதென்பது அரசரின் - அவர் தந்தையுடையவும் - எண்ணம்" என்றான் வீரன்.

"என் தந்தை என்ன சொன்னார்?" ரேவா இப்போதுதான் வாய் திறந்தாள்.

"வைரமேக மகாராஜா தன் படைகளுடன் புறப்படுகிறார். தலைநகருக்குத் திரும்புகிறாராம். அவசரமாக இவற்றையெல்லாம் தளபதியார் கட்டளையிட்டுச் சென்றிருக்கிறார்."

கலகலவென்றிருந்த அந்தக் காவிரிப் பிரதேசம் களையிழந்தது. மரங்களும், செடி கொடிகளும், பாடும் ஆறும், ஆடும் மலரும் ரேவாதேவியும், அவளது தோழிகளும் சிவிகையில் நந்திபுரம் நோக்கிச் செல்வதைக் கண்டு மீண்டும் எப்போது வருவார்களோ என ஏங்கின.

இசை முழக்கமும் 'கலீர் கலீர்' என்ற சதங்கையொலியும் இன்பத் தமிழின் ஓசையும் கேட்டவண்ணமிருந்த அந்தப் பகுதியில்



இரண்டு நாள்கள் கழித்துப் புழுதியைக் கிளப்பிய வண்ணம் படைகள் சென்று கொண்டிருந்தன. ரிஷபக்கொடி பிடித்துச் செல்லும் சில வீரர்களைத் தொடர்ந்து இராட்டிரகூடர்களின் படைகள் சென்று கொண்டிருந்தன. பல்லவர்களை எதிர்த்துப் போரிடச் சில திங்களுக்கு முன்பு மான்யகேட நகரினின்று வந்து அந்த வீரர்கள் மீண்டும் தம் தாயகம் காணச் செல்லும் குதூகலத்தில் சென்ற வண்ணமிருந்தனர். ஆனால் வெகு சீக்கிரத்தில் வேலுக்கும் வாளுக்கும் வேலை இருக்கின்றன என்பது அவர்களுக்கு அப்போது தெரிய நியாயமில்லை.

## 32. ஒத்துழையாமை

கதிரவன் மெல்ல மெல்லக் குட திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். அவன் கதிர்க் கரங்களை வானத் திரையில் அழகு ஓவியம் தீட்டுவதற்காக இந்த மண் மங்கையின் அரவணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டான். இந்திர கோபப் பூவைப் போன்று ஒருமுறை பார்க்கும்போது மேல் திசை விளங்கியது. ஒரு முறையோ பொற் கொல்லன் உருக்கி இழுக்கும் தங்க ரேகை போன்று மேக இடுக்குகளின் இடையே தோன்றியது. கறுமையும், வெண்மையும் கலந்து மேக விளிம்பிலே பல வண்ணக் கோடுகள் தீட்டப்பட்டு ஒருமுறை தோன்றும். பல்லவக் கொடியிலே திகழும் ரிஷபம் வானத்தே எப்படி வந்தது எனத் தோன்றும்படி மேகக் கூட்டம் ஒருமுறை விளங்கும். கோயில் விமானம் போன்று ஒருமுறை அமையும்.

இப்படியாக ரசவாதத் தன்மையால் மாயா ஜாலங்களைப் படைத்தவாறு வேறு உலகிற்குச் செல்பவன் போல் மறைந்த கதிரோனை எதிர்பார்த்ததுபோல் கிராமத்துச் சாவடிகளில் மக்கள்

கூட ஆரம்பித்தனர். ஊர் பொதுச் சபை கூடியிருந்தது. ஆளுங்கணத்தாரும்[1], ஊரவையாரும்[2], அமிர்த கணத்தாரும் கூடியிருந்தனர். மிகவும் அவசரமான காரியத்தின்போது கலந்து முடிவு செய்ய நேரிடும்போது ஊர்ச் சபை கூடும். ஊரவையாரின் உதவியும் கருத்தும் கேட்டே ஆளுங்கணத்தார் நடந்தபடியால் சிற்றூர்களிலும், கிராமப் பகுதிகளிலும் மாலை மங்கி இரவு தொடங்கிய அந்த வேளையிலேயே சபை கூடத் தொடங்கியது. தீவர்த்திகள் ஏற்றப்பட்டன. பல்லவ சாம்ராஜ்யத்தில் இத்தகைய நெருக்கடியான நிலைமை இதற்கு முன்பு ஒரு தலைமுறை காலத்தில் ஏற்பட்டதில்லை என மக்கள் பேசிக் கொண்டனர். அங்கு நடக்கும் செய்தியறியக் கூட்டத்தைச் சுற்றி மக்கள் நின்று கவனித்து வந்தனர்.

ஊர் வாரியக்காரர்களும், அமிர்த கணத்தாரும் பேச்சில் மிக்க கவனத்துடன் கலந்து கொண்டனர். வயது முதிர்ந்த ஓர் அறிஞர் சபைக்குத் தலைமை வகித்தார். பல்லவ சாம்ராஜ்யத்து எல்லா ஊர்களிலும் கிட்டத்தட்ட அதே நாளில் சபை கூடியதனின்றும், வயது முதிர்ந்து வேறு பணி எதையும் கவனிக்காது இல்லத்துள் இருந்த சான்றோர் சபைக்குத் தலைமை தாங்கியதனின்றும் கூட்டத்தின் அவசியமும் அவசரமும் நன்கு விளங்கின.

சபைத் தலைவரது கையில் விடேல் விடுகு* ஓலை இருந்தது. அதை அவர் படித்துச் சபையோருக்கு விளக்கினார். (பொதுவாக எல்லா இடங்களிலும் கிட்டத்தட்ட இஃதே போன்று நடந்தமையால் குறிப்பிட்ட ஊரைக் குறிப்பிடவில்லை).

"படை திரட்டுமாறு அவசர ஆணை அரசரின் பெயரால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது" என்றார் சபைத் தலைவர்.

கோயில் திருப்பணியையும், உழவுத் தொழிலையும் அன்றி வேறுவிதச் செயல்கள் எதிலும் தொடர்பு கொள்ளா ஊரவையாருள்

---

*1. சிற்றூர்களில் பொறுப்பை ஏற்று நடத்துபவர் ஆளுங்கணத்தார்.*
*2. இக்காலக் கவுன்சிலரைப் போன்றோர்.*
* *விடை + வெல் + விடுகு (வெற்றியுடைய ரிஷபச் சின்னம் பொறித்த பல்லவ அரசரின் ஆணை)*



சிலர் தங்கள் ஐயத்தை வினவவே ஆளுங்கணத்தார் அவர்களுக்கு முழு நிகழ்ச்சிகளையும் விளக்குமாறு நேர்ந்தது.

"காஞ்சியில் நடைபெறும் நிகழ்ச்சிகளோடு அவ்வப்போது நாம் தொடர்பு கொண்டுள்ளபடியால் அரசியல் வட்டாரத்தில் நடைபெற்றவற்றைக் கூறுவது என் பொறுப்பே. பரமேஸ்வர வர்மர் இறந்து போனதும் பட்டத்துக்கு யார் வருவது என்ற குழப்பம் பல ஆண்டுகளுக்கு முன்பு நமக்கேற்பட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம். பன்னிரண்டு வயதான சிறு பாலகன் எப்படி நாட்டை ஆள்வான் என்ற ஐயமும் நமக்கு ஏற்படாமலில்லை. ஆனால் முதலமைச்சர் பிரம்மாதிராயரும், படைத்தலைவர் உதயசந்திரனும் உறுதுணையாயிருந்து நாட்டு நலத்தைக் கவனித்தனர்..." என்று கூறத் தொடங்கிய ஆளுங்கணத்தார் தொடர்ந்து சித்திரமாயனால் நாட்டில் ஏற்பட்ட கலவரத்தையும், அக்கலவரம் அடக்கப்பட்டதையும், சித்திரமாயன் வேற்று நாட்டு அரசருடன் தொடர்பு கொண்டு காஞ்சியின் மீது படையெடுத்து வரத் தூண்டியதையும் அந்த முறையில் இராட்டிரகூட மன்னர் காஞ்சியை நோக்கி வந்ததையும், இராட்டிரகூட மன்னர் மகள் ரேவா தேவியை அரசருக்கு மணம் புரிவித்து உதயசந்திரன் இராட்டிரகூடர் நட்பைப் பெற்றதையும் சித்திரமாயன் காஞ்சியினின்று தப்பிப் பாண்டிய நாட்டுக்கு ஓடியதையும் இப்போது பாண்டியர்கள் உதவியுடன் படையெடுத்து வரப் போவதையும் பற்றி விளக்கிக் கூறினார்.

சபையோர் மிக அமைதியாக இருந்து எல்லாவற்றையும் கேட்டனர்.

"ஆமாம்; இப்போது ஊரார் செய்ய வேண்டியது என்ன இருக்கிறது? எல்லா வரிகளும் ஒழுங்காகக் கிடைக்கின்றன; காஞ்சிக்கும் ஒழுங்காக ஒரு பகுதி அனுப்பப்படுகின்றதே" என்றார் கோயில் வாரியத்தைக் கவனிப்போர்.

சபைத் தலைவர் கூறினார்: "நிலைமையை இப்போது மிகவும் ஊன்றிக் கவனிக்க வேண்டியிருக்கிறது. அரசர் தெற்கே புதிய நகரையே நிர்மாணித்துக் கொண்டு கோட்டை கட்டிக் கொண்டு

வாழ்கிறார். காஞ்சியை விட்டு அரசர் வேறு கோட்டையில் வாழ்கிறார் என்பதே புதிய செய்தி. இதுவரை கேள்விப்படாத புதுமை. நம் எவர் கருத்தும் இதில் கலக்கப்படவில்லை. தெற்குப் படையெடுப்பைத் தடுக்க அந்தக் கோட்டை என்ற சமாதானம் இருந்தாலும், இப்போது புதிய ஆபத்தும் இருக்கிறது. நந்திபுரக் கோட்டையை மூன்று பகுதிகளினின்றும் எதிரிகள் தாக்க விரைந்து வருகின்றனராம். பல்லவப் படைபலம் போதாது. உணவுப் பண்டமும், பொன்னும், போரிட ஆட்களும் இப்போது தேவை. தளபதி உதயசந்திரன் இதை வேண்டி ஊர்தோறும் கேட்டு ஓலை விடுத்திருக்கிறார்."

"காஞ்சிக்கு ஆபத்து வந்தால் நாம் திரண்டெழலாம். எங்கேயோவுள்ள கோட்டைக்கு வரும் ஆபத்திற்கு நாமா பொறுப்பு?" சபையில் ஒருவர் கேட்டார். சபைத் தலைவர் மறுமொழி கூறுவதற்குள் தொடர்ந்து பல கேள்விகள்.

"நம்மைக் கேட்டா மற்றக் காரியங்கள் செய்தனர், இதில் கேட்க...?"

"வேற்று நாட்டுப் பெண்ணை மணந்த அரசர் அந்த நாட்டு உதவியையே நாடலாமே!"

"முதலிலேயே ஆட்சியில் நந்திவர்மனை அமர்த்தியதில் எனக்கு கருத்து வேற்றுமை."

"நாட்டு வளப்பம் குலைக்க வந்த போர் எனக்குப் பிடிக்கவில்லை."

"ஓர் ஆள் கூடக் கிராமத்தை விட்டுச் செல்லக் கூடாது."

"அந்தப் போரும் நமக்காக நடப்பதன்று. ஆகையால் அதனுடன் நம் தொடர்பு இருக்கவே முடியாது."

சபைத் தலைவரும், ஆளுங்கணத்தாரும் திகைத்தனர் என்றே கூற வேண்டும். சித்திரமாயனின் ஆதரவாளர்களின் தூண்டுதல் கிராமம் கிராமமாகப் பரவியிருக்குமோ? எப்படியும் சபையோரின் விருப்பத்திற்கு மாறாகப் பல ஊர்களின் தலைவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கிராமங்களிலிருந்தும், சிற்றூர்களிலிருந்தும்



அவசர காலப் படையில் சேர எவரும் முன் வரவில்லை. காஞ்சியை நோக்கிப் போர் வராது என்பது அவர்கள் எண்ணம்.

சில ஊர் சபையார் இதற்கு விலக்காயிருந்தனர். இயன்றளவு மக்கள் வேலும் வாளும் தாங்கிக் காஞ்சி நோக்கி விரைந்தனர்.

## 33. பைரவன் எதிரே

நந்திபுரக் கோட்டையின் மதிலைக் கடந்து எவராலும் உள்ளே நுழைய இயலாது. காஞ்சி எழிலின் வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்த அந்தப் புதுக்கோட்டையின் பிரம்மாண்டமான வாயிற் கதவுகள் அடைக்கப்பட்டுக் கிடந்தாலும் கதிரவனின் பொற்கிரணங்கள் தங்கு தடையின்றிக் கோட்டை மதிலையும் தாண்டி நந்திபுரத்தின் வீதியினுள் பிரவேசித்தன; நகரின் நடுவே கம்பீரமாகத் திகழும் விண்ணகரத்துக் கோயிலின் பொற்கலசங்கள் மீது படிந்தன; அவற்றின் பளபளப்பை மேலும் அதிகமாக்கின; அரசர் அரண்மனையின் மாடங்கள் வழியாகவும், காலதர் வழியாகவும் கடுகிப் புகுந்து கண் துயில்வோர் களைப்பைப் போக்கி விழி மலரைத் திறக்க செய்தன; தடாகத்து வெண் ஆம்பலையும் செங்கமலத்தையும் களிப்படையச் செய்தன; அரண்மனைக் காவில் மலர்ந்திருந்த பூங்கொத்துகளுக்கும் புதுச் சோபை அளித்தன.

விண்ணகரத்தின் அருகிலே அமைந்திருந்த திருக்குளத்தில் அன்று மக்கள் நெருக்கியடித்துக் குழுமியிருந்தனர். கோட்டைக் கதவுகள் திறக்கப்படாமையால் கோட்டைக்கு வெளியே சென்று காவிரி நதியில் நீராட அவர்களால் இயலவில்லை.

விண்ணகரத்து வீற்றிருக்கும் நெடியோன்மீது திருமங்கை மன்னரால் பாடப் பெற்ற புதுப் பாசுரத்தைப் பாடிய வண்ணம்

கோயிலுக்குச் செல்வோரிடம் அன்று வழக்கமான மகிழ்ச்சியைக் காணோம். நந்தவனத்தினின்று பூக்கொய்து வருவோர் பூக்குடலையுடன் திருச்சின்னம் தாங்குவோருடன் நின்று பேசிக் கொண்டிருந்தனர். கோயில் பட்டர் முரசறைவிப்போனுடன் அவசர அவசரமாக ஏதோ கேட்டவண்ணமிருந்தார். நாழிகை வட்டிலில் ஓசை எழுவிப்போரிடம் நகர மாந்தர் நின்று பேசிச் சென்றவண்ணமிருந்தனர்.

பொழுது புலராமுன்னர் கடைசி ஜாமத்தில் கோட்டையினின்று புறப்பட்டுச் சென்ற குதிரை வீரர்கள் உடனே திரும்பிவிட்ட செய்தியை அவர்கள் பேசிக் கொண்டனர். அதைத் தொடர்ந்து, புழுதிப் படையினரை எச்சரிக்கை செய்து எழுப்பும் முரசொலி எழுந்ததைப் பற்றி அவர்கள் பேசிக் கொண்டனர். அந்தப் பேச்சிலிருந்து அவர்கள் ஏதோ அபாயத்தை உணர்ந்தது தெளிவாகப் புலப்பட்டது.

காஞ்சியில் உதயசந்திரனிடமிருந்து அவசர ஓலை கொண்டு வந்து மறுமொழி பெற்றுக் கிளம்பிய வீரர்கள் அன்று இருள் பிரியா முன்னர் நந்திபுரத்துக் கோட்டை வாயில் வழியே ஒரு காத தொலைவு கூடச் சென்றிருக்க மாட்டார்கள். கடல் பொங்கி வருவது போன்ற ஓசை அவர்களுக்குக் கேட்டது. ஓலை கொண்டு வந்த வீரர்களுக்குத் தலைமை தாங்கிய குணதேவன் சற்று நின்று ஓசையைச் செவிமடுத்தான். கடல் பொங்கி வர முடியாது; ஏனெனில் கிழக்கே வெகு தொலைவில் கடல் இருக்கிறது. காவிரி கரை புரண்டிருக்கும் என்றாலும் அது மழை காலமன்று.

குணதேவன் அருகே உயர்ந்திருந்த மரமொன்றின் மீது ஏறிப் பார்த்தான். தீவர்த்திகள் நகர்ந்து கொண்டிருந்தன. பாண்டியர் படைகள்தாம். இவ்வளவு விரைவில் அவை நெருங்கிவிடும் என்று அவன் எண்ணவில்லை. பல்லவ ஒற்றர் குழாம் சரிவரப் பணியாற்றவில்லை என்பதை அவன் புரிந்து கொண்டான். இல்லாவிடில் கோட்டையை இவ்வளவு எளிதில் நெருங்கும் செய்தி எப்படித் தெரியாமல் போயிருக்கும்? படையில் ஒரு பகுதியினர் தென்கிழக்கே எதிரிகளை எதிர்பார்த்துச் சென்றிருந்தனர்; இப்போதோ வடமேற்குப் பகுதியினின்று படைகள்...



குணதேவன் காஞ்சி நோக்கிச் செல்வதை நிறுத்தி நந்திபுரம் கோட்டையை நோக்கியே திரும்பினான். மற்ற வீரர்களையாவது அரசரின் ஓலையைக் கொடுத்து காஞ்சிக்குச் செல்லப் பணித்திருக்கலாம். ஏனோ குணதேவன் அவ்வாறு செய்யவில்லை.

குணதேவன் திரும்பி வந்தபோது நந்திவர்மன் விழித்தெழுந்து நீராடி, திருமங்கை மன்னரின் பாடலை மெல்லிய குரலில் பாடியவாறு கோயிலை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் தந்தை இரண்யவர்மன் இரவு நெடுநேரம் விழித்திருந்து மந்திராலோசனை செய்தபடியால் சற்றுக் கண்ணயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்.

படைத் தளபதி உதயசந்திரனின் ஓலையைத் தந்தையும் மகனும் பலமுறைப் படித்தனர். "நந்திபுரக் கோட்டையினின்று உடனே கிளம்பி வரவும். எதிரிகளுக்கு அந்தக் கோட்டையே இலக்கு. நாம் அங்கிருப்பது போலவே எண்ணச் செய்து அவர்கள் கோட்டையைச் சூழ்ந்தவுடன் தாக்க வேண்டும். முடிந்தால் கோட்டைக்குள்ளே புகவிட்டு விடலாம். அந்தப் போதில் நாம் திருப்பித் தாக்குதல் பயனளிக்கும்" என்ற பகுதிகளைப் படித்து இரண்யவர்மர் கடகடவென நகைத்தார்.

"மாற்றார் படையெடுப்புக்கு அஞ்சிக் கோட்டையை விட்டு ஓடுவதா? இந்த உதயசச்திரனுக்குப் பைத்தியமா பிடித்து விட்டது? நம் படைகளின் பலமறியாது படைத்தளபதி பேசுகிறார் போலும்" என்று கூறினார்.

நந்திவர்மன் மறுமொழி ஏதும் பேசவில்லை. ஏதோ சிந்தையில் ஆழ்ந்திருந்து பிறகு, "தந்தையே! வைரமேக அரசருடன் நம் படை வீரர்களில் ஒரு பகுதியினரும் கொடும்பாளூரை நோக்கி ஒரு பகுதியினரும் சென்றிருப்பதை மறந்து விட்டீர்களோ?" என்று கேட்டான்.

இரண்யவர்மர் அவசரப்பட்டு எதையும் கூறிவிடுபவரல்லர். இதுவரை நடந்து வந்த அரசு காரியங்கள் யாவும் அவரது ஆழ்ந்த

யோசனையின்படியும், வகுக்கும் திட்டங்களின்படியேயும் நடந்து வந்தன. தெற்கே காவிரிக்கரையில் பாதுகாப்பு அரண் ஒன்று இருப்பது மிகத் தேவை என்று உணர்ந்த அவர் நந்திபுரம் எழ யோசனை கூறினார். திருமங்கை மன்னர்பால் சிந்தையைப் பறிகொடுத்து விட்ட நந்திவர்மனோ நந்திபுரத்தை அழகான நகராக்கி, விண்ணகரமொன்றை அமைத்துக் காவிரிக் கரையில் காஞ்சி நகரமே எழுந்து விட்டதோ என எண்ணும்படி செய்து அந்த இடத்தை அடைந்தவர்கள் பிரிய மனமின்றித் தங்குமாறு செய்தான். காஞ்சிக் கோட்டைக்கும் நந்திபுரக் கோட்டைக்கும் சேர்த்து வைத்துக் கொள்ளும் அளவுக்குப் படை வீரர்கள் இல்லை. மகன் கூறியதைக் கேட்டுச் சிந்தனையில் ஆழ்ந்த இரண்யவர்மர் ஏதோ முடிவுக்கு வந்தாற்போல் கூறினார்: "ராஜதந்திரத்தில் ஏதோ பிழை நேர்ந்திருக்கிறது. இல்லையெனில் என் திட்டம் திகைக்காது. இப்போதும் ஒன்றும் மூழ்கிப் போய் விடவில்லை. இந்தக் கோட்டையை எவ்வளவு நாள்கள் அவர்கள் முற்றுகையிடுவார்கள் என்று பார்ப்போம். அதற்குள் காஞ்சியினின்று படைகள் வந்துவிட்டால் எளிதில் வெற்றி மாலை சூடி விடலாம்."

தந்தை கூறியபடியே உதயசந்திரனுக்கு மறுமொழி அனுப்பி, உடனே படைகளுடன் கிளம்புமாறு பணித்தான் நந்திவர்மன். ஓலையைக் கொண்டு செல்வதற்குள் கடல் போன்று மாற்றார் படைகளைக் கண்ட குணதேவன் கோட்டைக்குத் திரும்பிவிட்டான். குணதேவனது செய்கை முதலில் கோபத்தை ஊட்டினாலும் நந்திவர்மன் வெகுவிரைவில் ஆபத்தை உணர்ந்து கொண்டான். கோட்டைக் கதவுகள் அடைக்கப்பட்டன. மதிலின் மறைவிடங்களுக்குச் செல்லப் படை வீரர்களுக்கு உத்தரவிடப்பட்டது. ஆனால், காஞ்சிக்குச் செய்தி எட்டாதது நந்திவர்மனுக்குப் பெருங்குறையாகப் பட்டது. ஓலையைக் கொண்டு செல்லாமல் திரும்பி வந்தது அரசருக்குத் தவறாகப்பட்டதோ என எண்ணிய குணதேவன் தன்னந்தனியே ஓலையைக் கொண்டு காஞ்சிக்கு விரைவதாக வாக்களித்தான். கோட்டைப் பாதுகாப்பைப் பற்றி மீண்டும் தானறிந்தவற்றைச் கூறி விட்டுக் குணதே[illegible] ஆபத்து நிறைந்த அந்த வேளையில்



நாற்புறமும் கிடுக்கிபோல் பாண்டியர் படைகள் நெருங்கிய போதிலும் விரைந்து புரவி மீதேறிச் சென்றான்.

குணதேவன் மனத்தில் பெரும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இந்த நாட்டிற்குத் தன்னால் ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போட முடியவில்லையே என்ற குரலை எழுப்பியது, மனத்தின் ஒரு பகுதி. 'இல்லை; இல்லை. எத்தனையோ மகத்தான செயல்களைப் புரிந்திருக்கிறாய் குணதேவா! உன்னைப் பற்றியே நீயே குறைவாக எண்ணிக் கொண்டு விடாதே. வட பெண்ணையாற்றாங்கரையில் வைரமேகன் கூடாரத்தில் சிக்கிக் கொண்டாயே... காஞ்சிக் கோட்டைக்கு வந்த உன் விரோதிகளின் ஆபத்திலிருந்து காப்பாற்றினாயே... இவையெல்லாம் தீரச் செயல்கள் அன்றோ? எல்லாவற்றுக்கும் மேலாகக் குமுதவல்லியைவிட நாடு முக்கியம் என அலைகிறாயே, அது பெரிய காரியமன்றோ?' குணதேவன் 'ஆம்' என்று ஒப்புக் கொண்டான். குமுதவல்லி காணாமல் போனதிலிருந்து தான் அடைந்த துயரத்தை அவனால் வெளியிட இயலவில்லை. யாராவது நெருங்கியவர்களிடம் அதைக் கொட்டிவிட எண்ணினான். யாரிடம் மனச்சுமையை இறக்குவது? தன் மாமன் கந்ததேவனிடம் செல்வதற்கே அவனுக்கு முகம் இல்லை. தன் பெயரைக் கூறியன்றோ அவரையும், குமுதவல்லியையும் தாமரைப்பாடி வணிகன் ஏமாற்றி அழைத்துச் சென்றான். ஆனால் அவன் காஞ்சிச் சிறைக் கோட்டத்தில் வாடும்போது குமுதவல்லி எங்குச் சென்றிருப்பாள் என்பது அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது.

அவனுக்கு எப்படித் தெரியும்? மாமல்லபுரத்து இளையராணி மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்த குமுதவல்லி, மேன் மாடத்துப் பலகணி வழியாகப் பார்த்தபோது பாறையின் மறைவிலிருந்தொருவன் நந்திவர்மனையும், குணதேவனையும் குறி வைப்பதைப் பார்த்தவுடன் 'ஓ'வென அலறினாள். கத்தி பாய்ந்துவிட்டது. அரசர் தப்பினார். குணதேவன் தாக்குண்டான். அந்தச் சமயம் குழப்பத்தில் மறைந்திருந்தவன் அரண்மனையினுள் நுழைந்து குமுதவல்லியின் முகத்துக்கருகே ஒரு செடியின் வேரை

நீட்டவே அவள் மயங்கி விழவும் விரைவில் யாரும் அறியாவண்ணம் கடற்கரைக்கு அவளைச் சுமந்து சென்றான்.

முன் ஏற்பாடாக இருந்த படகில் குமுதவல்லியை ஏற்றிக் கொண்டு சிறிது தொலைவிலிருந்த மரக்கலத்தில் கொண்டு சேர்த்தான். மரக்கலத்தில் ஈழத்துக்குப் பயணமாவதற்கு வேண்டிய பண்டங்களை ஏற்றியிருந்தார்கள்.

குமுதவல்லி மயக்கம் தெளிந்து எழுந்தபோது தொட்டிலைப் போன்று ஆடும் ஓரிடத்தில் தானிருப்பதை உணர்ந்தாள். மாமல்லபுர அரண்மனையின் அருகே கத்தி பாய்ந்த நிகழ்ச்சியைத்தான் அவள் கடைசியாக அறிந்தது. மயக்கம் தெளிந்து விழித்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவளுக்கு அந்தப் பயங்கர நிகழ்ச்சி மனத்தில் பதிந்தது. ஓவென்று அலற அவள் முற்பட்டாள். ஆனால் நாக்கு எங்கோ ஒட்டிக் கொண்டிருக்கிறதே. நெஞ்சும் உதடும் உலர்ந்திருக்கின்றனவே. கண்பார்வை கூட மயங்கிவிட்டதே? யாரோ வரும் காலடியோசை கேட்டது. இளநீரை ஏந்தியவாறு நடுத்தர வயதுடைய ஒருவன் அமர்ந்திருந்தான்.

"அம்மா சந்திரமதி! இப்படி நீ உன் தந்தையை விட்டுப் பிரிந்து விடலாமா?" என்று அவன் கேட்டபோதுதான் குமுதவல்லி திடுக்கிட்டாள். சந்திரமதி என்ற பெண்ணை அழைத்து வருவதற்குப் பதிலாகத் தன்னை சந்திரமதி எனத் தவறாக எண்ணிக் கவர்ந்து விட்டார்கள் என்பதை ஒரு நொடியில் அவள் உணர்ந்து கொண்டாள். இளநீரை வாங்கிக் குடித்தவுடன் அவளுக்குப் புதுத்தெம்பு வந்தது. தந்தை எங்கு இருக்கிறாரோ - இறந்து விட்டாரோ - அந்தப் பாவிகள் தந்தையைக் கொன்றிருந்தால்? இவற்றை எண்ணும்போது குமுதவல்லிக்கு அழுகை வந்து விட்டது. அவளை அறியாமல் 'அப்பா' என்று கண்ணீர் மல்கக் கூறிவிட்டாள்.

"அப்பாவாம்மா? அப்பா உனக்காக நாகப்பட்டினத்தில் காத்திருக்கிறார். அவர்தான் உன்னை அழைத்து வரச் செய்தார். அந்த முரடன் உனக்கு மயக்க வேரை அதிகம் செலுத்தி விட்டானோ?" என்று அந்தப் புதிய மனிதர் கூறவும் குமுதவல்லியின் சந்தேகம் தெளிந்துவிட்டது. அவள் தந்தை



தன்னைச் சந்திரமதி என எண்ணிக் கவர்ந்து வரக் கட்டளையிட்டிருக்கிறார் போலும். 'ஐயையோ இதனால் என்ன விபரீதம் நேருமோ? தன் மகளைக் காணாது வேறு ஒரு பெண்ணைக் காணும்போது மகளை இழந்த அந்தத் தந்தை என்ன செய்வாரோ? நாகப்பட்டினமாமே? அது எங்கே இருக்கிறதோ? ஏகாம்பரேச்வரா! இதென்ன சோதனை?' - குமுதவல்லியால் சிந்தனை செய்யக்கூட முடியவில்லை. அம்மா என்று வாய் விட்டலற வேண்டும் போலிருந்தது.

அந்த மனிதர் அவளைத் தேற்றி, "அழாதே, சந்திரமதி! என்னை உனக்குத் தெரியாது. உன் தாயின் உடன்பிறந்த தம்பி நான். எத்தனையோ வருடங்களுக்கு முன்பு, நீ ஒரு வயதுக் குழந்தையாயிருந்தபோது பார்த்தது. உன் தாயையே வார்த்தெடுத்தாற்போல் நீ இருக்கிறாய்" என்று கூறி அவள் கண்ணீரைத் துடைக்கக் கரங்களை நீட்டியபோது குமுதவல்லி அவன் கரங்களை ஆவேசத்துடன் தள்ளினாள். பிறகு சட்டென, 'இந்த இடத்தில் நம் ஆத்திரத்தைக் காட்டி விட்டோமே! ஆதரவாகப் பேச இருந்த ஒருவரையும் விரோதித்துக் கொள்கிறோமே' என்று சட்டெனத் தன் முக பாவத்தை மாற்றிக் கொண்டாள். இதழ்க் கடையில் முறுவல் பிறந்தது. அவள் முக பாவத்தைக் கண்ட சந்திரமதியின் தாய் மாமன் தான் செய்யத் துணிந்தது தவறு எனப் புரிந்து கொண்டு, "என்னை மன்னித்துவிடு, சந்திரமதி! கல்யாணமாவதற்குள் தொடுவது தவறுதான். இருந்தாலும் உரிமை நினைவில் அப்படி செய்து விட்டேன்" என்று குழைந்தான்.

'உரிமை - கல்யாணம்' என்ற சொற்களைக் கேட்டபோது மீண்டும் குமுதவல்லிக்கு மயக்கமே வந்துவிட்டது. மீண்டும் கண் விழித்தபோது மரக்கலம் காவிரிப்பூம்பட்டினத்தில் வந்து நங்கூரம் பாய்ச்சி இருப்பதை மரக்கலத்திலுள்ளோர் பேசிக் கொள்வதினின்று உணர்ந்தாள்.

"இங்கேயே இறங்கி நாகப்பட்டினத்துக்குப் பல்லக்கிலோ, வண்டியிலோ அழைத்துச் செல்வதுதான் நல்லது" என்று ஒருவர் கூறவும் சந்திரமதியின் தாய்மாமன் மறுக்கவும் நடந்த சிறு சொற்

போரில் குமுதவல்லி எழுந்து விவாதம் நடந்த இடத்திற்கு வந்தாள். குமுதவல்லியைக் கண்டவுடன் எல்லாரும் அமைதியில் ஆழ்ந்தனர். குமுதவல்லி துணிவுடன் என்ன நடக்கிறதென்று வினவினாள். அவர்கள் கூறவும் குமுதவல்லி சற்று அதிகாரமான குரலில், "தந்தையை நான் விரைவில் காண வேண்டும். அதற்கு எது வழியோ அதைச் செய்யுங்கள்" என்று கூறவும் அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டனர்.

"நாகப்பட்டினத்தில் இறங்குவதானால் தாமதமாகும் என்றாலும் சாலை வழியே செல்வதில் அபாயம் இருக்கிறது. யுத்தம் வருகிறதாம். படைகளின் நடமாட்டம் எங்கும் இருக்கும். நம் திட்டம் குலைந்துவிடும்" என்று முடிவு செய்து நாகப்பட்டினத்திலேயே குமுதவல்லியை இறக்கிவிட முடிவு செய்தனர்.

சந்திரமதியெனத் தவறாக எண்ணியிருந்த குமுதவல்லியை அழைத்துக் கொண்டு பைரவனிடம் சேர்ப்பித்தவுடன் பைரவன் எல்லார் மேலும் சீறி விழுந்தான். குமுதவல்லியை அவன் இதற்கு முன்பு கண்டதில்லை. உலக மக்களின் நெருங்கிய தொடர்பு இல்லாமல் நெருங்கும்போதும், துருத்தியோடும், இரும்போடும், வேலோடும், வாளோடும், சம்மட்டியோடும், காலத்தைக் கழித்த அவனுக்கும் சிறிது இதயம் இருந்தது. சந்திரமதியின் மீது வைத்திருந்த அன்பு, அளவு கடந்த பாசம், அவள் வயதொத்த குமுதவல்லியின் பேரில் திரும்பியது. குமுதவல்லிக்கு ஆறுதல் கூறி அவளைப் பற்றிய செய்தியை வினவினான். குமுதவல்லிக்குத் தொடர்ந்துவந்த அதிர்ச்சி தரும் ஆபத்தான விஷயங்களால் துணிவு சிறிது சிறிதாகப் பிறந்திருந்தது. தன் வரலாறு முழுமையையும் அவள் கூறினாள்.

அவள் கதையைக் கேட்ட பைரவன் 'கலகல'வென நகைத்தான்.

"பெண்ணே! பல்லவ சாம்ராஜ்யத்துக்குப் பெருந்தொண்டு செய்யும் குணதேவனின் முறைப்பெண் அல்லவா நீ? பெண்ணே!



இதைக் கேள். நான் சித்திரமாயனுக்கு உதவியாக ஏராளமான ஆயுதங்களைத் தயாரித்துக் கொடுத்து வந்தேன். இடையில் அவனுக்கு உதவாமல் அரசாங்க விஷயமே பிடிக்காமல் விலகி விட்டேன். ஆனால், என் மகள் அரண்மனையில் சேர்ந்து விட்டாள் என்பதையும் என்னிடம் குருடன் போல் பாவனை செய்த சுந்தரன் பல்லவ ஒற்றன் என்பதையும் அறிந்த பிறகு பல்லவ சாம்ராஜ்யத்துக்கு ஓர் ஊசி கூடச் செய்து கொடுக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இதோ பார் பெண்ணே! கத்தியும் வேலும்! கேடயமும் வாளும்! இவை யாருக்குத் தெரியுமா? சித்திரமாயனுக்கு உதவி செய்யும் படை திரட்டும் பாண்டிய மன்னருக்காகத்தான். பெண்ணே! பெரிய யுத்தம் வரப் போகிறது. பல்லவ நாடு பாழாகப் போகிறது. அதனால் திரும்பி நீ காஞ்சிக்குப் போக வேண்டாம். இங்கே இருந்துவிடு. என் மகளைப் போல் உன்னைக் காப்பாற்றுகிறேன். என் மைத்துனனுக்கு உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்து விடுகிறேன்" என்றான்.

குமுதவல்லி நடுநடுங்கினாள். தனக்கு ஏற்படப் போகும் ஆபத்தைப் பற்றியன்று; பிறந்த நாட்டுக்கு ஏற்படப் போகும் ஆபத்தைப் பற்றியே!

## 34. கோட்டை முற்றுகை

நந்திபுரத்திலிருந்து விரைந்து வந்த வைரமேகனும், அவனைப் பின் தொடர்ந்த இரட்டர் படைகளும் காஞ்சியை அடைந்தபோது காஞ்சி மாநகரம் கலகலப்பற்றிருந்தது. தேரோடும் பெரும் வீதியிலே மக்கள் கூட்டத்தைக் காணவில்லை; எக்காள ஒலியோடு சங்க முழக்கத்தோடு கைலாசநாதர் ஆலயத்தில் பூஜை நடக்கும்போது எள் நுழைய இடமிராது குழுமியிருக்கும் அந்தப் பக்த கோடிகள் எங்கே?

நகரங்களுள் சிறந்ததென வர்ணிக்கப்படும் காஞ்சியில் யுத்த பீதி பரவியிருந்தது. சீன நாட்டினின்று வந்த தூதர்கள் பெருமையோடு கூறிய பல்லவ சாம்ராஜ்யத் தலைநகரான காஞ்சி நகரை விட்டு யுத்த பயத்தால் மக்கள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். கோட்டத் தலைவர்கள் சிலர் கட்டிவிட்ட கதை மக்களை குழப்பத்தில் ஆழ்த்தியது. சாளுக்கியப் படையெடுப்புக்குப் பயந்து அரசர் நந்திபுரக் கோட்டைக்குள் புகுந்து கொண்டாரென்றும், மூன்று தலைமுறையாக இருந்த அவமானமும் அதனால் எழுந்த ஆத்திரமும் நீங்க சாளுக்கியர்கள் காஞ்சி நகரைச் சூறையாடப் போகின்றனர் என்றும், பசு என்றும் பெண்டிர் என்றும் முதியோர் என்றும் தவசிகள் என்றும் பாராமல் கொன்று குவிக்கப் போகின்றனர் என்றும் மக்கள் மனத்தில் எண்ணம் ஏற்படுமாறு செய்து அவர்களைத் திக்பிரமை பிடித்துப் பயந்தோடச் செய்தனர்.

உதயசந்திரன் எவ்வளவோ முயன்றும் பயனில்லை. அவனைப் பற்றிய தவறான வதந்தியை அவனே காதால் கேட்க நேரிட்டபோது அவனது நரம்புகள் துடித்தன. நாட்டை மாற்றானுக்குக் காட்டிக் கொடுத்துத் தான் அரியணை ஏறத் தளபதி செய்த சதி என்ற அவதூறு காற்றில் கலந்து வரும்போது அந்தச் சுத்த வீரனின் இதயம் படபடக்காமல் என்ன செய்யும்? அந்தக் கடமை வீரனின் கட்டுடல் துடிக்காமல் என்ன செய்யும்? அந்த வயிர நெஞ்சனின் வதனத்தில் ஆத்திரம் பொங்கி வராமல் என்ன செய்யும்?

பல்லவ சாம்ராஜ்யத்தைக் காக்க உறுதி பூண்ட அந்த அஞ்சாநெஞ்சனின் உறுதி இன்னும் அதிகமாகியது. இச்சமயத்தே வைரமேகன் வருகை அவனுக்குப் புதுத்தெம்பை அளித்தது. அவரைச் சந்தித்துப் பேசினான்.

சாளுக்கியர்களின் படைகள் கோதாவரி ஆற்றைக் கடக்குமுன் வைரமேகன் படைகள் அந்த ஆற்றைக் கடந்து மறைந்திருக்க வேண்டும். பல்லவ வீரர்கள் நதியின் தென்கரையில் இருப்பர். சாளுக்கியப் படை வீரர்கள் ஆற்றைக் கடக்கும்போது கிடுக்கிபோல் தாக்க வேண்டும். யானைகளை ஆற்றில் நிறுத்திப்



பாலமமைத்துச் சாளுக்கியர்கள் ஆற்றைக் கடப்பர். கடல் போன்ற அந்த நதியில் இயற்கையாக அமைந்த தீவில் மரங்களோடு மரங்களாக மறைந்திருக்கும் பல்லவ வில்லவர்கள் அம்பை மழைபோல் நடுவே நிற்கும் யானைகள் மீது பொழிவர்; யானைகள் மிரண்டு பெருங்குரலில் பிளிறித் தண்ணீரில் நாலாபுறமும் ஓடும். பிரவாக வேகம் அவற்றை அடித்துச் சொல்லும்; அத்துடனின்றி நூற்றுக்கணக்கான முதலைகளைப் பிடித்து அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறேன். முதலைகள் நதியில் சஞ்சரிக்க விட்டுவிட்டால் போதும்...

வைரமேகன் வியப்பில் ஆழ்ந்தார். உதயசந்திரன் போர்த்தந்திரம் கண்டு ஒரு கணம் திகைத்தார்.

சாளுக்கியர்களின் படைகள் காற்றினும் கடிய வேகத்துடன் திரண்டு வரும் செய்தி உதயசந்திரனுக்கு எட்டியது. மறுநாள் பொழுது புலராமுன்னரே வைரமேகனுடன் வந்த படைகளும் குதிரை, யானை, புழுதிப் படைகளும் அணிவகுத்துக் கிளம்பின. இந்தப் படைகளும் நகரை விட்டுப் போய்விட்டால் நகரக் காவலுக்குள்ள சில நூறு போர் வீரர்களே மீதியிருப்பார்.

உதயசந்திரன் கண்ணுறங்கிப் பல நாள்களாகி விட்டன. வீட்டை மறந்து, இல்லாளை மறந்து, இனிய முகத்துடன் கொஞ்சும் மொழி பேசும் குமரனை மறந்து நாட்டை இந்த முறை பெரும் இடரினின்று காப்பாற்றிவிட்டால் பல்லவ சாம்ராஜ்யத்திற்குப் பல தலைமுறைகளுக்கு இடரே கிடையாது என்று அவன் திடமாக நம்பினான்.

தனது திட்டம் வெற்றியுற்றால் தெற்கிலிருந்து வரும் தாக்குதலை வெகு எளிதில் வென்று விடலாம் என்பது அவன் எண்ணம். ஆனால் நடந்தது வேறாக இருந்ததே. காஞ்சியை விட்டுப் பிரிய மனமின்றி வைரமேகன் நந்திபுரத்திலுள்ள தன் மகள் ரேவாதேவியின் நினைவாகவே சென்றபோது பல்லவ நாட்டிற்கு எந்தவித ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது என்ற உறுதி அவன் உள்ளத்திலிருந்ததால் மான்யகேட நகருக்குச் சில வீரர்களை

அனுப்பி முடிந்தளவு படைகளுடன் கோதாவரி நதியின் வடகரையில் சந்திக்குமாறு கட்டளையிட்டுத் தானும் விரைந்து முன்னேறினான்.

காஞ்சி நகருக்கு ஆபத்து ஏதுமில்லை; இனி தெற்கிலிருநது வரும் ஆபத்தொன்றே; அதற்குள் அரசர் காஞ்சிக்கு வந்துவிட்டால் அந்தக் கவலையும் தீர்ந்தது என்று எண்ணியிருந்த உதயசந்திரனைக் குணதேவன் கொண்டு வந்த ஓலை திடுக்கிட வைத்தது.

“நந்திபுரக் கோட்டையை இதற்குள் படைகள் சூழ்ந்திருக்குமென்றா கூறுகிறாய்?” என்று உதயசந்திரன் வினவினான்.

படபடப்பும், பிரயாணக் களைப்பும், ஆபத்தைக் கண்ட அதிர்ச்சியும் சேர குணதேவன் மறுமொழி கூறினான்.

“படைகளின் மதிப்பு தெரியுமா?”

“நான் மதிப்பிடவில்லை. வெகு தொலைவிலிருந்தே படை வருவது பாய்ந்து வரும் கடல் கோஷம் போன்று தோன்றியது. பல ஆயிரம் பேர் இருக்கலாம்.”

உதயசந்திரன் அந்த மண்டபத்தில் ஒருமுறை உலவினான். பிறகு புரவி மீதேறியமர்ந்து வைகுண்டநாதர் விண்ணகரம் நோக்கி விரைந்தான். ஸ்தபதி அங்கில்லை. கைலாசநாதர் ஆலயத்துக்குச் சென்றிருப்பதை அறிந்து அந்த இடம் நோக்கி விரைந்தான்.

குதிரையை மறைவான இடத்தில் கட்டினான். இப்போது படைத்தளபதி வேடத்தில் காட்சியளிக்காது தலையில் முண்டாசுடனும் பொய்த்தாடி மீசையுடனும் வைத்தியர் போல் தோன்றிய உதயசந்திரன் கைலாசநாதர் ஆலயத்து வெளிச்சுற்று வழியே செல்கையில் ராணி ரங்கபதாகை அரண்மனையின் அருகே அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களின் மறைவில் ஸ்தபதியாரும் மற்றுமொருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.



“இந்த நாட்டையே தருவதாகக் கூறுங்கள்; அது மட்டும் முடியாது! கைலாசநாதர் ஆலய அமைப்பு பூசல நாயனாரின் சொத்து. அவரால் பல்லவ மன்னர்களுக்கு அளிக்கப்பட்டது. நான் யார் அதை மாற்றானுக்குத் தர?” - இது ஸ்தபதியின் குரல்.

“பொக்கிஷ அறையின் சாவியையா கொடுக்கப் போகிறீர்கள்? ஒரு கட்டட அமைப்பு; ஓவிய ரகசியம்; சிற்ப முறை. இவ்வளவுதானே! எங்கள் அரசர் சாம்ராஜ்யத்தைக் கத்திமுனையில் வெல்லுவார்; ஆனால் கலையைக் காதலால்தான் வெல்லுவார்” - இது அந்த உருவத்தின் குரல்.

“தெரியும், தெரியும். உங்கள் சாளுக்கிய பரம்பரையின் கலை ஆர்வம்! மாமல்லபுரத்துச் சிற்பங்களைப் பூர்த்தி செய்யாது உங்கள் புலகேசி அழித்தான். தானும் ரசிக்காமல் பிறரையும் வாழவிடாமல் செய்வதால் கலை வளருமா? வடக்கே இடமின்றியன்றோ நூற்றுக்கணக்காக சிற்பிகள் காஞ்சிக்கு வந்தனர்? வந்தவர்களை அரசர் நந்திவர்மர் ‘வா’ வென்றழைத்தார்; அரவணைத்தார்; வாழ வழி கொடுத்தார். எங்கள் கலைத் திறமையைப் பலப்படுத்த வைகுண்ட விண்ணகரம் அமைக்கத் திட்டமிட்டார். கலை உள்ளம் படைத்த எங்கள் அரசருக்குத் துரோகம் செய்ய முடியாது. இதைக் கேட்கவா என்னை இங்கு அழைத்து வந்தீர்? இப்போதே போகப் போகிறீரா? இல்லையேல் கைதட்டி, கண் சாடை காட்டிக் காவலரைக் கூப்பிட்டு உம்மைச் சிறைக்கூடத்துக்கு அனுப்பவா?” என்று இரையவும், அந்த மனிதர் நொடியில் மறைந்தார். ஆனால் வைத்தியர் வடிவிலிருந்த உதயசந்திரன் சட்டென அந்த இடம் வந்து, “அப்படிச் சொல்லக்கூடாது ஸ்தபதியாரே! தாங்கள் எப்படியும் கைலாசநாதர் கோயில் ரகசியத்தைச் சாளுக்கியர்களுக்குச் சொல்லியேயாக வேண்டும்” என்றான்.

“யார் நீ? நீயும் ஒற்றனா?” என்று கூவமுனைந்த ஸ்தபதியாரைத் தடுத்த உதயசந்திரன் தன்னை இன்னாரெனப் புலப்படுத்தி, “ஸ்தபதியாரே, நான் விளையாட்டுக்காகப் புகலவில்லை. உண்மையில் நிலைமை அப்படியிருக்கிறது. தாங்கள்

அந்த ஓலைச் சுவடியைக் கொடுப்பதன் மூலம் சாளுக்கியப் படையெடுப்பைத் தடுக்கலாம்'' என்றான்.

சிற்பி நகைத்தார். "படைத்தலைவரே! தாங்கள் அறியாதது ஏதுமில்லை. தோள் பலமும் வாள் வலிமையுமுள்ள நாம் இப்படிச் சமாதானமாகப் போவது சரியென்று தோன்றவில்லை. தவறு இருந்தால் மன்னித்து விடுங்கள்."

உதயசந்திரன் நகைத்தான். அதில் ஆழ்ந்த சிந்தனையிருந்தது. "சிற்பியாரே! காஞ்சிக் கோட்டையின் தலைவிதி உங்கள் கையில் இருக்கிறது. தொண்டைமான் இளந்திரையன் காலத்திற்கும் முன்பிருந்து அழியாது பெரும் அரச பீடமாகத் திகழ்ந்த காஞ்சி மாநகரை ஒரு சிறு காரியத்தைச் செய்யாததன் மூலம் அழித்துவிடலாம்'' என்றான்.

"தலைவரே! நீங்கள் முன்பு கூறினீர்கள், கைலாசநாதர் கோயில் அமைப்பு முறை மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று. இப்போது கூறுகிறீர்கள், சாளுக்கியர்களை விரட்டியடிக்கப் பல்லவப் படைகளிடம் பலமில்லையா? ஆட்பலம் தேவைப்பட்டால் நூற்றுக்கணக்கான சிற்பிகளைச் சிற்றுளியை விட்டு வேலேந்தச் செய்கிறேன்."

"சிற்பியாரே! தாங்கள் கூறுவதை நான் சிந்திக்காதவனல்லன். தெற்கே இருந்துவரும் ஆபத்தைவிடச் சாளுக்கியர்களின் படையெடுப்பு பெரிதன்று. சாளுக்கியர்களுக்கு இப்போது நாடு பிடிக்கும் ஆசையில்லை என்பது எனக்குத் தெளிவாகத் தெரியும். தந்தை விக்கிரமாதித்தன் ஒருவிதமாக நினைக்கிறார். மகன் கீர்த்திவர்மன் வேறுவிதமாக எண்ணுகிறான். விக்கிரமாதித்தனுக்குத் தமிழகத்துச் சிற்பச் செல்வங்களைப் போன்று தன் நாட்டில் அமைக்க பேராவல். கைலாசநாதர் கோயிலைக் காணப் பெருந்துடிப்பு. கோயிலில் செதுக்கப்பட்டுள்ள சிவ தாண்டவத் தோற்றங்களைக் காண ஆசை. மாடங்களிலே தீட்டப்பட்டுள்ள உயிர்ச் சித்திரங்களைக் காண அவர் நாள்தோறும் கனவு காண்கிறார். அந்த நோக்கத்துடனே வரும் அவர் தன்னுடன் ஏராளமான செல்வக் குவியலைக் கொண்டு வருகிறார். அதனால் சிற்பியாரே! கலைத் திறமை மிகுந்த நீர் இச்சமயத்திலே உம்



அறிவை இந்தக் கோட்டையைக் காக்கப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நான் நாளைய தினம் நகரில் இருக்கும் படைகளுடன் தெற்கே புறப்படுகிறேன். நான் கூறுவது கவனமிருக்கட்டும்'' என்றான். சிற்பியின் மறுமொழிக்குக் கூடக் காத்திராமல் விரைந்து புரவியின் மீதேறிப் பறந்தான். ஸ்தபதியாருக்கு ஒன்றும் தோன்றவில்லை. மூர்க்கத்தனமாக வரும் சாளுக்கியர்களைத் தடுத்து நிறுத்தத் தன்னால் எப்படி முடியும் எனக் கவலைப்பட்டார். அவருடைய கவலை அதிகமாகும் காலம் நெருங்கியது.

உதயசந்திரன் போட்ட திட்டப்படி ஏதும் நடக்கவில்லை. வைரமேகன் படைகளும், பல்லவர் படைகளும் கோதாவரி நதியை அணுகுவதற்குள் சாளுக்கியப் படைகள் கோதாவரியைக் கடந்து விட்டன. முன் யோசனையின்றி எதிர்த்த வைரமேகன் படைகளும், பல்லவர் படைகளும் சாளுக்கியர்களின் பல்லாயிரக்கணக்கான படை பலத்தைத் தாக்க முடியாது சிதறுண்டு ஓடின. வைரமேகன் போர்க்களத்தினின்று மான்ய கேட நகருக்கு விரைந்து சென்றான், ஏராளமான படைகளைத் திரட்டிக் கொண்டு மீண்டும் வர. தோல்வி பெரும் படிப்பினையைக் கொடுத்ததுடன், காஞ்சிக்கு ஆபத்து வருவதன் மூலம் தன் மகளுக்கு ஏதேனும் தீங்கு நேரிடப் போகிறதே என்ற கவலை ஒருபுறம் அவனுக்கு.

காஞ்சி நகரில் சில நூறு பல்லவ வீரர்களே இருந்தனர். காஞ்சி நகரம் களையிழந்தது. உதயசந்திரன் ஒவ்வொரு கோட்டத்துத் தலைவரிடமும் நேரில் சென்று படைகளைத் திரட்டிக் கொண்டு தெற்கு நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தான். வராகக் கொடி பிடித்த சாளுக்கியரின் படைகள் வழியில் எதிர்ப்பு ஏதுமின்றி பிரம்மாண்டமான காஞ்சிக் கோட்டையை அணுகின.

## 35. காஞ்சிக்கு ஆபத்து

நந்திபுரத்தைப் பாண்டியப் படைகள் சூழ்ந்து ஏழு நாள்களுக்கு மேலாகிவிட்டன. கோட்டைக்குள்ளே படைகளைப் புகச் செய்த முயற்சி பலனளிக்கவில்லை. கோட்டைக்குள்ளிருந்து சொற்பப் படைகளைக் கொண்டே நந்திவர்மன் கோட்டையைப் பாதுகாத்து வந்தான். தெற்கே கொடும்பாளூர் வரை சென்ற பல்லவப் படைகள் படுதோல்வியடைந்தன. அந்தச் செய்தியைச் சுந்தரன் கொண்டு வந்தான். கோட்டைக்கு வெளியே செல்லும் ரகசிய வழியின் மூலம் சுந்தரன் வெளியே நடப்பதை அறிந்து வந்தான்.

சந்திரமதி ஆவலுடன் அவன் வருகையை எதிர்நோக்குவாள். சுந்தரன் வந்தவுடன் சந்திரமதியிடம் பேசாமல் நேரே அரசியிடம் சென்று தான் அறிந்தவற்றைக் கூறுவான். ரேவாதேவியின் தந்தை காஞ்சியினின்று புறப்பட்டுச் சென்ற செய்தியை அறிந்தபோது ரேவாதேவியின் கண்கள் கலங்கின. தந்தையை விட்டுப் பிரிந்ததில் அவளுக்கு ஏற்பட்ட கலக்கத்தை சூழ்நிலை மாற்றியது. சந்திரமதியின் வாஞ்சையும், சுந்தரனின் பணிவும், மற்ற தோழிகளின் இயற்கையான அன்பும் ரேவாதேவியை மிகவும் கவர்ந்தன. தாயன்பும், சகோதர பாசமும், கணவனின் காதலும் சேர்ந்து அவளுக்குத் தந்தையைப் பிரிந்த துயர் அதிகம் புலப்படவில்லை.

அன்று சுந்தரன் அவசர அவசரமாக ஓடோடி வந்து கூறினான்: "தேவி! நந்திபுரக் கோட்டை இன்னும் இரண்டு நாள்களுக்கு மேல் தாங்காது போலும். சித்திரமாயன் இன்னும் ஏராளமான வீரர்களுடனும், சேர நாட்டினின்று யானைகளுடனும் வந்து கொண்டிருக்கிறானாம். கோட்டைக் கதவை யானைகளின் மீதேறி



நின்று சரமாரியாக வேல்களை எடுத்து வீசப் போகிறார்களாம். அதில் உங்கள் அருமந்தத் தோழிக்கும் பங்குண்டு" என்று கூறி சந்திரமதியை நோக்கினான் சுந்தரன். சந்திரமதி சீறினாள்.

"எனக்கென்ன பங்கு? நானா வேல்களைத் தயாரித்து அனுப்புகிறேன்? அரசியாவது அரசருக்குத் தன் கண்ணெனும் வேலை அளித்திருக்கிறார் போரிட. நான் யாருக்கு அளிப்பது? போர்க்களத்தைக் கண்டால் ஆறு காதம் ஓடுபவரிடம் வேலைக் கொடுத்து வேடிக்கை பார்ப்பதா?" சந்திரமதி பேச்சின் குறும்புத்தனத்தை சுந்தரன், "வேலை நீ தயாரிக்காவிடில் உன் தந்தை தயாரித்து அளிக்கிறார். அவருடைய பூர்வ ஜன்ம வாசனை எப்படிப் போகும்? நந்திபுரக் கோட்டையைத் தாக்கத் தேவையான வேலும், வாளும் அவர் ஆயிரக்கணக்கில் தயாரிக்கிறாராம்..." என்று கூறவும் சந்திரமதி திடுக்கிட்டு, "அப்படியா சுந்தரா? மெய்யாக என் தந்தையைக் கண்டாயா? அவரைப் பார்த்துப் பேசினாயா? சந்திரமதி என்ற பெண்ணொருத்தி தனக்கிருந்த நினைவாவது அவருக்கு இருக்கிறதா? இன்னும் அவருக்குச் சித்திரமாய மகாராஜா மீது அன்பு மாறவில்லையா?" சந்திரமதி சுந்தரனின் கரங்களைப் பிடித்துக் கொண்டாள்.

"மகாராஜா! ம... கா... ரா... ஜா... இன்னும் உனக்கு மகாராஜா பைத்தியம் விடாதபோது உன் தந்தைக்கு மட்டும் விடுமா? அவருடைய வேல் அவரையே கொல்லப் போகிறது. அவர் தயாரிக்கும் வாள் அவரையே அழிக்கப் போகிறது. ஒரு சிறு ஆணியைக் கூட அவர் சித்திரமாயனுக்குத் தர விட மாட்டேன். அவர் துரோகம் செய்ய மாட்டார் என எண்ணினேன். ஆனால் பழைய ருசி அவரை விடவில்லை..." சுந்தரன் சற்று ஆவேசமாகவே பேசினான்.

அச்சமயம் 'ஹோ ஹோ' என்ற பேரொலி எங்கிருந்தோ கேட்டது. எங்கோ பெரிதாக எழுந்த ஒலி தெளிவாகக் கேட்டது. சந்திரமதியும், ரேவாவும், சுந்தரனும் காது கொடுத்துக் கேட்டனர். கோட்டைக்குள் பகைவர் நுழைந்து விட்டனரோ என்று எண்ணி ஒருகணம் திடுக்கிட்டனர். விவரம் அறிந்துவரச் சுந்தரன் கிளம்பினான்.

வெகுநேரங் கழித்து அவன் திரும்பி வரும்போது முகமலர்ச்சியுடன் வந்தான். ரேவாதேவி அப்போது அங்கில்லை. பல நாள்களுக்குப் பிறகு அரசர் அந்தப்புரம் வருகிறார் எனும் செய்தி வரவே அவள் போய் விட்டாள். சந்திரமதியிடம் சுந்தரன் அன்று நடக்கும் முக்கியச் செய்தியைக் கூறினான். காஞ்சியிலிருந்து புறப்பட்டு வந்த உதயசந்திரன் பெரும் படைகளுடன் கோட்டையைச் சூழ்ந்திருப்பவர்களைத் தாக்கத் தொடங்கி விட்டான் என்றும், பல்லவப் படைகள் பல வியூகமாகப் பிரிந்து பல கோணங்களில் பாண்டியப் படைகளை வளைத்துக் கொண்டு விட்டதாகவும், குணதேவன் கங்க நாட்டாரசன் படைத் துணையுடன் தென்மேற்குத் திசையாக வந்து கொண்டிருப்பதாகவும் அறிவித்தான்.

நந்திபுரக் கோட்டைக்குள் மகிழ்ச்சி உதயமாயிற்று. சற்றும் எதிர்பாராதவிதமாகப் பாண்டியர்கள் கோட்டையைச் சூழ்ந்து கொண்டதும் அவர்களை எதிர்க்கப் போதுமான படைகள் இல்லாமையும் நந்திவர்மனுக்கு மனத்தில் வருத்தத்தை அளித்திருந்தன. கோட்டத் தலைவர்கள் ஒத்துழையாமை பெரும் ஆத்திரத்தையும் விளைவித்தது. உதயசந்திரன் பெரும் படைகளுடன் வருகிறானென்ற செய்தி நந்திவர்மனுக்குப் புதிய தெம்பை அளித்தது. கோட்டைக்கு வெளியே சென்று உதயசந்திரனுடன் சேர்ந்து கொண்டு மாற்றான் படைகளுக்குக் கூற்றுவனாக வேண்டுமெனத் துடித்தான். கோட்டையை முற்றுகையிட்டிருந்த படைகள் கலைந்து தங்களை எதிர்ப்போரைத் தாக்கச் செல்கின்றன என அறிந்த நந்திவர்மன் கோட்டைக்குள்ளிருக்கும் வீரர்களை ஒன்று சேர்த்துக் கொண்டு போர்க்களத்துக்குப் புறப்பட்டான். ரேவாதேவி மங்கல ஆரத்தி எடுத்து வெற்றியுடன் திரும்பி வருக என விடை கொடுக்க, இரண்யவர்மன் ஆசி கூற, மக்கள் வெற்றிக் குரல் எழுப்ப, வெண்புரவி மீதமர்ந்து நந்திவர்மன் கிளம்பினான்.

பல்லவர்களுக்குச் சாதகமான காற்று தெற்கே வீசியபோது, வடக்கே காஞ்சிக் கோட்டை மீது பெரும் சூறாவளி வீசியது.



காஞ்சியின் நிர்வாகத்தைப் புழல் கோட்டத்தாரே ஏற்றிருந்தார் எனக் கூறலாம். பல்லவ மன்னருக்கு நன்றியுடன் நடப்போரைத் தேடி அவர்களைச் சிறையிலடைத்தார்.

‘ஹோ ஹோ’ என்ற வெறி முழக்கத்தோடு சாளுக்கியர் படைகள் காஞ்சிக் கோட்டையை நெருங்கின. வழியே எதிர்ப்பு இராததால் வெற்றி எளிது என அவர்கள் எண்ணவில்லை. கோட்டையை நெருங்கும்போது பலத்த தாக்குதல் இருக்கும் என்று எதையும் எதிர்பார்த்திருந்தனர். கோட்டைக் கதவுகள் திறந்திருந்தன. அது அவர்களுக்கு வியப்பை அளித்தது. பல்லவப் படைத் தளபதியும் காஞ்சியை விட்டு வெளியேறிவிட்டான் என்ற செய்தியை விக்கிரமாதித்தன் அறிந்தபோதிலும் வேறு சூழ்ச்சி ஏதாவதிருக்குமோ என எண்ணினான்.

கோட்டையை நெருங்கிச் சூழ்ந்து கொண்டு நின்ற படைகளைப் புழல் கோட்டத்தார் கண்டார். கோட்டை மீதிருந்து இறங்கித் தன்னுடன் ஐவரை அழைத்துக் கொண்டு சாளுக்கிய மன்னரை நோக்கி வரலானார்.

காஞ்சியின் வீதிகள் வெறிச்சோடியிருந்தன. காலத்திற்கும் கேட்டிராத ஓர் அதிசயம் காஞ்சியில் நடப்பதாகப் பேசிக் கொண்டனர். வீட்டுக் கதவுகள் தாளிடப்பட்டிருந்தன. கோயில் களின் பிரம்மாண்டமான கதவுகள் மூடப்பட்டு விட்டன.

வெற்றிப் புன்னகையுடன் தன்னை நோக்கி வருபவரை எச்சரிக்கையுடன் வரவேற்றான் விக்கிரமாதித்தன்.

“காஞ்சி மக்கள் தங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையெல்லாம் நகரத்திற்கு எந்தவித ஊனமும் நேரிடக்கூடாது என்பதே” என்று புழல் கோட்டத்தார் கோரிக்கை விடுத்தார்.

போர்க்களங்ககள் பலவற்றில் மாற்றார் நெஞ்சத்தைப் பிளந்து பழகியிருந்த விக்கிரமாதித்தன் புழல் கோட்டத்தாரின் சொற்களிலிருந்து அவர் உள்ளத்தை ஊடுருவி அறிந்து,

'கடகட'வென நகைத்தான். அருகே இருந்த கீர்த்திவர்மனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. பொங்கிப் பாய்ந்து வந்த வெள்ளத்திற்கு அணை போட்டாற்போல் கோட்டை வாயிலருகே வந்த தந்தை தத்துவம் பேசுகிறாரே எனச் சீறினான்.

"இப்படிச் செய்யலாம், இப்படிச் செய்யக்கூடாது என்று எங்களுக்குக் கோரிக்கை விடுக்க நீர் யார்? பிடியுங்கள் முதலில் இவனை! உம்... படைகள் நகருக்குள் நுழையட்டும். கண்ட இடங்களைக் கொள்ளையடிங்கள். வாதாபிக்கு நேர்ந்த கதியை மறந்தீர்களா? எருதுக் கொடி பறக்கும் மாடங்களிலே நம் கொடியை ஏற்றுங்கள். மாளிகைகளைத் தரை மட்டமாக்குங்கள்! பொக்கிஷ சாலையைச் சூறையாடுங்கள்! அக்கினியின் செந்நாக்குகளுக்குச் சிறந்த விருந்தளியுங்கள்!" என்று கர்ஜனை புரிந்தான்.

உடனே போர் முரசம் எழுந்தது. கொம்பும் மற்றும் வீரர்களுக்கு வெறியூட்டும் பாறை போன்ற முழக்கங்களும் எழுந்தன. வெறியுணர்ச்சியுடன் பாயத் துடித்த சாளுக்கிய வீரர்களை அனுபவமும் அறிவும் மிகுந்த விக்கிரமாதித்தன் கையமர்த்தி, "மகனே! சற்று பொறு! படை திரட்டி நெடுந்தூரம் வந்தது காஞ்சியை அழிக்கவன்று! காஞ்சியின் வனப்பைக் காண. காஞ்சி சுந்தரியின் பேரெழில் காண! அவள் தன்னிடத்தே கொண்டிருக்கும் சிற்ப அற்புதங்களைக் காண! இந்த மாபெரும் நகரில் உனக்கு மகுடாபிஷேகம் செய்வேன். நகரை அழித்தால் எங்கே, இடுகாட்டிலா நீ அரியணை ஏறுவாய்?" என்றான்.

தந்தையின் சொற்கள் கீர்த்திவர்மனின் சீற்றத்தைச் சிறிது தணித்தன.

புழல் கோட்டத்தார் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சாளுக்கிய மன்னரை வரவேற்று அழைத்துச் சென்றார்.

இவற்றையெல்லாம் அறிந்த ஸ்தபதியார் துடிதுடித்தார். படைத்தலைவர் உதயசந்திரன் சொற்களை எண்ணி எண்ணி வியந்தார். 'முக்காலமும் அறிந்த முனிவரா உதயசந்திரன்? காஞ்சிக்கு இந்த நிலை ஏற்படும் என்று தெரிந்து தானோ தெற்கு



நோக்கிச் சென்றார்? நம்மிடம் காஞ்சியைக் காப்பாற்றும் பொறுப்பை அளித்தபோது அதை வேடிக்கை எனக் கருதினோமே. இப்போது உண்மையில் மாபெரும் பொறுப்பு நம்மிடையே! பல நூற்றாண்டுகளாகப் பழுது படாமலிருந்த பல்லவ அரியணையில் மாற்றான் வந்து அமர விடக் கூடாது. ஒரு முகூர்த்த நேரங்கூட சாளுக்கிய மன்னர் காஞ்சி அரண்மனையில் தங்கக்கூடாது. அதற்காக நம் உயிரை வேண்டுமானாலும் அளிப்போம்' என்ற துடிப்புடன் சாளுக்கிய மன்னரைக் காண எழுந்த ஸ்தபதியாரின் எதிரே புழல் கோட்டத்தாரும், சாளுக்கிய வீரர்களும் வந்து கொண்டிருந்தனர்.

"அவர்தான், உடனே பிடியுங்கள்!" என்று கட்டளையிட்டார் புழல் கோட்டத்தார். ஸ்தபதியாரைத் தங்கள் முரட்டுக் கரங்களால் பிடித்து இழுத்துக் கொண்டு விக்கிரமாதித்தன் முன்பு கொண்டு சென்று நிறுத்தினார்கள் சில வீரர்கள்.

## 36. சிற்பியின் தியாகம்

சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் கைலாச நாதர் கோயில் வனப்பைக் கண்டு வியந்து நின்றான். தாண்டவச் சிற்பங்களைக் கண்டு திகைத்து நின்றான். மாடங்களிலே தீட்டப்பட்ட வண்ண ஓவியங்களைக் கண்டு அவனடைந்த ஆச்சர்யத்துக்கு அளவேயில்லை.

"இந்தச் சித்திரங்களை இப்படியே பெயர்த்தெடுத்துச் சென்று விடலாமா?" என்று சாளுக்கிய மன்னன் ஆர்வமும், தன் நாட்டில் உடனே கலைத்திறமையைப் பரிமளிக்கச் செய்ய வேண்டும் என்ற ஆத்திரமும் மிகக் கேட்டான்.

புழல் கோட்டத்தார் நகைத்தார். அந்த நகைப்பின் பொருள் விளங்காது எல்லாரும் அவரைத் திரும்பிப் பார்க்கவே அவர்

கூறினார்: "மன்னா! இவற்றைப் பெயர்த்தெடுப்பானேன்? ஜீவ ஓவியங்களைத் தீட்டிய ஓவியர்களை இங்கிருந்து அழைத்துச் செல்லுங்கள். அவர்கள் வராவிடில் அவர்களது விரல்களைத் துண்டித்துச் செல்லுங்கள்" என்று கூறினார்.

அந்தச் சமயம் "சீ" என்ற குரல் கேட்டது. ஸ்தபதியாரை அழைத்து வந்து விக்கிரமாதித்தன் முன்பு நிறுத்தியிருந்தனர் சில வீரர்கள்.

"அரசே! இவன்தான் இதுபோல் சிற்ப அற்புதங்களை அமைக்கக் கூடியவன். இப்போது கைலாசநாதர் ஆலயம் போல் மற்றொரு கோயிலைச் சிருஷ்டித்து வருகிறான்" என்று புழல் கோட்டத்தார் அறிமுகப்படுத்தினார்.

விக்கிரமாதித்தன் ஸ்தபதியாரை ஏற இறங்கப் பார்த்தான். பின்பு கைலாசநாதர் கோயிலை ஒருமுறை ஏறிட்டு நோக்கினான்.

"ஐயா!" என்று கம்பீரமான குரலில் சாளுக்கிய மன்னன் அழைத்தபோது அங்கிருந்தவர் திகைத்து விட்டனர். "இந்தக் கோயிலைச் சிருஷ்டித்தவர் யார் தெரியுமா?"

"எங்கள் மூதாதையர்."

"இதன் அமைப்பு விவரம் உம்மிடம் இருக்கிறதல்லவா?"

"ஆம்."

"அதைத் தர முடியுமா?"

ஸ்தபதியார் ஒருகணம் கூட யோசிக்கவில்லை. "முடியாது" என்று கணீரென்று பதில் கொடுத்தார்.

அங்கிருந்தோரிடையே 'ஹா ஹா' காரம் எழும்பியது. அடிமை ரத்தம் ஓடியவர்கள் 'ஹீ ஹீ' என்று ஸ்தபதியாரை நோக்கித் துள்ளினர். சாளுக்கியர்களை வரவேற்ற சதிகாரர்கள் சீறி எழுந்தனர்.

புலகேசிப் பரம்பரையில் வந்த மன்னன் புன்னகை மாறாது அமைதியாக, "ஸ்தபதியாரே! உம்முடைய நேர்மையை மெச்சுகிறேன். இரண்டு காரணங்களுக்காக உம்மிடம் அதைக்



கேட்கிறேன். ஒன்று, கலையை மற்ற நாட்டினர் அறிவதில் தவறில்லை என்பது. மற்றொன்று, கோயில் அமைப்பு விவரம் அளிப்பதால் உங்கள் நாடு பிழைக்கும்."

ஸ்தபதியார் கணீரென்ற குரலில், "கோயில் அமைப்பை அளிக்க அது என் சொத்தன்று; அந்த ரகசியத்தைக் கொடுப்பதன் மூலம் இந்த நாடு பிழைக்கும் என்றால் - அந்த உடன்படிக்கையைச் செய்து கொள்ள நான் மன்னனல்லன். இந்த நாட்டு மன்னரைக் கேளுங்கள். அவர் வருவார் - விரைவில் வருவார்" என்றார்.

புழல் கோட்டத்தாரின் சீற்றம் இப்போது அதிகமானது. விக்கிரமாதித்தன், புழல் கோட்டத்தாரைப் பேசவிடாது அடக்கி, "ஸ்தபதியாரே! என் மகனை நீர் அறிய மாட்டீர். இந்த நகரைச் சுற்றப் போயிருக்கிறான். கருவூலத்திலும், மாளிகையிலும், கடிகைகளிலும் அதோ வராகக் கொடி பறக்கிறதே அது அவனது செயல். என் கண் அசைப்பு சிறிது இருந்தால் போதும்; இந்தப் பொன்னகரம் பூழ்தியடைந்திருக்கும். மகா சாம்ராஜ்யத்துத் தலைநகரம் மண் மேடிட்டுப் போயிருக்கும். 'நகரேஷூகாஞ்சி' நாசமடைந்திருக்கும். அப்படியாகாததற்குக் காரணம் ஏதாவது இருக்கிறதென்பதை நீர் அறிவீரா? இந்நாட்டு மக்கள் மீதுள்ள ஆசையால் அன்று; எங்களை அழைத்த உங்களில் ஒருவரின் மீதுள்ள அன்பாலன்று; எங்களிடம் படைபலம் இல்லாமல் போய்விட்டதோ என்ற எண்ணத்தினால் அன்று; காஞ்சியைப் பிடித்துத் தெற்கே தொண்டித் துறைமுகம் வரை போகப் போகிறோம். ஆனால் காலமென்பது இன்றுடன் முடியப் போகிறதொன்றன்று; மன்னாதி மன்னர் என்ற பெயர் என் தலையுடன் போய்விடப் போவதொன்றன்று. எத்தனையோ போர்க்களங்களில் புகழ் மாலை சூடியிருக்கிறேன். பெற்ற விழுப்புண்களுக்குக் கணக்கில்லை - எல்லாவற்றுக்கும் மேலாக, எங்கள் நகரை அழித்தோரைப் பழிக்குப்பழி தீர்க்க வேண்டுமென்ற வஞ்சம் ஒன்றுண்டு - அது எங்கள் சுயமரியாதை. ஆனால் இவையனைத்தையும் விட்டுக் காஞ்சியில் அமைதியாகச் சாளுக்கியர்கள் இருக்கின்றனர் என்றால் அதற்குக் காரணம் என்ன

தெரியுமா? இதோ - இதோ கம்பீரமாகத் திகழ்கிறதே இந்தக் கோயில், இதோ என்னுடன் பேசுகின்றனவே சிற்பங்கள் - இவைதாம். என் இதயத்தைக் கவர்ந்துவிட்டனவே இந்த ஓவியங்கள் -

"ஸ்தபதியாரே! கடைசியாக ஒன்று கூற விரும்புகிறேன். கைலாசநாதர் கோயில் அமைப்புச் சுவடியைக் கொடுத்தால் போதும்; நாங்கள் நாளையே இங்கிருந்து கிளம்பிவிடுகிறோம். அதற்கு மேலாகச் சிற்பிகள் அனைவரும் எம்முடன் வருவதாக இருந்தால் இதோ இந்தச் செல்வக் குவியல்கள் அனைத்தும் இந்தக் கோயிலுக்கே. இவை அனைத்தும் முன்பு இங்கிருந்து கவர்ந்து செல்லப்பட்டவை. யாரங்கே! அவற்றைக் கொண்டு வா" என்று கூறிக் கை தட்டினார்.

தலையிலே சுமந்த மூட்டைகளுடன் பலர் வந்து அங்கே செல்வக் குவியல்களைக் கொட்டினர். வைர வைடூரியங்கள், கோமேதகம், ரத்தினம், மரகதம், பச்சை... ஆஹா! எத்தனை வித ஆபரணங்கள்!

கூடியிருந்தோர் அவற்றை வியப்புடன் பார்த்தனர். ஸ்தபதியார் கண்கள் கண்ணீரால் ஜ்வலித்தன. 'இந்த நகரம் என்னால் காப்பாற்றப்படுமானால் அதற்காக என் உயிரையே கொடுக்கத் தவறேன்!' என்று அவர் முடிவு செய்தார்.

முக மாறுதலிலிருந்தே ஸ்தபதியரின் உள்ளத்தின் மாற்றமறிந்த விக்கிரமாதித்தன், "ஸ்தபதியாரே! இந்தச் செல்வங்கள் கைலாசநாதருக்கே சொந்தமானவை. அவற்றைப் பொக்கிஷத்தில் சேர்ப்பித்து விடுங்கள். எங்கள் பிரதிநிதி இங்கிருந்து அவற்றைப் பரிபாலிப்பார்" என்றான்.

ஸ்தபதியார் கைலாசநாதர் ஆலய அமைப்புச் சுவடியைக் கொண்டு வரத் தன் இல்லம் நோக்கிச் சென்றார். விக்கிரமாதித்தன் பெரும் போர்க்களங்களில் அடைந்த வெற்றியை விட இதைப் பெரிதாக நினைத்தான். அவன் தோள்கள் இன்னும் உயர்ந்தன.



ஆனால், விக்கிரமாதித்தன் நினைத்தபடி எல்லாம் நடைபெறவில்லை. காஞ்சி மக்கள் சாளுக்கிய மன்னரின் சிறந்த குணத்தைப் பாராட்டி மகிழ்ந்தாலும் இந்த நிகழ்ச்சியைக் கண்டு மனம் வெதும்பிக் கொண்டிருந்த சிலருக்குக் கிடைத்த செய்தியால் அவர்கள் முகம் மலர்ந்தது. தெற்கே போர்க்களத்திலிருந்து கிடைத்த செய்தியே அது!

## 37. பிரிந்தவர் கூடினர்

காஞ்சி நகரை விட்டுச் சாளுக்கியர் படைகள் கிளம்பின. வெறுங்கையுடன் கிளம்பவில்லை. கைலாசநாதர் ஆலயத்து அமைப்பு முறை நிறைந்த சுவடிகளுடன் கிளம்பின; கைதேர்ந்த சிற்பிகளைத் தம்முடன் அழைத்துக் கொண்டு கிளம்பின. கீர்த்திவர்மனுக்கு மட்டும் மனக்குறைதான். தன் புஜ பலத்தைப் புலப்படுத்த வழியே இல்லாது போய் விட்டதே என்ற ஏக்கம். காஞ்சியில் தன்னைப் பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரியுமாறு தந்தை கட்டளையிட்டதை அவன் ஏற்கவில்லை. இளைஞனான அவனுக்குப் போர்த்தாகம் எடுத்திருந்தது. எனினும் தந்தையின் சொல்லைத் தட்ட அவனால் முடியவில்லை. கடல் போன்ற பெரும்படைகள் காஞ்சியினின்று புறப்பட்டன. அவர்களுக்கு வேறு பணி இருந்தது. இராட்டிரகூடர்களைத் தாக்கவேண்டிய அவசியமும் இருந்தது. காஞ்சியின் பொறுப்பைப் புழல் கோட்டத்தார் ஏற்றிருந்தார். அவருக்கே மனக் குழப்பம். எந்தச் சமயத்திலும் மீண்டும் நந்திவர்மன் படைகள் வரலாம். அப்போது தன் நிலை என்னவாகுமோ என்ற மனக்கவலை அவரைச் சூழ்ந்தது. அதற்கேற்றாற்போல் தெற்கிலிருந்து வந்த செய்தி அவரைத் திடுக்கிடச் செய்தது. நந்திபுரக் கோட்டையைச்

சூழ்ந்திருந்த மாற்றார் படைகளை உதயசந்திரன் தன் போர்த்திறமையால் முறியடித்ததுடன் பாண்டியப் படைகளை அவர்கள் எல்லைக்கப்பாலும் விரட்டி விட்டு வந்தான். குணதேவன் தலைமையில் வந்த படைகளைக் கரூர் அருகே சித்திரமாயன் தடுத்து நிறுத்தியபோது ஏற்பட்ட பயங்கரப் போரில் சித்திரமாயன் மாண்டான்.

வெற்றி வாகையுடன் கூடிய பல்லவர் படைகள் நந்திவர்மன், ரேவாதேவி புடை சூழக் காஞ்சி நோக்கி வருகிறது என்ற செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது. கதிரவன் உதயம் கண்டவுடன் மூடுபனி விலகுவதுபோல் மக்கள் மனத்தில் இருந்த ஐயப்பாடு கொஞ்சம் கொஞ்சமாக விலகியது.

தாமரைப்பாடி கிராமம் புதுப் பொலிவுடன் விளங்கியது. பல ஆண்டுகளுக்குப் பிறகு கந்ததேவன் இதயத்தில் கலகலப்பு மிகுந்திருந்தது. கவனிப்பாரின்றி இவ்வளவு காலம் இருந்த வீட்டில் ஒட்டடைகள் அடிக்கப்பட்டன. தைத் திங்கள் நெருங்குகிறது என்பதற்காக அன்று. கந்ததேவனின் மகள் குமுதவல்லியும், குணதேவனும் வரப் போவதாகச் செய்தி கிடைத்திருந்ததனால்!

தாமரைப்பாடி இளைஞன் குணதேவன் போர்க்களத்தே பெரும் சாகஸங்கள் செய்து பெரும் பெயருடன் திரும்புகிறான் என்ற செய்தி எங்கும் எட்டியிருந்தது. அந்த மாவீரனை வரவேற்று வீதியில் நீர் தெளித்தனர்; கோலமிட்டனர்; மகர தோரணங்கள் கட்டினர்; வீட்டை அழகுபடுத்தினர். பெண்டிர், வீரனைக் காண வீட்டின் முகப்பில் நின்றனர். முதியவர்கள் கூடக் கந்ததேவனின் மருமகனின் பெருமையைப் பேசினர். குமுதவல்லியைப் பற்றிய பேச்சு வந்தது.

"கந்ததேவா, அதெப்படி உன்னை ஏமாற்றி உன் மகளை ஏமாற்றிக் கவர்ந்து சென்றனர்? மகள் கிடைத்தது உயிரே கிடைத்தது போல்தான்" என்றார் ஒருவர்.

"கந்ததேவனா விடுபவர்? மகளைத் தேடப் பல்லவப் படைகள் முழுமையையுமே அனுப்பி விட மாட்டாரா?" - மற்றொருவர்.



"அப்படித்தான் நேர்ந்துவிட்டதாம். மகள் நாகப்பட்டினத்தில் இருப்பதாக சுந்தரன் என்ற ஒற்றன் அறிந்து பெரும்படையுடன் அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டானாம். மாற்றார்க்கு ஆயுதங்களைத் தயாரிக்கும் பெரும் கூடமாம் அது!" - இன்னொருவர்.

"யாரது? பைரவனா? அவனா என் மகளைக் கவர்ந்து சென்றான்? இருக்காது" என்று கந்ததேவன் பேச்சிடையே கலந்தான். பைரவனை அவன் கட்டுண்டு கிடந்த வீட்டில் சந்தித்திருக்கிறான்.

"உம்... நம் நாட்டிற்குத் திடீரெனப் போதாத வேளைவந்தது; பனி போல் வந்தது; கலைந்தது" என்று ஒருவர் கூறினார்.

"ஆமாம்; கதிரவன் போன்று உதயசந்திரன் இல்லாவிடில் ரொம்பவும் தொல்லைதான்!"

"ஆம்; ஆம்! இன்று படைத்தளபதி உதயசந்திரன் கூட இங்கு வருகிறாராமே!" என்று ஒருவர் கூறினார்.

உதயசந்திரன் வரப் போகிறார், வரப் போகிறார் என்ற பரபரப்பு எங்கும் மிதந்திருந்தது. மறுநாள் பொழுது புலரும்போது தாமரைப்பாடியை நோக்கிச் சிவிகைகளும் குதிரை வீரர்களும் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வருகை பற்றிய செய்தி கிராமத்தில் பரவியது. மக்கள் அதிகாலை வேளையிலும் எங்கும் குழுமினர்.

காலை இளங்காற்று சற்றுக் குளிரையும் கலந்து வீசும் அந்த வேளையில், இருள் நன்றாக விலகி, தெளிவாக ஒளி பரவ ஆரம்பித்தபோது ஏழெட்டுச் சிவிகைகளும் குதிரைகளும் ஒட்டகங்களும் தாமரைப்பாடிக்குள் பிரவேசிப்பது நன்றாகத் தெரிந்தது. இத்தனை பேரையும் தாமரைப்பாடி தாங்குமா என்பது சந்தேகம்தான். ஆனால் அந்தப் பரிவாரங்களோடு சென்று பார்ப்போம்.

ஒரு பல்லக்கில் ரேவாதேவி, மற்றொன்றில் சந்திரமதி, மூன்றாவதில் குமுதவல்லி. மற்றவற்றில் முக்கியப் பணிப்

பெண்கள். குதிரையில் இருப்பவர்கள் நந்திவர்மனாகவும் உதயசந்திரனாகவும் குணதேவனாகவும் இருக்க வேண்டும்.

அப்படியில்லை. குணதேவன் மட்டுமே குதிரை மீது அமர்ந்திருந்தான். வழிப்பயணக் களைப்பு முகத்தில் தாண்டவமாடினாலும் பிறந்த ஊரை மிதித்ததில் முகத்தில் பெருமை பொங்கியது. உதயசந்திரனும் நந்திவர்மனும் நேரே சென்று விட்டதாகப் பேசிக் கொண்டார்கள். குணதேவனைப் பற்றி அறிந்த ரேவாதேவி, குமுதவல்லியைப் பற்றியும் அரச காரியத்திற்கு அவளது பெரும் சேவையைப் பற்றியும் அறிந்து அவர்கள் கிராமத்தைப் பார்க்க விரும்பினாள். காஞ்சிக்குப் போய்விட்டால் வெற்றி விழாக் களிப்பில், மணமாகி முதல் முதல் தலைநகரில் நுழையும் கோலாகலத்தில் தாமரைப்பாடி மறந்து விடுமோ என்று முன்னரே அங்கு வர விருப்பம் தெரிவித்தாள்.

பல்லவ சாம்ராஜ்ய அரசி வந்திருக்கிறாள் என்ற செய்தி அறிந்த மக்கள் பேரானந்தம் அடைந்தனர். வீட்டுக்கு வீடு ஆரத்தி, வாழ்க கோஷம். கந்ததேவன் வீட்டை அடைந்தவுடன் குமுதவல்லி இறங்கினாள். தந்தையைக் கண்டவுடன் அவள் கண்கள் நீரைப் பொழிந்தன. தாயும் மகளும் சந்தித்த அந்த நிலை ரேவாவின் மனத்திலும் கிளர்ச்சியை மூட்டியிருக்க வேண்டும்.

சந்திரமதி கந்ததேவனை நோக்கி, "ஐயா! உங்கள் மகளை உங்களிடம் சேர்த்து விட்டோம்; இனி வேலை முடிந்தது. வருகிறோம்" என்று கைகூப்பி முகத்தில் குறும்புத்தனம் மிளிர நின்றாள்.

"வருகிறோம் என்றால் எப்போது என்று கூறினாயா? விரைவில் நடக்கும் குமுதவல்லியின் திருமணத்திற்கு என்று கூறு!" என்று அரசியார் கூறவும் அங்குக் கூடியிருந்தோர் அந்தச் சொல்லின் இனிமை கேட்டு மகிழ்ந்தனர்.

"யார் மாப்பிள்ளை?" என்று கேட்டுச் சந்திரமதி குறும்புத்தனத்துடன் அப்போதுதான் குதிரையினின்று இறங்கியவண்ணமிருந்த குணதேவனை நோக்கினாள்.



"உன் குறும்புத்தனம் இன்னும் போகவில்லையா? அதோ சுந்தரன் வருகிறார், கூறுகிறேன். அது போகட்டும்; என் கல்யாணத்திற்கு வராவிடில் உங்கள் கல்யாணத்திற்கு நாங்கள் வர மாட்டோம்" என்றாள் குமுதவல்லி.

"நாங்கள் என்றால் யார்?" என்று கேட்டுச் சந்திரமதி சிரிக்கவும் அங்கு 'ஹோ ஹோ' என்ற நகைப்பொலி மூண்டது.

பொழுது அந்தக் கிராம மக்களுக்கு இன்பமாகக் கழிந்தது. அரசியும் சந்திரமதியும் மற்றையோரும் காஞ்சிக்குப் புறப்பட்டு விட்டனர். பல்லவப் பேரரசி தங்கள் கிராமத்துக்கு வந்ததும் சாதாரண மக்களுடன் பேசியதும் பழகியதும் அவர்களுக்குச் சொர்க்க இன்பத்தையூட்டின.

அன்று மாலை எல்லாரும் விரைவில் உணவருந்தி கந்ததேவன் வீட்டில் கூடிவிட்டனர். குணதேவன் நடந்தவற்றை மக்களுக்கு விளக்கிக் கூறினான்.

நந்திபுரக் கோட்டை வீழ்ந்துவிடும் என்ற பயம் இருந்தபோது படைத்தலைவரும் தானும் இரு பிரிவுகளாகப் பிரிந்து கோட்டையை மீட்கப் புறப்பட்டதாகவும் இடையே தன்னைத் தென்மேற்கே கங்கநாட்டை நோக்கிச் சென்று வேழப் படைகளைக் கொண்டு வருமாறு தலைவர் கட்டளையிட்டதாகவும் வழியில் சித்திரமாயனைச் சந்தித்து வென்றதாகவும் குணதேவன் கூறியபோது மக்கள் ஆவலுடன் கேட்டனர்.

"அது என்ன, அவ்வளவு ஆத்திரம் சித்திரமாயனுக்கு?" என்று ஒருவர் கேட்டார்.

"என்ன ஐயா! இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது கேட்கிறீர்கள்! நியாயப்படி பல்லவ சிங்காதனம் தனக்குரியது என்பது அவன் வாதம். இறந்துபோன பரமேஸ்வர வர்மருடைய மகன்தான் என்று அவன் எண்ணியிருந்தான். ஆனால் ரகசியம் யாருக்கும் தெரியாது; பரமேஸ்வர வர்மரின் இளைய மனைவிக்கு ஒரு சகோதரி இருந்தாள்; அவள் மகன் சித்திரமாயன். அவள்

இறந்தவுடன் இளையராணி சித்திரமாயனை எடுத்து வளர்த்தாள். அரச குமாரனுக்குண்டான சகல வசதிகளும் கிடைத்தன. சித்திரமாயன் சிறு வயது முதல் பல்லவ சாம்ராஜ்யம் தனக்கே வரப் போகிறது எனக் கனவு கண்டான். ஆனால் இந்த சாம்ராஜ்யத்தை ஆள வெறும் வீரம் மட்டும் போதாது, அறிவும் ஆற்றலும் வேண்டும் என்று கண்ட அமைச்சர் மண்டலத்தாரும் படைத் தலைவரும் இரண்யவர்மரை அணுகினர். நியாயமான வாரிசு அரசர் நந்திவர்மர் கிடைத்தார். படைத் தலைவர் உதயசந்திரனிடம் இதைப் பரமேஸ்வர வர்மர் இறக்கும் தறுவாயில் கூறியிருக்கிறார். வைத்தியர் வடிவில் அப்போது வந்தாராம் உதயசந்திரன்."

"உதயசந்திரன் - அப்பாடா! அவர் இல்லாது போனால் இந்த ராஜ்யம் இரட்டர்களோடோ, சாளுக்கியர்களோடோ, பாண்டியர்களோடோ சேர்ந்திருக்காதா? எத்தனை வேடங்கள்! எத்தனை ராஜ தந்திரங்கள்! படையெடுத்து நாட்டைக் கைப்பற்ற வந்த இரட்டர்களின் அரசனைச் சுமூகமாக வரவேற்றுக் காஞ்சி மீது பித்தடையச் செய்து அவர் மகளையே அரசருக்கு மணம் புரிய வைத்த பெருமையைப் புகழ்வதா? மாற்றான் சூழ்ச்சி ஒவ்வொன்றையும் எப்படியோ அறிந்து அதற்குத் தக்கபடி மாற்றுத் திட்டங்கள் தீட்டினாரே, அதைப் புகழ்வதா? எல்லாவற்றுக்கும் மேலாகக் காஞ்சிக் கோட்டைக்கு சிறிதும் ஆபத்து நேராமல் செய்ய ஸ்தபதியாரின் உதவியை நாடினாரே, அதைக் கூறுவதா?"

"ஸ்தபதியார் சாளுக்கிய மன்னருடன் சென்றது உதயசந்திரனின் திட்டமா?" - என்று கந்ததேவன் வியந்தான்.

"எல்லாம் அவர் திட்டமே. ஆனால் அவர் தீட்டும் திட்டத்தில் ஏதாவது தவறு செய்வது என் குணமாக இருந்து வந்தது. அவற்றைப் பொறுத்தவர் அவர்; அதுவே பெரும் திறமையன்றோ? கோட்டத் தலைவர்களிடையே இருந்த சந்தேகத்தை அவர் போக்க எடுத்த முயற்சி எளிதா?" குணதேவன் உதயசந்திரனைப் பற்றி புகழ ஆரம்பித்தான். கூட்டத்திலிருந்த ஒருவர் கந்ததேவனை நோக்கி, "பெரியவரே! எப்போது கல்யாணத்திற்கு நாள் பார்த்திருக்கிறீர்கள்?" என்று



கேட்கவும் கந்ததேவன் கூறினார்; "திருமண நாளா? அது முடிவானது போல்தான். ஆனால் குணதேவனும், சுந்தரன் எனும் இளைஞனும் ஒரு முடிவு செய்திருக்கிறார்களாம். காஞ்சியினின்று புறப்பட்ட சாளுக்கியர்களைத் துரத்திச் சென்று வென்று சிற்பிகளை மீட்டு வந்த பிறகே திருமணமாம்."

எல்லாரும் குணதேவன் முகத்தையே நோக்கினர். குமுதவல்லியும் இது உண்மைதானோ என்று அத்தான் முகத்தை நோக்கக் குணதேவன் கூறினான்: "அன்பர்களே! அவர் கூறுவது உண்மையே. பல்லவ சாம்ராஜ்யத்தின் புகழுக்கே இழுக்குத் தேடிச் சென்றிருக்கின்றனர் சாளுக்கியர்கள். யாரும் இல்லாதபோது காஞ்சியில் ஒரு திங்கள் தங்கள் கொடியைப் பறக்கவிட்டனர். அது மட்டுமா? சிற்பிகளைத் தங்களுடன் அழைத்துச் சென்றிருக்கின்றனர். அவர்களைப் பின் தொடர்ந்து அவர்களை வென்று சிற்பிகளை மீண்டும் காஞ்சிக்கு அழைத்து வருவதும் எம் வேலை!"

அப்போது கூட்டத்தில் கலகலப்பு ஏற்பட்டது. குதிரையொன்று வந்து நிற்கும் ஓசை கேட்டது. எல்லாரும் ஆஹாகாரம் போட உதயசந்திரன் அங்கு வந்து தேவபுருடன் போல் நின்றான். குமுதவல்லி கதவிடுக்கு வழியே நோக்கினாள். மக்கள் எல்லாரும் திகைத்தவண்ணம் நோக்கினர்.

"குணதேவா! மீண்டும் தவறுதானே செய்து விட்டாய். சாளுக்கியர்களைத் துரத்திச் செல்லும் ரகசியத்தை இப்படியா வெளியிடுவது? சாளுக்கியர்களை வெல்லும் புகழை உன்னிடம் விட்டுவிட மாட்டேன். நான் செல்கிறேன். சாளுக்கியர்களை வென்று வருவேன். சிற்பிகளை மீட்டு வருவேன். வைகுண்ட பெருமாள் கோயிலை உருவாக்க வேண்டும். உனக்கு ஏற்கெனவே யோசனை கூறியுள்ளேன். தாமரைப்பாடியில் நீ அமைதியாகச் சில காலம் தங்கியிருந்து மண வாழ்க்கையை அனுபவித்து மகிழ வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்பு நான் இதே இடத்தில் கூறியது நினைவிருக்கிறதா? உனக்கு இல்லாவிடினும் குழந்தை குமுதவல்லிக்கு நிச்சயம் இருக்கும். மீண்டும் அதைக் கூறுகிறேன். 'அம்மா குழந்தாய். என்னை

சபிப்பாய் நீ! நாட்டின் தலைவிதியே இப்போது உன் அத்தானிடம் இருக்கிறது. இந்தத் தெய்வத் திருநாட்டின் மானம் பெண்குலத்தின் தியாகத்தால் பலமுறை காப்பாற்றப்பட்டிருப்பதற்கு எவ்வளவோ சான்றுகள் உள்ளன. குணதேவனுக்குக் குளிர்ந்த முகத்துடன் விடை கொடு. அவன் விரைவிலே திரும்பி வருவான்' - நினைவிருக்கின்றவா இந்தச் சொற்கள்? இதோ அந்த வீரன்! குமுதவல்லி, இரண்டு செயல்களால் இந்தச் சாம்ராஜ்யத்தின் மானத்தைக் காப்பாற்றியிருக்கிறாள். குணதேவன் போன்ற வீரனை நாட்டிற்குப் பணி புரிய அனுப்பியது. மற்றொன்று, நாகப்பட்டினத்திலிருந்து உருவாக்கப்பட்ட வேல், வில் கருவிகளை இரவோடு இரவாக அப்புறப்படுத்திப் பைரவனைத் திகைக்க வைத்தது. இதை விட வேறு என்ன வேண்டும்?

"பல்லவ சாம்ராஜ்யத்தை எத்தனையோ போர் வீரர்கள் தங்கள் தியாகத்தால் காத்திருக்கின்றனர். அவர்களுள் குணதேவனையும், சுந்தரனையும் மறக்க முடியாது. அதைப் போல் குமுதவல்லியையும் சந்திரமதியையும் மறக்க முடியாது. வானர மகளிர்க்கு வதுவை செய்யக் கை உயர்த்திய முருகன் இந்தக் காதலருக்கு அருளட்டும்!" என்றான்.

கூட்டத்தில் 'ஹாஹா' காரம் எழுந்தது. குணதேவன் கண்கள் அன்பால் கனிந்தன. குமுதவல்லியின் முகம் வெட்கத்தால் சிவந்தது. கந்ததேவன் இதயம் பூரணமாக நிறைந்தது.

## முடிவுரை

தமிழ்ப் பெருமக்களுக்கு மாவீரன் உதயசந்திரனது சாகஸங்களைக் கூற எழுதத் தொடங்கிய இந்த நாவலை முடிக்கும் கட்டத்திற்கு வருகிறேன். வரலாற்றின் உண்மைகளுக்குப் பழுதும் பங்கமும் நேராமல் இந்தக் கதையை எழுதப் புகுந்தேன்.

தளரா ஊக்கமும், போர் வலிவும், திறமையும், தியாகமும் நிறைந்த உதயசந்திரன் சரித்திரத்தில் அழியாவீரன்.



உதயசந்திரனது இல்லறப் பற்றைப் பற்றி இந்தச் சரித்திரத் தொடரில் ஒன்றும் கூறப்படவில்லை.

உதயசந்திரன் எண்ணமும், செயலும் நாட்டைக் காப்பதிலேயே இருந்தபடியால் அவன் சொந்த ஊரான வில்வல நாட்டில் கழித்த பொழுதைப் பற்றி என்ன கூறுவது? அந்தத் தீரனது கடைசி காலத்தையும், அவனது வீர மகன் அவனிசந்திரனையும் பற்றி மற்றொரு நாவலையே படைக்கலாம்.

நாம் இப்போது நிறுத்திய இடத்திற்குப் பிறகு உதயசந்திரன் சாளுக்கிய வீரர்களைத் தொடர்ந்து பெரும்படையுடன் செல்கிறான். பல்லவ சாம்ராஜ்யத்துக்கு அடிக்கடி சாளுக்கியர்களால் நேரும் துன்பத்தைத் துடைக்க அவர்களை வென்று, வாதாபியைத் தீயிட்டு வெற்றி வாகையுடன் திரும்புகிறான். இது சரித்திரம்.

உதயசந்திரன் கதை வளர எத்தனையோ கதாபாத்திரங்கள் ஒத்துழைத்தனர். தாமரைப்பாடி வணிகனும், கருங்கண்ணனும், பைரவனும், சித்திரமாயனும் பெரும் கனவு கண்டு நனவாகாது போயினர்.

இளம் வயதிலேயே பட்டமேறிய நந்திவர்மனுக்கு உதயசந்திரனது துணையும், திருமங்கை மன்னரது ஆசியும், வைகுண்டப் பெருமாள் அருளும் இருந்தன. இக்கதை வளர அவர்கள் பெருமளவிற்கு உதவினர். 161220 | 51940

என் கற்பனைக் கதைப் பாத்திரங்களான குணசீலனும், குமுதவல்லியும், சுந்தரனும், சந்திரமதியும், கந்ததேவனும் பல்லவநாட்டைக் காக்கத் தாங்களால் இயன்ற பணியை ஆற்றியுள்ளனர். கருங்கண்ணனும், பைரவனும், தர்மசேனனும் நாட்டைக் காட்டிக் கொடுக்கத் தங்களால் இயன்றதைச் செய்திருக்கிறார்கள்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய இந்தக் கதையை, இப்போது நான் படித்து மனத்தில் மகிழ்கிறேன்.

பட்டார நூலக
அசோக்நகர்

நிறைவு பெற்றது